JL
Tm 2411, NOS
NOS. 14
152001

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

## மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 14 | 1918ஆ ஜூன்மீ | மாதம் 1


## THE TAMIL LANGUAGE

### தமிழ் மொழி

நந்தம் தமிழ்மொழி இன்னகாலத்தே இன்னரால் படைக்கப்பட்ட தென்பதை இந்நாள்காறும் எவரும் அறியார். ஆதலின் இத்தமிழ்மொழி இவ்வுலகின்கண் வழங்கும் மிகப் பழமையான பாஷைகளுள் ஒன்றும் என்பதை ஒருவரும் மறுக்கவொண்ணாது.

தமிழ்மக்கள் வடமொழியாளரோடு கலந்து, அவர்தம் சொள்கைகளையும் குலாசாரங்களையும் மதங்களையும் மேற்கொண்ட காலத்தே, அவ் வடமொழியின் சொற்களையும் கருத்துக்களையும் தம் மொழியிற் புகுத்திக் கொள்வாராயினர். அச்சொற்களும் தமக்குரிய சொந்த நிலையில் நில்லாது, வந்த இடத்தின் வழிநிலையை அடைந்து வழங்குவன ஆயின. 'பர்வதம்' என்னும் வடசொல் தமிழில் வந்து 'பருப்பதம்' எனத் தன் உருமாறி நிற்றல் காண்க. இவ்வாறே நீர், மீன், மணி, மணல், முதலிய சில தமிழ்ச் சொற்கள் வடமொழியில் இடம் பெற்றிருக்-

162001
600 0

கின்றன என்று அறிஞர் பகர்ந்துகின்றனர். இவ்வாறு சொற்களும் கருத்துக்களும் ஒன்றோடொன்றாகக் கலந்துகொள்ளவே வடமொழிக்குந் தமிழ்மொழிக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டாயிற்று. அதனால் இக்காலத்தே தமிழில் வழங்கும் சில சொற்களை வடசொல்லென்றும் தமிழ்ச்சொல்லென்றும் வரையறுத்துக் கூறுதல் மொழிநூல் வல்லார்க்கும் முட்டுப்பாடாக இருக்கின்றது.

இஃது இங்ஙனமாக, இடைப்பட்டகாலத்தே வடமொழியிலுள்ள இதிகாசங்களும், புராணங்களும், சமயநூல்களும் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட காரணத்தினால், வடசொற்கள் வரையறையின்றித் தற்சமமாகவும் தற்பவமாகவும் தமிழில் வழங்கப் பெறுவன ஆயின. அதனால் வடமொழியாளரே யன்றித் தமிழ் மக்களும் நந்தம் தமிழ்மொழி வடமொழியினின்றும் தோன்றியதோர் வழிமொழியே என்று வழுத்துவாராயினர். அவ்வாறு கூறுவதே தமக்கும் தம் மொழிக்கும் சீரும் சிறப்புமாம் என எண்ணி மகிழவும் தலைப்பட்டனர். அந்தோ, தமிழ் என்னு சொல்தானும் திராவிடம் என்னும் வடசொல்லின் சிதைவாகும் என்று வாதிடவும் வந்துவிட்டனர் எனின், இவர்தம் மயக்கை என்னவென்று கூறுவது! பின்னர், மொழிநூற் புலவர்கள் பல மொழிகளின் தோற்றங்களையும், அவற்றின் பாகுபாடுகளையும் ஆராயப் புகுந்தகாலத்தே, தமிழ்மொழி தனிமொழியே என்பதைத் தெள்ளிதிற் புலப்படுத்தினர். அதன் பின்னரே நந்தம் தமிழ் மக்கள் உற்றுணர்ந்து, உண்மை தேர்வார் ஆயினர். வடமொழியாளரும் வாய்மை அறிந்தனர்.

## தமிழ்மொழி தனிமொழியே :

ஒரு மொழி மற்றொரு மொழியினின்றும் பிறந்திருப்பின், அம் முதன்மொழியி லுள்ள இன்றியமையாத இயற்சொற்கள் சிறிது மாறுபட்டேனும் படாமலேனும் வழிமொழியில் வழங்கப் பெறுதல் வேண்டும். மற்றும் அம் முதன்மொழியின் சொல்லமைதிகளையும் வாக்கிய அமைதிகளையும் செய்யுள் அமைதிகளையும் வழிமொழி ஒருவாறு பின்பற்றிச் செல்லுதல் வேண்டும். செல்லவே, இவ்வழிமொழியின் இலக்கணமும் முதன் மொழியின் இலக்கணத்தைத் தழுவியே நிற்கும் என்பது மொழிநூல் வல்லார் கொள்கையாம். இவ்வகையில் தமிழ்மொழியை வடமொழியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ் தனிமொழியோ வழிமொழியோ என்பது தெள்ளிதிற் புலனாகும்.



எம்மொழியினும், அம்மொழியின் குழந்தைப் பருவத்தில், உடலின் உறுப்பின் பெயர்களும் உணவுப் பொருள்களின் பெயர்களும், வா, இரு, போ, படு, பார், கேள், நட, தின், குடி முதலிய வினையை உணர்த்தும் சொற்களுமே இன்றியமையாத இயற்சொற்களாய் ஏற்படும். ஆதலின், இவ்வகையில் வழங்கும் தமிழ் இயற்சொற்களையும் வடமொழி இயற்சொற்களையும் ஒப்பிட்டு நோக்கின், அவற்றுக்குள்ள ஒற்றுமை வேற்றுமைகள் புலப்படும். வடசொல்லுக்கும் தமிழ்ச்சொல்லுக்கும் ஒற்றுமை மிக்கிருப்பின், தமிழ் வடமொழியினின்றும் தோன்றிய வழிமொழி என்றும், முற்றும் வேறுபாடுமை காணப்படின் தமிழ் தனிமொழியே யென்றும் துணிதல் கூடும். அவற்றை இங்குக் காட்டுவோம்.

### உடல் உறுப்பின் பெயர்கள்

| தமிழ்ச்சொல் | வடசொல் | தமிழ்ச்சொல் | வடசொல் |
|---|---|---|---|
| உடல் | சரீரம் | மிடறு | கண்டம் |
| தலை | சிரசு | தோள் | அம்ஸம் |
| நெற்றி | லலாடம் | கை | ஹஸ்தம் |
| கண் | நயனம் | விரல் | அங்குலி |
| மூக்கு | நாசி | மார்பு | உரம் |
| * வாய் | ஆஸ்யம் | வயிறு | உதரம் |
| பல் | தந்தம் | தொடை | ஊரு |
| நாக்கு | ஜிக்வா | கால் | ஜாங்க : |
| காது | கர்ணம் | அடி | பாதம் |

### உணவுப் பொருள்களின் பெயர்கள்

| தமிழ்ச்சொல் | வடசொல் | தமிழ்ச்சொல் | வடசொல் |
|---|---|---|---|
| நெல் | சாலி | எள்ளு | திலம் |
| அரிசி | தண்டுலம் | உப்பு | லவணம் |
| சோறு | அன்னம் | மிளகு | மரீசிகா |
| அவரை | பர்பரம் | கடுகு | ஸர்ஷபம் |
| துவரை | ஆடகம் | மஞ்சள் | ஹரித்திரா |
| கடலை | சணகம் | தண்ணீர் | ஜலம் |
| உளுந்து | மாஷம் | காற்று | வாயு |

* வாய்க்குச் சரியான வடசொல் இல்லை என்றும், முகத்திற்குச் சரியான தமிழ்ச் சொல் இல்லையென்றும் கூறுப.

## வினைச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| வா | ஏஹி | மெல் | தச |
| இரு | உபவிச | சொல் | வத |
| போ | யாஹி | விழுங்கு | கபளய |
| பார் | சக்ஷஸ்வ | நில் | திஷ்ட |
| கேள் | ஸ்ருணு | எடு | ஹர |
| நட | கச்சா | கொடு | யச்ச |
| படு | சேஷ்வ | அடி | பிரஹர |
| தின் | புங்க்ஷ்வ | பிடி | கிருஹாண |
| குடி | பிபா | அறை | தாடய |

இவ்வாறே இன்றியமையாத மரங்களின் பெயர்கள், பறவைகளின் பெயர்கள், விலங்குகளின் பெயர்கள் முதலியவற்றை அவ்வட சொற்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஏதும் இயைந்து வருவதாக ஏற்படவில்லை. சிலர் தமிழுக்குரிய இயற்சொற்களை விட்டு, வடமொழியினின்றும் தமிழில் தற்பவப்பட்டு வழங்கும் சொற்களை உதாரணமாக வைத்துக்கொண்டு தமிழ் வடமொழியினின்றும் வந்த வழிமொழி யெனக்கூறி மனப்பால் குடித்து மகிழ்ச்சியடைவர். உதாரணமாக, நகம் என்னும் சொல்லைக் கவனிப்போம். நகம் என்பது வடசொல், இதற்கு நோதல் இல்லாதது (ந+கம் Kham) என்பது பொருள். இது தமிழில் இயற்சொல்லாக இப்போது வழங்குதலைக் காட்டுவர்; இது சரியன்று.

நகம் என்பதற்கு உகிர் என்பது தமிழ்ச்சொல். இதுவே தமிழில் இயற் சொல்லாக முன்பு வழங்கிற்று. ‘உகிர் சுற்றின்மேல் உலக்கை விழுந்தாற்போல்’ என்னும் பழமொழியை நோக்குக. பழமொழிகளிற் காணும் சொற்களெல்லாம் இயற் சொற்களாகவே இருக்கும். சிற்சில சொற்கள் நாளடைவில் வழக்காறற்று, பின்பு அவை திரிசொற்கள்போற் காணும். அதனால் அவற்றைத் திரிசொற்களே எனக் கூறலாகாது. எந்தப் பாஷையினும் பழமொழிகள் இயற் சொற்களாலேயே இயன்றிருக்கும். வடமொழியாளர் பழமொழியை லோகோக்தி என்பர். லோகோக்தி (லோக + உக்தி) லோகத்தாரால் சொல்லப்படுவது என்பது பொருளாதலின், அதில் திரிசொற்கள் ஏதும் அமைவதற்கு இடம் இல்லை என்பது தேற்றம்.



இப்படியே கழுத்து என்பதையும் கவனிப்போம். தமிழ் மொழிக்குச் சிறப்பெழுத்தான ழகரம் கலந்திருந்தும், கழுத்து என்னும் சொல், களத் என்னும் வடசொல் தற்பவப்பட்டது என்பர். அதையும் ஒருவாறு ஒப்புக்கொள்வோம். கழுத்து என்பதற்கு ‘மிடறு’ என்பதே தமிழ் இயற்சொல் என்பதனை, ‘ஒரு மிடறு தண்ணீர் குடி’ என்னும் சொற்றொடரால் நன்கறியலாகும்.

மற்றும் தமிழில் முகத்தைக் குறிக்க ஏதும் சொல் இல்லை என்று வடமொழியாளர் கூறுவர். அவ்வாறே வடமொழியில் வாய் என்னும் உறுப்பைக் குறிக்கச் சொல் இல்லையெனத் தமிழரும் கூறுவர். இந்தக் கக்ஷியை விளக்கத் தமிழில் வழங்கும் சம்பாஷணை ஒன்றை இங்கே கூறுவோம்.

வடமொழியில் வல்லான் ஒருவன் தமிழ்ப் புலவன் ஒருவனை நோக்கி, ‘அய்ய, வடமொழியாகிய ஆடவனைக் கண்ட தமிழ் மாது முகங் காட்டாது ஒழிந்தாள்’ என்றான்.

அதனைக் கேட்ட தமிழ்ப்புலவன் புன்னகைகொண்டு, ‘ஐய, தமிழ் மொழியாகிய ஆடவனைக் கண்ட வடமொழி மாது வாயில்லாது ஒழிந்தாள்’ எனக் கூறி, எமக்குத் தமிழில் முகத்தை யுணர்த்தச் சொல் இல்லாமற் போகவில்லையே. மூஞ்சி என்னும் சொல் முகத்தைக் குறிக்க வழங்குவதை அறியீரா! அப்படி ஏதேனும் ஒரு சொல் வடமொழியில் வாயைக் குறிக்க வழங்குவதாகக் காணோமே. முகத்தைக் குறிக்க ஏற்பட்ட பரியாய பதங்களில் இரண்டொன்றை வாயையும் குறிக்க வைத்துக்கொண்டிருக்கிறீர்களே, இதென்ன!’ என்றான்.

இவ்வாறே பாஷையின் இயற்சொற்களை ஒப்புநோக்கின் உண்மை புலனாகும். இப்போது செய்த ஆராய்ச்சியினால் தமிழ் இயற்சொற்களுக்கும் வடமொழி இயற்சொற்களுக்கும் யாதோர் இயையும் இருப்பதாகக் காணோம். ஆதலின் இந்த வகையில் தமிழ் தனிமொழியே என்பது பெறப்பட்டது.

பத்திராதிபர்.

# ELEMENTARY SCHOOL TEACHERS

## எலிமென்டெரி ஸ்கூல் உபாத்தியாயர்

நமது காருண்ய மிகுந்த கவர்ன்மென்டார், உபாத்திமார்களாகிய நமக்கு, 1917 - 1918ஆம் வருஷத்திற்காக அளித்துள்ள உதவிப் பொருளானது, 1917 ஏப்ரல் முதல் போதனாமுறை பயின்று முடிவு பரீக்ஷை தேறியவர், எழுத்துப் பரீக்ஷை தேறி மூன்று வருஷமாகாதவர், அப்ரூவ்ட் ஸர்ட்டிபிகேட் பெற்றவர், புரூவ்ட் எபிலிடி ஸர்ட்டிபிகேட் பெற்றவர் ஆகிய இவர்களுக்கு மாதம் 11 ரூபாயாக 18-3-18ல் உத்தரவு செய்திருப்பதாக அறியும் நாமனைவரும் அவர்களுக்கு அன்பார்ந்த வந்தனங்கள் பல அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அன்றியும், தற்போது நமது பிரிட்டிஷார் நமக்காக நடத்திக்கொண்டிருக்கும் யுத்தத்திற்காகக் கேட்கும் இரண்டாவது யுத்தக் கடனில், நம்மாலியன்றவாறு பொருளாலும் மனோவாக்குக் காயங்களாலும் உதவி செய்யவும் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆயினும்,

எலிமென்டெரி உபாத்திகளாகிய நாம், சாதாரண காலத்தை விட, இந்த யுத்தகாலத்தில், நம் குடும்ப சம்ரக்ஷணைக்கு, இந்தப் பதினொரு ரூபாய் போதாமற் படும் கஷ்டம் இவ்வளவென இயம்பவும் இயலாத விஷயமன்றோ ?

பாருங்கள் ! 1-1½ பைசாவுக்கு விற்ற தீப்பெட்டி பைசாவாகவும், பைசாவுக்கு 1½-2 ஆக விற்ற காகிதம் ஒன்று 3-4 பைசாவாகவும், படி ஒரு அணாவுக்கு விற்ற உப்பு 2½ அணாவாகவும், பைசாவுக்கு 2 விற்ற சாதாரண நூற்கண்டு ஒன்று 2-3 பைசாவாகவும் இப்படியே சகல சாமான்களும் தற்போது ஒன்றுக்கு 3-4 விலை ஆக விற்க, இக்காலத்தில் 11-ரூபாயும் போதாதென்பதை ஒருவரும் மறுக்கவொண்ணாது.

ஏகாதிபத்திய யுத்த கான்பரன்சிற்கு இந்தியப் பிரதிநிதியாகப் போயிருக்கும் கனம் பாடியாலா மகாராஜா அவர்கள் அங்குப் பேசியிருப்பதைப் பாருங்கள் : 'அகவிலை ஏற்றத்தினால் இந்திய ஜனங்கள் — ஏழை ஜனங்கள் தற்போது அதிக சிரமப் படுகின்றார்கள் — கஷ்டப்படுகின்றார்கள்' என்பதே.



பேராசிரியன் பத்திராதிபரவர்கள் 'எவற்றையும் உதவ இயலாதவர், தம்மிடத்துள்ள பொருளைக் கடனாகவேனும் கொடுத்து உதவி செய்தல் வேண்டும். இதையுஞ் செய்யாது வஞ்சிப்பது அறனேயோ ?' எனக் கூறும் முறை இவ் வெலிமென்டரி (கீழ்தர — கிராமாந்தர) உபாத்தியாயர்கள் பெரும்பான்மையோருக்குப் பொருந்தாதாயினும் சிறுபான்மையோருக்கும், 15 ரூபாய்க்காவது குறையாமல் 20-ரூபாய்க்கு மேல் (அதிகமாக) சம்பளம் பெறும் உபாத்திகளுக்கும் ஒருவாறு பொருந்தும்

பரீக்ஷாதிகாரிகளும் மேற்கூறிய சம்பள உயர்வுச் சுற்றுஉத்தரவுடன், 'எல்லா ட்ரெயினிங் ஆன உபாத்தியாயர்களுக்கும் 1917 ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் சம்பளம் 11 ரூபாய் வீதம் கொடுக்க உத்தரவாகி இருப்பதால், தற்காலம் யுத்தக்கடனுக்காக, சர்க்கார் பிரசுரித்திருக்கிறபடி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இராஜ பக்தியையும் விசுவாசத்தையும் காட்ட ரூ. 7 12-0 க்கு ஒரு போஸ்டாபீஸ் காஷ் ஸர்டிபிகேட் பெற்றுக்கொண்டால் நலம். அந்த 7-12-0 வட்டியுடன் எந்தச் சமயம் கேட்டாலும் திருப்பிக் கொடுக்கப்படும் அதிக சிரமமில்லாமல் தங்கள் இராஜாங்கத்திற்கு உதவி செய்ய இது சமயம். ஆகையால், இத்துடன் அனுப்பியிருக்கும் அப்ளிகேஷனில் கையெழுத்துப் போட்டனுப்பவும்' எனவும் வரைந்து அனுப்பியுள்ளார்கள். ஆனால், அவர்கள் விஷயத்தைத் தெரிவித்திருக்கின்றார்களெனினும், ஏழை உபாத்திகள், அதிகாரிகளின் அதிகாரத்திற்குப் பயந்தும், அவர்கள் அறிவித்ததை அலக்ஷியஞ் செய்தல் நலமன்று எனத் தத்தம் கஷ்ட நஷ்டங்களுடனும், 'போஸ்டாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட் பெற்றுக் கொண்டால் நலம்' என்று எண்ணி அதிகாரிகளின் அறிவிப்புக்காகவே அவ் வப்ளிகேஷனில் மொண மொணத்துக் கொண்டுதான் கையெழுத்துப் போட்டனுப்ப நேரிடும் — அனுப்புவார்கள். இது ஏழை எலிமென்டெரி உபாத்திமார்களின் உண்மையான நிலைமையும் எண்ணமுமாகுமென்பது ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகும்.

தஞ்சாவூர் முதலிய இடங்களிலுள்ள சில பரீக்ஷாதிகாரிகள் — ஏழை எலிமென்டெரி உபாத்திகளின் உண்மை நிலைமையையறிந்து, இவர்களிடம் இச் செய்தியை யுரைக்கவும் கேட்கவும் தங்களுக்கே, தங்கள் தங்கள் மனச்சாக்ஷி தடுக்கின்றதென் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டார்களென்றும், திண்டிவனம்

முதலிய இடங்களில் ஏழை எலிமென்டெரி உபாத்திகளின் நிலைமையை யுணர்ந்து, இப் பிரஸ்தாபமே இல்லை யென்றும் கேள்விப்படுகின்றோம். இவர்களன்றோ ஏழை உபாத்திகளின் கஷ்டநஷ்டங்களையும் குறைவுகளையும் நீக்கக் கருணை பொருந்திய மனமுள்ளவர்கள். ஆனால் இவர்களுக்குக் கருணை யில்லையென யாம் கூற வரவில்லை. இவ் வெலிமென்டெரி உபாத்திகளுக் கனுப்பிய இவ் வுத்தரவை, 15-20 க்கு மேல் சம்பளம் பெறும் உபாத்திகளுக்கு அனுப்பியும் கேட்டு மிருக்கலாம். இந்தப் பதினொரு ரூபாய்க்குமேல் அதிகமாக அனேகவருஷங்களாய்ச் சம்பளம் பெற்றுக்கொண்டுவரும் உபாத்திமார்கள் தங்கள் தங்கள் இராஜ பக்தியையும் விசுவாசத்தையுங் காட்ட ரூ. 7-12-0 க்கு ஒரு போஸ்டாபீஸ் காஷ் சர்டிபிகேட் பெறல் தகுதி யில்லையோ? அன்னவர்களுக்கு இத்தகைய அறிக்கை யாதையுங் காணோமே? என்னே அதிகாரிகளின் மனப்பான்மை! பொதுநலம்! இப் பதினொரு ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறும் உபாத்திமார்களும் பரீக்ஷாதிகாரிகள் முதலாயினோரும் தங்கள் சம்பளத்தில் மாதந்தோறும் இனாமாகவாவது கடனாகவாவது யுத்தத்திற்கு அளிப்பது மிக்க இராஜ பக்தியாகுமே.

பேராசிரியன், தற்போது வெளிவரும் 16-பக்கங்களை 32-பக்ங்களாக்கி ஒரு ரூபாயை இரண்டு ரூபாயாக (சந்தாவை) உயர்த்தி ணவர்க்கான விஷயங்களையும் வெளியிடப் பலரின் உசாவுதலின் பேரில் பலருடைய அபிப்பிராயங்களையும் வேண்டிய பத்திராதிபரவர்களின் வேண்டுகோளுக்குத் திரிசிராப்பள்ளி, சர்க்கார் போதனை முறைப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகிய கனம் பா. சுப்பிரமணிய ஐயரவர்கள், B. A., L. T., விடுத்திருக்கும் அபிப்பிராயத்தைக் கவனித்தல் நன்று.

“இப் பத்திரிகையின் வருட சந்தா ரூபாய் ஒன்றேயாயினும் இதைத் தருவிக்கச் சக்தியற்ற உபாத்தியாயர்கள் பலர். இதன் அருமையையும் பெருமையையும் எவ்வளவு மேம்படுத்தினாலும் சந்தாவை யுயர்த்துங்கால் பயனைப் பெறும் உபாத்தியாயர்களின் சங்கியை கட்டாயம் குறையு மென்பதே என் துணிபு. பயன் பெறும் உபாத்தியாயர்களின் சங்கியை அதிகமாக வேண்டு மெனில் (இதுவே நமக்கெல்லோருக்கும் உள்ள நோக்க மல்லவா?) இப் பாரதப் போரினால் விளைந்துள்ள சிரமம் நீங்கும்வரை 'எக்காரணம் பற்றியும் சந்தாவை யுயர்த்துதல் கூடாது. உயர்த்-



தல் உசிதமன்று’ என்பதையும்; இதன்பேரில் பத்திராதிபரவர்களின் தீர்மான மாகிய, ‘உடுக்க உடைக்கும், உண்ண உணவிற்கும், படுக்கப் பாய்க்கும் ஏழை ஜனங்கள் அல்லலுறும் இந்நாளில் பத்திரிகையின் சந்தாவை உயர்த்தி எலிமென்டெரி உபாத்திகளின் சொற்ப வரும்படியைப் பங்கிட்டுக் கொள்வது உசிதமன்றென்றே தோன்றுகின்றது’ என்பதையும் கவனித்திராவிடினும் இனியேனும் கவனிப்பார்களென எண்ணுகின்றேன்.’

இவ்விதம் கடனாகக் கேட்காமலும், அப்ளிகேஷனில் கையெழுத்துப் போட்டு அனுப்புங்கள் என்னாமலும், உங்களுக்கு அளித்துள்ள அதிக சம்பளத்தின் சந்தோஷத்தால், யுத்தத்திற்கு உங்களுக்குத் தோன்றும் உதவியைக் கடனாகவாவது இனாமாகவாவது கொடுப்பதைத் தெரிவித்து உங்கள் இராஜ பக்தியைக் காட்டுங்கள் எனின், இவர்கள் அவ்வவர்களுக்குத் தோன்றிய உதவியை, ஏற்பட்ட சந்தோஷத்தினால் எடுத்துக்கொள்ளும்படி இயம்பின், அது பேருதவியாகுமே.

P. பரிமணப் பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர் சோலை, P. O., திருச்சி ஜில்லா.

## THE BAT

## வௌவால்

பிள்ளைகளிடத்தில் சிறகுள்ள பிராணிகளைப் பற்றிச் சம்பாஷித்து, சிற்சில கேள்விகளைக் கேட்டு, இப்பாடத்தை ஆரம்பித்தல் நலம். கூடுமானால் தங்களுக்குத் தெரிந்ததைப் பிள்ளைகளையே சொல்லச் செய்யவும். பறவைகளை எங்கே காணலாம், எப்போது காணலாம் என்று கேட்கவும். இப்போது நாம் எடுத்துக்கொண்ட பாடம் பொழுதுபட்டதும் பறக்கிற பிராணிகளைப் பற்றியே.

இப் பிராணிகளை வௌவால் என்று சொல்லுகிறோம். இதோ பார், மரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் வௌவால்; இது பஞ்சடைத்த மாதிரி வௌவால்.

தைமாதத்தில் வௌவால்கள் தோன்றினபோதிலும், அநேக நாடுகளில் குளிரில்லாத அந்திவேளையில் காணலாம். 'மரம் பழுத்தால் வௌவாலை வாவென்றுகூவி யிரந்தழைப்பார் யாவரு மிங்கில்லை.' மரங்களில் கனிகள் மலிந்திருக்குங் காலங்களில், வௌவால்கள் சாயங்கால வேளையில் திரள்திரளாய்ச் செல்லு-கின்றன. அவைகட்கு அரசம்பழம் ஆலம்பழம் இவற்றைச் சாப்-பிட அதிக பிரியம். வௌவால்கள் இராச்சஞ்சாரிகளே. கார்த்-திகை மார்கழி மாதங்களில் அவைகளை வெளியில் காண்பது அரிது. வௌவாலின் இனமாகிய துரிஞ்சல் பறப்பதை யார் பார்த்திருக்-கிறீர்கள்? அடைக்கலாங் குருவி, ஊர்க்குருவி பறப்பதோடு ஒப்பிட்டுப் பார்த்தால், துரிஞ்சல் பறப்பது விந்தையாயிருக்கும். நேராகப் பறந்துபோக முடியாது; ஒழுங்கான வழியாகவே பறக்-காது; நேர்வழியே பறப்பதை நாம் பார்த்ததில்லை. இங்கே ஒன்றின்மேலும், அங்கே ஒன்றின்மேலும் பாய்ந்து செல்வதுபோ லிருக்கும். ஏன் அது நேர்வழியே செல்லாமல் மாறிமாறிச் செல்லுகிறது? எதாவது ஒன்றின்மேல் பாய்ந்து செல்லுவ-தாகக் காணப்படும். அஸ்தமனகாலத்தில், சிறு பூச்சிகள் ஆகா-யத்தில் திரிவதைப் பார்க்கலாம். துரிஞ்சல்கள் இப்பூச்சிகளைப் பிடித்துச் சாப்பிடுகின்றன. இரையைப் பிடித்துத் தின்னுவதற்-காக, இடம் மாறிமாறிப் பறக்கும். குளிர்காலம் வந்ததும், இப்பூச்சிகள் திரிவது அரிதாயிருக்கும். ஆனதுபற்றி அக்கா-லங்களில் துரிஞ்சல்கள் மாலையில் வெளியே பறந்துசெல்ல ஆவசியகமில்லை. மாரிக்காலங்களில் பார்க்கமுடியாது. மாரிக்-காலங்களில் களஞ்சியத்திலாவது மரப்பொந்திலாவது தேடிப் பார்த்தால் துரிஞ்சல்கள் பின்னங்கால்களால் பிடித்துக்கொண்டு தலைகீழாய்த் தொங்குவதைப் பார்க்கலாம். மறைவான இருண்ட இடங்களில் தொங்கிக்கொண்டு சீதகால முழுவதும் உறங்கிக்-கொண்டிருக்கும்.

வௌவால் தன் உணவிற்காக ஜலத்தையும் அருந்தும். பறந்து வெளியே போகும்போதுதான், தன் தாகத்தைத் தீர்த்-துக் கொள்ளும். ஜலத்தைக் கண்டால் விடாது. ஆறு, ஓடை,



குட்டை, குளம் எங்கே யிருக்கின்றனவென்று தேடிக்கொண்டு போவது வழக்கம். கண்டவிடத்து ஜலத்தின்மேலேயே பாய்ந்து பறப்பதைப் பார்க்கலாம், நன்றாய்க் கவனித்தால், தன் சிறகினால் உராய்தலும், நீர்பரப்பின் மேலேயே தத்துவதும் தெரியவரும். அப்படிச் செய்யும்போதுதான் தண்ணீரை உட்கொள்ளுகிறது. எந்தப் பறவைகள் இவ்விதமாய்ச் செய்வதைப் பார்த்திருக்கிறீர்-கள்? தூக்கணாங் குருவிகளே. ஆனால் வௌவாலுக்கு நீருள்ள இடங்கள் அதிக பிரியம். நீர் பருகப் பிரியப்படுவதோடு, ஜலத்-தின் மேல்பரப்பின்மேல் உலாவும் பூச்சிகளைப் பிடித்துச் சாப்-பிடவும் பிரியப்படும்.

நீங்கள் வௌவால் கீச்சிடுவதைக் கேட்டிருக்கலாம். அதற்கு மிக்க விந்தையான தொனி. கிரீச்சென்கிற குரலோடு கீச்சிடும்.

பஞ்சடைத்துள்ள மாதிரி வௌவாலைப் பரிசோதித்துப் பார்க்கவும், உடம்பை தொட்டுப் பார்க்கவும், இறகுகளில்லாமல், மெல்லிய உரோமங்கள் நிறைந்திருக்கும்; இதைப் பறவையென்று சொல்லலாமா? ஏன் சொல்லக்கூடாது? சிறகுகள் இருக்கின்-றனவே, ஆனால் இறகுகள் இல்லை. இவ்விதப் பகுத்துக்காட்டும் லக்ஷணங்கள் இருப்பதனால்தான், பறவை அன்று மிருகமென்றே சொல்லவேண்டும். பறவை தன் குஞ்சுக்குப் பால்கொடுத்து வளர்க்காது; வௌவாலோ குட்டிக்குப் பால்கொடுத்து வளர்க்-கும். ஆதலால் இப்பிராணி குட்டிப்போட்டுப் பால் கொடுக்கும் மிருக இனத்தைச் சேர்ந்ததே. கன்றுக்குட்டி ஆவின் மடியி-லிருந்து பால் குடிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். 'மம்மே-லியா' என்ற பதத்திற்கு விலங்கின் மடியென்று அருத்தம். வௌவால் மம்மேலியா வகையிற் சேர்ந்தது வௌவால் சிற-குள்ளதாயிருந்தாலும், உண்மையாகவே பறவை அன்று.

அதன் காதைக் கவனியுங்கள்; அதன் தேகத்தின் பருமனை ஒப்பிட்டுப் பார்க்குங்கால், செவிகள் பெரியவையே; அவை-களின்மேல் உரோமமே இல்லை. கேட்கும் உணர்ச்சி மிகவும் அதிகம்; மோந்து பார்க்கும் சக்திக்கும் குறைவில்லை. அதன் கன்னமீசை நொய்மையானது; வழி காட்டுவதற்கு உணர்ச்சிக் கருவியாயிருக்கின்றது; கண்களோ கூர்மையானவை. பூனையின் மீசையோடு ஒப்பிட்டுப் பார்க்கச் செய்யவும்.

உறுப்புக்களைக் கவனிக்கவும். முன் உறுப்புக்கள் நீளத்தையும் பின் உறுப்புக்கள் நீளத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். பின் உறுப்புக்கள் சிறியவை; முன் உறுப்புக்கள் பெரியவை; முன் உறுப்புக்கள்தான் கைகள்; விரல்களை எண்ணுங்கள்; விரல்கள் நீண்டிருக்கும்; ஆனால் நகங்கள் இல்லை; சேர்ந்திராத கட்டை விரலில் வளைந்த பெரிய நகமுண்டு; மரம் ஏறுவதற்கு இது உபயோகப்படும். பின்னங் கால்கள் குட்டை; நகங்களை எண்ணிப் பாருங்கள்.

இறக்கைகள் விநோதமானவை, அகற்றினால், குடைபோல் விரியும்; விரல்களோ குடைக்கம்பிகளை ஒத்திருக்கின்றன. இறக்கைகள் நீண்ட விரல்களில் உறுதியாய்ப் பதிந்து, பின்னங்கால் வரைக்கும் வருகின்றன. தன் புஜங்களிலே இறக்கைகளைத் தூக்கிக்கொண்டு போவதுபோல் காணப்படுகின்றன.

உயிருள்ள வெளவாலைக் கொண்டுவந்து, தரையில் வைத்து நடக்கவிடு; நடப்பது விகாரமா யிருக்கும். இதன் தோற்றத்தைக் கவனித்தால், நடப்பதற்காகவே ஏற்பட்டதன்றென்று தெரிந்து கொள்ளலாம்.

அதன் உருவத்தை மறுபடியுங் கவனியுங்கள்; பார்வைக்கு லக்ஷணமா யிராமல் கொடியதாயும் உக்கிரமாயு மிருக்கும். முன்னோர்கள் அருவருப்பான பறவை யென்றே நினைத்தார்கள். வெளவாலினால் மனிதனுக்கு என்ன உபயோகம். புழுப் பூச்சிகளை நாசப்படுத்துவதால், உழவனுக்குச் சிநேகிதன்; பழங்களை அழிப்பதால், தோட்டக்காரர்களுக்குச் சத்துரு. பெரிவாயினால் கொசுக்களைப் பற்றிக்கொள்ளும். கோடைகாலத்தில் நமக்கு உபத்திரவத்தை உண்டாக்குகிற கொசுக்களையும், தொந்தரவு செய்கிற பூச்சிக்களையும் நாசப்படுத்தும்.

M. S. SABHAPATI,
*Ag. Headmaster,*
*Govt. Panchama Training School,*
*Madras.*



# STORY TELLING

## கதை சொல்லல்

(முன் தொடர்ச்சி வயது — 13 பக்கம் - 287)

### மகா சூரன்

8. மகா சூரனும் அவனுடைய தோழர்களாகிய பராக்கிரமகேது, கொள்ளிக் கண்ணன், பெரும்பசியன், பெருவயிறன் ஆகிய நால்வரும் வழிச் செல்வாராயினர். நெடுநாள் பிரயாணஞ்செய்து ஒரு பெரிய நகரத்தை அடைந்தார்கள். அதில் அழகான மாளிகைகளும், உப்பரிகைகளும், அரண்மனைகளும், நெடுந்தெருக்களும், அங்காடி வீதிகளும் மலிந்து கிடந்தன. அங்காடி வீதியில் உள்ள கடைகளில் எல்லாப் பண்டங்களும் குவியல் குவியலாக இருந்தன. செல்வர் அனுபவிக்கிறதற்கு வேண்டிய பொருள்கள் குறைவில்லாமல் இருந்தன. ஆனால் அந்நகரத்தில் மனிதர் அரவமே இல்லாமல் இருந்தது. இதைக் கண்ணுற்ற நான்கு தோழர்களும் அரசகுமாரனும் தங்கட்கு வேண்டிய அளவு அங்கே உள்ள பொருள்களை எடுத்துப் புசித்துவிட்டு அன்றைய இரவை அந்நகரத்திலேயே கழிக்கத் தீர்மானித்தார்கள். பொழுது சாய்ந்ததும் அரசன் அரண்மனையில் உள்ள ஒரு பெரிய அறையில் சென்று படுத்து உறங்கிவிட்டார்கள். இரவு பத்துமணி யானதும் ஒரு பெரிய பூதம் அந்நகரத்துள் பிரவேசித்து, 'இந் நகர மாந்தர் எல்லோரையும் கொன்று தின்றுவிட்டேனே. ஏது இன்னும் நரவாசனை வருகின்றதே. என் கண்ணுக்குப் புலப்படாமல் யாரோ ஒளிந்துகொண் டிருக்கின்றார்போல் தோன்றுகின்றது; அவர்களையும் இன்று புசித்துவிடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டே இவர்கள் படுத்திருக்கும் அறையண்டை வந்தது. பூதம் அருகே வருவதைக் கண்ட அரசகுமாரன் படுக்கையைவிட்டெழுந்து 'ஏ அற்பப்பயலே! ஒரு சிறிதும் பயமில்லாமல் என் என்முன் இவ்வளவு ஆடம்பரத்துடன் வருகின்றாய்? என்னை யாரென்று எண்ணிக்கொண்டனை? ஒரு உதையில் ஏழு அடி கனமுள்ள இருப்புக்கோட்டையை உதைத்துத் தள்ளிய மகாசூரன் நான்தான்; என்னோடு சண்டைக்கு வருவதென்றால் வரலாம்' என்று பகர்ந்தான். அரசகுமாரன் கூறியதைக் கேட்ட மாத்திரத்தில் பூதம் நடுநடுங்கி, அவன் பாதத்தில் விழுந்து நமஸ்-

கரித்து, 'ஐயனே! யான் அறியாமல் செய்த பிழையைப் பொறுக்க வேண்டுகிறேன். இன்று முதல் யான் தங்கள் அடிமை. எங்கே வரவேண்டுமானாலும் வரச் சித்தமாயிருக்கிறேன்; என்னைத் தங்கள் அடிமையாக அங்கீகரிக்க மிகவும் பிரார்த்திக்கிறேன்' என்று பயபக்தியுடன் பகர்ந்தது. பூதம் சொல்லியதைக் கேட்ட மன்னவன் மகன், அதைத் தன்னுடைய தோழர்களில் ஒருவனை சேர்த்துக்கொண்டு, அறுவரும் மேலே பிரயாணஞ் செய்யலாயினர்.

9. அநேக மாதங்கள் பிரயாணஞ்செய்து, சிறப்புவாய்ந்ததும் ஜனநெருக்கம் உள்ளதுமான ஒரு நகரத்தை அறுவரும் அடைந்தார்கள். அன்று அந் நகரத்திற்கு வெளியே உள்ள ஒரு சத்திரத்தில் அவர்கள் தங்கினார்கள். அந்தச் சத்திரத்து அதிகாரி அவர்களை அன்புடன் வரவேற்று வேண்டிய உபசாரஞ் செய்தான். இவர்கள் சென்ற தினத்தில் அச்சத்திரத்து அதிகாரியின் பிள்ளைக்கும் அந்நகரத்தில் உள்ள பெரிய வர்த்தகனது பெண்ணுக்கும் கல்யாணம் நடைபெற்றது. வழிப்போக்கர்களாகிய அறுவர்களும் அக் கல்யாணத்தில் நடைபெறும் கொண்டாட்டத்தில் கலந்து களிப்புடன் இருந்தார்கள். கல்யாணத்திற்கு வந்தவர்கள் எல்லாம் மணமகனையும் மணமகளையும் வாழ்த்தி, பூர்ண ஆயுசுடன் இருக்கும்படி ஆசீர்வதித்தார்கள். இவ்வாறு களிப்புடன் எல்லோரும் மணவிழாக் கொண்டாடிக்கொண்டிருக்கும்போது, அரச ஆக்ஞை பெற்ற ஒருவன் சத்திரத்திற்குள் வந்து, அந்தத் தலைவனை விளித்து, இரகசியமாக அவன் செவியில் சில விஷயங்களைச் சொன்னான். உடனே சத்திர அதிகாரி திடீரென்று தரையில் விழுந்து அழத் தொடங்கினான். இவன் அழவே எல்லாரும் கூக்குரலிட்டு அழுதார்கள். புரவலன் புதல்வனுக்கும் அவனுடைய நண்பர்கட்கும் விஷயம் இன்னதென்று விளங்கவில்லை. அரசகுமாரன் சிறிதுநேரம் தாழ்த்து, சத்திர அதிகாரியை அழவேண்டியதற்குக் காரணம் என்னவென்று கேட்டான். அவன், 'ஐயனே! என்னுடைய கஷ்டகாலத்தை என்னென்று சொல்கிறது. பதினைந்து வருடங்கட்கு முன் இந்நகரத்திற்குப் பெரிய விபத்து ஒன்று சம்பவித்தது. கொடிய ராக்ஷஸன் ஒருவன் இந்நகரத்துட் பிரவேசித்து, தன் கண்ணுக்குப் புலப்படும் உயிருள்ள பொருள்களை எல்லாம் கொன்று தின்னத் தொடங்கினான். நகரமாந்தர் எல்லோரும் நகரத்தை விட்டு ஓடத் தலைப்பட்டார்கள். இதைக் கண்ட அரசன் ராக்ஷஸனோடு சமாதானம் செய்ய ஏற்பாடு



செய்தான். அந்தச் சமாதானத்தில் ஏற்பட்ட உடன்படிக்கை என்னவெனில்: "நாள்தோறும் அந்த இராக்ஷஸனுக்கு வேண்டிய உணவோடு ஒரு நரமனிதனையும் அனுப்பவேண்டும்; அவ்விதமாக நடைபெற்று வருகிறவரையில் அவ்விராக்ஷஸன் ஊருக்குள் பிரவேசித்து உயிர்களைக் கொல்லக்கூடாது" என்பதேயாம். இந்த உடன்படிக்கைப்படி சென்ற பதினைந்து வருஷங்களாக இராக்ஷசனுக்கு விருந்து நடந்து வருகின்றது. வீட்டிற்கொவ்வொரு மனிதன் நாள்தோறும் இராக்ஷசனுக்கு உணவாய்க் கொண்டுவருகிறோம். இன்றையதினம் இராக்ஷசனுக்கு உணவாகவேண்டிய முறை இப்போது கல்யாணம் செய்துகொண்ட மணமகனுடைய முறை என்று அதிகாரி வந்து சொன்னார். அதனால்தான் வருந்துகிறோம்' என்று மிக்க விசனத்துடன் மறுமொழி பகர்ந்தனன். இதைக்கேட்ட மன்னவன் மகன், 'ஐய! நீங்கள் ஒன்றுக்கும் வருந்த வேண்டா? உங்கள் புதல்வனுக்குப் பதிலாக நானே சென்று உங்கள் ஆபத்தை நிவர்த்தி செய்கிறேன். உங்கள் கல்யாணக் கொண்டாட்டத்தைச் சிறப்புடன் செய்யுங்கள்' என்று சொல்லி, இராக்ஷசனிருக்கும் இடத்திற்குத் தன் தோழர்கள் ஐவருடனும் சென்றான். அவ்விடத்தில் நான்கு வண்டியில் தின்பண்டங்கள் நிரப்பி இருந்தன. இராக்ஷஸன் எப்போது வருவான் என்று தன்னுடைய தோழர்களுடன் அவன் வருகையை எதிர்பார்த்திருந்தார்கள். தோழர்கள் எல்லாம் இராக்ஷசனைக் கொல்ல, அரசகுமாரனுக்கு உதவிபுரிவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இரவு பன்னிரண்டு மணியானவுடன், ஒரு பெரிய சத்தம் உண்டாயிற்று. சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு கரிய நீண்ட உருவம் அரசகுமாரன் கண்ணுக்குப் புலப்பட்டது. இராக்ஷசனைப் பார்த்த அளவில் தோழர்கள் ஐவரும் பயந்து ஓடிப் பதுங்கிக்கொண்டார்கள். அரசகுமாரன் சிறிதும் கலங்காமல் இராக்ஷசனுடன் சண்டைசெய்து அவனைக் கொன்றுவிட்டான். கொன்றதற்கு அடையாளமாக இராக்ஷஸனின் மூக்கையும் நாக்கையும் அறுத்துச் சேமித்து வைத்துக்கொண்டு, தன் நண்பர்களை எல்லாம் தன்னருகே வரும்படி அழைத்தான். இராக்ஷஸன் இறந்ததைக் கேட்ட அளவில் தோழர்கள் எல்லாரும் ஒருங்கே சேர்ந்து தங்கள் தங்கள் பராக்கிரமத்தைப் பேசத் தொடங்கினார்கள். பெருவயிறன், 'அரசே! இந்த ராக்ஷசனுடைய உதிரத்தை எல்-

லாம் உறிஞ்சிவிடட்டுமா?' என்றான். கொள்ளிக் கண்ணன் 'இந்த
அரக்கனுடைய தேகத்தை ஆயிரம் மைலுக்கு அப்பால் போகும்-
படி ஓர் அம்பை எய்யட்டுமா?' என்றான். பெரும்பசியன் 'இந்த
அரக்கனுடைய தேகத்தை ஒரே வாயாக உட்கொள்ளட்டுமா?'
என்றான். இவர்கள் சொல்வதைக் கேட்ட மகா சூரன் 'நண்பர்-
களே! உங்களுடைய பராக்கிரமங்களை இப்போதொன்றும் காண்-
பிக்க வேண்டா. நாம் எல்லோரும் போய் படுத்துறங்கலாம்'
என்று சொல்லி, தோழர்களுடன் சத்திரத்திற்குத் திரும்பினன்.

(இன்னும் வரும்)

ஒரு தமிழ்ப் புலவர்.

# THE DIFFICULTIES OF THE TEACHER

## "உவாத்திமைத் தொழிலிற் கஷ்டமில்லையா ?"

1917ஞ அக்டோபர்மீ வெளியான நல்லாசிரியனின்
61ஆம் பக்கத்தில் திருச்சிதாலுக்கா திருவளர்சோலை போஸ்ட்,
உத்தமசேரி போர்டு ஸ்கூலின் உபாதியாயராகிய, கனம் P. பரி-
மணப் பல்லவராயரவர்களால் வெளியிடப்பட்டுள்ள "உபாத்-
திமைத் தொழில்" என்னுந் தலைப்புள்ள வியாசத்தைக் கண்டு
கலக்கமுற்றேன். அவர் அவ்வியாசத்திற் சொல்லியவனைத்து முண்-
மையே. நான் உபாத்திமைத் தொழிலிற் பிரவேசித்துச் சற்றே
றக்குறைய ஆறு வருஷங்கள் முடியப் போகின்றன. இக்காலங்-
களில் என்னுடைய பெரும்பாகம் பட்டணங்களிற்றான் வேலை
பார்க்க நேரிட்டதென்றாலும், ஏறத்தாழ இரண்டு வருடங்கள்
முடிய கிராமாந்தரங்களில் உபாத்தியாயராக இருந்திருக்கிறேன்.
கிராமங்களில் உள்ள உபாதியாயர்கள் படும் பாட்டுக்கு அள-
வில்லை. அவைக ளனைத்தையும் நமது நண்பர் நியாயமுடன்
நவின்று விட்டபடியால் அதைவிட அதிகமாக யானெவ்வண்ணம்
சொல்லக் கூடும்? ஆயினும் ஏது காரணத்தாலோ அவர் ஆயா-
சப்பட்டு விட்டு விட்ட இரண்டொரு காரியங்களையும் நல்லாசிரி-
யனின் நண்பர்கள் கவனிப்பார்களாக!



கிராமங்களில் உபாத்தியாயர்களுக்கு அதிக தொல்லைதான்,
காலை 6-மணி முதல் சாயங்காலவரையில் கஷ்டந்தான். உதா-
ரணமாய்க் கீழே வரும் சம்பவத்தைச் சற்றுச் சாக்கிரதையுடன்
கண்ணுறவும். உபாத்தியாயர் அதிகாலையி லெழுந்து, பிள்ளை-
கள் வீட்டுக்குப் போனலல்லது அவர்கள் வரமாட்டார்கள்.
போனாலும் பிள்ளைகள் இலகுவில் வந்துவிடுகிறார்களா? அப்-
போதுதான் ஒருவன் தூங்குவான், இன்னொருவன் அழுது-
கொண்டிருப்பான், மற்றொருவன் ஒவ்வொரு பருக்கையாய்
(சாதம்) வாயில் வைத்துக்கொண் டிருப்பான், வேறொருவன்
சந்துபக்கம் பாயப் பார்ப்பான், அநேகர் மூலை முடக்குகளைப்
பார்ப்பார்கள் சிலர் முக்கி முனகிக்கொண்டு வருவார்கள். இப்-
படிப்பட்ட ஒழுங்கான பிள்ளைகளைத் தேடிப் பிடிப்பதற்குள்
உபாத்தியாயருக்கு இரண்டாங் கட்டாய்விடும். இத்துடன் போன-
தா, உபாத்தியாயர் கூப்பிடவரும் சமயத்தில், செல்லங் கொடுத்-
துச் சீரழியச் செய்யும் சில சிறப்புள்ள பெற்றோர்கள், பரிதாப
நிலையிலிருக்கு முபாத்தியாயரிடம், ஒன்றுக்கு முதவாத சில கேள்-
விகள் கேட்பார்கள்: "என்னாங்க வாத்தியாரே, பிள்ளையை ரொம்ப
அடிச்சிங்களாமே, அப்படிச் செய்யாதிங்க" என்பார் ஒருவர்,
"ஏது வாத்தியாரே, என்னைப் படிப்புப் படிச்சிக் கொடுத்திட்-
டிங்கோ, எம் பிள்ளை மூனுவருசமா யிருக்குது" என்பார்
வேறொருவர், (ஆடிக் கொருதடவை, அமாவாசைக் கொருதட-
வையில் சிலவேளை தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக் கனுப்பியிருக்கக்
கூடும்) ஐயா "இப்படி இன்னைக்கோ எம்பிள்ளையை நாளையோட
நிறுத்திப் போடுறேன்" என்பார் மற்றவர் (அவன் படித்தால்
உபாத்தியாயருக்குத்தான் பிழைப்பென்றும், அவன் வராவிடில்
உபாத்திபாயருக்குக் குடியே நாசமாகிவிடும் என்றும் எண்ணிக்
கொண்டார்கள் போற்) 'என்னைபா, இந்தப் பயல் வீட்டுக்கு
வந்ததும், என்னை, "வாடி போடி" இன்னு சொல்றான், சோறு
திங்கும்போது கீழே சிந்துறான், இதுதானா படிச்சிக் கொடுக்குது-
என்பார் ஏனையோர் (பிள்ளைகளைக் கொஞ்சும்போது பிள்ளையைப்
பார்த்து "என் கண்ணே, அவனைக் குத்திப்போடு, உதைத்துப்-
போடு, மயிரைப் பிடித்து இழு, துப்பு" என்று படித்துக்
கொடுத்து இப்பழக்கத்தில் விட்டு அப்பியாசத்தை உண்டுபண்-
ணினவர்கள் இவர்களாயிருக்க, இவைகளுக் கெல்லாமா உபாத்-
தியாயர் பொறுப்பு).

இப்படியாக உபாத்தியாயர் படவேண்டிய பாடுகளையும் கேட்கவேண்டிய பேச்சுக்களையும் வெகு மரியாதையுடனடைந்த பின் கூடுமானவரையி லேதோ கிடைத்த பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு வருகிறார், வருவதற்குள் நடப்பதென்ன? அவர்களில் இரண்டொருவன் கம்பி காட்டி விடுவான். சபாஷ் உபாத்தியாயர்களுக்கு எவ்வளவு சுலபமான சாவகாசம் ஏற்பட்டிருக்கிறது இன்னும் மேலே கண்ட கதையைத் தொடர்ந்து போவோம். இப்படிப் போன பிள்ளைகள் போக மீதியாயிருக்கும் பிள்ளைகளைக் கொண்டு போய்ப் பள்ளிக்கூடம் சேர்த்த பின் கூட, உபாத்தியாயர் பாடு அனர்த்தமாய்த்தான் முடிகிறது. ஏனென்றால் சில சண்டாளப் பயல்கள், சார் (Sir) ஒன்றுக்கு வருகிறது இரண்டுக்கு வருகிறது என்று உத்திரவு கேட்டுக்கொண்டு வெளியே போகிறவர்கள் அதேகதியாய் ஓட்டம் பிடித்து விடுகிறார்கள். திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கை யில்லை. இப்படியாய்ச் சிரமப்படும் உபாத்தியாயர் தமது காலைப் போஜன முதலாய் முடிக்க நேரமில்லாத குறையால், அநேகமாய் அவ்வேளை உணவு வீட்டிலிருந்து பள்ளிக் கூடத்துக்கே கொண்டுவரப்படுகிறது. "கறக்கிறது உழக்குப் பால், உதைக்கிறது பல்லுப் போக" என்ற முதுமொழிப்படி இருக்கிறது. பள்ளிக்கூடம் தொடங்கியானதும் பெரும்பாலும், எல்லா வகுப்புகளையும் ஒரே உபாத்தியாயர் நடத்தவேண்டி யிருப்பதால் அவர் படும் கஷ்டம் கடவுளொருவரே யறிவர் "சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ், சொல்லிய வண்ணஞ் செயல்" என்னுந் திருக்குறளை யொப்ப, ஒருவருடைய வேலை வெகு சுளுவென்று விரைவாய்ச் சொல்லி விடலாம்; ஆனால் செய்து பார்த்தா லதிலுள்ள கஷ்டம் தெரியவரும். எந்த வேலையானபோதிலும் கஷ்டமுண்டென்றே எண்ணக்கடவார்களாக.

"உபாத்தியாயர்களின் வாழ்வும், வேலையும்" என்ற தலைப்புள்ள வியாசத்தை எழுதியவர் கிராமங்களில் இரண்டோரிடங்களிலுள்ள சில உபாத்தியாயர்கள் செய்துகொண்டுவரும் சோம்பேறித்தனமாயுள்ள காரியங்களைக் கவனித்துச் சொல்லி யிருப்பார் போலும். அப்படியானால் அவர்களை ஒருதாரணமா யெடுத்துக்கொண்டு எல்லாக் கிராமங்களிலுமுள்ள உபாத்தியாயர்களுமப்படியே என்று தீர்மானித்து விடலாகாது அல்லது, பட்டணங்களில் பெரிய பள்ளிக்கூடங்களில் (High Schools and



Colleges) ஏதாவது இரண்டொரு பாடங்களை மாத்திரம் கற்றுக்கொடுக்கும்படி அமைத்துள்ள உபாத்தியாயர்களின் (Professors) சில சௌகர்யங்களைக் கவனித்துத்தான் சொல்லிவிட்டாரோ யான் அறியேன், இவ்விடத்திலும் அவர்களுக்குத்தான் என்ன சௌகரிய முண்டாகிவிட்டது. ஆராய்ந்து பார்த்தால் அவர்களுக்குள்ள கஷ்டங்களும் தெரியவரும். அப்படியே இவ்விடத்தில சொன்ன சில சௌகரியங்களைக் கவனித்து, கிராமங்களில் உள்ள உபாத்தியாயர்களின் சௌகரியங்களுக்கு ஒப்பிடலாகுமா?

பட்டணங்களில் வேலை பார்க்கும் உபாத்தியாயர்களுக்குள்ள சௌகரியங்களில் ஒருபங்குகூட கிராம உபாத்தியாயர்களுக்கில்லையெனச் சந்தேகமறச் சொல்லலாம். மற்றும் பள்ளிக்கூடங்களில் கவனிக்க வேண்டிய விஷயங்களில் தோட்ட வேலை ஒன்று முக்கிய மானதே. தோட்டத்துக்கு வேண்டிய தண்ணீர் ஊற்ற வேண்டியவரும் பிள்ளைகளே, மற்றும தோட்டத்தின் வேலைகளைச் செய்யவேண்டியவரும் பிள்ளைகளே. இப்படி யிருக்க, சில அறிவிலிகள், "உபாத்தியாயர் வெகு கணக்காய்ப் பிள்ளைகளை வேலை வாங்கி காய் கறிச் செடிகள் பயிர் செய்து வீட்டுக் குழம்புக்கு பார்த்துக்கொள்கிறார்" என்னும் வீணான குபார்களும் கிளப்புகின்றனர். பள்ளிக்கூடத்தில் காய்கறிக்கான செடிகள் சில வேளை இருந்திரா, இருந்தாலும் இரண்டொன்றுக்குமே லிராது. இவைகளைக்கொண்டு அப்பருவ காலம முடிய, தன் காசைச் செலவு செய்யாமல், உபாத்தியாயர் குழம்புக்குச் சமாளித்துக்கொள்கிறார் என்றெண்ணிக் கொள்கிறவர்களும் உண்டு. "தோட்ட வேலை, பிள்ளைகளுக்கு ஏற்பட்டதின் நோக்கம், அவர்கள் பயிர்த் தொழிலில் நன்றாய்த் தேர்ச்சி யடையவும் பிற்காலத்தில் தம் புத்தியைக் கொண்டு தம் நிலத்தைச் சிக்கனமாயும் சுளுவான முறைகளாலும் சாகுபடி செய்யவேண்டியதென்று அவர்கள் அறியவே!" இவைகளை எவ்வளவு தூரம் எடுத்து உரைத்தாலும் அப்பெற்றோர்கள், நம்பாமல் "உபாத்தியாயர் ஏதோ உருட்டுகிறார், சர்க்கார் இதை யெல்லாம் பள்ளிக்கூடத்தில் செய்யச் சொன்னார்களோ என்று தான் சொல்வார்கள். ஆ! உபாத்தியாயர்களின் கஷ்டங்களைவிட அவர்களுக் குண்டான சாவகாசம் சௌகரியந்தானதிகமென இதை வாசிப்பவர்கள் ஒப்புக்கொள்வார்களோ! இப்படி உபாத்தியாயர்களின் சௌகரியங்களைச் சொன்னவர் மெய்யாகவே, உபாத்தியாயர்களுக்கு உண்டாக்கப்படும் குறை-

வுகளாகிய காலதாமதமான சம்பளம் சீக்கிரம் வரவும், கிராமங்களில் உள்ள ஏழைப்பிள்ளைகள் சரிவர பள்ளிக்கு வர ஓர் உபாயமான ஒழுங்கைச் செய்யவேண்டிய யுத்தியும், காட்டவேண்டும். அல்லது கட்டாயம் படிப்பு உண்டாகும்படியான மார்க்கத்துக்கு வேண்டிய வழிகளையாவது காருண்யக் கவர்ன்மெண்டாருக்கு உரைத்திருப்பாராயின் உத்தமமாயிருந்திருக்குமென்றெண்ணுகிறேன். ஆகையால், இதை வாசிக்கும் உபாத்தியாயர்களே வக்கீல்களுக்கும் வைத்தியர்களுக்கும், வியாபாரிகளுக்கும், வியவசாயிகளுக்குத்தான் அதிகவேலை என வீணாக எண்ணும் வேதியர்களை, தத்தளிக்கும் உபாத்தியாயர்களுக்குத்தான் தமாஷாய்க் காலங்கழிக்க நாள் உண்டென்று நினைக்கும் தயாள குணவான்களே, இப்போதாவது தயவாய்க் கிராம உபாத்தியாயர்களின் வேலையையும் சௌகரியங்களையும் கண்டு அமர்ந்திருப்பார்களென நம்பிக்கையுடன் அமரலானேன்.

P. AROKIAM,
*Teacher,*
*St. Xaviers Anglo Vernacular School,*
*Mandalay (Upper Burmah.)*

# ELEMENTARY SCHOOL ORGANIZATION

## கீழ்தர கிராம பாடசாலை ஏற்பாடு.

(முன்தொடர்ச்சி பக்கம் - 197)

4 காற்றோட்டம் — உலகத்திலுள்ள எல்லா ஜீவப்பிராணிகளுக்கும் சுத்த ஆகாயம் இன்றியமையாதது. ஒவ்வொரு மனிதனும் சராசரி ஒரு நிமிஷத்தில் 17 தரம் மூச்சு விடுகிறான். ஒவ்வொரு தடவையிலும் சுமார் 30 கன அங்குல சுத்த ஆகாயத்தை உள்ளுக்கிழுத்து 20 கன அங்குல அசுத்த ஆகாயத்தை விடுகிறான். வெளிவிட்ட அசுத்த ஆகாயத்தை திரும்பவும் சுவாசித்தால் நமக்குத் தீங்கு உண்டாகும். அதற்காக அசுத்த ஆகாயத்தை வெளிப்படுத்த வெளிப்படுத்த அப்புறப்படுத்தி புதிய ஆகாயம் அறைக்குள் வரும்படி செய்வதுதான் காற்றோட்ட ஏற்பாடு. திறந்த இடங்களிலும் மைதானங்களிலும் ஏராளமான காற்று இருப்பதால் அங்கே வேலை செய்பவர்களுக்கு



ஒருவித கஷ்டமும் இல்லை. வகுப்பறையில் அநேகம் பேர் இருந்து வேலை செய்வதால் காற்றோட்டமுண்டாக்குவது அவசியமாகிறது.

காற்றோட்டமுண்டாக்கப் பல வழிகள் உண்டு.

ஜன்னல்கள் — அறைக்கு ஏராளமான ஜன்னல்கள் எதிரெதிரே வைத்தால் காற்று நன்றாக உலாவும். தரை மட்டத்திலிருந்து மேற் கூரைவரை ஜன்னலை வைப்பதும் நல்லது.

மேற்கூரை — வகுப்பறையின் உயரத்தை அதிகமாகச் செய்து மேற்கூரையைப் போட்டால் காற்று ஏராளமாக அறையில் கொள்ளும்.

துவாரங்கள் — தரையை ஒட்டி சில சிறு ஜன்னல்கள் அல்லது சாளரங்கள் விட்டு மேற்கூரையை யடுத்து சிறுதுவாரங்கள் விட்டுக் கட்டினால் அடிதுவாரங்கள் வழியாக சுத்த ஆகாயம் வரவும் மேல் துவாரங்கள் வழியாக அசுத்த ஆகாயம் வெளியே போகவும் வழியுண்டாகும். நம் தேக உஷ்ணநிலை வெளிக்காற்றைவிட அதிகமானதால் நாம் வெளிவிடும் ஆகாயம் உஷ்ணமாய் இருக்கிறது. இந்த உஷ்ணமான காற்று லேசாய் மேலே போக முயற்சி செய்கிறது. அதனால் காற்றோட்டமும் இலகுவாகிறது.

தாழ்வாரங்கள் — தாழ்வாரங்கள் உஷ்ணத்தைக் குறைப்பதனால் வெளிக்காற்று உள்ளே வர அனுகூலம் செய்கிறது.

பாடசாலையைச் சுற்றிலும் ஏராளமான காலி இடமும் வேண்டுமென்று சொன்னோமல்லவா? நல்ல ஆகாயம் உலாவுவதற்குத்தான் அதை அவ்வளவு கட்டாயமாகச் சொன்னோம். பாடசாலையைச் சுற்றிச் சற்று தூரத்தில் செடிகளை வைப்பதால் ஜில்லென்று எப்போதும் காற்றடிக்கும் தண்ணீர் தெளிப்பதாலும் காற்றோட்டமுண்டாகும். நமது தேசம் அதிக உஷ்ணமானதாகையால் தாழ்வாரங்களில் புல் தட்டி கட்டி அடிக்கடி ஜலம் தெளித்து குளிர்ச்சியுண்டாக்கி காற்றோட்டமுண்டாக்க வேண்டும். தரைக்கும் அடிக்கடி தண்ணீர் தெளிக்க வேண்டியதும் குளிர்ச்சிசெய்ய அவசியம்.

வகுப்பறையில் அதிகநேரம் பிள்ளைகளை அடைத்திருந்தால் அறை முழுவதும் அசுத்த ஆகாயம் வெளியேற அவகாசமில்லா-

மல் கெட்டகாற்றால் நிறைந்துவிடும். இதற்கென்றே பாடசாலை நடக்கும் நேரங்களில் 10 நிமிஷம் பிள்ளைகளை வெளி விடவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி பிள்ளைகள் வெளியே போவதால் வகுப்பறையில் சுத்த ஆகாயம் நிரம்புவதோடு பிள்ளைகளும் வெளியிலிருந்து சுத்த ஆகாயத்தை உட்கொண்டு வருகிறார்கள். மேலும் பாடசாலை ஆரம்பிக்குமுன் அரைமணி முன்னால் திறப்பதும், முடிந்து அரைமணி பின்னால் மூடுவதும் காற்றோட்டமுண்டாக்க வழிகளாகும். ரஜா நாட்களில் பாடசாலை மனித சஞ்சாரமில்லாமல் காலியாயிருப்பதால் ஆகாயம் சுத்தமாகவே யிருக்கும்.

5 பாடசாலைத் தோட்டம் — இவ்விஷயம் நமது நல்லாசிரியனில் பல தடவைகள் வந்திருக்கின்றமையால் நாம் அதிகமாக விவரிக்க வேண்டிய அவசியமில்லை. நண்பர்கள் அக்குறிப்புகளை ஞாபகத்தில் வைப்பார்கள் என்று நம்புகிறேன்.

(இன்னும் வரும்)

P. C. KRISHNA AYYAR, B.A., L. T.
*I Assistant, Govt. Trg. School,*
*Dindigul.*

# ZOOLOGY

## பிராணி சாஸ்திரம்

### Frog — தவளை

(முன் தொடர்ச்சி வால்யம் — 13 பக்கம் - 2;0)

**காது, வாய், கால்கள் :**

**காது** — தவளையை உற்றுப்பார்; காது எங்கே இருக்கிறது என்பதைக் கவனி. நமக்கு இருப்பதுபோல் தவளைக்குக் காதுகள் வெளிப்புறமாகத் தோன்றுகிறதா — இல்லையே. கடைவாய்க்குச் சற்று மேலே, கண்ணுக்குச் சிறிது கீழே பக்கத்துக்கு ஒன்றாக ஒரு வட்டமான புள்ளியைப்போல் ஒருவிதச் சவ்வு தோன்றுய, அதுதான் காது. அந்தச் சவ்வின்மேல் சத்தம் பட்டவுடனே தவளைக்கு கேட்கும் உணர்ச்சி உண்டாகும். தவளையின் எலும்புக்கூட்டைப் பார்த்தால், அந்தச் சவ்வு உள்ள



இடத்தில் செவித்தொளையும் அதினின்றும் மூளைக்குச் செல்லும் நரம்பும் நன்றாய்த் தெரியும். மத்தளத்திற்கு இருபுறத்திலும் மூடியிருக்கும் தோலுக்குச் சமமாக இதற்குக் காதின் சவ்வு அமைந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். தவளை முதலிய ஜல ஜந்துக்களுக்கு செவித்தொளை யிருந்தால், தண்ணீர் அத்தொளைக்குள் சென்று நிறைந்துவிடும். அதனால் அவற்றிற்குச் செவிப்புலன் இல்லாமற் போய்விடும். அதனாலேயே கடவுள் இவ்வித ஏற்பாட்டை ஜலசரங்களுக்கு அமைத்திருக்கிறார் என்பதை ஊகித்து அறியலாம்.

**வாய்** — தவளைக்கு வாய் மிகவும் பெரியது. அது பிறைச் சந்திரனைப்போல் வில்வளைவாய் காதுவரையில் சென்றிருக்கிறது. தவளை தன் வாயைத் திறந்தால், அதன் உருவத்திற்கு அதிகமும் பெரியதாகத் தோன்றும். தவளை தன் இரையைப்பற்றி உடனே விழுங்கவேண்டிய பிராணியாகையால், அதற்குப் பெரிய வாய் இருக்கவேண்டுவது அவசியமேயாகும். அதற்கு வாய் குறுகி யிருகதால், அது தன் இரையைத் தட்டாமல் பற்றிக்கொள்ளவும், பற்றியதைத் தாராளமாக விழுங்கவும் முடியாமற் போகும். இதனாலும் சிருஷ்டியின் சிறப்பு நமக்கு நன்றாய் விளங்குகின்றது அல்லவா?

**கால்கள்** — தவளைக்கு முன் இரண்டும் பின் இரண்டுமாக நான்கு கால்கள் இருக்கின்றன. முன்கால்கள் குறுகியவை, பின் கால்கள் நீண்டவை. தவளை தண்ணீரில் நிலைத்திருக்கும்போது பார்த்தால் சற்றே சாய்ந்த கோடுபோல் / அடிப்புறம் தாழ்ந்தும் தலைப்புறம் உயர்ந்தும் இருப்பது தோன்றும். இது என் இப்படி இருக்கிறது. தவளை தண்ணீருக்கு மேலிருந்து மூச்சுவிட வேண்டிய பிராணியாகையால், அது தன் தலையைத் தண்ணீர் மட்டத்திற்கு மேலேயே வைத்துக்கொண்டு இருக்க நேரிடுகின்றது. தவளையை நாம் அடித்துத் துரத்தினோமானால் அது தண்ணீருக்குள் கொஞ்சதூரம் நீந்திச் சென்று மறுபடியும் தண்ணீருக்கு மேலே வரும். அன்றியும் நாம் ஒரு சிறுபையனை இரண்டு கைகளையும் தரையில் ஊன்றிக்கொண்டு, முழங்காலிட்டு ஒரு கன்றுக்குட்டியைப் போல் நடக்கச் செய்து, பிறகு கைகளைத் தரையில் ஊன்றியபடியே உட்காரச் சொன்னால், அவன் எப்படி உட்காருகிறான் பாருங்கள். அவன் தன் கால் இரண்டையும் முழங்காலிட்டபடியே மடக்கி, தன் புட்டம் குதிகாலின்மேல்

படும்படி உட்காருவான் அல்லவா? ஏன் அப்படி உட்காருகிறான்? கைகளைவிடக் கால்கள் நீண்டு இருப்பதனால், கையின் உயரத் தளவுக்குச் சரியாய் காலையும் அமைத்துக் கொள்ளும்படிச் செய்ய இயற்கையாக நேரிடுகின்றது. அவன் அப்படி உட்காரும் போதும் பின்புறம் தாழ்ந்தும், தலைப்புறம் உயர்ந்தும் இருக்குமல்லவா? அதேபோல் தவளைக்கும் ஏற்படுகிறது. தவளையின் முன் கால்கள் குறுகியும் பின்கால்கள் நீண்டும் இருக்கின்றன. அன்றியும் அதன் முன்கால்களைக் கவனித்தால் அவை ஏதோ ஒரு பொருளைத் தழுவிக்கொள்ளத் தன் கைகளை வைத்திருப்பதுபோல் தோன்றுகிறது. இப்படி இருப்பது ஏன், நீந்தும்போது, தவளை தன் முன்கால்களால் தண்ணீரைத் தன்புறம் தள்ளவும், பின்கால்களால் உதைத்துத்தள்ளி நீந்தவும் அனுகூலமாகக் கால்கள் அமைந்திருக்கின்றன. தவளையின் பின்கால்கள் தோலடியாக இருப்பதனால், நீந்துவதற்கு அவை அதிகமும் அனுகூலமாக இருக்கின்றன. தவளை நீந்தும்போது மற்றொரு விஷயமும் நாம் கவனிக்க வேண்டும். அதாவது, அது நீந்துகையில் தன் பின் கால்களை மாறிமாறி உதைக்காமல் இரண்டு கால்களையும் ஒரே காலத்தில் உபயோகித்து உதைத்து நீந்துகிறது. அது பூமியின்மேல் குதித்துப் போகும்போதும் இவ்வாறே செய்வதைக் கவனிக்கவும்.

தவளைக்கு முன்கால்களைவிடப் பின்கால்கள் பருத்து இருக்கின்றன. கட்டை வெட்டிக்குக் கைகள் பருத்து இருப்பதும் ஏற்றமேறி மிதிப்பவனுக்குக் கால்கள் பருத்திருப்பதும் இயற்கை அல்லவா — எந்த உறுப்பு அதிக உழைப்பிலிருக்கிறதோ அந்த உறுப்பு அதிகமும் உறுதியடைந்து பருத்திருக்கும். தவளை நீந்தும் இயல்புடையதாதலால். அதற்குப் பின்னங் கால்களே அதிகமும் உபயோகப்படுவதால், அவை முன்னங்கால்களைவிடப் பருத்திருக்கின்றன.

பத்திராதிபர்.




1917௵ ஜூன்௴ முதல் 1918௵ மே௴ வரையில்

# பதின்மூன்றும் சம்புடம்

பத்திராதிபர் — கா. நமச்சிவாய முதலியார்

வெளியிடுவோர்
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1918
விலை ஒரு ரூபாய்

PRINTED AT
THE CAXTON PRESS
MADRAS

# CONTENTS

## பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆகாயம் (காற்று) ... ... ... ... | ... 273 |
| 2. | ஆரம்பக்கல்வி மசோதாவும் உபாத்திமார்களின் கஷ்டமும் | ... 271 |
| 3. | இயற்கை யறிவு — பிராணி சாஸ்திரம் — கோழி முட்டை | ... [illegible] |
| 4. | இந்தியச் சிறுவர்களின் கல்வி அபிவிருத்தி அடைந்ததற்கு காரணம் யார்? ... | ... 223 |
| 5. | உபகரணங்கள் ... ... ... ... | ... 246 |
| 6. | உபாத்தியாயர் பொது நன்மையை விரும்பவேண்டும் | ... 131 |
| 7. | உபாத்தியாயர்களுக்கு வேலை விதித்தல் ... | ... 54 |
| 8. | உபாத்திமைத் தொழில் ... ... ... | ... 61 |
| 9. | உபாத்தியாயருக்கான புஸ்தகங்கள் ... ... | ... 15 |
| 10. | உபாத்திமார்களின் சிரத்தை ... ... ... | ... 162 |
| 11. | உபாத்தியாயர்கள் பத்திரிகை வாசித்தல் ... | ... 227 |
| 12. | உலாவுகையில் உய்த்துணர்வு ... ... ... | ... 91 |
| 13. | எலிமெண்டரிப் பாடசாலை உபாத்தியாயர்களின் பரிதாப நிலைமை | ... 258 |
| 14. | எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு மாத கிராண்டு ... | ... 210 |
| 15. | எலிமெண்டரிப் பாடசாலைகளில் செய்யுட்பாட போதனை | ... 214 |
| 16. | எலிமெண்டரிப் பாடசாலைகளின் பாட ஜாபிதா ... | ... 229 |
| 17. | கதை சொல்லல் | 20, 32, 66, 83, 115, 157, 174, 198, 233, 243, 282 |
| 18. | கல்வி அபிவிருத்தியாவ தெங்ஙனம்? ... ... | ... 112 |
| 19. | கால அட்டவணை ... ... ... ... | ... 109 |
| 20. | பிராணி வைத்தியர்கள் ... ... ... | ... 219 |
| 21. | கீழ்தர கிராம பாடசாலை ஏற்பாடு ... ... | 160, 195 |
| 22. | குருபக்தி ... ... ... ... | ... 204 |
| 23. | கொசுக்கள் உற்பத்தியும் அவைகள் செய்யும் கெடுதியும் — ஒரு சம்பாஷணை ... | ... 184 |
| 24. | செய்யுள் மாலை ... ... ... | 49, 73, 145, 193 |
| 25. | செடிகளை நாசம் பண்ணும் சில சாதாரண பூச்சிகளைக் கொல்வதற்கு எளிதில் வீட்டில் செய்யக்கூடிய ஔஷதங்கள் | ... 102 |

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 26. | தவளை ... ... ... ... | 267 |
| 27. | தவளையின் ஜீவிய சரித்திரம் ... ... ... ... | 137 |
| 28. | தர்மம் ... ... ... ... ... | 17 |
| 29. | தாவர சாஸ்திரம் ... ... ... | 27, 51, 100, 129, 217 |
| 30. | தாவரநூல் ... ... .. ... ... | 189 |
| 31. | நமது நாள் ‘ரெட் க்ராஸ்’ பாடல் ... ... ... | 143 |
| 32. | நமதுநாள் ‘தர்பார்’ பாடல் ... ... ... ... | 167 |
| 33. | நல்லாசிரியர் எவர்? ... ... ... ... | 76 |
| 34. | நாயினுங் கடையேன் ... ... ... ... | 97 |
| 35. | நீலகிரி ... ... ... ... ... | 241 |
| 36. | நீர்ச்சுழற்சி ... ... ... ... ... | 255 |
| 37. | பக்ஷி என்பது என்ன? ... ... ... ... | 211 |
| 38. | பாடசாலைத் தோட்டமும் அதன் சம்பந்தமான வியவசாய விஷயங்களும் | 37, 57, 140, 146 |
| 39. | பாஷை ... ... ... ... ... | 265 |
| 40. | பிராணி சாஸ்திரம் ... ... ... ... | 1, 25, 208 |
| 41. | பிழை திருத்தம் ... ... ... ... ... | 96 |
| 42. | பெண்கல்வி பெற்றிமை ... ... ... ... | 237 |
| 43. | பேபர் எழுதிய தற்சரிதை ... ... ... ... | 4 |
| 44. | பாபர் ... ... ... ... ... ... | 70 |
| 45. | பொங்கற் புதுநாள் ... ... ... ... | 169 |
| 46. | பொற்கைப் பாண்டியன் ... ... ... ... | 121 |
| 47. | போதனைக் குறிப்பு ... ... ... ... | 180 |
| 48. | மதிப்புரை ... ... ... ... ... | 139 |
| 49. | மதுபான விலக்கு ... ... ... ... ... | 139 |
| 50. | மாதிரிப் பாடம் — வகுத்தல் ... ... ... | ...41, 87 |
| 51. | முயலுக மேன்மேல் ... ... ... ... | 9 |
| 52. | வகுப்பில் பிள்ளைகள் ஒருவரைப் பார்த்து ஒருவர் எழுதுவதைத் தடுக்கும் முறை | ... 48 |
| 53. | ‘வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்’ ... ... ... | 201 |
| 54. | வித்யா இலாகாவிற் சில மாறுதல்கள் ... ... ... | 79 |
| | ... ... ... | 178 |



# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

## மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 14 | 1918௵ ஜூலை௴ | மாதம் 2


## THE TAMIL LANGUAGE

## தமிழ் மொழி

(முன்தொடர்ச்சி பக்கம் - 5.)

பாஷா தத்துவசாஸ்திரத்தை அனுசரித்துத் தமிழ்மொழி தனிமொழியே என்பதை முன்பு நிச்சயித்தோம். இனிப் புராண வாயிலாகக் கிடைக்கும் ஆதாரவுகளையும் ஆராய்ந்து அதை நிச்சயிப்போம். அகஸ்தியர் என்னும் முனிவர் தமிழுக்குத் தலைவரென்றும் அவரே தமிழைப் படைத்தனரென்றும் பலர் கூறுவர். ஆயினும் ஆராய்ச்சியாளர் அகத்தியனார் தமிழ் மொழிக்கு இலக்கண முதலிய செய்து அம் மொழியை வளர்த்தனர் என்று கூறுவர். இவற்றின் உண்மையை இங்கு ஆராய்வோம்:

அகஸ்தியர் ஆரிய பரம்பரையைச் சார்ந்தவர். ஆரியர் ஆரியாவர்த்தம் என்னும் வட இந்தியாவில் நிலைத்திருந்தவர் என்பது

அனைவரும் அறிந்த விஷயம், ஆரியரான அகத்தியனார் தென்னாடாகிய தமிழ் நாட்டிற்கு வந்ததைக் குறிக்க இரண்டு கதைகள் வழங்குகின்றன. அவற்றுள் ஒன்று :—

சிவபெருமான் பார்வதி (பர்வதராசன் புத்திரி)யைத் திருமணஞ் செய்துகொண்ட காலத்தே தேவர் முனிவர் முதலாயினோர் அத் திருமணக் கோலத்தை கண்டு களிக்குமாறு இமய மலையை யடைந்தனர். அடையவே, வடபுறம் தாழ்ந்து தென் புறம் உயர்வதாயிற்று. (இது தராசிலுள்ள தட்டுக ளிரண்டினுள் பாரந் தாங்கியது தாழ்வதும் பாரமில்லாதது உயர்வதும் போல்வது). இதனை அறிந்த முனிவர் பெருமானிடத்தில் முறையிட்டுக்கொள்ள சிவபெருமான் அகத்தியனாரை அழைத்து, 'நீர் சென்று தெற்கிலுள்ள பொதியமலையின்கண் தங்கின் பூமி சமனுறும் அங்ஙனம் செய்க' என்றனர். அகத்தியனார் அக் கட்டளையைச் சிரமேற்கொண்டு பரமபதியை நோக்கி, 'என் பெருமானே! அடியேன் தெற்கின்கண் சென்றால் அங்கு வழங்கும் மொழியை அறியாமல் எங்ஙனம் வாழ்வேன்' என்று விண்ணப்பஞ் செய்ய, அதனைக் கேட்டருளிய பெருமான் தமிழ் மொழியை அகத்தியனாருக்கு உணர்த்தினாரென்றும் அதன் பின்னரே அகத்தியனார் பொதியை யடைந்து தமிழ் மொழிக்கு இலக்கணஞ் செய்தனரென்றும் புராணம் கூறும்.

இக் கதையை ஆராயுங் காலத்து அகத்தியனாருக்கு முன்னரே தமிழ்மொழி இந்நாட்டில் வழங்கியது என்பது தென்னிதிற் புலனாகும். அன்றியும் ஒரு மொழிக்கு இலக்கியம் ஏற்பட்ட நெடுங்காலத்தின் பின்னரே அம் மொழிக்கு இலக்கணம் ஏற்படும் என்பதை அறிஞர் பலரும் அறிவர். அகத்தியனார் முதல் முதலாக இலக்கணம் செய்தனரெனின் தமிழ் மொழியின் இலக்கியம் அதன்முன்பு நெடுங்காலமாக வழங்கி வந்தது என்பது பெறப்படும். இதனை,

'இலக்கிய மின்றேல் இலக்கண மின்றாம்
எள்ளின் றாகில் எண்ணெயு மின்றாம்
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தி னின்றும் எடுபடும் இலக்கணம்'

என்னும் அகத்தியச் சூத்திரமே நன்கு வலியுறுத்தும். இனி மற்றொரு கதையுங் கூறுவோம் :



முனிவர் பலர் காசியம் பதியில் ஒன்றுகூடிச் சம்ஸ்கிருத பாஷைக்குச் சங்கம் ஒன்று ஏற்படுத்தினர். அகத்தியனார் ஏதோ காரணம்பற்றி மற்றைய முனிவரோடு மாறுபட்டு, சம்ஸ்கிருத பாஷைக்கு சமமான வேறொரு பாஷையை தாம் மேற்கொண்டு வளர்ப்பதாகச் சபதம் கூறி, அவரை நீங்கி, தென்னாட்டிற்கு வந்து முருகக் கடவுளை முன்னி வணங்கி, தமக்கோர் பாஷையை அருளுமாறு வேண்ட, அப் பெருமான் மகிழ் சிறந்து தமிழ் மொழியை அகத்தியருக்கு உபதேசித்தனரென்பர். இதனானும் தமிழ்மொழி அகத்தியனாருக்கு முன்னரே இந் நாட்டில் வழங்கியதென்பது விளங்கும்.

ஆக இவ்விரண்டு புராணக் கூற்றுக்களாலும் நந்தம் தமிழ் மொழி தனிமொழியேயாம் என்பது வெள்ளிடை மலைபோல் விளக்கமுறுகின்றது.

பத்திராதிபர்.

## TIME-TABLE

## கால நிர்ணயப் பட்டி

எல்லா உபாத்தியாயர்களும் எல்லாப் பாடங்களையும் எல்லா வகுப்புகளுக்கும் படிப்பிக்க இயலாது. ஓர் உபாத்தியாயர் கணிதம் கற்பிப்பதில் தேர்ச்சி யுடையவராக இருப்பார். இன்னொருவர் பூகோளம் போதிப்பதில் கெட்டிக்காரராக விருப்பார். மற்றவரோ புதிதாகப் போதனைமுறைப் பாடசாலையிற் பயின்றவராக இருப்பார். ஒருவர் இயற்கைப் பாடம், கதை, பாட்டு, டிரில் முதலிய நூதன போதனா சாதனையிற் பழக்கமுடையவராக இருப்பார். இவ்வாறு இருப்பதினால் அநுகூலமே யன்றிப் பிரதிகூலம் ஏதுமில்லை. எவ்வாறெனில் பாலர் வகுப்பு உபாத்தியாயரைக் கண்டால் நான்காவது வகுப்புப் பிள்ளைகளுக்கு மிக அலக்ஷியம். அவரை ஒரு பாடத்திற்கு அவ் வகுப்பிற்கு ஏற்படுத்தினால் இவ்வாறு நேராது. மேலும் அவ் வகுப்பு உபாத்தியாயர் ஏதோ காரணமாக ரஜா வாங்கிக் கொண்டால் இவ்வுபாத்தியாயர் அவ் வகுப்பை அடக்கியாள அசக்தராக விருக்கிறார். பள்ளிக்கூடம் ஒரே சந்தைக் கூச்சலாக ஆகிவிடும். இதுவுமன்றி, எவரெவர் எக்-

தப் பாடத்தில் தேர்ச்சி யுடையவராக இருக்கிறாரோ அவரவரை அவ்வப் பாடத்தைப் போதிக்க ஏற்பாடு செய்யின் அதிக சந்தோஷத்துடன் வேலை நடக்கும். ஆயின் இதிலோர் ஆட்சேபம் உண்டாகலாம். ஒருபாத்தியாயர் சித்திரத்தில் தேர்ந்தவராக இருக்கிறார். அவருக்குச் சித்திர பாடமே கொடுத்துவிட்டு மற்றவர் போதித்து வருவதால் அதிக சிரமமடையவும், இவர் போர்டில் நாயோ பூனையோ வரைந்துவிட்டுச் சும்மா இருப்பதோ? இதுவுமன்றி மற்ற உபாத்திமார் சித்திரம் கற்றுக்கொள்ள வேண்டுமென்கிற அவாவும் அவசியமும் நீங்கிவிடுகின்ற தல்லவா? என்பது. ஆனால் நான் எல்லா வகுப்பிற்கும் சித்திரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்ல வரவில்லை. எந்த உபாத்தியாயருக்கும் தன் சொந்த வகுப்பொன்று ஏற்பட்டிருக்கும். அதற்கு முக்கியமான பாடமாகிய வாசகம், கணிதம், இந்த உபாத்தியாயரே எடுத்துத் தீரவேண்டும். நிற்க ஒரு பாடசாலையில் எல்லோரும் புதிய முறைப்படி பயின்றவராக இருப்பது கடினம். எல்லோரும் சிறு பிள்ளைகளாகவும் சுறுசுறுப்புள்ளவராகவும் இருப்பதுங் கஷ்டம். பழைய போதனை முறைப்படி தேர்ந்தவரும் ஒரு பரீட்சைக்கும் செல்லாது சர்விஸ் சர்டிபிகேட் (Service Certificate) உடையவரும் வயது சென்றவருமாக ஒரு போதகரேனும் இருப்பது சகஜம். அவர் பல்லாண்டின் பழக்கத்தால் வாசகம், எழுத்து, கணிதம் இவைகளைப் போதிப்பதில் அதிக நிபுணராக விருப்பர். இவர் வகுப்பில் இயற்கைப் பாடம் இவரால் நடத்த முடியுமா, நடத்தினாலும் நன்றாக விருக்குமா, இதனாலேயே கால நிர்ணயப் பட்டியொன்று தயார் செய்துகொண்டு எவர், எவ்வகுப்பு, எப்பாடம், எக்கிழமை, எம் மணியில் போதிக்க வேண்டுமென்பதை திடப் படுத்திக் கொள்ள ஏற்ற சாதனமாக இருக்கிறது. இதனால் உபாத்திமார் எப் பாடத்தையும் மறவாது கஷ்டமாக விருந்த போதிலும் வீண்காலம் போக்காது பாடத்தைச் சிரத்தையுடன் போதிப்பார்கள். பல வகுப்புகளுக்குப் பல பாடங்களுக்குப் போவதினால் உபாத்தியாயருக்குச் சிரமமே ஏற்படாது. சந்தோஷமாகக் காலம் போகும். பிள்ளைகளுக்கும் பல உபாத்திமார் தங்களுக்குப் படிப்பிப்பதால் உற்சாகம் அதிகப்படும். ஆயின் அவ் வகைய Professorial System த்திற்குப் பல உபாத்தியாயர்கள் அவ்வாறு செய்யின் ஒரு வகுப்பினும் பொருப்பின்றி (Responsibility) ஏனோதானோவென இருக்க நேரும் என்று எண்ணலாம்.



இவ்வாறு ஆக்ஷேபிப்பவர் சற்று வயதுசென்றவராகவோ அல்லது தன் அலுவலில் அசிரத்தையாக இருக்கும் உபாத்தியாயராகவோ இருப்பர் என்பது திண்ணம். இதற்கு முக்கிய காரணம் தம்மிடத்தை விட்டு எழுந்திருக்கவே இஷ்டமில்லாதவர் தம்மிடத்திலேயே உட்கார்ந்து தான் என்ன கஷ்டப்படுவார் என்பதை இதை வாசிப்போரே உணரலாகும். ஊதியத்தைப் பெறும் உத்தம உபாத்தியாயர் உண்மையாக உழைக்க வேண்டியது மவசிய மன்றோ? இதை நோக்காத அநேக உபாத்திமார் "மாட்டை மேய்த்தோமாம், கோலைப் போட்டோமாம்" என நாளைக் கழிப்பதையும் பல பள்ளிக்கூடங்களிற் கண்கூடாகக் கண்டுளோம்; காண்கிறோம். இவ்வாறியற்றும் உபாத்தியாயன் அதிகாரிகளின் கண்ணில் அகப்படாமல் தன் சாமர்த்தியத்தால் தப்பித்துக்கொண்டாலும் தன் மனசாக்ஷி (Conscience) யினின்றும் கடவுளினின்றும் தப்பித்துக்கொள்ள அசக்தனாகி, கஷ்டமெய்துவ னென்பதி லையமின்று. இனி, இம்முறையிற்பயிற்ற, எந்தப் பாடம் எவ்வளவு நேரம் எவரால் கற்பிக்கப்படவேண்டுமோ அந்தப் பாடத்தைக் குறிப்பிடுவதே பாடக் குறிப்பாம் (Notes of lesson). அதை தயாரிக்க மிக அநுகூலமாக இருக்கும் பாடக்குறிப்புகள் எழுது முன்னற் குறிப்பிட்ட நேரத்திற்கு இவ்வளவுதான் பாடம் நடத்த முடியுமென நிச்சயிக்கவேண்டும். பாடம் பிள்ளைகள் அந்தக் குறித்த நேரத்திற் கற்றுக்கொண்டு பின்பு மறக்காமலிருக்குமா றிருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் கற்பிக்கும் பாடம் அரை குறையாக விருத்தல் கூடாது. ஒவ்வொரு பாடத்தையும் சில முக்கிய பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு செய்வதால் உபாத்திமார் கஷ்டம் குறையும். பிள்ளைகளின் ஒழுங்குக்கும் நடத்தைக்கும் ஆதாரமாகவிருக்கும். பள்ளிக்கூடத்தில் சப்தம் குறையும். எந்த வகுப்பும் சுறுசுறுப்பின்றிச் சோம்பியிராது. ஒரு வகுப்பில் சத்தமுள்ள வாசகம், அபிநயப்பாட்டு, கதை, செய்யுள் முதலிய பாடங்கள் நடக்கையில் மறு வகுப்பில் சப்தமில்லாத காபி, கணக்கு, சித்திரம், கையெழுத்து முதலான பாடங்களை ஏற்படுத்திப் பாடசாலையில் மிதமாய்ச் சத்தமிருக்கச் செய்யலாம். தவிர ஒருமணியில் உபாத்தியாயர் சிரமப்பட்டு வாசகம் கணக்கு முதலிய முக்கிய பாடத்தைக் கற்பித்த பிறகு, இளைப்பாறும் பொருட்டு மறுமணியில் எழுத்து, சொல்வதெழுதல் முதலிய சுலப பாடங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

கால நிர்ணயப் பட்டியில் ஒரு நாளில் முதல்பாடம் முக்கியமான பாடமாகவும் பிள்ளைகள் மதிக்கத்தக்க பாடமாகவும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதால் பிள்ளைகளும் நேரம் பொறுத்து வரமாட்டார்கள், உபாத்தியாயரும் முதல் மணி யாகையால் பசி, கஷ்டம், களைப்பு இல்லாமல் பாடத்தைக் கற்பிக்க பிள்ளையும் சுறுசுறுப்பாக கற்றுக்கொள்வான். உதாரணமாக.

முதல்பாடம் வாசகம், செய்யுள், கணக்கு முதலான கஷ்டமான பாடமாயிருந்தால், இரண்டாவது பாடம் பார்த்தெழுதல் கிண்டர்கார்ட்டன் வேலை, அபிநயப்பாட்டு முதலிய சுலபமான உற்சாக மூட்டும் பாடங்களாய் இருக்கவேண்டும். மூன்றாவது பாடம் சிறிது கஷ்டமுள்ள பாடமாகவே இருக்கலாம். இவ்வாறு கஷ்டமும் சுலபமும் விரவி வருமாறு கால நிர்ணயப் பட்டி அமைத்திருத்தல் வேண்டும். இவ்வாறு ஏற்படுத்துவதால் உபாத்தியாயரும் பிள்ளையும் "சோம்பித் திரியேல்" என்பதை மேற்கொண்டொழுக இடமுண்டாகும். முதல் பாடத்திற் கஷ்டமுறினும் மறுபாடத்தில் இளைப்பாறச் சமயம் ஏற்படும். இம்முறை மத்தியான வேளையிலும் அநுசரிக்க ஏற்றது. காலையில் கணிதம் முதல்பாடமாக விருந்தால் மாலையில் வாசகம் முதல் பாடமாக விருத்தல் வேண்டும். கட்டாய பாடங்கட்கு அதிக நேரமும் மற்றைய பூகோளம், சுகாதாரம், இயற்கைப் பாடம், துரைத்தன விளக்கம், கிண்டர்கார்டன் வேலைகள் முதலிய பாடங்கட்கு வகுப்பிற்குத் தக்கவாறு காலத்தைப் பிரித்து வாரத்தில் பள்ளிக்கூட நாட்கள் எத்தனை? ஒரு தினத்தில் பள்ளிக்கூடம் நடைபெறும் காலம் எவ்வளவு? உபாத்திமார் சங்கியை என்ன? கட்டாய பாடந் தவிர இஷ்டபாடங்கள் கற்பிக்க வேண்டியவை எத்தனை? என்பவைகளை நன்கு ஓர்ந்து தேர்ந்து கால நிர்ணயப் பட்டி ஏற்படுத்திக்கொண்டு அதற்கேற்பப் பாடக்குறிப்பு தயார் செய்து கொண்டு வகுப்பிற் சென்று போதிப்பவனே போதகனாவன். இவ்வகையைக் கையாண்டு படிப்பிப்பவனே பண்டிதனாவன். இவைகளைக் கவனித்து ஓதுகிறவனே உபாத்தியாயனாவன்.

C. V. DURAISINGA MUDALIAR,
*Headmaster, Corporation Model School,*
*and Secretary, Ely. Teachers' Guild, Madras.*



# THE BAT
## வெளவால்: பாடக்குறிப்பு.



வேண்டுங்கருவி: உயிருள்ள வெளவால்; பஞ்சு அடைத்த மாதிரி வெளவால்; பலவித வெளவால் படங்கள்; வெளவாலின் எலும்புக்கூட்டின் சித்திரப்படம்; மானிட எலும்புக்கூட்டின் சித்திரப் படம்.

| விஷயத் திரட்டு | குறிப்பு முறை |
|---|---|
| **I. அமைப்பு:—** | |
| 1. உடல்: சுண்டெலியைப் போன்றது; மெல்லிய உரோமமுள்ள போர்வை உண்டு. | 1. சுண்டெலியின் உடலுக்கு ஒப்பிடுக; பறவையின் போர்வைக்கும், வெளவாலின் போர்வைக்குமுள்ள பேதங்களைக் காட்டுக. |
| 2. உறுப்புக்கள்: நான்கு; மேல் புஜத்தின் எலும்பு மித அளவாயிருக்கும்; முன்கையின் எலும்போ மிக நீண்டிருக்கும். கை விரல்களின் எலும்புகள் நீண்டு நுண்ணியவைகளா யிருக்கின்றன. குட்டையான கட்டை விரலில் வளைந்த நகமுண்டு. | 2. நம்முடைய உறுப்புக்களோடு ஒத்துப்பார்க்கச் செய்யவும்; வெளவாலின் விரல்கள் நீண்டிருப்பதுதான் முக்கியமான வித்தியாச மென்றும், மற்ற அமைப்புக்களில் இரண்டிற்கும் ஒற்றுமை யிருக்கின்றன என்றும், படங்களைக் காட்டி வருவிக்க |

| | |
|---|---|
| பின்னங்கால்கள் குட்டை; கால் விரல்கள் குட்டை; நகங்கள் உண்டு, தொங்குவதற்காகவே ஏற்பட்டிருக்கின்றன. | நம்முடைய கை விரல்களுக்கு ஒப்பிடுக. |
| வௌவாலின் இரக்கைகள் மெல்லிய தோலால் அமைக்கப்பட்டுள்ளன; இந்தத் தோல் விரல் முதற்கொண்டு தோள் வரையிலும் தோளிலிருந்து பின்னங்கால்கள் வால் வரையிலும் வியாபித்திருக்கின்றது. | பறவையின் இரக்கைகளுக்கு ஒப்பிடுக. வௌவாலின் இறகுகளில் இறகுகளேயில்லாமல் உரோமங்களிருப்பதைக் காட்டுக. வௌவாலுக்குப் பறவையைப்போல் அலகு இல்லையென்று கவனிக்க. |
| 3. காதுகள்: சற்றேறக் குறைய சுண்டெலியின் காதுகளைப் போலிருக்கும். | 3. மறுபடியும் பறவையின் காதுகளுக்கு ஒப்பிடுக; பார்வைக்குப் பறவையின் காதுகள் தெரியா; காட்டி வருவிக்க. |
| 4. கண்கள்: சிறியவையாயினும் பிரகாசம் பொருந்தியவை; இராக்காலங்களில் பொருள்களை அறியக்கூடியவை; பகல்வெளிச்சம் கண்களைக் கூசச் செய்யும். | 4. இராத்திரியில் கூடப் பார்வை மந்தமென்று தெரிவிக்க. |
| 5. பற்கள்: சிறியவை, கூர்மையானவை; அசை போடத்தக்கவையல்ல; ஆனால் எதையும் பற்றிக் கடிக்கத் தகுந்தவைகள். | 5. நம்முடைய பற்களையும் பூனையின் பற்களையும் ஒப்பிட்டுப் பார்க்கச் செய்க; வௌவாலுக்கு அரைத்துப் பொடியாக்கக்கூடிய பற்கள் கிடையாவென்று விளக்கிக் காட்டுக. |

II. பழக்க வழக்கங்கள்: —

| | |
|---|---|
| 1 இராச் சஞ்சாரி: பகலில் நகங்களால் கிளையைப் பற்றிக்கொண்டு தலைகீழாய்த் தொங்கினபடியே உறங்கும்; பொழுது பட்டதும் இரை தேட வெளியே வரும். | 1. வௌவால் தூங்கும் படத்தைக் காட்டுக. இரவில் சஞ்சரிக்கும் மிருகங்களுக்கு ஒப்பிடுக. |



| | |
|---|---|
| 2. பறத்தல்: வேகமாய் பறக்கும், ஆனால் தள்ளிக்கொண்டு தள்ளிக்கொண்டு நீந்துவது போல் பறந்து போகும். இறக்கைகள் மூலமாய் எந்தப் பொருளையும் உணர்ந்துகொள்ளும். தன் அருகில் வரும் எதையும் இறக்கைகளினால் உணரும். | 2. பறவை பறக்கும்போது கவனிக்கச் செய்க; ஒப்பிடுக. இரவில் பறக்கும் பிராணிகளுக்கு ஸ்பரிச உணர்ச்சியுள்ள தோலாலியன்ற இறக்கைகளினால் உண்டாகும் பிரயோஜனத்தை விளக்குக. |
| 3. நடத்தல்: வௌவாலுக்குக் கை கால்களிருப்பினும் நடப்பதற்குப் பிரயோஜனப்படா; ஆனால், தன் உடம்பை இழுத்துக்கொண்டும் தள்ளிக்கொண்டும் போகும். | 3. உயிருள்ள வௌவாலைத் தரையில் விட்டுப் பார்க்கவும்; மிக விகாரமாய் நகர்வதைக் கவனிக்க. |
| 4. ஆகாரம்: வௌவால் பறக்கும்போது தோற் சிறகில் அகப்படும் பூச்சிகளைச் சாப்பிடும். மிகக் கடினமான பாகங்களைத் தன் பற்களால் கடித்துத் தள்ளி விட்டு, மிகுதியான பாகங்களை அப்படியே விழுங்கி விடும். | 4. மத்தியானத்தில் தூக்கணங்குருவி பூச்சிகளைப் பிடித்துத் தின்பதையும் அஸ்தமன வேளையில் வௌவால் பூச்சிகளைப் பிடிப்பதையும் கவனிக்க. |
| 5. குட்டிகளைக் காப்பாற்றும் விதம்: பறவை போல், வௌவால் முட்டையிடாது; குட்டிபோட்டுப் பால் கொடுத்து வளர்க்கும். | 5. உருவப்படத்தைக் காட்டுக; வௌவால் மம்மேலியா ஜாதியைச் சேர்ந்தது என்று வருவிக்க. குட்டிகளைப் பெற்று அவற்றிற்குப் பால் கொடுத்து வளர்க்கு மென்பதை விளக்கிக் காட்டுக; உதாரிக்க. |

(பின்பக்கம் பார்க்க)

## கரும்பலகைச் சுருக்கம்

| விஷயத் திரட்டு | குறிப்பு முறை |
| --- | --- |
| I. அமைப்பு :— | II. பழக்கவழக்கங்கள் :— |
| 1. தேகம் : சுண்டெலியைப் போன்றது. உரோமத்தால் மூடப்பட்டது. | 1. இராச் சஞ்சாரி |
| 2. உறுப்புக்கள் : நான்கு ; தோலுள்ள இறக்கைகள். | 2. பறத்தல்: வேகம்; தள்ளாடிக்கொண்டு பறக்கும். |
| 3. காதுகள் : சுண்டெலியைப் போன்றது. | 3. நடத்தல் : விகாரமாயிருக்கும். |
| 4. கண்கள் : சிறியவை ; பிரகாசம் பொருந்தியவை. | ஆகாரம் : பூச்சிகளைச் சாப்பிடும். |
| 5. பற்கள் : சிறியவை ; கூர்மையானவை. | 5. குட்டிபோட்டுப் பால் கொடுக்கும். |

M. S. SABHAPATI,
*Govt. Panchama Training School,*
*Madras.*

# ELEMENTARY SCHOOL ORGANIZATION

## எலிமென்டரிப் பாடசாலை ஏற்பாடு

### பாடசாலை, இடம், பிளான், விஸ்தீர்ணம், வெளிச்சம், காற்றோட்டம்.

1. பாடசாலைக்கு ஏற்ற இடம் — பாடசாலை கட்டவேண்டிய இடம் ஊருக்குச் சமீபத்தில் நல்ல காற்றோட்டமுள்ள மேடான இடத்தில் இருக்கவேண்டும். பாடசாலைக் கிராமத்துக்கு வெளியே



வெகுதூரத்தில் இருந்தால் குழந்தைகளைப் பெற்றோர்கள் அங்கு அனுப்பப் பயப்படுவார்கள். போர்டு பாடசாலைகள் விஷயத்தில் அதிகாரிகள் தாமே விதிகளின்படி இடம் பார்த்துக் கட்டிக் கொடுத்துவிடுகிறார்கள். புதிதாகச் சொந்தபாடசாலை ஏற்படுத்தும் உபாத்தியாயர்கள் இதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஜனநெருக்கமான சந்தை கூடுமிடங்களுக்குச் சமீபத்திலாவது, கடைத்தெருவின் மத்தியிலாவது பாடசாலை வைத்தால் பாடசாலையின் வேலைக்கு அடிக்கடி இடையூறுகள் உண்டாகும். சிறு கிராமத்தெருவின் மத்தியில் கீழே சொல்லப்படும் நிபந்தனைகளுக் கிணங்கக் கட்டப்படும் வீட்டிலொன்றில் பாடசாலை வைப்பது பிசகன்று. கள்ளுக்கடை, குப்பைமேடு, அபாயகரமான குளம், ஏரி, கிணறு முதலிய இடங்களுக்குச் சமீபத்தில், பாடசாலை கட்ட இடம் தேர்ந்தெடுப்பது கூடாது. பாடசாலை கட்டவேண்டிய இடம் சற்று மேடாக இருந்தால், மழை பெய்ததும் தண்ணீர் தங்காமல் வடிந்துவிடும். கீழ்த்தரை அதிக களிப்பாயிருந்தால், மழைத்தண்ணீர் பூமிக்குள் சுவறாமல், மேலேயே தங்கி, அதில் வசிப்பவர்களுக்குக் கெடுதியுண்டாக்கும். அதிக மணற்பாங்காயிருந்தால் பக்கத்துத் தண்ணீர் உள்ளே கசிந்து கட்டடம் பலமாயிராது. மண், மணல், இரண்டும் சமமாகக் கலந்த தரையே பாடசாலை கட்ட ஏற்ற இடமாகும்.

2. பிளான், விஸ்தீர்ணம் — ஒரே ஒரு உபாத்தியாயரும் 1-ஆவது, 2-ஆவது, 3-ஆவது, 4-ஆவது வகுப்புக்கள் சேர்ந்து சுமார் 30 பிள்ளைகள் படிக்கும் ஏககாலத்தில் போதிக்கவேண்டியிருப்பதால் ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனி அறை ஏற்படுத்தவேண்டிய அவசியமில்லை. தனி உபாத்தியாயருள்ள பாடசாலைகளில் ஒரே அறை பெரிதாய் இருந்தால் போதும். இந்தக் கட்டடம் ஒரு நீண்ட சதுரவடிவமாக இருக்கவேண்டும். சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட கல்வி இலாகா சட்டங்களில் ஒவ்வொரு பிள்ளைக்கும் 8 சதுர அடி விஸ்தீர்ணமும் 80 க. அடி அளவும் அமைந்த இடம் வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. 30 பிள்ளைகளுக்கு 240 சதுர அடி விஸ்தீர்ணம் வேண்டும். கட்டடத்தின் அகலம் 8 அடி ஏற்படுத்திக்கொண்டால் நீளம் 30 அடி ஆகிறது. 30 அடி நீளமும் 8 அடி அகலமுமுள்ள ஒரு நீண்ட சதுரவடிவமான அறையொன்று பாடசாலைக்குத் தகுந்த விஸ்தீர்ணமாம். 10 அடி அகலம் இருந்தால் மிகவும் ஏற்றதாயிருக்கும். இந்த அறை-

பின் நீண்டபக்கங்கள் இரண்டிலும் 3 அடி அகலம் தாழ்வாரம் போடவேண்டும். ரூரல் பாடசாலை யென்று சர்க்காரால் கட்டப்பட்ட பாடசாலைகளில் இவ்வித தாழ்வாரங்கள் இல்லாமல் மழைக்கும் வெயிலுக்கும் பிள்ளைகளும் உபாத்தியாயரும் கஷ்டப்படுவதைப்பற்றிப் பலதடவை கேள்விப்பட்டிருக்கிறோம்.

மேலே சொன்ன விஸ்தீர்ணத்தைப்போல் 5 மடங்கு விஸ்தீர்ணமுள்ள காலி இடம் பாடசாலையைச் சுற்றியிருந்தால் தோட்டம், விளையாட்டிடம் முதலியவைகள் ஏற்படுத்த ஸாதகமாகும். இதைப்பற்றிப் பிறகு விஸ்தரிப்போம்.




படம் I.

30 பிள்ளைகள் வாசிக்கும் பாடசாலையின் பிளான்.

(1) அறையின் உள் கூடு. (2) சுவர் 1½ அடி அகலம். (3) 3 அடி அகலம் வாசற்படி. (4) 3 அடி அகலம் ஜன்னல் (5) 3 அடி அகலம் தாழ்வாரம். (6) கம்பங்கள். (7) காலி இடம். (8) உபாத்தியாயர் ஆஸனம். (9) வகுப்புகள். (ஸ்கேல் 1 அங். = 10 அடி)




படம் 2.

பக்கத் தோற்றம்.



படத்திற் காட்டியபடி நீண்டபக்கங்களில் 1 வாசற்படியும் 2 ஜன்னல்களும் வைக்கவேண்டும். குறுகலான பக்கத்தில் ஒரு ஜன்னல் வைக்கவேண்டும். சுவரிலிருந்து முதல் ஜன்னல் 5 அடி தூரமும், அதே தூரம் வாசற்படிக்கும் மற்ற ஜன்னலுக்கும் வைத்தால் வாசற்படி ஜன்னல் இவை சமதூரத்தில் இருக்கும். வாசற்படி, ஜன்னல் இவை 3 அடி அகலமும் 6 அடி உயரமும் இருக்கவேண்டும். தாழ்வாரம் 3 அடி அகலமும் அதன் சுவர் 1½ அடியும் சேர்ந்து 4½ அடி அகலம் தாழ்வாரம் ஏற்படும்.

இரண்டு உபாத்தியாயர்கள் உள்ள பாடசாலையும் இவ்விதமாகவே அமைக்கலாம். பிள்ளைகள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகப்படுகிறார்களோ அதற்குத் தக்கபடி ஒவ்வொரு பிள்ளைக்கும் 8 ச. அடி வீதம் அதிகப்படுத்திக்கொண்டுபோகவேண்டும். தாழ்வாரங்களின் விஸ்தீர்ணமும் பிள்ளையொன்றுக்கு 8 ச. அடி வீதம் கணக்கிடுவதில் சேர்த்துக்கொள்ளலாம். கொடுத்திருக்கும் படத்தில் உள்ள அறையில் உள்ளே 30 பிள்ளைகள் வாசிக்கலாம். அதிக பிள்ளைகள் சேர்ந்தால் சுமார் 60 பிள்ளைகள் வரைக்கும் இது இடம் கொடுக்கும். மூன்று, நான்கு உபாத்தியாயர்களோ அல்லது ஒவ்வொரு வகுப்புக்குத் தனி உபாத்தியாயரோ ஏற்படுங்காலத்தில் ஒவ்வொரு வகுப்பிற்கும் தனியறை ஏற்படுத்தவேண்டும். மேற்குறித்த அறையைப்போல் அதற்கெதிரே வேறொரு அறை கட்டிவிட்டால் 4 அல்லது 5 உபாத்தியாயர்களுள்ள ஒரு பாடசாலைக்கு இடம் போதும். இரண்டு அறைகளுக்கும் நடுவே போதுமான திறந்த இடம் விட்டுவிடவேண்டும்.

(இன்னும் வரும்)

P. C. KRISHNA AYYAR, B.A, L.T.,
*II Assistant, Govt. Trg. School,*
*Villupuram.*

# STORY TELLING

## கதை சொல்லல்

(முன் தொடர்ச்சி பக்கம் - 16)

### மகா சூரன்

10. பொழுது விடிந்ததும் இராக்ஷசன் இறந்த செய்தி நகரம் எங்கும் பரவியது. இந்த நற்சேதியைக் கேட்ட அந்நகர மன்னவன் 'அரக்கனைக் கொன்ற சுத்த வீரன் அரண்மனைக்கு வந்து பரிசு பெற்றுக்கொள்ளலாம்' என்று பறையறைவித்தான். அரக்கனைக் கொல்பவனுக்கு 'தன்னுடைய குமாரத்தியை மணம் புரிவித்துத் தன்னுடைய ராஜ்யத்தில் பாதி கொடுப்பது' என்று நெடுநாட்களுக்கு முந்தியே பிரசுரஞ் செய்திருந்தான். அரக்கன் கொல்லப்பட்டான் என்ற சமாசாரம் நகரமெங்கும் பரவியவுடன் பரிசைப் பெறவேண்டும் என்னும் ஆசையுடன் 'நான்தான் ராக்ஷசனைக் கொன்றேன்; நான்தான் ராக்ஷசனைக் கொன்றேன்' என்று பலர் தோன்றினார்கள். அரசனுக்கு உண்மையைக் கண்டு பிடிக்க இயலவில்லை. மந்திரி 'அரசே, இன்று யான் உலவும் பொருட்டு வெளியே சென்றபோது ராக்ஷசன் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டேன். அப்பிணத்தை உற்று நோக்கும்போது, காதும் மூக்கும் காணப்படவில்லை. எவனொருவன் அவைகளைக் கொண்டு வருகிறானோ அவனே அந்த ராக்ஷசனைக் கொன்றவன் என்று அறிந்துகொள்ளலாம்' என்று சொன்னான். அரசன் மந்திரியின் யுக்தியை அங்கீகரித்துக் கொண்டு பரிசு பெற வருபவர்களை எல்லாம் இராக்ஷசனுடைய மூக்கையும், காதையும் கொண்டுவரும்படி விரும்பினான். எல்லோரும் ஓடிவிட்டார்கள். மகா சூரன் தான் அடக்கஞ் செய்து வைத்திருந்த மூக்கையும் காதையும் காண்பித்தவுடன் அரசனுக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. உடனே அரசன் தன்னுடைய பெண்ணை மணம்புரிந்து கொள்ளும்படிக்கும் ராஜ்யத்தில் பாதி பெற்றுக் கொள்ளும்படிக்கும் மகா சூரனை வேண்டினான். மகா சூரன் தனக்குப் பெண் வேண்டியதில்லை என்றும் அந்தப் பெண்ணைத் தன் முதல் நண்பனாகிய பராக்கிரமகேதுவிற்கு மணம் புரிவிக்கும்படிக்கும், பாதி ராஜ்யத்தை ஐந்து நண்பர்கட்குப் பகிர்ந்து கொடுக்கும்படிக்கும் விரும்பினான். அரசனும் அவ்வாறே புரிவித்தான். பராக்கிரமகேது, கொள்ளிக் கண்ணன், கொடும்பசியன், பெரு வயிறன் ஆகிய நான்கு நண்பர்கள் அங்கேயே தங்கிவிட்டார்கள்.



11. அரச குமாரன், மன்னவனிடத்திலும் ஏனைய நண்பர்களிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு மேலும் பிரயாணம் செய்வானாயினன். பூதம் மாத்திரம் இவனைப் பின்பற்றிச் சென்றது. இவ்வாறு ஒரு மாதம் பிரயாணஞ் செய்து ஒரு பெரிய பட்டணத்தை யடைந்தார்கள். அந் நகரம் வெகு சிறப்பாயும் பலபல சிறந்த கட்டடங்களை யுடையதாயும் இருந்தது. அவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே செல்லும்போது ஒரு பெரிய உப்பரிகை அவர்கள் கண்ணுக்குப் புலப்பட்டது. அதனுடைய மதில்கள் எல்லாம் பொன்னால் செய்யப்பட்டு வைரக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன என்றால் அதன் பெருமையை எவ்வாறு சொல்வது? அவ்விதமான மாளிகையை என்றும் கண்டிராதவர்களாகையால் அவ் வழிப்போக்கர்கள் இருவரும் நெடுநேரம் உற்றுப் பார்த்து அதன் வாயிலுக்குள் சிறிது தூரம் சென்றார்கள். கண்டவர் மனம் திடுக்கிடும்படி அங்கே இரண்டு மனிதருடைய எலும்புக் கூடு தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். எலும்புக் கூடு யாது காரணம்பற்றி அங்கே தொங்கிக்கொண்டிருக்கின்றது என்பதை அங்கே உள்ளவர்களை விசாரித்தார்கள். அவர்கள் அம் மாளிகை ஒரு வர்த்தகனுடையதென்றும், அவனுக்கு யௌவனமும், அழகும் வாய்ந்த பெண் உண்டென்றும் அவளை அடைய விரும்புவோர் அவள் ஏற்படுத்தியிருக்கும் நான்கு நிபந்தனைகட்கு உள்ளாகவேண்டும் என்றும், தவறின் அவர்கள் சிரம் சேதிக்கப்படும் என்றும் அவ்வாறு சேதிக்கப்பட்டவர்களின் எலும்புக் கூடே அரண்மனை வாயிலில் அசைந்து கொண்டிருப்பது என்றும் பகர்ந்தார்கள். இவ்வாறு கூறியதைக் கேட்ட மகா சூரன் அந்த வர்த்தகன் பெண்ணை எவ்வாறாயினும் மணம் புரியவேண்டும் என்று தீர்மானித்தான்.

12. வர்த்தகன் அரண்மனையின் வாயிலில் பெரிய பேரிகை ஒன்று உண்டு. அவ் வர்த்தகன் பெண்ணைக் காண விரும்புவோர் பேரிகையை முழக்கினால், காவலாளிகள் வருபவரை அப் பெண் மணியினிடம் அழைத்துச் செல்வார்கள். மகா சூரன் விரைந்து

சென்று பேரிகையை முழக்கினான். காவலாளிகள் விரைந்துவந்து அரச குமாரனைப் பெண்மணியினிடம் அழைத்துச் சென்றார்கள். மகா சூரனது அழகும், யௌவனமும் அப் பெண்மணியின் மனத்தைக் கொள்ளை கொண்டது. 'கடவுளே இந்தப் பெருந்தகை பரீக்ஷையில் தேறமாட்டானா, நாம் அவனை மணந்துகொள்ள மாட்டோமா' என்று மனத்தில் எண்ணிக்கொண்டு அரச குமாரனை அன்புடன் வரவேற்று வந்தனோபசாரங்கள் செய்தனள். வர்த்தகன் பெண்ணின் அழகையும், புத்தி சாதுரியத்தையும், பேசுந் திறமையையும் கண்டு அவள்மீது வரம்பிகந்த காதல் கொண்ட மகா சூரன் தான் செய்யவேண்டிய நிபந்தனைகள் யாது என்று வினவினான். அதற்கு அவள் 'அரசிளங் குமரனே! முதலாவது, நான் பதினைந்து வருடங்களாகச் சமைத்து வைத்திருக்கும் உணவுகள் எல்லாம் அதோ காணப்படும் அறையில் சேமித்து வைக்கப்பட் டிருக்கின்றன. அவ் வுண்டியை ஒரே நாளில் ஒருவன் உண்ணவேண்டும். இரண்டாவது, இவ்வரண்மனையின் நடுவே தடாகம் ஒன்று இருக்கின்றது. அதில் சென்ற பதினைந்து வருடங்களாகப் பெய்த மழைஜலம் நிரம்பி யிருக்கின்றது. அதை ஒரே நாளில் ஒருவன் பருகவேண்டும். மூன்றாவது, உனது இடது பக்கத்தில் இன்னொரு தடாகம் இருக்கின்றது. அதில் சென்ற பதினைந்து வருடங்களாய் இரவு பகல் ஓயாமல் காய்ச்சப்பட்ட வெந்நீர் நிரம்பி யிருக்கின்றது. அத் தடாகத்தில் ஒருவன் ஒருமணி நேரம் வரையில் விளையாடவேண்டும். நான்காவது, எனக்கு ஒரு தங்கை உண்டு, அவள் ஐயாயிரம் மைல் தூரமுள்ள இடத்தில் வாசஞ் செய்கிறாள். அவளை ஒரே நாளையில் இங்குக் கொண்டுவரவேண்டும். ஆகிய இந் நான்கு நிபந்தனைகள்தான்' என்று பரிவுடன் பகர்ந்தனள். இதைக் கேட்ட மகா சூரன் தான் இந் நான்கு நிபந்தனைகளையும் செய்து முடிக்க முயல்வதாக சம்மதித்து அவைகளை முடிப்பதற்கு 15 நாள் தவணை பெற்றுக்கொண்டு அரண்மனைக்கு வெளியே வந்தான். அவன் தன் வரவை அதிக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் பூதத்தினிடத்தில் தனக்கும் வர்த்தகன் மகளுக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்லி இனிமேல் நடைபெற வேண்டியதற்கு யாது செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசிக்கலானான். பூதமும் சிறிதுநேரம் யோசித்து 'அரச குமாரனே! என் இவ்வளவு ஆலோசனை? "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே,



இடுக்கண் களைவதாம் நட்பு" என்று மேலோர் கூறியபடி இடுக்கண் வரும்போது உதவி புரியவல்ல நண்பர்கள் நமக்கு இருக்கும்போது நமக்கென்ன குறை? அவர்களை இப்போதே அழைத்து வருகிறேன்' என்று கூறி அவர்களை அழைத்து வரும்படி விரைவாகச் சென்றது.

(இன்னும் வரும்.)

ஒரு தமிழ்ப்புலவர்.

## WEATHER AND WEATHER COCK

### காற்றும், காற்றுக்காட்டியும்

நம்மைச் சுற்றிலும் ஆகாயம் வியாபித்திருக்கின்றது. ஒரு விசிறியை எடுத்து, நமது முகத்துக் கெதிரில் வீசும்போது, காற்றடிப்பதாய் உணருகிறோம். ஆகாயத்தை நாம் காண முடியாவிட்டாலும், ஆகாய மண்டலத்தில் இயற்கையாய் ஏற்படும் ஒருவித சலனத்தால் ஆகாயமானது ஓரிடத்திருந்து மற்றோரிடத்துக்குச் செல்வதாலும், மரங்களின் இலைகள் அசைவதாலும், அது பலமாய் வீசும்போது உண்டாகும் ஒருவித சத்தத்தாலும் அஃது ஒரு பொருளென்று அறிந்துகொள்ளுகிறோம். ஆகாயம் அசையும்போது காற்றடிக்கிற தென்கிறோம். ஆகையால், அசைகிற ஆகாயமே காற்றும்.

**காற்றின் காரணங்கள்** — ஆகாயமானது உஷ்ணத்தால் அளவில் அதிகமாய்ப் பரவிக் குளிரால் ஒடுங்குந் தன்மை யுள்ளது. பல இயற்கைக் காரணங்களால் பூமியானது சூரியனிட மிருந்து நிரந்தரமான உஷ்ணத்தை யடைவதில்லை. அவ்வப் பிரதேசத்தின் இயற்கை யமைப்புக் கேற்றவாறு அந்தந்த ஸ்தானங்களின் உஷ்ணமும் பேதப்படும். அதிக உஷ்ணமான பிரதேசத்தின் ஆகாயமானது வெப்பத்தால் இலேசாகி உயர எழும்ப, அதை யடுத்துச் சற்றுக் குளிர்ந்த பிரதேசத்திலிருக்கும் ஆகாயமானது உஷ்ணப்பட்ட பிரதேசத்தில் உஷ்ணத்தால் இலேசாகி மேலெழும்பின ஆகாயமிருந்த அந்த இடத்தை நோக்கி வரும். இங்ஙனம் ஆகாய மண்டலத்தில் ஏற்படும் அசைவே காற்றெனப்படும்.

**காற்றின் வகைகள்** — (a) 'மந்தமாருதம்' இது விசேஷமாய் வசந்த காலத்தில் வீசும். இக் காற்று நமது தேகத்திற் படும்போது மனோகரமா யிருக்கும். இதை இளங் காற்றென்றும் தென்றல் என்றும் சொல்வதுண்டு.

(b) 'தரையிளங்காற்று' (Land breeze) இது நாடோறும் சமுத்திரப் பிரதேசத்திலும் அதை யடுத்த பூப்பிரதேசத்திலும் வீசுகிற இருவகைக் காற்றி லொன்று. இது கரையிலிருந்து கடலை நோக்கி வீசும்.

(c) 'கடலிளங்காற்று' (Sea breeze) இது சமுத்திரப் பிரதேசத்தி னின்றும் தரையை நோக்கி யடிக்கும். இது அநேகமாய்ப் பகலிலே வீசும். தரைக்காற்றோ வெனின் இரவில் வீசும்.

(d) 'பருவக்காற்று' (Monsoons) வருஷா வருஷம் குறித்த காலங்களில் இந்து சமுத்திரம் அதை யடுத்த பூப்பிரதேசம் இவைகளில் வீசும் மழைக் காற்று இதுவே. இது இருவிதப் படும். (1) தென்மேற்குப் பருவக்காற்று (South-west-Monsoon) இது தென்மேற்குத் திசையி லிருந்து, வடகிழக்காக, சித்திரை முதல் புரட்டாசி மாதம் வரையில் அடிக்கும். (2) வடகிழக்குப் பருவக்காற்று (North-east-Monsoon) இது வடகிழக்குத் திசையிலிருந்து, தென்மேற்குத் திசையாய் ஐப்பசி முதல் பங்குனி மாதம் வரையில் வீசும்.

(e) 'புயல்காற்று' (Storms) இக் காற்று ஒரு பருவக் காற்று முடிந்து, மற்றொரு பருவக்காற்று ஆரம்பிக்கும்போது உண்டாகும். இது மிகப் பலமாய் வீசும். இது தன் வேகத்தால் மரங்களை வேரோடு சாய்த்தும், (சமுத்திரப் பிரதேசமானால்) உயர்ந்த அலைகளைக் கிளப்பிக்கொண்டும் உக்கிரமாய் வீசும்.

N. B. (காற்றின் வகைகளை விவரிக்கப் புகின் பெருகுமெனச் சுருக்கமாய், இம்மட்டோடு நிறுத்தலாயிற்று.)

**காற்று வீசும் திசையைக் கண்டுபிடிக்கும் வகை** — காற்றின் திசையை அது செல்லும் வழியே அடித்துக்கொண்டு போகும் இலேசான வஸ்துக்களைக் (தூசு, இலைச் சருகுகள், காகிதத் துண்டு முதலியன) கொண்டும், கொடிமரத்தினுச்சியில் கட்டியுள்ள கொடி பறப்பதைக் கொண்டும், சில வீடுகளிலும் யந்திர சாலைகளிலும் உள்ள புகை போக்கியின் மூலமாய் வெளியாகும் புகை காற்றால் தள்ளப்பட்டு காற்றோடு செல்வதைக் கொண்டும், 'காற்றுக் காட்-



டி'யைக் கொண்டும் அறியலாம். இவை எல்லாவற்றிலும் 'காற்றுக் காட்டி' (Weather Cock) யால் தெளிவாகக் கண்டுணரலாம்.

காற்றுக் காட்டிக்கு நரி, கோழி, அம்பு முதலிய பல உருவங்களில் ஏதாவதொன்றை அமைத்துச் செய்வதுண்டு. அம்பு உருவம்போற் செய்வதே சர்வ சாதாரணம்.




**காற்றுக் காட்டியின் வர்ணிப்பு** — தகரத்தால் படத்திற் காட்டியபடி அம்பு உருவம் (முகப் பக்கம் ஒடுக்கமாயும், பின்பக்கம் அகலமாயும்) செய்து, சிறு துவாரமுள்ள தகரக் குழா யொன்று செய்து, அம்பின் மையத்தில் பற்றவைக்கப்பட் டிருக்கும். அக் குழையினுள் ஒரு கம்பியை நுழைத்து (அம்பு சுழலுமாறு) அதன் நேர் கீழே படத்திற் காட்டிய மாதிரி நான்கு முக்கிய திசையைக் காட்ட நாலு கம்பிகள் சரியா யமைத்து, அக் கம்பியின் முனைகளில் அந்தந்த திசையைக் குறிக்க அவ்வத் திசையின் பெயரின் முதல் எழுத்துக்கள் (வ. தெ. கி. மே.) வெட்டிப் பொருத்தப்பட் டிருக்கும். பின் காற்றுக்காட்டி வைக்கும் இடத்தில் சரியான திசையில் எழுத்துக்கள் உள்ள கம்பிக ளிருக்கும்படி வைக்கவேண்டும்.

**காற்றுக்காட்டி வைக்குமிடம்** — காற்றைத் தடுக்கும் பெரிய மரங்கள், பெரிய கட்டடங்கள் முதலியவை இல்லாத இடங்களில் காற்றுக்காட்டி அமைக்கவேண்டும். விசேஷமாய் உயர்ந்த கோபுரம், உயரமான கட்டடம் இவற்றின் உச்சியில்தான் அமைத்து வைப்பார்கள்.

**காற்றுக் காட்டியால் காற்றின் திசையைக் கண்டுகொள்ளும் விதம்** — காற்று வீசும்போது, காற்று வீசும் திசைக்குக் குறுக்காகக் காற்றுக்காட்டியின் உருவம் (அம்பு) நிற்குமானால், அது காற்றினால் தள்ளப்பட்டு, எத்திசையினின்று காற்றடிக்கிறதோ, அத் திசைக்கு நேராய் அம்பின் கூர்மையான பாகம் திரும்பி நிற்கும். ஏனெனில், கூர்மையான பாகத்தை விடப் பின்பாகம் அகலமாய் இருப்பதால் கூர்மையான பாகத்தைவிடப் பின்பாகத்தின் மீதில் தாக்கும் காற்றானது அதிகமாதலால் பின்பாகமே காற்றால் தள்ளப்பட்டுக் காற்று வீசும் திசைக்கு நேராய் அம்பின் கூர்மையான பாகம் நிற்க ஏற்படும்.

அம்பின் கூர்மையான பாகம் காற்று வரும் திசைக்கு நேராய் இருப்பதால் அத் திசையினின்றே காற்றடிக்கிறதென் றறியத் தகும். (உ-ம்.) அம்பின் கூர்மையான பாகம் வ என்ற எழுத்துக்கு நேராயும் பின்பாகமானது தெ என்ற எழுத்துக்கு நேராயும் இருந்தால் காற்று வடதிசையினின்று வீசுகிறதென் றுணர்ந்து கொள்ளலாம். அப்படியே கூர்மையான பாகம் தெ. மே. என்ற எழுத்துக்கு மத்தியிலும், பின்பாகம் வ. கி. என்னும் எழுத்துக்களுக்கு இடையிலு மிருக்குமானால் காற்றானது தென்மேற்கினின் றடிக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். ஏனைய திசைகளினின்று வீசும் காற்றையும் இவ்வாறே 'காற்றுக்காட்டி' சுழல்வதைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.

N. B. — காற்று எத் திக்கினின்று வீசுகிறதோ அத் திசையின் பேரையே காற்றுக்கும் சொல்வதுண்டு. (உ-ம்.) திசையின் வடக்கிலிருந்து வீசினால் 'வாடை அல்லது வடகாற்று' எனவும், தென் திசையினின் றடித்தால் 'தென்றல் அல்லது தென்காற்று' என்றும், கீழ்த் திசையினின்று உண்டானால் 'கீழ்க்காற்று' என்றும், மேற்குத் திசையிலிருந்து வீசினால் 'மேல்காற்று' என்றும் சொல்வதுண்டு.

## TEACHING NOTES ON ATTISUDI SUTRAM

### The First Sutram — முதற் சூத்திரம்

### அறஞ்செய விரும்பு.

உபகரணம் — அரம், etc. வகுப்பு இரண்டாவது.

போதுக் குறிப்பு — 'அறஞ்செய விரும்பு' தருமஞ்செய்ய ஆசைப்படு, என்று வாய்பாடு படிக்கிறவண்ணம் குட்டிப்பாடம் போடும் வழக்கத்தை அறவே ஒழித்தல் வேண்டும். ஒவ்வொரு சூத்திரத்தையும் கதாரூபமாய்ச் சொல்லிக்கொடுத்துப் பாடத்தைப் பிள்ளைகள் மனத்தில் நன்கு பதியவைத்தல் வேண்டும். இம்முதற் சூத்திரத்தைக் கற்பிக்க இங்ஙனம் ஆரம்பிக்கலாம்.



பிள்ளைகாள்! அவ்வைக்கிழவி யென்ற ஒரு பாட்டியார் இருந்தாள். அவள் மிகவும் நல்லவள். சின்னஞ் சிறுபிள்ளைகளுக்கும் பென்னம் பெரிய ஆட்களுக்கும் எப்பொழுதும் புத்திசொல்லிவருவாள். அப்படிச் சொன்னவைகளை நம்மவர் அச்சிட்டு இருக்கின்றனர். சிறிய பிள்ளைகளாகிய உங்களுக்கு ஏற்ற புத்திமதிகள் (ஆத்தி சூடியைக் காட்டி) இந்த ஆத்திசூடி யென்ற சிறிய புத்தகத்தில் அடங்கியுள்ளன. இதனால் அவ்வைப் பிராட்டியார் சிறுபிள்ளைகளையும் எவ்வளவோ நேசித்து வந்தாளென்று தெரிகிறதல்லவா? அப்படியானால் உங்களுக்கு அவள்மேல் பிரியந்தானா? அவள் என்ன புத்திசொன்னாள் என்று கேட்க ஆசைதானா? (பிள்ளைகள் — ஆம், பிரியந்தான் — இன்னமுஞ் சொல்லுங்கள் ஐயா).

பின் (இரும்பினாற் செய்யப்பட்ட அரம் ஒன்றைக் காட்டி) பிள்ளைகளே, இதன் பெயர் தெரியுமா? இது எதனாற் செய்யப்பட்டிருக்கிறது? இதனாற் பிரயோஜன மென்ன? இரும்பு வேலை செய்பவன் யார்? என்ற வினாக்களைக் கேட்டுக் கூடியவரை உத்தரவுகளை வருவிக்கவும். இன்னமும் இது விஷயத்தில் தெளிவுறுத்த அரத்தினால் ஒரு இரும்புத்துண்டைத் தேய்த்துக்காட்டி, அரத்தின் பிரயோஜனத்தையும் இரும்புவேலை செய்பவன் கருமான் என்பதையுஞ் சொல்லிக் கதையைத் தொடங்க வேண்டும்.

ஒருநாள் அவ்வைக்கிழவி யொரு கருமான் வேலை செய்யும் பட்டடையி லிருந்தாள். அப்பொழுது கருமான் வெட்டுக்கத்தி, ஆணிகள் முதலியன பலரோடுங் கூடிச் செய்துகொண்டிருந்தான். அக்கருமானுக்கு அரமுஞ் செய்யத்தெரியும். அச்சமயம் ஒரு வாலிபன் வேகமாய் வந்து நின்று அக்கருமானிடத்தில் இருதினங்களுக்குள் ஒரு அரம் அவசியம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டான். அவ்வைக்கிழவி சமயோசிதமாய்ப் பேசுவதிற் சாமர்த்திய முள்ளவள். ஒவ்வொரு வார்த்தையும் பலபொருள்படப் பேசுவாள். திடீரென இச்சமயம் அவளுக்கு ஒரு ஞாபகம் வர, அந்த வாலிபனை நோக்கி,

அவ்வை — வாலிப, நீ எதற்காக இவ்வளவு ஆத்திரத்துடன் வந்தாய்?

வாலிபன் — எனக்கு அவசியம் ஒரு அரம் செய்யச்சொல்ல.

அவ்வை — இப்பொழுது அரம் உனக்குத் தேவையோ?

**வாலிபன்** — ஆமம்மா, தற்சமயம் என் புது வீட்டில் ஜன்னல் வேலை, கதவுவேலை முதலிய நடக்கின்றன. ஆதலால் இரும்பையும் ஆணிகளையும் தேய்க்க ஒரு அரம் அவசியம் வேண்டும் (கருமானைப் பார்த்து) எப்பொழுது செய்து தருவீர்? சீக்கிரம் சொல்லும்.

**அவ்வை** — பிரிய நண்பனே, அரம் செய்யச் சொல்ல இவ்வளவு அவசரப்படுகிறாயே, இது செய்வதுதானா பெரிய காரியம். நீ மிகவும் பணக்காரனாயிருக்கிறாயே, அரம் செய்வதிலும்.......அறத்தையே செய்வதற்கு உள்ளநாளளவும் ஆசைப்படு. அதுவே பெரிய நன்மையாகும்.

**வாலிபன்** — என்னம்மா பேசுகிறாய்? நானும் அரத்தைத்தானே செய்ய வந்தேன் — பின்னை நீயு மப்படித்தான் சொல்லுகிறாய். அரம் அரம் என்றுதானே நீயும் பாடுகிறாய்.

**அவ்வை** — உன்னை நான் அரம் செய்யச் சொல்லவில்லை. நாவைச் சற்று அழுத்தமாய் திருத்திக்கொண்டு நன்கு தெரியும் வண்ணம் அறத்தைச்செய்ய விரும்பு.

**வாலிபன்** — ஏது, இப்பொழுது ஒரு மாதிரியாய் அர்ரம் என்கிறாயே, ஆம் அதைத்தான் நானும் செய்யச் சொல்லுகிறேன். முன்பு நானெத்தனையோ செய்தும் இருக்கிறேன்.

**அவ்வை** — வாலிபனே, நீ செய்விப்பது அரம், நான் செய்யச் சொல்வது அறம். சரியான பிரகாரம் பின்னும் உச்சரித்துக் காட்டி நீ செய்யப்போகிறது 'அரம்' — நான் செய்யச் சொல்வது 'அறம்'

**வாலிபன்** — ஏதம்மா கிழவி, அரம் அறம் என்றால் ஒன்றும் தெரிகிறதில்லையே. இதென்ன, நீ அறப்படித்தவள் போலும் எல்லாம் ஒன்றுதான், அரம்தான்.

**அவ்வை** — வாலிபனே கோபப்படவேண்டாம். நான் பெரிய மனுஷி சொல்வதைக் கவனமாய்க் கேள். கடவுள் உனக்குப் போதுமான சொத்து சுகம் தந்திருக்கிறார். ஆனால் அக்கடவுளே எத்தனையோ ஏழைகளையும் உண்டாக்கி யிருக்கிறார். ஏன்? உன்னைப் பரீக்ஷை செய்யும்படி யல்லவா? ஆகையால், ஏழையா யிருப்பவர்களுக்கு நீ உதவி செய்தல் வேண்டுமென்றோ? பிச்சைக்கு வந்தவனைப் பிரம்பால் அடிக்-



காதே. யாசகத்திற்கு வந்தவனை ஏசல் வேண்டா. கஞ்சிக்கு வந்தவனுக்கு நல்ல உணவு கொடுத்தல் வேண்டும். குருடனுக்கு வழிகாட்டல் வேண்டும். அவனைக் கேலி பண்ணல் தகாது. ஊமையனுக்கு நீயே வாயாயிருந்து அவனுக்குப் பரிந்து பேசி உதவல் வேண்டும். நொண்டியின்மேற் கல்லெறிதல் கூடாது. அவனது தோள் கம்புகளை யெடுத்துக் கொள்ளாதே. அவனையும் படைத்தவர் சுவாமி யாதலால் அவனுக்கு வேண்டிய உதவிபுரி. இன்னமும் பணமும் தனமும் இல்லாதவர்களுக்குப் பணஉதவி செய்யலாம். அப்படியானால் சுவாமி உன்னைச் சீமானாக்குவார். தாய் தகப்பனற்ற பிள்ளைகளுக்கு நீயே தகப்பன்போலிருந்து தருமஞ்செய். இதெல்லாம் நாம் செய்யவேண்டிய கடமையாகும். இதற்குத்தான் நான் மொத்தத்தில் 'அறஞ் செய்' என்றேன்.

**வாலிபன்** — அம்மா, நீ பெரிய மனுஷி. நல்ல புத்தி சொன்னாய். அறம் என்றால் நானென்னவோ என்றிருந்தேன். நானும் நீ சொன்னபடியே செய்து வருகிறேன். இன்னமுஞ் செய்து வருவேன். உனக்கு வந்தனம். நாழிகை யாகிவிட்டது (கருமானைப் பார்த்து) ஓய் என்ன? — அவன் — சரி சரி இரண்டு தினத்திற்குள் வருகிறதானால் செய்து தருவேன் — நல்லது? (வாலிபன் போகிறான்.)

பிள்ளைகளே, இப்பொழுது அறமென்றால் என்னவென்று தெரிகிறதா? அறஞ்செய்ய உனக்கு ஆசைதானா? உனக்கு? பிள்ளைகள் — ஆம் ஆம் — இதுதான் அவ்வையார் இன்று உங்களுக்குச்சொல்லும் புத்திமதி.

இனிப் பிள்ளைகளிடத்தில், நீ அறஞ்செய்வாயா? நீ! நீ? நீ எப்படி அறஞ்செய்வாய்? நீ எப்படிச் செய்வாய்? என்று கேட்டு, விடைகள் வருவித்துப் பின்னும் பிள்ளைகளும் அறஞ்செய்யவேண்டிய அவசியத்தையும் விதத்தையுங் கற்பிக்கவும்.

பிள்ளைகளே! நீங்களும் அறஞ்செய்யவேண்டும். முன் சொன்னவை தவிர உன்னுடன் படிக்கிறவன் தெருவில் போகும்போது திடீரென்று கீழே விழுந்துவிட்டால், சிரிக்கக்கூடாது. உடனே அவனைத் தூக்கி விடவேண்டும். பாடம் சரியாய்ப் படிக்கமாட்-

டாத பையன் தெரிந்தவனிடத்தில் தெரியாதவைகளைக் கேட்கும்போது அவைகளை அவன் சொல்லிக்கொடுக்க வேண்டும். பட்சிகளையும் ஊரும் பிராணிகளையும் சித்திரவதை செய்தல் வேண்டாம். அடுத்தவனுடைய பென்சலையாவது பேனாவையாவது திருடல் தருமமாகாது. உன்னிடத்தில் இரண்டு பென்சல்களிருந்தால் பென்சல் கொண்டுவாராமல் பள்ளிக்கு வந்து உபாத்தியாயர் அதற்காக அடிப்பார் என்று பயந்து நிற்கும் அப்பையனுக்கு ஒன்றைக் கொடுத்துதவி இனி யவன் ஜாக்கிரதையாயிருந்து பள்ளிக்கு வேண்டிய உபகரணங்களை எடுத்துவர மறந்துபோகுங் குணத்தை யறவே ஒழித்துவிட அவனுக்குப் புத்தி புகட்டல் நலம். இன்னமும் உபாத்தியாயருக்கும் மாதா பிதாவுக்கும் விருத்தாப்பியருக்கும் நீ செய்யவேண்டிய காரியங்களைச் செவ்வனே செய்து வரவேண்டும். இப்படி யெல்லாம் செய்துவர இஷ்டந்தானா? செய்துவருவீர்களா? அறஞ்செய்ய விரும்புங்கள். இதை மறந்துபோகாதிருங்கள். பின்னர் பாடத்தை முடிக்கலாம்.

JAMES G. SUNDRAM,
*Asst. Master,*
*The Kellett High School, Madras.*

அறஞ்செய விரும்பு—அறம் - தருமம், செய - செய்தலை, விரும்பு விரும்புவாயாக.

அறஞ்செய விரும்பு—செய - செய்வதற்கு, அறம் - தருமத்தையே, விரும்பு - விரும்புவாயாக.

ஒரு காரியத்தைச் செய்ய விருப்பமே காரணமாதலின், 'விரும்பு' என்றார். விருப்பம் இன்றி செய்யும் அறம் பயன்படாது என்பதாம்.

பத்திராதிபர்.




உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 14 | 1918௵ ஆகஸ்டு௴ | மாதம் 3

## THE TAMIL LANGUAGE

## தமிழ் மொழி

(முன்தொடர்ச்சி பக்கம் - 27.)

புராண வாயிலாகக் கிடைக்கும் கதைகளைக்கொண்டு தமிழ் தனிமொழியே என்பதை முன்பு விளக்கினோம். இனி, மற்றும் சில காரணங்களாலும் தமிழ் மொழி தனிமொழியே என்பதை இங்கே விளக்குவோம்.

சனகாதி முனிவர்கள் ஞானோபதேசம் பெறச் சிவபெருமானை ஒருகால் அடைந்தார்கள். அப்போது சிவன் ஆனந்தத் தாண்டவம் செய்துகொண்டிருக்க அவருடைய * டமருகத்தினின்றும் சில ஒலிகள் உண்டாக அவற்றை அப்பெருமான் அம்முனிவர்களுக்கு

* உருக்கு என்னும் வாத்தியம்

உபதேசிக்க, அம்முனிவரர் ஞானோபதேசம் பெற்றுச் சென்றனர் என்றும், பின்பு பாணினி என்னும் முனிவர் தமக்கு இலக்கணம் கற்பிக்கும்படி பெருமானை வேண்ட, அப்பெருமான் மனமுவந்து முன் தோன்றிய அவ்வொலிகளில் ஒவ்வொன்றின் ஈற்றிலும் ஒரு மெய்யெழுத்தைக் கூட்டிப் * பதினான்கு சூத்திரங்களாக வகுத்து உபதேசித்தனர் என்றும், அவ்வொலிகளையே ஆதாரமாகக் கொண்டு பாணினி பகவான் வடமொழிக்கு வியாகரணம்வகுத்தனர் என்றும் வடமொழியாளர் கூறுவர்.

இக்கதையையே ஆதாரமாகக் கொண்டு தமிழரும் ஒரு கதை சொல்லுவர். அது வருமாறு:—

அகத்தியனார் தமக்குத் தமிழ் இலக்கணம் உணர்த்துமாறு சிவபெருமானை வேண்ட, அப்பெருமான் அவர்க்கு அவ்விலக்கணத்தை உணர்த்தினர் என்பதாம். இதை வலியுறுத்த,

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனில்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்

என்னும் பாடலைக் காஞ்சிப்புராணம் முழங்குகின்றது. இக்கதையை ஆராயுங்கால், இரண்டு மொழிக்கும் சிவபெருமான் தலைவன் என்பதும், இரண்டும் தனிமொழிகள் என்பதும் பெறப்படுகின்றன. அதனால் தமிழ் தனிமொழியே என்பது தேற்றமாகும்.

மற்றும் சிவபெருமான் தமிழ்ச் சங்கங்களின் தலைவராக வீற்றிருந்தனர் என்றும், அப்பெருமான் தமிழிற் சில செய்யுட்களைச் செய்தருளினர் என்றும், தம் அடியார் தமிழிற் பாடிய இனிய பாடல்களைக் கேட்டு அவர் விரும்பியபடி யெல்லாம் செய்தருளினர் என்றும் கூறும் கதைகள் தமிழ் மொழி தனிமொழியே என்பதைப் பரக்கக்காட்டு மன்றே. இதை விளக்க,

---

* 1. அ, இ, உண்.
2. ఋ, ఌక్.
3. ஏ, ஓங்.
4. ஐ, ஔச்
5. ஹ, ய, வ, ரட்.
6. லண்.
7. ஞ, ம, ங, ண, நம்.
8. ஜ భ ஞ்
9. ఘ, ఢ, ధ ష్
10. జ, బ, గ, డ, దశ్
11. ఖ, ఫ, ఛ, ఠ, థ, చ, ట, తవ్
12. క, పయ్
13. శ, ష, సర్
14. ஹல்.



கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ

என்னும் செய்யுள் வழங்குகின்றது.

'நாலாயிரப் பிரபந்தம்' என்னும் நூலை வைணவர்கள் திராவிட வேதம் என்பர். அதற்கு உரைகண்டருளிய பெரியார், வடமொழி வேதத்தைக் காட்டிலும் திராவிட வேதமே சிறந்ததென்றும், வடமொழியினும் தமிழ் மொழியே பயனுடையதென்றும் பற்பல காரணங் காட்டிக் கூறியிருக்கின்றனர். அவற்றை யெல்லாம் நோக்குங்கால் தமிழ் தனிமொழியே என்பது தெள்ளிதிற் புலனாகும்.

பத்திராதிபர்.

# STORY TELLING

## கதை சொல்லல்

### மகா சூரன்

(முன் தொடர்ச்சி பக்கம் - 41)

13. பூதம் விரைந்து சென்று பராக்கிரமகேது, கொடுங்கண்ணன், பெரும் பசியன், பெரு வயிறன் ஆகிய நண்பர்கள் நால்வரும் அரசாண்டுகொண் டிருக்கும் நகரத்தை யடைந்து, அரச குமாரன் விருப்பத்தை அவர்கட்கு அறிவித்தது. உடனே அந் நான்கு நண்பர்களும் புறப்பட்டு அரச குமாரன் தங்கி இருக்கும் ஊருக்கு வந்து அவன் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, 'அரசரேறே, தாங்கள் எங்கட்குச் செய்த பேருதவி எந்நாளும் மறக்கத் தக்கதன்று. அந்த உபகாரத்திற்காக யாங்கள் என்ன பிரதி உபகாரம் செய்யக்கூடும். தாங்கள் காலால் இட்ட வேலையைக் கையால் செய்துமுடிக்கக் காத்துக்கொண்டு இருக்கும் எங்களைத் தாங்கள் என்ன வேலைக்காக அழைத்தீர்கள் என்பதை அறிய அதிக ஆவலுள்ளவர்களாக இருக்கின்றோம்' என்றார்கள். அரச குமாரன், "நண்பர்களே உங்களுடைய ஆற்றலைப் பரீக்ஷிப்பதற்கு ஏற்ற சமயம் வந்திருக்கிறது. இதில் நீங்கள் தவறாமல் உங்களுடைய ஆற்றலை மெய்ப்பிப்பீர்களாயின் எனக்குப் பேரு-

தவியாயிருக்கும்' என்று சொல்லி, தனக்கும் வர்த்தகன் பெண்ணுக்கும் நடந்த சம்பாஷணையை விவரமாகச் சொன்னான். இதைக் கேட்ட நான்கு நண்பர்களும் தங்களாலான உதவியைச் செய்ய யாதொருதடையும் இல்லை என்றும், இந்த ஏற்பாட்டில் வெற்றி அரச குமாரனதே என்றும் பேசிக்கொண்டார்கள். குறிப்பிட்ட 15 நாள் தவணை கழிந்த பிறகு, அரச குமாரனும் அவனுடைய நண்பர்களும் வர்த்தகன் பெண் வசிக்கும் அரண்மனையை அடைந்து, அவர்கள் வருகையைப் பெண் அரசிக்குத் தெரிவிக்குமாறு விரும்பினார்கள். பெண் அரசியும் இவர்களை அரண்மனைக்குள்ளே அழைத்து வரும்படி கட்டளை யிட்டாள். அரச குமாரன் தன் நண்பர் நால்வருடன் உள்ளே சென்றான். பெண்மணியும் அவர்கட்குத் தகுந்த உபசாரம்செய்து, ஆசனத்தில் அமருமாறு வேண்டினாள். மகாசூரன் அவ்வுபசாரத்தை அன்புடன் ஏற்றுக்கொண்டு, பெண்மணியை நோக்கி, 'ஏ மங்கையர்க்கரசி! நீ செய்ய விரும்பும் பரீக்ஷையை உடனே ஆரம்பிக்கலாம்; யான் சித்தமாக இருக்கின்றேன். என்னுடன் வந்திருப்பவர்கள் எல்லாரும் என் இன்னுயிரன்ன நண்பர்கள். எனக்கு ஒரு சிறிதும் சிரமம் கொடாமல், அவர்களே என் வேலையைச் செய்து முடிப்பார்கள்' என்றான். இதைக்கேட்ட பெண்கள் நாயகம், 'அரசே! தாங்களாகிலும் சரி, தங்கள் நண்பர்களாகிலும் சரி, யாவராயிருந்தாலும் என்னுடைய பரீக்ஷையில் தவறாமல் தேறுவார்களாயின் நன்மையே. அதுவே யானும் விரும்புவது. தவறின் தண்டனையை அடைய வேண்டியவர் தாங்கள்தான்; தங்கள் நண்பர்கள் அல்லர் என்று சொல்லி, பதினான்கு வருடங்களாகச் சமைத்துச் சேமித்து வைத்திருக்கும் பெரிய அறையைத் திறந்து, அவ்வுணவை உண்ணுமாறு விரும்பினாள். அரச குமாரன் பெரும்பசியனை நோக்கி, 'இப்போதுதான் உன் ஆற்றலைச் சரியாகக் காண்பிக்கவேண்டும்; அதோ காணப்படும் அன்னமலையின் மீது வீழ்ந்து தும்சம் செய்' என்றான். கொடும் பசியன், 'அரசே இவ்வுணவை, உண்ணவோ? தின்னவோ?' என்றான். அரசகுமாரன், 'நண்பனே! உண்ணுதற்கும் தின்னுதற்கும் என்ன வித்தியாசம் என்று எனக்குத் தெரியவில்லை' என்றான். கொடும் பசியன், 'இறைவனே உண்ணுதல் என்றால், இங்கே சமைத்து ஒன்று சேர்ந்திருப்பவைகளை மாத்திரம் உட்கொள்ளுதல், தின்னுதல் என்றால், சமைத்த உணவோடு பக்குவப் படுத்தாமல் சேகரித்து வைத்திருக்கும்



அரிசி காய்கறி முதலியவைகளையும் உட்கொள்ளுதல்' என்றான். அரசன், 'இங்கே இருப்பவைகளை யெல்லாம் தின்' என்றான். உடனே கொடும் பசியன் அங்கே சமைத்து வைத்திருந்த உணவுகளை எல்லாம் சாப்பிட்டுவிட்டு, சமையலுக்காகச் சேமித்து வைத்திருக்கும் அரிசி முதலியவைகளையும் தின்னத் தொடங்கினான். இதற்குள் அரச குமாரனும் அவனுடைய நண்பர்களும் வந்திருக்கும் சமாசாரம் நகரம் எங்கும் பரவிற்று. நகரமாந்தர்கள் வேடிக்கை பார்ப்பதற்குத் திரள் திரளாக வந்து சேர்ந்தார்கள். கொடும் பசியன் புசிப்பதைப் பார்த்தபோது அவர்கட்கெல்லாம் அளவில்லாத ஆச்சரியம் உண்டாயிற்று. கொடும் பசியனும் சிறிது நேரத்திற்கெல்லாம் தனக்குக் காட்டப்பட்ட அறையில் யாதொன்றும் வைக்காமல், எல்லாவற்றையும் உட்கொண்டுவிட்டான். இதைக் கண்ட வர்த்தகன் பெண், ராஜகுமாரன் முதல் பரீக்ஷையில் தேறிவிட்டதாகக் கூறினாள்.

14. இரண்டாவது பரீக்ஷையாக அரண்மனையிலுள்ள பெரிய தடாகத்தைக் காண்பித்து, அந்நீரை எல்லாம் பருக வேண்டும் என்று வர்த்தகன் மகள் விளம்பினாள். மகா சூரன் தன் நண்பனாகிய பெரு வயிறனைப் பார்த்து, 'நண்ப! உன் ஆற்றலைக் காண்பி' என்றான். பெரு வயிறன் 'ஐய! இந்நீரை எல்லாம் குடிக்கவோ? பருகவோ?' என்றான். அரச குமாரன் 'குடிப்பதற்கும் பருகுதற்கும் என்ன பேதம்?' என்றான். பெரு வயிறன், 'குடிப்பதென்றால் இந்த நீர்நிலையிலுள்ள ஜலத்தை மாத்திரம் சாப்பிடுவது, பருகுவது என்றால் ஜலமே அன்றி ஜலத்திற்குக் கீழே நான்கு அடி ஆழத்திலுள்ள மண், சேறு முதலியவைகளையும் சாப்பிடுவது' என்றான். அரச குமாரன், 'ஆனால் நீ பருகு' என்றான். உடனே பெரு வயிறன் அத் தடாகத்திலுள்ள நீரையும் நான்கு அடி ஆழத்திலுள்ள மண்ணையும் சேற்றையும் பருகினான். இதைக் கண்ட நகர மாந்தர்கள் எல்லோரும் கரகோஷம் செய்து ஆனந்த முற்றார்கள். வணிகன் மகளும் இரண்டாவது பரீக்ஷையும் சரிவர முடிந்ததாக ஏற்றுக்கொண்டாள்.

15. மூன்றாவது பரீக்ஷை, 'வெந்நீர்த் தடாகத்தில் குளிப்பது. அரச குமாரன் தன் நண்பனாகிய பராக்கிரம கேதுவைப் பார்த்து, 'நண்பனே! உன் பராக்கிரமத்தை மெய்ப்படுத்து' என்றான். பராக்கிரமகேது, 'ஐயனே, நான் குளிக்கவோ? மூழ்கவோ?'

என்றான். அரச குமாரன், ‘குளித்தலுக்கும் மூழ்குதலுக்கும் உள்ள பேதம் என்ன?’ என்றான். பராக்கிரமகேது, ‘குளித்தல் என்றால் காய்ச்சின அந்த வெந்நீரில் மாத்திரம் ஸ்நானஞ் செய்தல், மூழ்குதல் என்றால் ஸ்நானஞ் செய்வதோடு அவ் வெந்நீர் காய்வதற்கு ஏதுவா யிருக்கும் நெருப்பிலும் புரண்டு எழுதல்’ என்றான். அரச குமாரன், ‘ஆனால் நீ மூழ்கு’ என்றான். உடனே பராக்கிரமகேது வெந்நீர்த் தடாகத்திற் பாய்ந்து யாதொரு சிரமமுமின்றி ஸ்நானஞ் செய்ததோடு, அவ் வெந்நீரைக் காய்ச்சும் நெருப்பிலும் மூழ்கி எழுந்தான். இதைக் கண்ணுற்றோர் யாவரும் பராக்கிரம கேதுவின் ஆற்றலைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். வணிகன் மகளும் மூன்றாவது பரீக்ஷையும் செவ்வனே முடிந்ததாக அங்கீகரித்துக்கொண்டாள்.

16. நான்காவது பரீக்ஷை வணிகன் மகளின் தங்கையைக் கொண்டுவருவது. கடைசிப் பரீக்ஷையையும் சரிவர முடிக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் அரச குமாரன் தன் நண்பனாகிய கொள்ளிக் கண்ணனை விளித்து ‘நண்பனே, நாம் தேடும் பெண்மணி எங்கே இருக்கின்றாள்? அதைக் கவனமாய்ப் பார்த்துச் சொல்’ என்றான். கொடுங் கண்ணன், உலகமெங்கும் செவ்வையாக ஆராய்ந்து பார்த்து, ‘அரசே! தாம் தேடும் பெண்மணி இவ்விடத்திற்கு ஐயாயிரம் மைல் தூரத்திலுள்ள நந்தவனத்தில் உட்கார்ந்துகொண் டிருக்கிறாள்’ என்றான். அரச குமாரன் தன்னை இணைபிரியாது இருக்கும் நண்பனாகிய பூதத்திற்கு அவளைத் தூக்கிக்கொண்டு வரும்படி ஆஞ்ஞாபித்தான். உடனே பூதம் வாயுவேகமும் மனோவேகமும் பின்னிடும்படி சென்று, வணிகன் மகளின் தங்கையைக் கண்டு, அவள் சகோதரி இருக்கும் இருப்பிடத்திற்கு வரும்படி வேண்டிற்று. அவளும் வருவதற்குச் சம்மதித்து, வந்த இளைப்பாறக் கொஞ்சம் சிற்றுண்டி உண்ணும்படி பூதத்தை விரும்பினாள். பூதமும் அதற்குச் சம்மதிக்க, வணிகன் மகளின் சகோதரி சில சிற்றுண்டிகளைக் கொடுத்தாள். அவைகளை வயிறார உண்ட அளவில் பூதத்திற்கு நித்திரை மேலிட்டது. பூதமும் அங்கே அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தது. பூதம் வரும் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மன்னவன் மகனுக்குக் கவலை அதிகமாய் விட்டது. சாயங்காலம் நான்கு மணியாயும் பூதம் வரவில்லை. வணிகன் மகள் அரச குமாரனைப் பார்த்து, ‘மன்னவன் மைந்தரே, நீர் தோற்றீர். உம்முடைய சிரம் இன்று மாலையில் சேதிக்கப்படும்’ என்றாள். மன்னவன் மகன் தைரியத்தை விடாமல், ‘இன்னும் இரண்டு மணி காலம் இருக்கிறதல்லவா, இதற்குள் என்ன அவசரம்’ என்று சொல்லிவிட்டு, கொடுங் கண்ணனை நோக்கி, ‘போயின பூதம் யாதாயிற்று, சற்றே பார்’ என்றான். அவன் வடக்கே பார்த்து, ‘ஐயா, நம்முடைய நண்பன் சிறிதும் கவலை இன்றி நித்திரை செய்துகொண் டிருக்கிறான். என்ன முழுமூடன் இவன். இவனை உடனே எழுப்புகிறேன்’ என்று சொல்லி, பூதத்தின் காதினருகே போய் விழும்படி ஓர் அம்பை எய்தான். அம்பும் தவறாமல் மிகுந்த சப்தத்துடன் பூதத்தின் காதினருகே போய் விழுந்தது. இந்தச் சந்தடியைக் கேட்ட அளவில் பூதம் நித்திரைவிட் டெழுந்து சூரியனைப் பார்த்தது. சூரியன் சாய இன்னும் ஒரு மணி தேசகாலம் இருந்தமையால் சிறிதும் கவலைப்படாமல் தான் தேடிச் சென்ற நாயகியைத் தன்னுடன் வரும்படி வேண்டிற்று. அவள் சிறிது காலதாமதம் செய்யவே, அவளை அவள் அநுமதி யில்லாமலே செந்தூக்காய்த் தூக்கிக்கொண்டு வந்து, அரச குமாரன் முன் சேர்த்தது. சிறிது நேரத்திற் கெல்லாம் உயிர் துறக்க வேண்டுமே என்று கவலையுடன் இருந்த அரச குமாரன் அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. நகரமாந்தர் எல்லோரும் அரச குமாரனது பராக்கிரமத்தை மெச்சினார்கள். வணிகன் மகளும் அவனை மணந்துகொண்டு சுகமே வாழ்ந்திருந்தாள்.

ஒரு தமிழ்ப்புலவர்.



## THE USE OF THE TEACHERS' ASSOCIATION

### உபாத்தியாயர் சங்கம் எதற்காக?

எலிமெண்டரிப் பாடசாலை உபாத்தியாயர்களின் காரிய நிர்வாகம் அவர்களின் அரைகுறையாய்க் கற்ற கல்விக் கேற்றபடி குன்றியிருத்தலை அறிந்த நமது கவர்ன்மெண்டு வித்தியாதிகாரிகள், பொது விஷயங்களில் ஈடுபட்டும், பல பத்திரிகைகளைப் பார்வையிட்டும், இனி இத்தகைய உபாத்தியாயர்கள் ஒருங்கே

ஓரிடம் சேர்ந்து அறிவை அபிவிருத்தி செய்தும், குறைகளை நிவர்த்தித்துக்கொண்டும் அறிஞர்களாகுமாறு ஆங்காங்கு உபாத்தியாய சங்கங்களை யேற்படுத்திப் புத்தகங்களும் பத்திரிகைகளும் சப்ளை செய்வதுமன்றி ஒவ்வொரு பாடசாலைக்கும் தனியே புஸ்தகசாலை ஏற்படுத்தி யுள்ளார்கள் என்பது உபாத்தியாயர்கள் பலரும் அறிந்ததே யன்றோ!

அறிந்தும், தற்போது நடைபெறும் சங்கங்கள் பலவற்றுள்ளும் போதனை விஷயமாக விவரிக்கப்படுகின்றதே யன்றிப் பாடசாலை விஷயமாகத் தமது குறைவுகளை விவரித்து நிவர்த்தித்துக்கொள்ள முயல்வதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் பல துறையினர் தத்தமது குறைவுகளை நிவர்த்திக்க இவ்விதச் சங்கங்களை ஏற்படுத்தித் தம் குறைவுகளை விவரித்துத் தக்க ஏற்பாடு செய்துகொள்ளுவதும் செய்துகொண் டிருப்பதும் செய்துகொள்ள முயல்வதும் தெரியாமையே.

தெரிந்திருப்பினும், குறைகளைக் கூறி அதை நிவர்த்திக்கும் வழிகளை அதிகாரிகளுக்குத் தெரிவித்துக்கொண்டால், அவர்கள் எங்குத் தம்மேல் சினந்துகொள்ளுவார்களோ அவரது கோபத்திற்குத் தாங்கள் பாத்திரமாக நேருமோ என்று எண்ணுங் கொள்கையே வாய் மூடியிருப்பதற்குக் காரணமாகும்.

தன்னுயிர்போல் மன்னுயிரை நினைக்கும் காருண்யமிகும் அதிகாரிகள் இந்நிகழ்ச்சிக்கு மகிழ்வார்களே யன்றி இகழார்கள். அன்றியும் இந் நிகழ்ச்சியிலும் குற்றங் குறைவுகளிருப்பின் அவற்றை விளங்க வுரைத்துத் திருத்துவார்களே யன்றிக் கிஞ்சித்தும் சினங் கொள்ளவும் வருத்தப்படவும் மாட்டார்களென்பது திண்ணம். ஏனெனில், நமது மாணவர்களாகிய சிறுவர்களை கிண்டர்கார்ட்டன் முறையென்னும் உற்சாகவழியில் நடத்தினால்தானே அவர்களின் அறிவு விருத்தியாகவும், கல்வியைக் கஷ்டமின்றிக் கற்கவும் ஏதுவாகும். அவ்விதமே நமது அதிகாரிகளின் மாணவர்களாகிய நாம், நன்கு போதிக்கவும் உற்சாகமாய் வேலை செய்யவும் அக் கிண்டர்கார்ட்டன் முறையே சிறந்ததென்பதும் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமாகுமேயன்றி மறுக்கக்கூடியதன்றென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிவதாகும்.

ஆகவே உபாத்திமார்கள் தத்தம் குறைவுகளையும் உபாத்திமைச் சங்கங்களி லுரைத்து அவற்றை நிவர்த்திக்கும் வழியைத் 



தேடுவதோடு நில்லாமல் அவற்றை, நமக்கெனவே ஏற்பட்டுழைக்கும் பத்திரிகைகளுக்கு விடுத்துப் பலரும் தெரிந்து தாமும் இதைப்போலத் தமது குறைவுகளை நிவர்த்தித்துக்கொள்ளத் தூண்டி, பிறர் விடுத்திருக்கும் விஷயங்களைப் பத்திரிகைகளிலிருந்து தெரிந்து குறைவுகளை நிவர்த்திக்க முயல்வார்களென எண்ணுவதோடு லோகக்ஷேமத்திற்கு முதற்காரணம் பத்திரிகைகளாதலால் தத்தமக்குரிய பத்திரிகைகளைச் சக்திக்குரியவாறு தனியாகவேனும் சங்கங்கள் மூலமாகவேனும் தருவித்துப்படித்து முன்னேற்றமடைய முயலுவார்களென முழுமுதற் பொருளைத் துதியா நிற்கின்றேன்.

குறிப்பு—இந்த வியாசம் 9-3-18ல் நடந்த திருவெறும்பூர் உபாத்திமைச் சங்கத்தில் வாசிக்கப்பட்டு, சங்கத்தின் பிரசிடென்டாகிய லால்குடி ரேஞ்சு ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

P. பரிமணப் பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர் சோலை, திருச்சி ஜில்லா.

## STORY OF A BUTTERFLY
## வண்ணாத்திப் பூச்சியின் ஜீவிய சரித்திரம்

வண்ணாத்திப் பூச்சி பொதுவாய் வருஷத்தில் குளிர்ச்சியான காலத்தில் அதிகமாய் காணப்படும்; உஷ்ண காலங்களில் அதிகமாய் காணப்படா. ஏனென்றால் அதன் உடம்பு மிகவும் மிருதுவாயும், பசுமையாயு மிருக்கிறபடியால் சூரிய வெப்பத்தை சகிக்க அதற்குபோதுமான பலன் கிடையாது. இவ்விதத் தன்மையுடையதா யிருப்பதுபற்றி இப் பிராணி குளிர்ச்சியான இடமாகிய நந்தவனங்களிலும் அடர்ந்த மரஞ் செடிகள் உள்ள இடத்திலுமே தன் இருப்பிடத்தைத் தேடிக்கொள்ளுகிறது. அது மாத்திரமல்ல, தனக்கு ஆகாரம் பச்சையான இலைகளாயிருப்பதால் தன் ஆகாரத்தைத்தேடுவதில் எவ்விதக் கஷ்டமும் தனக்கு நேரிடாமலிருக்க மரஞ் செடி கொடிகள் அடர்ந்த இடங்களில் வசிக்கின்றது. வண்-

ணாத்திப் பூச்சி தான் வசிக்கும் இடத்திற்குத் தக்கதாகப் பற்பல நிறமுடையதாய் இருக்கும். இச் சாதியில் சுமார் 8000 வகை உண்டென சாஸ்திரிகள் கண்டறிந்திருக்கிறார்கள். வண்ணாத்திப் பூச்சியின் ஜீவிய சரித்திரத்தை 4 பிரிவாகப் பிரிக்கலாம்.

(1) முட்டைப் பருவம். (3) கூட்டுப் பருவம்.
(2) புழுப்ப ருவம். (4) பூச்சிப் பருவம்.

I. முட்டைப் பருவம்:— வண்ணாத்திப் பூச்சி மரஞ் செடிகளுக்குள் வசித்து இலையை ஆகாரமாகப் புசித்துவருவதால் தன் முட்டையை இலையின் பின்புறத்தில் இடுகிறது. ஏன் அவ்விதம் செய்கிறதென்றால் (1) தனக்கு வேறே வசதியான இடம் கிடைக்காமையும் (2) மனிதர்களாலும் மற்றும் பிராணிகளாலும் அம் முட்டைக்கு எவ்வித மோசமும் நேரிடாமலிருக்க (3) முட்டையின்மேல் அதிகமான உஷ்ணம் தாக்காமலிருக்க (4) மழையினால் முட்டைக்கு எவ்விதச் சேதமும் உண்டாகாமலிருக்க (5) முட்டையிலிருந்து புழு வெளிப்பட்டவுடனே தனக்கு ஆகாரமாகிய இலையை உடனே தின்ன அனுகூலமாக இலையின் பின்புறத்தில் தன் முட்டையை இடுகிறது.

II. புழுப் பருவம்:— முட்டையிலிருந்து வெளிப்படும் குஞ்சானது புழுவடிவமாக இருக்கிறது. முட்டையிலிருந்து வெளிப்பட்ட 3 அல்லது 4 மாதங்களாகப் புழுப்பருவமாகவே இருக்கும். இச் சமயத்தில் அது இலையை வெகு ஆவலுடனே தின்னும். இதன் தேகம் 10 அல்லது 13 வளையங்களால் அமைந்திருக்கின்றன.

இதற்குப் பன்னிரண்டு கண்கள் உண்டு. 3 ஜோடி கால்களும் பின்புறத்தில் சில பொய்க்கால்களும் உண்டு. இதின் தேகம் முழுதும் சுவாசப் பைகள் அமைந்திருக்கின்றன.

III. கூட்டுப் பருவம்:— 3 அல்லது 4 மாதகாலமாக புழு வடிவாயிருக்கிற இப் பிராணி தன் உடம்பிலுள்ள கழிவுகளினால் தன்னைச் சுற்றிலும் ஒரு கூடு கட்டிக்கொண்டு அதற்குள் தன் உடம்பைச் சுருட்டி மடக்கி வைத்துக்கொண்டு ஒரு வாரம் வரையில் இருக்கும். இச் சமயத்தில் அது இரை ஒன்றும் சாப்பிடுவதில்லை. கூட்டினுடைய பருமன் ஒரு பெரிய புளியங்கொட்டையளவாக உருண்டு இருக்கும். கூடு கட்டின தொடக்கத்தில் பச்சை நிறமாயும் வரவர மங்கின மஞ்சள் நிறமாயும் இருக்கும்.



கூடானது மங்கின மஞ்சள் நிறமடைந்தவுடன் புழு கூட்டினின்று பூச்சி வடிவாக வெளிவரக் காலமாகிவிட்டதென அறியலாம்.

IV. பூச்சிப் பருவம்:— ஒரு வாரம் வரையில் கூட்டிற்குளிருந்த புழுவானது கூடு வெடிக்க, நாம் பார்க்கிற பூர்ண வடிவமுள்ள வண்ணாத்திப் பூச்சியாக வெளிப்படும். வெளிப்பட்டவுடன் ஏதாவது மரம் செடியின் இலைகளைப் பற்றிக்கொண்டு தலை கீழாய் ஆடும். இச் சமயத்தில் இது பறக்க முடியாது. ஏனென்றால் 1 வாரம் வரையில் ஆகாரமில்லாதபடியால் பலவீனத்தாலும் சிறகுகள் ஈரமாயிருப்பதினாலும் பறக்கமுடியாது. ஈரமாயிருந்த தனது சிறகுகள் வெயிலில் தலை கீழாய் ஆடுவதினால் காய்ந்தவுடன் அது பறக்க ஆரம்பித்து உடனே தனக்கு வேண்டிய ஆகாரதனைத் தேடிக்கொள்ளுகிறது. பிற்பாடு கொஞ்ச நாளைக்குப் பின் முட்டையிட்டு இறந்துபோகிறது

வாழைக்குத் தானீன்ற காயே கூற்றம் என்றபடி வண்ணாரப் பூச்சிக்கு தான் இடும் முட்டையே கூற்றாக முடிகிறது.

S. JESUDASON,
*C. M. S. Schoolmaster,*
*Santhapuram, Megnanapuram.*

# TEACHERS AND THEIR POSITION

## உபாத்தியாயர்களுடைய நிலைமை

இப்பொழுது இரண்டொரு மாதங்களாக நம்து நல்
யுன் உபாத்தியாயர்களுடைய கஷ்ட நிலைமையை உணர்த்தி
கின்றான். ஆகையால் யானும் சில விஷயங்கள் அதன்பொருட்டு
எழுதத் துணிந்தேன்.

'எழுத்தறிவித்தவன் இறைவ னாகும்' என்ற உறுதிமொழி
யானது தமிழ்நாட்டார் அக்காலத்தில் உபாத்தியாயர்களை எவ்
வளவு உயர்வாய் எண்ணியிருந்தனர் என்பதற்குச் சான்றாகும்.
இவ்வித மரியாதையை உபாத்தியாயர்பால் பாராட்டிய

காரணம் பற்றி என ஆராயின், அவர்கள் கல்வியைப் பெ தும் மதிப்பாக எண்ணிவந்ததே உபாத்தியாயர்கள்மேலு மதிப்பை யுண்டுபண்ணிற்று என்பது போதரும். ஒளவைப் பிராட்டியார் 'எண்ணெழுத்திகழேல்' 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று எழுதிவைக்கவில்லையா? திருக்குறளாசிரியரும் கல்விச் சிறப்பை உணர்த்துவான் 'கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்' என்று கூறவில்லையா? இப்பாசுரங்கள், நந்தமிழ்நாட்டார் கல்வியின் மீதேற்றியுள்ள சிறப்பினை வலியுறுத்துகின்றன. இன்னமும் உலகில் மனுஷனென்று தலையெடுப்பதற்கும் புகழொடு வாழ்வதற்கும் கல்வியே அச்சாணி என்பதை

'எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்' என்பதும்

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் — மன்னனுக்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு — என்பதும்

நன்கு விளங்குகின்றன அல்லவா?

பண்டைக் காலத்தில் விளங்கிய ஆசாரிய பக்தியை அறிய வேண்டுமானால் துரோணாசாரியினிடம் ஏகலைவன் எவ்வாறு நடந்துகொண்டான் என்பதனால் விளங்கும். வசிஷ்டரிடம் ஸ்ரீ இராமரும் அவரது சகோதரரும் எவ்வாறு பக்தி பாராட்டினர்? பண்டை நாட்களில் ஐங்குறவர்களுள் ஒருவராய் நின்று ஆசாரியர் ஜன சமூகத்தில் அதிக செல்வாக்கும் மதிப்பும் உள்ளவராய் விளங்கியிருக்கின்றனர். மாணாக்கர்கள் ஆசானிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய மாதிரியை நன்னூலார் விவரித்திருக்கும் முறையானது எவ்வளவாய் வியக்கத்தக்கது? அவ்விதமே மாணாக்கர்கள் ஆசான்களிடத்தில் பயபக்தியுடன் ஒழுகி வந்தனர் என்பது வெள்ளிடைமலை.

பாடங் கேட்டலின் வரலாற்றை நன்னூலார் கூறும் முறையாவது — சூத்திரம் 40.

கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப்பிற் சார்ந்து



இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்'

இன்னமும் சூத்திரம் 46-ல் கண்ட மாணாக்கர் வழிபாடு செய்யும் விதத்தையுங் கூறுவம்—

'அழலி னீங்கான் அணுகா னஞ்சி
நிழலி னீங்கான் நிறைந்த நெஞ்சமொடு
எத்திறத் தாசான் உவக்கு மத்திறம
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே'

இன்னமும் நன்னூற் பொதுப் பாயிரத்தின்கண்ணே யமைந்து கிடக்கும், 'ஆசான் வரலாறு' 'மாணாக்கன் வரலாறு' முதலியன அவ்விரு வகுப்பார்க்கும் அமையவேண்டிய பண்புகளை நன்கு காட்டுகின்றனவென்று உணரலாம். இது கிடக்க,

தொல்லை நாட்கள் தொட்டு அதிக மேன்மை பொருந்தியதாய் விளங்கிவந்த உபாத்திமைத் தொழில் இத்தொல்லை நாட்களில் கீழ்மையாய் எண்ணப்படுவதென்னை? இக்காலத்திலோ உபாத்திமைப் பிழைப்பைப்போல் சனிபிடித்த பிழைப்பு இல்லையென்றே சொல்லிவிடலாம். 'எழுத்தறி வித்தவன் இறைவனாகும்' என்ற மதிப்பான கூற்றுகள் ஒழிய, 'நாதியற்றவன் நார்மலுக்குப் போ' என்ற இழிவான கூற்றுகள் வழக்கெடுத்தன. நார்மலுக்குப் போய்த் திரும்பின பிற்பாடு உபாத்தியாயர் ஏனைய வேலைகளின் பெருமை நோக்கித் தம் உள்ளத்தே உபாதைப்படுகிறதுமல்லாமல் ஜனங்களாலும் உபாதிக்கப்படுகிறார். 'உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இருபக்கமும் இடி' என்ற பழமொழியோடு உபாத்தியாயருக்கு உள்ளங்கால் தொடங்கி, உச்சந்தலைபரியந்தம் உபத்திரவம் என்ற உறுதிமொழியும் வழக்கெடுத்தல் ஆகிறது.

ஊரார் கொடுக்கிற வேதனைபோக உபாத்தியாயர் வீட்டிலும் படும்பாடு என்னே! அதிக உழைப்புக்கு அதிக திடம் வேண்டுமன்றோ? அதிக திடனை யுண்டுபண்ண அதிகப் பணச் செலவு நேருமல்லவா? உபாத்தியாயர்களுக்கென்று உலகினரும்

சம்பளதாரிப்புப் பட்டியல்களைப் பார்க்கப்புகின், அது, தீப்பட்ட வீட்டிற்கு மேற்காற்றடித்ததுபோல், உள்ளத்தீயைப் பெருக்கிவிடுகிறது. ஆகையால்தான் உபாத்தியாயர்கள், பணக்கஷ்டம் எய்துங்கால் சொல்வதென்னை? 'கால் துட்டுக்குக் குதிரை வாங்கவேண்டும், காற்றாய் பறக்கவும் வேண்டும். ஆறு ரூபாய்ச் சம்பளம் அல்லும் பகலும் உழைப்பு, ஒன்பது ரூபாய்ச் சம்பளம் உறங்க நேரமில்லை. பத்து ரூபாய்ச் சம்பளம் படுக்க நேரமில்லை' என்று சொல்லி அலமந்து நிற்கின்றனர். கால்துட்டுக் குதிரை வாங்கி அதனைக் காற்றினுங் கடிதாய் ஒட்ட எந்தக் குதிரைக்காரனாலும் மாளாது. ஆனால் ஆறு ரூபாய்க்கு உபாத்தியாயரை அமர்த்தி, அல்லும் பகலும் வேலை வாங்க அதிகாரிகள் ஏற்பட்டு, அப்படியே செய்தும் விடுகின்றனர். என்ன அநியாயமிது? உபாத்தியாயர் இருப்புயந்திரமா? ஆடிக்கொண்டே இருக்க. இந்த இயந்திரம் தீனிக்குத் தக்கவாறு தானே ஓடும்! இப்பொழுது நின்றுலவும் அகவிலையின் ஏற்றமென்ன? இதனை இனியாவது உணர்ந்து, அதிகாரிகள் உபாத்தியாயர்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் சம்பளதாரிப்புப் பட்டியலைக் கண்ணுற்று, எழுதுங் கூற்றுகளை உணர்ந்து, அதனைச் சீர்செய்வது பேருதவியாகும்.

'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது.'

உபாத்தியாயர்களுக்கான மதிப்பு நமது தேயத்தின்கண் அறவே ஒழிந்துபோயிற்றென்றும் சொல்லுதல் ஒண்ணாது. இன்றைக்கும் நாம் நாட்டுப்புறங்களைப் பார்க்கப் போனால், அங்கே தன்னந்தனியே சுவாதீனப் பள்ளிக்கூடங்களை நிறுவுதல்செய்து நடத்தும் சில உபாத்தியாயர்கள் தென்படுவர். அவர்கள் பெரும்பாலும் நன்கு மதிக்கப்படுகின்றனர். அவர்களுடைய பள்ளிக்கூடங்களிற் பயிலும் பிள்ளைகள் அவர்களுக்குத் தக்ஷிணை கொடுப்பதும் ஏற்ற விதமாய் மரியாதைகொடுப்பதும் வியக்கத்தக்கதாகும். காரணமென்? பெரும்பாலும் இங்குக் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களே இதற்குக் காரணம். படிப்பின் அருமையை அவர்கள் உணர்ந்து தங்களுக் கவசியமான கல்வியைப் புகட்டத்தக்க ஆசானைத் தேடிக் கண்டுபிடித்து, அவரைக் கடவுளாகப் பாவித்துத் தம் பிள்ளைகளை அவரிடஞ் சேர்க்கின்றனர். இங்ஙனமாக உபாத்தியாயர் கனம் பெறுகின்றார்.



ஆனால் சர்க்காரால் ஏற்பட்டிருக்கும் பாடசாலைகளிலுள்ள உபாத்தியாயர்கள் இவ்வித மதிப்பைப் பெற இயலாதவர்களாயிருக்கின்றனர். குறிக்கப்பட்டிருக்கும் பாடங்களை மாத்திரம் படிப்பிக்கின்றனர். அவர்கள் ஏதோ நன்னோக்கமாய் உற்று நோக்கும் சக்தியை இந்தியர்களிடம் அபிவிர்த்தி செய்யும்வண்ணம் இயற்கைக்கேற்ப கிண்டர்கார்ட்டன் என்று பிண்டப்பெயர் பெறும் களிமண் வேலை, குச்சடுக்கல், காகிதவேலை, பாசி கோத்தல், தோட்டம் போடல் முதலிய ஏற்பட்டு, அவைகளைக் கற்பிக்கவேண்டியதாயிருக்கின்றது. இது பெரும்பாலும் ஜன சங்கைக்கு ஒத்த நலத்தைப் பயப்பதில்லை. உபாத்தியாயர்கள் பரீக்ஷிக்கு மதிகாரிகளைத் திருப்திசெய்ய, பள்ளிக்கூட வேளை ஆறு மணி நேரமானால் சுமார் இரண்டு மணி நேரத்துக்காவது குறையாமற் கிண்டர்கார்ட்டனை அபிவிருத்தி செய்வதிற் செலவு செய்கின்றனர். இது ஜனங்களது மனத்திற் பிள்ளைகள் எந்த வேளையும் அதில்தான் பயின்றுகொண்டிருப்பர் என்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்துகிறது. இவ்வித எண்ணம் ஏற்படுங்கால் உபாத்தியாயரிடம் பெற்றோர்கள் வந்து, 'என்ன ஐயா, களிமண், குச்சு, தோட்டம் என்றுதான் எந்த வேளையும் படிப்பு. இந்தப் பள்ளிக்கூடத்தில் என் பிள்ளையைவிடப்போய், உள்ள படிப்பும் போயிற்று. இவ்வண்ணம் இரண்டு பாட்டுகள் பாடி ஆகிறதென்னை? இந்தப் படிப் பெதற்கு?' என்று அக்கல்வி முறையின் மீது அதிருப்தியைக் காட்டி, பிள்ளைகளை அதினின்று நீக்கி, சுவாதீனப் பள்ளிக்கூடங்கள் வைத்திருக்கும் உபாத்தியாயர்களிடம் அவர்களை ஒப்பித்து விடுகின்றனர். ஏனெனில் ஆங்கு கிண்டர்கார்ட்டன் என்பதைக் கண்ணிற் காணமுடியாது. நெடுங் கணக்கு, கடைக் கணக்கு, குழிப் பெருக்கல், கீழ்வாய் இலக்கம், விநாயகர் அகவல், விவேக சிந்தாமணி, மனைசாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, முதலியனவற்றைப் பிள்ளைகள் குட்டிப்பாடம் போட்டுப் படித்து, எழுத்தாணிகொண் டெழுதுவதிற் றேர்ச்சியடைகின்றார்கள். இவைகளே ஜனசமூகத்திற்கு ஒத்த நலத்தை விளைவிப்பன. ஆகையால் இதுவிஷயத்தில் சர்க்கார் பள்ளிக்கூடங்களில் நடக்கும் படிப்பில் ஜனங்கள் அதிருப்தி கொள்ளாவண்ணம் உபாத்தியாயர் இலாயக்காய் நடந்துகொள்ளவேண்டும். இதற்குப் பரீக்ஷிக்கு மதிகாரிகள் ஒத்தாசையும் அவசியம் வேண்டும். பாடக்கிரம

அட்டவணையும் இருவகுப்பாருக்கும் பொருந்தியதாய் ஏற்படல் வேண்டும்.

எலிமென்டரிப் பாடசாலைகளில் வேலை செய்பவர்களுக்குத்தான் இவ்வளவு உபத்திரவமும். உயர்தரப் பாடசாலைகளில் வேலை நடாத்துபவர்கள் கஷ்டமற்று ஜீவிக்கின்றனர் என்று ஒருபோதும் எண்ணற்க. உபாத்தியாயர்கள் எங்கும் உபாத்தியாயர்களே. கறவைப் பசு எங்கே போனாலும் அதனைக் கறவாது விடார்கள். அப்பன் வீட்டிலுங் கறவை, அம்மான் வீட்டிலுங் கறவை, வம்பன் வீட்டிலுங் கறவை, அன்பன் வீட்டிலுங் கறவை. அன்பனைக் காணப்படுவதனால் கறவாமல் விடுவான் என்று எண்ணுதீர்.' மற்றவர்களுக்கும் பால் கொடுத்து உதவக் கூடிய அன்பனுக்குத்தான் பாற்செலவு அதிக மிருக்குமாதலால் அழுத்தமாய் ஒட்டக் கறப்பவன் அவனேயாம். மேலும் நாட்டுப் பசுக்களுக்கு ஓரிடத்திற் கறவையானால் நெல்லூர் பசுக்களுக்கு நாற்பது இடங்களிற் கறவை யன்றோ? இச்சங்கடம் போலும் எங்களது சங்கடம். வருஷத்திற் கொருமுறை ஒரு ரூபாய் அதிகம் வாங்குவதற்குள் ஒன்பது மலைவருத்தங்களுக் குள்ளாக வேண்டிய திருக்கும். சீ சீ அதனை வாங்குவதைவிட வாங்காதிருப்பதே நலமெனத் தோன்றும். அந்த ஒரு ரூபாய் கூட்டிக் கொடுப்பதற்கு முன் உபாத்தியாயருக்கு எவ்விதத்தில் வேலையை அதிகப்படுத்தலாம் என்ற எண்ணம் வேறே. உபாத்தியாயர் இத்தர்ம சங்கடங்களுக்குள் மூழ்கிக் கரையேறத் துறைகாணுமற் றவிக்கிறார்.

இதனோடு நம் காருண்ய இராஜபிரதிநிதி சின்னாட்களுக்கு முன் செய்த உபந்நியாசத்தில் நாம் அறியவேண்டும் சில விஷயங்களை எழுதுதல் நலமென்று உத்தேசிக்கின்றேன்.

1918-ஆ ஆகஸ்டு மீ 7உ இந்தூரில் சிவாஜிராவ் ஹோல்கர் ஹைஸ்கூலைத் திறந்தகாலையில் உபாத்தியாயர்களது விஷயத்திற்காக நம் இராஜப்பிரதிநிதி சொன்ன வார்த்தைகளாவன :—

* * * * * *

'பள்ளிக்கூடங்களை நேர்த்தியாகக் கட்டியென்னை? இலக்ஷக் கணக்காகப் பணச்செலவு செய்து என்னே? கல்வியைப் புகட்டும் ஆசிரியர்கள் கால நிலைக்குத்தக்க பூர்ண புருஷராய் இருத்தலிற்றான் காரிய மிருக்கிறது. இதொன்று மில்லாவிடின் மற்றவை வீணும் வியர்த்தமுமே — முதலில் உபாத்தியாயர்களுக்கான சரியான



பயிற்சி கொடுத்தல் வேண்டும்—வெறுமனே பட்டதாரியா யிருப்பதனால் மட்டும் ஒருவன் உபாத்தியாயராகி விடுகிறதில்லை. போதனுசாஸ்திரத்தை அவன் கண்டடைந்தால்மட்டும் கற்றுக்கொடுக்க முடியுமே தவிர வேறல்ல.

மேலும் இந்துதேச சரித்திரத்தை யுற்றுணர்ந்தால் உபாத்தியாயர்கள் எவ்வளவோ மேலான ஸ்திதியில் இருந்தனர் என்பது தெரியவரும். நூற்றுக் கணக்கான பிள்ளைகளுக்கு இக்காலம் கற்றுக்கொடுப்பதே உபாத்தியாயர்களுக்குக் கனமானதும் அவர்கள் மதிக்கப்படுவதற்குக் காரணமானது மென்று கருதுதல் ஒண்ணுது. தகுந்த சம்பளமும் வேலைக்குத்தக்க, வேளைக்கு வேளை கனமான ஊழியமும் உத்தியோக பதவியும் அந்த இலாகாவில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டா லொழிய, உபாத்திமைத் தொழில் அற்பமானதாயும் கனமற்றதாயும், கண்ணைக் கவரக் கூடிய ஊழியமல்லாததாயும் தோன்றவே தோன்றும்.'

J. G. SUNDRAM,
*The Kellett High School,*
*Triplicane.*

# HOW SEEDS GROW

## விதைகள் முளைக்கும் விதம்

I. தயார் செய்தல் — விதைகள் முளைக்கும் விதத்தைப் பிள்ளைகள் நேரில் கண்டறிந்துகொள்ளுவதுதான் இப்பாடத்தின் நோக்கம். இரண்டு மூன்று வாரத்திற்கு முன்னமே கோதுமை, மொச்சை, அவரை முதலிய விதைகளை இப்பாடத்திற்கென்றே பொறுக்கியெடுத்து, விதை முளைத்தல், பயிர் உற்பத்தியாதல் முதலிய வெவ்வேறு தோற்றங்களைக் காட்டுவதற்காக, நாளடைவில் பாத்திகளிலும், தொட்டியிலும், கண்ணுடிக் குப்பியிலும் விதைகளை நட்டுவைத்துப் பயிராக்கி வைத்திருக்கவேண்டும். பரீக்ஷைசெய்து பார்ப்பதற்கு மிகவும் ஏற்றவைகள் இரட்டைப் பருப்பு விதைகளே. விதைகள் முளைத்தலையும், கன்றுகள் உற்பத்தியாவதையும் பிள்ளைகள் கவனிக்கும்போது, அவர்கட்கு விநோதமாயும் உற்சாகமாயு மிருக்கும்.

உலர்ந்த விதைகளைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து, அவர்கள் மனத்தில் பட்டதைச் சட்டமாகச் சொல்லச்செய்யவும். உழுந்து, கடலை, துவரை முதலிய தானியங்களிலுள்ள மேல்தோலைப் போக்கி, பருப்பு எடுப்பதைப் பிள்ளைகள் பார்த்திருப்பார்கள். தோல் பளபளப்பாயும் மிருதுவாயும் கெட்டியாயும் இருப்பதையும் விதையில் வெள்ளைக்கோடுபோன்ற அடையாளம் ஓர் ஓரத்தில் தோன்றுவதையும் விவரமாய்ச் சொல்லுவார்கள்.

II. நிரூபணம் — (a) அவரை விதை ஜலத்தில் ஊறப்போட்டு வைத்த அவரை விதைகளைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கவும். மேல் தோல் மிருதுவடைந்து, சுருங்கி யிருக்கும். மேல் தோலைச் சுலபமாய் உரித்துவிடலாம். விதையும் பெருத்து உப்பியிருக்கும். ஒரு சிறு ஊசியைக்கொண்டு தோலை உரிக்கச் செய்யவும். பின் வரும் விஷயங்களைத் தாங்களே கண்டறிந்துகொள்ளுவார்கள்: (1) அண்டாசயம் ஒட்டிக்கொண்டிருந்த பாகத்தில் சிறு புடைப்புத் தெரியும்; இதுதான் வேரின் மூலம். (2) இந்த விதை இரண்டு தடித்த பருப்புகளாகப் பிரிந்துவிடும்; இவைகளுக்கு இலைப்பருப்பு என்று பேர். (3) இரண்டும் ஒட்டிக்கொண்டிருக்குமிடத்தில் ஒரு சிறு முளையிருக்கும்; இச்சிறு முளைதான் கன்றாகும். (4) இச்சிறு கன்று மடிந்து படிந்த இரண்டு சிறு இலைகளோடு மேலே வரக்காணலாம்; இலைகளோ பசுமை நிறமாயிரா. அவரை விதையில் ஒரு சிறு கன்று அடங்கியுள்ளது.

(b) பரிசோதித்தல் — ஆறு ஏழு நாள் ஊறவைத்த அவரை விதையை ஒவ்வொரு பிள்ளைக்கும் கொடுத்து உற்றுப் பார்த்துப் பரிசோதிக்கச் செய்யவும். உள்ளிருக்கும் பருப்பு ஊறிப் பெருத்ததும் தோல் வெடிக்கிறது. சேர்ந்திருந்த இரண்டு அரைப் பருப்புகளும் பிளவுபட ஆரம்பிக்கின்றன. இரு பிரிவுகளாக யிருக்கும் பாகம் விதையிலைகள் அல்லது பருப்புகள். முளை முளைக்கும்போது வேர் பூமியை நோக்கி வளருகிறது; இலைப்பருப்புக்கு இடையில் சிறு செடி காண்கிறது; இது பூமிக்குமேல் வளரும் பாகம்.

இலைப்பருப்புகளின் வேலை — வேர்கள் வளர்ந்து பூமியிலுள்ள ஆகாரத்தையும் இலைகள் முளைத்து ஆகாயத்திலுள்ள ஆகாரத்தையும் சேர்க்கும் வரையில் இப்பருப்புகள் ஆகாரமாயிருந்து முளையைக் காப்பாற்றும்.

படிப்படியாய் வளர்ந்து வருவதைக் காட்டுதல் — இரண்டு மூன்று வாரத்திற்கு முன் வளரவைத்துத் தயார் செய்யப்பட்ட



மாதிரிச் செடிகளைப் பிள்ளைகளுக்குக் காட்டவும். சிறிய இலைகள் வெடித்துப் பசுமை நிறம் அடைகின்றன; ஏன்? வேர்கள் பருமனாகி மெல்லிய கிளைவேர்கள் விடுவதைப் பார்க்கலாம். இலைப்பருப்புகளோ சிறுத்து மெலிவடைகின்றன; ஏன்?

(c) இலைப் பருப்புகள் சாதாரண இலைகள்போல் இராமல் வரவரச் சுருங்குவதைக் காணலாம்; இவ்விதை யிலைகளிலிருக்கும் மாவுபோன்ற பொருள் இச்சிறு செடியைக் காப்பாற்றினதினால், அதிலிருந்த உணவு ஆய்விட்டதும் விழுந்துவிடுகின்றன; செய்ய வேண்டிய வேலையும் செய்தாய் விட்டது. இச்சிறு தாவரம் தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ளும் நிலைமையை அடைந்துவிட்டது.

(d) தாவரம் எவ்விதமாய் உயிர்வாழ்கின்றது — வேர், தண்டு, இலைகள் மூலமாய், ஆகாரத்தைச் சேகரிக்கிறது, தண்ணீரைப் பருகுகிறது, சுவாசிக்கிறது, பிள்ளையின் வாய்க்கு ஒப்பிடுக. வேர், ஆகாரத்தை பூமியிலிருந்து சேகரிப்பதோடு தாவரத்தைக் கீழே விழாமற் பிடித்துக் கொள்ளுகிறது. வேரிலிருந்து ஆகாரப் பொருள்கள் ஈரத்தோடு இலைகளுக்குச் செல்லுவதற்கு அடிமரம் குழாயைப் போன்றது. இலைகளோ தங்களிடத்திற்கு ஈரத்தோடு வந்து சேரும் உணவுப்பொருள்களை உண்டு, அடிப் புறத்தில் வாய்கள் போன்ற நுண்ணிய துவாரங்கள் மூலமாய் சுவாசிக்கின்றன.

சம்பந்தம் — அவரைக் கன்றை முட்டையிலிருந்து வரும் கோழிக் குஞ்சுக்கு ஒப்பிடுக.

(1) அவரைக் கன்று விதையிலிருந்து உண்டாகிறது; கோழிக் குஞ்சுகள் முட்டையிலிருந்து வருகின்றன.

(2) விதை யிலைகள் அல்லது பருப்புகள் மத்தியிலிருக்கும் செடிக்கு ஆகாரம் கொடுக்கும் களஞ்சியங்களா யிருக்கின்றன; முட்டையிலிருக்கும் வெண்கரு குஞ்சுகளுக்கு வேண்டிய உணவாகிறது.

(3) விதையின் மேல்தோல் சிறு கன்றைக் காப்பாற்றுகிறது; முட்டையின் மேல்ஓடு வளரும் குஞ்சுகளை காப்பாற்றுகிறது.

(4) அவரைச் செடி ஒரே நாளில் வளருவதில்லை; சிறிது சிறிதாய் வெளியில் காண்கின்றது; கோழிக் குஞ்சுகளும் அவ்விதமே தோன்றுகின்றன.

(5) அவரைச் செடிக்கு உஷ்ணம், தண்ணீர், பராமரிப்பு வேண்டும்; குஞ்சுகளோ பராமரிப்பும் உஷ்ணமுமில்லாமல் முட்டையினின்றும் வெளிவர முடியாது.

(6) ஏற்ற காலத்தில் இச் சிறு செடி பூத்துக் காய்க்கும்; கோழிக் குஞ்சுகளும் தக்க பருவத்தில் முட்டையிடும்.

**நிர்ணயம்** — அவரை ஒரு விதை. உள்ளே ஒரு சிறு செடி குழந்தைபோ லிருக்கிறது; குழந்தையைக் கவனிப்பதுபோல் கவனிக்க வேண்டும். விதை யிலைகள், தாயாரைப்போல், போஷித்துக் காப்பாற்றுகின்றன; குழந்தை ஆடி ஓடித் தானாய் சாப்பிடுகிற வரைக்கும், தாயார் ஆகாரம் கொடுத்துக்கொண்டு வருகிறாள். முதலில் வேர் வளர்ந்து அடி மரத்திற்கும், இலைகளுக்கும் உணவு தேடுகின்றது; இலைப்பருப்பு தன் வேலை முடிந்ததும், கீழே விழுந்து போகின்றது. அவரைச் செடிக்குக் காற்று, உஷ்ணம், ஆகாரம் வேண்டும்.

**செய்யவேண்டிய வேலை** — ஒரு தட்டில் மிருதுவான கம்பளித்துணியை நனைத்து வைத்து, அதன்மேல் கடுகு தெரித்து வைக்கவும்; கம்பளித்துணி ஈரமாகவே யிருக்கும்படி செய்ய வேண்டும். கடுகு முளை விட்டு வளரும் விதத்தைப் பழுப்புக் கடுதாசியில் சீமைச்சுண்ணாம்பினால் வரைந்து குறித்துவைக்கவும். உபாத்தியாயர் ஒரு கண்ணாடி ஜாடியில் ஜலத்தை நிரப்பி, முரட்டுக் கம்பளித் துணியால் வாயில் கட்டவேண்டும்; பட்டாணி, அல்லது அவரை, இந்தக் கம்பளித்துணியில் போட்டுவைத்தால், சூடும் குளிரும் பட, கம்பளித்துணியின் அடியிலிருக்கும் ஜலத்துக்குள் வேர் நுழைவதைப் பார்க்கலாம். கடல் பஞ்சியை நனைத்து அதில் சிறு சணல் விதையை விதைத்தால், அழகான சணல் பயிர்கள் தோன்றுவதைப் பார்க்கலாம்.

M. S. SABHAPATI,
*Govt. Panchama Training School,*
*Madras.*



# HEALTH AND THE TEACHER

## சரீரசுகமும் உபாத்தியாயரும்

சரீரசுகம் என்றால் நம்முடைய தேகத்தை நோய்களாகிய பாசங்கள் பீடிக்காமல் அதனைச் சரியான நிலைமையிலிருத்தலாகும். நாம் பிணியின்றி, திடசரீரத்துட னிருந்தாலன்றி, குடும்ப சம்ரக்ஷணையையும் இல்லற தர்மங்களாகிய, 'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங் கைம்புலத்தா ரோம்பல் தலை' என்ற நாயனார் மொழிகளையும் அனுஷ்டிக்க இயலாது.

ஒருவனுக்கு அதிக செல்வமும், பெருந்தன்மையும், ஜனசகாயமு மிருந்தாலும் அவன் சரீரசுகமின்றி யிருக்கும்பக்ஷத்தில் நிஷ்பலனாகும். கூரையில் படுத்து, கூழை உண்டு, கூலிக்குச் செய்யும் ஓர் எளியோன் அரோக திடகாத்திரனாய், அனுபவிக்கும் சந்தோஷத்தையும் சுகத்தையுங்கூட அனுபவியாதவனாகின்றான்.

அதிக தனவந்தனாய் பல வியாகூலங்களும், பல வியாதிகளும் நிறைந்தவராய், வெளிக்கு மனித உருவினராய், பெரும் பிரதாபமும் உள்ளவராய், அகத்தில் வாயால் சொல்லொணாத் துயரமும் துன்பமும் அனுபவித்து வருகின்றவர்களை நாம் பார்த்திருக்கின்றோ மல்லவா? ஆனதுபற்றியே ஆன்றோர், 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று அமுதவாக்கால் கூறியுள்ளர். மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவனும் கூடியவரையில் ஊக்கத்தோடு, சரீரசுகத்தைக் கவனித்துவரல் இன்றியமையாதது. சாதாரண மனிதர்களே அவ்வளவு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் நம்போன்ற உபாத்திமார்கள், பகுத்தறிவென்பது அதிகமில்லா மிருகத்திற்குச் சமானமான சிறு பாலர்களுக்கு இரண்டு கண்களாகிய எண் எழுத்துக்களையும், பொது அறிவுகளையும், உலகஞானத்தையும் புகட்டி, அவர்களைச் சகல விவகாரங்களும் தெரிந்த மனிதராகச் செய்விப்பவர்களா யிருக்கும்போது, நாம் அதில் எவ்வளவு ஊக்கமும் சிரத்தையும் கொள்ள வேண்டுமென்பது தெற்றென விளங்குகிற தல்லவா?

நாம் பின்பற்றுவதோடு நம் மாணவர்களுக்கும் ஆரம்ப முதல் போதித்துவந்தால் அவை பசுமரத்தாணிபோல் பதிந்து அவர்களு மனுசரித்து வருவது, எவ்வளவு பயன்தரும் பாருங்கள்.

சரீர சுகத்தைப்பற்றிச் சிறுவர்களுக்கு ஒரு உபாத்தியாயர் என்ன போதிக்க வேண்டும்? பொதுவாய்க் கவனிக்க வேண்டியவை யாவை? என்பதைப்பற்றி ஆராய்வோம்:

1. **சீதோஷ்ண காலங்களில் கவனிப்பு** — கிராமாந்தர பாடசாலை உபாத்தியாயர்கள் கால தேசவர்த்தமானமென்பதைக் கவனித்தொழுகல் அவசியம். சில இடங்களில் நடக்கும் வழக்கத்திற் கேற்ப, பொழுது புலர்வதற்கு முன்பே சிறுவர்கள் பாடசாலை வாயிலில் வந்து பனியில் நனைந்து குளிரால் நடுங்கக் காத்திருக்கும் பிராசீன வழக்கம் தற்காலமும் சில குக்கிராமங்களில் நடைபெறும் போலும். நவீன காலத்திற் கொட்டி, நவீன முறைகளைப் பயின்றவர்கள் அம்மாதிரி நடத்தார்கள் என்பது திண்ணம்.

அதிக குளிர்காலமா யிருக்கையில் காலையில் 8 அல்லது 8½ மணி முதல் பாடந் தொடங்கி 11 மணிக்கு விடுவது நலம். கூடுமானால் 10 மணி முதல் 1 மணி வரையிலும் வித்தியா அதிகாரிகளின் உத்திரவின்மேல் நடத்தலாம். கிராமாந்தரங்களில் இது வெகுவாய் இயலாமலிருக்கலாம். அதி உஷ்ண காலங்களில் பாடசாலையை மூடுவது நலம். இல்லாவிடில், கூழுண்டு வயிறு வளர்க்கும் எளிய சிறுவர்கள், செருப்பும் குடையும் வாங்க இயலாது மத்தியான வெய்யிலில் கால் எரியப் பாடசாலைக்கு வருவது எவ்வளவு பரிதாபம்.

சொல்ப உஷ்ணகாலங்களில் நாம் பள்ளிக்கூடம் நடைபெறும் வேளைகளில் தாழ்வாரம் ஜன்னல் முதலிய இடங்களில் உள்ள பாய் தட்டிகளில் ஜலம் தெளித்து வைத்திருந்தால் குளிர்ச்சியாயிருக்கும். மாரிக்காலத்தில் விடா மழை, அதிக மழை பெய்த தினங்களில், பிள்ளைகளைச் சிரமத்துடன் வருவிக்காது அன்று விடுமுறையாக விட்டு, பரீக்ஷகருக்குத் தெரிவித்து விடலாம்.

2. **தந்த தாவனம்** — பிள்ளைகள் அதிகாலையில் அதாவது சூரிய உதயத்திற்கு முன் துயிலெழுந்ததும் பல் துலக்குமாறு நாம் கூறுவதோடு, துலக்காவிடில் உள்ள இடையூறுகளையும் போதித்தல் வேண்டும். பல் துலக்காவிடில் நாளடைவில் அழுக்கு சேர்ந்து பற்களில் பாசி படிந்து அவலக்ஷணத்தையும் துர்நாற்றத்தையும் உண்டுபண்ணுகிறது. தவிர அருகில் வருபவர்கள் வெறுப்பு அடைந்து இகழ்வார்கள். அஃதன்றியும் வாயில் உள்ள உமிழ் நீருடன் அழுக்கு கரைந்து உட்செல்லும். இந்தத்



துர் அணுக்கள் உட்சென்று ஜீர்ணத்திற்குக் கெடுதியையும் வியாதியையும் உண்டு பண்ணும். ஆகையால்தான் நாம் எழுந்தவுடன் நன்றாய்ப் பல் துலக்கிவருவதோடு உண்பதன் முன்னும், வெளிச்சென்று வந்த வுடனும் வாய் கொப்பளித்துச் சுத்தம் செய்கிறோம்.

3. **ஸ்நாநம்** — தேகத்தின் சருமத்தின்மேல் மிகச்சிறிய துவாரங்கள் நிறைந்துள. அவைகளின் மூலமாய் சரீரத்திலுள்ள கழிவு பதார்த்தம் வியர்வையாக வெளிவரும். மேல்தோலின் மேல் படிந்து துர்க்கந்தத்தை உண்டாக்கும். அந்த அழுக்கைப் போக்கவே தினந்தோறும் குளிக்கிறோம். குளிக்காவிட்டால் அழுக்கால் துவாரங்கள் அடைபட்டு வியர்வை உட்சென்று இரத்தத்தில் கலந்து நோய்க்குக் காரணமாகும். நமக்கே ஒரு வெறுப்பையும் கொடுக்கும். இஃதுணர்ந்தே ஆதியில் உள்ள விப்ரோத்தமர்கள் பிராத ஸ்நாநம், திரிகால ஸ்நானம் என்றவைகளை சாஸ்திர விதியாக வைத்து, அனுசரித்து வந்தனர். தற்காலத்திலும் அநேகர் அனுசரிக்காவிடினும் சிறுபான்மையோர் தழுவுகின்றனர். சிலர் குளிப்பதென்பதை நிமித்த மாத்திரமாய்க் கொண்டு ஜலத்தை எடுத்து உடம்பின்மே லூற்றிக்கொண்டு, ஒரு விநாடியில் குளித்து ஸ்நாநம் செய்துவிடுகிறார்கள். இவர்கள் குளிப்பது பெற்றோர்களின் பயத்தினாலோ அல்லது அவசர வேலையின் முடையினாலோ அல்லது கடனுக்கோ அறியோம். இந்த ஸ்நானம் செய்வதால் வீணில் கால நஷ்டமும் சிரமமும் ஆகுமேயன்றி வேறொரு பயனுமில்லை.

(இன்னும் வரும்.)

T. N. KRISHNASWAMI IYER,
*Student, Government Training School,*
*Villupuram.*

## TEACHERS' ASSOCIATION
## CHIDAMBARAM RANGE

### இன்ப்ளூயன்ஸா — (அறிவிப்பு)

இந்த ஜுரம் இருமல் சளியுடனும், தலை, முதுகு, கை, கால் வலி-யுடனும், அல்லது வாந்தி சில சமயங்களில் பேதியுடனும் வந்து பல பேரை ஒரே சமயத்தில் படுக்கவும், இறக்கவும், செய்யக்கூடிய கொடுமை யுள்ளது. இதற்கு மருந்து சாப்பிடக்கூடாதென்று சிலர் எண்ணுவது பிசகு. இந்த ஜுரம் கண்டவுடன் சமீபத்தில் ஆஸ்பத்திரி இருக்கும்பட்-சத்தில் அவ்விடம் போய் மருந்து வாங்கிகொள்ளுவது உத்தமம்.

(1) இந்த ஜுரம் வந்தவர்கள் ஜுரம் நன்றாக விடும் வரையில் படுக்-கையிலேயே படுத்திருப்பது அவசியம் (2) சீக்காளிகள் இருக்கும் அறை-கள் ஜன்னல்கள் சாத்தாமலும், காற்றுப்போக்குள்ளதாகவும் இருக்க வேண்டும். (3) சீக்காளிகளின் எச்சலினாலேயே இந்த வியாதி பரவுவ-தாகச் சொல்வதால் அவர்கள் எச்சல், சளி, வாந்தி முதலியவைகளை மற்றவர்கள் சம்பந்தமில்லாமல் செய்யவேண்டியது. (4) கூட்டமான இடங்களுக்குப் போவதும், திருவிழா, ரயில் பிரயாணம் முதலியவைகளை நிறுத்துவதும் உத்தமம் (5) சீக்காளிகள் சமீபத்தில் அவசியமாகப் போக வேண்டியவர் ஒருவர் தவிர மற்றவர்கள் வீட்டில் வேறு இடங்களில் இருக்கவேண்டும். (6) சீக்கு வந்து இரண்டு மூன்று நாளான பிறகு விட்டு விட்டதென்று நினைத்து, எண்ணெய் தேய்த்துக்கொள்ளுவதும், வெளி-யில் அலைவதும், ஜீர்ணிக்காத ஆகாரத்தை உட்கொள்ளுவதும், உடனே ஆபத்தை விளைவிக்கக்கூடும். (7) சீக்காளிகளும், அவர்கள் வீட்டிலுள்ள மற்றவர்களும், கற்பூரத்தைலத்தினாலாவது, அமுர்தாஞ்சனம் முதலிய மெழுகுகளினாலாவது மூக்கு, தொண்டை, மார்பு, முதுகு முதலிய இடங்-களில் தேய்ப்பது அனுகூலத்தைத் தரும். (8) தேகத்தில் மலச்சிக்கலில்-லாமல் வைத்துக்கொள்ளவேண்டியது. (9) ஆகாரம் திரவபதார்த்தமாக (புழுங்கையரிசி முதலிய கஞ்சி) இருக்கவேண்டும். (10) சித்தரத்தை 1 துண்டு, ஓமம் ஒரு முட்டை, வெற்றிலை நாலு, வேப்பிலை ஒரு ஆர்க்கு, இவைகளை கால் சேர் பொங்கும் வெந்நீர் விட்டு அரைத்து சொரஸமாகப் பிழிந்து வடிக்கட்டி மறுபடி சுடவைக்காமல், அரைக் கால் சேர் வீதம் மூன்று வேளை சாப்பிட, ஜுரம் நின்றுவிடும். (11) ஒரு தோலா களச்சிக்காய்ப் பருப்பையும் இரண்டு தோலா மிளகையும், சேர்த்து பொடி செய்தாவது அல்லது 2 தோலா மிளகும் 1 தோலா அரிசித்திப்பி-லியையும் சேர்த்து பொடி செய்தாவது சாப்பிடுவதற்கு முன் கொஞ்சம் தூளை வாயிற் போட்டுக்கொண்டு வெந்நீரைச் சாப்பிடவும். இப்படி 3-நாள் சாப்பிட்டால் ஜுரம் நின்றுவிடும் என்றும் ஜுரம் வரும்போலிருப் பவர்களும், ஜுரம் வருவதற்கு முன்னும் பின்னும் இவை சாப்பிடலாம் என்றும் சொல்லப்படுகிறது.

P. K. PATTABHIRAMA SASTRI,
*President, Teachers' Association,*
*Sub-Assistant Inspetcor of Schools,*
*Chidambaram.*



# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

## மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 14 | 1918௵ செப்டம்பர்௴ | மாதம் 4

## OUR VICTORY IN THE EUROPEAN WAR
## HAIL THE BRITISH RAJ

### பிரிடிஷ் ராஜ்யத்தின் ஜயப் பிரதாபம்

(முத்திநெறி யறியாத — என்னும் மெட்டு.)

அருளோர் உருவாகி அணுவினுமோர் அணுவாகி
இருளறவே எங்கெங்கும் இருந்தருளும் பரம்பொருளே
பொருள்சேரும் எம்மரசும் பொருந்தியசீர்த் துணையரசும்
தெருளுறவே ஜயந்தந்தாய் திருவருளே வாழ்த்துவமே.

அறமென்றும் தலையெடுக்கும் மறமென்றும் தலைபடுக்கும்
துறையான அறநெறியே துணையாகக் கொண்டொழுகும்
குறையாத நம்மரசும் கூடியநற் றுணையரசும்
தறைமீதே ஜயமடைந்தார் ஜயக்கொடியே நாட்டுவமே.

ஐக்கியமே வெல்லுமெனும் அறமொழிக்கோர் அழிவுண்டோ
ஐக்கியநற் கொடிசேரும் அரசரெலாம் ஜயமுற்றார்
மயக்கமுறும் பகையரசின் வன்படைகள் வலியொழிந்த
வியப்பினையே காட்டிடநம் வெற்றியினை விளக்குவமே.

சுரைக்கொடியோர் பனையினையே சூழ்ந்தேறி வளைந்தாலும்
பரக்கவது மடிந்தொழிதல் பாராரோ பகையரசர்
மரக்கலத்தால் வன்படையால் மாறுநம் அரசர்பிரான்
தரைக்கண்ணே ஜயம்பெற்றார் ஜயக்கொடியே நாட்டுவமே.

உலகெங்கும் நலம்பரவி உயிரெல்லாம் அமைதியுறக்
கலகங்கள் ஒழியவெனக் கருதியஜார்ஜ் அரசர்பிரான்
அலகில்சீர் நல்லரசும் அதனுடன்சேர் துணையரசும்
இலகியசீர் ஜயம்பெற்றார் எந்நாளும் ஓங்குகவே.

பத்திராதிபர்.

# HEALTH AND THE TEACHER

## சரீரசுகமும் உபாத்தியாயரும்

(முன் தொடர்ச்சி, பக்கம் — 71.)

ஸ்நாநம் செய்வது என்றால் நன்றாய் அழுக்கைத் தேய்த்து நிரம்ப ஜலம்விட்டுக் கழுவி நன்றாய் உலர்ந்த துணியால் துவட்டல் வேண்டும். நன்றாய் ஸ்நாநம் செய்யக் குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்கள் செல்லும். சவர்க்காரம் (Soap) முதலிய போட்டுக் கழுவுவதில்கூட சரியாய் அழுக்கு போவதில்லை. மேனுக்குமட்டும் அப்பொழுது சற்று வாசனை வீசுமே யன்றி நல்ல பயனளிக்காது. தலைக்கு ஸ்நாநம் செய்யல் நலம். அதனால் உடம்புக்கு ஆரோக்கியமும், சுறுசுறுப்பும், பித்த சமனமும் உண்டாகும். வைகறையில் ஸ்நாநம் செய்பவர்களுக்கு வியாதி பிடிக்காது. கண்ணுக்குக் குளிர்ச்சியா யிருக்கவும் தலைமயிரில் உள்ள அழுக்கு போகவும், தேகத்தின்மேல் சொறி சிரங்கு வாராமல் இருக்கவும் நாம் "அப்யங்கன ஸ்நாநம்" தைலம் அல்லது எண்ணெய் தேய்த்துக்கொண்டு நீராடும் வழக்கத்தை கையாடுகிறோம். "சனிநீராடு" என்று தமிழ் மாதா கூறியவாறு சனிக்கிழமையே அதற்கேற்ற தினம் ஆகையால் நாம் தினந்தோறும் பிள்ளைகள் குளித்து வருகின்றனரா என்று கவனித்தல் அவசியம்.



4. உடை — ஒவ்வொரு மாணவனும் அழுக்கின்றித் தோய்க்கப்பட்டு உலர்ந்த வஸ்திரங்களையும் சட்டைகளையும் தரித்து வரும்படி நாம் கூறுவதோடு அம்மாதிரி நடக்கின்றனரா வென்றும் பார்வையிட்டுவருதல் அவசியம்.

உடை கறுப்பாகுமாறு அழுக்கேறினவைகளை உடுத்து வருபவர்களைப் பார்க்க அருவருப்பா யிருப்பதுடன் அவர்களுக்கே ஒரு வேதனையையும் உண்டாக்குவதோடு, சொறி, சிரங்கு முதலிய வியாதிகளும் அவர்களை அணுகும். தவிர ஒரு பள்ளிக்கூடத்தில் சிரங்கு முதலிய வியாதிகளுள்ள பிள்ளைகளுக் கருகில் மற்றவர்களை உட்காரவைக்காமலும், அவர்களைத் தொட்டு, அவர்களின் ஆடையைத் தரிக்காமலு மிருக்குமாறு எச்சரித்து, கவனித்துவரல் வேண்டும். "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்ற நீதிமொழியைக் குறிக்கலாம்.

5. மூன்று ஜீவாதாரங்கள் — ஒரு மனிதன் உயிருடனிருக்க இன்றியமையாதவை — காற்று, ஜலம், உணவு.

காற்று — பிற் கூறிய இரண்டுமின்றி கொஞ்சநேரம் உயிருடனிருக்கலாம்; காற்றின்றி அரைக்கணமும் இருக்க இயலாது. நாம் ஒரு நிமிடத்திற்கு 17 அல்லது 18 முறை சுவாசிக்கிறோம். ஏன் காற்று உட்கொள்ளவேண்டு மென்றால், நாம் திடமாயும் சுகஜீவியாயுமிருக்க முக்கிய ஆதாரம் சுத்த இரத்தம். வேலை செய்வதாலும், நடத்தலாலும், தேகத்தின் ஒரு அம்சம் குறைகிறது. நாம் சாப்பிடும் ஆகாரம் உட்சென்று ஜீர்ணமாகி, திரவரூபமாய் இரத்தத்தில் கலக்கும். அந்த இரத்தம் சுவாசாசயத்திற்கு வந்து நாம் உட்கொள்ளும் காற்றில் உள்ள பிராணவாயுவுடன் சேர்ந்து சுத்தப்பட்டு தேகத்தின் பல உறுப்புகளுக்குச் செல்லும். நாம் வெளிவிடும் வாயு முழுதும் கெட்ட வஸ்துக்கள் நிரம்பிவரும். இதுவே கரியமிலவாயு. இதை சுவாசித்தால் விஷ அணுக்கள் அதிகரித்து, துன்ப முண்டாகும். பள்ளிக்கூடக் கட்டடம் பிள்ளைகளுக்குப் போதுமான காற்றுவருமாறு, ஜன்னல் முதலிய சாதனங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறதா வென்று கவனஞ்செலுத்தல் உபாத்தியாயரின் முதற்கடமை. தவிர, இறந்த ஜந்துக்கள், அழுகிய பதார்த்தங்கள், மலம், குப்பை முதலியவை யிருக்கு மிடங்களிலும், பெரிய நெருப்பு எரிக்கும் இடம், சூளை முதலிய இடங்களிலும் விஷவாயு ஏராளமாய் இருப்பதும் அங்கே சிறுவர்கள் செல்வதும்

இயல்பாகையால் கூடியவரையில் அவர்களுக்குப் போதித்து, விலக்க முயல வேண்டும்.

ஜலம் — இது இரண்டாவது பிராணாதாரம். நாம் குடிக்குஞ் ஜலம் நிர்மலமானதா யிருத்தல் அவசியம். சுத்த ஜலம் பளிங்குபோலிருக்கும். அதற்கு யாதொரு நிறமும் ருசியும் இல்லை

ஜல மெடுக்கும் குளம் முதலிய இடங்களில் பல் துலக்கல், வேஷ்டி துவைத்தல், ஸ்நாநம் செய்தல் முதலியவை கூடாது என்று கூறி அவர்கள் செய்வதைத் தடுக்க வேண்டும். எப்பொழுதும் ஜலத்தை வடிகட்டிச் சாப்பிடுதல் நலம். ஜலம் பரிசுத்தமாய் புலப்பட்டாலும் அதில் நுண்ணிய அணுக்கள் ஏராளமாய் உளவென்பது அணுத்தரிசினி என்ற கண்ணாடி மூலமாய் பார்த்தால் விளங்கும். அவை வடிகட்டினாலும் ஜலத்துடன் வந்துவிடுமாகையால், வைத்திய நிபுணர்கள் ஜலத்தைக் காய்ச்சி வடிகட்டிப் பருகல் வேண்டுமெனக் கூறுகின்றனர். ஆதலால்தான் நாம் ஜுரம் வந்தபோதும் ஊரில் துர்வியாதிகளுள்ளபோதும் வெந்நீர் சாப்பிடுகின்றோம். இல்லாவிடில் அவை உட்சென்று விஷபேதி, சீதபேதி, விஷஜுரம் முதலிய கொடிய வியாதிகளை உண்டுபண்ணும். தவிர கண்ட ஜலத்தைச் சாப்பிட்டால் ஜலதோஷம் உடனே வருவதையும் பார்க்கிறோம். பிள்ளைகள் எப்பொழுதும் சுத்த ஜலத்தைப் பருகுமாறும், வெளியூருக்குச் சென்றால் காய்ச்சிய வெந்நீரைப் பானஞ் செய்யவும் கூறவேண்டும்.

உணவு — இஃது மூன்றாவது பிராணாதாரமாக மதிக்கப்படும். ஏனெனில், இஃதின்றிச் சிலநாள் உயிரோடிருக்கலாம். நாம் உண்ணும் உணவு சுத்தமானதாயும் நன்றாய் வெந்து பக்குவமானதாயும் இருத்தல் அவசியம். தவிர நாம் உண்ணவேண்டிய காலத்தில் உண்ணுதல் அவசியம். அகால போஜனமும், அளவுக்கு மிஞ்சிப் புசித்தலும் நோய்க்கிடமாகும், சரியாய் ஜீர்ணமாகாது. அஃதுணர்ந்தே தமிழ் மூதாட்டியான ஔவைப் பிராட்டியும் "மீதூண் விரும்பேல்" என்று பகர்ந்துளார்.

உடம்புக்கு நோய் அளிக்கும் மணிலா, சீதாப்பழம் முதலியவைகளையும் பழுக்காத காய், அழுகிப்போன பழவகைகளையும் பிள்ளைகள் சபலத்தால் புஜிக்காமலிருக்குமாறு கண்டிக்கவேண்டும். தவிரவும் கடைத்தெருவில், வரிசை வரிசையாயும், வகைவகையாயும், இனிப்பு, கார்ப்பு முதலிய பக்ஷணங்களை மணிலா எண்ணெய் அல்லது வேறுவித எண்ணெயில் செய்துவைத்திருப்-



பான். நாள் பல ஆனதாயு மிருக்கலாம்; அதன் வாசனைக்காக ஈக்கள் மொய்த்துக்கொண்டிருக்கும். அவைகள் தெருவில் உள்ள பல அசுத்தங்கள், எச்சல், கோழைகளின் மேலும் உட்கார்ந்து உடனே மிட்டாய் தினுசுகளின்மேல் உட்காரும். அவைகளின் காலில் ஒட்டியவைகளும் அதில் சில ஒட்டிக்கொள்ளும். ஏற்கனவே எண்ணெயில் பக்குவமானதும், நாள்பட்டதும் நோய்க்கிடமானவை. ஈயின் வாயில் உள்ள விஷமும் போதாமல் எச்சலும் கலந்துள்ளது. இதைச் சாப்பிட்டவர்கள், எச்சலை உமிழ்ந்தவர்களுக்கு இருக்கும் இருமல் முதலிய தொத்துவியாதிகள் இவர்களுக்கும் இப் பக்ஷணமூலமாய் அணுகலாம்.

உபாத்திமார்கள் கூடுமானவரையில் பிள்ளைகளை இந்தப் பக்ஷணத்தை நீக்கும்படி கூறலாம். தவிர கடைத்தெருவில் சொல்ப விலைக்கு அகப்படும் அழுகிய பழவகைகளை சாப்பிடுவது இயல்பாகையால் அவைகளைத் தடுத்தல் அவசியம்.

6. தேகாப்பியாசம் — படிப்பானது எப்படி மனதிற்கும், புத்திக்கும், மூளைக்கும் இன்றியமையாததோ அதுபோலவே இதுவும் தேகத்திற்கு அத்யாவசியமானது. ஒருவன் அதிகமாய்க் கல்வி கற்பதிலே கவனமாய் கற்றுப் பெரிய பரீக்ஷையில் தேறுகிறான். ஆனால் அவன் நடப்பதற்கும் வண்டி வேண்டும், பலஹீனமா யிருக்கிறான் அப்பொழுது எப்படியும் அவன் கல்வி பயன்படாமல் போகும். கல்வியுடன் சரீரதிடமும் யிருந்தாலன்றி பிரயோஜனமாகாது. அஃதுணர்ந்தே பெரிய கலாசாலை, உயர்தர பாடசாலைகளிலும் கால்பந்து (Foot ball), டென்னிஸ், கிரிக்கெட் (Cricket) முதலிய விளையாட்டுகளை வைத்து வருவதுடன் (Drill) தேகப்பயிற்சியும் ஒரு பாடமாக வைத்திருக்கிறார்கள், நம் பாடசாலைகளிலும் அதை ஒரு பாடமாக வைத்திருக்கச் சிலர் அதை கவனியாதிருக்கின்றனர். அவர்களிதன் மேன்மையை உணர்ந்தாரில்லை. தேகாப்பியாசம் செய்வதால் கீல்கள் நன்றாய் அசைந்து தசைநார்கள் பெருத்து பலக்கும். இரத்த ஓட்டம் விருத்தியடையும். அவயவங்கள் பலப்படும். உடம்பிற்குச் சுறுசுறுப்பு உண்டாகும். வியாதிகள் அணுகா. (இன்னும் வரும்.)

**T. N. KRISHNASWAMI IYER,**
*Student, Govt. Training School,*
*Villupuram.*

# TEACHING NOTES ON ATTISUDI

## The Second Sutram — இரண்டாம் சூத்திரம்

## ஆறுவது சினம்

உபகரணம் - நெருப்பு, கரும்பலகை, etc.] [வகுப்பு மூன்றாவது.

தெற்கிலுள்ள எலிமெண்டரிப் பாடசாலைகளை யான் கவனித்த பொழுது ஆங்கு ஆத்திசூடி படிப்பது நிறுத்திவிடப்பட்டிருப்பதைக் கண்டேன். பரீக்ஷாதிகாரிகள் சிறு பிள்ளைகளுக்குக் கஷ்டந்தருவ தென்றறிந்து வேறு செய்யுள்பாடம் நியமித்திருக்கின்றனர். ஆனால் சுலபமான முறையாய் மாணவரின் மனத்தில் பிரியத்தை யுண்டாக்கிக் கற்பிக்குங்கால் இச்சூத்திரங்களெல்லாம் சுகமாய் விளங்கும். ஆகையாற்றான் இச்சூத்திரங்களுக்குப் போதனை முறை எழுதத் துணியலுற்றேன்.

இவ்விரண்டாஞ் சூத்திரத்தைக் கற்பிக்க இங்ஙனம் ஆரம்பிக்கலாம்.

உபாத்தியாயர் — (ஒரு பையனைப் பார்த்து) ராமா, உன் தம்பி ஏதும் காரணம் இன்றி உன்னை அடித்தானாயின் உனக்கு எப்படியிருக்கும்?

ராமன் — கோப முண்டாகும்.

உபா — கோபத்தினால் அவனை என்ன செய்வாய்?

ராமன் — அடிப்பேன்.

உபா — முத்து, நீ இன்று மத்தியானங் கோபாலனுடன் கை கலந்து சண்டை செய்தாயே, ஏன்?

முத்து — நாங்கள் விளையாடிக்கொண்டிருக்கையில், அவன் என்னை விளையாட்டாக ஏசினான். எனக்குப் பொறுக்க முடியவில்லை. கோபம் வந்தது. நான் அவனை யடித்தேன்.

உபா — வேலா, அன்று உன் தந்தையார் இங்கு வந்து உன் பேரிற் குற்றஞ்சொன்னது உனக்கு ஞாபகமில்லையா? சங்கதி என்ன?

வேலன் — ஆமாம், எனக்கும் ஞாபக மிருக்கிறது. நான் ஒரு பென்சல் கேட்டேன். அவர் தரவில்லை. அந்தச் சமயம்



பார்த்து என் தம்பி என்னிடம் வந்து நின்று பல்லைக்காட்டி, என்னைக் கேலி பண்ணினான். கோபமென்றால் சகிக்க முடியவில்லை. அந்தப் பையனையும் நன்றாய் அடித்தேன். நானும் சாப்பிடாமல் வந்துவிட்டேன்.

உபா — முருகா, நீ எப்பொழுதாவது கோபப்பட்டதுண்டா? வேணு, நீ; தாசா, நீ; செல்வா, நீ—கோபப்பட்டதுண்டா? முருகா, உன் தம்பியை அடித்துவிட்டாயே, நீ பின்னால் வருத்தப்பட்ட துண்டா?

முருகன் — வருத்தப்பட்டேன். அப்பொழுது கோபத்தில் தெரியாமல் அடித்துவிட்டேன்.

உபா — இப்படித்தான், கோபத்தில் நம்மை யறியாமற் தகாத காரியத்தைச் செய்து பின்னால் வருத்தப்படுவதுண்டு. நான் நடந்த சங்கதி ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள்; விஷ்ணு என்ற ஒரு பைய னிருந்தான். அவன் ஒருநாள் ஒரு திருட்டுப் பையனோடு சேர்ந்து பள்ளிக்குப் போகாம லிருந்துவிட்டான். ஆனால் அவன் அதுவரை மிகவும் நல்ல பையன் என்று பலராலுங் கொண்டாடப்பட்டவன். ஆயினும் தாய் அவனது திருட்டுத்தனத்தை யறிந்து அவனைத் தண்டித்தாள். ஒருநாளும் தண்டனை பெறாதவன், அன்று கோபங்கொண்டு தன்னுடைய கண்ணாடித் தம்ளரை உடைத்துவிட்டான். பின்னர் இரவு சாப்பிடும் வேளை வந்தது விஷ்ணு தனக்கு முன் கண்ணாடித் தம்ளரைக் காணாமல், 'அம்மா, கண்ணாடித் தம்ளர் எங்கே? அதில்தான் ஜலம் பருகுவேன்' என்றான். அதற்குத் தாய் 'நீதானே அதை உடைத்தாய். இப்பொழுது அதை வா என்றால் வந்துவிடுமோ? நான் என்ன செய்வது!' என்றாள். அப்பொழுது விஷ்ணு மிகவும் தன் கோபத்திற்காக வருந்தப்பட்டு, 'அம்மா, எப்படியாவது இன்னொன்று வாங்கித் தாருங்கள். நான் இனி ஒழுங்காய்ப் பள்ளிக்கும் போவேன்; கோபங்கொண்டு எதையும் உடைக்க மாட்டேன்' என, தாய் 'அதுதான் சரி' என்றாள்.

முருகன் — ஆமாம், கோபத்தில் தெரியாமல் உடைத்துப்போட்டான். பின்னால் வருத்தப்பட்டான். இப்படித்தான் நானும் கோபத்தில் ஒரு நாள் அழகான பொம்மை யொன்றை உடைத்து எறிந்துவிட்டேன். பின்னர் வருத்தப்பட்டேன்.

உபா — இன்னமும் வேடிக்கையான கதை யொன்று சொல்லுகிறேன் கவனமாய்க் கேளுங்கள். பிள்ளைகளே, ஒரு ஊரில் ஓர் ஏழை மனித னிருந்தான். (மாதவன் ஆமாம், ஸர், எல்லாக் கதையும் இப்படித்தான் ஆரம்பிக்கிறது. ஒரு ராஜா இருந்தான். ஏழை மனிதன் இருந்தான். ஒரு ஏழைக் கிழவி இருந்தாள், என்று) — ஆமாம், இது அப்படி ஆரம்பித்தாலும் மிகவும் வேடிக்கையா யிருக்கும். ஏழை மனிதன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு நல்ல மனைவி இருந்தாள். ஒருநாள் அவ் வேழை மனுஷன் தன் வேலையை முடித்துச் சாயங்காலம் வீட்டிற்குத் திரும்பினான். அக்காலையில் அவனுக்குப் பசி அதிகம். அவனிடம் ஓர் அணா இருந்தது. வீட்டிற்குப் போனவுடன் நன்றாய்ச் சாப்பிடலாமென்று எண்ணி விரைவாய் நடந்துவந்தான். ஆனால் அவன் வீட்டிற்கு வந்து பார்க்க, அவன் மனைவி அப்பொழுதுதான் சமையல் வேலை ஆரம்பித்திருந்தாள். என்ன செய்வாள் பாவம்! அன்று அவளிடம் யாதொரு காசு மிருந்ததில்லை. சீக்கிரத்தில் தன் புருடனுக்காவது உழக்கு அரிசி எங்கேயாவது பார்த்துச் சமையல் செய்யவேண்டுமென்று அங்கு மிங்கு மலைந்து பார்த்தாள். வெகுநேரம் வரையும் இவளுக்கு வேலைகொடுப்பார் ஒருவரும் இல்லை. கடைசியில் ஒருத்தி வீட்டிற் கூலிக்கு நெற்குத்தி அரைப்படி அரிசி சம்பாதித்து வந்து, அதில் உழக்கு அரிசியை உலையில் இடுமுன் நேரம் அவ்வளவு ஆயிற்று. அந்தோ! அதற்குள் புருஷனும் வந்துவிட்டான். அவள் அஞ்சிப் பதுங்கி நின்றாள். இவன் வந்து, அடுப்பைப் பார்த்த வுடன் அதிக கோபங்கொண்டு 'அடி! மூதேவி! இவ்வளவு நேரம் என்ன செய்தாய்? நான் இப்போது வந்து சேர்வேனென்பது உனக்குத் தெரியாதா? மனுஷன் வேலையொழிந்து களைப்புற்று வந்திருக்குங்காலையில், களை தீர்த்துவிட இயலாதவள் இருந்து என்ன? நீ சமைத்தது போதும். நீ பொங்கித்தந்து நான் தின்னாததுதான் குற்றம்' என்று சொல்லி, பானை சட்டிகள் பலவற்றையும் படபடவென்று உடைத் தெறிந்துவிட்டு, சடுதியாய்ப் பலகாரக் கடைக்குச் சென்று, தன்னிடமிருந்த ஓர் அணாவிற்கும் பலகாரம் வாங்கித் தின்ன ஆரம்பித்தான். பலகாரம் எவ்வளவு நேரம் பசியைத் தாங்கும்? சிறிது நேர-



த்திற்கெல்லாம் மறுபடியும் அவனுக்குக் கடும்பசி உண்டாயிற்று. உடனே விரைவில் நடந்து வீடடைந்தான். வந்து வீட்டைப்பார்க்க, வீடு முழுவதும் ஓடு, ஒரு பானையாவது சட்டியாவது நல்ல நிலையில் இருந்தபாடில்லை. அவன் பெண்சாதி அவனிடம் வந்து 'இருந்த சட்டிபானைகளெல்லாவற்றையும் உடைத்தீர்களே, அந்த உழக்கரிசிதான் அப்படிப் போயிற்று, இருக்கிற உழக்கரிசியையும் பொங்கித் தின்னப் பானையில்லையே, இனி எதிற் பொங்குவது? கையிலும் காசில்லையே; இப்பொழுதே போய் புதுப்பானைகள் கொள்வதற்கு' என, அவன், 'ஒரு பானையாவது இல்லையா? எல்லாவற்றையுமா உடைத்துவிட்டேன்! என்னிடத்திலுங் காசில்லையே, நன்றாய்ப் பார், ஒரு பானையாவது இருக்கிறதா' என்று சொல்லி, அவனும் பார்க்க, இல்லை என்றே தீர்ந்தது. ஐயோ! தன் அடங்காக் கோபத்திற்காக வருத்தப்பட்டான். அன்று பட்டினி. புருஷனும் பெண்சாதியும் சாதம் சமைத்துச் சாப்பிட வழியற்றிருந்தனர். இது நடந்த சங்கதி, பார்த்தீர்களா, கோபத்தின் கொடுமையை?

(இன்னும் வரும்.)

JAMES G. SUNDRAM,
*Asst. Master,*
*The Kellett High School, Madras.*

# LOYALTY

## ராஜ விசுவாசம்

முந்திய பத்திரிகையில் நாம் படித்தபடி, ஒவ்வொருவரும் நாட்டிற்கு நன்மை உண்டாக அரசனை அடைந்து ஜீவிக்கவேண்டியது மாத்திரம் அல்ல, ஒவ்வொருவரும் ராஜாபிமானம் பொருந்தியும் இருத்தல் வேண்டும். இப்படிச் சொல்வதினால் நீங்கள் எல்லோரும் ராஜதுரோகிகள் என நான் சொல்லுவதாய் நினைக்க வேண்டாம். நமது கடமைகளில் முக்கியமானது ராஜாபிமானம் என்பதை நாம் மறந்து போகாதிருப்போமாக. வேதசாஸ்திரம், நீதிசாஸ்திரம் இவைபோன்ற மற்ற நூல்களும் ராஜதுரோகமே

பரவங்கட்கெல்லாம் கொடியதென்றும், ராஜதுரோகியாகு மொருவன் இம்மையிலும் மறுமையிலும் தண்டிக்கப்படுவா னென்றும் முறையிடுகின்றன. தெய்வத்தன்மை யில்லாமல் எவரும் அரசராகமாட்டார்க ளென்பது யாவரும் அறிந்தவிஷயமே. முறை மாறாத அரசினால் ஜனங்கள் அடிமைத்தனம் நீங்கி, சுவாதீனத்தைப் பெறுகிறார்கள். உயிரும் உயிர்க்கு ஆதாரமாகிய செல்வமும் காப்பாற்றப் படுகின்றன. முறையின்மையும் அநியாயமும் நீங்க, சட்டமும் நியாயமும் பரிபாலிக்கப் படுகின்றன. கல்வியும் வர்த்தகமும் இவைகளினால் நாகரிகமும் அபிவிருத்தியாகின்றன. ஒவ்வொருவரும் தம் தம் சொந்த அபிப்பிராயங்களை நிலைநாட்டிப் பேசவும் தமக்கு உரித்தான மதாசாரங்களை ஒட்டி நடக்கவும் கூடும். இவ்விதமான சுகங்களைக் கொடுக்கக்கூடிய இராஜாங்கத்திற்கு நாம் என்றும் நன்றியுள்ளவர்களாயிருத்தல்வேண்டும் நன்றிமறத்தலினும் மிக்கதோர் பாவம் வேறு கிடையாது. எவ்விதக் குற்றஞ் செய்தவனும் கடைத்தேறுவான்; நன்றி மறத்தல் என்னும் குற்றம் செய்தவன் ஒருநாளும் கடைத்தேற மாட்டான்.

‘நன்றி மறப்பது நன்றன்று நன்றலது
அன்றே மறப்பது நன்று’ — என்றும்

‘எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு’

என்றும் பெரியோர் கூறியிருக்கின்றனர்.

அரசாட்சிக்கும் குடிமைக்கும் நல்ல அபிப்பிராயத்தை உண்டுபண்ணுதலும் மற்றொரு முக்கிய கடமையாகும். இதற்குக் கல்வி அதிக அவசியமானது. கற்றிருந்தாலொழிய இராஜாங்கத்தில் நடக்குங் காரியங்கள் இன்னின்னவென்றும், அவற்றின் விஷயமாகத் தான் நடக்கவேண்டிய முறைமை இன்னதென்றும் ஒருவனுக்குப் புலப்படா. இவ்வித அறிவின்மையால் அரசியல் நடாத்துவோர்க்கும் குடிகட்கும் பொருத்தம் உண்டாகாது. அதனால் அநேக தீங்குகளுக்கு இடமுண்டாகும். கல்விகற்ற ஒருவன் குடிகளின் உண்மையான அபிப்பிராயங்களை ராஜாங்கத்தார்க்கும் ராஜாங்கத்தாரது செயல்களின் பலாபலன்களை குடிகட்கும் சந்தேகமும் களங்கமும் உண்டாகாதபடி பழுதற்ற இப் பத்திரிகை போன்ற பத்திரிகைகளின் மூலமாயும் நற்சபைகளின் மூலமாயும் அடிக்கடி விளங்கச் செய்யவேண்டும். போதுமான



கல்வியும் அனுபவஞானமும் இல்லாமல் அகங்காரத்தினால் அரசனுக்கும் குடிகட்கும் வேறுபாட்டைக் கற்பிக்கும் விஷயங்களையும் சாதாரண ஜனங்களுக்குப் பீதியை உண்டாக்கும்படியாக ஆதாரமற்ற சமாசாரங்களையும் புகட்டி, நாட்டிற்கு தீமை விளைவிப்பது மிகக் கொடியதாகும். ஆதலால், அறிவுள்ள ஒருவன் இவ்வகைக் கேடுகள் சம்பவிக்காமல் கூடுமானபோதெல்லாம், அரசிடம் குடிகளுக்கு உண்டாகும் நம்பிக்கைக்குறைவை யகற்றி, ராஜாங்கத்திற்கும் பிரஜைகளுக்கும் நம்பிக்கையும் நல்லிணக்கமும் உண்டாகச் செய்தல் முக்கிய கடமையாகும்.

சமயம் வாய்த்தவிடத்து ராஜாங்கத்திற்குப் பொருள் சகாயமும் படைச் சகாயமும் செய்வதும் குடிகளின் கடமையேயாகும். அயல்நாட்டரசனுடன் சமர்புரிய நேரிடுமாயின், அப்போது அரசன் எத்துணைப் படைத்துணை யுடையவனா யிருப்பினும் குடிகளின் சகாயமின்றி வெற்றிபெறுதல் அசாத்தியமாகும். ஆதலால் சமயம் நேர்ந்தபோது அரசனுக்குப் பக்கத்துணையாக நின்று நாட்டைக் காப்பாற்ற முயலவேண்டும். இதுவிஷயம் நமக்குப் புதிய தல்ல, நமது பூர்வீகர்களும் அப்படிச் செய்திருக்கின்றார்கள். இவற்றை நன்றாய் ஆலோசித்து, நாமும் நமது பிள்ளைகளும் நாட்டிற் நன்மையுண்டாக நடப்போமாக.

S. JESUDASAN,
*C. M. S. Schoolmaster,*
*Santhapuram.*

## PREVENTION OF DISEASES

## வியாதி வாராமல் தடுத்தல்

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்னும் பழமொழி எல்லோருக்கும் தெரிந்ததே. நமக்குவியாதி வருவது ஸகஜமானாலும் நமது அறிவைக்கொண்டு அதைத் தடுத்தல்வேண்டும். ‘வெள்ளம் வருமுன் அணைபோடவேண்டும்’. அதாவது, வியாதிகண்டபின் அதற்காக மருந்துண்டு, அதை ஸௌக்கியப்படுத்திக் கொள்வதைக் காட்டிலும், வியாதி வரவொட்டாமல் முன்னரே தடுப்பது அறிவுள்ளோர்க்கு அழகு.

நமது தேசத்தில் பிரதி வருஷமும் சுமார் இருபது லக்ஷம் ஜனங்களுக் கதிகமாகவே, புத்தியைக்கொண்டு தடுக்கக்கூடிய வியாதிகளால், மரணமடைகிறார்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நமது தேசத்தார் தங்கள் புத்தியை சுகாதாரவிஷயங்களில் செலுத்துவார்களானால், அந்த இருபது லக்ஷம் ஜனங்களும் நோய்க்குள் அகப்படாமல் சுகித்திருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. நமது புத்தியால் நாம் தடுக்கக்கூடிய வியாதிகளாவன —

1. காலரா என்னும் விஷபேதி.
2. டிஸன்டரி என்னும் சீதபேதி.
3. டையரியா என்னும் அஜீர்ணபேதி.
4. ப்ளேக் என்னும் மஹம்மாரி.
5. டைபாய்டு என்னும் விஷஜுரம்.
6. மலேரியா என்னும் குளிர்ஜுரம்.
7. காலிக் என்னும் வயிற்றுவலி.
8. எலிபன்டியாஸிஸ் என்னும் ஆனைக்கால்.
9. ரிங் வர்ம் என்னும் படை.
10. கினி வர்ம் என்னும் நரம்புச்சிலந்தி.
11. இட்ச் என்னும் சொறிசிரங்கு.
12. ஹைட்ரோபோபியா என்னும் வெறிநாய்க் கடி.

மற்றும், பாம்பு வண்டு முதலிய விஷப் பூச்சிகள் தீண்டுதலால் உண்டாகும் வியாதிகள். இத்யாதி வியாதிகளைத் தடுப்பது புத்திமான்களுக்கு ஸர்வஸுலபமெனத் தைரியமாய்ச் சொல்லலாம். மேற்கூறிய வியாதிகள் ஒவ்வொன்றையும் தடுப்பதைப்பற்றி நாம் செய்யவேண்டிய முயற்சியைக்குறித்து அந்தந்த வியாதிகளுக்குப் பிரத்தியேகமாகச் சொல்ல அவகாசம் போதாததினால் முக்கியமான சில அம்சங்களை மாத்திரம் இங்குக் கவனிப்போம்:

காலரா என்னும் விஷபேதி ஸாதாரணமாய் அழுக்குத் தண்ணீரிலேயே உண்டாகி ஓங்கிவளரும் சில விஷப் பூச்சிகளால் பரவுகிறது. இந்த விஷப் பூச்சிகளுக்கு முக்கிய ஆகாரம் அழுக்கே. அழுக்கில்லாவிட்டால் இவை ஆகாரமின்றி நசித்துப்போகும். இந்த விஷப் பூச்சிகள் ஸம்பந்தப்பட்ட ஜலத்தை உபயோகிப்போர் எல்லோருக்கும் காலரா உண்டாகக் கூடும். அதனால்தான் ஆற்றங்கரை யோரத்தி லிருக்கும் ஓர் ஊரில் அவ்வியாதி கண்டால், அந்த ஆற்றோரத்தி லிருக்கும் ஒவ்வொரு ஊரிலும் அவ்வியாதி பரவுகிறது. அப்படியே ஒருவியாதியஸ்தனுக்கு உபயோகப்படுத்தின பாத்திரத்தைக்கொண்டு ஊர்ப்பொதுக் கிணற்றில் ஜலம் மொள்ளப்பட்டால், அக்கிணற்றில் விஷப் பூச்சிகள் ஸம்பந்தப்பட்டு அந்த ஜலத்தை உபயோகப்படுத்துகிற ஒவ்வொருவருக்கும் அந்த வியாதி காணநேரிடும்.



மஹம்மாரி, விஷஜுரம், மலேரியா முதலிய எல்லாத தொத்து வியாதிகளும் இவ்வாறே உண்டாகின்றன. ஆனால், நாம் நமது புத்தியை உபயோகப்படுத்தி நம்முடைய இருப்பிடத்திற்கு அருகிலும் நாம் உபயோகிக்கும் ஜலத்திற்கு அருகிலும் மலம் முதலிய அழுக்குக ளில்லாமல் பார்த்துக்கொள்வோமானால், ஒருகால் அவ்விஷப் பூச்சிகள் வேறு இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டாலும் இங்கே ஆகாரமின்றி அவை நசித்துப்போகும் என்பதற்கு சந்தேகமில்லை. ஆகையால் தமது உபயோகத்திற்காக ஏற்பட்டிருக்கிற ஜலாதாரத்தைச் செவ்வனே பாதுகாத்துக் கொள்வது நமது கடமை.

ஜனங்கள் புத்தியீனத்தால் அப்படிப்பட்ட வியாதியஸ்தனுடைய துணிகளையும் பாத்திரங்களையும் பொதுக்கிணற்றில் அல்லது குளத்தில் சுத்திசெய்வதனாலும், மலங்களை 'டிஸின்பெக்டெண்ட்' என்று சொல்லப்படுகிற விஷத்தைக் கொல்லும் மருந்துகளைக் கலந்து ஒன்று சேர்த்து கொளுத்திவிட அல்லது ஆழத்தில் புதைத்துவிட வேண்டியிருக்க, அப்படிச் செய்யாமல் அஜாக்கிரதையாய் இருந்து விடுகிறதினாலும், தமக்கும் தம்மைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றுமுள்ளோர் பலருக்கும் அவ்வியாதி உண்டாகச் செய்கிறார்கள்.

விஷபேதியும், மஹம்மாரியும் ஏறக்குறைய ஒரேமாதிரியான தொத்துவியாதி என்றாலும் அவையிரண்டிற்கும் ஒருமுக்கிய வித்தியாசமுண்டு. விஷபேதி முக்கியமாய் ஜலஸம்பந்தத்தினாலும் மஹம்மாரி ஸ்தலஸம்பந்தத்தினாலும் பரவுகின்றன. அதனால் ஓர் ஊரில் விஷபேதி உண்டானால், அது இன்றைக்கு ஊர்வடக்குக் கோடியில் ஒருவனுக்குக் காண்கிறதும், நாளைக்குத் தென்கோடியில் ஒருவனுக்குக் காண்கிறதுமா யிருக்கும். அதாவது அந்த

ஜலத்தை யார் உட்கொள்ளுகிறார்களோ அவர்கள் அவ்வியாதிக்கு உள்ளாகிறார்கள். மஹாமாரியோ அப்படியல்ல. விஷப் பூச்சிகள் முக்கியமாய்த் தரையிலும் சாமான்களிலும் தங்குவதால் அவ்விடத்திலிருந்து அவை தினேதினே நாலாபக்கங்களிலும் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பரவி, அவ்விடத்தில் வசிப்பவர்களுக்கே காணும். ஆகையால், விஷபேதியைக் காட்டிலும் மஹாமாரி குரூரமானதானாலும் சுலபமாய் அடக்கக்கூடியதாய் இருக்கும்.

விஷப் பூச்சி சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் வியாதி காணவேண்டியிருக்க ஏன் அப்படிக் காண்கிறதில்லை என்று சிலர் கேட்கக்கூடும். விஷப் பூச்சி சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருடைய தேகத்திலும் அவ்விஷப் பூச்சிகள் விருத்தியாகி ஒருவகை விஷத்தை உண்டாக்குகிறது. உடனே சுவாமி கிருபையால் நமது உடலில் ஒருவித மாறு விஷம் உண்டாகி, அவ்விஷத்துக்கும் மாறு விஷத்துக்கும் ஒரு யுத்தம் நமது உடலில் நடக்கிறது. விஷப் பூச்சிகளின் விஷம் அதிகரித்தால் நாம் வியாதிக்குள்ளாகி மரணமடைகிறோம்; மாறு விஷம் அதிகரித்தால் வியாதியற்று நாம் சுகப்படுகிறோம். ஆகையால்தான் விஷப் பூச்சி சம்பந்தப்பட்டாலும் சிலர் அவ்வியாதியால் வருந்துகிறதில்லை.

விஷஜுரம் நரம்புச்சிலந்தி படர்கடிப்படை முதலியவைகளும் சாதாரண ஜுரமும் அநேகமாய் ஜலஸம்பந்தத்தினாலேயே உண்டாகிறபடியால் விஷபேதிக்குச் சொன்ன காரணங்களே அவைகட்கும் ஏற்றவை யென்று பாவிக்கலாம்.

சொறி, சிரங்கு, கண்ணோய், ஜலதோஷம் முதலிய சாதாரணத் தொத்து வியாதிகளும் காலரா மஹாமாரி முதலிய குரூரத்தொத்து வியாதிகளும் ஒருவனுக்குக் காணுமானால் அவனைப் பிரத்தியேகமாக தூரத்தில் வைத்து, அவனைப் பாதுகாக்கும் பொருட்டு ஒருவர், இருவருக்குமேல் அவனோடு ஸம்பந்தப்படாமலும் மற்றெவரும் அவர்களோடு சேராமலும் இருத்தலே உத்தமம்.

மேற்சொல்லிய தொத்துவியாதிகளைப் பரவச்செய்யும் கருவிகள், காற்று, ஜலம், தரை, வியாதிஸ்தன் உபயோகித்த பாத்திரம், துணி, படுக்கை முதலியவைகளாதலால், வியாதியஸ்தன் இருக்கும் அறையில் புதியகாற்று நுழையும்படிக்கும் பழைய காற்று வெளிப்படும்படிக்கும், கதவு,பலகணிகளைத் திறந்து வைத்துக்கொண்டிருக்கவேண்டும். அறையில் காற்று அசுத்தமாகும்



படிக்கு அநேகர் வியாதியஸ்தனைச் சுற்றிக்கொண்டிருத்தல் கூடாது. வியாதி கண்ட வீடுகளிலுள்ள கிணறுகளையும், ஊரிலுள்ள பொதுக் கிணறுகளையும் ஒரு டாக்டர் அல்லது ஸானிடெரி உத்தியோகஸ்தரைக் கொண்டு பெர்மாங்கனேட் ஆப் பொட்டாஷ் என்னும் மருந்தைப் போட்டு சுத்தி செய்த பிறகு, கிணற்றின் ஜலத்தைச் சுமார் 24 மணிநேரம் உபயோகிக்கலாகாது. நாம் குடிக்கும் ஜலத்தை நன்றாய்க் கொதிக்கவைத்து ஆற்றி அருந்தவேண்டும். கொதிக்கிற ஜலத்தில் குளிர்ந்த ஜலம் விட்டு ஆற்றுவது ஒருபோதும் கூடாது. தரையையும் சுவர்களையும் சுத்திசெய்வதற்கென்று ஆஸ்பத்திரியில் கொடுக்கப்படுகிற பெர்க்ளோரைட் ஆப் மெர்குறி லோஷன் என்று சொல்லப்படும் பாஷாண திராவக ஜலத்தை வாங்கி, வீடு சுவர் கூரை முதலிய எல்லாவற்றையும் நன்றாய் நனையும்படி கழுவவேண்டும். அப்படிக் கழுவி ஆறினபிறகு சுண்ணாம்படித்தல் நலம். சாதாரணமாய் நம்மவர்கள் ஒரு வீட்டுக்குச் சுண்ணாம்பு அடிக்கவேண்டுமானால் சுண்ணாம்பை முதல்நாள் ஜலத்தில் போட்டு மறுநாள் சுண்ணாம்பு அடிக்கிறது வழக்கம். அப்படிச் செய்வதினால் சுண்ணாம்பு அடித்தலின் குணம் அற்றுப்போய்விடுகிறது. ஆகையால், சுண்ணாம்பை ஜலத்தில்போட்டுக் கரைத்தவுடனே உபயோகித்தால் அதின்காரம் வீணாகாமல் கொஞ்சநஞ்சமிருக்கிற விஷப் பூச்சிகளும் அழுக்கும் அற்றுப்போம். பாத்திரங்களை உலையில் காய்ச்சி, சுத்திசெய்யவேண்டும். துணிகளையும் படுக்கையையும் சாதாரணமாய்க் கொளுத்தி விடுகிறதே உத்தமம். அப்படிக் கொளுத்திவிடக் கூடாதவைகளைக் கொதிக்கிற ஜலத்தில் அல்லது வெள்ளாவியில் நன்றாய் வேகவைத்துத் தோய்த்து வெய்யிலில் உலர்த்தி உபயோகிக்கலாம். தானியம் முதலியவைகளையும், ஜலத்தில் நனைக்கக்கூடாதவைகளையும், விலையுயர்ந்த ஆடைகளையும் குறைந்தபக்ஷம் 8 மணி நேரமாவது வெய்யிலில் உலர்த்தி (தானியங்களைப் பரப்பியும் துணிகளை விரித்தும் வைத்துப்போட்டு) அப்பால் உபயோகிக்கலாம்.

(இன்னும் வரும்.)

S. K. VENKOBA IYER,
*Head-master, Board School,*
*Pakkam.*

# TEACHIN ; NOTES

## போதனைக் குறிப்புகள்

வாசக பாட புத்தகங்களில் அமைத்துள்ள ஒவ்வொரு வாக்கியத்திற்கும், ஒவ்வொரு படம் அமைத்திருப்பது மிக்க சிலாகிக்கக்கூடியதே. ஒவ்வொரு வாக்கியத்திற்கும் ஒவ்வொரு படமிருப்பதனால் படங்களை மட்டும் பார்த்தும், வாக்கியங்களைப் பாராமலும் குட்டிப்பாடமாகப் படிக்க நேரிடுமென்றாலும், வாக்கியத்தைக் கவனித்து வாசிப்பது, வாசிக்கச் செய்வோரைப் பொருத்ததே. படங்களிருப்பதனால் பிள்ளைகள் அவ்வாக்கியங்களை மிக்க உற்சாகத்தோடு படிப்பார்கள். மேன்மேலும் படிக்க உற்சாகமூட்டுவதே உபாத்தியாயர்கள் கடமையாகும்.

முதலில் பொது அறிவு சம்பந்தமான (பிராணிகள் முதலிய) பாடமும், அடுத்து அவை சம்பந்தப்பட்ட கதையை அமைத்து, அவற்றின் தன்மைகளையும் குணகுணங்களையும் விளக்கி விவரித்தல், பிள்ளைகள் பிரத்தியக்ஷமாகத் தெரிந்து கொள்வதற்கு ஏற்ற சாதனமே. அவற்றைப் பற்றிய விஷயங்களை ஞாபகத்திலிருந்த பாட்டுகளை அமைப்பது — அமைந்திருப்பது மிக்க சிலாக்கியமாகும். சிறுவர்கட்குப் பாட்டுக்களில் அதிக பிரீதியென்பது பிரத்தியக்ஷ அனுபவமாகும்.

பாடங்களில் வரும் பொருள்களையே, சித்திரம் வரையப் பழக்குவதிலிருந்தும், ஒரு பொருளிலிருந்தே அமைப்பு, தன்மை, ஒழுக்க வழக்கங்கள் முதலியவையும்; அவற்றின் சம்பந்தமாகவே கதையும் பாட்டும் சித்திரமும் வேறு பல பாடங்களும் நடத்துவதினால் 'புற்றிலிருந்து ஈசல் புறப்படுவது போலும்' ஒன்றிலிருந்து ஒன்பது என்பது போலும், ஒன்றிலிருந்து எத்தனை பாடங்கள் — விஷயங்கள் புறப்படுகின்றன — ஏற்படுகின்றன என்னும் உற்சாகந் தோன்றும். சித்திரம் வரையச் செய்வதை வகுப்புக்கேற்ப வரிவடிவமாயும் மொத்தாகாரமாயும் எழுதச் செய்தல் உசிதமாகும். மிகச் சின்னஞ் சிறுவர்கள் வரிவடிவமாய் எழுதப்புகின் மிகக் கடினமாவதன்றியும் வரிவடிவமாக உருவம் அமைவதும் — அமைக்கச் செய்வதும் முடியாத விஷயம். உருவங்களை மொத்தாகாரமாய் (வரைந்து) தித்திக் காட்டித் தீற்றச் செய்யின்



மிக இலகுவாக அமைத்து விடுவார்கள். இது எமது அனுபவமாகும். இவ்வகை முதல் இரண்டாவது வகுப்புக்களுக்கு ஏற்றது ஆகும். மூன்றும் வகுப்பிலிருந்து வரிவடிவமாய் எழுதச் செய்வதும் உசிதமாகும்.

பாட்டுகளுக்குச் சுரங்கள் குறிப்பதோடு, அம் மெட்டுகளையுடைய வேறு பாட்டுகளின் தலைப்புகளையும் குறித்திருத்தல் நலம்; பாட்டுகள் வசனநடையைத் தழுவி மிகத் தெளிவாக இருத்தல் நன்று. எதுகை மோனைகள் பொருந்த வரும்படி அமைத்திருப்பின் பாடுவதற்கு இலகுவாகவும் இன்பமாகவும் இருக்கும்.

P. பரிமணப்பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர் சோலை, P. O., திருச்சி ஜில்லா.

# NATURE STUDY LESSON

## இயற்கைப் பொருட்பாடம்

பரமஞானியாகிய கடவுள் மனிதரை எதற்காக சிருஷ்டித்தாரெனில், "தம்மை அறிந்து சிநேகித்து, சேவிக்கவும், இவற்றின் பலனாக மோக்ஷசாதனத்தை யடைந்து கொள்ளவுமே. இதுதான் கடவுளுடைய நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றாவிடில் கடவுளின் தண்டனைக்கு ஆளாகவேண்டும். நல்லது, கடவுளை எவ்வாறறியலாம்? அவரை யறியக் கல்வியே துணை. கல்வியில்லாத மாந்தர் கேவலம் விலங்கினத்திற்கு ஒப்பாவர்; இது பற்றியன்றோ,

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என நாயனாருங் கூறியுள்ளார். ஆதலால், கல்வியானது மானிடருக்கு எல்லாவிதத்திலும் மிகவும் அவசியமென்பது தெற்றெனப் புலப்படுகின்றது.

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகாது" அதுபோல, 'மனம் படியப்பெறாத கல்வியால்' தினைத்துணையேனும் பயனில்லை. ஆகவே

கல்வி கற்பதின் நோக்கம், தூர்க்குணங்களை யறவே யொழித்து, நற்குணங்களை யுள்ளத்திற் பதித்து, எல்லாம் வல்ல இறைவனை யறிந்து, அவரது ஆஞ்ஞைப்படி நடப்பதேயாம். இயற்கைப் பொருட்களை உற்று நோக்கி, ஆராய்ந்தறிந்து, காரணங்களை நன்கு உணர்ந்து, அவற்றின் மூலமாய்க் கடவுளின் சிருஷ்டி மகிமையை யோர்ந்து, நமக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்துவரும் கருணைக்கடலான சர்வேசுவரனைத் துதித்தலே இயற்கைப் பொருட்பாடத்தின் முக்கிய நோக்கமாகும்.

இளமையிலேயே இயற்கைப் பொருட்களின் தன்மையை உற்று நோக்கி ஆராய்ந்தறியும் பழக்கமின்றேல், பிற்காலத்தில் எவ்வாற்றானும் இந்த நற்பழக்கம் உண்டாகாது. ஆதலால், இளம் பிராயத்திலேயே உற்று நோக்கும் சக்தியை சிறுவர்களுக்கு விருத்தி செய்விக்கவேண்டும். பாலர்களுக்கு எவ்வண்ணம் 'இயற்கைப் பொருட்பாடத்தை' உபதேசம் செய்யவேண்டுமென்பதைப் பற்றி என் சிற்றறிவுக் கெட்டியமட்டில் சில சொல்லுகின்றேன்.

சகோதரர்களே! பாலர்களுக்குக் கற்பிக்கும் கல்வியானது, அவர்கள் பிற்காலத்தில் படித்துணர்ந்துகொள்ளும் விஷயங்களுக்கும், அவர்கள் வேறுவகையில் பெற்றுக்கொள்ளக்கூடிய அறிவுக்கும் அஸ்திவாரமா யிருப்பதினால் அது 'மூலாதாரக் கல்வி' (Elementary Education) எனப்படும். அஸ்திவாரம் பலமா யிருந்தாலன்றி, பெரிய கட்டடம் கட்ட இயலாதன்றோ? அவ்வாறே பாலர்களுக்குக் கற்பிக்கப்படுங் கல்வியும் ஸ்திரமானதா யிராவிடின் பிற்காலத்தில் யாதொரு பயனையும் பயக்கமாட்டாது.

ஐரோப்பியர் இயற்கைப் பொருள்களை உற்று நோக்கி ஆராய்ந்தறிவதில் எவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். தேர்ச்சி பெற்றிருந்தனரெனில், அவர்கள் உலகம் வியந்து கூறுமாறு பல அரிய கட்டடங்களையும் பல அற்புதமான யந்திரங்களையும் கண்டுபிடித்துச் செய்து, உலகில் என்றும் அழியாப் புகழுடம்பைக் கொண்டனர் — கொள்ளுகின்றனர் — இனியும் கொள்ளுவார்களெனவுங் கூறலாம். முற்காலத்திலிருந்த நம் நாட்டுக் கவிஞர்களும் இயற்கை வஸ்துக்களைக் கவனித்து, ஆராய்ந்திருக்கின்றனரென்பதை அவர்களியற்றியுள்ள செய்யுட்களில் மலிந்துள்ள உவமைகளும் உதாரணங்களும் நன்கு புலப்படுத்தும். தற்காலத்தில் இவ்வருமையான குணம் 'அத்தி பூத்ததுபோல்' ஒருவரிருவரிடத்துக் காணப்படுகின்றது.



ஏன் நமது நாட்டினரிடம் இவ்வரிய குணமானது குறைந்தும் ஐரோப்பியரிடம் நிறைந்து மிருக்கின்றதென்றால்:— ஐரோப்பியர் சிறுபிள்ளையா யிருக்கும்போதுகூட, தன்னிச்சையாய் எங்கும் ஓடியாடித் திரிந்து, அங்கங்குள்ள பூச்சி புழுக்களைப் பிடித்து அவைகளை உற்று நோக்கி ஆராய்ந்தறிகின்றனர். தாங்கள் கண்ட அதிசயங்களை நண்பர்களிடமும் பெற்றோர்களிடமும் நவில, அவர்கள் இவர்களைப் புகழ இவர்கள் உற்சாக மேலீட்டால் மேலும் மேலும் இந்த அற்புத குணத்தைக் கையாடுகிறார்கள். தெரியாத விஷயங்களைப் பெற்றோரிடமாவது, உபாத்தியாயரிடமாவது கேட்டுத் தெரிந்துகொள்ளுகின்றனர். நம் நாட்டிலுள்ளவர்களிடம் இக்குண மிருப்பது மிகவும் அருமை. சிறுவர்களை யதேச்சையாய் விளையாடவும் விடார்கள். தப்பித்தவறி ஏதாவது புழுப்பூச்சிகளைக் கண்டால் பயந்து ஓடுகின்றனர். அல்லது அவற்றைப் பிடித்து வருத்துவார்களேயன்றி அவற்றின் அவயவ அமைப்பையும் குணகுணங்களையும் கவனித்தறியார். ஏதாவது விநோதமான பூச்சியையாவது செடியையாவது பெற்றோரிடம் காட்டினால், "அடா அசிங்கம்பிடித்தவனே, இதைத் தொடலாமா, கீழேபோடு கீழேபோடு" என்கின்றனர். இவ்வாறு சொன்னால் மறுபடி அவர்கள் எதையாவது கவனிப்பார்களா? யோசித்துப் பாருங்கள். வீட்டில்தான் இப்படியென்றால், பிள்ளைகளின் உற்று நோக்கும் சக்தியையும் ஆராய்ந்தறியும் சக்தியையும் விருத்தி செய்யக்கூடிய உபாத்தியாயரிடத்திலுங்கூட சில சந்தர்ப்பங்களில் இவ்வாறு நடைபெற நேரிடுவது மிக்க துக்கமான காரியமேயாம். இயற்கைப் பொருட்பாடம் போதிக்கும் சில உபாத்தியாயர்கள் தங்களுக்கு நன்றாய்த் தெரிந்துள்ள ஏதாவதொரு வஸ்துவைப் பற்றித்தான் போதிப்பார்கள். இது அவ்வளவு உசிதமாகாது. இயற்கைப் பொர்ருட்பாடத்திற்கு வேண்டிய பொருட்களை உபாத்தியாயர் தேர்ந்தெடுப்பதினும் பிள்ளைகள் கொண்டுவரும் பொருட்களைப்பற்றிக் கற்பிப்பதே உசிதம். சில சமயங்களில் பிள்ளைகள் கொண்டுவருகிற பொருட்களைப்பற்றி உபாத்தியாயருக்கே நன்றாய்த் தெரியாமலிருக்கலாம். அவ்வமயங்களில் 'அடே இதைப்பற்றி இப்போது என்ன, உடனே இதை தூர எறி' என்று சொல்வார்கள். இது மிகவும் தவறாகும்.

இப்படிச் செய்வதினால் பிள்ளைகளின் ஊக்கங் குன்றி உள்ளதும் போய்விட நேரிடும். ஆதலால் இயற்கைப் பொருட்களின் ஆராய்ச்சியை உபாத்தியாயர்கள் நன்கு உணர்ந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். அதனோடு பாலரையும் இவ் விஷயத்தில் தேற்றுவித்தல் வேண்டும்.

இயற்கைப் பொருட்களை உற்று நோக்கி ஆராய்ந்தறிந்து பழகுவதால், அவற்றின் அமைப்பும் பேதாபேதங்களும் அவற்றின் காரணங்களும் செவ்வனே புலப்பட இவ்வஸ்துக்களை இவ்வண்ணம் சிருஷ்டித்துத் தமது சிருஷ்டி மகிமையை யுணரா ஏனையருக்கும் நற்புத்தி புகட்டும் கடவுளின் தன்மை ஒருவாறு விளங்க, அப்பரம பிதாவின் அணைகடந்த ஞானத்தையும், உலக விசித்திர அமைப்பையும் உணர்ந்துகொள்ளவும் இடமேற்படுவதால் இது மிக முக்கியமான பாடமென்றே மொழிதல் வேண்டும். ஆதலால் 'இயற்கைப் பொருட்களின் ஆராய்ச்சியை' இளமையிலேயே பயிற்றல்வேண்டும்.

நமது நாட்டினரில் பெரும்பாலோர் குருட்டு நம்பிக்கையுடையவர்களாயும் இயற்கை வஸ்துக்களின்மீது பிரீதியற்றவர்களாயு மிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. யார் என்ன சொன்னாலும் இது இப்படி நடக்குமாவென ஆராய்ந்துணராது, அவர்கள் வாக்கில் எவ்வளவு அபத்த முள்ளதானாலும் அதனை நம்புகின்றனர். மற்றும் அன்றன்று நடைபெறுகின்ற மிகவும் சாதாரணமான விஷயங்களைக்கூட கவனிக்கிற குணமும் கிடையாது. இது நகைக்கத்தக்க விஷயமேயன்றோ? ஏன் இவர்கள் இந்த விதமான சுபாவமுடையவர்களா யிருக்கின்றனரெனில்: சிறுவயதில் இந்த விஷயத்தைக் கவனியாமல் விட்டதினாலேயே. ஆதலால், சிறுவர்களிடம் இந்த அருங்குணங்கள் பசுமரத்தாணி போற் பதிய உபாத்தியாயர்கள் கவனித்து உழைப்பார்களேயாகில் நமது நாடு நன்றாகு மென்பதி லாக்ஷேபமில்லை.

இயற்கைப் பொருட்களைக் கண்ணுக்கு முன்வைத்து அவற்றின் பல விஷயங்களை ஐம்புலன்களைக் கொண்டு ஆராய்ந்தறியாமல் எவ்வளவுதான் சாதுரியமாகக் கற்பித்தாலும், அது 'இயற்கைப் பொருட்பாட' மாகவே யாகாது. அப்படியே அணிலைப் பற்றிய இயற்கைப் பொருட்பாடம் நடக்கும்போது, அணிலின் படத்தையோ, பிரதிமையையோ உபயோகித்து எவ்வளவு நன்றாகக் கற்பித்தாலும் அது இயற்கைப் பொருட்பாடமாக மாட்டாது. சிலர் இயற்கைப்பாடமென்று எடுத்துக்கொண்டு பிள்ளைகளின் வயதையும், அறிவையுங்கூடக் கவனியாது தங்களுக்குத் தெரிந்த விஷயங்களையெல்லாம் உபந்நியாசமாக மொழிந்து விடுவர். இதுவும் சரியான முறையன்று. இயற்கைப் பொருட்களைப் பற்றிய நுட்பமான விஷயங்களையெல்லாம் கற்பிக்கவேண்டுமென்பது அனாவசியம். தம்மைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருட்களின்மீது பிரீதியும் ஊக்கமும் உண்டாகச் செய்வதே இப்பாடத்தின் கருத்து. பாலர் தாமாக ஒவ்வோர் 'இயற்கைப் பொருட்களின் காரணகாரியங்களையும் முறையே ஆராய்ந்தறிந்து பல வஸ்துக்களைப்பற்றிக் கற்றபின், இயற்கைப் பொருட்களின் ஒற்றுமை வேற்றுமை முதலியவற்றையும் அறிந்துகொள்ளுவார்கள்.



'இயற்கைப் பொருட் பாடத்துக்கு வேண்டிய பொருட்களை உபாத்தியாயரே தேர்ந்தெடுப்பதினும் பிள்ளைகள் கொண்டுவரும் பொருட்களைப்பற்றிக் கற்பிப்பதே உசிதம்' என முன்பு கூறினேனன்றோ? இவ் விஷயத்திலும் கவனிக்கக்கூடிய விஷயங்கள் சிலவுண்டு. மாணவர் கொண்டுவரும் பொருட்களைப்பற்றிப் போதிக்க அது காலமா? அப்பொருட்களைப்பற்றிப் போதிப்பதால் பாலரின் உற்றுநோக்கும் சக்தியும், ஆராய்ந்தறியும் சக்தியும் விருத்தியாக இடமுண்டா? என இவை முதலியவற்றைக் கவனித்து, சமயோசிதமாய் நடத்தவேண்டியதே போதகர் கவனிக்கவேண்டிய விஷயமாகும். ஒரு பையன் இறந்துபோன ஓர் பறவையை பாடசாலைக்குக் கொணர்கிறானென வைத்துக்கொள்வோம். அந்த சமயத்தில் பறவையின் நடமாட்டம், பழக்க வழக்கங்கள் இவற்றைப்பற்றி உபாத்தியாயர் விமரிசையாய்ப் பாடம் நடத்தியபின், பறவையைப் பற்றி நல்ல இயற்கைப்பாடம் நடத்தியதாக எண்ணுவாராயின் அவர் மடமையை உடைமையா யணிந்தவரே. ஏனெனில், இயற்கைப் பொருட் பாடத்தினால் விருத்தியாகவேண்டிய உற்று நோக்கும் சக்தி ஆராய்ந்தறியுந் தன்மை முதலியவை விருத்தியாகவில்லை. விருத்தியாக இடமுமில்லை. ஆகவே இவ்விஷயத்தில் புத்தியைச் செலுத்தி; கால வேறுபாடு, பொருள் வேறுபாடு ஆகிய இவைகளைக் கவனித்துப் பிரத்தியக்ஷப் பிரமாணங்களைக்கொண்டு நடத்தவேண்டும்.

பொருட்களை நேரில் வைத்துக்கொண்டுதான் இப் பாடம் போதிக்கவேண்டும் என்றால், நமது நாட்டிலில்லாத இதர இயற்கைப் பொருட்களைப் பற்றியே கற்பிக்கக்கூடாதா? என சிலர் வினவலாம். அந்நிய நாட்டிலுள்ள இயற்கைப் பொருட்களைப் பற்றிக் கற்பிக்கவே கூடாதென யான் கூறவில்லை. தெரிந்ததிலிருந்து தெரியாததைக் கற்பிக்கவேண்டியதுதான் உத்தமமான போதனை யென்பதை யெவரும் மறுக்கார். ஆகவே இப்பாடத்தில் பாடசாலை உள்ள ஊரில் அகப்படக்கூடிய இயற்கைப் பொருட்களைப்பற்றி முதலில் செவ்வையாய்க் கற்றுக்கொடுத்துப் பிள்ளைகளின் உற்றுநோக்கும் சக்தியையும், ஆராய்ந்தறியும் சக்தியையும் விருத்திசெய்யவேண்டும். இவை நன்றாய்ப் போதிக்கப்பட்டபின், அவ்வியற்கைப் பொருட்களைப் பார்த்து 'சித்திரம்' எழுதக் கற்பிக்கவேண்டும். இப்படிப் பழகுவதால் படத்தைப் பார்த்தவுடனே அந்தந்த பிராணிகள், தாவரங்கள் முதலியவற்றைப் பற்றிய ஏறக்குறைய எல்லா அம்சங்களையும் நாளடைவில் உணர்ந்துகொள்ளும் சக்தி மாணவருக்குத் தானாகவே உண்டாகிவிடும். இதன் பின்னர் இதர நாட்டின் இயற்கை வஸ்துக்களைப்பற்றிக் கற்பிக்கலாம்.

இப்பாடம் கற்பிக்க 'உல்லாஸப் பிரயாணம்' (Excursion) 'தோட்டம்' 'சித்திரம்' இவை இன்றியமையாத சாதனங்களாம். மேல் வகுப்புக்களில் நடத்திய இயற்கை வஸ்துக்களைப் பற்றி வர்ணித்து 'வியாஸம்' எழுதவும் கற்பித்தல், மிக்க மேன்மையானதும் மெச்சத்தக்கதுமான விஷயம். இது எவ்வளவு உசிதமானதென யானுரைக்காமலே யுணர்ந்துகொள்ளலாம்.

இயற்கையில் மாறுபாடுகள் உண்டு. அவை: (1) வெளிப்படையான மாறுபாடுகள். (2) சூக்ஷ்மமான மாறுபாடுகள். இவற்றில் வெளிப்படையான மாறுபாடுகளைத்தான் முந்த முந்த கவனிக்கச்செய்யவேண்டும். சூக்ஷ்மமான மாறுபாடுகளை நாளடைவில் கவனிக்கச்செய்யலாம். பின்வரும் விஷயங்களைக் கவனிக்கச்செய்து மேல்வகுப்புப் பிள்ளைகளை இவ்விஷயங்களைப்பற்றிக் குறிப்பு எழுதிவரச் செய்யலாம். அவை வருமாறு:—

1. பூமியைப்பற்றிய விஷயம் — பலவகைக் கற்கள், மண், மணல் முதலியவைகளைச் சேகரித்து மியூஸியத்தில் வைக்கச்செய்து, அவற்றைப்பற்றி விவரமாக அறிந்துகொள்ளல்.



2. ஆகாயத்தைப்பற்றிய விஷயம் — சீதோஷ்ணஸ்திதி, காற்றின் திசை, வேகம், சூரியனின் ஸ்தலமாறுதல், மேகங்களின் வகைகள், சந்திரனின் மாற்றம், நக்ஷத்திரங்கள் முதலியன. (வாயுமானி, உஷ்ணமானி, காற்றுக்காட்டி, திசைகாட்டி, வர்ஷமானி, இவைகளைச் சுலபமாய் நாமே செய்துகொண்டு, உபயோகிக்கும் விதம் முதலியவைகளையும் போதிக்கலாம்.)

3. தாவரங்களைப்பற்றிய விஷயம் — தோட்டக்குறிப்பு எழுதச் செய்தல்; (அந்தந்த மாதங்களில் அகப்படக்கூடிய பழங்களைக் குறிப்பு எழுதவும் மரம் செடிகளைப் பார்த்தவுடனே இன்ன மரம் இன்ன செடியென்று சொல்லக் கற்பிக்கவேண்டும். பழங்களை உண்ணச் செய்யலாம், புஷ்பச் செடிகளைப்பற்றியும் அவ்வாறே, அந்தந்த மாதங்களில் கிடைக்கக்கூடிய புஷ்பங்களைப் பற்றியும் எழுதலாம். இலை உதிர்தல், துளிர்த்தல், புஷ்பித்தல், காய்த்துப் பழுத்தல் இவைகளையும் கவனிக்கச் செய்யலாம். விதைகளைச் சேர்த்தும், இலை, பூ, வேர், பட்டை முதலியவற்றைச் சேகரித்தும் மியூஸியத்தில் வைக்கலாம்.)

4. பிராணிகளைப்பற்றிய விஷயம் — செல்வப் பிராணிகளை வளர்த்துக் கவனித்தல், பறவைகள், கூடுகட்டல், முட்டையிடல் முதலியன. ஊர்வன, மீன், நண்டு, நத்தை, வண்ணாத்திப்பூச்சி, சிலந்தி ஆகியவை. (இப்பாடங்களில் சமயோசிதமாய் 'உல்லாஸப் பிரயாணத்தை' (Excursion) உபயோகிக்கவேண்டும். பறவைகளின் முட்டைகள், கூடுகள், அலகுகள், நகங்கள், பிராணிகளின் எலும்புகள் இவைகளைச் சேகரித்து மியூஸியத்தில் வைக்கலாம்.)

சகோதரர்காள்! கண்டுமிக சொற்ப விஷயங்களைமட்டும் குறித்தெழுதியுள்ளேன். இவற்றை மட்டும்தான் போதிக்க எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதல்ல இடம் பொருள் ஏவல் இவைகளைக் கவனித்தும் அந்தந்த வகுப்பு மாணவரின் சக்திக்கும் புத்திக்கும் ஏற்றவாறும் காரியங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். அடிக்கடி பாட சம்பந்தமாக வெளியிடங்களுக்கு கூட்டிக்கொண்டுபோய் அங்குள்ள இயற்கைப் பொருட்களை உற்று நோக்கச்செய்து பாடசாலைக்கு வந்தபின் அவ்வியற்கைப் பொருட்களைப்பற்றி வியாஸம் எழுதச்செய்வதை மேல் வகுப்புப் பிள்ளைகள் மேற்கொள்ளச் செய்தல் வேண்டும்.

கடைசியாய், இயற்கைப் பொருட்பாடத்தைச் செவ்வையாய்க் கற்பித்ததில் பல்ஞகப் பிள்ளைகளின் மனே சக்திகளை விருத்திசெய்து, இயற்கை வஸ்துக்களின் விசித்திர அமைப்பு, தோற்றம் முதலியவைகளால் பரமஞானியாகிய சர்வேசுவரனின் சிருஷ்டி மகிமையையும், இப்பொருட்களெல்லாம் நமது உபயோகத்தின் பொருட்டே இவ்வண்ணம் அவரால் ஆக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், நமக்குப் பல்விதங்களால் நன்மை செய்துவரும் கருணைசமுத்திரமான கடவுளை யறியவும், அவரை எல்லாவற்றையும்விட மேலாக நேசிக்கவும். அவரின் இன்னருள் பெற்று இறுதியில் மோக்ஷசாதனத்தை யடையவும் வேண்டியதே. உலகில் உதித்த மானிடரின் கதி என்பதையும் நன்கு புகட்ட வேண்டியதே. இந்தப் பாடத்தினுடைய நோக்கமாகக் கொண்டு நடத்தவேண்டும். ஆதலால், இவ் வியற்கைப் பொருட்பாடத்தை மற்றைய பாடங்களினும் நன்கு போதித்து மாணவரைச் சீர் திருத்தும்படி எல்லாம் வல்ல இறைவன் கருணைபுரியுமாறு மன்றுடுவோமாக.

M. அடைக்கல சாமி,
ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல், திருநரையூர்.



நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 14 | 1918ஞ அக்டோபர்மீ | மாதம் 5

## GARLAND OF VERSES — LOTUS

### தாமரை

தாமரையே தாமரையே அழகான தாமரையே
பூவிலெல் லாம்சிறந்து புகழ்பெற்ற தாமரையே

தண்ணீரே உனைப்பெற்ற தாயாராம் தாமரையே
கண்ணேபோல் உனைவளர்த்தான் கதிரவனே தாமரையே

பார்த்தாலே கண்குளிரும் பசுமைநிற இலைகளையும்
சேர்த்தநல்ல பவளம்போல் சிவப்பான இதழ்களையும்

பொன்னாலே செய்தாற்போல் பொருட்டையுமே பொருத்தமுற
உன்னியே உனக்கமைத்த உரவோன்பார் தாமரையே

இன்னுமுன்றன் பெருமையைநான் என்னென்று சொல்லிடுவேன்
என்னாலே ஆனமட்டும் இயம்புகிறேன் தாமரையே

உலகமெல்லாம் படைத்தவரும் ஒருபெரிய பிரமனுக்கும்
தலமாக நீயிருந்து தாங்குகிறாய் தாமரையே

செல்வமெலாம் சேரவரும் திருமகளாம் லக்ஷ்மிக்கும்
சொல்லரிய வீடாகத் துலங்குகிறாய் தாமரையே

கல்விக்கும் நாயகியாம் கலைமகளுந் தங்கையெனும்
துல்லியவெண் தாமரையில் துலங்குகிறாள் தாமரையே

கண்களுக்கும் கைகளுக்கும் களங்கமில்லா முகங்களுக்கும்
உண்மையுறக் கூறவரும் உபமானம் நீயாவாய்

உன்னிஉன்னிக் கவிதொடுக்கும் உத்தமராம் புலவருக்கும்
உன்பெயரை விட்டுவிட்டால் ஒருகவியும் நடந்திடுமோ

(தாமரையே)

பத்திராதிபர்.

# NATURE STUDY: THE CLOTHES MOTH

## இயற்கைப் பொருட் பாடம்:

### ஆடைகளை அரிக்கும் பூச்சி

நம்முடைய வீடுகளிலும், தோட்டந் துரவுகளிலும், பல விருக்ஷ வனத்திலும் சிறு பிராணிகள் அதிகமா யுண்டு; இவைகள் பெருவாரி நோய்போல் பெருகி, தோட்டப் பயிர்கள், காய்கனி, துணி முதலிய வஸ்துக்களை அழித்து அதிக உபத்திரவத்தைக் கொடுக்கின்றன; இச் சிறு ஜந்துக்கள் பூச்சி இனத்தைச் சேர்ந்தவைகளே; இச் சிறு பூச்சிகளைச் சத்துருக்களாகப் பாவிக்க வேண்டும். நமக்குத் தீங்கிழைக்கும் பூச்சிகளில் ஆடைகளை அரிக்கும் அற்ப ஜந்துக்கள் ஓர்வகை; இவைகள் சாம்பல் நிறமாயிருக்கும்; இவற்றின் சிறகு விரியும்போது, அளவெடுத்தால் ஒரு நுனியிலிருந்து மற்றொரு நுனிக்கு, அரை அங்குலத்திற்கு மேலிராது. நம்மைப் பீடிக்கும் இப் பூச்சிகளைப்பற்றி நன்றாய்



ஆராய்ந்தறியவேண்டும். இப் பூச்சிகள் துணிகளை யாவது, வேறெந்தப் பொருளை யாவது கடித்துத் தின்னாது; ஏனெனில், கடித்துத் தின்பதற்கான தாடைகள் இல்லை.

### முட்டைகளும் கம்பளிப் புழுக்களும்

ஆடைக ளிருக்கு மிடங்களில் இச்சிறு பிராணி நுழைந்து முட்டையிடும்; இப் பூச்சியில் வேறொரு வகை யுண்டு; கம்பளித் துணிகள், மயிர்ச் சீலைகள் இவைகளின் மீது இது முட்டையிடும். இதைப் போன்ற மற்றொரு வகை யுண்டு; இது மெல்லியதாயும் மிருதுவாயு மிருக்கிற ரோமத்தைக் கண்டால் விடாது; சரியான இடமும் சரியான பொருளும் கிடைத்ததும், இப் பூச்சிகள் முட்டையிடும்; இட்டதும் பராமரிக்காம லிருந்துவிடும். குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிப்பட்டதும், அவற்றிற்குப் போதுமான உணவு எவ்விடத்தில் கிடைக்குமோ, அந்த இடத்திலேயே முட்டையிடும் இயற்கை அறிவு அதற்கு உண்டு. வீட்டுக்காரி துணிகளையும் கம்பளிகளையும் அடிக்கடி எடுத்து விரித்து உதறி சாக்கிரதையாக வைத்தா லொழிய முட்டைகள் பொரித்து, புழுக்கள் வெளிப்பட்டு நகர்ந்து தொட்டில்போல கட்டுவதற்கான சாமான்களைத் தேடும்

### கூடு.

இந்தப் புழுவடிவமுள்ள ஜந்து பார்வைக்கு விநோதமாயிருக்கும். தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு சிறு வீட்டை அமைத்துக்கொள்ளுகிறது; கட்டடமுங் கட்டுகிறது; நூலையும் இழைக்கிறது. தான் சரியான பூச்சி யுருவம் அடையும் வரையில் இருந்து வளருவதற்கு ஒரு கூட்டையுங் கட்டுகிறது. இக்கம்பளிப் புழு தன் தலையை இப்பக்கத்திலும் அப்பக்கத்திலும், அசைத்துக்கொண்டு, தான் ஜனித்த வஸ்துவில் வேண்டிய மயிர்த் துண்டுக ளிருக்கின்றனவா என்று பார்க்கும்; இப் புழு அவஸ்தையில்தான் கெட்டியான தாடை யுண்டு; இத்தாடைகளினால் மயிர்த்துண்டுகளைப் பற்றிக்கொண்டு நுனியை வெட்டி எடுத்துவிடும்; வெட்டி யெடுத்த மயிர்நுனிகளைக் கூட்டிற்குப் புறத்தே வைத்து, அதிக சாமர்த்தியத்தோடு தான் நூற்ற பட்டோடு கெட்டிப்படுத்தும். தனக்கு அகப்படக்கூடிய மயிர்த்துண்டுகளை யெல்லாம் உபயோகித்த பிறகு, இன்னமும் அதிகமாகத் தேட ஆரம்பிக்கிறது.

தன்னுடைய உடலையும் ஆறு முன்னங்கால்களையும், குழலின் முன் நுனியிலிருந்து வெளியே நீட்டிக்கொள்ளும்; இவ்விதமாகவே, இப்பிராணி கூட்டோடு சிறிது தூரம் நகர்ந்துகொண்டு போகும். மத்தியிலிருக்கும் கால்களும் தழுவிக்கொண்டிருக்கும் பின்கால்களும் குழையின் உட்புறத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும். மயிர்க்கூளங்கள் கூடுகட்டுவதற்கு வேண்டிய சாமான்களாக ஆவதோடு மாம்ச பிண்டமாகிய புழுவிற்கும் படுக்க இடமுமாகிறது. முதலில் புழுஉருவமாய் காண்கின்றது; அப்போது நன்றாய்த் தெரியக்கூடிய ஆறு கால்களோடு சிவந்த தலையுடன் வெண்மையாயும் மிருதுவாயு மிருக்கும்.

### கூட்டின் தன்மை.

இச்சிறு பிராணிகள் பார்வைக்கு அதிக வினோதமா யிருந்தாலும் மிக்க நாசகாரிகளே; இவைகளில் ஒன்றைப் பரிசோதித்துப் பார்த்தால் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள ஒரு கூடு இன்றியமையாததென்று அறிந்துகொள்ளுவாய். கூடு கட்டுவதற்கு வெவ்வேறு நிறமான சாமான்களை உபயோகப்படுத்துகிறது; கூடும் அப்பொருளின் நிறத்தையே யடையும்; வெண்மை, மஞ்சள், சிகப்பு முதலிய வெவ்வேறு நிறமாயிருக்கும். கூட்டிற்குப் புறத்தே எந்த வஸ்து இருக்கிறதோ, அந்த வஸ்துவின் நிறம்போ லிருப்பதால், இது வஸ்துவோ, கூடோ என்று மயங்க இடமுண்டாகும். வேறொரு நிறமுள்ள வஸ்திரத்துக்குள் நகர்ந்து போமாகில், கூட்டின் வெளிப்புறம் அந்த வஸ்திரத்தின் நிறத்தையே யடையும். எந்த ஆடையில் போய்ச் சேருகிறதோ, அந்த ஆடையின் நிறம்போ லிருக்கும். ஆதலால், கூட்டின் நிறம் மாறிக் கொண்டே யிருக்கும்.

### கூட்டை எப்படிப் பெரியதாய்ச் செய்கிறது?

புழுவடிவமா யிருக்கும்போது, அதற்குப் பசி அதிகம்; ஏராளமாய்ச் சாப்பிடும். புழுக்கள் பிடித்திருக்கும் உடுப்புகளை வெளிச்சத்தில் கொண்டுவந்து பார்த்தால், அவைகளின் பசியின் கொடுமை நன்றாய்த் தெரியும். துணியின் மேல்பாகத்தை அரித்து, பின்னல் நூலுக்குள் புழுக்கள் தங்கியிருக்கு மிடங்கள் எல்லாம் ஒட்டுப்போட்டு தைத்த சிறு சிறு பில்லைகளைப்போல் ஒழுங்கீனமா யிருக்கும்; ஆனால் நூலைக் கொய்யாது இம்மட்டோடு நிற்கின்றன.



### கூட்டை நீட்டும் விதம்

புழுக்கள் ஆடையின் மேல்பாகத்தை அரித்து உணவாக்கிக் கொள்ளுவதினால், நன்றாய்ப் பருக்கப் பருக்க, அவைகளுக்கு வீடு பெரியதா யிருக்கவேண்டியது அவசியம். கூட்டைப் பெருக்குவது மிக்க வினோதமான செய்கையா யிருக்கும். குழந்தைகள் சீக்கிரம் வளர வளர, செட்டாய்க் குடித்தனம் பண்ணுந் தாய்மார்கள் உடுப்புகளை நீட்டிச் செய்வதுபோல, முதலில் கூட்டை நீளப்படுத்தவேண்டும். போதுமான அளவாய் ரோமங்களைக் கத்தரித்து கூட்டின் முன்பக்கத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துப் பொருந்தவைக்கின்றன. முன்போலவே தன் தேகத்தைக் கூட்டிற்கு வெளியே நீட்டிக்கொண்டு வேலையைச் செய்வது ஆச்சரியமாயிருக்கும். கூட்டின் முன் பாகத்தை நீட்டினதுபோலவே பின் பாகத்தையும் நீளச் செய்யவேண்டி யிருக்கிறது. இதை எப்படிச் செய்கிறதென்று பார்ப்போம். அவைகளுக்கு இவ்வேலை அதிக சுலபமே. கூட்டின் தலைப்பாகத்தைச் சிறிது அதிகமாகச் செய்ததும், தன் தேகத்தை இருமடங்கிற் கதிகமாய் நீட்டிக்கொண்டு தன் குழையினின்று வழுக்கிக்கொண்டு, பின் பாகத்தில் தோன்றி, ஆடையிலிருந்து அதிக ரோமங்களை எடுத்து, பசை போட்டு ஒட்டுவதுபோல் பொருத்துகின்றது. இரண்டு முனைகளும் போதுமான அளவு நீளும்வரைக்கும் இப் புழுக்கள் இவ்விதமாக வேலைகளை விடாமல் செய்கின்றன.

இச்சிறிய சிற்பிகள் கூட்டைக் கட்டுவதற்கு வேறெந்த பொருளிடத்திலும் நாட்டம் வையாமல், பொருத்தமான ரோமங்களைத் தேடுகின்றன. எப்பக்கம் போகலாம், எங்கே ரோமங்கள் கிடைக்கும் என்று எடுத்துக்கொண்ட கருமத்தில் கண்ணா யிருக்கின்றன. புழு அரித்த ஆடைகளை எடுத்து உதறும்போது, சிறு சிறு பொடிகள் தூசி போல் ஏராளமாய் விழுவதைப் பார்க்கலாம்.

(இன்னும் வரும்)

M. S. SABHAPATI,
*Govt. Panchama Training School,*
*Madras.*

162001

# TEACHING NOTES ON ATTISUDI

## The Second Sutram — இரண்டாம் சூத்திரம்

## ஆறுவது சினம்

(முன் தொடர்ச்சி, பக்கம் — 81.)

உபகரணம் - நெருப்பு, கரும்பலகை, etc.] [வகுப்பு மூன்றாவது.

வேலன் — பானை சட்டிகளை உடைத்தவன், சாப்பிடா திருக்க வழியாயிற்று. அதென்ன கோபம்?

உபா — கோபம் அதிகரித்தால் அப்படித்தான் ஆகும். (நெருப்பைக் காட்டி) நெருப்பு உங்களுக்குத் தெரியுமே. இது அதிகரித்து ஒரு வீட்டைப் பற்றி எரிக்கிறது. அந்த நெருப்பு அதிகப்பட நீங்கள் விரும்புவீர்களா? தணிந்துபோக விரும்புவீர்களா?

பிள்ளைகள் — தணிந்துபோக விரும்புவோம்.

உபா — தணியா விட்டால் என்ன?

வாசு — வீடு முழுவதும் எரிந்து போம். சாமான்கள் வெந்து போம். உயிர்ச் சேதமும் உண்டாகும்.

உபா — அப்படித்தான் கோபமும் அதிகரித்தல் கூடாது. தணிதல் வேண்டும். கோபம் மிஞ்சினால் கெடுதி. பின்னர் நஷ்டம். அதற்குமேல் வருத்தம். வேலா, சுடுகிற அடுப்புத் தழலைக் கையில் எடுக்க முடியுமா?

வேலன் — முடியாது.

உபா — எப்பொழுது எடுக்க முடியும்?

நீலகண்டன் — ஆறினால்தான் அதை எடுக்க முடியும்.

உபா — இப்பொழுது இந்த நெருப்பில் தண்ணீர் விடுகிறேன். இப்பொழுது அதன் சூடு இருக்கின்றதா? சூடு ஆறிவிட்டதா பாருங்கள்.

வாசு — அது ஆறிப் போய்க் கரியாய்விட்டது. இதோ கையில் எடுக்கிறேன். (எடுக்கின்றான், மற்றப் பிள்ளைகளும் இதை உணருகின்றனர்.)



உபா — பார்த்தீர்களா? நெருப்பு ஆறினதினால் அதைக் கையில் எடுக்கின்றீர்கள். ஆறாவிட்டால்? அப்படித்தான் நமது கோபமும் ஆறவேண்டும். ஆறாவிட்டால் அது பெருகும். பெருகினால் தீயைப்போற் கெடுதி செய்யும். அது நமக்கே மோசமாகும்.

உபா — கந்தா, நீ மிகவும் சூடான காப்பிப் பானத்தைக் குடிக்க முடியுமா?

கந்தன் — குடிக்கவே முடியாது, ஆறினால்தான் குடிக்கலாம், மற்றப்படி என் வாயை எரிக்கும் அது.

உபா — அப்படித்தான், கோபமும் ஆறினால்தான் நன்மை பயக்கும். கோபமுள்ள பையனை மற்றவர் விரும்பார். கோபங் கொள்ளாத பையனையே மற்றவர் விரும்புவார். ஒரு நாள் ஒரு பையன் தன் தங்கையைக் காரணமின்றி அடித்தான். அப் பெண் என்ன செய்தாள் தெரியுமா? அடித்த அண்ணன்மேற் சினங் கொள்ளாது அவனை முத்தமிட்டாள். கண்ணா! அப் பெண்ணுக்குக் கோப முண்டா யிருந்தால் அவ்வண்ணஞ் செய்திருப்பாளா?

கண்ணன் — அப்படிச் செய்திருக்க மாட்டாள். திருப்பி யடித்திருப்பாள்.

உபா — முத்த மிட்டதனால் அப் பெண்ணின் மனத்தில் என்ன உண்டா யிருக்கும் — கோபம் ஆறிப் போகுமா? அதிகப்படுமா?

கண்ணன் — கோபத்தை அமர்த்தி யிருக்கும். அப் பெண் தனக்கு நல்ல பாடம் கற்றுக் கொடுத்ததாக எண்ணி யிருப்பான்.

உபா — இது நல்லதுதானா?

முருகன் — ஆம், மிகவும் நல்லது. மற்றப்படி அவளும் அடித்து இருப்பாள். பெரிய சண்டையாய் முடியும். இப்பொழுது சண்டைக்கு வழி வகை இல்லை, கோபந் தணிந்ததால்.

உபா — மணவாளா, நீ உன் வீட்டுத் தூண்களி லொன்றில் திடீரென்று முட்டிக்கொண்டால் என்ன செய்வாய்?

மணவாளன் — என்ன செய்வது — கோபப்பட்டு என்ன? பேசாம லிருக்கவேண்டியதுதான்.

உபா — நான் என்னை யடித்தது என்று அதனை யடித்தல் முடியாது அடித்த அண்ணனைத் தங்கை அடித்தலும் பிரயோஜனத்தைக் கொடுக்காது. இப்படியாகப் பெரும்பாலும் கோபத்தினாற் பிரயோஜனமே இல்லை. ஆகையால்தான் கோபத்தை ஆற்றவேண்டுமென்று ஒளவையார் இன்று உங்களுக்குச் சொல்லுகிறாள். 'ஆறுவது சினம்' ஆறுவது - தணியத் தக்கது, சினம் - கோபம், கோபத்தைத் தணித்தல் வேண்டும். தணியத் தக்கது கோபம்.

(கோபத்தைத் தணித்தல் நன்மை பயக்கும் என்பதற்கு 'சிங்கமும் சுண்டெலியும்' என்ற கதையைக் கூறலாம்) பிள்ளைகளே இதை மறந்துவிடவே கூடாது. இப்படியே செய்வீர்களா?

பிள்ளைகள் — ஆமாம்.

உபா — சுவாமிநாதா! நீ எப்போதாவது உன் கோபத்தை யாற்றின துண்டா? நீ, நீ.

சாமிநாதன் — ஆமாம், ஒருநாள் வேலன் என்னைத் திட்டினான் வாயில் வந்தபடி யெல்லாம். நான் ஏதும் பேசாமல் அதனைக் கேளாதவன்போ லிருந்துவிட்டேன். பின்னர் அவனும் பேசாமற் போய்விட்டான்.

கந்தன் — ஒருநாள் என் தம்பி என் புத்தகத்தைக் கிழித்துவிட்டான் நான் அவனை அடிக்கப் போனேன். அவன் அண்ணா, அண்ணா! இனி கிழிக்க மாட்டேன் என்று கெஞ்சினான். என் கோபம் ஆறிவிட்டது. அடித்தாலும் கிழிந்த புத்தகம் புதிதாகப்போகிறதில்லை யென்று நினைந்து நின்றுவிட்டேன்.

சுப்பன் — என் தம்பியை அன்று அடுத்த வகுப்புப் பூஷணம் அடித்தான். அவன் தடியன். நானும் கோபம் அதிகப் படக் கண்டேன். அன்று நான் அவனை அடித்திருந்தால் பெரிய சண்டை. என் அப்பாவிடம் சொல்லி பூஷணத்துக்குச் சரியான உதை வாங்கிக் கொடுத்தேன்.

(இப்படிப் பிள்ளைகளிட மிருந்தே ஏதாவது அநுபவத்தை வருவித்தல் செய்யலாம்.)



உபா — பார்த்தீர்களா? சினத்தை ஆற்றல் மிகவும் நல்லது என்பதனை நீங்களே அறிவீர்களே. இதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

[இன்னமும் இங்கே கண்ட திருட்டாந்தங்கள் தவிர, வேறு காட்டியும் போதித்துப் பாடத்தை முடிக்கலாம். முன்னர் கூறியுள்ள கேள்விகள்போலொத்தவை பிள்ளைகளுக்குக் கஷ்டந் தருவதாகும் என்று நினைந்து விட்டுவிடுதல் நலமாகாது. எப்படியாவது ஒரு பையன் விடை இறுக்கக் கூடும். ஆக எவ்விதத்திலும் வினைக்களுக்கு விடைகள் வருவித்தலே வேண்டும். சந்தர்ப்பத்திற் கேற்ப வினைக்களை மாற்றியும் போடலாம். இன்றேல் விடையைச் சொல்லிக் கொடுத்தல்வேண்டும்.].

JAMES G. SUNDRAM,
*The Kellett High School, Madras.*

## FLOATING THINGS

### மிதவை வஸ்துக்களைப்பற்றிய ஒரு சம்பாஷணை

சுப்பு — செல்வம்! எனக்குள் நெடுநாளாய் ஒரு சந்தேஹம் ஜனித்திருக்கிறது, அவற்றைத் தெளிவுறச் செய்யின் எனக்கு மெத்த நன்மை பயக்குமென்று தோன்றுகிறது.

செல்வம் — அஹா, அதற்கென்ன தடை, விஷயமென்ன? சொல்லும் பார்ப்போம்.

சுப்பு — அப்படியா, மெத்த சந்தோஷம், கவனமாய்க் கேள்: நாம், கல், இரும்புக் குண்டு முதலிய கன வஸ்துக்களை ஜலத்தில் போட்டால் அவைகள் நீரில் ஆழ்ந்து போகின்றன. இவைகளைவிட எத்தனையோ மடங்கு கனமும் பாரமும் பருமனுமுள்ள தோணி, கப்பல், படகு முதலியவைகள் ஜலத்தில் முழுகிவிடாமல் மிதந்து செல்லுகின்றனவே அவைகள் ஏன் முழுகிவிடுவதில்லை? அங்ஙனம் மிதப்பதற்குக் காரணங்கள் ஏதேனும் உண்டாயின் தயவுசெய்து சொல்லும்.

செல்வம் — சுப்பு, நன்றாயிருக்கிறது, நல்ல விஷயத்தையே என்னைக் கேட்க வந்தாய். இந்தப் பாடம் சென்ற வாரத்தில்தான் எங்களுக்கு நடந்தது. இருக்கட்டும், யான் இப்பொழுது மேஜையின்மீது என்னென்ன வஸ்துக்கள் கொண்டு வந்து வைக்கிறேனென்று கவனித்துப் பார்.

சுப்பு — தராசு, வாய்க்குப் பக்கத்தில் துவாரமுள்ள ஓர் இரும்புப்படி, ஒரு வாயகன்ற பித்தளைத் தட்டம், ஓர் இரும்புக் குண்டு, ஒரு கெட்டியான மரக்கட்டை, ஒரு முருங்கைக் கட்டை, தண்ணீருள்ள ஒருதொட்டி ஆக 7 சாமான்கள் உள.

செல்வம் — இவைகளைக்கொண்டு என்ன செய்கிறேனென்று கவனிப்பாயாக. இதோ இத் தட்டத்தின் மேல்வாய்க்குப் பக்கம் துவாரமுள்ள படியை வைத்துத் தண்ணீர் நிரப்பினேன். இத்தண்ணீருக்குள் இரும்புக் குண்டைப் போட்டு விட்டேன். குண்டும் தண்ணீரும் என்ன வாயின?

சுப்பு — குண்டு தண்ணீரில் ஆழ்ந்தவுடனே படியிலிருந்த தண்ணீரில் கொஞ்சம், துவாரத்தின் வழியாய் வெளியே வந்து தட்டத்தில் விழுந்து விட்டது.

செல்வம் — ஏன்?

சுப்பு — இரும்புக் குண்டு எவ்வளவு பருமனிருக்கிறதோ அவ்வளவு பருமன் அல்லது பரிமாணமுள்ள ஜலத்தை வெளியே தள்ளி விட்டது.

செல்வம் — சரி, தட்டத்தில் தங்கி நிற்கும் குண்டின் பரிமாண அளவு ஜலத்தைத் தராசின் ஓர் தட்டிலும் குண்டை ஓர் தட்டிலும் போட்டு நிறுத்துப் பார்ப்போம், எது எதைவிட கனமாயிருக்கிறது?

சுப்பு — குண்டின் பரிமாண அளவு ஜலத்தைக் காட்டிலும் குண்டு அதிக பளுவாய் இருக்கிறது.

செல்வம் — 2-வது இக்கெட்டியான கட்டையையும் படியிலுள்ள ஜலத்தில் போடுகிறேன் பார், கட்டை ஜலத்துள் என்ன வாயிற்று?

சுப்பு — கட்டையின் மேல் பரப்பு நீரின் மேல் பரப்புக்குச் சரியாயிருக்கும்படி மிதக்குகிறது.



செல்வம் — சரி, கட்டையை என் கையிலுள்ள இடுக்கியால் நீருள் ஆழ்த்தி கட்டையின் பரிமாண அளவு ஜலத்தை யெடுத்து இவ்விரண்டுக்குமுள்ள எடையின் வித்தியாசத்தைப் பார்ப்போம், (நிறுத்தபின்) எது கனமாயிருக்கிறது?

சுப்பு — கட்டையின் எடையும் கட்டை பரிமாண அளவும் ஜலத்தின் எடையும் சமமாயிருக்கின்றன.

செல்வம் — 3-வது முருங்கைக் கட்டையையும் ஜலத்தில் போட்டு விட்டேன், எப்படி மிதக்குகிறது. இதற்கு முன் கெட்டியான கட்டை மிதந்ததுபோலல்லாமல், நீர் மட்டத்திற்கு மேல் கட்டையின் மேல்பரப்பு வெளி நீண்டிருக்கும்படி மிதக்குகிறது.

செல்வம் — இவற்றையும் நீரில் அழுத்தி இதன் பரிமாண அளவு ஜலத்துடன் நிறுத்துப் பார்ப்போம். (நிறுக்கிறான்) இதில் காணும் வித்தியாசம் யாது?

சுப்பு — முருங்கைக் கட்டையைக்காட்டிலும் கட்டையின் பரிமாண அளவு ஜலம் எடையில் பளுவா யிருக்கிறது.

செல்வம் — சுப்பு இம்மூன்று திருஷ்டாந்தங்களினால் நீ தெரிந்து கொண்டதென்ன?

சுப்பு — நாம் முதலில் நீரில் போட்ட இரும்புக் குண்டு அதன் பரிமாண அளவு ஜலத்தைக்காட்டிலும் எடையில் பளுவானதால் நீரில் மூழ்கின. இதனால் 1. எந்த வஸ்து தன் பரிமாண அளவு ஜலத்தின் எடையைவிட பளுவா யிருக்கிறதோ அந்த வஸ்து ஜலத்தில் ஆழ்ந்துபோமென்றும், 2. ஜலத்தில்போட்ட கெட்டியான கட்டை, தன் பரிமாண அளவு ஜலத்தின் எடைக்குச் சரியாய் இருந்தபடியால் கட்டையின் மேற்பரப்பும் ஜலத்தின் மேற்பரப்பும் ஒன்றாயிருக்கும்படி மிதந்தன. இதனால்,

எவ்வஸ்து தன் பரிமாண அளவு ஜலத்தின் எடைக்குச் சரியா யிருக்கிறதோ அவ் வஸ்து ஜலத்தின் மேல்மட்டத்திற்குச் சரியாய் தன் மேல்மட்டம் பொருந்தியிருக்கும்படி மிதக்குமென்றும், 3 வது முருங்கைக் கட்டை தன் பரிமாண அளவு ஜலத்தின் எடையைவிட, மிகவும் குறைந்திருப்பதால் கட்டையின் மேல்பரப்பு ஜலத்தின் மேல்பரப்பிற்கு மேல் வெளி நீண்டிருக்-

கும்படி மிதந்தன. ஆகையால் யாதொரு வஸ்து தன் பரிமாண அளவு ஜலத்தின் எடையைவிடக் குறைந்திருக்கிறதோ அவைகள் ஜலத்தின் மேல் மட்டத்துக்குமேல் நீண்டு மிதக்குமென்றும் தெரிந்துகொண்டேன். ஆனதுபற்றி கப்பல் முதலியன தன் பரிமாண அளவு ஜலத்தைவிட நிறையில் குறைவாயிருப்பதால் மிதந்து செல்கின்றனவென்பது தெளிவாயிற்று.

செல்வம் — நன்று, நன்று நீ மிகவும் புத்திசாலி, இவ்வளவு கூர்மையாய் விஷயங்களைக் கற்றுக்கொண்டதற்கு நான் மிகவும் சந்தோஷிக்கிறேன், இன்னு மேதாவது கேள்வியுளதேல் கேட்பாயாக ?

சுப்பு — கப்பல்கள் தங்களின் பரிமாண அளவு ஜலத்தினெடைக்குக் குறைந்திருப்பதால் நீரில் மிதக்கின்றன. என்றாலும், பல கோடி மணங்கு பாரமுள்ள சரக்குகளை அதனுள் ஏற்றுகிறார்களே, அப்போது ஏன் கப்பல்கள் ஜலத்துள் ஆழ்ந்துவிடுவதில்லை ?

செல்வம் — சுப்பு, இந்தக் கிண்ணத்தைப் பார். இதை இப்படியிலுள்ள ஜலத்தில் கிண்ணத்தின் வாய் ஜலத்தின் மேல்பரப்பிற்குச் சற்று மேலிருக்கும்படி நீரில் அழுத்துகிறேன் இதன் பரிமாண அளவு நீரை, அடியிலிருக்கும் தட்டத்தில் வெளித் தள்ளிவிட்டது. இந்நீரைத் தராசின் ஓர் தட்டில் ஊற்றிவிட்டேன், கிண்ணத்தையும் மற்றொரு தட்டில் வைத்துவிடுகிறேன், இவ்விரண்டிற்கு முள்ள வித்தியாசம் யாது? கிண்ணத்தின் பரிமாண ஜலத்தைவிட கிண்ணம் எவ்வளவோ மடங்கு எடையில் குறைந்திருக்கக் காணவில்லையா ? கி. ப. ஜலத்தின் எடைக்குச் சரியாக கிண்ணத்தின் எடையைச் சரியாக்க என்ன செய்யவேண்டும்? என் கையிலுள்ள சிறிய கற்களில் கிண்ணத்துள் ஒவ்வொன்றாய்ப் போடுகிறேன். எத்தனை கற்கள் போட்டேன் ? 8 கற்கள் போட்டேன். இப்போது கி. எடையும் அதன் ப. ஜ. எடையும் ஏறக்குறைய சமமாய்விட்டதல்லவா? இன்னுமொரு கல்லைப் போடுகிறேன், கிண்ணம் பாரமாகிக் கீழே தாழ்ந்துவிட்டது. சரி, கிண்ணத்திலுள்ள கற்களில் ஒன்றை எடுத்துவிட்டு கிண்ணத்தைத் தராசினின்று எடுத்துத் தொட்டித் தண்ணீரில் மிதக்கவிடுவோம். கிண்ணத்தின் வாய், ஜலத்தின் மேல்பரப்பிற்கு சற்று



மேலிருக்கும்படி மிதக்கிறது. இன்னொரு கல்லைப் போடுகிறேன், கிண்ணம் ஜலத்துள் ஆழ்ந்துவிட்டது, ஏன் ? முன் கிண்ணத்திலுள்ள கற்களும் கிண்ணமும், அதன் பரிமாண ஜலத்தின் எடைக்குச் சரியாயிருந்தபடியால் நீரில் மிதந்தன. பின் ஓர் கல்லைப் போடவும் ப. ஜ. எடைக்கு அதிகமானதால்; முழுகிவிட்டது. இதனால் நீ தெரிந்துகொண்டதென்ன ?

சுப்பு — பாரமேற்றாத கப்பல் தன் ப. ஜ. எடைக்கு எவ்வளவோ மடங்கு எடையில் குறைந்திருப்பதால் அடித்தட்டு நீரின் மட்டத்திற்கு மேல் வெளி நீண்டு மிதக்கும். பாரமேற்றினால் தன் ப. ஜ. எடைக்குச் சரியாகிவிடுவதால் நீரின் மேற்பரப்பிற்கு அடித் தட்டு கொஞ்சம் வெளி நீண்டு மிதந்து செல்லுமென்று அறிந்துகொண்டேன்.

ஜானகி — அண்ணா, அம்மா போஜனத்திற்காக அழைக்கிறார்கள், எழுந்து வாருங்கள்).

செல்வம் — சுப்பு, போஜனவேளை நெருங்கிவிட்டதால் எனக்காக என் தாயார் காத்துக்கொண் டிருப்பார்கள். நீ போய் வருகிறாயா ?

சுப்பு — நல்லது போய் வருகிறேன், வந்தனம் (இருவரும் போய்விடுகிறார்கள்).

திருவை, N. சிதம்பர கவுண்டர்,
முதல் உதவி உபாத்தியாயர்,
போர்டு எலிமென்டெரி ஸ்கூல், துடுப்பதி,
பெருந்துறை போஸ்டு, ஈரோடு தாலூகா.

# HEALTH AND THE TEACHER

## சரீரசுகமும் உபாத்தியாயரும்

(முன் தொடர்ச்சி, பக்கம் — 77.)

இவைகளை யுணர்ந்த மேல்நாட்டாரும் நாகரிகத்தில் மிகுந்த பெரிய கனவான்களும் மாலைகளில் பந்து விளையாட்டு, உலாவல், குதிரைச் சவாரி முதலியவைகளில் ஏதாவது சில பயிற்சியைச் செய்துவருகின்றனர். உடம்பிற்குப் பலந் தரத்தக்க அப்பியாச

கள் பல உள. அவை, கரலா (Indian clubs), டம்பெல்ஸ் (Dumbells) முதலிய வழங்கல்: தண்டால், பஸ்கி, கஸரத், குஸ்தி முதலிய உள. மேற் சொன்னவைகளை அனுஷ்டிப்பவன் ஒன்றையும் செய்யாதவர்களை விடப் பதின்மடங்கு பலவானாயிருப்பான் என்பதற் கையமில்லை.

தேகாப்பியாசத்திற்குக் காலை நேரமும் மாலைநேரமும் தகுந்த காலம். சுத்த ஆகாயமுள்ள இடத்தில் நடத்தினால் இது பயன் தரும். நன்றாய் தேகாப்பியாசம் செய்தவன் இரவில் நல்ல தூக்கத்தை அடைவதோடு வேலையில் சோம்பலின்மையையும் பாடத்தில் புத்திசாலித் தனத்தையும் சுறுசுறுப்பையும் அடைவது நிச்சயம்.

7. நித்திரை — நாம் சதா வேலை செய்வதால் அவயவங்களெல்லாம் சோர்வடைவதன்றி நமக்கும் சிரம முண்டாகிறது. அவைகளுக்கு ஒழிவு கொடுப்பதற்கே நாம் இரவில் நித்திரையைக் கையாடுகிறோம். நன்றாய் உழைத்த மனிதன் 7 அல்லது 8 மணி நேரம் நித்திரை செய்வது நலம். எவ்வளவு சீக்கிரம் ஒருவன் படுக்கைக் கேகி எவ்வளவு விரைவில் தூக்கத்திலிருந்து தெளிகிறானோ அவ்வளவு கால அநுகூலமும், நோயில்லாமலுமிருக்கக் கூடும். அவர்கள் செல்வ முள்ளவர்களாகவு மிருக்கக் கூடும். ஆனதுபற்றியே பெரியோர் தங்கள் மதுரவாக்கால் "பொழுதொடு படுத்துப் பொழுதொடு எழுவோர் தழுவுவர் தேக சுகம் தனம் அறிவே" என்று கூறியுளர். நாகரிகத்திலும் சுகாதாரத்திலும் தேர்ந்த மேல்நாட்டார் இதைத் தழுவுகின்றனர்.

சரீர சாஸ்திரத்தில் தேரப் பயின்ற நிபுணர்கள், சுகஜீவியாயும் சுறுசுறுப்பாயு மிருக்க அவாக்கொண்ட மனிதன், இரவில் குறைந்தது 10 மணிக்கு படுக்கைக்குச் சென்று, "வைகறை துயிலெழு" என்றதற்கேற்ப, காலை சூரிய உதயத்திற்கு ½ மணி முன் எழுந்திருத்தல் உசிதமானதெனக் கூறுகின்றனர்.

ஒரு மனிதனுடைய வயதில் சரிபாதி துயிலினால் கழிகின்றது. நம் வாழ்நாளை வீண் தூக்கத்தில் செலவிடாம லிருந்தால் அஃது நம்மாயுளை விருத்திசெய்யும் சாதனமாகிறது. நம்மவரி லநேகர் அனாவசியமாய் நாடகம் முதலியவைகளை அதே தொழிலாய் கண்டு களித்து, நித்ரா பங்கம்செய்துகொள்வதால் பல வியாதிகளுக்குள்ளாகின்றனர். இதனால் பண வியயமும் தேக சிரமமும் உண்டாவதுடன் சரீர சுகத்திற்கு மிடையூறு விளைவிக்கிறது. சிலர் சூரியன் வெளிகிளம்பியும் தூங்குதல் அல்லது விழித்துக்கொண்டு சோம்பலினால் படுக்கையில் புரண்டுகொண்டிருக்கும் துர்வழக்கம் இருக்கிறது போலும். அதனால், அவனுக்கும் அவனில்லத்திற்கும் அழகு குன்றுவதோடு, அவன் சோம்பல் தரித்திரம் இவைகளால் சூழப்படுவான். ஆதலாலன்றோ "ஆக்கம் அடைபவர் விடியுமுன்னெழலாம், ஆக்கமடைந்தவர் விடிந்தபின்னெழலாம்" என்ற உலக வாக்கும் வழங்குகின்றது. விடியற்காலந்தான் மன அபிவிர்த்திக்கு தகுந்த காலமாகும். பெரிய கவிஞர், ராஜதந்திரிகள் முதலியோர், வெற்றி வீரர்கள், மல்லர்கள், இருடிகள், மாணவர்கள் முதலியோர் அவரவர்கட் குரிய தொழிலுக் கேற்றவாறு சிந்தித்துத் தங்கள் காரியத்தை சித்திபெறச் செய்வது விடியற் காலமேயாம். ஆகையால் நம் பாலர்கள் அதிகாலையில் எழுந்தவுடன் படித்தால் நன்றாய்ப் புத்தியில் படியுமாகையால் அவ்வாறு ஒழுகப் போதித்தல் அவசியம். தவிர பகல் நித்திரையைப் பலர் அனுஷ்டிக்கிறார்கள். இஃது ஒரு தொழிலுமின்றி வீட்டில் உட்கார்ந்து புசித்து சுகஜீவனம் செய்வோர் வெகுசாய் கையாளுவர். அவர்களுக்கும் அது நன்மை பயக்காது. ஏனையோரே அதை ஒழித்தல் வேண்டும் என்றால், நம்மைப்போன்ற உழைப்பாளிகள் ஒழிவுக் காலங்கள் அல்லது விடுமுறைகளில் பகல் நித்திரையை பின்பற்றுவது உசிதமல்லவென்பது விளங்கும். பகல் நித்திரை செய்தால் சோம்பலும் மந்த புத்தியும் உண்டாகும். நம்மவரில் சிலர் பின்பற்றி யிருந்தால் அதை விடுப்பதுடன் நம் பாலர்களையும் அப்படி நாளை வீண் தூக்கத்தில் கழிக்காவண்ணம் போதித்தல் அவசியம்.



8. வாசஸ்தானம் — ஒருவன் சுகஜீவியாய் இருக்க மிகவும் இன்றியமையாத சாதனம் அவன் குடியிருக்கு மிடமே யாகும்.

ஒரு குடும்பத்தார் பள்ளமும் சதுப்பு நிலமும் ஓதமடிக்கும்படியானதும், அசுத்தமுள்ளதுமான இடத்தில் வசித்துவந்தனர். அவர்கள் பல கெட்ட நோய்களால் பீடிக்கப்பட்டு வருந்தியிருக்கும்போது, அவர்களின் உறவினர் ஒருவர் வந்து குசலம் வினவிய போது ஏனையோர் தங்கள் துர் அதிர்ஷ்டம் இவ்வாறு வருத்துகின்றதென விளம்பவும், அவர் நீங்கள் இந்த இடத்தையொழித்து சற்று மேடும், உலர்ந்ததும், சுத்த ஆகாயமுள்ளதுமான ஓர் இடத்தை அடைவீராகில் இப்பிணிகள் விலகுமென்று நன்மதி கூற

அவர்கள் அப்படியே கூறியவண்ணம் புரிந்து, முற்றிலும் சௌக்கியமடைந்து வாழ்ந்ததாக நாம் கேட்டிருக்கிறோம் அல்லவா? ஆதலால் வாசஸ்தானமானது மழை ஜலம் புகாவண்ணம் பூமிமட்டத்தைவிட மேடானதாயிருக்கவேண்டும். ஓத மடிக்காமல் உலர்ந்த தரையாயிருக்க வேண்டும். காற்று நன்றாய் உலவ நல்ல ஜன்னல்களிருக்கவேண்டும். அசுத்த வாயுவான புகை செல்லப் புகை (கூண்டு) போக்கி ஒவ்வொரு சமையல் வீட்டிலுமிருத்தல் அவசியம். நாகரிகமான இக் காலத்திலும் சிலர் ஜன்னல்கள் வைத்து இல்லம் புதுக்குவதால் கள்வன் வர இடமுண்டாகிறது என்ற குருட்டு அபிப்பிராயத்துடன் சாளரமின்றி குகைபோன்ற பெரிய வீடுகளைக் கட்டுவது எவ்வளவு மதியீனம்?

சாளரங்களிலுள்ள இருப்புக் கம்பிகளையுடைக்க சக்தியுள்ள கள்வனுக்குக் கற்சுவரைக் கடப்பதும் ஒரு பெரிதா என்றதைக் கவனித்தாரில்லை. மேல்நாட்டிலுள்ள ஒவ்வொரு வீடுகளிலும் சில சாளரங்களையும் புகைப் போக்கிகளையும் காணலாம். இந்தியரில் 100-க்கு 4-வர் வீட்டில் புகைக் கூடு காண்பதரிது. நாகரிகமுள்ளவரும் பட்டண வாசமுள்ள சிறுபான்மையோர் வீட்டில் மட்டுமே வெகுசாய்க் காணக் கூடும். மேற்கூறியவைகளுடன், குப்பை மேடு, சாராயம், கள் கடைகள், கடைத் தெரு, சந்தை வெளிக்குச் சமீபம் ஊருக்கு தூரமாயிருத்தல், முதலியவைகள் நீங்கி, ஒரு பள்ளிக்கூடக் கட்டடம் அமைக்க அல்லது அமைந்திருக்கிறதாவென்று ஒவ்வொரு உபாத்தியாயரும் கவனித்தல் அவசியம். தவிர தோட்டத்திற்கும் விளையாடுமிடத்திற்கும் வசதியிருத்தலின்றியமையாதது.

பள்ளிக்கூட வாசலில் சில புஷ்பச் செடிகளையும், மூங்கில் தடுக்குகளால் இயற்றின லதாகிருஹமும் அதின்மேற் படரும் மல்லிகை முதலிய கொடிகளையும் கூடுமானால் வைத்துப் பராமரித்தால் மிகவும் அழகையும் சுகத்தையும் தருவதோடு மாணவர்கட்கு உத்ஸாகத்தையுமுண்டாக்கும்.

போது கவனம் — காலையில் சீக்கிரம் எழுந்து பல் துலக்கிவருமாறு கூறுவதும் ஒவ்வொரு மாணவனும் வீட்டிற்குச் சென்றவுடனும், சாப்பிடும் போதும் கைகால், வாய் இவைகளை ஜலத்தால் சுத்தி செய்யுமாறும் கூறவேண்டும். நகங்களை வளரவிடப்



படாது. அஃது விஷம்போன்றதெனவும் விளக்கி, சில பாலர்கள் நகத்தைக் கடித்துக்கொண்டிருக்கும் கெட்ட வழக்கத்தையும் தடுத்தல் அவசியம். உடம்பு குளிக்கையில் செவி, நாசி முதலியவைகளையும் தேய்த்துச் சுத்தி செய்யவேண்டும். சிகையை சீவி முடித்துச் சுத்தமான உடையுடன் வருமாறு போதிக்க வேண்டும்.

மேற் கூறியவைகளையெல்லாம் விளக்கிப் போதிப்பதுமன்றி, அவ்வாறு நடக்கின்றனராவென்றும் பார்வையிடல் அத்யாவசியமாகும்.

T. N. KRISHNASWAMI IYER,
*Student, Govt. Training School,*
*Villupuram.*

# LEGISLATIVE COUNCIL—EDUCATION

## சட்ட சபையும், கல்விச் செலவிற்கு வகையும்

சென்ற 20-11-17ல் கூடிய சென்னைச் சட்ட சபையில் 'பள்ளிக்கூட சம்பள'த்தைப்பற்றி நடைபெற்ற விஷயத்தைக் கீழ் வருமாறு 20-11-17, 21-11-17ல், வெளியான சுதேசமித்திரன் தினசரியில் பிரசுரித் திருப்பதையும் அதில் தோன்றும் நமது அபிப்பிராயத்தையும் இதன்கீழ் விவரிக்கின்றோம்:—

"கல்வி பரவும்படி செய்யப் பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலும் வசூல் செய்யப்படும் சம்பளத்தைக் குறைத்துவிடவேண்டுமென்று, கனம் வெங்கடபதி ராஜு ஒரு தீர்மானத்தைப் பிரேரணைசெய்து கல்வியின் பெருமையை எடுத்துச் சொல்லி சென்ற 100 (நூறு) வருஷங்களாகவும் இவ்விஷயமாய் நடந்தேறியிருக்கிற மாறுதல்களை எடுத்துச் சொல்லி இப்பொழுது கல்வியபிவிருத்தி யடைந்திருக்கிற நிலைமையைப் பார்த்தால் போதுமானதாகத் தெரியவில்லை யென்றும் இந்நாளில் ஏற்பட்டிருக்கிற சம்பளத்தைக் கொடுக்கும்படி ஜனங்கள் செல்வவான்களாயில்லையென்றும் * * * * * இந்தியாவில் ஒவ்வொருவனுக்கும் வருஷ வரும்படி 30-ரூபாய்தானென்றும் * * * * * வெகு கணக்குகளைச் சொல்-

(கனம் வெங்கடபதி ராஜு) தமது பிரேரணையை வற்புறுத்தினார். கனம் யாகுப் ஹஸன் அதை ஆமோதித்தார் —

கனம் ஸ்டோன் தீர்மானத்தை எதிர்த்தார் — இதைப்பற்றிப் பேசினவர்கள் நடுத்தரப் படிப்புக்கும் ஆரம்பப் படிப்புக்கும் வித்தியாசப்படுத்தி யிருந்தால் நலமா யிருக்கலாம். ஆரம்பப் படிப்பு இலவசமாக இருக்கவேண்டுமென்பதும்; (நடுத்தரப் படிப்பு அந்த வரும்படியைக் கொண்டு நடக்கவேண்டு மென்பதும்) கவர்ன்மெண்டின் அபிப்பிராயம். * * * * சம்பள வரும்படியைக் குறைத்துவிடும்பொழுது, உபாத்தியாயர்களின் சம்பள திட்டம் என்னவாகும்? சம்பளத்தைக் குறைத்தீர்களானால், சொல்லிவைக்கப்படும் படிப்பின் யோக்கியதையைத் தானாகவே குறைத்துவிடுவார்கள் * * * * * என்று அவர் சொல்லி முடித்தார்.

கனம் சிவராவ் பேசியபொழுது ஆரம்பப் படிப்பும் நடுத்தரப் படிப்பும் தாராளமாய்க் கிடைக்கும்படி வழி யேற்படவேண்டுமென்றும், (மிகவும் உயர்ந்த சம்பளம் விதித்தல் பெரிய குறையாகுமென்றும்) கல்வி விஷயத்தில் வியாபார விஷயத்தைப் போல் கவனிக்கக்கூடாதென்றும் வற்புறுத்தினார். அதன் பின் தீர்மானத்தைத் தாங்கி,

கனம் ஏ. எஸ். கிருஷ்ணராவ் பேசுகையில் (தற்சமயம் சம்பள விகிதம் உயர்ந்திருப்பதால் பெற்றோருக்கு மிக்க அசௌகரியம் ஏற்படுகிற தென்றும்) கல்விச் சாலைகளில் சம்பளத்தைக் குறைத்துவிடின் செலவுக்கு என்ன செய்வதென்று சொல்லப்படுமாகில், இதர இனங்களிலே செலவைக் குறைத்து அதில் மிச்சமாகும் திரவியத்தைக் கல்வியினத்தில் செலவிடலாமென்றும், இல்லாதுபோனால் கல்வி விஷயமாய் அதிகபணம் கொடுக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டை வேண்டிக்கொள்ளலாமென்றும் யோசனை சொன்னார்.

இம்மாகாணத்தின் ஜனத்தொகையைக் கவனிக்குமளவில் ஆரம்பப் படிப்பை நன்கு போதிப்பதற்காகக் குறைந்தது 30 லட்சம் ரூபாய் தேவையா யிருக்குமே யென்று கனம் ஸர். கார்டியூ பேசினார்.



பையன்களின் ஏழ்மை நிலைமை தமக்கு நன்கு தெரியுமென்றும் ஆயினும் பிரஸ்தாப விவாதத்தில் பயனிராதென்றும், கனம் பிட்டண்ட்ரிக் சொன்னார்.

இவ்வாறு பல மெம்பர்கள் பேசியதன்மேல், ஜனங்கள் ஏழ்மை நிலைமையில் இருப்பதனால், அந்நிலைமையைப் பரிகரிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் முயலவேண்டுமென்பது தக்க ஆதாரமாகாதென்றும், ஏழைப் பிள்ளைகளுக்குச் சகாயமாயிருக்கும்படி பல சௌகரியங்களைக் கவர்ன்மெண்டார் செய்திருக்கின்றனரென்றும் கனம் ஸ்டோன் சொன்னார்.

* * * * * * * * * *

எச். இ. கவர்னர் பேசியதாவது — ஆரம்பப் படிப்பு பெறுபவர்கள் எல்லாரும் நடுத்தரப் படிப்பைப் பெற்று வருகின்றனரென்று சொல்வதற்கில்லை. கல்விச் செலவானது ஒரு நாளும் குறையாது; அதிகரிக்கத்தான் செய்யும். கவர்ன்மெண்டார் கல்வி விஷயத்தில் செலவு செய்யவேண்டு மென்னும்பொழுது, கவர்ன்மெண்ட் என்பது யார்? வரி செலுத்தும் ஜனங்களே ஆவர். சிலருடைய நன்மைக்காக எல்லாருக்கும் வரி விதிப்பது அழகாகுமோ? அதிக செலவு செய்யவேண்டுமென்பதாக இந்த மீட்டிங்கிலே ஆறு தீர்மானங்கள் ஆலோசனைக்கு வந்துள்ளன. செலவை எவ்வாறு குறைக்கலாமென்று வரவு செலவு கமிட்டியில் ஸ்தானம் வகித்த உத்தியோகப் பற்றில்லாத மெம்பர்களே சொல்லட்டும். கிடைக்கக்கூடிய காசையெல்லாம் கல்வியிலேயே கவர்ன்மெண்டார் செலவுசெய்கின்றனர். தவிர நடுத்தரப் படிப்பில் சென்னை மாகாணமே முதன்மை பெறவேண்டுமென, சென்ற 10 வருஷ காலமாக கவர்ன்மெண்டார் முயன்று வந்திருக்கின்றனர். விபரம் இப்படியிருக்க, கவர்ன்மெண்டார் இனியும் என்ன செய்ய முடியும்?

இவ்வாறு அவர் பேசியதன்மேல், தீர்மானத்தை ஓட்டுக்குவிட, அது அடிபட்டுப் போய்விட்டது." நிற்க,

சென்ற 22-11-17ல் வெளியான திராவிடன் பின்வருமாறு கூறுகின்றது :—

"* * * * இந்த ராஜதானியிலுள்ள ஸ்கூல்களிலும் காலேஜ்களிலுமுள்ள மாணாக்கர்களுடைய சம்பளங்களை

கவர்ன்மெண்டார் குறைக்கவேண்டுமென்று ஆனரபில் மிஸ்டர் வெங்கடபதி ராஜு ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தனர். இத் தீர்மானம் நமது சென்னை மாகாண சட்டசபையில் வெகுவாக விவாதிக்கப்பட்டது. சம்பளங்கள் குறைக்கப்பட்டால் கல்வி இன்னும் இந்த ராஜதானியில் பரவக்கூடுமென்று ஆனரபில் மிஸ்டர் வெங்கடபதி ராஜு வாதித்தார். ஆனரபில் மிஸ்டர் J. H. ஸ்டோன், ஆனரபில் ஸர். அலெக்ஸாண்டர் கார்டியூ, ஆனரபில் மிஸ்டர் பிட்டண்ட்ரிக், ரெவரண்ட் பாதர் ஆலன் இத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர். ஆனரபில் மிஸ்டர் சிவராவ், ஆனரபில் மிஸ்டர் கிருஷ்ண ராவ், ஆனரபில் மிஸ்டர் இரங்காச்சாரி, ஆனரபில் மிஸ்டர் இராமச்சந்திர ராவ் அத் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசினார்கள். கடைசியாக H. E. பெண்ட்லண்ட் பிரபு தமது முடிவுரையில் அத் தீர்மானத்திற்குப் பதில் கூறி வரும்போது,

ஸெகண்டரி படிப்பில் கற்கும் மாணாக்கர்களுடைய சம்பளங்களைக் குறைத்துவிட்டு, எலிமெண்டரி படிப்பிற்குக் கவர்ன்மெண்ட் வேண்டிய உதவி செய்ய வேண்டுமென்று ஆனரபில் மெம்பர்கள் கூறுகின்றனர். கவர்ன்மெண்டிற்குப் பணம் எங்கிருந்து வரும்? அதற்கெனத் தனியாக ஒரு பொன் சுரங்கம் இருக்கின்றதுபோலும்! பணம் வேண்டுமென்றால் அதுவும் யாரிடமிருந்தாகிலும் வாங்க வேண்டியதுதானே. கவர்ன்மெண்ட் என்றால் பொதுவரி வருமானக்காரர் என்பது பொருள். சிலருடைய நன்மைக்காக நாம் பலர்க்கு வரிகளை விதிக்கின்றோம். ஸெகண்டரி படிப்பில் சம்பளம் குறைப்பதென்றால் கீழ்தரப் படிப்பு செலவிற்குப் பணம் போதாது. ஒவ்வொரு வருஷமும் கல்விக்காகச் செலவாகும் பணம் மிகவும் அதிகரிக்கின்றது. கல்வியின் நோக்கங்களும் அம்மாதிரியாகவே விசாலிக்கின்றன. அவைகட்கு வேண்டிய சௌகரியங்கட்குச் செலவும் மிகுதிப்படுகின்றது. எலிமெண்டரி படிப்பு இப்பொழுதுதான் தலைகாட்டி வருகின்றது. அதனைப் பலவிதத்தும் பரப்பவேண்டியிருக்கின்றது. இந்தக் கவுன்ஸிலில் விவாதிக்கப்படும் விஷயங்களுக்கெல்லாமா பணம் வேண்டியிருக்கின்றது? கல்வித்துறைக்காக வேண்டியது பணம் ஆகையால், அதைக் கூடியவரையில் சம்பாதிக்கவே வேண்டியிருக்கின்றது. தங்களுடைய குழந்தைகள் கற்கவேண்டுமென்பதாக ஜனங்கள் கஷ்டப்படுகின்றதை நான் நன்கு அறி-



வேன். இது இந் நாட்டில் மாத்திரம் உண்டாவதென்றாகாது. இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் அப்படித்தான். யுனைடெட் ஸ்டேட்ஸிலும் இதே கஷ்டமே உண்டாயிருக்கின்றது. அங்குள்ளவர்கள் தங்களுடைய பள்ளிக்கூடம் அல்லது காலேஜ் சம்பளங்களைச் செலுத்துவதற்காக ஆறுமாதகாலம் வேலை செய்து வருகின்றனர். அத்தகைய மாணாக்கர்களை நான் கண்டிருக்கின்றேன். இங்குள்ள பள்ளிக்கூடங்கள் மாணாக்கர்களால் நிரம்பியிருக்கின்றன. வருஷா வருஷம் இதே சம்பளங்களில் இன்னும் அதிக ஸெகண்டரி பள்ளிக்கூடங்கள் வேண்டியிருக்கின்றன. பணக் கஷ்டத்தில் அவதியுறும் கவர்ன்மெண்ட் இச் சமயத்தில் சம்பளங் குறைக்கும் முறையில் தலையிடுவது முட்டாள்தனமான காரியமாகாதா? இந்த ராஜதானியில் அதிகச் சம்பளங் கொடுத்துவிட்டு மாணாக்கர்கள் உயரிய கல்வி ஞானத்தைப் பெறுகின்றார்கள். சீரான கல்வியைக் கொடுப்பது ஒரு அநியாயமாகுமா? அகப்படுகிற ஒவ்வொரு தம்பிடியும் கல்விக்கே உபயோகப்படுத்தப்படுகின்றது. ஆகையால் ‘இப்பொழுதிருக்கிற வருமானத்தைத் தவிர வேறு எந்த வகையில் வந்தாலும் அதனைக் கல்விக்கே உபயோகப்படுத்தினால் எனக்கு அதிக சந்தோஷமுண்டாகும்’ என்று கூறினர். ஆழ்ந்த யோசனையுடன் வெளியிடப்பட்ட இந்தப் பேச்சின் மீது நாம் ஏதேனும் கூறுவதாயின் அது மிகையாகுமென்று நம்புகின்றோம். எலிமெண்டரி படிப்பில் பெண்ட்லண்ட் பிரபு காட்டிவரும் ஊக்கம் இப்பொழுது நன்கு வெளியாகாதிராது'' என்பதேயாகும்.

ஆரம்பப் படிப்பு இலவசமாய்க் கட்டாயமாகவும், நடுத்தரப் படிப்பு (சற்று) சம்பளக்குறைவாகவும், உயர்தரப் படிப்பு அவ் வருமானத்தைக் கொண்டும் தற்போது நடத்தச் செய்யலாமென எண்ணுகின்றோம்.

படிப்பின் யோக்கியதையை, சம்பளக் குறைவினால், உபாத்திமார்கள் குறைக்கவேண்டுமென்றெண்ணுவதேயில்லை எனலாம். குறைந்த சம்பளத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்த முடியாதாகையினாலும், வேறு வருமானத்தில் தமது கவனத்தையும் யோசனையையும் செலுத்த நேரிடுவதனாலும், இயற்கையாகவே சற்றுக் கல்வியில் கவனம் குறையத்தானே செய்யும். ஆகவே, சம்பளத்தைக் குறைத்தீர்களானால், சொல்லிவைக்கப்படும் படிப்பின் யோக்கியதையைத் தானாகவே குறைத்து விடுவோர்கள் என

மொழிந்த நமது டைரக்டராகிய கனம் ஜே. எச். ஸ்டோன் துரையவர்கள், குறைந்துவிடும் என மொழிந்திருத்தல் வேண்டும் — மொழிந்திருப்பாரேயானால் பொருந்தும்.

சிலருடைய நன்மைக்காக எல்லாருக்கும் வரி விதிப்பது அழகாகாவிட்டாலும், பொன்சுரங்கமில்லாவிட்டாலும், ஆங்காங்கு வேறு பல இலாகாக்களில் நேரிடும், அதிகமும் வீணுமான செலவுகளைக் குறைக்கலாம். எமக்குத் தெரிந்தவரையில் பொது மராமத்து இலாகாவில் செலவைக் குறைத்தும், லோக்கல் பண்டின் வருமானப் பகுதி யொன்றில் நடை முதல் வருஷத்தைவிட அதிக வரும்படியை அவசியம் எதிர்பார்க்கலாம்.

நாம் பார்த்தவரையில் அதிகாரிகளின் கவனக் குறைவினால், பொது மராமத்து இலாகாவில் வீண் செலவு ஏற்படுகிறது; எப்படியெனில், முற்காலத்தில் பாலங்களை (கைபிடி சுவர்களை) ரிப்பேர் செய்த சில வருடங்கள் சென்ற பிறகே மறுபடியும் மராமத்து செய்வர்; காரணம், அப்போது செய்த வேலை மிகக் கெட்டியாகவும் பல வருடங்கள் நீடித்து இருக்கும்படியானதாகவும் கண்ட்ராக்டர்கள் செய்துவந்தனர். தற்போதோ வருஷந்தோறும் அடிக்கடி, சீக்கிரஞ் சீக்கிரம் மராமத்து செய்யப்படுகின்றது. காரணம், வேலை சுத்தமின்றியும் கெட்டியின்றியும் கவனமின்றியும் கண்ட்ராக்டர் அதிக வரும்படிக் காசைப்பட்டு, சொற்ப செலவு செய்து மேலேமட்டும் பார்ப்போர் கண் கவரும்படியாய்ப் பகட்டுவேலை செய்வதனாலேயே. உதாரணமாக, தடவை ஒன்றுக்கு மராமத்து வேலைக்குச் செலவு, கெட்டியாக அதிக நாள் நீடித்திருக்கும்படியாகச் செய்வதற்கு ரூ. 150 என்றும்; தாழ்ந்த தரமான வேலைக்கு ரூ. 100 என்றும்; ஓர் குறிப்பிட்ட காலத்தில் முறையே 2-5 தடவை ரிப்பேரென்று வைத்துக்கொண்டால், இரண்டிற்கும் முறையே ஓர் குறிப்பிட்ட காலத்தில் ரூ. 300-ம், 400-ம் செலவு ஏற்படுகிறது. தற்போதைய வேலை அதிக செலவு ஏற்படினும் வேலையின் பாகுபாட்டையும் முற்கால தற்கால மராமத்துகளின் பாகுபாடுகளையும், முற்காலம் அதிக நாட்சென்று மராமத்துகள் செய்திருப்பானேன்? தற்போது மிகச் சீக்கிரம் மராமத்து செய்யப்படுவானேன்? என்னுங் காரணத்தை நமது மராமத்து இலாகா அதிகாரிகளும், ஜனப்பிரதிநிதிகளும் யோசிக்கின்றார்களில்லையென்பதைத் திண்ணமாச் சொல்வோம். நல்ல நிலைமையில் (கெட்டியாக) உள்ள



காரையை (சுண்ணாம்பை) இடித்துப் புதிப்பிக்கின்றனர். இதற்குக் காரணமும், அவ் விலாகாவில் அவ் வருடத்தில் அதிகபணம் (மிகுந்து) இருப்பதை, செலவழிப்பதற்காகவே யென்னலாம். ஏன், அவ்வித நல்ல நிலைமையி லிருப்பதை இடித்துவிட்டுப் புதிப்பிக்க வேண்டும்? அம் மிகுதித் தொகையை அடுத்த வருடப் பண்டில் சேர்த்து முக்கியமான தேவைகளுக்குச் செலவு செய்யப்படாதா? கல்வி அல்லது, கல்விபோன்ற வேறு இலாகாவிற்கு ஈடு செய்து, முக்கியமானதும் அவசியமானதுமான செலவுகளுக்காக உபயோகப்படுத்தக்கூடாதா? நிற்க,

ரோட்டுகளை சீர்திருத்துவதிலும் இவ்வித குறையே காணப்படுகின்றது. தற்போது சில இடங்களில் (கிராம பக்கங்களில் அநேகமாக) கவனிக்கின், இம் மராமத்து மிக்க ஆபாசமென்றே சொல்லவேண்டும். சீர்திருத்தமும் தக்க முறைகளோடு அனுசரிக்கப்படுவதில்லை; அன்றியும், திருத்தியவன்றே—மறுநாளே—ஒன்று இரண்டு வாரத்திலேயே அவை (சரளைகள்) மேலே கிளப்பப்பட்டு நொறுங்கி மாவாகிப்போவதால் திருத்திய ரோட்டை (வண்டிப் பாதையை — ரஸ்தாவை) அடுத்தபடி உடனேயே மறுபடியும் திருத்த வேண்டியதுதானே. இவ்வகையி லேற்படும் செலவை ஒவ்வொருவரும் கவனிக்கின் நன்மை தீமை விளங்கும். நன்கு கவனத்துடன் நல்ல மேற்பார்வையில் கெட்டியாகவும் சுத்தமாகவும் செய்யப்படின் இவ்வளவு செலவு ஏற்படக்கூடுமா? இதையும், அதன் மேற்பார்வை அதிகாரிகளும் ஜனப்பிரதிநிதிகளும் மற்றோரும் கவனிக்கின்றார்களில்லை. மற்றும்,

லோக்கல் பண்டைச் சேர்ந்த ரஸ்தாக்களின் ஓரமுள்ள பலன் தரு மரங்களைக் குத்தகைக்கு ஏலம் விடுவதில், மைல் கணக்காகவும் சில வருஷங்களுக்கு ஒட்டு (மொத்த)க் குத்தகையாகவும் விடுகின்றனர். மைல் கணக்காய் விடாமல், சில்லறையாக ஒவ்வொரு வருஷத்திற்குமட்டும் விடுவார்களானால் ஏழைப் பிரஜைகளுக்குப் பரோபகாரமாகவும் உதவியாகவும் அனுகூலமாகவும் இருப்பதோடு வருமானமும் இரட்டிப்பாகக் கிடைக்கும். மொத்தமாக எடுப்போர், இரண்டொரு மரங்களாக விடுவதால், குத்தகைத் தொகைக்கு அதிகமாகவே ஏலத் தொகை அதிகரிக்கின்றது. இவர்கள், இவ் வதிகத் தொகையைத்தான், தத்தமது (கிராமப்) பொது நன்மைகளுக்குச் செலவிடுகின்றார்களோ யில்லை. மொத்தக் குத்தகையின்போது வந்திருந்தவர்கள் அவ்வதிகத் தொகையை

சொந்தப் பிரயோஜனத்துக்காகப் பங்கிட்டுக் கொள்ளுகின்றனர். இப் பங்கு இவர்களின் சிரமபரிகாரத்திற்குப்போதும். என்ன சிரமமெனின், தட்டுக் குத்தகைக்கு ஏலம் விடும்போது, வீட்டில் உட்கார்ந்திருப்பதை விட்டு; எழுந்து, நடந்து, அங்குவந்து நின்று கொண் டிருப்பதாகும்! என்னே!! ஆட்சியினரின் ஆளுகை!!! கவர்ன்மெண்டில் பணம் இல்லை யில்லை யென்றால், கனந் தங்கிய கவர்னர் லார்டு பெண்ட்லண்ட் பிரபு அவர்கள் கூறுவதுபோல் பொன் சுரங்கமா இருக்கின்றது? செலவைச் சீராய்ச் செய்யின் பொருளில்லாது போகுமா? உள்ள வரும்படியைக் கவனியாது ஆட்சி புரிந்தால், உள்ள வரும்படி தானே வருமா?

உபாத்தியாயர்களாகிய நமக்கோ மற்ற விஷயங்களில் கௌரவம், நாம் சொல்லும் இவ்வித உண்மையான விஷயங்களைக் கவனிப்பவரில்லை. நமக்குத் தெரியா திருக்கும் இவ்வித குறைவுகள் இன்னும் எவ்வளவோ இருக்கலாம் அல்லவா? இஃதிங்ஙனமாக,

கல்விச் செலவோ, நம் தேசத்தில் தலைக்கு $11\frac{1}{2}$ தம்படியும், ஜப்பானில் $13\frac{1}{4}$ அணுவும், பிலிப்பைன் தீவில் ரூ. 1-6-10ம், ஐரோப்பாவில் ரூ. 3-11-3 ம், அமெரிக்காவில் ரூ 13-5-7 ம், செலவு செய்யப்படுகின்றதென, 20-12-17 ல் வெளியான திராவிடனில் 'நாமும் நம் நாடும் நலமடைவ தெப்படி?' என்னும் வியாஸத்தில், உ. ப. கல்யாண ராமன் என்பவர் குறிப்பிட் டிருப்பது கவனிக்கத்தக்கது.

(இன்னும் வரும்)

P. பரிமணப்பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர் சோலை P. O., திருச்சி ஜில்லா.

28 MAR 1919




உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்
மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 14 | 1919ஹ நொவெம்பர்மீ | மாதம் 6

## GARLAND OF VERSES

### வருக

கண்ணே வருக இனிமைமிகும் கனியே வருக அமுதூறும்
கரும்பே வருக மாறாத களிப்பே வருக கருத்திலூறும்

எண்ணே வருக கண்கவரும் எழிலே வருக எங்கள்குல
இறையே வருக மனத்திலூறும் இன்பே வருக இசையோங்கும்

பண்ணே வருக தெவிட்டாத பாகே வருக பழங்கலந்த
பாலே வருக ஒளியாடும் பணியே வருக பரந்தபெரும்

விண்ணே வருக கண்ணிலூறும் விழியே வருக வருகவே
வீடு விளங்க விளையாடும் விளக்கே வருக வருகவே.

பத்திராதிபர்,

# THE RAIN WATER

## மழை ஜலத்தின் மாறுபாடுகள்

ஒரு பாடசாலையில் 4 ஆம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த சாமிக்கண்ணு என்னுமோர் சிறுவன் விடுமுறை தினத்தன்று உபாத்தியாயர் கொடுத்த விட்டப்பியாஸங்களையெல்லாம் செவ்வனே முடித்து வைத்துவிட்டுத் தனிமையான ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டு பின் வருமாறு தனக்குள் ஆலோசிக்கிறான்:

'என்ன! என் மனம் ஒரு விதமான கிளர்ச்சியை யடைந்திருக்கிறது. இங்கே இருக்க மனமில்லை. எங்கேயாவது போகலாமா? என்ன செய்யலாம்? (சற்று யோசித்து) நல்லது, நமது நேசன் ஆரோக்கியசாமியைக் கூட்டிக்கொண்டு ஆற்றங்கரையிலுள்ள மைதானத்தில் போய் விளையாடலாம், இதுதான் சரியான யோசனை' (உடனே எழுந்து தன் நண்பன் வீட்டை நோக்கிப் போகிறான். வீட்டை யணுகியதும் உற்சாகத்துடன் சென்று, அப்போதுதான் வெளியே வந்துகொண்டிருந்த நண்பனைக் கண்டு சொல்லுகிறான்.)

சாமிக்கண்ணு — ஆரோக்கியசாமி, என்ன செய்யப்போகிறாய்?

ஆரோக்கியசாமி — ஒன்றுமில்லை, எங்கேயாவது உலாவப் போகலாமா என உத்தேசித்தேன். துணைவர் இல்லை. நல்ல வேளையாக நீயும் வந்தாய். உன் அபிப்பிராயம் யாதோ?

சாமிக்கண்ணு — கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோ லிருக்கிறது. நானும் அதை உத்தேசித்தே வந்தேன். ஆற்றங்கரை மைதானத்துக்கு வருகிறாயா?

ஆரோக்கியசாமி — நல்லது வா போகலாம். ஆனால்........

சாமிக்கண்ணு — என்ன, என்ன, ஏன் ஆனால்........ என்கிறாய்?

ஆரோக்கியசாமி — ஆனால் நமது நேசன் சீனிவாஸன் வந்தால் கேலியாகப் பேசி நம்மைச் சந்தோஷப் படுத்துவான். அவனையும் கூட்டிக்கொண்டு போகலாமா?



சாமிக்கண்ணு — வேண்டாம், அவனைக் கூப்பிடப்போனால் நேரமாகிவிடும். மழையும் வரும்போ லிருக்கிறது. மழை வருமுன் நாம் போய் உல்லாசமாய் உலாவி வருவோம்.

ஆரோக்கியசாமி — அப்படியானால் நல்லது, நாமிருவரும் போகலாம் வா. குடை எடுத்து வரட்டுமா?

சாமிக்கண்ணு — வேண்டாம், மழை இப்போது வாராது. மழை வருவதற்குள் வந்துவிடலாம். (இருவரும் போய் உல்லாசமாக விளையாடிவிட்டுத் திரும்பிப் பாதிதூரம் வருகையில் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது.)

ஆரோக்கியசாமி — நான் முன்னேயே சொன்னேனே கேட்டாயா?

'பகலோன் தெறுகிரணம் பாய்பறவை எச்சம்
மிகமே லுறுதகற்றும் விண்ணின் — முகிலதினால்
பெய்யுமழை யைத்தடுக்கும் பேரழகு மாம்ஒருவர்
கையில் குடையிருந்தக் கால்'

என்று தெரியாமலா சொன்னார்கள்.

சாமிக்கண்ணு — இப்போது அதெல்லாம் பேசி என்ன செய்கிறது. அதோ தெரியும் சத்திரத்தில் போய்த் தங்கலாம். வேகமாய் ஓடிவா. (இருவரும் போய்ச் சத்திரத்தில் தங்கினார்கள்.)

ஆரோக்கியசாமி — அடே அப்பா! மழை உக்ரமாய்ப் பெய்கிறது, கொஞ்ச நேரத்தில் பூமியில் எவ்வளவு மழை நீர் விழுந்தோடுகிறது பார். இவ்வளவு ஜலமும் ஆற்றில்தானே போய் விழுகிறது?

சாமிக்கண்ணு — எல்லா ஜலமும் ஆற்றில் போய் விழுகிறதில்லை. இம் மழைத் தண்ணீரில் கொஞ்ச பாகமட்டுந்தான் சிறு சிறு அருவிகளாக ஓடிக் கடைசியில் ஆற்றில் போய்க் கலக்கும்.

ஆரோக்கியசாமி — மீதியான நீரெல்லாம் என்ன விதமாய்ப் போகிறது?

சாமிக்கண்ணு — அதோ அந்தப் பாதையில் கவனித்துப் பார்த்துச் சொல் பார்ப்போம்.

ஆரோக்கியசாமி — என்னத்தைக் கவனிக்கிறது. ஆமாம் — பாதையின் நடுவேயிருந்து ஜலம் வழிந்தோடி இருபக்கத்திலுமுள்ள சாக்கடையில் விழுகிறது. வேறு என்ன?

சாமிக்கண்ணு — அதுதான் தெரியுமே, தாங்கள் இருக்கும் இடத்தைக் காட்டி, இதைப்போலவா அந்த பாதையின் மண் இருக்கிறது ?

ஆரோக்கியசாமி — ஒஹோ ! நனைந்திருக்கிறது.

சாமிக்கண்ணு — சரி, நனைந்திருந்தால் அந்த மண்ணோடு மழை ஜலம் கலந்திருக்கவேண்டு மல்லவா ?

ஆரோக்கியசாமி — ஆம், மழைஜலம் பூமியில் பட்டவுடனே மண்ணில் கலக்கிறது.

சாமிக்கண்ணு — மழை அதிகமாய்ப் பெய்தால்தான் தண்ணீர் பெருகியோடுகிறது; சொற்பமாய்ப் பெய்தால் அப்போது இப்படி ஜலம் திரண்டு ஓடுமா ?

ஆரோக்கியசாமி — இல்லை, மிதமாய்ப் பெய்தால் மழை ஜலம் பூமியில் ஊறிவிடும். முதலில் பூமியில் ஊறித்தான் பின்பு திரண்டு ஓடும்.

சாமிக்கண்ணு — பூமியில் சுவறிப் போகிறதென்று சொன்னாயே, மெய்தான். மழை பெய்யும்போதெல்லாம் மழை ஜலத்தின் கொஞ்சபாகம் பூமியில் ஊறிப்போகும்.

ஆரோக்கியசாமி — என்ன ஆச்சரியம்! மழை பெய்யும்போதெல்லாம் இவ்வண்ணம் மழைத் தண்ணீரைப் பூமி இழுத்துக்கொண்டால் பூமியில் எவ்வளவோ நீர் இருக்கவேண்டுமே, பூமியில் இந்த மழைஜலம் ஊற ஊற, ஊறின ஜலமெல்லாம் பூமியின் கீழேதானே போகிறது?

சாமிக்கண்ணு — ஆச்சரியம் ஒன்று மில்லை. எப்போதாவது பூமியில் வீடுகட்ட அஸ்திவாரம் தோண்டும்போது நீ பார்த்திருக்கிறாயா ?

ஆரோக்கியசாமி — போன வருஷம் என் மாமனார் ஒரு மெத்தைவீடு கட்டினார். நான் கிட்டேயிருந்து பார்த்தேன். கொல்லத்துக்காரர் வீடுகட்டும்போதுகூட அடிக்கடி அவர்கள் அருகிற் சென்று பார்த்திருக்கிறேன்.

சாமிக்கண்ணு — நல்லது, அஸ்திவாரம் போடும்போது மேலேயுள்ள மண் எப்படி யிருந்தது? கீழ் போகப்போக எவ்வாறு அங்கங்குள்ள மண் காணப்பட்டது தெரியுமா ?



ஆரோக்கியசாமி — நன்றாய்த் தெரியும். மேல்தரை பொலபொலத்த மண்ணும் வெட்டுவதற்கு இலகுவாயு மிருந்தது. ஆனால் போகப்போகக் கொஞ்சம் கடினமாய் வெட்டி எடுக்கவேண்டியபடி அடிமண் இருந்தது. அதனோடு சிறுசிறு கற்களும் கலந்திருந்தது.

சாமிக்கண்ணு — கிணறு வெட்டும்போது எப்போதாவது நீ பார்த்ததுண்டா ?

ஆரோக்கியசாமி — இல்லை, ஆனால் கிணற்றைப் பார்த்திருக்கிறேன். ஒஹோ ! இப்படி ஊறிப்போய் பூமிக்குள் தங்கியிருக்கும் ஜலந்தானே கிணறுகளில் ஊற்றுகளாகப் புறப்படுவது ! சரி சரி, கண்டுகொண்டேன். இப்படியா சங்கதி ?

சாமிக்கண்ணு — மெய்தான். ஆத்திரப்படாதே. முதலில் நீ கூறியபடி மிருதுவான மண் மேல்தரையில் உள்ளது. அதற்குக் கீழ் கொஞ்சம் கடினமானதாயும் கற்பொடிகள் கலந்ததாயு மிருக்கக்கூடியது 'அடிமண்'; அதற்கும் கீழ் அநேகமாய் 'மணல்' இருக்கும். மணலுக்குங் கீழ் 'களிமண்' அல்லது 'பாறை' இருக்கும். மழைஜலம் பூமியில் ஊறினது, மேல்மண், அடிமண், மணல் இவைகளைக் கடந்து களிமண் அல்லது பாறை இவை தண்ணீரை உட்புகவிடாதாகையால் அங்கேதான் இந்த நீர் தங்கியிருக்கும். கிணறு வெட்டும்போது இந்த ஜலந்தான் நீ கூறியவாறு ஊறிக் கிளம்பும். சில விடங்களில் பூமியில் சுவறும் மழைஜலம் அதிக ஆழமாக உட்போகாமல் பூமியின் மேல்மட்டத்துக்குச் சற்றுக் கீழாகவே தங்கி, சரிவான பாகத்தை நோக்கி வழிந்து, தரையின் மேல் மட்டம் பள்ளமாக இருக்கும் இடத்தில் 'ஊற்றுக் கண்கள்' வழியாக வெளிக் கிளம்புவதும் உண்டு. பார்த்தாயா? சில இடங்களில் ஆற்றுநீர் இல்லாமையால் பூமியில் வெட்டப்படும் கிணறுகளும், ஊற்றுகளுமே ஜலாதாரம். இந்த ஊற்று ஜலம் நிர்மலமானது. மழைஜலத்தில் கலந்துள்ள தூசிகள் மேல்தரை, அடிமண், மணல் இவற்றால் தடுக்கப்பட்டுப் பரிசுத்தமானதாக இந்த ஜலம் ஆகஹேதுவாகிறது. மேலும், சில பூமியில் கலந்துள்ள தாதுப் பொருட்களின் சேர்க்கையால் சில ஊற்று ஜலம் கடினமான பல வியாதிகளைப் போக்கும் தன்மை யுடையதாயு மிருக்கிறதாம். ஆஹா ! கடவுளின் பேரன்பையும் அளவு கடந்த ஞானத்தையும் யாரே உரைக்கவல்லார்!

ஆரோக்கியசாமி — அன்பனே! என் புகல்வேன்! எனக்கு அடங்கா மகிழ்ச்சியை உண்டாக்கிவிட்டாயே. மெய்தான். இது சாதாரணமான விஷயமானாலும் ஆழ்ந்து யோசித்தால் எவ்வளவு புத்தி உண்டாகிறது! நீ சிறுவனாயினும் இவ்வளவும் கவனித்திருக்கிறாய். நான் உனக்கு மூத்தவனாயினும் மூடன்தான்.

சாமிக்கண்ணு — அப்படிச் சொல்லாதே இது அற்புதமில்லை. இன்னும் எவ்வளவோ 'இயற்கை அற்புதங்கள்' உண்டு. அவற்றைக் கவனித்து யோசித்தால் பசிகூட எடுக்காது. நல்லது மழை நின்றுவிட்டது. போகலாம் வா. (இருவரும் போகின்றனர்.)

ஆரோக்கியசாமி — என்ன, தரை மிகவும் குளிர்ச்சியா யிருக்கிறது. சீக்கிரம் வா.

சாமிக்கண்ணு — 'மழை ஜலத்தின் மாறுபாடுகள்' இவ்வளவு மட்டும் அல்ல. இன்னும் உண்டு.

ஆரோக்கியசாமி — அப்படியா; நல்லது, சொல் பார்க்கலாம்.

சாமிக்கண்ணு — அதோ அங்கே பார். அந்தப் பள்ளங்களில் என்ன இருக்கிறது?

ஆரோக்கியசாமி — மழை ஜலம் தங்கி யிருக்கிறது. சூரியன் பிரகாசிக்கிறது, வெகு ஆநந்தமா யிருக்கிறது.

சாமிக்கண்ணு — அந்தப் பள்ளங்களில் தங்கியிருக்கிற தென்றாயே, மழை ஜலத்தின் கொஞ்ச பாகம் பள்ளங்களில் தங்கிவிடும். இன்னமும் கேள்.

ஆரோக்கியசாமி — இது தெரியாதா? பிறகு,

சாமிக்கண்ணு — நமது வீட்டை யணுகிவிட்டோம். இருக்கட்டும். நாம் சத்திரத்தில் இருந்து புறப்படும்போது தரை எப்படி இருந்தது? இப்போது எப்படி யிருக்கிறது?

ஆரோக்கியசாமி — நாம் புறப்படும்போது தரை அதிக ஈரமாக இருந்தது. இப்போது சொற்ப ஈரம்தா னிருக்கிறது.

சாமிக்கண்ணு — அப்போ திருந்த ஈரம் எல்லாம் எங்கே போய்விட்டது?



ஆரோக்கியசாமி — பூமியில் சுவறி யிருக்கும்.

சாமிக்கண்ணு — அப்படியானால் (ஓர் கருங்கல்லைக் காட்டி) இதன்மீதுள்ள மழை ஜலம் எப்படிப் போனது?

ஆரோக்கியசாமி — இதுவா? இரு (சற்று நின்று) உம், சூரிய உஷ்ணத்தினால் ஆவியாய் மாறிவிட்டது.

சாமிக்கண்ணு — இது மட்டும் தெரிந்ததே, அவ்வளவு தண்ணீரையுமா பூமி இவ்வளவு சீக்கிரத்தில் உறிஞ்சிவிட்டது? கொஞ்சம் நன்றாய் நினைத்துப் பார்.

ஆரோக்கியசாமி — ஆமாம், மழை ஜலத்தின் கொஞ்சம் பாகம் நீராவியாக மாறிவிட்டதுபோல்தா னிருக்கிறது.

சாமிக்கண்ணு — என்ன சந்தேஹமாய்ச் சொல்லுகிறாய்? ஆனால் அப்படி நீராவியாக வில்லையோ?

ஆரோக்கியசாமி — அடடா! ஆம், ஆம். சூரிய வெப்பத்தினால்தான் ஆவியாக மாறிவிட்டது. சரி, கண்டுகொண்டேன்.

சாமிக்கண்ணு — பார்த்தனையா? சந்தேஹத்தைத் தீர்த்தனையா? ஆரோக்கியசாமி! கவனி. கடல், ஆறு, குளம், ஏரி, இவற்றின் ஜலம் சூரியன் உஷ்ணத்தினால் ஆவியாகி மேலெழும்பி, மேகமாகி, மழையாகவும் பெய்கிறது. அந்த மழையால் எவ்வளவோ நன்மையுண்டு. இதோ பார். மழைஜலம் பூமியில் விழுந்தபின் பல்வேறு மாறுதல்களை யடைகிற தல்லவா? அந்த மழைஜலமே கதிரோன் உஷ்ணத்தினால் ஆவியாகி மறுபடியும் ஆகர்ய மண்டலத்தை யடைகிறதல்லவா? ஆகையால் அன்ப! நீ எப்போதும் எவ்விடத்தும் இயற்கை வஸ்துக்களைக் கவனித்து, அதனதன் காரணங்களைக் கண்டுணர முயலுவாய். தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள். எங்கள் உபாத்தியாயர் இவ்விஷயத்தில் மிகவும் உதவிசெய்வார். அவரிடம் கேட்டு நான் சமயாசமயங்களில் சில விஷயங்களை உனக்குச் சொல்லுவேன்.

ஆரோக்கியசாமி — நேசா! அப்படியே இனி நடப்பேன்; வந்தனம். நான் போகிறேன்.

சாமிக்கண்ணு — நல்லது. இப்போது நீ அறிந்தவை உனக்கு எப்போதும் ஞாபகத்தி லிருக்கவேண்டும். எங்கே, மழைஜலம்

என்னென்ன மாறுதல்கள் அடைகின்றது? சுருக்கமாய்ச் சொல் பார்ப்போம்.

ஆரோக்கியசாமி —

(1) மழை ஜலத்தின் ஒரு பாகம் பூமிக்குள் சுவறிவிடுகிறது.

(2) மற்றோர் பாகம் சிறு சிறு அருவிகளாக ஓடி ஆற்றிலோ, குளத்திலோ கலந்துவிடுகிறது.

(3) வேறொரு பாகம் பள்ளங்களில் தங்கிவிடுகிறது.

(4) இன்னொரு பாகம் நீராவியாகிவிடுகிறது. நண்பா! இவைதான். இவற்றை மறவேன். கூடுமானால் அடிக்கடி வெளியிடங்களுக்கு என்னுடன் உலாவ வந்து உனக்குத் தெரிந்தமட்டும் சில சொல்லவேண்டும். அதுவே யென தெண்ணம். எனதன்பார்ந்த வந்தனம். போய்வரட்டுமா?

சாமிக்கண்ணு — நல்லது, போய் வா. யானும் போய் வருகிறேன். வந்தனம்,

(இருவரும் போகின்றனர்).

M. அடைக்கலசாமி,
ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல்,
திருநரையூர்.

## IS THE TEACHER RESPONSIBLE FOR THE LACK OF EDUCATION?

## கல்விக் குறைவுக்குக் காரணம் உபாத்தியாயர்தானா?

இங்கிலாந்தின் கல்விச் சாலைகளிலுள்ள குழந்தைகள் மாணவர்கள் முதலியோரின் தேகநிலைமையை நன்கு ஆராய்ந்து பார்த்து, வேண்டிய பரிகாரங்களைச் செய்வதற்காகக் கல்வி யிலாகாவை யொட்டியிருக்கும் பிரதம வைத்திய அதிகாரியான 'ஸர் ஜார்ஜ் நிபதுமான்' என்பவர், கல்விச் சாலைகளிலுள்ள குழந்தைகளின் தேகநிலைமை விஷயமாய்ப் பரிசீலனை செய்து பார்த்து 1916-ம் வருடத்திற்கு எழுதியுள்ள ரிப்போர்ட்டின் முக்கியமான சில அம்சங்களை சுதேசமித்திரன் வெளியிட்டிருப்பதை, ஈண்டு [illegible]ரைவாம்:—



இங்கிலாந்து வேல்ஸ் ஆகிய இரண்டிடங்களிலுள்ள பாடசாலைகளில் வாசிக்கும் குழந்தைகளின் தொகை சுமார் 60-லட்சம். அவர்களில் 6-லட்சம் பேர் தகுந்த போஷணை யில்லாததினால் கல்வியின் முழுப்பலனையும் பெற முடியவில்லை. இன்னும் 6-லட்சம் பேரோ உடலும் தலையும் அசுத்தமா யிருப்பதினால் கல்வியின் முழுப்பலனையும் அடைய முடியாது போகின்றனர். கண் பார்வை மங்கி யிருப்பதனால் 6-லட்சம் பேருக்குக் கல்வியின் முழுப்பிரயோஜனமும் கிடைப்பதில்லை. இன்னும் சுமார் 3-லட்சம் குழந்தைகளோ செவி தொண்டை முதலிய அவயவங்களிலுள்ள நோய்களுக்கு ஆளாகி, பாடசாலையின் முழுப்பலனையும் பெறாது இருக்கின்றனர். சுருங்கச் சொன்னால் அறியாமை, அசுத்தம், நோய் ஆகிய மூன்று பிசாசுகளையும் ஒழித்தால்தான் மனித வருக்கத்துக்குத் தக்க பலன் கிடைக்கும்.

இங்கிலாந்திலுள்ள நிலைமையைப் பரிகரிப்பதற்காகவே அவர் சிபார்சு செய்திருப்பதில் மிகவும் முக்கியமானவை கீழ்வருவனவாகும்:

1. 'ஒவ்வொரு குழந்தையும் வருஷத்திலே குறிப்பிட்ட சில காலங்களில் வைத்திய பரிசீலனை செய்யப்பட்டு சிகிச்சை பெறவேண்டும்.

2. 'அரைகுறையாகப் போஷிக்கப்படுவதாகக் காணப்படும் குழந்தைகளுக் கெல்லாம் தக்க போஷணை கிடைக்கும்படி எவ்விதத்திலாவது ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

3. 'நோய் கொண்டிருப்பதாகக் காணப்படும் குழந்தைகளுக் கெல்லாம் தக்க பரிகாரம் கிடைக்கும்படி ஸ்தல வித்தியா அதிகாரிகளோ இதரர்களோ வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும்.

4. 'தகுந்த காற்றும் வெளிச்சமும் உள்ள இடத்தில்தான் எல்லாக் குழந்தைகளும் போதனை பெறவேண்டும்.

5. 'ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்றவாறு நாள்தோறும் சரீரப்பயிற்சி கிடைக்கும் மார்க்கத்தைத் தேடவேண்டும்.

6. 'பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டிய எக் குழந்தையும் வேலையில் அமர்த்தப்படக் கூடாது.' என்பவையே [illegible]

நமது சென்னையில் அவ்வித பரிசீலனையைச் செய்து பார்ப்பதற்காக கர்னல் தானவன் என்பவரை நியமித்திருப்பதாகவும் தெரிகிறது.

நமது கீழ்தரப் பாடசாலைகளைக் கவனித்திடிலோ, மேற்சொல்லிய காரணங்களோடு பெற்றோர் கவனியாமையும், வீட்டு வேலைகளைச் செய்ய (ஆடுமாடுகள் மேய்க்க, வயல் தோட்டங்களுக்குச் செல்ல, நெல் பார்த்துக்கொள்ள, குழந்தையை வைத்துக்கொள்ள முதலியவற்றை) பெற்றோர் ஏவுதலும், சொந்த ஜனங்களுள்ள ஊர்களுக்குச் சென்று நாட்கணக்காயும் மாதக்கணக்காயும் வாராதிருத்தலும், வியாதியா யிருத்தலும் காலா காலங்களில் ஆகாரம் அளியாமையும் — வீட்டில் இல்லை யென நின்றுவிடுதலும் — சமைத்த பிறகு சாப்பிட்டுப் போகலாமென நிறுத்திக்கொள்ளுதலும் — பிறகு உண்டு நேரங்கடந்து வருதலும், திதிஎன்று வாராதிருத்தலும், வேற்றூரிலிருந்து சொந்தக்காரர் வந்தனரென நின்றுவிடுதலும், ஒரே இனத்தவர் அதிகமாயுள்ள ஒருவர் வீட்டில் நடைபெறும் ஒரு விசேடத்திற்குப் பிள்ளைகள் எல்லாம் (பெற்றோருடன்) செல்வதும், விடுமுறையில்லாத கிராமப் பொது விசேடங்கட்குப் பெற்றோருடனும் தனியாகவும் (கோயில் முதலிய இடங்கட்கு) செல்வது, அவ்வச்சமயம் அடிக்கடி பிள்ளைகளைப் பெற்றோர் அழைப்பது, கொல்லை காத்தல் முதலியவற்றிற்குச் சிலநாள் நிறுத்திக்கொள்ளல் — நின்றுவிடுதல், எண்ணெய் தேய்த்துக்கொள்ளல், க்ஷவரம் செய்துகொள்ளல் முதலியவைகளுக்கு இம்மாதிரி நிறுத்திக்கொள்வதால் நின்றுவிடுவதாலும் கல்வியின் அபிவிருத்தியானது சிறுவர்களுக்குச் சற்றுக் குறைவுபடுமென்பதைப் பொதுஜனங்களும் அதிகாரிகளும் கவனிப்பார்களாயின், உபாத்திமார்களின் பேரில் குறைசொல்லப் பெரும்பான்மையும் இடமிராதென்னலாம்.

மற்றொரு காரணத்தையும் இங்குக் குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை. இரண்டு உபாத்தியாயர் ஆளவேண்டிய குழந்தைகளை ஒருபாத்தியாயரும், மூன்றுபாத்தியாயர் ஆளவேண்டிய குழந்தைகளை இரண்டுபாத்தியாயரும் ஆளவேண்டி யிருப்பதினாலும் படிப்பின் விருத்தி சற்றுக் குறைவுபடும் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஸ்கூல் இன்ஸ்பெக்டரவர்களின் அங்கீகாரத்தின்பேரில், ஜில்லா போர்டின் சாங்ஷனுக்குச் சுமார் $4\frac{1}{2}$ மாதமாகியும் உபாத்-



தியாயர் நியமிக்காதிருப்பின், எவ்விதந்தான் அதிகப் பிள்ளைகள் வைத்துக்கொண்டுள்ள உபாத்தியாயர் சரியான விதமாய்க் கற்பிக்கக்கூடும் ?

இன்ஸ்பெக்டரவர்களால் அங்கீகாரமானது ஜில்லாபோர்டாரால் சாங்ஷனுகை சுமார் $2\frac{1}{2}$மாத மாகிறது; இன்ஸ்பெக்டரவர்களுக்கு அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்களிட மிருந்து சிபார்சு செய்துவர அவ்விதமே $2\frac{1}{2}$மாதமும் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்களிட மிருந்து அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்களுக்குச் சிபார்சுசெய்துவர $2\frac{1}{2}$மாதமும், ஜில்லா போர்டாரிட மிருந்து தாலுகா போர்டாருக்குவர $2\frac{1}{2}$மாதமும், தாலுகாபோர்டார் அஸிஸ்டெண் டின்ஸ்பெக்டரவர்களுக்கும் அவரிடமிருந்து ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்களுக்கு வர முறையே $2\frac{1}{2}$, $2\frac{1}{2}$ மாதமும்; இவர் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்களுக்குச் சிபார்சு செய்வதன்முன், பாடசாலையில் அதிகப் பிள்ளைகள் நிலைத்திருக்கின்றனவா ? எனப் பரீக்ஷிக்க 2 அல்லது 3-மாதமும் சென்றால் அதிகப் பிள்ளைகள் சேர்ந்த சுமார் ஒன்று அல்லது ஒன்றரை வருடஞ் சென்றே ஓர் உதவி உபாத்தியாயர் நியமிக்கப்படுகிறார் என்னலாம். $1\frac{1}{2}$ வருடத்திற்கு, 2-அல்லது 3-உபாத்தியாயர் ஆளவேண்டிய பிள்ளைகளை 1-அல்லது 2-உபாத்தியாயர்கள் ஆள்வதால் பிள்ளைகளிடம் கல்வியைக் குறைவாகக் காணலாமோ, கூடக்காணலாமோ என்பதும் உணரக்கூடியது.

இதனால் யான் அதிகாரிகளின்மீது குறைசொல்வதாக எண்ணக்கூடாது. ஆயினும் காலதாமதத்திற்குக் காரணம், அவர்களுக்கு இதைப்போல இருக்கும் எவ்வளவோ காரியங்களாக இருக்கலாம்.

P. பரிமணப் பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர் சோலை, P. O., திருச்சி ஜில்லா.

# THE TEACHER
## குருபீடம்

நாம் பரதகண்ட வாசிகள். இந்தியா என்னும் மாதாவின் மக்கள். எல்லோரும் ஏக சகோதரர்கள். இதுவரையில் சிசுவாயிருந்து இப்போது பால்யதசையை அடைந்தவர்களாயிருக்கிறோம். நம்முடைய ஸ்தானத்தை நாமே தேர்ந்தெடுத்திருக்கிறோம். இந்த உத்தம பதவியை நமக்கு அளித்திருப்பது நமது பூர்வஜன்ம பலனேயாம். மோக்ஷத்தை அடைய இதுவே ஒரு துணைக்கருவியாகும். நமது சகோதர சகோதரிகள் இந்தியமாதின் பின் சந்ததியாருக்கு ஞானம் என்ற கண்ணைத் திறந்து பார்க்கும்படி செய்வது நமது முதற் கடமையாகும். கடவுள் சிருஷ்டிகளில் மானிட சிருஷ்டி அதிக உத்தமமானது. இதற்கு பகுத்தறியும் தன்மை உண்டு. எல்லாவற்றையும் அடக்கி ஆளும் குணம் இயற்கையிலேயே யுள்ளது. இந்தத் தொழிலையே நாம் ஏன் தேர்ந்தெடுத்தோம். வேறு தொழில்கள் இல்லையா? உழைப்புக்குத் தக்க ஊதியம்கூட இல்லையே என்று சிலர் எண்ணவும் கூடும். நாம் ஜன்மம் எடுத்தது பிறருக்கு உதவி செய்யும் பொருட்டே. நாம் நம்முடைய ஜன்மத்தை வீணாக்காமல் நம்மை நாடிவரும் சிறு குழந்தைகளைக் கண் திறக்கும்படி செய்து புத்தி என்ற பாலைப் புகட்டிச் சன்மார்க்கத்தில் ஒழுகும்படி போதித்து மோக்ஷம் என்கிற சாம்ராஜ்யத்தை பெறுவதற்குப் பாத்திரர்கள் ஆக்குவதுதான் நம்முடைய முக்கியமான கருத்தாக இருத்தல் வேண்டும். ஆனதுபற்றியே மூன்றாவது பீடமாகிய குருபீடம் நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. மாதா பிதா குரு என்ற நீதிவாக்கியத்தின்படி நாம் அஞ்ஞான நிலைமையை யொழித்து இம்மையில் கீர்த்தியையும் மறுமையில் மோக்ஷ பதவியையும் அடைவதற்கு பாத்திரர்களாக இருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. இவ்விதமாக நமக்கு அறிவு ஊட்டின சர்வவியாபகரைப் பஜித்து நமது சந்ததியார் சிறப்புற்றோங்கவும், நமது மாட்சிமைதங்கிய மன்னர் நீடூழி வாழவும் அவரது செங்கோல் ஓங்கி வளரவும் நாம் கருணாநிதியை பிரார்த்திப்போமாக:

R. NARAYANIER,
*Assistant, M. H. Elementary School,*
*Tirupatur.*



# METALS
## உலோகங்கள்

இரும்பை இராஜ உலோகம் என்பார்கள். நாம் பார்க்கும் சாமான்களுள் இரும்பினால் செய்தவைதான் அதிகமாக இருக்கின்றன. இந்த உலோகமானது இவ்வளவு உபயோகமுள்ளதாய் இருப்பதால் இதற்கு இராஜ உலோகம் என்று பெயர் வந்தது.

இது சுரங்கங்களில் மற்றப் பொருள்களுடன் சேர்ந்து சேர்க்கைப் பொருளாகவே அகப்படுகின்றது. சேலம் ஜில்லாவில் அநேக இரும்புக் கனிகள் உண்டு. சுரங்கத்தில் இது மண் கந்தகம் முதலியவற்றுடன் கலந்து கிடைக்கும். இரும்பை நாம் மூன்று விதமாய் உபயோகிக்கிறோம்: வார்ப்பிரும்பு, தேனிரும்பு, எஃகு.

வார்ப்பிரும்பு — இரும்புக்கனிகளிலிருந்து சேர்க்கைப் பொருளாகவே கிடைக்கும் உலோகத்தை எடுத்து, சுண்ணாம்பு நிலக்கரி இவற்றுடன் கலந்து உலையிலிட்டு உருக்கினால் உபயோகமற்ற பாகங்கள் மேல் மிதக்கும். இரும்பு உருகி அடியில் தங்கும். அவ்வாறு உருகின குழம்பை மணல் அச்சுகளில் வார்த்து குளிரவைத்தால் அது கெட்டி இரும்புப் பாளங்களாக ஆய்விடும். இது உடையுந்தன்மை யுள்ளது. ஆனால் உறுதியாய் இருக்கும். இது அதிக கனமுள்ளது. இதைத் தகடாக அடிக்க முடியாது. ஆனால் மற்ற இருவித இரும்பைக் காட்டிலும் இது சீக்கிரம் உருகும். இதனால் ரஸ்தாக்களிலும் உத்தியோகசாலைகளிலும் போடுகிற தீப ஸ்தம்பங்களும், தண்ணீர் குழாய்களும், இரும்பு அடுப்பு, காப்பிகெட்டில்கள் முதலியவைகளும், வீடு பாலம் இவைகளுக்கு வேண்டிய ஸ்தம்பங்கள் முதலியவைகளும் செய்கிறார்கள்.

தேனிரும்பு — வார்ப்பிரும்பைக் காய்ச்சி அதில் கலந்திருக்கும் தாவரப்பொருள்களான கரியை நீக்கினால் அது தேனிரும்பாகும். இது வளையக்கூடியது. இதைத் தகடாகவும் அடிக்கலாம், கம்பியாகவும் இழுக்கலாம். இதைச் சுலபமாய் உருக்க முடியாது. இதைப் பழுக்கக் காயவைத்து ஒன்றோடொன்று ஒட்டலாம். இரும்புத் தகடுகள் வீடுகளுக்கு வேண்டிய தட்டு முட்டுச் சாமான்கள் ஆணிகள் முதலியவைகளை தேனிரும்பினால் செய்கிறார்கள்.

எஃகு — இது வார்ப்பிரும்பைப்போல் அவ்வளவு கரியை உடையதல்ல. ஆயினும், இதில் தேனிரும்பைக் காட்டிலும்

கரி அதிகம். இது உடையக்கூடியது. ஆனால் மிக்க உறுதி-யானது. இதனால் கண்ணாடியைக்கூடக் கீறலாம். இதனால் ஊசி, கத்தி, வாச்சி முதலிய கூர்மையான முனையையுடைய ஆயுதங்களைச் செய்கிறார்கள். கருமான் ஆயுதங்களைத் தேனிரும்பினால் செய்து எஃகுக்கூர் வைப்பார்கள். (உ-ம்.) அரிவாள், கோடாரி, கைக்கத்தி, அரிவாள் மணை முதலியன. நாம் எழுதும் பேனா முள் எஃகினால் செய்ததுதான். தைப்பதற்காக நாம் உபயோகிக்கும் பலவித ஊசிகளையும் எஃகினால் செய்கிறார்கள்.

தாமிரம் — தாமிரம் சுரங்கங்களிலிருந்து கிடைக்கிறது. இதுவும் விசேஷமாய் சேர்க்கைப் பொருளாகவே கிடைக்கிறது. இது சிவந்த நிறமுள்ளது. இரும்பைக்காட்டிலும் இது கனமுள்ளது. இதில் சுளுவாய் களிம்பேறும். இதை நன்றாய்த் தகடாக அடிக்கலாம். கம்பியாகவும் இழுக்கலாம். பித்தளையும் வெண்கலமும் இவைகளுடன் மற்ற உலோகங்களைச் சேர்த்து உருக்குவதால் உண்டாகும் கலப்புகளே. தாமிரத்தில் இலகுவாய்ச் சூடேறும். (உ-ம்.) வெந்நீர் அண்டா.

தங்கம் — இது வெகு அபூர்வமாய்க் கிடைக்கிறது. இதனால் இதற்கு வெள்ளியைக் காட்டிலும் மதிப்பு அதிகம். இதன் கனம் உறுதி: தகடாகும் தன்மை கம்பியாக இழுக்கப்படும் மாதிரி முதலியவைகளைப்பற்றிக் கவனிப்போம்: தங்கத்தை அதிக நுட்பமான தகடாகவும் அடிக்கலாம். தங்கத்தினால் அதிக நுட்பமான ரேக்குகளைச் செய்கிறார்கள். படங்களின் சட்டங்களின் மீதும் புஸ்தகங்களின் அட்டைகளின்மீதும் நாம் காணும் தங்கப்பூச்சுகளும் எழுத்துகளும் மேற்கூறிய தங்கரேக்கின் உதவியாலேயே. தங்கமானது மற்ற உலோகங்களைப்போல் சுரங்கங்களில் மற்றப் பொருள்களுடன் சேர்ந்து அகப்படுகிறதில்லை. உறுதியான பாறைகளுக் கிடையில் தங்கம் சிறிய உருண்டைத்தூளாக இயற்கை ஸ்திதியில் கிடைக்கும். இப்பாறைகளை உடைத்துப் பாதரஸத்தின் உதவியால் தங்கத்தூள்களைச் சேர்க்கிறார்கள்.

V. KRISHNASWAMY IYER,
*Board School Master, Perambakkam.*



## GOOD ADVICE TO YOUNG PUPILS

### சிறுவர்களுக்கான நன்மதிகள்

இராகம் - ஆரபி] [ஆதிதாளம்.
['அன்னாய் உந்தன் அன்பினை உன்னில்' என்றதன் மெட்டு]

1. சின்னஞ் சிறிய மாணவர் நாமும்
நன்னய மதிகள் அறிவது நலமே.

2. பாட சாலையில் கூச்ச லிடுதலும்
ஆடல் செய்தலும் ஆகா ஆகா

3. திட்டமாய் மணிக்குப் புத்தகம் எடுத்துச்
சட்டமாய் வந்திடு பாடசா லைக்கே

4. பள்ளியில் வந்து அறியாப் பாடம்
நல்ல பிள்ளைகளை நாடி யறிந்திடு

5. ஆசான் புகட்டுங் கல்வியா மதனைப்
பேசா திருந்து பதித்திடு மனத்தில்

6. பராக்குப் பார்த்தல் பெரியதோர் தவறும்
வாரா தொழிந்திடும் பாடம் உனக்கு

7. நில்லென நின்றும் போவெனப் போயும்
சொல்லெனச் சொல்லியும் இருவென இருந்திடு

8. கீழ்ப்படி தல்தான் மேற்படி உயர்த்தும்
வாழ்வதற் கான வழியொன் றிதுவே

9. ஆசா னவர்க்கும் பெரியார் எவர்க்கும்
கூசா மனத்தோடு கும்பிடு வாயே

10. சப்தஞ் செயாது பள்ளியை விட்டு
அப்புறஞ் சென்றிடு அகமதை நோக்கி

சென்ற மாதத்தில் யான் எழுதிய, 'உபாத்தியாயர்களுடைய நிலைமை' என்ற வியாசத்தில் இராஜப்பிரதிநிதி யவர்கள் 'இந்தூரில் செய்த பிரசங்கம்,' என்பதனை 'இந்தூரில் (Indoor) செய்த பிரசங்கம்' என்று திருத்திக்கொள்ளவும்.

J. G. SUNDRAM,
*The Kellett High School, Madras.*

# SOUND — A DIALOGUE

## சப்தம் பரவுதலைப்பற்றி ஓர் சம்பாஷணை

நடேசன் — ரத்னம், ஓர் நீண்ட் துத்துநாகக் கம்பியின், ஒரு முனையை ஓரிடத்திலுள்ள இயந்திரத்துடனும், மற்றொரு முனையை மற்றோரிடத்திலுள்ள இயந்திரத்துடனும் பிணைக்கப்பட் டிருப்பதால் இவைகளில்; ஓர் இயந்திரத்தில் அடிப்பதாலோ, பேசுவதாலோ, உண்டாகும் சப்த அதிர்ச்சியானது கம்பியின் ஊடே சென்று தன்னோடு பொருந்தப்பட் டிருக்கும் மற்றொரு (டெல்லிபோன் அல்லது தந்தி) இயந்திரத்தில் தாக்கி விஷயத்தைத் தெரியப்படுத்துகிறது. இவ்வாறின்றி, நமக்குப் பக்கத்திலோ அல்லது கொஞ்சம் தூரத்திலோ ஒருவன் பேசும் சப்தங்களும், வேறு பல காரணங்களினால் உண்டாகும் சப்தங்களும், தந்தி முதலியன போன்ற யாதொரு சம்பந்தமின்றியே நமது காதுக்கு எட்டுகிறதே அது எப்படி?

ரத்னம் — நடேசா! நீ மிக்க அருமையான விஷயத்தையே என்னைக் கேட்டுவிட்டாய். ஆயினும், எனக்குத் தெரிந்தவரை சொல்லுகிறேன் கவனமாய்க் கேள். இதோ பார், இக்கிச்சிலிப்பழத்தைச் சுற்றிலும் சுளைகள் தெரியாவண்ணம் மூடிக்கொண்டிருப்பதென்ன? தோல் அல்லவா? இவ்வாறே பூமியின் மேற் பிரதேசமெங்ஙனும் மூடிக்கொண்டிருப்பதென்ன? யோசித்துப் பார். அவை நம் கண்ணுக்குப் புலப்படாவிடினும் பரிச உணர்ச்சியால் அறியலாம்.

நடேசன் — (சற்று யோசித்து) பொறு, பொறு சொல்லிவிடுகிறேன். பூமியின் மேற் பரப்புப் பிரதேசங்களில் வாயு வியாபித்திருக்கின்றன.

ரத்னம் — சரி, ஓர் குளத்து நீரில் ஒரு கல்லை விட்டெறிந்தால் தண்ணீர் என்ன மாறுதலடையும்?

நடேசன் — கல் நீரில் விழுந்த அதிர்ச்சியால் அலைகளுண்டாகி நாலாபக்கமும் பரவிச் செல்லும்.

ரத்னம் — அவ்வாறுண்டாகும் அலையில் பல காகிதத் துண்டுகளைப் போட்டால் அவைகள் என்னவாகும்?



நடேசன் — காகிதத் துண்டுகள் அலைகளால் நெட்டித் தள்ளப்பட்டு, நீரில் நாலா பக்கங்களிலும் பரவி மிதந்து சென்று முடிவில், கரையோரங்களை அடைகின்றன.

ரத்னம் — பூமியின் மேற்பரப்பில் வியாபித்திருக்கும் வாயுவானது, நாம் பேசினாலும், வேறு காரணங்களால் சப்தங்கள் செய்தாலும், விசிறி முதலியவைகளால் மோதுவதினாலும் உண்டாகிற சப்த அதிர்ச்சிகளால் வாயு என்னவாகும்?

நடேசன் — அவ்வித அதிர்ச்சிகள், வாயுவில் தாக்கினவுடனே, நீரில் அலைகளுண்டாவதுபோல் வாயுவில் அலைகளுண்டாவதோடு, மிதந்துகொண்டிருக்கும் வஸ்துக்களை நீரலைகள் எப்படி நெட்டித் தள்ளிக்கொண்டு போகின்றனவோ, அவ்வாறே சப்தங்களையும், தன்னோடு சேர்த்து நெட்டித்தள்ளிக்கொண்டு நாலாபக்கங்களிலும் பரவிச் செல்லுகின்றனவென்பது தெளிவாகிறது.

ரத்னம் — இந்தத் திருஷ்டாந்தங்களினால், பக்கத்திலாயினும், தூரத்திலாயினும் உண்டாகும் பலவித சப்தங்களும் பேசும் ஓசைகளும் எதன் ஊடே நம் காதுக்கு வந்து சேருகிறது என்று இப்போது அறிந்துகொண்டாய்?

நடேசன் — சப்த அதிர்ச்சிகள், வாயுவில் தாக்கியவுடன் வாயு அலைகளாகக் கிளம்பி சப்தத்தால் உண்டாகும் நாதங்களையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு, நாற்புறமும் பரவிச் சென்று, நம் காதிலுள்ள ஜவ்வில் தாக்குவதால் சப்தங்களை உணர்கின்றோம் என்று அறிந்துகொண்டேன்.

ரத்னம் — நடேசா! நீ மிகவும் புத்திசாலி. இவ்வளவு இலகுவில் விஷயங்களை அறிந்துகொண்டதைப்பற்றி சந்தோஷிக்கிறேன். நடேசா! இதோ பார், இந்த தகரஜாடிக்கும் எனக்கும் எவ்வளவு தூரமிருக்கும்? சுமார் 10 அடி தூரமிருக்கலாம். இவ்விடத்தில் என் கைகளைத் தட்டுகிறேன், தகர ஜாடியில் என்ன உண்டாகிறது? சளார், சளார் என சப்தம் உண்டாக வில்லையா? அப்படிச் சப்தமாவதற்குக் காரணமென்ன? கை தட்டியதாலுண்டான சப்தத்தின் அதிர்ச்சியும், நாதமும், ஜாடிக்கும் எனக்கும் மத்தியிலுள்ள வாயுவில் தாக்கவே, வாயுவின் அணுக்கள் முறையே ஒன்றோடொன்று மோதிக்கொண்டு, ஜாடியில் தாக்கியதால், ஜாடியில் சப்தம்

உண்டானது; இங்ஙனமே, நாம் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்வதற்கும், தூரத்திலிருந்து வரும் சப்தங்களைக் கேட்பதற்கும், வாயு இன்றியமையாத வஸ்துவாயிருக்கிறது.

நடேசன் — வாயுவினுதவியில்லாவிட்டால் நம்மைச் சுற்றிலுமுண்டாகும் சப்தங்களையும், ஒருவர் பேசுவதையும் கேட்க முடியாது என்ற விஷயம் உண்மையாயின், இவற்றை விளக்க ஒரு திருஷ்டாந்தம் காட்டுதல் வேண்டும்:

ரத்னம் — மிகவும் சரி, அப்படியே காட்டுகிறேன், இங்கே கவனி. இம் மட்பாத்திரத்துக்குள் ஒரு மணியை ஆட்டுகிறேன், உன் காதிற்கு என்ன கேட்கிறது, மணியின் ஓசை. கல கலவென சப்திக்கவில்லையா? சப்தம் கேட்பதற்குக் காரணம் உனக்கு முன்னமே தெரியும். ஆயினும், பாத்திரத்தை அடுப்பிலேற்றி சூடுண்டாக்குகிறேன், ஏன் சூடேற்றவேண்டும்? வாயு உஷ்ணத்தால் விரியும் சக்தியுடையது, ஆனதால் பாத்திரத்துள்ளிருக்கும் வாயுவை வெளியேற்றுவதற்குத்தான் இப்படிச் செய்கிறேன். இப்பொழுது கொஞ்சங்குறைய, வாயுவெல்லாம் உஷ்ணத்தால் வெளியேறிவிட்டன. இப்போது இவ்விருப்புக் கம்பியின் முனையிலுள்ள கொக்கியில் மணியை மாட்டி பாத்திரத்துக்குள் விடுவோம். வேறு புதியகாற்று பாத்திரத்துள் புகாவண்ணம், 'வாயை நெட்டியடைப்பானால் அடைத்துவிடுவோம் (அடைத்து விடுகிறான்). கம்பியின் உதவியால் மணியை ஆட்டுகிறேன். மணியின் சப்தம் உமக்குக் கேட்கிறதா?

நடேசன் — இல்லையே.

ரத்னம் — ஏன்?

நடேசன் — பாத்திரத்துள் வாயு நிரம்பியிருந்தால் மணியின் ஓசை வாயுவில் தாக்கும் அதிர்ச்சியால் வாயு அலையலையாக நாலா பக்கத்திலும் பரவி, பாத்திரத்தின் உட்பிரதேசத்தைத் தாக்கும். இவ்வதிர்ச்சியைப் பாத்திரம் பெற்று வெளியிலிருக்கும் வாயுவைத் தாக்க அவ்வதிர்ச்சி நமது காதின் ஜவ்வில்தாக்கி, சப்தத்தை அறிவிக்கும். அவ்வாறின்றி, பாத்திரம் உஷ்ணமடைந்து விட்டதால், வாயு பாத்திரத்தில் தங்கியிருக்க முடியாமல், வெளியேறிவிட்டது. இப்போது மணியின் சப்த அதிர்ச்சியைப்பெற்று அலைகளாக நாற்புறமும் பரவிவந்து நம் காதுகளின் ஜவ்வைத் தாக்கி மணியின் ஓசையைத் தெரி-



யப்படுத்துவதற்குப் போதுமான வாயு பாத்திரத்தில் இல்லாததால், மணியின் சப்தத்தை நாம் கேட்க முடியவில்லையென்பது விளங்குகிறது.

ரத்னம் — நடேசா, இன்னும் ஏதாவது சந்தேகமிருந்தால் கேட்டுக்கொள்.

நடேசன் — அப்படியா, சந்தோஷம். மச்சுவீடுகள் பெரிய ஆலயங்கள், பெரிய பெரிய கட்டடங்கள் முதலியவைகளின் உட்பிரதேசத்தில், நாம் சப்தமிட்டாலும், பேசினாலும் அந்த நிமிஷத்திலேயே, முன்பேசிய அல்லது சப்தமிட்ட வார்த்தை உச்சரிப்புக் கெடாமல் எதிரொலியாகக் கிளம்புகிறதே அது ஏன்?

ரத்னம் — இந்த ரப்பர் பந்தைப் பார். இதை நமக்கெதிரிலிருக்கும் சுவரில் அடிக்கிறேன். பந்தின் கதியென்ன? மறுபடியும், நம்மிடமே திரும்பி வந்துவிட்டதல்லவா? ஏன்? நான் பந்தை விட்டெறிந்த வேகத்தால், பந்து வெகு தூரம் செல்லும் சக்தியைப்பெற்று வெகு வேகமாய்ச் சென்றது. இங்ஙனம் சென்ற பந்தின் வேகத்தை, சுவர், தடுத்துக்கொண்டதாலும், பந்து பெற்றிருக்கும் சக்தியைவிட, சுவரின் சக்தியதிகரித்திருப்பதாலும், பந்து சுவரை ஊடுருவிச் செல்லாமல், தான் பெற்றிருக்கும் சக்தியை, இலகுவாய்ச் செலுத்தக்கூடிய பக்கமாகிய, நம்மிடமே திரும்பிவந்து விட்டது. இதினின்றும், எதிரொலி கிளம்புவதற்குக் காரணம், உனக்குத் தெரியலாமென்று உறுதியாய் நம்புகிறேன்.

நடேசன் — ஆம், ஆம், தெரிந்துகொண்டேன். நாம் பேசுவதாலும், மற்றக் காரணங்களாலும் செய்யும் சப்தங்களின் அதிர்ச்சி வாயுவில்தாக்கி, வாயு நாலாபக்கங்களிலும் பரவிச்செல்லுகின்றன; அங்ஙனம் பரவிச்செல்லும் வாயுவின் அதிர்ச்சி சக்தி பெரிய கட்டடங்களின் சுவர்களைத்தாண்டி வெளியேற முடியாததினால், சுவர்களால் உந்தித்தள்ளப்பட்டு நம்மிடமே திரும்பிவந்து, காதுகளின் ஜவ்வுகளைத் தாக்குவதால் நாம் பேசின வார்த்தைகளையும், செய்த சப்தங்களையும் எதிரொலியாக மறுமுறை கேட்கின்றோம்.

ரத்னம் — நீ கொடுத்த விடை மிகவும் சரி. நடேசா இன்னுமோர் விஷயம் என் ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது, சங்கை,

பெரிய உற்சவம் முதலிய இடங்களில் கூடியிருக்கும் ஜனங்கள் பேசும் சப்தங்களானவை, உச்சரிப்புக் கெட்டு ஜோ..... என்று ஒரே சப்தமாகவே வருவதற்குக் காரணமென்ன? சொல்லும் பார்ப்போம்.

நடேசன் — பெரிய ஜனக்கூட்டங்களில் ஒருவன் பேசிய சப்த அதிர்ச்சியை வாயுகொண்டு செல்லுகையில் அதோடு மற்றொருவன் பேசும் சப்த அதிர்ச்சி போய் அதனைத் தாக்குகிறது. இவ்வாறே கூட்டத்திலுள்ள ஜனங்கள் பேசுவதாலுண்டாகும் சப்த அதிர்ச்சிகள் முறையே ஒன்றோடொன்று மோதிக்கொண்டு, தட்டுக்கெட்டுத் தடுமாறி, சின்ன பின்னமாக்கப்படுவதால், ஜனங்கள் பேசும் வார்த்தையின் உச்சரிப்பைத் தூரத்திலுள்ளவர்களுக்குத் தெளிவாய் அறிவிக்க வாயு சக்தி யற்றதாகின்றது.

ரத்னம் — பேஷ், பேஷ், இப்பொழுது என்னைவிடக் கெட்டிக்காரனாய்விட்டாய், நிரம்ப சந்தோஷம், நடேசா, வாயுவில் இத்தகைய அரிய சக்தியிருப்பதைக் கொண்டுதான் மேனாட்டு பிரபல சாஸ்திரியாகிய எடிஸன் என்பவர், கிராமபோன் என்னும் வாத்தியக் கருவியை நிருமித்து, என்றும் அழியாப் புகழுடம் பெய்தனர்.

நடேசன் — ஆ, ஆ, என்ன ஆச்சரியம், வாயு மனிதர்களுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் எத்தனை விதங்களில் உபயோகப்படுகின்றன. என்னே அதிசயம், இவ்வாயுவைப் படைத்த பரம்பொருளின் சக்தியே சக்தி, ஏ ஜகதீசா, எல்லாம் உன் திருவருள் (கடவுளைத் தியானிக்கிறான்)

ரத்னம் — நடேசா, நெடு நேரம் பேசிக்கொண் டிருந்துவிட்டோம்; மணியும் 9-45 ஆய்விட்டது. நான் பள்ளிக்கூடம் போகச் சித்தமாகவேண்டும், நீ போய்வருகிறாயா?

நடேசன் — போய்வருகிறேன். இவ்வளவு நேரம் பல அரிய விஷயங்களை எனக்கெடுத் துரைத்ததற்காக எனது மனமுவந்த வந்தனம் அளிக்கிறேன் (வந்தனம் செய்கிறான்) போகிறார்கள்.

திருவை, N. சிதம்பர கவுண்டர்,
முதல் உதவி உபாத்தியாயர்,
போர்டு எலிமென்டரி ஸ்கூல், துடுப்பதி,
பெருந்துறைபோஸ்டு, ஈரோடு தாலூகா



# THE TEACHING OF HISTORY

## தேச சரித்திரம் போதிக்கும் முறை

நமது எலிமென்டரிப் பாடசாலைகளில் இந்து தேச. சரித்திரபாடம் கற்பிக்கப்பட வேண்டுமென்று பரீக்ஷாதிகாரிகளால் நியமிக்கப்பட்டிருத்தல் வெகு நலமான தோர் செயலே. ஏனெனில், நாம் ஒரு ஜாதியாராக முன்னேறிச் செல்லவேண்டின் நமது தேச சரித்திரத்தையும் அயல் தேச சரித்திரங்களையும் தெரிந்துணர்ந்துகொள்வது இன்றியமையாத தோர் காரியமாகும். தேச சரித்திரம் பயிலுவதனால் உண்டாகும் பயன்கள் பல.

ஏனைய ஜாதிகளும் நம் சொந்த ஜாதியும் காலாகாலத்தில் உயர்ந்தும் தாழ்ந்தும் வந்தமைக்குப் போதிய காரணங்களையும், அங்ஙனம் மாறுபடுவதற்கு அப்போதைக் கப்போது அமைந்துள்ள காலவர்த்தமானங்களையும் ஜனசமூக நிலையையும் தெரியப்படுத்தி, ஜனசமூகத்தில் முன்னேறும்படி ஒருவனைத் தேச சரித்திரந் தூண்டிவிடுகிறது. பிற்காலத்தில் வர்த்தமானப் பத்திரிகைகள் வாசித்தறிவதற்குச் சரித்திர ஞானம் அவசியமா யிருப்பதாலும் சரித்திர சம்பந்தமான தேசங்கள், இடங்கள் முதலியனவற்றிற்கும் மற்றுஞ் சரித்திர வாராய்ச்சிக்கும் ஊக்கத்தை உண்டாக்குவதனாலும் இளமைப் பருவ முதலே தேசசரித்திரம் போதிக்கப்படல் அவசியம்.

‘தெய்வத்தா லாகாதெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலிதரும்’

‘ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்’

‘நுண்ணிய கருமமும் எண்ணித்துணி’

‘தேசத்தோ டொத்துவாழ்’

என்பனவற்றிற்கும் கடமை வழி நிற்றல், ஊரை நேசித்தல், ஒருமைப்படல் முதலியனவற்றைத் தெரியக் காட்டுவதற்கும் தேச சரித்திரம் பளிங்கன்னதாகும்.

முற்கால நடவடிக்கைகளை யோசிப்பதினால் மனத்தை நடுநிலைப்படுத்தவும், தரிசிக்காதவைகளை தரிசனஞ் செய்யவும் உதவி செய்வது இக்கல்விப் பயிற்சி, காரண காரியத்தோடு சரித்திரத்-

தைப் போதிக்குங்கால், அது நியாயசாதுரியத்தையும் ஆழ்ந்த யோசனையையும் புலமுறச்செய்து, கோவையாகப் பாடம் பயிலுவதனால் ஞாபகசக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றது.

மேலும், சன்மார்க்க நிலையையும் பெருந் தன்மையையும் விருத்தி செய்கின்றது சரித்திரம் பெயர் வாய்ந்த மகான்களின் சிறந்த ஜீவியங்களையும் கீர்த்தி பெற்ற செய்கைகளையும் பற்றிய இவ்வாராய்ச்சி, மாணவர் மனத்தில் அவ்வித சிரேஷ்டமான கிரியைகளையும், சீர்பெற்ற நடக்கைகளையும் ஊன்றியிருக்கச் செய்து, காலாந்தரத்தில் அவைகளைப்போன்ற செயல்களை அவர்களினின்று வெளிப்படுத்தற்கு உள்ளத்தில் வேலை செய்கிறது. கோக்லே, தாதாபாய் நவரோஜி முதலிய மகான்களைப்போல் ஆகவேண்டுமென்று நம்மிளைஞர் எத்தனையோ பேர் தம் மனத்தில் எண்ணம் கொண்டாராய் இருக்கவில்லையா? ஆகவே கடைசியாக சரித்திரவாராய்ச்சி தேசாபிமானத்தையும், தேச நேசத்தையும் அளித்து மனுஷர்மேற் பிரீதியையும் ஈயவல்லது.

தேச சரித்திரத்தில் பலவிதமான கட்டுரைகள் அநேகமாயிருப்பனவாகையான், இதனைத் திட்டமாயும் மாணவர்க்கு இனிதாகவும் கற்பிப்பதற்குப் பின்வரும் விஷயங்களைக் கவனித்தல் வேண்டும்.

கீழ்வகுப்புகளில் இப்பாடம் முழுவதும் வாய்ப்பாடமாகவே அமைந்திருத்தல் வேண்டும். எழுத்து வேலைக்கு உபாத்தியாயர் இடம்வைத்துக்கொண்டால் அது மாணவர் தம் மனத்தில் இன்பத்தைப் பொழியவியலாமல் வெறுப்பையே உணர்த்தும். சங்கதிகளைச் சொல்லுவதில் பிள்ளைகளுக்கு விளங்கக்கூடிய சுலபமான வார்த்தைகளால் தெளிவாய்ச் சொல்லிக்கொடுத்தல் வேண்டும். இவ்விஷயத்தில் உபாத்தியாயர் ஏனோ தானோவென் றிராமல் தகுந்த ஆயத்தஞ் செய்திருத்தல் வேண்டும்.

2. கேட்பவர் மனோசக்தியின் அளவை, யறிந்து விஷயத்தைச் சொல்லல் வேண்டும். ஆதலின் முதலில் பின்னபேதமில்லாமல் தெற்றென விளங்கும் விஷயங்களைப் போதிய சொற்சுவையுடனும் பேசுந் திறனுடனும் அரிய உதாரணங்களுடனும் எடுத்துக் காட்டல்வேண்டும். யுத்தங்கள், பாரதயுத்தம் போல்வன; சிறந்த வீரச்செயல்கள், ராமரின் செயல்கள் போல்வன; நல்ல ஜீவிய சரிதங்கள், புத்தன், தருமர் முதலியவர்களின் ஜீவிய



சரிதங்களைப்போல்வன; பெண் பாடசாலையாயின் நற்பெண்டிரின் சரிதைகள், தமயந்தி, திரௌபதி, சாவித்திரி முதலியவரின் சரிதைகள் போல்வன; நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டவைகள், இராவணனுடைய ஆகாய விமானத்தை வலியுறுத்தும் ஆகாய விமானங்கள், பண்டைய நாணயங்கள், புத்தரின் காலடிகள், பற்கள், போராயுதங்கள் முதலியன; செவ்வனே மாணவர்க்குக் கற்பிக்கப்படுமாயின் இப்பாடமானது தன்மீது இஷ்டத்தைக் கிளர்ச்சி செய்யாமற் போகாது. சரித்திர சம்பந்தமான பாடம் போதிக்கும்போது அருகிலுள்ள சரித்திர சம்பந்தமான இடங்கள், கட்டடங்கள், உருவங்கள் முதலியனவற்றை எவ்விதமும் மாணவர்களுக்குக் காண்பித்துத் தெரிந்தவைகளைக் கொண்டு தெரியாதவைகளை உணர்த்தல் வேண்டும். நந்தம் தமிழ்க் காவியங்களில் அநேகமும் புராணங்கள் பலவும் நம் தேசப் பழக்க வழக்கங்களையும் ராஜ்ய பலாபலன்களையும் அரசாங்க நெறி முறைகளையும் உணர்த்த வல்லனவாதலால், கூடியவரையில் நன்மை பயக்கத்தக்கனவானால் அவைகளின் உதவியையும் உபாத்தியாயர் தேடிக்கொள்ளல் வேண்டும். அங்ஙனமாயின் தேச சரித்திரம் முற்றிலும் பிள்ளைகளுக்கு அந்நியமான பாடமாய்த் தோற்றாமல் அறிந்ததும் அறியவேண்டுவதுமான பாடமாய்த் தோன்றாநிற்கும்.

3. பாடத்தின் பொதுவான விஷயத்தினின்று விசேஷமான விஷயத்திற்கும், மொத்தத்தினின்று மூலத்திற்கும், பரக்க நின்ற விஷயத்தினின்று சிறக்க நின்ற விஷயத்திற்கும் செல்லவேண்டும். ஒரு ஜீவிய சரிதத்தைப் போதிக்குங்கால், பிறப்பினின்று இறப்புவரை செல்லுகையில் ஆங்குக் காணுறும் குணவிசேடமும் அதனாலாய நலமுமே நடுநிலைப்படச் செய்து ஏனையவற்றைப் போகப் போக அவசியமானால் விஸ்தரிக்கலாம். இங்ஙனம் விவரிப்பதைப் பிள்ளைகளின் மனோசக்திக்குத் தக்கவாறு வகுப்புக்கு வகுப்பு பெருக்கிக்கொண்டே போகலாம். உதாரணமாக இராமாயணத்தை எடுத்துக்கொள்வோம். இராமருடைய வெறுஞ் சரிதத்தைமட்டும் முதலிலிருந்து கடைசிவரை பாலர்க்குச் சொல்லிக்கொடுக்கலாம். அதே சரிதத்தைப் படிப்படியாய்க் கூட்டி, மேல்வகுப்பு வரையுஞ் சொல்லிக்கொடுக்கலாம். ஆனால் பின்னே போகப் போக, சரித்திர சம்பந்தமாய் இராமாயணத்தின் பிரயோஜனமென்ன? திராவிடருக்கும் ஆரியருக்கு முள்ள சம்பந்தமென்ன? அக்காலத்துத் தேச நடவடிக்கை, ராஜ்ய நட-

வடிக்கை என்ன ? என்பனவற்றையே உபாத்தியாயர் மனத்திற் கொண்டு, அவைகளுக்கான குறிப்புகளையே திட்டமாய் உணர்த்தல் வேண்டும். பாரதயுத்தம் புத்தனுடைய சரித்திரம் முதலியன போதிக்கப்படும்பொழுதும் சரித்திர சம்பந்தமான விசேஷத்தை ஊர்ஜிதப்படுத்தல் வேண்டும்.

4. கூடியமட்டில் சரித்திரத்தையும் பூமிசாஸ்திரத்தையும் சம்பந்தப்படுத்தியே போதித்தல் வேண்டும். ஏனெனில் ஒரு தேசத்தின் இயற்கையமைப்பினின்று ஆங்கு நிலைபெற்றியங்கும் மானுடரின் குணகுணங்களை எளிதில் அறிந்துகொள்ளலாம். தேசங்களின் அமைப்பே அந்தத் தேசங்களின் ஜாதியாரின் விழுகைக்கும் எழுச்சிக்கும் கை கொடுத்து வந்திருப்பதை நாம் இந்தியா, இங்கிலாந்து, கிரீஸ் முதலிய தேசங்களின் சரித்திரங்களாற் கண் கூடாகப் பார்க்கலாம். (இன்னும் வரும்.)

J. G. SUNDARAM,
*The Kellett High School,*
*Triplicane, Madras*

## CHILDREN OF DISTANT LANDS
## தூரதேசத்துக் குழந்தைகள்

ஜப்பான் சிறுவர் - சீனச் சிறுவர்

சில வருஷங்களுக்கு முன் ஜப்பான் சிறுவர்களைப்பற்றிச் சில விஷயங்கள் நமது நல்லாசிரியனில் வெளிவந்த விஷயம் பலர் நன்கு உணர்வார்கள். அவற்றை விரைவில் முடிக்குமாறு நண்பர் பலர் விரும்பினர். அதனால் ஜப்பான் சிறுவர்களைப் பற்றியும் சீனச் சிறுவர்களைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் விளங்குமாறு இனிய புஸ்தகம் ஒன்றை எழுதி வெளியிட் டிருக்கின்றோம். இதை வாசிப்பதனால் சிறுவர்களுக்குப் பூகோள விஷயமும் சரித்திர விஷயமும் நல்லொழுக்க விஷயமும் நன்கு புலனாகும். இது தாயார் குமாரனுக்குக் கதை சொல்லும் விதமாக மிக எளிய நடையில் அநேக சித்திரப் படங்களுடன் பெரிய எழுத்தில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. சிறுவர்களுக்கு இன்பமூட்டும் இனிய கதைப் புஸ்தகம் போல்வது. இதனை ஒவ்வொரு பாடசாலையிலும் தவறாமல் உபயோகிப்பார்கள் என்று நம்புகின்றோம். விலை அணு 6.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெருவு, சென்னை.

28 APR 1919



# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 14 | 1918ஷ டிஸெம்பர்மீ | மாதம் 7

## GARLAND OF VERSES
## செய்யுள் மாலை

பஞ்சதந்திரக் கதை மிகச் சிறந்த கதை என்பது எவர்க்கும் தெரிந்த விஷயம். அதனைப் பல பாஷைக்காரரும் மொழி பெயர்த்துக்கொண்டு இருக்கின்றனர் கல்வியில் ஊக்கம் உண்டாக்க இக் கதைகள் அதிக உத்தமமானவை என்பது கல்விமான்களுடைய கருத்து. பஞ்சதந்திரத்தில் வரும் கிளைக் கதைகளின் கருத்துக்களை ஒவ்வொரு பாடலில் அடக்கி இச் செய்யுள்கள் செய்யப்பட்டுள்ளன. பின்னும் சில இவ்வாறே வரும்.

### 1. குரங்கு ஆப்பைப் பிடுங்கின கதை

அடாததோர் செய்கை தன்னை அறிவிலா தியற்று மாந்தர்
மடாலயப் பணிக்குத் தச்சன் மரத்தினை அறுத்து நாப்பண்
கடாவிய முளையை ஈர்த்துக் கலங்கிய மந்தி யேபோல்
படாததோர் பாடு பட்டுப் பரிபவம் உறுவர் அன்றே.

### 2. நரி சத்தம் கேட்டு அஞ்சிய கதை

பெரியதோர் உருவு கண்டும் பெரியதோர் சத்தம் கேட்டும்
தெரியகில் லாமல் நெஞ்சம் திடுக்குறும் பேதை மாந்தர்
நரியனார் சத்தம் கேட்டே நடுங்கித்தன் இரையை விட்டுத்
திரியவே நேர்ந்த தேபோல் சீர்குலைந் தலைகு வாரே.

### 3. ஆஷாடபூதி பொருளிழந்த கதை

நல்லவூண் உண்டி டாமல் நல்லுடை உடுத்தி டாமல்
புல்லிய தேனீப் போலப் பொருளினைச் சேர்க்கும் மாந்தர்
அல்லலார் தேவ சன்மன் ஆஷாட பூதி தன்னால்
எல்லையில் பொருளி ழந்த இன்னலே எய்து வாரே.

### 4. காகம் பாம்பைக் கொன்ற கதை

பகைவனோர் பலவான் ஆயின் பார்த்தவற் கஞ்சா தந்தப்
பகைவனின் பலவா னாலே பகையினை வேறல் வேண்டும்
மிகையுறு முட்டை யெல்லாம் விழுங்கிய பாம்பைக் காகம்
நகையினைப் பொந்தி லிட்டந் நாகத்தைக் கொன்ற தன்றே.

### 5. கொக்கு நண்டைக் கொன்ற கதை

வஞ்சகத் தாலே வெல்லும் வஞ்சகர் தம்மை மற்றோர்
வஞ்சகத் தாலே வேறல் வஞ்சகம் அன்று கண்டாய்
கொஞ்சியே குளத்தில் வாழ்மீன் குழுவினைக் கொன்ற கொக்கை
வஞ்சகத் தாலோர் நண்டு மரித்திடச் செய்த தன்றே.

### 6. முயல் சிங்கத்தைக் கொன்ற கதை

வலியதோர் பகையா னாலும் மருவுநற் சூழ்ச்சி வல்லோர்
நலியஅப் பகையை வென்று நலத்தினை அடைந்து வாழ்வார்
வலியதோர் சிங்கந் தன்னை வனமுயல் சூழ்ச்சி யாலே
இலைமலி பாழ்ங்கி ணற்றுக் கிரையெனச் செய்த தாலே.

### 7. மூட்டைப்பூச்சிக்கு இடம் கொடுத்த சீலைப்பேன் இறந்த கதை

குணத்தினை யறிந்தே நட்புக் கொண்டிட வேண்டும் இன்றேல்
மணந்தபின் தீநட் பாலே வருவதிங் கல்ல லேயாம்
இணங்கிய மூட்டைப் பூச்சிக் கிடந்தந்த சீலைப் பேன் ஓர்
கணந்தனில் மரண முற்ற கதையினை அறியார் யாரே.



OFFIC[illegible] 28 APR 1919

### 8. நரி ஒட்டகத்தைக் கொன்ற கதை

இனமிலா தவரைக் கூடின் இன்னலே விளைவ தாகும்
சினமுறும் புலியி னோடுஞ் சிறுநரி காகம் கூடி
மனமிலா ஒட்ட கத்தை மதோற்கடச் சிங்கத் தாலே
வனமதிற் கொன்ற காதை வகுத்திடும் இதனை நன்றே.

### 9. சிட்டு கடலை வென்ற கதை

பெரியருக் கடிமை யுற்றால் சிறியரும் பெருமை யுற்று
அரியதம் பகையை வெல்லும் ஆண்மையை அடைதல் திண்ணம்
உரிமையால் கருடற் காளாய் உற்றதோர் சிட்டும் அந்தப்
பரவையை அடக்க மாலைப் பரிவினிற் கொணர்ந்த தாலே.

### 10. அன்னத்தின் சொற் கேளாமல் ஆமை யிறந்த கதை

தனக்கிதம் நாடும் நண்பன் சாற்றிடும் உரையைக் காவான்
மனக்கிலே சத்தால் தன்னோர் வாழ்வையும் இழந்தோ னவான்
அனத்தின்நற் சொற்கா வாத ஆமையும் அறிவி ழந்து
சனத்திரள் நடுவண் வீழ்ந்து சாவினை யடைந்த தன்றே.

### 11. வந்தபின் காப்போன் மரித்த கதை

வருவது வழியில் நில்லா வந்தபின் பார்ப்போம் என்பார்
பெரியதோர் துன்ப முற்றுப் பேதைய ராகி நைவர்
வருமுனம் வருங்கால் காப்போர் வாழ்ந்தனர் வந்த பின்னர்
மருகுறக் காப்போன் என்னும் மச்சமே மரித்த தந்தோ.

### 12. தூக்கணங்குருவி குரங்கினால் துயரடைந்த கதை

கயவருக் குறுதி யான காரியம் கருதிச் சொல்வோர்
பயனிலா தவரால் அன்னோர் பரிபவம் அடைதல் திண்ணம்
மழையினால் வருந்தி நின்ற மந்திகட் குறுதி கூறி
அயர்வினால் தூக்க ணங்கள் அல்லலே அடைந்த அம்மா.

பத்திராதிபர்.

## DETAIL SYLLABUS IN BOTANY

## இயற்கைப் பாடம் (வகுப்பு 4 வது)

### வாழை மரம்

பொது — உருவம், பாகங்கள், உற்பத்தி — இதே மாதிரியான உற்பத்தியுடைய மற்ற மரங்களுடன் ஒத்துப் பார். அவைகளின் பாகங்கள் உருவம் இவைகளைக் கவனிக்க.

கிழங்கு — வாழைக்கட்டையை (கிழங்கை)யும் வேறு சில கிழங்குகளையும் காண்பித்துப் பரிசோதிக்க.

தண்டு — இதே மாதிரியான மற்றத் தண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்க.

கிளை இல்லை — கிளையுள்ள மரங்களுடன் ஒப்பிடுக. பாகங்களின் சித்திரங்களை வரைந்து சோதித்துப் பார்க்க.

இலைகள், உருவம், பருமன் — மற்ற இலைகளோடு ஒப்பிடுக. இலைகளின் சித்திரங்களை வரைந்து பலவித காய்ந்த இலைகளோடு ஒப்பிடுக.

பழங்கள், காய்கள் — வாழைக் காய்களையும் பழங்களையும் மற்றக் காய்கள் பழங்களோடு ஒப்பிட்டு ருசி மணம் இவைகளைப் பற்றிக் கேட்டு விடை வரவழைக்க. (கத்தியால் அறுத்து மைக்கிராஸ்கோப் கண்ணாடியாலும் பரிசோதிக்க.)

வாழைக் குலை — இதைப்போன்ற மற்றக் குலைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க.

வாழைப்பூ—இதைத் தாமரை மொக்குடன் ஒப்பிடுக. (கத்தி கண்ணாடி இவைகளைக் கொண்டு பரிசோதிக்க.)

கீழ்க் கன்றுகள் — வாழைக் கன்றுகளையும், சேம்பு, கருணை இவைகளின் கன்றுகளையும் நேரில் வைத்துக் காட்டி, ஒற்றுமை வேற்றுமைகளைக் கவனிக்க.

விதங்கள் — பல ஜாதி வாழைகளை வரவழைத்து அவைகள் ஒவ்வொன்றிற்குமுள்ள பேதா பேதங்களை விளக்குக. (ரஸ்தாளி, பேயன், பொந்தன், செவ்வாழை, கூழிவாழை, பச்சை நாடன், குரங்கு நாடன், சாம்பல் நாடன், ஆனைக் கொம்பன், ஆட்டுக்கொம்பன், நேந்திரன், விசிறி வாழை, கருவாழை, பூவாழை முதலான வாழைகளின் பெயர்களைச் சொல்லவும்.)



உபயோகம், விசேஷம் — இம் மரத்தைப் போன்ற சில மரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க. உபயோகங்களைக் கவனிக்க. வைத்த வ்ருக்ஷத்திலேயே பலன் கொடுக்கும். ஒரே குலை தள்ளும்.

பயிரிடுதல் — வாழை மரத்திற்கு விதை இல்லை. ஆனால் அதன் கீழுள்ள கன்றைப் பெயர்த்து, நன்றாய்க் கொத்திப் பண்படுத்திய நிலத்தில் நடுவார்கள். இதற்கு எப்பொழுதும் ஈரம் வேண்டும். (மற்ற சேம்பு, கருணை இவைகளைப் பயிரிடும் விதத்துடன் ஒப்பிடுக.)

வியாபாரம் — தோட்டம் அதிகமாய் இருக்குமிடத்தில் வியாபாரம் அதிகமாக நடக்கும் விதத்தை எடுத்து விவரிக்க. வியவசாயத் தொழிலிலிருந்து வியாபாரத்தை விருத்திசெய்யும் வகையைக் கேட்டு வரவழைக்கவும்.

V. S. ALWAR AYENGAR,
*1st Assistant, Corporation Model School,*
*Salai Vinayagar Koil Street,*
*George Town, Madras.*

## THE PRESENT CONDITIONS OF THE ELEMENTARY TEACHERS

## எலிமென்டரி உபாத்திமார்களின் தற்கால நிலைமை

எலிமென்டரி உபாத்திமார்களின் நிலைமையானது தற்காலத்தில் அதிக கஷ்டத்திலும் கஷ்டமென்று எவ்வளவு தாழ்ந்த அந்தஸ்தி லிருப்போராயினுஞ் சரி, உயர்ந்த அந்தஸ்தி லிருப்போராயினுஞ் சரி உணர்ந்தே யிருப்பார்கள். சுமார் 30, 40 ரூபாய் வருமான முள்ளவர்களே இந்த யுத்த அகவிலை காலத்தில் அதிக கஷ்டப்படுகையில் 11 ரூ. பெறும் இவர்கள் படும் அல்லல் இத்தகையதென்று இயம்பவும் வேண்டுமோ? 100-150 வாங்குகிறவர்களே இக்காலத்தில் தங்களுக்குக் கஷ்டமா யிருக்கிறதென்று சொல்லக் கேட்டிருக்கும் நான் எலிமென்டரி உபாத்திமார்களின்

நிலைமையை எவ்வாறு இயம்புவது? ஒருவாறு இயம்பினாலும், புருஷர் பெண்சாதி ஆகிய இருவருக்கு மட்டும், வேறு குஞ்சு குழந்தைகள், கிழம் கட்டைகள், பெரியோர் சிறியோர் இல்லையென்றே வைத்துக் கொண்டாலும், மாதமொன்றுக்கு அரிசி 22½ படிக்கு அதிகப்படுமே யொழியக் குறைவு படவே படாது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22½ படி அரிசி விலை ... ... | | ரூபா | 9 | 0 | 0 |
| குறைந்தது காய் கறிகள் ... ... | | ,, | 0 | 8 | 0 |
| ,, | பருப்பு படி 1¼-க்கு ... | ,, | 0 | 10 | 0 |
| ,, | மிளகாய் படி 2-க்கு ... | ,, | 1 | 0 | 0 |
| ,, | உப்பு படி 2-க்கு .. ... | ,, | 0 | 4 | 0 |
| ,, | விறகு ... ... ... | ,, | 0 | 8 | 0 |
| ,, | எண்ணெய்கள் ... .. | ,, | 2 | 0 | 0 |
| ,, | புளி ... ... ... | ,, | 0 | 6 | 0 |
| ,, | மொச்சை படி ½ க்கு ... | ,, | 0 | 4 | 0 |
| ,, | தயிர் அல்லது மோர் ... | ,, | 0 | 4 | 0 |
| ,, | வெங்காயம், மிளகு, சீரகம், பூண்டு, சிகைக்காய், வெற்றிலைப் பாக்கு, மஞ்சள், கடுகு, உளுத்தம் பருப்பு முதலிய ... ... | ,, | 2 | 4 | 0 |
| ,, | வீட்டு வாடகை ... ... | ,, | 0 | 12 | 0 |
| ,, | வண்ணான் ... .... | ,, | 0 | 8 | 0 |
| ,, | அம்பட்டன் ... ... | ,, | 0 | 4 | 0 |
| ,, | ஆடைகள் (சராசரி) ... | ,, | 1 | 8 | 0 |
| | | ஆக ரூபா | 20 | 0 | 0 |

செல்லுகிறது. இவ்வித நிலைமையில் எவ்விதம் ஜீவனஞ் செய்ய முடியும்? கவலை யில்லாதிருக்க முடியும்? உற்சாகமாய் வேலை செய்ய முடியும்? பிள்ளைகளுக்கு எப்படிப் படிப்பு விருத்தியாகும்? இது இவ்வித மிருக்க,

இவர்களுக்குத் தற்போது கிடைக்கும் இச் சொற்ப சம்பளமேனும் அடுத்த மாதம் 10 15 தேதிக்குள்ளாவது கிடைக்கின்றதோ வெனின், அதைச் சொல்வதும் வெட்கக்கேடுதான்! 2-3 மாதச் சம்பளம் சேர்ந்து ஒன்றாக 2-3 மாதஞ் சென்று கிடைக்கின்றது. சம்பளம், அடுத்த மாதம் 10-15 தேதிக்குள் கிடைத்துவிடுமென்று அன்னியரிடஞ் சென்று, 'இத்தனை நாளைக்குள் சம்பளம் வந்துவிடும், உடனே கொடுத்துவிடுகிறேன்' என்று ஏதாவது கடன் வாங்கிக் கொண்டாலோ, சம்பளம் வரும் மேற்கூறிய நிலைமையில் இவர்கள் (உபாத்திமார்கள்) வாய்மை கடைப்பிடிப்ப தெப்படி? குறித்த கெடு தவறியபின் கடன் கொடுத்தவரது நேரில் எவ்விதம் செல்ல முடிகிறது? அவர்கள்தான் என்ன நினைப்பார்கள்? இத்தனை நாளையில் சம்பளம் வந்துவிடும், கொடுத்துவிடுகிறேன் என்றாரே, இத்தனை நாள் சென்றும் சம்பளம் வாராமலா யிருக்கும்! சர்க்காரிலும் அனுப்பாமலா யிருப்பார்கள்? இவர் வாங்கிச் செலவழித்துக்கொண்டு அல்லது மெள்ளக் கொடுக்கலா மென்று வைத்துக்கொண்டு இருக்கிறார் போலும்! என்று அவநம்பிக்கை கொள்ளவும், உபாத்திமார் பொய்யாளர் என நினைக்கவும் நேரிடுகிறதன்றோ? இன்னும் மற்றுமுள்ள நிலைமைகளையும் கூறப்புகின் விரிவாகுமாதலால், அவற்றை எழுத்து மூலமாய் திருவரம்பூர் உபாத்திமைச் சங்கத்தினர், 8-2-'19 கூடிய தங்கள் மாதாந்த மீட்டிங் தினத்தன்று, முகாமில் வந்து இறங்கியிருந்த திருச்சிராப்பள்ளி தாலுகா போர்டு பிரசிடெண்டு அவர்களிடம் நேரில் சென்று தெரிவித்துக் கொண்டதை எடுத்துக்காட்டி முடிக்கின்றேன். அவ் விண்ணப்பம் பின்வருமாறு:

"இந்த யுத்த அகவிலை காலத்தில் ஜீவனத்திற்கே போதாத சொற்ப சம்பளமாகிய ரூ. 11ஆவது காலத்தில் கிடைக்காமல் அதிக கஷ்டப் படுகிறோம். உபாத்திமார்கள் அடிக்கடி மாற்றப்பட்டுப் போய்விடுகிறார்கள். அன்னிய ஊரார் என்னுங் காரணங்களாலும் தொழில் பார்க்கும் ஊராரும் கடன் கொடுக்கச் சந்தேகப் படுகிறார்கள். கிடைக்கிறதில்லை. உதாரணமாக — 1918 டிஸெம்பர் மாத சம்பளமே இன்னுங் கிடைக்கா திருந்தால், ஏழை உபாத்திமார்களாகிய நாங்கள் எவ்விதம் ஜீவனஞ் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அன்றியும்,

1917 ஏப்ரலிலிருந்து அதிகமான சம்பளம் ஒரு ரூபாய், 1918-ஜூன் மாதத்திலிருந்தே கிடைத்து வருகிறது. 1918 மே மாதம் வரையில் கிடைக்கவேண்டிய தொகைகளுக்குச் சப்ளிமெண்டு பில் உடனே அனுப்பியும் நாளது வரையில் கிடைக்கவே யில்லை.

இவ் வித்தியா இலாகாவைத் தவிர, வேறு இலாக்காக்கள் அனைத்திலும் பியூன்கள் வரையிலும் இவ் விலாகாவில் பல இடங்-

களிலும் இந்த யுத்தங் காரணமாக ஏற்பட்ட அகவிலைக்காக அலவன்ஸ் கொடுத்துக் காப்பாற்றி வருகிறார்கள். இவ்விடத்தில் எங்களுக்கோ அலவன்ஸ் கொடுக்கப்படும் என்று உத்திரவு கிடைத்ததேயன்றி, உதவிப் பொருள் கிடைக்கவுமில்லை. அதிக சம்பளமுள்ளவர்களும் இக்காலத்தில் மிக்க வருந்துகிறார்களென்றால் எங்கள் நிலைமையை சொல்லிக் கொள்ளவும் வாய் கூசுவதோடு, இந்த நிலைமையைத் தெரிந்த யாவரும் உபாத்திமைத் தொழிலா என்ற அலக்ஷியத்தைக் கேட்கவும் கர்ணகடூரமாயிருக்கிறது.

ஆகவே, "அந்தந்த மாதச் சம்பளம் அடுத்த மாதம் 10-15 தேதிக்குள்ளாவது கிடைக்கும்படியும் எந்த இலாகாக்களுக்கும்—விஷயங்களுக்கும் மூலாதாரமான இக் கீழ்தரப் படிப்பின் உபாத்திமார்களாகிய ஏழையேங்களுடைய அவசியத்தையும் நிலைமையையும் தெரிந்துகொள்ள காருண்யமுள்ள தாங்கள் தகுந்தபடி உதவிசெய்து அடியேங்களைக் காப்பாற்ற வேணுமாய்க் கோருகின்றோம்" என்பதே. (மேலே கூறிய சப்ளிமெண்டுபில் 1918-மே மாதத்திலேயே அனுப்பப்பட்டுள்ளது. 1918-டிஸெம்பர் மாத சம்பளமோ 3-3-'19 வரையிலும் கிடைக்கவேயில்லை.)

இவ் விண்ணப்பத்தையே, திருச்சி ஜில்லா அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும், லால்குடி ரேஞ்சு ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்கட்கும் சங்கத்தார் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

1918-'19-ம் வருஷத்திற்கு ஆதியிலே கல்வியினத்திற்குத் திட்டமான தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், செலவு வளர்ச்சி 16-லட்சம். இந்தப் பதினாறு லட்சத்துக்கு வகையான முக்கிய அம்சங்கள் என்னவெனில்:—

யூனிவர்சிட்டி கட்டடங்களுக்காக ஒரு லட்ச ரூபாய்;

புதிதாக எலிமெண்டரிப் பாடசாலைகளை ஏற்படுத்தும் வண்ணம் ஸ்தல சுய ஆட்சி சபைகளுக்கு நான்கு லட்சம் ரூபாய்;

எலிமெண்டரி ஸெகண்டரி பாடசாலைக் கட்டடங்களுக்கும் உபகரணங்களுக்குமாக ஸ்தல சுய ஆட்சி ஸபைகளுக்கு நான்கு லட்சத்து 48-ஆயிரம் ரூபாய்;



வியாபார கல்விச்சாலை முதலிய இனங்களுக்காக ஒரு லட்சத்து 23-ஆயிரம் ரூபாய்;

கல்விக்காக ஸகாயமாய்க் கொடுக்கும் தொகை 3-லட்சத்து 33-ஆயிரம் ரூபாய்; இந்த நடைமுதல் வருஷத்துக்குக் கொடுத்த இந்தத் தொகையைக் கொண்டு என்ன சகாயஞ் செய்திருக்கின்றனரென்று கவனிக்குங்கால், பிரைவேட் பாடசாலைகளுக்கு கிராண்டுத் தொகையை அதிகப்படுத்தியிருக்கிறதாக மட்டும் தெரியவருகிறது. சில இடங்களில் வார் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். சில இடங்களில் அதையுங் காணோம்.

1919-20-ம் வருஷத்திற்குத் திட்டமாயிருக்கும் தொகை 128-லட்சத்து 98-ஆயிரம் ரூபாய்; எனவே செலவு வளர்ச்சி 22-லட்சத்து 21-ஆயிர ரூபாயாகுமாம். இதன் செலவு விவரம் விவரமாகத் தெரியாவிடினும் உபாத்தியாயர்களின் சம்பளம் ஒருவாறு உயர்த்தப்படும்போலும். அதன் பான்மையை, 'சென்னையில் கல்வி நிலைமை' யென்னுந் தலைப்பெயரிட்டு, கல்விக் கான்பரன்ஸின் சிபார்சுகளும் மாகாண கவர்ன்மெண்டின் உத்தரவும்' என்ற விஷயங்களில் 'உபாத்தியாயர்களின் சம்பளத்'தைப்பற்றி, 6-2-'19 பிரசுரத்தில் வெளியிட்டிருக்கும் சுதேசமித்திரனது அறிக்கையையும் இதன்கீழ் குறிப்பிடுதல் சாலச் சிறந்தாகுமெனக் குறிக்கின்றேன். அதாவது,

'கீழ் நான்கு வகுப்புகள் மட்டும் இருக்கிற ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பையன்கள் கொடுக்கும் சம்பளத்தைத் தலைமை உபாத்தியாயர்கள் எடுத்துக்கொண்டு வரும் வழக்கம் இனி ஒழிந்து போய்விடும். அதற்குப் பதிலாக அவர்களுடைய சம்பளம் ஓரளவு உயர்த்தப்படும். ஆங்காங்குக் கிடைக்கும் சம்பளத் தொகைகள் இனிச் சர்க்காருக்குச் செலுத்தப்பட வேண்டும். இம்முறை எப்போது முதற்கொண்டு அநுஷ்டானத்துக்கு வருமென்று பின்னிட்டு அறிவிக்கப்படும்.

"தலைவரி போன்ற ஏற்பாடுகள் ஒழிந்து, உபாத்தியாயர்களுக்கு இனி சம்பளத்தை கணக்குப் பார்த்து உயர்த்திவிடவேண்டும். சில பள்ளிக்கூடங்களில் மாணவர்களின் ஆஜர் புத்தகத்தில் பொய்க் கணக்குக் காட்டி உபாத்தியாயர்கள் தங்களுக்கு நஷ்ட

மேற்பட்டு விட்டதாகச் சொல்லி ஏமாற்றுவது வழக்கமா யிருக்கிறது. இம் முறை எப்பொழுது முதற்கொண்டு அனுஷ்டானத்துக்கு வருமென்று வித்தியா இலாகா தலைவர் தெரிவிக்கவேண்டும். மொத்தத்தில் சர்க்கார் பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்குச் செய்து கொடுக்கப்படும் சம்பள உயர்வு மாகாண நிதியைத் தொடும்படியா யிருக்கக் கூடாது. ஜில்லா போர்டு தாலுகா போர்டுகளைக் கலந்து யோசித்து முடிவு செய்யப்பட வேண்டும். சர்க்கார் உதவிபெற்ற பள்ளிக்கூடங்களிலும் இதே முறை அனுசரிக்கப்படும். ஆனால் 'டீச்சிங்' கிராண்டுகள் அவற்றிற்கு அதிகமாய்க் கொடுக்கப்படும்'' என்பதே. அனைத்திற்கும் அகிலலோக நாயகன் அருள்புரிவாராக.

P. பரிமணப் பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர் சோலை, P. O., திருச்சி ஜில்லா.

# GEOGRAPHY

## பூகோள சாஸ்திரம்

### பூமியைப்பற்றிய முதல்பாடம்

நமது பாதத்தின் கீழ் இருப்பது பூமி. தலைக்குமேல் காணப்படுவது ஆகாயம். ஆகாயம் சாதாரணமாய் நீலவர்ணம்; சில வேளைகளில், முக்கியமாய் காலை மாலை நேரங்களில், சிவப்பும் இதர வர்ணங்களும் உண்டு. அது குவிந்து பூமியும் ஆகாயமும் தொடுவதுபோல் காணப்படும். அதற்கு அடிவாரம் என்று பெயர்.

ஆகாயத்தில் பகலில் காணப்படுவன சூரியன், மேகங்கள்; இரவிலோ சந்திரன், மேகங்கள், நக்ஷத்திரங்கள்.

குறிப்பு—சந்திரன் சமீபத்தில் இருப்பதனால்தான் அது சூரியனுக்கு எவ்வளவோ சிறியதாக இருந்தாலும், ஏறக்குறைய சமமாகக் காணப்படும்



| நக்ஷத்திரங்கள் | கிரகங்கள் |
|---|---|
| சூரியன் | பூமி |
| சப்தரிஷி நக்ஷத்திரம் | சுக்கிரன்<br>செவ்வாய் |
| துருவ நக்ஷத்திரம்<br>முதலியன | புதன்<br>குரு<br>சனி |
| | முதலியன. |

குறிப்பு — கிரகங்களில் புதன்மாத்திரம் சூரியனுக்குச் சமீபத்தில் இருப்பதால் கண்ணுக்குத் தெரியாது.

| நக்ஷத்திரம் | கிரகங்கள் |
|---|---|
| (1) இருப்பிடம் மாறுகிறதில்லை. | (1) சுற்றும். |
| (2) மினுக் மினுக்கென்ற வெளிச்சமுடையது | (2) ஸ்திரமான பிரகாசம். |
| (3) மிக்க உஷ்ணமானது. | (3) மிக குளிர்ச்சி. |

#### இராக்காலங்களில் திக்குகளை அறிவது

கலப்பை நக்ஷத்திரத்தை பார்த்து, பின்னால் வால்நக்ஷத்திரத்திற்கு நேர் மேலேயாவது கீழேயாவது பிரகாசமான நக்ஷத்திரம் தெரிந்தால் அதுதான் துருவ நக்ஷத்திரம் — அந்தப் பக்கம் வடக்கு.

#### பூமி

தன்மை — பூமியின் மேற்புறம் குளிர்ச்சி; உள்ளே போகப் போக உஷ்ணம்.

குறிப்பு — குளிர்ச்சி யென்பது உஷ்ணம் இல்லாததுதான்; அப்படியே இருள் என்பது வெளிச்சம் இல்லாததே.

#### உருவம்

தலையும் அடியும் தட்டையான ஓர் உருண்டை. நாம் ஒரே காலத்தில் பூமியில் பார்க்கக்கூடிய பாகம் மிகவும் சொற்பமானதாகையால் அது பார்வைக்கு தட்டையாகத் தோன்றும். (உ-ம்.) உருண்டையான கல் உருண்டையை பூமியில் புதைத்து வைத்து மேல் கொஞ்சப்பாகம் மாத்திரம் தெரியும்படி காட்டல்

## பூமி உருண்டையாய் இருப்பதற்குப் பல திருஷ்டாந்தங்கள்

1. கப்பல் கரையிலிருந்து செல்லுங்கால் முதலில் அடிப்பாகமும் செல்லச்செல்ல மத்தியபாகம் நுனிப்பாகம் மறைகிறது.

தரையை நோக்கி வரும் கப்பலைப் பார்த்தால் முதலில் நுனிப்பாகமும் வரவர மத்திய பாகமும் பிறகு கரைக்கு சமீபமாக வர அடிப்பாகமும் தெரியும்.

2. பூமியைச் சுற்றும் பிரயாணி திரும்பவும் தான் புறப்பட்ட இடத்திலேயே வந்து சேருகிறான்.

3. ஒருவன் கொஞ்சம் உயரமான பாகத்திலிருந்து பார்க்க, பூமியின் கொஞ்சபாகம் மாத்திரம் தெரியும். நாம் உயர உயர பூமியின் பாகமும் அதிகமாகத் தெரியும்.

4. சந்திர கிரகணத்தில் கீழே காணப்படும் பூமியினுடைய நிழல் வட்டமாக காணப்படுகிறது.

5. சூரியன் சந்திரன் முதலிய கிரகங்கள் உருண்டை வடிவமா யிருப்பதால் பூமியும் உருண்டையென்று ஊகிக்கலாம்.

6. சூரியன் ஒரேகாலத்தில் எல்லா இடங்களிலும் உதயமாகிறதில்லை. பூமி தட்டையானால் இப்படி யிராது.

7. பூமியின் வடபாதியில் சப்தரிஷி நக்ஷத்திரங்கள் அல்லது கலப்பை நக்ஷத்திரம் தெரியும். அதிலிருந்து நாம் தெற்கே போகப்போக, கொஞ்சங் கொஞ்சமாய் அடியில் மறைந்து (ஈக்குவேட்டர்) அல்லது பூமத்தியரேகைக்குத் தெற்கில் முழுமையும் மறைந்து போகிறது. பூமி தட்டையாயிருந்தால் தென்பாதியில்கூடத் தெரியும்.

அக்ஷரேகை செங்குத்தா யில்லாமல் வடக்கே $23\frac{1}{2}$ டிகிரி சாய்ந்திருக்கிறது. அதன் முனைகளுக்குத் துருவங்கள் என்று பெயர்.

பூமியின் மேற்புறம் தோற்றத்திற்குப் படம் பார்க்க.

பூமியைச் சுற்றியிருப்பது வாய்வுமண்டலம்.

அப்பால் ஆகாயமண்டலம்.



1. பூமியின் உட்புறம்.
2. பூமியின் வெளிப்புறம்.
3. ஜலபாகம்.
4. வாயுமண்டலம்.
5. ஆகாயம்.

பூமியின் கிழக்கு மேற்கு குறுக்களவு அல்லது விட்டளவு 7926 மைல்; தெற்கு வடக்கு தட்டையாகையால் இதன் குறுக்களவு 7900 மைல்; சுற்றளவு 25000 மைல். பரப்பு கண்டுபிடிக்க.

பூமிக்கும் சூரியனுக்கும் 93 கோடி மைல் அல்லது 1 மணிக்கு 50 மைல் வீதம், 200 வருஷம் போகக்கூடிய தூரம்.

சந்திரன் பூமியைக் காட்டிலும் சிறியது.

50 சந்திரன் சேர்ந்தது பூமி.

சூரியன் எத்தனையோ கோடிமடங்கு பெரியது.

## பூமியின் அசைவு அல்லது சலனம்.

பூமி தன்னைத்தானே அதன் அச்சு அல்லது அக்ஷரேகையில், மேற்கேயிருந்து கிழக்கே அதாவது இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாய் ஒருமணிக்குச் சுமார் 1000 மைல் வீதம் சுற்றுகிறது. அதனால்தான் பூமியின் அசைவு, நமக்குத் தெரிகிறதில்லை. (உதாரணம் கவண்டிக்கல்). ஒருதரம் சுற்ற ஒருநாள் உண்டாகிறது. அதற்கு தினகதி யென்று பெயர். பூமி தன்னைத்தானே சுற்றுகையில் சூரியனுக்கு எதிரில் வரும் பாகம் வெளிச்சமாயும் மற்ற பாதி இருட்டாயு மிருக்கிறது. இதுதான் இரவுபகல். சந்திரன் பூமியைச் சுற்றிக்கொண்டு சூரியனையும் பூமியோடு சுற்றுகிறது. அது பூமியை ஒரு வருஷத்தில் அதாவது 52 வாரத்தில் 13 தடவை சுற்றுகிறது. அதாவது, 4 வாரத்தில் ஒருதடவை சுற்றுகிறது. இதனால் மாதம் உண்டாகிறது.

சந்திரனுக்குச் சுயமாய் ஒளியில்லை. சூரியனிடம் ஒளியைப்பெற்று, கண்ணாடியைப்போல் பிரதிபலிக்கிறது. ஆனதுபற்றிச் சூரியனைப்போல் அவ்வளவு பிரகாசம் இல்லை. உஷ்ணமும் இல்லை. அதனால்தான் அதைப் பார்க்கக் கண் கூசுகிறதில்லை. ஆனால் சூரியனையோ முக்கியமாய் நடுப்பகலில் பார்க்கமுடியாது.

இந்தச் சந்திரன் ஒளி பிரதிதினமும் நமக்குப் பூர்த்தியாகத் தெரிகிறதில்லை. ஒருநாள்தான் பூர்த்தியாகத் தெரியும். பிறகு வரவர ஒளி குறைந்து 15-ம் நாள் ஒன்றுமே தெரியாது. இந்தப் பதினைந்து நாட்களுக்கும் தேய்பிறை யென்று பெயர்.

அதுமுதல் திரும்ப கொஞ்சம் கொஞ்சமாய் விர்த்தியடைந்து 15-ம் நாள் பூரணமாய் இருக்கும். இந்த 15 நாட்களுக்கும் வளர்பிறை யென்று பெயர். இதனால்தான் பக்ஷம் உண்டாகிறது. ஒரு மாதத்தில் இரண்டு பக்ஷம். வளர்பிறைக்குச் சுக்கிலபக்ஷம் யென்றும், தேய்பிறைக்குக் கிருஷ்ணபக்ஷம் யென்றும் பெயர்.

குறிப்பு — சூரியனுக்கும் பூமிக்கும் சந்திரனுடைய நிலைமை அடிக்கடி வித்தியாசப்பட்டு வருவதால சந்திரன் உருவம் அந் நிலைமைக்குத் தக்கபடி மாறுபடுகிறது. சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் சரியாய் மத்தியி லிருக்கையில் சந்திரன் ஒளி முற்றிலும் தெரியாது. அதுதான் அமாவாசை. நேர் ஒழுங்கு சற்று இடப்புறம் நகர்ந்தால் சொற்ப ஒளி தெரியும். இப்படியே ஒளி விர்த்தியாகி நாம் சந்திரனுக்கும் சூரியனுக்கும் நேர் ஒழுங்கிற்கு நேர்கோண கோட்டு ஒழுங்கில் இருந்தால் ½ பாகம் தெரியும், இதற்கு ஒரு வாரம் செல்லும், இப்படியே மறு ஒரு வாரத்தில் விர்த்தியடைந்து நாம் சூரியனுக்கும் சந்திரனுக்கும் மத்தியில் ஒழுங்கான கோட்டுக்கு வரும்போது பூரணமாய் ஒளி தெரியும். இதுதான் பௌர்ணமி.

இதுமுதல் ஒளி வர வரக் குறைந்து 3-வது வாரத்தின் கடைசியில் ஒளி முற்றிலும் தெரிகிறதில்லை. மொத்தம் ஒரு சுற்றுக்கு 29 நாள் ஆகிறது.

பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதோடு சூரியனையும் சுற்றுகிறது. அதற்கு 365 நாள் ஆகிறது. அதைத்தான் ஒரு வருஷம் என்கிறோம். அந்தப் பாதைக்கு (ஆர்பிட்) அல்லது மண்டலகிரகம் அல்லது மார்க்கம் யென்று பெயர். இதற்கு வருஷகதி யென்று பெயர்.

### பூமியின் ரேகைகள்

துருவங்களுக்கு மத்தியில் ஊடுருவிச் செல்லும் ரேகைக்கு ஈகுவேட்டர் அல்லது பூமத்தியரேகை என்று பெயர். அதுமுதல் துருவங்களுக்கு உள்ள தூரத்தை 90 பாகமாகப் பிரித்திருக்கிறது. ஒரு பாகத்திற்கு டிகிரி யென்றுபெயர். அதை ° இப்படிக் குறிக்கலாம். அது சுமார் 69 மைல் தூரம். (பூமத்திய ரேகை அல்லது ஈகுவேட்டருக்கு 23½ டிகிரி, வடக்கிலிருப்பதற்கு டிராபிக் ஆப்-கான்ஸர்) அல்லது கற்கடகராசி யென்று பெயர். 23½ டிகிரி



தெற்கிலிருப்பதற்கு (டிராபிக் ஆப் காப்கிகானல் அல்லது மகரராசி யென்று பெயர். துருவத்திலிருந்து 23½ டிகிரி தெற்கே உள்ளதற்கு ஆர்டிக் சர்கிள்) யென்று பெயர். அதேமாதிரி தென் துருவத்திலிருந்து வடக்கே வருவதற்கு, அன்டார்டிக் சர்கிள் யென்று பெயர். மற்ற ரேகைகளுக்கு பொதுவாய் சமதூர ரேகைகள் யென்று பெயர்.

S. KAILASA AYYAR,
*Govt. Panchama Training School, Madras.*

# THE TEACHING OF HISTORY

## தேச சரித்திரம் போதிக்கும் முறை

(முன் தொடர்ச்சி பக்கம் - 144)

மேலும் உயர்ந்த வகுப்புகளில் கால வர்த்தமானங்களும் நாகரிக விருத்தியும் வியாபாரம் கைத்தொழில் முதலியவற்றையும் பாஷை நடை உடை பாவனை முதலியவற்றையும் எவ்விதமாய் மாறுபடச் செய்தன வென்றுங் கவனித்தல் வேண்டும். இவைகளை விளக்கச் சாதாரணமாய்ப் பலரும் அறிந்துள்ள புராணங்கள், இதிகாசங்களினின்றே உதாரணங்கள் கொடுத்து, சமீபத்தினின்றே தொல்லை நாட்களின் வரலாற்றிற்குச் செல்லுதல் வேண்டும்

### போதனைக் கருவிகள்

1. கரும்பலகை — வகுப்புக்குத் தக்கவாறு கரும்பலகையில் பாடத்திரட்டு எழுதிப்போடவேண்டும். கூடுப்போதெல்லாம் அவசியமான படங்களையும் பலகையில் வரைந்து காட்டிப் பிள்ளைகளையும் வரையச்செய்யலாம். பலவண்ணச் சுண்ணக்கட்டிகளை உபயோகித்து, படங்களிலுள்ள முக்கியக் குறிப்புகளையும், சண்டைக் கப்பல்கள், எதிரிகளின் அணிவகுப்புகள் முதலியவற்றைக் காட்ட வேண்டிய படையெழுச்சிப் படங்களையும் துலாம்பரமாய்க் காட்டி, மாணவர்தம் மனத்திற் பதியச் செய்தல் வேண்டும்.

2. திருஷ்டாந்த சித்திரப்படங்கள், தேச சம்பந்தமான கட்டடங்கள், சண்டை ஆயுதங்கள், உடுப்புகள், நகைநட்டுகள், நாணயங்கள் முதலியனவற்றைப் படத்தின் மூலமாயும் கூடுமானால் கண்கூடாகவும் காட்டவேண்டும். புஸ்தகங்களிற் காணலான படங்களைத் தவிர வேறு பெரிய படங்களை அதற்கென்று சேகரஞ் செய்து வைத்திருத்தல் வேண்டும். பெரிய பாடசாலைகளில் விசித்திரப் படத்தின் மூலமாயும் இத்தகைய படங்களைக் காண்பித்தல் கூடும்.

3. தேசபடங்கள் அவசியத் தேவை. தேசபடத்தின் மூலமாய் மலைகள், ஆறுகள் முதலியனவற்றையும் அவைகளை யடுத்துள்ள பட்டணங்களையுங் காட்டி, சண்டை நடந்த இடங்களின் அநுகூலம் பிரதிகூலம் ஆகிய விஷயங்களை விளங்கச் செய்யலாம். ஒரு தேசத்தின் இயற்கையமைப்பு எவ்விதமாய் அத் தேசத்துக்கு அநுகூலமாயும் பிரதிகூலமாயும் இருக்கிற தென்பதையும் உணர்த்தலாம். படங்களைக் கொண்டு பாடஞ் சொல்லிக்கொடுத்தலால் அதனைத் திட்டமாய் அறிவர் மாணவர். உருவங்களும் மற்றும் மாதிரிகளும் உளவேல் இன்னமும் சித்தியாய்ப் பாடம் நடைபெறும்.

4. மேல் வகுப்புகளில் நாளேற ஏற திருத்தமாயும் செவ்வையாயும் கதாரூபமாயும் எழுதப்பட்ட புஸ்தகங்களை உபயோகித்தலும் வேண்டும். (இது விஷயத்தில் சின்னஞ் சிறிய மாணவர்களுக் கென்று கதாரூபமாய் இயன்றுள்ள மகா-ா-ஸ்ரீ கா. நமச்சிவாய முதலியா ரவர்கள் இயற்றியிருக்கும் இந்துதேச சரித்திரக் கதைகள்' சாலவும் உதவிபுரியும்). மேலும் சரித்திர சம்பந்தமாய் எழுதப்பட்ட நாவல்கள், கதைகள் முதலியன கைக் கெட்டின வரையில் பெரியவர்கள் வாசித் துணர்தல் சரித்திர அறிவைப் பூர்த்திசெய்யாநிற்கும்.

5. விநோத காட்சிச்சாலை, சித்திரசாலை முதலிய இடங்களுக்குப் போதலும், தேச சரித்திரசம்பந்தமான ஊர்கள், ஸ்தலங்கள், மடங்கள் முதலியனவற்றிற்கு உல்லாசப் பிரயாணமாய் ஏகலும் சரித்திரப் படிப்பிற்கு வேண்டிய உதவிகளே.

J. G. SUNDARAM,
*The Kellett High School,*
*Triplicane, Madras.*



# NATURE STUDY

## இயற்கைப் பாடம்

[திருவள்ளூர் உபாத்திமைச் சங்கத்தில் 1919ஆ ஜனவரிமீ வாசிக்கப் பெற்றது]

### முன்னுரை

இந்நிலவுலகின்கண் நிலவுகின்ற தோற்றங்கள் எழுவகையனவாகும். அவை — 1. தேவர் 2. மக்கள் 3. விலங்கு 4. பறவை 5. ஊர்வன 6. நீர் வாழ்வன 7. தாவரம் என்பன. இவைகட்கு முறையே 1. இந்திரன் 2. மனிதன் 3. யானை 4. தீப்பறவை 5. முதலை 6. திமிங்கிலம் 7. ஆலமரம் உதாரணங்களாம்.

சாதாரணமாய் நிலம், நீர், வியர்வை, முட்டை, கருப்பை ஆகிய இவை முதலியன பிறப்புக் கிடமாயுள்ளன. இவற்றை இதனடியிற் குறித்தவகையிற் பகுத்துக் கூறலாம், 1 நடப்பன : மனிதர், விலங்கு 2. பறப்பன : பறவைகள் 3. நீந்துவன (நீர் வாழ்வன): மீன், முதலை 4. ஊர்வன : பாம்பு, நத்தை 5. நீர் நிலங்களில் இருப்பன : வாத்து, தவளை.

இப்பிறவிகள் மூளையை ஆதாரமாகக் கொண்டு விரும்பல், சிந்தித்தல், நிதானித்தல், தர்க்கித்தல், தீர்மானித்தல், உறுதி கொளல், ஞாபகம்வைத்தல் முதலிய சித்தவிருத்தியினால் இயங்குகின்றன. இவ்வகைக் குணங்களனைத்தினும் தர்க்கித்தறிதல் முக்கியமாய்த் தேவர் மக்கட் பிறவிகளுக்கே யுரியது.

தர்க்கித்தல் என்பதே பகுத்தறிதல்; அதாவது குணகுணங்களை யோர்தல் — இருவகைப் பொருள்களுக்குள்ள வித்தியாசம் சரிவரத் தெரிதல். இத்தகைய பகுத்தறிவு மக்கட்கேயன்றிப் பிறவுயிர்கட்கு இன்றாம். இக்காரணம்பற்றியே எப்பிறப்பினும் இப் பிறப்பே சிறப்பெனச் செப்புவர் பெரியோர். இவ்வகைப் பகுத்தறிவைக் கொண்டே மனிதராய நாம், மிருகேந்திரனை சிங்கம் முதலிய வலிய விலங்குகளையும் அடக்கியாளுந் திறத்தினராகின்றோம்.

சர் ஐசெக் நியூடன் (Sir Isaac Newton) தூரதிருஷ்டிக் கண்ணாடி (Telescope) செய்ததும், மரத்தினின்றும் பழம் கீழ்

விழின் அது ஏன் மேல்நோக்கிச் செல்லலாகாதெனத் தர்க்கித்துப் பிறகு பூமிக்கு மத்திய கவர்ச்சி விசை அதாவது ஆகர்ஷண சக்தி (Centre of gravity) உண்டெனக் கண்டுபிடித்ததும் பகுத்தறிவின் பலத்தினாலேயே யன்றோ! இவரேயன்றி காஸ்தர் (Mr. Casther) என்பவர் அச்சுயந்திரத்தையும் (Printing Art), வாஷிங்டன் (Mr. Washington) என்பார் நீராவியந்திரத்தையும் (Engine) தங்கள் பகுத்தறிவைக் கொண்டன்றோ கண்டுபிடித்தது. இன்னோரன்ன மேதாவிகளும் மானுடர், நாமும் மானுடரா? இவர்கள் போன்று மானுடராக வுதித்த நாமும், நம்மறிவைக்கொண்டு நூதன விஷயங்களைக் கண்டறிய முயல்வது கடமையாகும். அவ்வாறறிய முடியாதாயினும் பிறர் நம்பொருட்டு ஊன்றியுழைத்து அரிய விஷயங்களை அறியப் புகட்டின் அவற்றையேனும் ஆய்ந்தறிதல் கூடாதே?

இப்பூதலத்திற் காணுஞ் சகல பொருட்களும் இயற்கைப் பொருட்களே. ஏதோ அவற்றிற் சில செயற்கைப் பொருட்களாக விருப்பினும் அவையும் இவ்வியற்கையினின்றே வந்தனவாகும். ஆகையால் எல்லாப் பொருட்களும் இயற்கையின் பாற் பட்டனவே. இயற்கை என்பது பிறராற் செய்யப்படாது தாமே அமைவது. அதாவது கடவுளாற் சிருஷ்டித்த வகையில் அமைந்திருப்பது. இயற்கைப் பொருட்களின் விசித்திரங்களைக் காணுந்தோறும் சர்வசக்தியுடையனாய் விளங்குங் கடவுளின் மகிமை காணப்படுகின்றது. உற்று நோக்குஞ் சக்தி உச்ச நிலையை யடைகிறது. கடவுளின் தன்மையைத் தம்மிற் காணக் காட்டும் இயற்கைப்பாடம் இதனால் மற்றெல்லாப் பாடங்களினும் மேம்பாடானதெனத் தேடத்தக்க விசேடத்தோடும் விளங்கி நிற்கின்றது.

உலகில் அநேக போர்வீரர்களும் ராஜதந்திர நிபுணர்களும், கவீசுவரர்களும், கதை வரைவதில் வல்லுநர்களும் தங்கள் வன்மைகளைக் காட்டி யிருக்கின்றனர். இவ்வாறு உயிர்நூற்புலவர் பலரின்றிச் சிலரே முன்வந்துளர். ஏனெனில், இவ்விஷயம் புத்தக வாயிலாகப் படித்து வருவதன்றே! ஒவ்வொன்றையும் ஊன்றிப்பார்த்து மனத்தாற் சிந்தித்து அறியவேண்டிய அரிய விஷயமன்றோ! இதனாலன்றோ கிரீஸ்பட்டணத்திலிருந்து ஓர் உயிர்நூற் புலவரும் உரோமாபுரியில் அதுவுமின்றியும் ஐரோப்பாவினின்று நூற்றுக்கணக்கான போர்வீரர்கள் வெளிவர ஆறு உயிர்நூற்-



புலவர் அகப்படுவதே அரிதாயிற்று. இதனானே தாவர பிராணி சாஸ்திரங்களின் மேன்மை நன்கு விளங்குகின்றது. இவ்வாறு இவ்விஷயங்களைக் கற்றுத் தேர்ந்த நிபுணர்கள் அநேகர் இலரேனும் எல்லா மாந்தர்களும் இத் தாவர பிராணிவர்க்கங்களைக் குறித்துச் சற்றேனு மறிந்தே இருக்கின்றனர்.

ஒன்று மறியாதாரும் இலர். முற்று முணர்ந்தாரு மிலர். குழந்தைகள்கூட இத்தாவர பிராணிவர்க்க விசித்திரங்களை ஊன்றிப் பார்த்து, சந்தோஷ சாகரத்தில் மூழ்கி இன்னு மவைகளைக் குறித் தறிய வவாவுகின்றன எனின் இவற்றி னருமையை என்னெனச் செப்புவது!

ஆகையான் பிறவிகளிற் கடையாகக் கூறிய தாவரம் சீவவர்க்கத்தில் எவ்வாறு பொருந்து மென்பதை முன்னர் ஆராய்வோம்.

பிராணிகட்குப் பொருந்தி யிருக்கவேண்டிய லக்ஷணங்கள் ஆறும். அவை தாம் — 1. ஜனித்தல். 2. சுவாசித்தல். 3. உண்ணல். 4. வளர்தல். 5. இனமீன்றல் (வர்க்க விருத்தி செய்தல்). 6. சாதல் என்பன. இவ்வகைய லக்ஷணங்கள் எப்பொருளிற் பொருந்தி யுள்ளனவோ அப்பொருளைப் பிராணிவர்க்கத்திற் கொள்ளல் வேண்டும்.

இனி, தாவரவர்க்கமும் பிராணிவர்க்கமுமே என்பதற்கு முன் மொழிந்த லக்ஷணங்கள் ஒருங்கே யதிற் பொருந்தி யிருப்பதையும் மற்றதையும் இதனடியிற் குறித்துக் காட்டுவோம்.

### தாவர வர்க்கமும் பிராணிவர்க்கமே

செடிக்கும் ஜந்துவுக்கும் உள்ள வித்தியாசம் அபரிமிதமாக விருக்க, தாவரமும் பிராணியே எனக் கூற லெவ்வா றேற்கும்? தாவரம் நடமாடுகிறதா? பேசுகிறதா? பிராணன் உள்ளதுதானே பிராணி எனப் பலர் பலவாய்ப் பகருகின்றனர். உற்று நோக்கின் ஒரு பிராணிக்கும் மற்றொரு பிராணிக்குமுள்ள வித்தியாசத்தைப் பார்க்கிலும் அதிகமான வேற்றுமை, பிராணிக்கும் தாவரத்திற்கு மில்லை. ஓர் ஈயையும் ஒரு யானையையு முய்த்துணர்க. பிராணிகளா விடம் பெயரக்கூடும், அவ்விதம் செடி நகரமுடியாது என்பதே பெரிய ஆக்ஷேபம். இதற்குச் சமாதானமாகக் கடற்பஞ்சு, பவளக்கொடி பிராணிவர்க்கத்தைச் சேர்ந்தவையாயினும்,

உற்பத்தி ஸ்தானத்தை விட்டு நகருவதில்லை. ஆகையால் பிராணிவர்க்கத்தினின்றுந் தள்ளுகிறோமா! கொம்புகளிலும் கற்களிலும் ஒருவித வேர்களினுஞ் சம்பந்தப்பட்டுத் தண்ணீரில் வசிக்கும் பலவித சிறு ஜந்துக்கள் நகரமுடியாமலு மிருக்கின்றன.

சில செடிகள் இளமைப்பருவத்தில் நீரி னோரிடத்தினின்றும் மற்றோரிடத்திற்கு நகர்ந்து செல்லக்கூடியனவாக விருக்கின்றன. பெரிய செடிகள் சில பாகங்களுக்கு நகரக்கூடிய சக்தியுடையவையா யுள்ளன. ஆனால் பேசுஞ் சக்தியோ அல்லது சப்தம் உண்டுபண்ணுஞ் சக்தியோ இல்லை. "அரிது அரிது மானிடராதலரிது" என்னுஞ் சிறப்பினையுடைய மாந்தர்களிற்கூடச் சிலர் ஊமையாய், பேசும் சக்தியற் றிருக்கின்றனர். ஆகையாலவர்களை மானுடவர்க்கத்திற் சேர்க்கா தொழிக்கின்றோமா? இல்லையே! இது ஒன்றினாலேயே உயிரற்றதென உரைத்த லொவ்வாது —

சில புஷ்பங்கள் ஒருநாளில் வித்தியாசமான காலத்தில் விகசித்து மறுபடி கூம்புகின்றன. தொட்டாற்சிணுங்கி அல்லது சுருங்கி (Touch me not) என்னும் பூண்டைத் தொட்டவுடன் தனக்கு யாரோ தீங்கிழைக்கின்றனரென்றோ அன்றிக் கூச்சத்தாலோ உடனே சுருங்கிக்கொள்ளுகிறது. இது செடிதானே. தூங்குமூஞ்சி மரம் (Rain Tree) இரவி லுறங்கியும் பகலி லுறங்காமலு மிருக்கக் காண்கிறோம். இது மரந்தானே.

இதுவுமன்றிப் பிராணிகளைப் போன்றே தாவரமும். 1. பிராணவாயுவை உட்கொண்டு கரியமலவாயுவை வெளிவிடுகின்றது. 2. உணவைப் பூமியினின்றும் ஆகாயத்தி னின்றும் சேகரிக்கிறது. அவ்வுணவைத் தாதுக்களாக மாற்றி ஜீர்ணித்து வளர்ந்தும், கருத்தரித்தும், தன்னினத்தைப் பெருக்கியும் பிறகு மூப்புற்று இறக்கின்றதெனின் இதுவும் உயிர்பெற்றதே யன்றோ!

பிராணிகளுக் கிருப்பது போலவே தாவரங்களுக்கும் இயற்கையிற் பலவித இடையூறுகளும், பகைகளும் உளவென்பது சாதாரணமாய்ப் புலப்படாது.

ஒரே ஜாதி மிருகங்களும் ஜந்துக்களும் உணவுக்காகவும் இனவிருத்திக்காகவும் தம்முள் போர்புரிவதும் பெரியது சிறியதை விழுங்குவதும் பெருஞ் சண்டையேயன்றிச் சமாதான மன்று.



தாவரம் உயிருள்ளதெனின் அதைப் புசிக்கும் நாமும் பிராணிகளும் பகைவர்தாமே. மேலும் தமக்குத் தீங்கிழைக்கும் வெயில், மழை முதலியவற்றினின்றும் உண்ணும் பிராணிகளினின்றும் காத்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டுவது அவசியம்.

தாவரம் தம் வாழ்க்கையில் சம்பவிக்கும் கஷ்டங்களினின்றும் விலக்கிக்கொள்ளப் பிரயத்தனஞ் செய்யாமலில்லை. வாழ்க்கைக்கு அவசியமான சூரியவெப்பம், வாயு, ஜலம், உப்புக்கள் என்பவை வேண்டியவளவிற் குறையினும் மிகினும் தாவரங்கட்குக் கஷ்டமே.

அடியோடு தின்னும் ஆடுமாடுகள், குருத்துக்களைத் தின்று மகரந்தப் பொடியை வீணாக்கி வர்க்கவிருத்திக்கு இடஞ்சலியற்றும் நத்தைகள், புழுக்கள் தாவரத்திற்கு ஜன்மவிரோதிகளே.

தின்பண்டத்தில் நாயும் நரியுஞ் சண்டையிடுமேயன்றி ஆடுமாடுகள் அந்நாயுடன் சண்டைபிடியாவன்றோ. உணவின் வித்தியாசமே இதற்குக் காரணம். இதனால் ஒரேவித உணவை விரும்பும் தாவரம் வலியவற்றையும் மெலியவற்றையும் வென்று நலியச் செய்கிறது. களை எடுக்காவிடிற் பயிர் என்னவாகும்? களை விரோதிதானே சப்தமின்றி நடைபெறும் சண்டை, சண்டையன்றோ. ஊமைகள் போர்புரியின் அது போரின்பாற் படாதோ, இதனால் உயிருண்டென்றும் இடையூறுகளும், சத்துருக்களும் உண்டென்றும் தமக்குள் போட்டியுண்டென்றும் அறிந்தோம்.

விரோதிகள். 1. வெயில், காற்று, குளிர், 2. ஆடு, மாடு, 3. பூச்சி, நத்தை. நிற்க—

சர்வ சாதாரணமாய்க் காணும் or சப்பாத்தியில் குளோரோபில் எனும் இலைப்பச்சை மிகவும் சிறுத்துப் பிறகு விழுந்தும் போகும் இலைகளினின்றும் விலகித் தண்டினுள் இழுத்துக்கொள்ளப்படுகிறது. இலையற்றதாயினும் இதனாலேயே பச்சை நிறமுள்ளதாக விருக்கின்றது. தண்டின் உட்பாகம் கடற்பஞ்சைப் போன்று மிருதுவாக விருப்பதால் சேகரிக்கும் நீரைத் தன்னுட் சேமித்துக்கொள்ளும். அதற்கேற்பத் தோலும் தடித்திருக்கிறது. இது மைதானங்களிலும் ஏரி ஓரங்களிலும் நாவறண்டு திரியும் ஆடுமாடுகள் தன்னை அணுகவிடாமல் முட்களால் தடுத்தும் கனத்த தோலினாலும் இலைகளின்மையாலும் உள்ளே நீருடன்

கலந்திருக்கும் கோழைபோன்ற ம்யூகஸ் எனும் வஸ்துவினாலும் ஜலம் ஆவியாக மாறாமற் செய்தும் தானுட்கொண்ட நீரை வேண்டும்போது தனக்கு உபயோகமாகும் வண்ணம் தங்குமிடம் ஏற்படுத்தித் தனது வாழ்விற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்கின்றதெனின் உயிரற்றதென எப்படி உரைக்கலாம்.

நாம் சதுர்வித உபாயங்களாகும் சாம பேத தான தண்டங்களாற் சத்துருக்களை ஜயிப்பது போன்று தாவரமும் பால், சாம்பல், நாற்றம், அருவருக்கும் சுவை (கைப்பு) காரம், சாரம், சுணை, முள் முதலியவற்றால் தனக் கின்னல் விளைப்போரைத் தடுப்பதன்றி முக்கியமாய் முட்களையே க்ஷணார்த்தம் ஆயுதங்களாக உபயோகப்படுத்துகின்றது. இவண் முள்ளம்பன்றியும் க்ளோப் எனும் மீனும் நோக்கற்பாலன.

அறிந்தவர் சில புஷ்பங்களிற் சில பூச்சிகளே யடைகின்றனவெனக் கூறுவர். ஒரே புஷ்பத்திற் பல பூச்சிகள் ஒரு வரம்பின்றி எல்லையற்று அடைந்தால் புஷ்பத்திற்கு நஷ்டமுண்டாகு மாகையால் தாவரம் தனக்கு உபகாரஞ் செய்யும் பூச்சிகளையே தன்னை அணுகுமாறு செய்வதற்கேற்ற அமைப்புள்ளனவாக விருக்கின்றது.

மானுடராய நாமும் மிருகங்களும் சாகபக்ஷிணிகளாகவும் மாம்சபக்ஷிணிகளாகவும் இருக்கிறோமே தாவரமும் அவ்வாறிருக்குமோவெனின் ஆக்ஷேபமின்றி இருக்கிறது. இலை, தழை, கிழங்கு, கொட்டை, பழம் முதலியன புசிப்போர் சாகபக்ஷிணிகள். தாவரம் வேரின் நுனியிலிருக்கும் காரத்தினாற் பூமியினுள் ஊடுருவிச்சென்று பூசாரத்தை உறிஞ்சிக் கிரகிக்கின்றது. அப்பூசாரத்தில் தாவர, பிராணிகளின் சாரமே நிறைந்திருப்பது சகலரு மறிந்தது. இஃதொன்றினாலேயே தாவரம் மாம்சபக்ஷிணி யென்று நிராக்ஷேபமாகக் கூறலாமாயினும், பிரத்யக்ஷமாகத் திருஷ்டாந்தப்படுத்த முயலுவோம்.

சதுப்பு நிலங்களிலுள்ள சில செடிகளுக்குத் தேவையான நைத்ரஜனமுள்ள (Nitrogen) பதார்த்தங்கள் வேண்டியவளவு கிடைப்ப தரிது. சொற்ப வருமானமுள்ள உபாத்தியாயராய் நாம் இரவுபாடசாலையில் அலுவலகப்படுமா, பிரைவேட் கிடைக்குமோவென அலைந்து வரும்படியை விருத்தி செய்ய முயலுவதுபோலத் தேகவமைப்புக்கு அவசியமான பொருட்களைப்



பூமியினின்றுங் கிடைக்கப்பெறாச் சில செடிகள் தம்மை நாடும் சிறு ஜந்துக்களைக் கொன்று ஊனின்சாரத்தைப் பெறுதற்கேற்ற வேறுபாடுகளைச் செய்கின்றன.

இவ்வகைய மாம்சபக்ஷிணிச் செடிகள் முக்கியமாய் நமது இந்தியா, சுமாத்ரா, தென் அமெரிகா முதலிய உஷ்ணப் பிரதேசங்களின் சதுப்புநிலங்களில் அபரிமிதமாகக் காணப்படுகின்றன. நமக்கு எவ்விதம் சில பண்டங்களிற் பிரிய மதிகமோ அவ்விதமே. செடிகளுக்கும் சில ஜந்துக்களை யருந்துவதி லாசைபோலும். உதாரணமாக — Sundew அதாவது மக்கஜாலிச் செடி பல சேர்ந்து ஒருங்கே வளரும். இலைகள் தரையோடு தரையாய்த் தண்டின் நாற்புறமும் வட்டமாயமைந்திருக்கும். தண்டு இலையின் நடுவினின்றும் 5 அல்லது 6 அங்குலம் நேராக உயர்ந்து வளர்ந்து நுனியிற் புஷ்பக் கதிருடையதாக விருக்கும். இலைகளின்மேல் மயிர்களடர்ந்திருக்கும்; பிசின்துளி ஒவ்வொருமயிரின் நுனியிலும் காணப்படும் இத்துளி சூரியகிரணங்களிற் பனித்துளிபோற் பிரகாசிக்கும் தன்மையுடையது; பளபள வென்று மின்னிக்கொண்டிருக்கும் பிசின்துளிகளைத் தேன்துளிகளென மருண்டு பூச்சிகள், வண்டுகள் "சப்தமின்றியோடும் ஆற்றையும்" "ஜலமற்றுள்ள தாமரைத் தடாகத்தையும்" நம்புதற் பிசகென்போற் செடியின் அழகிய பூக்களும் பிசின்துளிகளின் பிரகாசதோற்றமும் இலைகளின் மேலுட்காரும் பூச்சிகளின் வாழ்க்கைக் கிறுதியை விளைவிக்கின்றது. பயந்த பூச்சி தன்னை விடுவித்துக்கொள்ளக் கால்களைப் பலமுறை உதறி எவ்வளவு முயன்றாலும் வீணே; பக்கங்களிலுள்ள மயிர்கள் மெதுவாக உட்பக்கம் வளைந்து தம் நுனியிலுள்ள பிசின் துளிகள் பூச்சியின் மேற்பட்டு முற்றிலும் பிசுக்கிற் சிக்கிக்கொள்ளுமாறு செய்விக்கின்றன. இப்பூச்சி தனது பக்கங்களிலுள்ள மூச்சுவிடும் துவாரங்கள் பிசினால் அடைபட்டு மூச்சுவிடமுடியாம லிறந்துபடும். இவ்வித மிறந்த பூச்சியின் தேகம் பிசின்துளிகளின் சக்தியாற் சீரணிக்கப்பட்டு அதன்சாரம் உள்ளிழுக்கப்படுகிறது. சிறிது நேரத்தில் இலைகளும் மயிர்களும் நிமிர்ந்து முன் நிலையைப் பெறுகின்றனவெனின் இச் செடி பசுவின் தோலைப் போர்த்துப் புலியின் றொழிலியற்றும் சில மானிடரை யொக்குமன்றோ —

C. D. SINGAM,
*Headmaster, Corporation Model School,*
***Madras.***

## CHILDREN OF DISTANT LANDS

## தூரதேசத்துக் குழந்தைகள்

### ஜப்பான் சிறுவர் - சீனச் சிறுவர்

சில வருஷங்களுக்கு முன் ஜப்பான் சிறுவர்களைப்பற்றிச் சில விஷயங்கள் நமது நல்லாசிரியனில் வெளிவந்த விஷயம் பலர் நன்கு உணர்வார்கள். அவற்றை விரைவில் முடிக்குமாறு நண்பர் பலர் விரும்பினர். அதனால் ஜப்பான் சிறுவர்களைப் பற்றியும் சீனச் சிறுவர்களைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் விளங்குமாறு இனிய புஸ்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கின்றோம். இதை வாசிப்பதனால் சிறுவர்களுக்குப் பூகோள விஷயமும் சரித்திர விஷயமும் நல்லொழுக்க விஷயமும் நன்கு புலனாகும். இது தாயார் குமாரனுக்குக் கதை சொல்லும் விதமாக மிக எளிய நடையில் அநேக சித்திரப் படங்களுடன் பெரிய எழுத்தில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. சிறுவர்களுக்கு இன்பமூட்டும் இனிய கதைப் புஸ்தகம் போல்வது. இதனை ஒவ்வொரு பாடசாலையிலும் தவறாமல் உபயோகிப்பார்கள் என்று நம்புகின்றோம். விலை அணா 6.

## QUEEN MARY READERS

## மேரி ராணி வாசக புஸ்தகங்கள்

இப்பெயர்கொண்ட புஸ்தகங்கள் ஒன்றுமுதல் ஐந்துவரை வெளிவந்துள்ளன. இவை ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் பெண்களுக்காகவே ஏற்ற முறையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. நம் இந்திய குடும்பத்துக்கு அவசியமாகத் தெரியவேண்டிய அரிய விஷயங்கள் எளிதாகத் தெரியும்படி கூறப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு இனிய பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நம் இந்திய பெண்கள் இப்புஸ்தகங்களை வாசிப்பதால் பல நன்மைகள் விளையுமென்பதில் தடையில்லை. குழந்தைகளைத் தாலாட்டல், விளையாட்டுக் காட்டல், நலங்கிடும் பாடல்கள் பெரிதும் அழகுடன் விளங்குகின்றன. இவ்வாறு பெண்களுக்கெனத் தனியாக முதல் முதல் வெளிவந்த புஸ்தகங்கள் இவைகளே. உபாத்திமார்கள் யாவரும் வாங்கிப்பார்த்துத் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்துப் பயன்பெறுவார்களென நம்புகின்றோம்.

விலை—I - 2 அ., II - 2 அ. 6 பை., III - 3 அ., IV - 4 அ., V - 5 அ.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெருவு, சென்னை.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 14 | 1919ளு ஜனுவரிமீ | மாதம் 8

## THE CONDTIONS OF ELEMENTARY SCHOOL TEACHERS

## எலிமெண்டரிப் பாடசாலை உபாத்தியாயர்களின் தற்கால நிலைமை

எலிமெண்டரிப் பாடசாலை உபாத்தியாயர்களின் தற்கால
நிலைமை மிகவும் கவனிக்கத் தக்கதாகும். இவர்கள் இப்போது
பெறும் சம்பளம் ஜீவனத்துக்குப் போதாது. உணவுப் பொருள்
களின் விலை ஒன்றுக்குப் பத்தாக ஏறி யிருக்கின்ற இக்காலத்தில்
உபாத்தியாயர்கள் சம்பளத்தை உயர்த்தவேண்டுவது இன்றியமை
யா கடமையாகும். சிறிது காலத்துக்குமுன் அவர்கள் பெற்றிரு
ந்த சம்பளத்தைக்காட்டிலும் இப்பொழுது அவர்கள் அதிகமாகப்
பெற்றாலும் கால நிலைமையைக் கருதும்போது எவ்வகையிலும்

அது குறைந்ததேயாகும். நாட்டுப்புறத்தில் வாசஞ் செய்யும் உபாத்தியார்களுக்கு இப்பொழுது கிடைக்கும் சம்பளம் போதுமெனச் சிலர் எண்ணுதல் கூடும். ஆனல், இருப்புப்பாதை முதலிய சௌகரியங்கள் ஏற்பட்ட இக்காலத்திலோ நாட்டுப்புறவாசத்துக்கும் நகர வாசத்துக்கும் சிறிதும் வேற்றுமை இல்லை; கவனிக்குங்கால் நகர வாசம் நாட்டுப்புற வாசத்தினுஞ் சிறந்ததென்றுங் கூறலாம். ஏனெனில், நாட்டுப்புறங்களில் வாழ்க்கைப் பொருள்களில் பல கிடைப்பதும் அருமையாக இருக்கிறது. சில நாட்களுக்குமுன் நகரவாசிகளைக்காட்டிலும் மண்ணெண்ணெய் முதலிய பொருள்கள் கிடைக்காமல் நாட்டுப்புறத்தில் ஜனங்கள் பெரிதும் கஷ்டப்பட்டதை நாம் எல்லாரும் அறிவோம்.

இப்பொழுது சென்னைக் கார்பொரேஷன் எலிமென்டரிப் பாடசாலை உயாத்தியாயர்களுக்குச் சம்பளம் அதிகப்படுத்தின விஷயம் பாராட்டத்தக்கது. அதனுடன் காலவிலை ஏற்றத்தை உத்தேசித்துச் சிறிது தொகையும் உபாத்தியாயர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். இவ் வுபகாரச் செயலுக்காக நாம் இராஜாங்கத்தாருக்கும் பிறருக்கும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்படியே எல்லா எலிமென்டரிப் பாடசாலை உபாத்தியாயர்களுக்கும் சம்பளத்தை மிகுதிப்படுத்துவதுடன் கால விலையேற்றத்தின்பொருட்டுச் சிறிது தொகையுங் கொடுத்து உதவுதல் வேண்டும். இப்படிச் செய்யாவிடின் உபாத்தியாயர்களின் நிலைமை மேன்மை யடையாது.

சிலர் ஒரு வேலைக்கும் பயன்படாதவர்களே உபாத்திமைத் தொழிலை மேற்கொள்ளவருகின்றனரென அபிப்பிராயங்கொண்டிருக்கின்றனர். அவ்வபவாதம் நீங்கவேண்டுமானாலும் உபாத்திமைத் தொழில் எல்லாவற்றினுஞ் சிறந்தது என்னும் உண்மை நிலைபெறவேண்டுமானாலும் அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டுவது அத்தியாவசியகமே. போதுமான அளவுக்கு வருவாய் இன்மையால்தான் பலர் உபாத்திமைத் தொழிலில் இருந்துகொண்டு வேறு தொழிலுக்கு முயற்சி செய்துகொண்டே இருக்கின்றனர். சிலர் தாங்கள் ஓர் உத்தியோகத்தைச் சம்பாதிக்கிற வரையில் வீண்பொழுது போக்க எண்ணமில்லாமல் உபாத்திமைத் தொழிலில் அமர்கின்றனர். ஆகையால் உபாத்திமைத் தொழிலின் ஊற்றம் பலவகையிலுங் குறைவதற்கு இடமுண்டாகிறது.



இத்தகைய குறைகள் உபாத்தியாயர்களுக்குச் சம்பளத்தை உயர்த்துவதால் அறவே ஒழியும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. தேசத்தின் முன்னேற்றத்துக்குக் கட்டாயக் கல்வி எங்கும் பரவ வேண்டுமென்னும் நன்னோக்கம் ஓங்கியிருக்கும் இக் காலத்தில் எலிமென்டரிப் பாடசாலை உபாத்தியாயர்களின் நிலைமை உயராவிட்டால் யாதுபயன் உண்டாகும். அரசாங்கத்தார் ஆயிரக்கணக்கான எலிமென்டரி பாடசாலைகள் ஏற்படுத்தப் போகின்றார்களெனத் தெரிந்து மகிழ்ச்சியடைகின்றோம். இது நன்முயற்சியே எனினும் இப்பொழுதுள்ள பாடசாலை உபாத்தியாயர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்காமல், பாடசாலைகளை மட்டும் ஏற்படுத்துவதனால் அவ்வளவு நன்மைகள் உண்டாகா.

ஆகவே, துரைத்தனத்தார் இவ் வுபாத்தியாயர்களின் நிலைமையையும் அவர்களுக்கு அதிக சம்பளம் முதலியன கொடுப்பதால் உண்டாகும் நலங்களையும் நன்றாகச் சிந்தித்து அவர்கட்கு வேண்டியவளவுக்கு உபகாரஞ் செய்வார்களென நம்புகின்றோம்

## சென்னை, கார்பொரேஷன் எலிமென்டரிப் பாடசாலை உபாத்தியாயர்களின் சம்பளம்

| உபாத்தியாயர் | முன் சம்பளம் | முன் தொகை | புது சம்பளம் | புதுத்தொகை |
|---|---|---|---|---|
| தலைமை உபாத்தியாயர் | ரூ 25 I 30 | ரூ I 0 0 | 30 I 35 | ரூ 6 0 0 |
| | (இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை) ரூ I 0 0 | | (ஒரு வருஷத்திற்கு ஒரு முறை) ரூ I 0 0 | |
| 1 உதவி உபாத்தியாயர் | ரூ 17½ ½ 20 | ,, | 26 0 0 | 6 0 0 |
| 2 ,, ,, | 17½ ½ 20 | ,, | 24 0 0 | 5 0 0 |
| 3 ,, ,, | 15 ½ 17½ | ,, | 22 0 0 | 5 0 0 |
| 4 ,, ,, | 15 ½ 17½ | ,, | 20 0 0 | 5 0 0 |
| கைத்தொழில் உபாத்தியாயர் | 17½ ½ 20 | ,, | 25 0 0 | 5 0 0 |

பத்திராதிபர்.

# NATURE STUDY
## இயற்கைப் பாடம்

[திருவள்ளூர் உபாத்திமைச் சங்கத்தில் 1919ஆ ஜனவரிமீ வாசிக்கப் பெற்றது]

(முன் தொடர்ச்சி, பக்கம் — 167.)

நிலத்திலேயே யன்றி நீரிலும் இத்தகைய செடிகள் உள. உட்ரிகுலேரியா (Utricularia) குளத்திலும் குட்டையிலும் கொடிப்பாசிபோன்று மிதக்கும். இலைகள் மயிர்போல் மெல்லியதாக இருக்கும். பைகள்போன்று உறுப்புக்களுடையது. (Bladder Wort) பைச்செடி எனும் பெயர்பெறும்.' செடி நீரில் மிதப்பதற்காக இப்பைகள் ஏற்பட்டன வென்பர் சிலர், ஆயினும் உண்மையில் பைகளொவ்வொன்றும் சில நீர்ப்பூச்சிகளைப் பிடிக்க ஏற்பட்ட யந்திரமென்னலாம். இச்செடிகளிருக்கும் ஜலத்தில் எப்போதும் பற்பல சிறு ஜந்துக்கள் வாழ்வது வழக்கம். இப்பிராணிகள் அங்குமிங்கும் இரைதேடித் திரிந்து பைகளின் கதவுகளினருகில் தங்கி ஏதாவது தீனி கிடைக்குமா வெனக் கபாடத்தைத் திடீலென விலக்கி யுட்புகும். கதவுகளும் ஜந்துக்கள் உட்செல்வதற்காகவே அமைக்கப்பட்டுள்ளதால் எளிதில் விலகி இடமீயச் சரேலென உட்சென்ற பிராணி திடுக்கிட்டுப் பயந்து பலமுறை வெளிவர முயன்று ஓய்ந்துசாய்ந்துவிடும். இறந்த ஜந்துவின் தேகரசம் உள் இழுக்கப்பட்டுச் செடியால் ஜீரணிக்கப்படுகிறது. இவ்வகைச் செடிகள் பலவுள. விரிக்கிற் பெருகும். அவையிற்றைக் கண்கூடாகக் கண்டறிதலே நேரிது.

நைகராகுவா தீரத்தின் சதுப்பு நிலங்களிற் சில மாம்ச பக்ஷிணி தாவரங்கள், தம் விழுதுபோன்ற அவயவங்களாற் பால் கொடுக்கும் மிருகங்களையும் பிடித்துச் சாரத்தை உறிஞ்சி எலும்புகளை உதறிவிடுகின்றனவாம் —

"அவன் செயலை யாரே அறியவல்லார்"

இனிக்கடையாகச் சின்னாட்கு முன்னர் ஒரு தத்துவ சாஸ்திரி கத்தரிக்கா யொன்றை அறுத்து, தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கொண்டு பரிசோதித்ததில் ஜீவாணு Protoplasm (முதலிலுண்டாவது) அதனுள் படபடெனத் துடிக்கக் கண்டனராம்.



தாவரவர்க்கத்திற்கும் பிராணிவர்க்கத்திற்கும் அநேக வித்தியாசங்கள் பொதுவாக விருக்கின்றன. அவற்றை வேறுபடுத்தக் கூடிய ஒரு சட்டத்தைத் திட்டமாய்க் கூறுவதுங் கட்டமே.

கீழ் குறித்துள்ளவற்றைக் கவனிக்கின் ஜீவப்பிராணிக்கும் தாவரத்திற்குமுள்ள ஒற்றுமை நன்கு புலனாம்.

1. ஜனித்தல்
2. சுவாஸித்தல்
3. ஆகார முட்கொள்ளல்
4. வளருந்தன்மை யடைதல்
5. கஷ்டப்படுத்தினால் அறிதல்
6. அவயவங்களுடைத்தாயிருத்தல்
7. வர்க்கவிருத்தி செய்தல்
8. ஜீவாணுக்களிருத்தல்
9. உபயோகப்படுதல்
10. தோலைபோற் பட்டையிருத்தல்
11. தோலின் மீதுள்ள மயிர்களைப்போல் இலைமேல் சுனையிருத்தல்
12. இரத்தத்திற்குப் பதில் ஒருவகைப் பால் அல்லது நீரிருத்தல்
13. பந்துக்களைப் போல் கிளைகளிருத்தல் (கிளை - சுற்றம்)
14. சாதல் முதலியனவாம்.

மேற்கூறிய திருஷ்டாந்தங்களினால் தாவர வர்க்கமும் பிராணிவர்க்கமே என்னும் உண்மையைச் சித்தாந்தப்படுத்தலாம்.

பின்னுரை.

இனி மறு வியாசத்தில் தாவர, பிராணி, தாதுவர்க்கங்களின் ஒற்றுமை வேற்றுமைகளைக் குறித்து, குரு சிஷ்ய சம்பாஷணைக் கிரமத்திற் கூறுவோம்.

[குறிப்பு — பீடிகை சற்று அளவு கடந்தமைக்குக் காரணம் உத்தமமான உபாத்திமைத் தொழிலை மேற்கொண் டொழுகுமெம் போன்ற போதகாசிரிய சோதரசிகாமணிகள், மென்மேலும் தமது போதனைத் தொழிலைச் சிறப்பித்துக்கொள்ள வியற்ற வேண்டியதற்குரிய படித்தல், எழுதல், உணர்தல் ஆகிய உத்தம காரியங்களிற் சதா முயன்று உழன்று, தம்மைத் தினந்தோறும் செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டுமென்னும் நன்னோக்கத்தாலெனக் கொள்க.]

C. V. DURAISINGA MUDALIAR,
*Headmaster, Corporation Model School,*
*Malayappan Street, and*
*Secretary, Corporation Teachers' Assn., Madras.*

# THE EXCELLENCE OF TEACHING PROFESSION

## உபாத்திமைத் தொழிலின் உயர்வு

30-3-'19 ல் இவ் வியாசமானது விழுப்புரம் போதனாமுறை வருஷாந்திர பிரதமதினக் கொண்டாட்டம் நடைபெற, ப்ரம்மஸ்ரீ H. G. கிருஷ்ணராவ் B. A. அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் (தென்னார்க்காடு ஜில்லா) அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடிய உபாத்தியாயர்களின் வருஷாந்திர மகாசங்கத்தில் என்னால் வாசிக்கப்பட்டது. அது பின்வருமாறு :—

1. இப்பிறவியின் பால்ய, யௌவன, கௌமார, வார்த்திகாதி பருவங்களில் யாதொரு கஷ்டங்களும், கவலைகளும் அடையாதிருப்பது முதற் கூறியதாகும். அதிலும் ஊனை வளர்த்து மழுங்கின மூளையுடன் அறிவில்லாக் கயவரென் றுலக மிகழாது "கல்வியி னூஉங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை" என்ற இகபரத்திற்கு வழி காட்டவல்ல கல்வியாகிய க்ஷீரசாகரத்தி லோர் துளி பருகப்பெற்றது பூர்வபலன். நாம் அதிக ஊதியம் தரவல்ல பல தொழில்களைவிட மேம்பட்டதாயும் ஏனைய சிலவற்றில் சந்திக்க நேரும் பொய், களவு, அவா என்ற மாசுகள் நீங்கியதும் இம்மை மறுமைக்கும் பயனளிக்கும் வன்மையையு மடைந்த உபாத்தியாயம் என்ற கற்பிக்கும் தொழிலை மேற்கொண்டது புண்யவசமென்றல்லவோ கருதவேண்டும். இங்கே இதன் சிறப்பை யதிகம் கூற காலமில்லை யாகையால், ஒரு வாக்யத்தால் குறிப்பிக்கலாம்.

ஐயாண்டாயும் உரையாட இயலாது மழலைமொழி கூறு மதிபாலர்களையும் மிருக ஜாதிகளுக்குள்ள பிடிவாதம், கோபம் கண்டதை நடித்தல், பயமின்மையாகிய குணங்களால் நிறையப் பெற்ற சிறுவர்களையும், இனி இவ்வுலகில் சிறப்புறும் பெரிய மனிதரோ அல்லது வேறு உத்தியோக முதலிய இதர பதவிகளை அடையப்போகும் புத்திநுட்பம் வாய்ந்த இளைஞர்களையும் ஒரு இடத்தில் சேர்த்து, அவர்களுடன் பழகி, நயபயத்தாலும் விளையாட்டாலும், சமயபேதம் வறியர், செல்வர் என்ற பாகுபாட்டின்றிப் பக்ஷத்துடன் தினே தினே கல்வியென்னும் கரும்பைச் சுவைக்கச் செய்து, அவரவர் நுண்ணறிவிற் கேற்ப விவேகம்



நன்னடக்கையுடன் உலக ஞானத்தையும் விருத்தியடையச் செய்வதே சிறந்த நிரூபணமாய்ச் சிறப்பை வெளியாக்கும்.

2. அத்தகைய அரியதொழிலைச் சரிவர நடத்த நம் சிற்றறிவு போதாமையின் அதை விசாரிக்கச் செய்வதோடு, நாம் எவ் வகுப்புக்கு எவ்வாறு எவ்வளவு, எவ் உபகரணங்களால் போதிக்க வேண்டுமென்பதை அறிவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், காருண்ய ராஜாங்கத்தின் பொருளுதவியால் நிலைபெற்றுப் பொலிவுறும் இப்போதனாமுறை பாடசாலையின்கண் நாம் அனுப்பப்பட்டுக் குறித்தகாலம் பயின்று தேர்ந்து சுயஊரடைவது பல்லாண்டாய் நடைபெற்று வரும் வழக்கம். அம்மாதிரி நாங்கள் பயின்று அவரவ ரில்லம் ஏகும் சமயம் அணுகிவிட்டது.

3. சாதாரண சிறுவர்களுக்குப் போதிக்கும்தொழிலை யடையவே பூர்வ பூஜாபலன் தேவையெனில் அந்த உபாத்திமார்களுக்கெல்லாம் அறிவும் போதனாசக்தியும் உண்ணும் இவ் உத்கிருஷ்டமான ஆசிரியத் தொழிலை உயர்தரப் பரீக்ஷைகளைச் சிரமத்துடன் செய்து, இதைவிட அதிக வேதனம் சுலபமாய்ப் பெறவல்ல பல தொழில்களை விரும்பாது, தர்மத்தையே செய்வதும் தேச நன்மைக்கும் பரோபகாரத்திற்குமே உழைப்பதும் ராஜபக்தியை விருத்தி செய்வதும், நாட்டின் நாகரிகத்தை உயர்த்தும் தூண்டுகோலான ஆசிரியத்தொழிலை மேற்கொள்ளப் பெற்றோரின் கடந்த ஜன்மபலனைச் சிந்திக்கவு மியலுமோ நம்மால் ? அத்தகைய பூஜ்யர்களின் திருமுன் இக்காலைப் பழகி, பக்தியுடன் பலவற்றை யுணர்ந்து, இல்லற கவலையே யறியாதாரென ஊண் உறக்க முதல் அவர்களாதரவில் பராமரிக்கப்பட்டு இன்புற்று வந்தோம்.

4. தவிர நாம் ஸ்நானம், உணவு, பள்ளி, ஆடல், நித்திரை ஆகியவைகளில் அரைக்கணமும் பிரியாது, பூவு மணமுமெனவும், உடலு முயிருமெனச் சிறந்த நட்பினராகப் பொலிவுற்றோ மிதுவரையில். அத்தகைய ஆசிரியாதி நண்பர்களையும் இனி விட்டு நீங்குவது தாயை பிரிந்து செல்லும் சேயையும், அடைந்து திரும்பவும் ஒரு பொற்குவையை விட்டுவிட நேர்ந்த ஒருவனையும்; அன்று சீதாராமலக்ஷ்மணர்களைக் கானில்விட்டு பிரிந்து சுயகோசல நாடடைய விரும்பாத அயோத்தி வாசிகளையு மொக்குமன்றோ நம் நிலைமை. அருமை ஆசிரியரைக் காண்ப தெப்பொழுது ஆப்த நண்பரைக் காண்பதெங்கே என்பதை நினைத்துச் சிறிது வருந்தின

போதிலும் எம் கருணையுள்ள தலைமை ஆசிரியரின் நன்முயற்சியால் பிரதி ஆண்டும் கூடும் மகாசங்கத்திற்கு நாம் இறைவனருளால் வந்து ஒருவரை யொருவர் சந்திக்கலாமென்று ஆறுதலடைகிறேன்.

5. நிற்க, ஒரு விஷயம் அவசியம் கூற தூண்டுகிற தென் உளம். என்னவெனில் நாம் இதரபோஜனசாலையில் புசித்தால் சரீர சௌக்கியத்திற்குத் தீங்கு நேரிடுமாகையால் நமக்காகவே தனி போஜனசாலை (Hostel) நியமித்து அறுசுவையுண்டி வேளைக் களிக்கும் வசதிகளை அன்னியர்பால் விடில் சரிவர நடைபெறாதது கண்டு, அப்பொறுப்பைத் தானே வகித்து ஆதரித்து வரும் ஆசிரியரைத் தேனீ எப்படி நாளாவட்டத்தில் சிறுகச்சிறுகப் பல மலர்களில் உள்ள தேனைத் தேடித் தன் கூண்டில் சேர்த்துப் பரோபகாரமாய் மாந்தர்க்குதவும் வகையாய்த் கல்வித்தேனை ஹிருதயமாகிய பெட்டியில் சேமித்து நாம் சுவைத்துத் தெட்டும் வரையில் உதவிய வள்ளல்களைச் சுயதேசத்தைவிட்டுச் சுமார் 200 மைலுக்கப்பால் யாருமே அறிமுகமற்ற பிரதேசத்தில் வந்திருந்த நமக்குக் கவலையின்றி ஊரிலிருந்ததைவிடப் பதின்மடங் கதிகமா யின்புறும் வண்ணம் வாக்தயைப் பொருள் முதலிய மேகங்களைக் கொண்டு ஆனந்த மழையை வருஷித்த அருள்நிறைந்த ஆசிரியர்களை விண்மீன் நடுவில் ஒண்மதியெனப் பொலிவுறும் எம் குருநாதர்களை அடிக்கடி பார்க்க இயலாமல் போகிறதே யென்பதே.

6. "கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங் கொல்லோ உலகு" என்றவாறு நமக்காக அல்லும்பகலும் இன்னும் புதிது புதிதாய் என்ன செய்தால் அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடுமென்ற கவலையுட னுழைத்துவரும் ஆசிரியர்களுக்கு நாம் இயற்றுவது "பொன்னாற் பிரயோஜனம் பொன்படைத்தாற் குண்டு பொன்படைத்தான் தன்னாற் பிரயோஜனம் பொன்னுக்கங் கேதுண்டு" என்பதா யல்லவோ முடிகிறது. ஆனபோதிலும் நாம் யாவரும் பரீக்ஷையில் தேறி அன்னோர்க்கு நீண்ட கீர்த்தியையுண்டாக்குவதுடன் இனி நம்மாயுளின் ஜீவனத்திற் காதாரமான எம் சற்குருநாதரை அனவரதமும் சிந்தையில் வைத்து, துதிசெய்து களிப்பதோடு அன்னோரின் க்ஷேமமாய் ஐசுவரிய ஆயுராரோக்யாதிகளின் விருத்தியைக் கோரி யெல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்க வியலுமாகையா லிங்ஙனம் புரிவோமாக! "நெருநலுள னொருவனின் றில்லையென்னும் பெருமையுடைத்திவ்வுலகும்" ஆகையால் அனைவருக்கும் நம்மனப் பூர்வமான வந்தனம்தரப் பகவத் கிருபையால் இனி அடிக்கடி சுகஜீவிகளாய்ச் சந்தித்துக் களிப்போமாக!



N. KRISHNSWAMI IYER,
*Tiruppattur.*

# NATURE LESSON

## இயற்கைப் பாடம்

### கரும்பு

போது உருவம், உற்பத்தி, பாகங்கள் — இதே மாதிரியான பேய்க்கரும்பு; மக்காச்சோளத்தட்டு இவைகளுடன் ஒத்துப்பார். அவைகளின் பாகங்கள் உருவங்கள் இவைகளைக் கவனிக்க.

வேர் — கரும்பின் வேரை அதைப்போன்ற மற்ற வேர்களுடன் ஒப்பிடுக (பலமாதிரியான வேர்களைச் சித்திரப்படம் வரைந்து காட்டுக).

தண்டுகள்—அடிமுதல் நுனிவரையில் கணுக்கணுவாக இருக்கும். கணுக்களுக்கிடையில் சடையிருக்கும். கணுக்களின் மேற்பக்கம் சிவப்பு, பச்சை, மஞ்சள் முதலான பலவர்ணங்களுண்டு. கரும்புகளின் கணுக்களில் முத்துக்கள் இருக்கும். இலை, பூ, காய், இவைகளுக்குத் தண்டே ஆதாரமென்பதை உதாரணங் கொண்டு விளக்குக.

கிளைகளில்லை — கிளைகளில்லாத மற்ற மரங்களோடு ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளை வரவழைக்க. (கரும்பின் படம் ஒன்று வரைக).

இலைகள், நரம்புகள், மட்டை, கணுக்கள் — இதன் இலை ஈட்டியை ஒத்திருக்கிறதென்பதையும் நரம்புகள் நீளவாட்டமாயோடுவதையும் கவனிக்கச் செய்யவும். (இலையின் சித்திரம் ஒன்று வரைக).

பயிரிடும் விதம் — நன்றாய் முற்றின கரும்புகளை ஒரே அளவாயுள்ள பல சிறு துண்டுகளாக நறுக்கி நன்றாய்ப் பக்குவப்படுத்திய நிலத்தில் சரியான தூரத்தில் நடுவார்கள். நட்ட எட்டாம் மாதத்தில் பெரிய கரும்பாக ஆகும்.

சர்க்கரை செய்யும் விதம் — கரும்பிலிருந்து தோகையை நீக்கிக் கரும்பு ஆலையில் கொடுக்க அதிலிருந்து ரஸம் வெளியே வரும். அதைப் பெரிய பாத்திரத்தில் பிடித்து, நன்றாய் எரிந்து கொண்டிருக்கிற அடுப்பிலுள்ள கொப்பரைகளில் விட்டுக் காய்ச்சி அப்போதைக்கப்போது அழுக்கெடுத்துக்கொண்டு வருவார்கள். அப்பால் காய்ந்து கட்டியானபிறகு அச்சில் விட்டுவிடுவார்கள். சர்க்கரை செய்யும் வேறு பல மரங்களாகிய பனை, தென்னை, ஈந்து, பீட்ரூட் முதலானவைகளின் பெயர்களையும் அவற்றைப் பயிர் செய்யும் விதங்களையும் விவரித்துக் காட்டுக. அதில் நின்றும் வெளுப்புச் சர்க்கரை கற்கண்டு செய்கிறார்க ளென்பதையும் விவரிக்க.

உபயோகம் — கரும்பின் உபயோகத்தைப்பற்றிச் சிறிது விளக்குக. (கரும்புத் துண்டு, சர்க்கரை, உப்பு, புளி, வேப்பிலை இவைகளைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து ருசிபார்க்கச் சொல்லவும்).

Agriculture and Trade Aspect — கரும்பு அதிகமாக வியவசாயம் செய்யுமிடத்தில் அதிக வியாபாரம் நடக்கும்; ஏற்றுமதி வெகுவாக நடக்கும். வியவசாயம் வியாபாரம் இவைகளுக்குள்ள சம்பந்தா சம்பந்தங்களை எடுத்துக் காட்டுக.

V. S. ALWAR AIYANGAR,
*1st Assistant, Corporation Model School,*
*Salaivinayagar Coil Street,*
*Georgetown, Madras.*



# STORIES FOR CHILDREN

## சிறுவர்களுக்கான கதைகள்

நாமெல்லோரும் குழந்தைகளுங்கூட எப்போதும் கதைக்கதை என்கிறோம். ஒருவேலையும் இல்லாதிருக்கும்போதும், பிரயாணம் செய்யும்போதும், உலவும்போதும் ஒரு கதை சொல்லும்! சொல்லும்! என்கிறோம். நமது குழந்தைகளும் அம்மா ஒரு கதை சொல்லு — அப்பா ஒரு கதை சொல்லு — பாட்டீ ஒரு கதை சொல்லு என்று கேட்பதை கேட்டும் பார்த்துமிருக்கிறோம். அன்றியும், ஒரு கதை சொல்லுகிறேன் கேள் என்று நாம் சொல்லும்போது, உம் சொல்லு என்றும், கதை சொல்லும்போது இடையிடையே உம் - உம் என்று கதை சொல்லுதலுக்குக் குழந்தைகள் உற்சாக மூட்டுவதையும் பார்த்தும் கேட்டுமிருக்கிறோம். இதிலிருந்து சிறுவர்முதல் பெரியவர் வரையில் யாவருக்கும் கதையிலுள்ள விருப்பம் இத்தகையதென்று இயம்பவும் வேண்டுமோ?

ஆகவே, கதை சொல்லுவதினால் பயன் யாது? வழிப்பிரயாணமோ — உலவுதலோ — வேலையின்றி உட்கார்ந்திருக்கும் சோம்பலோ தெரியாதிருப்பதற்காக வன்றோ? அன்றியும், அக்கதைகளிலிருந்து அவர்கள் அப்படி இருந்திருக்கிறார்கள், இவர்கள் இப்படி இருந்திருக்கிறார்கள், அதனாலாயபயன் இன்னது, இதனாலாய பயன் இன்னது என்னும் நன்மைதீமைகளை உணர்ந்து 'நன்மை கடைப்பிடி'த்து, அவ்வாறு நாமும் நமது வாழ்நாட்களிலே நடந்து, நல்லோரெனப் பல்லோரும் பகர்தலும், நல்ல வாழ்வை யடைதலு மன்றோ?

ஆதலின், இதற்கு மூலமாயுள்ள இத்தகைய கதைகளை நமது சிறுவர்களுக்குச் சிறு வயதிலேயே கற்பித்தால், பசுமரத்தாணி போல் அவர்கள் மனத்தில் நல்ல விஷயங்கள் இளம்பருவத்திலேயே படிவதற்கு ஏதுவாகும். ஆதல் பற்றியே, நமது அரும் பெரும் தமிழ்ணங்காம் ஔவைப்பிராட்டியாரும் 'இளமையிற் கல்' என்றார். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பதற்கிணங்க, சிறுவர்களின் குணகுணங்களும், அவர்கள் கற்கும் கல்விக்கு — கதைக்குத் தகுந்தபடி தானே விளையும். நன்மை

விதைத்தால் நன்மை விளையும், தீமை விதைத்தால் தீமை விளையும் என்பதற் கேற்பவும், 'அவரை போட்டால் துவரை முளைக்குமா' என்பதற் கேற்பவும், சிறுவர்களின் மனமாகிய விளைநிலத்தில், நல்ல நீதியையுடைய கல்வியாகிய விஷய விதைகளை விதைத்தலே நன்மைதரும் என்பதும் யாவரும் உணர்ந்ததே.

ஆகலின், சிறுவர்கட்குக் கற்பிக்கும் கதைகள் முன்பின் முரணாதபடியும் சந்தேகத்திற் கிடங்கொடாதபடியும் இருத்தல் அதிக முக்கியமன்றோ? இவ்விதமே அவர்களுக்குக் கொடுக்கும் புத்தகங்களும் இருக்கவேண்டுமென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி. இவ்விதமிருக்க, அநேகமாக நமது நாட்டில் வழங்கும் புராணகதைகளுக்குப் பெரிதும் முரணுறும்படியாய் எழுதி அச்சிட்டுள்ள புத்தகங்கள் தற்காலம் வெளிவந் திருப்பினும், அவற்றின் தீமைகளை நமது நாட்டு க்ஷேமத்தில் அக்கறைகொண்டு சிறுவரின் கல்வியில் கவனஞ் செலுத்தும் பெரியார்கள் அவ்வகைப் புத்தகங்களின் விஷயத்திலும் கவனங்கொண்டார்க ளில்லைபோலும். அவை அவ்விதம் முரணும்படி கொண்டுவந்துள்ள விஷயங்களால் விளையும் இன்னலையுணர்ந்து, ஆக்ஷேபித்து அது அநுஷ்டானத்துக்கு வாராமல் தடுக்கவாவது அந்நூலின் ஆசிரியர்களுக்கு, அதன் பேதமான விஷயங்களை விளக்கி, அதை நீக்கி அல்லது திருத்தி வெளியிடும்படி யோசனையாவது அளித்துவெளிவரும்படி செய்கின்றார்களோவெனின், அத்தகைய செயலையுங் காணோம். நமது நாட்டுச் சிறுவர்களின் முன்னேற்றத்திற்காக ஏற்பட்டிருக்கும், நமது நாட்டு வித்தியா இலாகா அதிகாரிகளாவது அத்தகைய விஷயங்களைக் கொண்ட புத்தகங்கள் பாடசாலையில் வழங்காமல் பாதுகாத்தும், தாங்கள் வாங்கிக் கொடுக்காமலும் இருப்பரேயாயினும் போதும். அவர்களும் அணுவளவும் ஆராய்ச்சி செய்கின்றார்க ளில்லை. எப்படியிருந்தாலும் புத்தகங்கள் அழகாயும், பெயர்கள் நன்றாயும் இருந்தால் போதுமென்று எண்ணிவிடுகிறார்கள் போலும்.

உதாரணமாக, இராமாயணத்தை எடுத்துக் கொள்ளுவோம்:- சிலநூல்களில் இராவணன் ஸ்ரீ சீதாதேவியை பூமியோடு பெயர்த்துத்தூக்கி இரதத்தில் வைத்துக்கொண்டு போனான் என்றும், சில நூல்களில் சீதையைத்தொட்டுத் தூக்கிக்கொண்டு போனான் என்றும், கூந்தலைப்பிடித்து இழுத்துப்போய் இரதத்தில் வைத்துக் கொண்டான் என்றும் — எழுதப்பட்டிருக்கின்றன. மன்மதன் எரிந்தானென்று சிலரும், எரியவில்லை யென்று சிலரும் கக்ஷிசேர்ந்து, எரிந்த கக்ஷிஎரியாதகக்ஷி யென்றுகூடி, வாதாடி வழக்குரைத்துச் சண்டைகள்போட்டு எவ்வளவுபேர் இன்னலுக் காளாகின்றனர். அன்றியும் அதன் உற்சவத்திலும் சரித்திரத்திலும் சிறுபான்மையும் விருப்பமில்லாது வெறுப்புறுகின்றனர்; அலக்ஷியஞ் செய்கின்றனர்! மன்மதனையும் நாம் தெய்வமாகப் பாவித்துக் கொண்டாடிவருவதாலும், அவரிடத்தில் உள்ள இத்தகைய பேதமான விஷயங்களாலும், எங்ஙனம் பக்தியுண்டாகும்? இதைப்போலவே, அபிப்பிராய பேதத்திற்கிடமான புத்தகங்களால் இராவணன் சீதையைப் பர்ணசாலையோடுதான், பூமியைப் பெயர்த்துத் தூக்கினானென்றும் கூந்தலைப்பிடித்து இழுத்து அல்லது கையால் தொட்டுத்தான் தூக்கினானென்றும் தொட்டகக்ஷி தொடாதகக்ஷி உண்டாகி உலகோர் வீண்வாதங்களில் உழன்று அல்லல்பட நேரிடுமோ என ஐயுறுவதோடு, எவ்விதம் மன்மதனது சரித்திரத்திலும் பக்தியிலும் விருப்பின்றி வெறுப்புண்டாயிருக்கின்றதோ அவ்விதம் இராமகதையிலும் பக்தியிலும் உண்டாகிவிடுமோ என ஐயுறவேண்டியிருக்கின்றதன்றோ? ஏனெனில், நமது பழக்கவழக்க ஆசாரங்களுக்கு மாதிரியாயிருப்பது இராமாயணம், பாரதம் ஆதலால், இவைகளில் வெறுப்புண்டாகிவிடுமாயின் பிறகு நமது நாட்டின் பழக்கவழக்க ஆசாரங்களும் தற்போதிருக்கும் சிறுபான்மையையும் அர்ப்பணம் செய்த மாதிரிதானே.

ஆகவே, நமது நாட்டின் மேன்மையைக்கோரும் கனதனவான்கள் வித்தியாபி விருத்தியில் விருப்புள்ளோர்கள், வித்தியாகர்த்தர்கள், துரைத்தனப்புத்தக அங்கீகரிப்புக் கமிட்டியார், திரிசிராப்பள்ளித் தமிழ்ப்பண்டிதர்களின் சங்கத்தார் முதலியோர் இத்தகைய விஷயங்களில் நமது சிறுவர்களின் மனம் ஈடுபட்டு இன்னலில் சிக்காது மிக்க மேன்மையுறும்படி தக்கநூல்களைத் தயாரித்தும் தணிக்கைசெய்தும் வாங்கிக்கொடுத்தும் வாங்கும்படி செய்தும் முன்னேற்றமடையச் செய்வார்களாக.

P. பிரமணப் பல்லவராயர்.

# CARPENTRY IN SCHOOLS

## பள்ளிக்கூடத்தில் தச்சுவேலை

பிரியமுள்ளமாணவர்களே! நீங்கள் பாட்சாலையில் கற்றுக் கொள்ளும் கைத்தொழில்களில், தச்சுவேலையும் ஓர் அருமையான தொழில் அல்லவா! இத்தொழில் கற்றுக்கொள்வது கஷ்டமென முதன் முதலில் நீங்கள் யோசிப்பீர்கள், அவ்வாறெண்ணுவது பெரும் பிழையாம். ஊக்கத்தோடு கற்போமானால், எத்தகைய தொழிலும் வெகு சுலபமாய் வந்துவிடுமன்றோ? தச்சுவேலையைக் கற்றுக்கொள்வதற்குச் சிற்சில அப்பியாசங்களுள. அவைகளைக் கண்ணும் கருத்துமாய்ச் சாதகப்படுத்துவீர்களாயின், எத்தகைய மரச்சாமானையும் வெகு சுலபமாய்ச் செய்துவிடலாம்; அவ்வப்பியாசங்களாவன :—

| | |
|---|---|
| 1. உளியின் பாகமும் உளித்தீட்டுதலும். | 4. சதுரித்தல். |
| | 5. இழைத்தல். |
| 2. உளியின் பாகமும் உபயோகிக்கும் விதமும். | 6. துண்டித்தல். |
| | 7. தொளையிடல். |
| 3. அறுத்தல், | 8. கூர்வாங்குதல். |

ஆகிய இவைகளே ஆரம்பத்தில் உங்களுக்கு ஏற்ற அப்பியாசங்களாம். முன் சொன்ன அப்பியாசங்களைச் சாதகப்படுத்துவதற்கு ஏற்ற ஆயுதங்கள் வேண்டுமல்லவா? இதோ என் மேஜையின் மீது வைத்திருப்பவைகள்தாம் அதற்குத் தகுந்த ஆயுதங்கள். எத்தனை ஆயுதங்களிருக்கின்றன பாருங்கள். 10 ஆயுதங்களிருக்கின்றன. இவைகளில் இந்த 6-க்கும் உளிகளென்று பெயர். இவைகள் நீளமும் கனமும் ஏறத்தாழ ஒரே அளவாயினும் அகலம் மாத்திரம் வித்தியாசமாகக் காணவில்லையா? $\frac{1}{2}$" அங்குல அகலமுள்ளதற்கும் $\frac{3}{4}$" அகலமுள்ளதற்கும் தச்சுளி யென்று பெயர்.

$\frac{1}{16}$" முதல் $\frac{1}{4}$" வரை சிரணமென்றும் சொல்வதுண்டு. இத்தகைய உளிகளை நம் நாட்டிலேயே செய்து கொள்ளலாம்.

சீமைப்பட்டை யுளி — 1', $1\frac{1}{4}$', $1\frac{1}{2}$" அகலமுள்ள இந்த உளிகளுக்குச் சீமைப்பட்டை யுளி யென்றுபெயர். இவைகள்பிரிட்டனிலுள்ள ஷெப்பீல்டு என்னுமிடத்தில் செய்யப்பட்டு வருகின்றவைகள். எவ்வளவு சுத்தமாயும் ஒழுங்காயும் அழகாயுமிருக்கின்றன பாருங்கள். இவைகள் வேலைக்கு வெகு நாணயமாய் இருக்கும்



பட்டை யுளி — 4" முதல் 7" அங்குலம் அகலம் வரையுண்டு. மற்ற உளிகளைப் போலிராமல் இதன் கூரியபாகம் (வாய்) இருபக்கமும் சாய்ந்திருக்கிறது. சீமைப் பட்டையுளியால் மரச்சிறையைக் கழித்தவுடன் இரதஉளியால் கழித்த பாகத்தை மட்டமாக்கும் பொருட்டு உபயோகிப்பது வழக்கம்.

இழைப்புளி — இதுவும் நம் நாட்டில் செய்வதுதான். மரங்களை இழைப்பதற்கு உபயோகப்படுத்தும் ஆயுதம். இழையுளிக்கூடு இரும்பாலன்றி மரத்தாலும் செய்துகொள்ளலாம்.

கொட்டாப்புளி அல்லது மழு — மரங்களை உளியாலடிப்பதற்கு உபயோகிப்பது. இவைகளில் ஒன்று மரத்தாலும் மற்றொன்று, இரும்பாலும் செய்திருக்கிறது. ஆரம்பிகள் மரத்தாலாகியதையும் பழகியபின் இரும்பாலாகியதையும் உபயோகிப்பதுண்டு.

கைரம்பம்—கைரம்பங்கள் இங்கிலாந்தில் செய்யப்படுபவை. வேலைக்கு வேண்டிய. மரங்களை நெட்டுவசமாயும் குறுக்கு வசமாயும் அளவுப்படி அறுத்தெடுத்துக்கொள்ள ஏற்றகருவி.

துரப்பணம்—இது மரத்தாலாகும் ஓர் சிறிய இரும்பு உளியால் ஆனது. மரங்களில் சிறியதொளை போடுவதற்கு ஏற்ற கருவியாகும். இவைகளில் சுழற்றி என்னும் துரப்பணம் மிகவும் சிறந்தது. ஆனால் ஆரம்பிகளாகிய உங்களுக்கு அது இப்போது தேவையில்லை. ஆகிய இந்தச் சாமான்கள் நமக்கு அத்தியாவசியகம்.

இதுவரை ஆயுதங்களின் பெயர்களையும் அவைகளுடைய பிரயோஜனங்களையுஞ் சுருக்கமாய்த் தெரிந்து கொண்டீர்கள், இனி உளியின் பாகங்களைக் கவனிப்போம்:

உளியின் பாகங்கள் !

### அப்பியாசம்- 1.

1. பிடி — இந்த உளிகளுக்குப் பிடியைப் பாருங்கள்; உளிகள் அகலத்தில் வித்தியாசப் பட்டபோதிலும் பிடிகளெல்லாம் ஒரே அளவாயிருக்கின்றன. பிடியின் அடியில் 1" அங்குல அகலமும் $\frac{1}{16}$ அங்குல கனமுமுள்ள இரும்புத் தகட்டாலாகிய ஒரு பூணும் (கட்டும்) $\frac{1}{4}$" அங்குல கனமுள்ள சதுரக் கம்பியாலான ஒரு கட்டு உச்சி-

யிலும் பிணைத்திருக்கிறது. இவ்வாறு கட்டாவிட்டால் என்ன? உளியின்மீது விழும் கொட்டாப்புளி அல்லது மழுவடியின் பளுவினால் பிடி உடைந்துபோகும். அதற்காகவே இப்படிச் செய்திருக்கிறது. பிடியின் அடிக் கட்டைப்போல் மேல்கட்டு ஏன் போடவில்லையென்று கேட்பீர்கள். பிடியின் உச்சியில் கொட்டாப்புளி அடிவிழும்போது பிடி உடையாமல் நார் நாராக நாலாப்பக்கமும் சரிந்துகோண்டே வருவதற்கும், பூண் சிறிது சிறிதாகக் கீழே யிறங்கிக் கொண்டும் வருவதோடு சரிந்து வரும் நார்கள் உளிபிடித்திருக்கும் கையை ஒர்கவசம்போல் மூடிக்கொள்ளவும் தான். கையைச் சரிவு நார்கள் மூடாவிட்டாலென்ன? கொட்டாப்புளி அடிதவறிடில் கையில் காயம்படாமலும், அடியினதிர்ச்சியுண்டாகாமலும் இருக்கும்பொருட்டே அறிவாளிகள் இப்படிச் செய்திருக்கிறார்கள் சரிவு நார்களை அடிக்கடி நீரில் நனைத்துக் கோடல் வேண்டும்; இல்லையேல் கொட்டாப்புளி அடியில் பளுவால் நகம் நசுங்குண்டு கத்தரித்து விழுந்து விடும்.

குறிப்பு — சோலை மரங்கள்தாம் நார் நாராய்ப் பிரியும் தன்மை பொருந்தியுள்ளது. ஆனதால் உளிப்பிடிக்கும் சோலை வெண்தேக்கு, கொடிப்பச்சை, மூங்கில்கழி முதலிய மரங்களே சாலச் சிறந்தவைகள்.

கள்ளம் — பிடிக்கும் உளியின் உடலுக்கு மத்தியிலிருக்கும் ஒடுக்கமான பாகத்திற்குக் கள்ளமென்று பெயர். உளியின் வாய் மட்ட வித்தியாசமாயிருந்தால் கொட்டாப்புளி அடி அதிர்ச்சியால் இந்த இடத்தில்தான் கத்தரிப்பது வழக்கம்.

உளியின் உடல் — கள்ளத்திற்கும் உளியின் வாய்க்கும் மத்தியிலுள்ள பாகத்திற்கு உடல் எனப்பெயர். இவை கள்ளத்திலிருந்து உளியின் வாய்வரை கனம் குறைந்துகொண்டே வந்து கூரிய பாகத்தில் முடிகிறது.

உளியின் வாய் — வாயை நன்றாய்க் கவனியுங்கள். கள்ளத்திலிருந்து வாய்வரை ஒருபக்கம் மட்டமாயும் மற்றொருபக்கம் கள்ளத்திலிருந்து சுமார் 5" அங்குலம் வரை மட்டமாயும் பிறகு $\frac{1}{4}$", $\frac{1}{2}$ அங்குலமும் சிலவற்றிற்கு $\frac{3}{4}$' அங்குலமும் சாய்வாய்ச் சென்று வாயின் கூரியபாகத்தில் முடிகிறது.



## அப்பியாசம் I.

உளித்தீட்டுதல் — நாம் ஒரு மரத்தை வெட்ட வேண்டுமாயின், வெட்டாயுதங்கள் கதுமையா யிருக்கவேண்டுமல்லவா? அதற்காக அரிவாளையோ கோடரியையோ, பாறைகளிலாயினும் சாணைக்கற்களிலாயினும் தீட்டிக் கூர்மையாக்குகின்றோம். அவ்வாறே உளிகளையும் தீட்டிக்கொள்ள வேண்டுவதவசியம். ஆனால் அரிவாள், கோடரி முதலியவைகளைப் பாறையில் தீட்டுவதுபோல் உளியைத் தீட்ட இயலாது. ஏனெனில் உளிக்கு இருபக்கமும் சாய்ந்தவாயில்லை. ஒருபக்கம் மட்டமாயும் மறுபக்கம் சாய்வாயுமிருக்கும். அதனால் மட்டமான பாகத்தைத் தேய்க்க முடியாது. ஆனால் சாணையில் தேய்க்கலாம், சாணைக்கற்கள் விலையதிகமாயும் தேயும் தன்மையுள்ளவையாயு மிருப்பதால் அவ்வளவு சிறந்ததாக எனக்குப் புலனாகவில்லை. பின் எதில் தீட்டுவது, ஓர் மட்டமான பலகையில் வெண்கற் பொடியைத் தூவித் தேய்ப்பதே சிறந்த முறையாம்.

அப்படியானால் நான் எப்படி உளித்தீட்டுகிறேனென்று கவனியுங்கள். சுமார் 4 அடி நீளமும் $1\frac{1}{2}$ அடி அகலமுமுள்ள இந்த மட்டமான பலகையில் வெண்கற் பொடியைத் தூவிவிட்டேன். உளியை எப்படிப் பிடித்திருக்கிறேன் பாருங்கள். உ. உளி பிடியின் உச்சியை இடக்கையாலும், உ. உடலின்மீது வலக்கையின் விரல்களை விரித்து உள்ளங்கையால் அழுத்திக்கொண்டும், தீட்டு பலகையின் மீதுள்ள பொடியின்மேல் உளியைப் பட்டைவசமாய் வைத்து முன்னும் பின்னும் தள்ளுகிறேன்; பலகை எனக்கு வலப்புற மிருக்கும்படி திரும்பி நிற்கிறேன். உளியின் சாய்வுபக்கம் பலகையில் எப்படிப் பொருந்தியிருக்கிறது. உளியின் சாய்ந்த பக்கம் எவ்வளவு சாய்வாயிருக்கிறதோ அவ்வளவு சாய்வும் பொருந்தி யிருக்கிறது. உடலின்மீது உள்ளங்கையால் வைத்து அழுத்தும் பாகம் உளியின் இருகோடியிலும் சரியாயிருக்கவேண்டுவது ஏன்? ஒருகோடியில் பளு அதிகமாயும் மறுகோடியில் கொஞ்சம் குறைவாயும் அழுத்தித் தேய்த்தால் பாரமதிகமுள்ள கோடியில் அதிகம் தேய்ந்தும் பாரமில்லாத பக்கத்தில் கொஞ்சமுமாகத் தேய்ந்தும்போம், அதனால் உளியின் இருகோடிகளும் ஒன்றற்கொன்று மட்டவித்தியாசமாகிப் போகிறபடியால் உளியை மரத்திலடிக்கையில் செங்குத்தாய்ச் செல்லாமல் சாய்ந்து

போகும். இதனால் கொட்டாப்புளி அடியின் அதிர்ச்சியால் உளிகத்தரித்துப் போகவும் கூடும். இதைக்கொண்டுதான் பாரம் சரியாய்ப்போட்டுத் தேய்த்தல் வேண்டுமெனச் சொல்லுகிறேன். சரி இப்போது சாய்வுப்பக்கத்தைத் தீட்டியாய்விட்டது. இனி மட்டமான பாகத்தைத் திருப்பித் தீட்டுவோம். இப்போது உளி பலகையில் எப்படிப் படிந்திருக்கிறது? உளியின் உடல் முழுவதும் பள்ளம்வரையிலும் பலகையின் மட்டத்திற்குச் சரியாய்ப் பொருந்தியிருக்க முன்னும் பின்னும் தள்ளித் தீட்டுகிறேன். ஏன் இடைப்பக்கத்தையும் தூக்கித் தீட்டக்கூடாது? அங்ஙனம் செய்தால் இயக்கமும் சாய்வுண்டாகிவிடும் இதனால் மரம்பட்ட. சுத்தமாறாததோடு சிறாயும் எழும்பாது; இனி என்ன செய்யவேண்டும்? உளியின் வாய் கூடவேண்டும் அதற்கு என்ன செய்கிறேனென்று பாருங்கள். பலகையிலுள்ள பெரும் பொடிகளையெல்லாம் கையால் திரட்டித் தள்ளிவிட்டுத் தங்கி நிற்கும் சிறிய துணுக்குகளால் விரைவாய் முன்னும் பின்னும் தள்ளாமல் மெதுவாய்த் தள்ளிப் பலகையில் அணைக்கிறேன். இன்னும் வாய்கூடவில்லை. இன்னும் கொஞ்சம் இருபக்கமும் திருப்பித் திருப்பி அணைப்போம். இப்போது வாய் சரியாய்க்கூடிவிட்டது. இவ்வாறே மற்ற உளிகளையும் தீட்டிக் கூர்படுத்திக் கொள்வீர்களென்று நினைக்கிறேன். மேற்கண்ட அப்பியாசம் பலமுறை செய்யும்படி உத்தரவிடவும்.

குறிப்பு — தச்சுப்பட்டறையில் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போய்த் தச்சர்கள் உளித்தீட்டுதலைக் காட்டவேண்டும்.

## அப்பியாசம் 2.

உளியை உபயோகிக்கும் விதம் —

I. உளியடிக் குறிப்பு — பிள்ளைகளே! இப்போது உளித்தீட்ட நீங்கள் நன்றாய்க் கற்றுக்கொண்டீர்கள். இனி உளியால் வேலை செய்யும் விதத்தைப் பற்றிச் சொல்லுகிறேன்.

இதோ இங்கிருக்கும் உளிப்பிடிகளிலும் கொட்டாப்புளிகளிலும் ஆளுக்கொன்றாய் எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் பிடியில் உளி பிணைக்கப்பட்டிருக்கவில்லை. பிடிமாத்திரம் வைத்திருக்கிறீர்கள், ஏன் அதில் உளி பிணைத்திருக்கவில்லை தெரியுமா? பிடியில் உளி பிணைக்கப்பட்டிருந்தால், பிடியின்மீது நீங்கள் கொட்டாப்புளியா லடிக்கும்போது பிடியின்-



மீதே உங்கள் பார்வையைச் செலுத்திக்கொண்டு உளியைக் கவனியாதிருப்பதால் அதன் கூரியபாகம் உங்கள் காலையோ மற்றப் பாகங்களையோ காயப்படுத்தும். அது கண்ட நீங்கள் உளியின் மீது பிறகு நாட்டம் வைப்பீர்கள். அப்போது கொட்டாப்புளி அடி தள்ளி உங்கள் கையைக் காயப்படுத்தும். ஒரே தடவையில் இரண்டிடத்தையும் கவனித்தல் அசாத்தியமாகையால் கொட்டாப்புளி அடியைக் கவனியாமலே அடி சரியாய்ப் பழகுதலவசியமா யிருக்கிறது. ஆகையால் உளிப்பிடியை இடக் கையிலும் மழுவை வலக்கையிலும் பிடித்துக்கொண்டும் இடக் காலை அடிப்பட்டை மரத்தின்மீது குந்தவைத்தும் வலக் காலைப் பூமியில் மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு உளிப் பிடியின் மைய உச்சியில் கொட்டாபுள்ளி அடி விழும்படி அடிக்கவும் அடி அதிர்ச்சியில்லாமல் விழவேண்டும். பிறகு, உங்களுக் கெதிரிலுள்ள ஒரு வஸ்துவைப் பார்த்துக் கொண்டும் முகத்தை எப்பக்கம் திருப்பிக் கொண்டும், அடித்தாலும் கொட்டாப்புளி அடி தவறாமல் விழுந்தால் அதுவே உளியடித் தீர்க்கமாகும்.

II. உளியால் வேலை செய்யும் விதம் — இனி நீங்கள் எப்பக்கம் திரும்பிக்கொண்டு அடித்தபோதிலும் கொட்டாப்புளி அடி தவறி உங்கள் கையில் விழுந்து காயப்படுத்தாது. அவ்வளவு குறிப்பா யடித்துப் பழகிக்கொண்டீர்கள். இப்போது உளியின் மீதே உங்கள் பார்வை முழுதும் செலுத்தும் சக்தியைப் பெற்றுக்கொண்டீர்கள். ஆகையால் பிடிப்பில் உளியைச் செருகிக் கொண்டு வேலைசெய்ய ஆரம்பம் செய்யுங்கள்; ஆயினும் முன்மாதிரி அஜாக்கிரதையா யிராமல் உளியின்மீதே உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். இதோ இங்கு வைத்திருக்கும் சதுரக் கட்டைகளில் ஆளுக்கொன்றாய் எடுத்துக்கொள்ளுங்கள். எடுத்துக்கொண்ட கட்டையை அடிப்பட்டை மரத்தின்மேல் வைத்துக் கட்டையின் ஒருகோடியில் இடப் பாதத்தை வைத்துக் குந்தி அழுத்தி உட்கார்ந்துகொள்ளுங்கள். வலக்காலைப் பூமியில் மண்டியிட்டுக்கொள்ளவும். கட்டையை ஏன் மிதித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்பீர்கள். உளியால் மரத்தைச் செதுக்கும்போது கொட்டாப்புளி அடியினதிர்ச்சியால் கட்டை இங்கு மங்கும் நகராமலும் பிறழாமலு மிருக்கவும் தான் முதல் அப்பியாசத்தில் சொல்லியிருக்கிறபடி உளியையும் மழுவையும் பிடித்துக்கொண்டு கட்-

டையில் போட்டிருக்கும் நேர்க் கோட்டிற்கு இப்புறமுள்ள பாகத்தைச் செதுக்கி யெடுங்கள். இதைத்தான் தச்சர்கள் வருகுக்காகக் குத்துங்களென்று சொல்லுவது.

(இன்னும் வரும்)

திருவை N. சிதம்பரகவுண்டர்,
முதல் உதவி உபாத்தியாயர்,
போர்டு எலிமெண்டரி ஸ்கூல், துடுப்பதி,
பெருந்துறை போஸ்டு, ஈரோடு தாலுக்கா.

# LORD BUFFON

## பப்பன் பிரபு

நாம் கல்வியில் தேர்ச்சிபெற வேண்டின் அதிகாலையில் எழுந்து வாசித்தல் வேண்டும். அப்பொழுதுதான் அது நமது மனதில் நன்றாய்ப் பதியும். ஏனெனில் பகல் முழுவதும் வருந்தி உழைத்துக் களைப்படைந்த நமது தேகம் அன்று இரவு ஓய்வடைந்திருக்கும். ஆதலின் மறுநாட் காலையில் நாம் வாசிக்கும் பாடமானது நமது மனதில் நன்றாய்ப் பதியுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. அவ்விதம் அதிகாலையில் எழுந்து பயனடைந்தோர் பலர் உளர். அவர்களுள் ஒருவராய பப்பன் (Buffon) பிரபுவின் சரித்தை ஈண்டுக் கூறுவோம்.

இவர் சிறுபிராயத்தில் மிகவும் மந்தமாகவேயிருந்தார். அவர் ஒன்றைக் கற்பதும் மெதுவாகவே இருந்தது. கற்றதை வெளியிடுவதும் மெதுவேயாகும். அன்றியும் சோம்பல் என்பது அவரிடம் இயற்கையாய் அமைந்திருந்தது. இவருக்குப் பணம் ஏராளமாய் இருந்தது. நாம் செல்வராய்ப் பிறந்திருப்பின் சும்மா இருந்து பெருவாழ்வு வாழத்தானே விரும்புவோம். ஆனால் நண்பர்களே ! அவர் அவ்விதம் செய்யவில்லை. தமது சுகத்தை மறுத்துவிட வேண்டுமென்றும் சிரத்தையாய்க் கல்விகற்றுத் தேறவேண்டுமென்றும் சிறுவயதிலேயே அவர் தீர்மானித்திருந்தார். காலம் என்பது செல்வத்திற்குச் சமம் என்பதை அவர் அறிவார். ஆதலின் அவருக்கு நாம் செல்வத்தை எப்படி பாது-



காக்கின்றோமோ, அப்படியே காலத்தையும் வீணே போக்கிவிடாமல் பாதுகாக்க வேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. ஆதலால் அவர் தனக்கு அதிகாலையில் வெகுநேரம் நித்திரை செய்யும் பழக்கம் இருப்பதை எண்ணி மிகவும் வருந்தினார்.

இப்பழக்கத்தை ஒழிப்பதற்கு அவர் பெரிதும் முயன்றார். அது நெடுநாட் பழக்கமாகையால் அவர் அதற்காகப் பட்டபாடு அனைத்தும் வீணாயின. பிறகு அவர் சிறிதுநேரம் ஆலோசித்து, இனிப் பிறர்துணையின்றி இவ்வெண்ணம் முடிவுபெறாதென்று, அவர் அறிந்தார். உடனே அவர் தன் வேலையாட்களில் ஒருவனை ஜோஸப் என்பவனை அழைத்து, “அப்பா ! நீ என்னை ஐந்துமணிக்குள் எழுப்பிவிடுவாயாகில் உனக்கு நாள் ஒன்றுக்கு இரண்டரை ($2\frac{1}{2}$) ரூபாய் இனாமளிப்பேன் என்றார். இவ்வேலை ஜோஸப் என்பவனுக்கு ஆரம்பத்தில் மிக்க சிரமத்தைக் கொடுத்தது. ஏனெனில், அவர் சில வேளைகளில் “நான் எழுந்திருக்க மாட்டேன் ; நீ உன் வேலையைப் பார்” என்றும், சில வேளைகளில் “அடே ! என்னை அலட்டாதே” என்றும் கடுகடுத்துச் சொல்வார். இவர் இவ்விதம் புகன்று காலங் கடந்து எழுந்து அன்று பகல்முழுதும் தன் வேலையாளை நோக்கி “அடா ! பாபி, என் சொற்படி என்னை எழுப்பாது போனாயே. நான் உனக்கு ($2\frac{1}{2}$) இரண்டரை ரூபாய் இனாமும் தருகிறேன் என்று சொன்னேனே” என்று சொல்லி மிகவும் வருத்தமுறுவார்.

ஒருநாள் அவ்வேலைக்காரன் துணிவுடன் இனி யாது நடந்தாலும் சரி. யான் இன்று அவரிடமிருந்து வெகுமதி பெறாது விடுவதில்லை என்று தீர்மானம் செய்துகொண்டு தன் யஜமானன் குறித்த காலம் தவறாது சென்று எழுப்பினான். அவர் அன்று “அப்பா ! இன்னும் சிறிதுநேரம் துயில் செய்கின்றேன், என் தேகம் சரியாக இல்லை. ஆதலின் சற்றுநேரம் பொறுத்துக்கொள். பிறகு நித்திரைவிட்டெழுகின்றேன்” என்று அவனைக் கெஞ்சிக் கேட்டார். அவ்விதமே அவ்வேலையாளன் அவரது வார்த்தைக்கு ஒப்புக்கொண்டு சிறிதுநேரம் கழித்து மறுபடியும் அவரை எழுப்பினான். அதற்கு அவர் “உஸ் - இன்னும் எனக்கு நித்திரை தெளியவில்லை.” எனப் புகன்று காலங் கடத்தினார். ஆனால் அவன் தாங்கவில்லை ; மீண்டும் எழுப்பினான். உடனே அவர் அவனை நோக்கி, “நீ என்னை இவ்விதம் அடிக்கடி சிரமப்படுத்தினால் இப்-

பொழுதே உன்னை இச்சேவகத்தினின்று நீக்கிவிடுவேன் சாக்கிரதை'' என்று வெருட்டினார். அவன் அதற்குச் சிறிதும் அஞ்சவில்லை. ஏனெனில், "சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கா லாழம்'' என்பதுபோல் அவன் துணிந்தவனாகையால் தன் யஜமானனிடம் பரிசுபெறக் கருதி அதற்கு ஒரு சிறந்த யுக்தியை அறிந்தான். அதாவது: பனிக்கட்டியைப் போன்று குளிர்ந்திருக்கும் தண்ணீரை ஒரு தோண்டியில் எடுத்துச்சென்று தன் யஜமானன்மீது படாவண்ணம் அவர் துயில் செய்துகொண்டிருந்த பஞ்சணையை ஈரமாக்கினான். பஞ்சணை நனையவும் பப்பன் பிரபு துடிதுடித்து அவனை உதைக்க வந்தார். ஆனால் அங்கு நிற்காது வெகு தொலைவில் ஓடிச் சென்றான்.

நித்திரை தெளிந்ததும் அவர் அவனை அருகழைத்து, தான் வாக்களித்தபடி இரண்டரை ரூபாய் கொடுத்தார். அவ் வேலையாளன் அவ்வுபாயத்தை ஒருபோதும் மறந்ததில்லை. நாள்தோறும் அவ்விதமே செய்துவந்தான். ஆகலின் இதுகாறும் நெடுநேரம் துயின்றுவந்த பப்பன் பிரபு இப்பொழுது ஐந்துமணிக்குள் எழுந்திருக்கத் தலைப்பட்டார். அவர் அதிகாலையில் தன் படுக்கைவிட்டெழுந்ததும் நன்றாய்க் கல்விகற்று வந்தார். அவர் அப்படிக் கல்விகற்று வந்ததனால் பல புத்தகங்களை இயற்றினார். அவர் தாம் எழுதிய புத்தகங்களிலெல்லாம் ஜோஸப் என்பவனைப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். அவர் தினந்தோறும் காலை ஒன்பது மணியிலிருந்து பகல் இரண்டுமணி வரையிலும் மாலை ஐந்துமணியிலிருந்து இரவு ஒன்பதுமணி வரையிலும் புத்தகங்கள் எழுதி வந்தார். இப்படி இவர் நாற்பது வருடத்தில் பல புத்தகங்களை இயற்றினார். அவர் இடைவிடாமல் அதிகாலையில் எழுந்து முயற்சி செய்து வந்ததனால், கல்வியில் நன்றாய்த் தேர்ச்சி யடைந்து மேன்மைபெற்று விளங்கினார். அவருக்குக் கல்வி கற்பதிலேயே அதிகப் பிரியம். மிக்க மேன்மைபெற்றிருந்த இவர் தம் முதுமைப் பருவத்தில் தாம் இன்னும் சிறிதுகாலம் உயிரோடிருந்து கல்வி பயில்வதற்கு இயலாதுபோனதை யுன்னி வருத்தமுறுவார். இவர் கல்வியைப் பெருக்க உழைத்து வந்தவர்களுள் ஒருவர். மேலும் இவர் தமது சிறந்த எண்ணங்களைப் பிறர் அறியும்பொருட்டு மிகத் தெளிவாய் விளங்கும்படி சிறு சிறு புத்தகங்களாக வரைந்து வெளியிட்டார். இவர் தாம் எழுதின வாசகத்தை மேலும் மேலும் பிழைகண்டு திருத்தி நன்றாய் விளங்கும்படி



செய்வார். இவர் எழுதிய "சம்ஸ்த சராசர கலாவதி'' என்னும் புத்தகத்தை எழுதுதற்கு ஐம்பது வருடகாலம் கூர்ந்து ஆலோசித்துப் பதினொருமுறை திருத்தித் திருத்தி எழுதினாரெனில் அவரது முயற்சியின் திறத்தை என்னென்று கூறுவது. ஆதலின் நாம் சோம்பலின்றி வருந்தி உழைப்போமேயாகில் எத்தகைய அரிய காரியத்தையும் எளிதில் முடிக்கலாகும்.

M. S. MUTHUKUMARASWAMY MUDALIAR,
*Tamil Pandit,*
*Muthialpet High School, Madras.*

## BOTANY

## தாவர சாஸ்திரம்

### வேரும் அதன் வேலையும்

பிள்ளைகளே! நம்முடைய தோட்டத்திலிருக்கும் அநேக செடிகளைப் பார்த்தோம் அல்லவா, ஒவ்வொரு செடிக்கும் வேர், தண்டு, இலை, பூ, க்காய், பழம், விதை முதலான அவயவங்கள் இருக்கின்றன அல்லவா? இந்த ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொரு அவயவம் என்று பெயர். இந்த ஒவ்வொரு அவயவமும் ஒவ்வொரு குறிப்பிட்ட வேலையைத்தான் செய்ய ஏற்பட்டிருக்கிறது. ஒரு அவயவம் செய்யவேண்டிய வேலையை மற்றொரு அவயவம் செய்ய முடியுமோ? முடியாது. நமக்கும் இன்னும் மற்றுமுள்ள பிராணிகட்கும் அநேக அவயவங்கள் ஏற்பட்டிருக்கின்றன அல்லவா; கண் செய்யவேண்டிய வேலையை மூக்கு செய்ய முடியுமா? செய்ய முடியாது. பிள்ளைகளே! இந்தச் சீமைச் சுண்ணாம்பு, சிலேட் இவைகளைப் பாருங்கள். இதோ இந்தச் சீமைச் சுண்ணாம்பு கட்டியை உடைக்கின்றேன். அநேக துண்டுகளிருக்கின்றன அல்லவா? ஒரு துண்டு மற்றொரு துண்டைப்போலிருக்கிறதேயல்லாது ஒரு துண்டுக்கும் மற்றொரு துண்டுக்கும் ஏதாவது வித்தியாசமிருக்கின்றதா? இல்லையே, இவைகள் எல்லாம் தாதுப்பொருள்கள்தானே. ஆம்; இவைகள் தாதுவர்க்கத்தைச் சேர்ந்தவை. இதைப்போல் இன்னும் இரண்டுவஸ்துக்கள் சொல்லுங்கள் பார்ப்போம், நிலக்கரி, களிமண் நம்முடைய தேகத்திலிருக்கும் ஒவ்-

வொரு பாகங்களையும் பாருங்கள். ஒருபாகம் மற்றப் பாகத்தைப் போலிருக்கின்றதா? இல்லையே. ஒவ்வொன்றும் வெவ்வேறாகத் தான் இருக்கின்றது. ஆதலால் ஒவ்வொரு அவயவமும் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்ய ஏற்பட்டிருக்கின்றதல்லவா?

சரி, இந்த அவரைச் செடியின் பாகங்களைப் பாருங்கள். நீங்கள் சிறு வகுப்பில், வேர், தண்டு, இலை இவைகளால் தாவரத்திற்கு என்ன பயன் என்று படித்திருப்பீர்கள். முக்கியமாய், வேர் பூமியிலிருக்கும் ஆகாரத்தைக் கிரகிக்கிறது. தண்டு ஆகாரத்தை மேல் பாகங்கட்கு அனுப்புகிறது. இலைகள் உட்கொள்ளுகிறது என்றுதானே படித்தீர்கள். ஆதலால் தாவரம் வளருவதற்கு இப்பாகங்கள் அவசியம்தானே. சரி, இதோ இருக்கும் இந்த மிளகாய்ச் செடியிலிருக்கும் பூவைப் பாருங்கள். இந்த பூ எதற்காக ஏற்பட்டிருக்கின்றது தெரியுமா? இந்தச் செடியை உண்டாக்க என்ன விதைத்தோம்? மிளகாய் விதையை அல்லவா? மிளகாய் விதை எங்கேயிருக்கிறது. மிளகாய்ப் பழத்திற்குள்தானே. மிளகாய்ப் பழம் என்பது இப்போது இச் செடியிலிருக்கும் மிளகாயானது பழுத்தபோது தானே இக் காயிலிருக்கும் விதைகளைப் பாருங்கள்; இவ் விதைகள் நன்றாய் முற்றவில்லை. சரி, காய் உண்டாவதற்கு பூ ஆதாரமாயிருக்கிறது. விதை உண்டாவதற்குக் காய் அல்லவா அவசியமாயிருக்கிறது. இந்தச் செடியைப் போல் அநேகமாய் எல்லாச் செடிகளுக்கும் விதை, பூவிலிருந்து உண்டாகின்றது. பூவினால் தாவரத்திற்கு என்ன பயன். இது ஆகாரத்தைக் கிரகிக்கிறதா, இல்லையே. தாவரம் நாளுக்கு நாள் வளருவதற்கு இது உதவி செய்ய முடியுமா? முடியாது. பின் என்ன? தாவரத்தின் இனத்தை விர்த்தி செய்வதற்கு ஏற்ற பாகம் தானே? ஆதலால் பூக்கள் எல்லாம் தாவரத்தின் இனத்தை விர்த்தி செய்கிற பாகமாகும். சரி இப்போது நாம் படித்த விஷயங்களில் தாவரத்தின் பாகங்களை எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கலாம். இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன 1. தாவரத்தின் வளர்ச்சிக்குத் தேவையான பாகங்கள். 2. தாவரத்தின் இனத்தை விருத்தி செய்கிற பாகம்.

(இன்னும் வரும்)

M. RAMAKRISHNAN,
*Assistant,*
*Govt. Panchama Training School,*
*Madras.*




உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 14 | 1919ஆ பெப்ருவரி மீ | மாதம் 9

## STORY TELLING

### கதை சொல்லல்

கதை என்பது இலக்கணம், பூகோளம், தேச சரித்திரம் முதலிய நூல்களைப் போன்றதன்று. அது நாடகம், சிற்பம் முதலியவற்றைப்போன்ற கலைகளில் ஒன்றாகும். கலை என்பது அறிவு நுட்பம் அமைந்த அருந்தொழிலாகும். கதை சொல்வது எல்லாருக்கும் இயல்வதன்று. எங்ஙனம் கவிபாடுவதற்கு அமைப்பு வேண்டுமோ அங்ஙனமே கதை சொல்வதற்கும் இயற்கையிலேயே அமைப்பு இருத்தல் வேண்டும். இன்றேல் கதையைக் கேட்போர் செவிக்கு இனிக்கச் சொல்ல முடியாது. கதை சொல்லும்போது ஒருநோக்கத்தைப் பிரதானமாக வைத்துக்கொண்டு,

அதற்கு இசைய விஷயங்களைத் தொகுத்துக்கொண்டு கேட்போருக்கு மனவெழுச்சி உண்டாகும்படி கூறல் வேண்டும். நாடகம் எவ்வாறு உலக இயல்புகளையும் நன்மை தீமைகளையுஞ் செவ்வையாகக் காட்டுகின்றதோ அதுபோலவே கதைகளும் உலகாநுபவங்களைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. நாடகம் ஒரு காலத்தில் ஜனங்களுக்கு அதிலுள்ள சுவை குறைந்துவிடின் அழிந்துவிடும். ஆனால் கதைகளோ எக் காலத்தும் நின்று நிலைபெறுவனவாகும். நம் நாட்டில் மிகச் சிறந்திருந்த நாடக நூல்கள் பிற்காலத்தில் மதங்கள் விருத்தியடைந்தபோது தீமை பயப்பனவாகக் கருதப்பட்டு வேரற்றுப்போயின. இவ்வாறு நாடகத்துக்கு ஆடுகின்றவர்களின் தன்மைக்கு இசைய ஒருகால் ஏற்றமும் ஒருகால் தாழ்வும் உண்டாவது இயற்கையாக இருக்கின்றது. கதைக்கு அத்தகைய ஏற்றத் தாழ்வுகள் என்றும் இல்லை. நம் புராணகதைகளும், மதவுண்மைகளும் பிறவும் கதைகள் வாயிலாக வெளிவந்துள்ளன.

எவ் விஷயத்தைப்பற்றியாவது சிறுவர்களுக்குக் கதை சொல்லும்போது அதற்கு முன்னும் பின்னும் சில விஷயங்களைச் சேர்த்துச் சொல்லுதல் இன்றியமையாததாகும். தேனீக்களைப் பற்றிக் கதைசொல்லப் புகுந்தால் அதற்கு முன்னும் பின்னும் சிலவற்றைச் சேர்க்காவிடின் அக் கதையினால் ஒரு பயனும் உண்டாக மாட்டாது. கதையின் முக்கிய பயன் சிறுவர்களுக்கு மனமகிழ்ச்சியைத் தருவதேயாகும். நன்றாக எழுதப்பட்ட ஒரு சித்திரத்தைப் பார்த்தவுடன் எப்படி மனதிற்கு அதன் அழகு நிலைபெற்று ஒருவகை இன்பவுணர்ச்சியைக் கொடுக்கின்றதோ அதுபோலவே கதையும் முதலில் கேட்பவர் மனதைக் கவர்ந்து அங்கு நிலைத்து உற்சாகத்தை ஊட்டுகின்றது. பிள்ளைகளுக்குக் கதைகள் சொல்லுவதனால் அவர்கள் அறிவும் உணர்ச்சிகளும் ஆன்மசக்தியும் விரிந்து உரம் பெறுகின்றன. இதுவே எல்லாவற்றினுஞ் சிறந்த பயனாகும். கதைகள் சொல்லாவிடின் அவர்கள் எவ்வளவு புத்தகங்களைப் படித்தாலும் இவ்வளவு நன்மைகளையுந் தாங்கள் எளிதில் அடைய முடியாது.

இன்ன வுண்மைக்காக இக்கதையைச் சொல்லுகின்றேன் என்றாவது ஒரு சிறு விஷயத்துக்காகப் பெரிய கதைகளைச் சொல்லுவதாவது ஒரு கதையில் பல விஷயங்களைச் சேர்த்துச் சொல்லுதலாவது கூடாது. சிலர் தாவர சாத்திரம் முதலியவற்றையே



கதைகள் மூலமாகச் சொல்லவேண்டுமென நினைக்கின்றனர்; அது தவ்று. எல்லா விஷயங்களையுங் கதைவாயிலாகக் கற்பிக்கலாம்; அன்றிக் கதைகள் பலவற்றைச் சரித்திரக் கருத்துக்களின்றித் தனியாகவுங் கூறலாம். பிள்ளைகள் பள்ளிக்கூடப் பாடங்களைப் படித்துக் களைத்திருக்கும்போது அவர்களுக்கு விநோதமான கதைகளைச் சொன்னால் அவர்கள் ஆநந்தமாய்க் கேட்டுக் களிப்பார்கள். சொல்லுகிறவர்களுக்கும் மகிழ்ச்சி யுண்டாகும். சிறுவர்கள் மனோபாவனை உயரச் செல்கின்றது. அவர்கள் தங்களை மறந்து விடுகின்றனர்; கதை சொல்லும் உபாத்தியாயரும் தன்னை மறந்து கதையின் இனிமையில் அழுந்தி விடுகின்றனர். சிறுவர்கள் உபாத்தியாயரை நேசிக்க ஆரம்பிக்கின்றனர்; அவர்கள் நேசப்பான்மை நாளடைவில் வளர்ச்சியுறுகின்றது. ஆகையினால் சிறுவர்களுக்குக் கதைகளைச் சொல்லுவதனால் விளையும் நன்மைகள் எத்துணைச் சிறந்தவை என்பதை உற்று நோக்குங்கள்.

இவ்வளவுதூரம் சொன்னவிஷயங்களைத் தொகுத்துப் பார்க்கில், சிறுபிள்ளைகட்குக் கதை சொல்லுதல் சிறந்த கல்வி முறையாகும் என்பதும் அதனை உபாத்தியாயர்கள் கைக்கொள்ளல்வேண்டும் என்பதும் அவ்வாறு கதை சொல்லுவது ஒரு அரும் பெருந்தொழில் முறையாம் என்பதும் அதனால் கேட்பவருக்கு அகமகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் இன்பவுணர்ச்சியும் உண்டாகின்றன என்பதும் அவைமட்டுமன்றி அவர்கள் அறிவும் உணர்ச்சிகளும் மனோபாவனைகளும் விரிந்து உரம்பெறுகின்றன வென்பதும் கதை சொல்லுகிறவர்களுக்கும் இத்தகைய களிப்புண்டாவதால் அவர்களுக்கும் இது விநோத பொழுது போக்காகவும் ஆறுதலுக்கு ஏற்றதாகவும் உள்ளதென்பதும் உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் அன்பு முதிர்ச்சி உண்டாவதற்குக் காரணமா- [illegible] தென்பதும் இனிது விளங்குவதால் அனைவரும் பள்ளிக்கூ- [illegible] மாணவர்கட்கு ஏற்ற விஷயங்களைக் கதைகள் மூலமாக அழ- [illegible] சொல்லப் பழகுதல் வேண்டுமென வற்புறுத்துகின்றோம்.

பத்திராதிபர்.

# THE CONDITION OF ELEMENTARY SCHOOLS

## கீழ்தரப் பாடசாலைகளின் நிலைமை

"இப்பொழுது இந்த (திருப்பத்தூர்) ரேஞ்சுக்கு வந்திருக்கும் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரும் மற்றும் படித்தவர்களெல்லாரும் உபாத்திமைத் தொழிலைப்பற்றிப் புகழ்ந்து சொல்லுகிறார்கள். ஆனால், படித்தவர்களெல்லாரும் தாங்கள் விர்த்திக்கு வரக் காரணமாயிருந்த உபாத்திமார்கள், அவர்களைப்போன்ற மற்ற உபாத்திமார்களின் கஷ்டங்களை நிவர்த்திக்க, மேன்மேலும் பயற்சிசெய்யாமல் இருப்பது உபாத்திமார்க்கு அதிருப்தியைக் கொடுக்காம லிராது.

அதாவது, கூலிவேலையாட்கள் முதல் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் வரையில், குறைவான சம்பளத்தி லிருப்பவர்களுக்குப் பஞ்சப்படியும் சண்டைக்காக அலவன்ஸும் கொடுத்தும் சம்பளத்தையும் உயர்த்தியும் உதவி செய்திருக்க, இந்த ரேஞ்சிலுள்ள உபாத்தியாயர்களுக்கோ இதுவரையில் பஞ்சப்படியும் கொடுத்ததாகத் தெரியவில்லை. யுத்தப்படியும் கொடுக்கவில்லை. உபாத்திமார்களுக்குக் கொடுக்கும் இச்சம்பளமே (ரூ. 11) அதிகமென்று நினைத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

ஆனால், உபாத்திமார்களுக்குச் சம்பளம் குறைவென்றும், இவர்களாலேயே தேசம் முன்னுக்கு வரவேண்டுமென்றும் உயர்த்த வேண்டுமென்றும் ஒவ்வொரு உபந்நியாஸத்திலும் மேடைகளிலும் கூறுகிறார்களே யொழிய காரியத்தில் சம்பளத்தை உயர்த்தி அவர்களின் ஜீவனோபாயத்துக்கு வேண்டியவளவு உதவி செய்தபாடில்லை. இக்கஷ்டத்தினால் மாணாக்கர்களுக்குத் தகுந்தபடி போதிக்கும் நல்ல உபாத்திமார்கள், கஷ்டத்தைச் சகிக்க முடியாமல் வேறு ஜீவனோபாயம் தேடிக்கொள்ளுகிறார்கள். கொஞ்சமாய்ப் படித்து அக்கறையும் பயிற்சியுமில்லாத உபாத்திமார்கள் (ரூ. 8 கூடச் சம்பாதிக்க முடியாதவர்கள்) வந்து சேருவதினால் தேசத்தை எவ்வளவு முன்னுக்குக் கொண்டுவர முடியுமோ நீங்களே தெரிந்துகொள்ளலாம்.

இத் திருப்பத்தூர் ரேஞ்சில் அநேகமாக ஒவ்வொரு பாடசாலையிலும் தேர்ச்சியாகாதவர்களே இருந்து வருகிறார்கள்.



சில பாடசாலைகளை உபாத்திமார்கள் அகப்படாமல் மூடிவிட்டிருக்கிறார்கள். இவைகளுக்குக் காரணம் ஜீவனோபாயத்திற்குப் போதாச் சம்பளமேயாம். ஆகையால் மேல் கண்டவைகளைக் கவர்ன்மெண்டாரும் தாலுக்கா போர்டு முதலிய அனைவரும் கவனித்துக் கஷ்டங்களை நிவர்த்திக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது சமீபத்தில் சுதேசமித்திரனில் ஒரு நிருபரிட மிருந்து வந்ததாகக் காணப்படுகின்றது.

மேலே 2 வது பாராவில் சொல்லியபடி கல்கத்தா, ஹௌரா, ராஜிலிங், ரங்கப்பூர் ஆகிய விடங்களில் உணவுப்பொருள்களின் விலையேற்றத்துக்காக மாதம் ஒன்றுக்கு, 12-ரூபாயும் அதற்குக் குறைந்து சம்பளம் வாங்குவோருக்கு ஒரு ரூபா யதிகமாகப் பஞ்சப்படி கொடுக்கும்படி 21 2-18 க்கு முன்பே உத்தரவா யிருக்கிறது.

13-3-18 ல் வரவு செலவு திட்டத்திற்காக நாகப்பூரில் கூடிய மத்திய மாகாணங்களின் சட்டசபை மீட்டிங்கில், 30 ரூ. சம்பளத்துக்குக் குறைவான பெயர்வழிகளுக்குப் பஞ்சப்படி கொடுக்க வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறது.

ஐக்கிய மாகாணங்களைச் சேர்ந்த அலகாபாத்தில் (உணவுப் பொருள்கள் விலையேறி இருப்பதைக் கருதி, இம்மாகாண லெப்டினெண்ட் கவர்னர் 1918-ஏப்ரல் முதல்தேதி முதல் அற்ப சம்பளத்துக்கு வேலைசெய்யும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு 16-ரூபாய்க்குமேல் 30-ரூபாய்க்குள்ளாகச் சம்பளம் வாங்குவோருக்கு 2 ரூபாயும், 16-ரூபாய்க்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு ஒரு ரூபாயும் பஞ்சப்படி கொடுக்க 1-4-18 க்கு முன்னரே தீர்மானித்திருக்கிறார்.

1917-ம் வருஷம் நவம்பர்மீ 1 ந் தேதி முதல் தபால் தந்தி இலாகா சிப்பந்திகள் அனைவருக்கும் அவரவர் சம்பளத்தில் 100 க்கு 5-விதம் யுத்தப்படி கணக்கிட்டுச் சம்பளத்துடன் சேர்த்துக் கொடுக்கப்படுமென்று இந்தியா மந்திரி 1-3-18க்கு முன்பே வெளிகூர்ந்திருக்கிறார்.

ரயில்வே சிப்பந்திகளுக்கும் இச்சகாயம் ஏற்கனவே செய்து கொடுக்கப்பட் டிருக்கின்றதாம்.

மேலே கூறிய எல்லா இலாக்காக்களுக்கு மூலமாகிய இந்தக் கல்வி இலாகாவில் 'மூலவருக்கே மொந்தைத் தண்ணீரில்லை, ஆலய

முழுதும் அபிஷேகமா' என்ற பழமொழியானது தற்போது ஆம் என்று நிதர்சனப்படுத்துவதாகின்றது.

மேற் கூறிய திருப்பத்தூர் ரேஞ்சில்தான் இவ்விதமென்றாலோ லால்குடிரேஞ்சைச் சேர்ந்த முசிறி, திரிசிராப்பள்ளி தாலுகா போர்டுகளிலும் இவ்விதந்தான் இருக்கின்றது. திருச்சி தாலுகா போர்டுகளில் யுத்தத்திற்காகப் பஞ்சப்படி கொடுக்கப்படுமெனத் தகவல் மட்டும் வந்ததாம். இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிகிறதோடு இவ்வளவு என்றும் தெரியவில்லை. 9-11-18 ல் உபாத்திமார்களுக்குத் தெரிந்த இத் தகவல் கவர்ன்மெண்டாரால் வெளிப்படுத்தப்பட்டது 26-6-18 இல் எனத் தெரிகிறது. சேலம் முதலிய இடங்களில் யுத்தப்படி கொடுத்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

'இந்த ராஜதானியில் மற்ற ஆபீஸுகளைப் பார்க்கிலும் இதரமாகாணங்களின் கவர்ன்மெண்டு ஆபீஸ்களிலும், இந்த ராஜதானியிலுள்ள அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீஸ், போஸ்டுமாஸ்டர் ஜெனரல் ஆபீஸ், போஸ்ட், தந்தி, டிப்டி அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீஸ்களிலும் அவர்களுடைய சம்பள விகிதங்களும் பிரபோஷணைகளும் மேலாயிருக்கின்றன. பழைய சப் அஸிஸ்டெண்ட் சர்ஜன்கள், கம்பவுண்டர்கள், தபால் பியூன்கள், கிளார்க்குகள், கான்ஸ்டேபிள்கள் இவர்கள் எல்லாருக்கும் ஒரு தன்மையாகவே கிரமப்படி அவர்களின் சம்பளங்கள் உயர்த்தப்படுகின்றன என அறிகிறோம்.

போலீஸைப் பாருங்கள். 1918௵ ஜனவரி மாதம் 1 ஆந்தேதி முதல் கான்ஸ்டேபிளாகச் சேருகிறவருக்கு முதலில் சம்பளம் ரூபா 13. அதிலிருந்து ரூ. 16 வரையில் உயர்த்தப்படுமாம். வீட்டு வாடகைக்கு மாதம் 2 ரூபாய் கிடைக்கும் அல்லது போலீஸ் லயனில் வீடு கிடைக்கும். போலீஸில் தாக்கலாய் ரிக்ரூட் ஸ்கூலில் படிக்கிற காலத்தில், மாதந்தோறும் சம்பளம் ரூபா 13 உடன் ரூ. 1-3-0 அலவன்ஸ் கிடைக்குமாம்.

'குமாஸ்தாக்களுக்கு 20-ரூபாய்க்குக் குறைந்து சம்பளமில்லை' என்று 13-3-18ல் கூடிய சென்னைச் சட்ட சபையில் கனம் போலாவரம் ஜமீன்தாரவர்கள் ஷராப்புகளின் சம்பளத்தைப்பற்றிப் பேசுங்கால் சொல்லியிருக்கிறார். இப்போது ஷராப்புகளுக்கு 15 அல்லது 20 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இனி 15, 18, 20



ஆகச் செய்துவிடவேண்டுமென்று ரிவினியூபோர்டார் பிரேரணை செய்திருக்கிறதாகவும், அந்தப்படி செய்யக் கவர்ன்மெண்டார் உத்தேசிப்பதாகவும், நிர்வாக சபை மெம்பர் கனம் ஸர் கார்டியூ அவர்கள் பேசியிருக்கிறார்.

இங்குக் கூறிய இலாகாதாரர்களுக்கெல்லாம் இன்றியமையாத மூல காரணமாயுள்ள இக்கல்வி இலாகாவின், கீழ்தரப்பாடசாலைகளின் உபாத்திமார்களுக்கு 10-ரூபாயிலிருந்து ஒரு ரூபா யதிகமாகச்செய்து 11. ரூபாயாகக் கொடுப்பதாக, நமது கருண்ய கவர்ன்மெண்டாரவர்கள் செய்திருக்கிறார்கள். இது மேலேகூறிய மற்ற இலாகாக்களுக்கும் இவ்விலாகாவுக்கும் 'ஏணிவைத்தாலும் எட்டாதன்றோ? இது 'மலைக்கும் மண்ணாங்கட்டிக்கும் ஈடு' காண்பிப்பதுபோலுமன்றோ? இந்த யுத்த (அகவிலை) காலத்தில் இதுவும் போதாதாயினும், இந்த ஒரு ரூபாயும் 1917 எப்ரல் முதல், சுமார் ஒரு வருஷத்துப் பணம் நாளது வரையில் திரிசிராய்பள்ளி, முசிறி, சேலம் வட்டம் தாலுகா போர்டுகளிலிருந்து, ஏழை உபாத்திமார்களுக்கு இன்னும் கிடைக்காதிருப்பது என்னே! யாதோ? மற்ற இடங்களிலும் இவ்விதந்தானோ என்னமோ தெரியவில்லை? 1917 எப்ரலிலிருந்து சில இடங்களிலும் மார்ச்சிலிருந்து சில இடங்களிலும் கொடுக்கப்படும் காரணமும் தெரியவில்லை.

சமீபத்தில் நடந்த சட்டசபை மீட்டிங்கில் கல்வி யபிவிருத்தியில் அதிக நாட்டமுள்ள கனம் மெம்பரொருவர் இவ்வுபாத்திமார்களுக்கு ரூ. 12-க்குக் குறையாமலாவது சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டதாகவும், அதற்குக் கனம் ஸ்டோன் துரையவர்கள் சமீபத்தில்தான் கொஞ்சம் (ஒரு ரூபாய்) அதிகமாகச் செய்திருப்பதாகவும் இப்போது அவ்விதம் செய்ய இயலாதென்றும் இனிமேல் கவனிக்கப்படுமென்றும் சொல்லியதாகத் தெரியவருகிறது. ஆனால் 'எல்லாருக்குமே 12-ரூபாய்க்குக் குறையாமல் சம்பளத்தை உயர்த்தப்போகிறோம்' என்று கனம் துரையவர்கள் 13-3-18ல் நடந்த சட்டசபையில் கூறியிருப்பதாகத் தெரிகிறது. தற்போதும் கூடிய சீக்கிரம் ரூ. 12 ஆகிவிடுமென்று ஆங்காங்குச் சிலர் கூறிக்கொள்ளுகிறார்கள். ஆயினும், தற்போதே தஞ்சாவூர், மதுரை ஜில்லாக்களில் ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் ரூ. 12 க்குக் குறையாமல் கொடுத்து வருகிறதாக அறிகிறதோடு இந்த லால்குடி ரேஞ்சு சம்பந்தப்பட்ட திருச்சி தாலுகா போர்டிலும்

புதிதாக ஏற்பட்ட பாடசாலை உபாத்திமார்களுக்கு மட்டும் ஆரம்பத்திலேயே ரூ. 12 சம்பளம் கொடுக்கிறார்கள். அநேக வருஷ காலம் உழைத்துக்கொண் டிருக்கும் உபாத்திமார்களுக்கோ அதற்குக் குறைந்த சம்பளமே கொடுக்கப்பட்டு வருகிறது.

மித்திரனது வியாசத்தின் கடைசிப்பாராவில் கூறுகிறபடி உபாத்திமார்கள் கிடைக்காததற்குக் காரணம் போதியசம்பளம் கிடைக்காமையே என்பது யாவருக்கும் எளிதில் புலப்படலாம். போதிய சம்பளம் கிடைப்பின் இத்தொழிலைவிட உத்தமமானதும் சௌகரியமானதும் வேறு இல்லையென்று தக்கவர்கள் வரலாம். போதிய சம்பளத்தைக் கவனிப்பதற்குக் காரணம் எத்தகையோருக்கும் இன்றியமையாதது ஜீவனோபாயமே.

ஆகவே, எல்லாவற்றிற்கும் இன்றியமையாத இக்கீழ்தர ஆரம்பப் படிப்பின் அவசியத்தை இவ்விலாகா அதிகாரிகளும் ஜனப்பிரதிநிதிகளும் நன்குணர்ந் திருப்பினும், "சுடர்விளக்கேனும் தூண்டுகோலொன்று வேண்டும்" என்பதற்கிணங்க மறுபடியும் உணரும்பொருட்டு, எல்லாம் வல்ல ஏகநாயகன் அவர்களுக்கு இனிதுணர்த்தி, ஏற்றவாறு இனிது செய்யும்படி தனது இன்னருளை அருளிச்செய்வாராக.

P. பரிமணப்பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர் சோலை, P. O., திருச்சி ஜில்லா.

## BOTANY

## தாவர சாஸ்திரம்

### தாவரத்திற்கு வேண்டிய உணவு

(முன்தொடர்ச்சி பக்கம் - 192).

பிள்ளைகளே! நாம் தினந்தோறும் இந்தத் தொட்டியிலிருக்கும் வெண்டைச் செடிக்குத் தண்ணீர் ஊற்றிக் காப்பாற்றி வருகிறோம். இந்தத் தொட்டியிலிருக்கும் கத்தரிச் செடிக்குத் தண்ணீர் ஊற்றாமல் அசட்டையா யிருந்தோம் அல்லவா? தினந்தோறும் தண்ணீர் ஊற்றிக் காப்பாற்றின செடி எவ்வளவு செழுமையா யிருக்கிறது. பார்ப்பதற்கு எவ்வளவு நேர்த்தியா யிருக்கிறது. தண்ணீர் விடாமல் இருந்த செடி வாடி வதங்கி, செத்துப் போயிற்றல்லவா? ஏன் செத்துப்போயிற்று? தண்ணீர் விடாததினாலேயே. செடி பிழைத்திருப்பதற்குத் தண்ணீர் உதவ வேண்டியது அவசியமெனத் தெரிகிறது. தண்ணீர் நாம் ஏன் விட வேண்டும் என்பதைப்பற்றித் தெரிந்துகொள்வோம். பிள்ளைகளே! இந்தத் தொட்டியிலுள்ள மண்ணைக் கொஞ்சம் எடுத்து இந்த தம்ளரில் போடுங்கள். இதில் தண்ணீர் நிறையவிடுங்கள். இந்தக் குச்சியைக் கொண்டு நன்றாய்க் கலக்குங்கள். சரி, கொஞ்ச நேரம் அசைக்காமல் தம்ளரைப் பிடியுங்கள். இப்போது நீங்கள் எல்லோரும் கவனியுங்கள். தண்ணீர் முன்னே கலங்கி யிருந்தது. இப்போது வரவரத் தண்ணீர் தெளிந்துகொண்டு வருகிறது. தண்ணீர் தெளியத் தெளிய அடியில் மண் தங்குகிறது. இப்போது மண் எல்லாம் அடியில் தங்கிவிட்டது. இந்த மண் எல்லாம் ஏன் அடியில் தங்கிவிட்டது. கரையாததினாலேயே அடியில் தங்கிவிட்டது. இதைப்போல் கரைபடாத வஸ்துக்கள் இரண்டு சொல்லுங்கள். சாக்கு, மாவு. சரி, இந்த மண்ணில் அடியில் தங்கியிருக்கிற பாகம் மாத்திரம் கரையவில்லை. ஆனால் இந்த மண்ணில் கலந்துள்ள வஸ்துக்கள் ஏதாவது கரைந்திருக்கிறதா என்று பரிசோதனை செய்வோம். இப்போது இந்தத் தெளிந்த தண்ணீரை மையொத்தும் காகிதத்தினால் வடிகட்டுவோம். இந்த வடிகட்டின ஜலத்தை ஒரு கோப்பையில் ஊற்றி இந்த விளக்கின்மேல் வைத்துக் காய்ச்சுவோம். இங்கே கவனித்துப் பாருங்கள். தண்ணீர் எல்லாம் ஆவியாகப் போகின்றது. சரி, இப்போது பாருங்கள். தண்ணீர் எல்லாம் வற்றிப்போயிற்று. அடியில் ஏதோ தங்கியிருக்கின்றது. இது என்ன? இங்கே இந்தக் கோப்பையில் படிந்திருக்கிற வஸ்துவைத்தான் தண்ணீர் கரைத்தது. இந்த வஸ்துதான் செடிக்கு ஆகாரமாகும். இதைத்தான் வேர் தினந்தோறும் கிரகிக்கிறது. பிள்ளைகளே செடிக்கு வேண்டிய உணவு பூமியில் மண்ணோடு கலந்து இருக்கின்றது. அந்த உணவு கெட்டியாய்க் கல்போ லிருக்கிறது. கெட்டியா யிருக்கிற உணவு நாம் ஊற்றுகிற தண்ணீரினாலேயோ, அல்லது மழையினாலேயோ கரையவேண்டும். உணவு கரைந்தால் தான் வேர் அவ்வுணவைக் கிரகிக்கும். இந்தத் தொட்டியில் செடிக்கு வேண்டிய உணவு ஏராளமாக இருந்தும் அவ்வுணவு கரைபடாததினாலேயே



162001

செடி தனக்கு வேண்டிய உணவை இழுத்துக்கொள்ள முடியாமற் போயிற்று. இப்போது செடிக்கு வேண்டிய உணவு பூமியி லிருப்பதாகத் தெரிய வந்தது.

பிள்ளைகளே! இன்று மழை நன்றாய்ப் பெய்திருக்கிறது. சற்றுத் தோட்டத்திற்கு வாருங்கள். இங்கே காடுபோல் முளைத்திருக்கிற இந்த பூண்டை அடியோடு கடப்பாரையைக் கொண்டு பெயர்ப்போம். மண்ணை எல்லாம் நன்றாய்க் கழுவி விடுவோம். இப்போது இதன் வேரைப் பாருங்கள். எவ்வளவு வேர் ஒன்றா, இரண்டா, அநேகம். எவ்வளவு மெல்லியதா யிருக்கின்றன. பூமியில் மண்ணோடு கலந்திருக்கும், தாவரத்திற்கு வேண்டிய ஆகாரம் எல்லாம் இவ்வேரின் மயிர்போன்ற நுண்ணிய பாகங்கள் மூலமாய்த்தான் செல்ல வேண்டும். இந்த மண்போன்ற நுண்ணிய பாகமாகிய இந்த வேரை இக் கத்தியால் கொஞ்சம் இலேசாகச் சீவி ஒரு துளி அளவு இந்தப் பூதக்கண்ணாடியின் அடியில் வைக்கிறேன். பாருங்கள். என்ன தெரிகிறது? நிறைய அறைக ளிருப்பதாகத் தெரிகிறது. சரி, உங்கள் கண்ணுக்குத் தெரிந்தாற் போல் சித்திரம் எழுதுங்கள். எழுதினீர்களா? சரி, இப்போது நீங்கள் எழுதின சித்திரத்தை நான் இந்தக் கரும் பலகையில் எழுதுகிற சித்திரத்தோடு ஒத்திட்டுப் பாருங்கள். ஒரு ஊசியின் முனையளவு வேரில் எத்தனைத் துவாரங்க ளிருக்கின்றன. பிள்ளைகளே! இந்த தம்ளரில் தண்ணீர் நிறைய இருக்கிறது. இந்த மை யொத்தும் காகிதத்தை இதில் நனைக்கிறேன் பாருங்கள். என்ன கவனிக்கிறீர்கள்? தண்ணீர் மை யொத்தும் காகிதத்தில் ஏறிக் கொண்டு போகிறது. தம்ளரில் இருக்கிற தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்துகொண்டே வருகிறது. இதற்குக் காரணம் என்ன? மை யொத்தும் காகிதத்தில் அநேக துவாரங்களிருப்பதினாலேயே. சரி, இப்போது இந்த தம்ளரில் முக்காற் பாகம் தண்ணீர் இருக்கிறது. இதோ வாரமாக வெயிலிற் காய்ந்த இந்தச் செடியின் வேரைத் தண்ணீருக்குள் வைப்போம். கொஞ்ச நேரம் பொறுத்தும் பார்க்கலாம். இதற்குள் கற்பலகைகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

இதைப்போல் ஒரு சித்திரம் வரையுங்கள். சித்திரம் வரைந்தாய்விட்டதா? பலகைகளை உள்ளே வையுங்கள். இப்போது தம்ளரில் தண்ணீர் எவ்வளவு இருக்கிறதென்று கவனியுங்கள். தம்ளரில் தண்ணீர் முன்னிருந்ததைவிடக் குறைந்திருக்கிறது.



ஏன்? வேர்களில் அநேக துவாரங்க ளிருப்பதினாலேயே தண்ணீரை எல்லாம் வேர் கிரகித்திருக்கின்றது. வேர்கள் தண்ணீரை இழுத்துக்கொண்டிருக்கின்றன அல்லவா? சரி, நாம் இதுவரையில் ஆராய்ந்தறிந்த விஷயங்களின் சுருக்கத்தை இங்கே எழுதுவோம்.

1. செடிக்கு வேண்டிய உணவு பூமியில் கலந்து இருக்கிறது.
2. அந்த உணவு கெட்டியா யிருக்கிறது.
3. உணவு கெட்டியா யிருக்கும்போது அவ்வுணவைச் சிறு செடிகள் கிரகிக்க முடியாது.
4. அந்த உணவு கரையத் தண்ணீர் விடவேண்டும்.
5. நாம் ஊற்றுகிற தண்ணீர் அந்த உணவைக் கரைக்கிறது.
6. செடி அவ்வாறு கரைந்த உணவைக் கிரகிக்கிறது.

M. RAMAKRISHNAN,
*Assistant,*
*Govt. Panchama Training School,*
*Madras.*

# NATURE STUDY LESSON

# இயற்கைப் பொருட்பாடம்

## How Animals defend themselves.

## மிருகங்கள் ஆபத்துக்காலத்தில் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் விதம்.

ஒரு காலத்தில் அங்கிலேய தேசத்தை வேற்றரச னொருவன் ஆளும்படி நேர்ந்தது; அவன் "மாடில்டா" என்னும் ஒரு மாதைச் சிறைப்படுத்தி ஒரு கோட்டையில் அவளை அடைத்துவிட்டான்; அம்மாது அக்கோட்டையிலிருந்து தப்பித்துக்கொண்ட விதம் அதிக சாமர்த்தியமானது; வாயில்லாத சந்துக்கள் தங்களுக்கு இயற்கையாய் ஏற்பட்ட விரோதிகளிடமிருந்து உயிர் தப்பித்துக் கொள்ளும் உபாயத்தை நன்கு அறிந்தவளாதலால், தானும் அவ்வுபாயத்தை அநுசரித்தாள்; அப்போது உறைபனி படிந்து நிலம் வெள்ளை உடை உடுத்ததுபோ லிருந்தது; மூன்று போர்வீரர்கள்

பெரிய வெள்ளைப்போர்வை ஒன்றையெடுத்துக்கொண்டு, யாருக்குந் தெரியாமல் கோட்டைக்குள் புகுந்து, அடைபட்டிருந்த "மாடில்டா" வின் உருவத்தை, வெள்ளை உடையால் மறைத்துக்கொள்ளும்படி செய்தனர்; அவர்களும் வெள்ளை உடைகளை உடுத்திருந்ததினால் அம் மாதோடு கோட்டையை விட்டுப் புறம்போந்தனர்; கோட்டை அலங்கத்தைச் சுற்றி இடையிடையே கண்கொட்டாமல் காவல்செய்யும் பாராக்காரர்களிருந்தும், இச்சிறு கூட்டத்தார் அவர்கள் கண்ணிற்படாமலே பனி நிறைந்த நிலத்தின்மேலேயே நடந்து தப்பித்துக்கொண்டார்கள்; இவர்கள் கறுப்புள்ள ஆடையைத் தரித்திருந்திருப்பார்களாயின், காவற்காரருடைய பார்வைக்குத் தப்பி வந்திருக்கமாட்டார்கள்.

அநேக மிருகங்கள் இவ்வண்ணமே தங்கள் சத்துருக்களிடமிருந்து தப்பித்துக்கொள்ளுகின்றன. ஒரு பாலத்தின்மேல் நின்று அடியில் ஓடும் ஜலத்தைப் பார்த்தால், மீன் நீந்துவது நன்றாய்த் தெரியாது; நீரின் நிறத்தை மீன்கள் ஒத்திருப்பதால் கண்டுபிடிப்பது கஷ்டம். மீன்களின் முதுகில் அநேக புள்ளிகளைப் பார்க்கலாம்; இவைகள் தங்களுடைய சத்துருக்களிடமிருந்து தப்பி ஓடுவதற்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. வரால்மீன் சேற்றோடு சேறாய்க் கருநிற மடைந்திருப்பதால், கண்ணிற்கு அகப்படாது. அநேக காட்டு மிருகங்களின் போர்வையில் புள்ளிகள் உண்டு; இவைகள் தங்கள் பாதுகாப்பிற்காகவே ஏற்பட்டிருக்கின்றன. புலி தான் ஒளித்திருக்கும் புல் பூண்டின் நிழலின் நிறத்தை அடைந்திருப்பதால், பதுங்கியிருந்து தன் இரையைச் சுலபமாய்ப் பிடிக்கவும், வேட்டைக்காரர் கண்ணில் அகப்படாமலிருக்கவும் ஏதுவாயிருக்கிறது.

பெரும்பாலும் அநேக மிருகங்கள் அபாயம் வந்தபோது ஓடுவது வழக்கம்; ஓடமுடியாதவைகள் நின்ற நிலையிலிருந்தே சத்துருக்களைத் தம்மாலியன்றவரைக்கும், கொம்பினாலாவது, நகங்களினாலாவது, பற்களினாலாவது எதிர்க்கின்றன. மனிதர்க்குள் ஒருவருக்கொருவர் கைகலந்து சண்டையிடும்போது முஷ்டியினால் குத்திக்கொள்ளுவதைப் பார்த்திருக்கலாம்; நம்முடைய உடம்பில் எதிரியின் அடிகள் படாதிருப்பதற்கு, நமக்கு முஷ்டி ஓர் வித ஆயுதம்போல் பிரயோசனப்படுகின்றது: மல்லர்கள் அநேகர் முஷ்டி யுத்தமே ஜீவனோபாயமாகக் கருதி, அவ் வித்தையைக் கையாடுகின்றனர்; இது சரியன்று. சத்துருக்களிடமிருந்து நம்-



மைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கு நமக்கு முஷ்டி மிக்க இன்றியமையாததாயிருப்பதுபோல மிருகங்களுக்கும் கொம்புகளும், தந்தங்களும், குளம்புகளும், பற்களும் பிரயோசனப்படுகின்றன. சென்னையிலுள்ள மிருகக்காட்சியைப் போய்ப் பார்த்தீர்களானால், காண்டாமிருகம் உங்கள் கண்ணிற்குத் தென்படாமல் போகாது; அதன் மேல்தாடையிலிருந்து தடித்து நீண்டு வளைந்த ஒரு கொம்பு உண்டு; இதனால் அச்சமின்றி மூர்க்கமாய்ச் சண்டையிடும். காட்டுப் பன்றி தன் வக்கிரதந்தத்தால், எதையும் எதிர்த்துக் குத்திக்கிழித்துத்தள்ளும். சில மான்களுக்குக் கவைப்பட்ட கொம்புகளுண்டு; கிளைகளாக இருக்கும்; ஒன்றோடொன்று சண்டையிடும்போது கொம்புகள் குறுக்காக மாட்டிக்கொண்டு, பூட்டுப்போல் ஒன்றினில் ஒன்று அகப்பட்டுக்கொண்டு, விடுவித்துக்கொள்ள முடியாமல், இரண்டும் உயிர் துறந்திருப்பதை வேடர் பார்த்திருக்கிறார்கள். மான்கள் முகத்தோடு முகம் வைத்து முட்டிக்கொண்டும், முன்னங்கால்களினால் ஒன்றை ஒன்று உதைத்துக்கொண்டும் சண்டையிடும். கட்டுக்கடங்காத காளையாடு ஒன்று வெருண்டு ஓடும்போது, தனக்கெதிர்ப்பட்ட குதிரையின் விலாவைக் குத்திக் கிழித்ததைப் பார்த்திருக்கிறார்கள். சிங்கம், புலி, முதலிய பூனை இனத்தைச் சேர்ந்தவைகள், எதிரிகளை நகங்களால் கிழித்துக் கொல்லுகின்றன; நாய்களும், எலிகளும் பற்கள் இல்லாவிட்டால் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியா. குதிரையும் மாடும் தங்களை வருத்தும் ஈ முதலிய அற்ப சத்துருக்களை வாலினால் அடித்தோட்டுகின்றன. சத்துருவைக் கண்டு ஓடமுடியாத முதலை, ஆமை, நண்டு முதலிய பிராணிகளுக்குத் தடித்த கவசமுள்ள ஓடில்லாவிட்டால் அவை தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதல்லவா? ஆமையோட்டின்பேரில் வண்டி ஓடினாலும் அது நசுங்கவே நசுங்காது.

ஒரு ஓணான், செடியிலாவது மரத்திலாவது இருக்கும்போது தன்னைப் பிடிக்க அல்லது இம்சிக்க வருகிற சத்துருக்களின் அரவத்தைக் கேட்டதும், தான் அந்தச் சமயத்தில் இருக்கும் செடியின் பட்டையைப்போலாவது இலையைப்போலாவது ஒரு நொடியில் நிறங்கொண்டு அசைவற்று அந்தச் செடியின் ஒரு பாகமாய்த் தானிருப்பதுபோலத் தோன்றும்; அபாயம் நீங்கினதும் தனது இயற்கை உருவத்தை எடுக்கும். எந்தெந்த நிலத்திலே இரை தேடி வசிக்கின்றனவோ, அந்தந்த நிலத்தின் நிறத்தை

உடனே வகித்துத் தம் சத்துருக்களுக்குத் தம் உரு வெளிப்படாதபடி தப்பித்துக்கொள்ளுகின்றன.

அந்தந்த மிருகங்களின் வாழ்க்கைக்குத் தக்கபடி அங்க லட்சண விசித்திரங்களை யமைத்தும், ஆபத்து நேரிட்ட காலத்தில் தப்பித்துக்கொள்வதற்கே உபாயங்களை அவைகளுக்குக் கற்பித்தும் வருகிற பேரறிவாளராகிய கடவுளின் மகிமையை என்னென்றுரைக்கலாம்!

M. S. SABAPATI.

# ELEMENTARY SCHOOL ORGANIZATION

## கீழ்தர கிராம பாடசாலை ஏற்பாடு

(முன் தொடர்ச்சி பக்கம் - 22 வாலியம் - 14 நம்பர் - 1.)

6. தோற்றம் — இவ் விஷயங்களைப்பற்றி ஒரு அணா விலையுள்ள புஸ்தகம் மெஸ்ஸர்ஸ் வி. குமாரஸாமி நாயுடு அண்ட் ஸன்ஸ் பிரசுரம் செய்திருக்கிறார்கள். அப் புத்தகத்தைப் பார்த்தால் அநுபவத்துக் கெட்டிய விஷயங்கள் அநேகம் தெரியவரும்.

உபாத்தியாயர் எப்போதும் ஏராளமான காய்கறிச் செடிகள் போட்டிருந்தால் பெற்றோர்கள் பிள்ளைகளை வேலை வாங்குவதாகக் குற்றஞ் சொல்ல இடமுண்டு. பரீக்ஷாதிகாரிகளிற் சிலர் கூட இவ்வித அபிப்பிராயம் கொள்ளலாம். இதற்காகச் சும்மா இருந்துவிடலாமோ என்றால் அப்போது ஏன் தோட்டம் வைக்கப்படவில்லை யென்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிவரும். பரீக்ஷாதிகாரிகளுக்குத் திருப்திகரமாகவும் பெற்றோர்களுக்கும் படிப்பினைத் தரத்தக்க சோதனைக்கு இடமுண்டாக்கச் சில செடிகளையும், மல்லிகை, முல்லை, ரோஜா, செவ்வந்தி, அரளி முதலிய செடிகளையும் மருந்துக்கு உபயோகமாகும் சில செடிகளையும் கறிகாய்த் தோட்டமென்று நினைக்க இடந்தராத சில வருஷாந்தரப் பயிர்களையும் பயிர்செய்து வருவது உத்தமம்.

7. விளையாட்டிடம் — நமது நாட்டில் இது ஒரு புதுமை. பிள்ளைகள் தெருக்களிலோ, நதி முதலிய பொது காலி இடங்-



களிலோ விளையாடுவது வழக்கம். இதைப் பெற்றோர் கண்டால் பிள்ளைகளைக் கண்டிக்கும்படி உபாத்தியாயரிடத்தில் அனுப்புவது வழக்கம். பாடசாலையிலேயே பிள்ளைகள் விளையாடுவதென்றால் அவர்கள் மனம் எப்படிச் சகிக்கும்? பிள்ளைகள் எப்போதும் புஸ்தகத்தைப் படிப்பதுதான் வேலையென்று நினைக்கிறார்கள். இளமையில் தேகம் பலமடைய தேக அப்பியாசம் அவசியம் என்னும் நீதியை அவர்கள் உணருகிறதில்லை. அப்படிக் கட்டுப்பாடு செய்யும் பிள்ளைகள் பெற்றோர் தலை மறைந்ததும் விளையாட ஓட்டம் பிடிக்கிறார்கள். அங்கே ஒருவர் கட்டுப்பாடுமின்றி விளையாடுவதால் சண்டை சச்சரவுகள் உண்டாகலாம். பிறகு பெற்றோர்கள் அதை ஏற்றுக்கொண்டு போகவேண்டிவரும். யாதொரு நிபந்தனையுமின்றி அப்படி விளையாடுவதைவிடச் சில குறிப்பிட்ட விதிகளுக்கிணங்கப் பாடசம்பந்தமாகவோ, அல்லது தேகாப்பியாசத்தின் பொருட்டோ பிள்ளைகளைப் பாடசாலையிலேயே விளையாடும்படி விட இடம் ஏற்படுத்துகிறோம். இதுதான் பாடசாலையில் விளையாட்டிடமென்பது.

முன்னமேயே பாடசாலைக்கு இடம் ஏற்படுத்துங் காலத்தில் மனையைவிட ஐந்துபங்கு காலி இடம் வேண்டுமென்றோமல்லவா? அதில் கொஞ்ச இடத்தில் தோட்டத்திற்கு இடம் செய்து மீதி யிடத்தை விளையாட்டிடமாக உபயோகிக்கவேண்டும். இது நிழலுள்ளதாக இருந்தால் பகல் நேரங்களில் கூடப் பிள்ளைகள் அங்கே தங்கியிருக்க உதவும் நிழலுக்காக நாலுபுறங்களிலும் மரங்கள் வைத்துப் பயிர் செய்யச் சௌகரியப்பட்டால் செய்யலாம். உள்ளிருக்கும் ஆள் தெரியாதபடி நாலுபுறத்திலும் சுவர் வைப்பது நல்லது. இந்தத் தரை மேடு பள்ள மில்லாமல் சமதரையாக இருக்கவேண்டும். தரையில் நல்ல மணல் பரப்பி அந்த மணல் கெட்டுப்போனால் அடிக்கடி புதிப்பிக்கவேண்டும். தரை மேடு பள்ளமானால் அடிக்கடி மராமத்து செய்யவேண்டும். காகிதங்களையோ, குப்பை கூளங்களையோ இந்த இடத்தில் போடாமலும், மலஜலங்களைக் கழித்து அசுத்தஞ் செய்யாமலும் பத்திரமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

விளையாட்டிடத்தில் ஒருவரோடொருவர் கலந்து தாராளமாகப் பேசவோ, வியவகாரங்கள் ஒழுங்காக நடத்தவோ இடமுண்டு. பாடசாலையில் பிரியமும் ஒருவர்க் கொருவர்க்குள்ள சிநேகமும் அதிகப்படும். இப்படித் தயாரான பிள்ளைகள் வயது

வந்ததும் தேச சுதந்தரங்களை அறிந்து உலக வியவகாரங்களைச் செவ்வையாய் நடத்த யோக்யதை யுள்ளவராவார்கள்.

8. தண்ணீரும் ஜலாதாரமும் — கிராமாந்தரப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்குத் தாகம் எடுத்தாலோ வேறு தண்ணீர் அவசிய மிருந்தாலோ அவரவர் வீட்டுக்குப் போய் வருவது வழக்கம். அப்படி அடிக்கடி போய்வரும்படி விட்டால் பெற்றோர்களுக்கு அருவருப்பாயிருக்கும். பாடசாலை, குளம், வாய்க்கால், ஆறு முதலிய இடங்களுக்குச் சற்றுச் சமீபத்திலிருந்தால், பிள்ளைகளை அங்கே போகச்சொல்வதுமுண்டு; இதுவும் சரியல்ல. பிள்ளைகள் அந்த நீர்நிலைகளில் அதிகமாக விளையாடித் துணிகளை நனைத்துக்கொண்டு தேக சௌக்கியத்தைக் கெடுத்துக் கொள்வார்கள். பாடசாலை, உபாத்தியாயர் வீட்டிலேயே யிருந்தால் அவர் பிள்ளைகளுக்குத் தாகத்திற்குத் தண்ணீர் கொடுப்பார். பாடசாலையில் தோட்டம் வைக்கவேண்டுமென்று பன்முறையும் கூறியுள்ளோம். அச் செடிகளுக்குத் தண்ணீர் வேண்டியது அவசியமல்லவா? மாணாக்கர்களுக்கும், செடிகளுக்கும் தண்ணீர் வேண்டியது அவசியமாதலால் பாடசாலையிலேயே ஒரு மூலையில் ஒரு கிணறு இருப்பது நலம். இக் கிணற்றுக்குக் கைப்பிடிச் சுவரும் தண்ணீர் இறைக்க ராட்டினமும் இலேசான வாளியும், கயிறும் இருக்க வேண்டும். தண்ணீர் நிரப்புவதற்கு ஒரு கல் தொட்டியும் சில மட்பானைகளும் வேண்டும். கிணறு இல்லாவிட்டாலும் இத்தொட்டியும் பானைகளும் அவசியம். குடிக்க உபயோகிக்கும் தண்ணீரைப் பானைகளில் போட்டு மூடிவைக்கவேண்டும். இந்தப் பானைகளை நாற்றமெடுக்காதபடி அடிக்கடி வெய்யிலில் காயவைக்கவேண்டும். மற்ற உபயோகத்துக்கு வேண்டிய தண்ணீரைத் தொட்டியில் நிரப்பிவைக்கவேண்டும். இதைப் பெரிய பிள்ளைகள் செய்யச் சொல்லலாம். எல்லாப் பிள்ளைகளையும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வெளியே விட்டு ஒரு குறிப்பிட்ட பையனைக் கைகளைச் சுத்தஞ்செய்துகொள்ளச் சொல்லி ஒரு சுத்தமான பாத்திரத்தால் பானையிலிருந்து தண்ணீரை முகந்து மற்றப் பையன்களுடைய பாத்திரத்தில் விடவேண்டும். ஏனெனில், ல்லாப்ள பிள்ளைகளும் இஷ்டம்போல் கையைச் சுத்தமில்லாமல் பானைக்குள் போடுவதால் பலவித வியாதிகள் பரவ இடமுண்டாகும். மற்ற உபயோகங்களுக்கு வேண்டிய தண்ணீரையும் கூடியவரையில் ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும். இப்படிச் செய்வதால்



பிள்ளைகளுக்குச் சுத்தம் என்பது நிதர்சனமாகக் காட்டப்படும். பிறர்க்கு உபகாரம் செய்யவேண்டுமென்பதும், வியாதிகள் பரவவொட்டாமல் தடுக்கும் வழிகளும் அனுபவ சித்தமாகத் தெரியும். அவரவர்கள் பொறுமையாகக் காத்திருந்து தங்கள் காரியத்தை நடத்திக்கொள்ள வேண்டுமென்ற நீதியும் ஏற்படும். குழாய் இருக்கும் பட்டணங்களில் பிள்ளைகளை நேரில் குழாயிலேயே தண்ணீர் குடிக்கச்சொல்லலாம் அல்லது மேற் குறித்த விதிகளை அநுசரிப்பது நலம்.

P. C. KRISHNA AYYAR, B.A., L.T.,
*Ist Assistant. Govt. Trg. School,*
*Dindigul.*

## DIFFERENT SECTS OF PEOPLE AND THE IMAGES OF THEIR GODS

## நானாவித ஜாதியாரும் அவர்கள் வழிபடு கடவுள் மூர்த்தங்களும்

உலகத்திலுள்ள *சேதனாசேதனங்கள் யாவற்றுள்ளும் மானிடன் சிறந்தவனென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆயினும் இன்ன ஹேதுக்களினாலே மானிடன் உலகத்திலுள்ள யாவற்றினும் சிறந்தவனாகின்றா னென்புதைப்பற்றிச் சாஸ்திரீகர்கள் வெவ்வேறு அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். சகல ஜீவராசிகளினும் மானிடன் அறிவு விசேஷத்தினாலேயே உயர்ந்தவனாகின்றா னென்பது சில சாஸ்திரிகளுடைய கொள்கையா யிருக்கின்றது. அவர்கள் அங்ஙனங் கொள்வது முற்றும் சரியல்லவென்று நாம் இங்குக் கூறவந்தோ மில்லை. ஆனால் அதற்குச் சில ஆட்சேபனைகளுண்டென்று வேறு சில சாஸ்திரிகள் கூறுகின்றார்க ளாகையால் அவ்வாட்சேபனைகளை யெடுத்து இங்குச் சிறிது காட்டுவோம். மனிதனுடைய ஆற்றலில் சதகோடி அம்சத்திலே ஒரு அம்சமும்

* சேதனாசேதனங்கள் — சேதனம் + அசேதனம்
சேதனம் — அறிவுடைய பொருள்
அசேதனம் — அறிவில்லாத பொருள்

பெற்றிராத சிற்றெறும்புகள் தமக்கேற்ற ஆகார வகைகளைத்
தேடும்போதும் அவற்றைத் தேடியபிறகு கொண்டுவந்து ஓரிடத்-
தில் சேமித்து வைக்கும்போதும் அச் சிறு ஜெந்துக்களிடத்து
விளங்கும் பேரறிவின் விசித்திரங்களை நாம் யோசித்துப் பார்க்-
கையில், எல்லா உறுப்புக்களும் பூரணமா யமையப் பெற்று அறி-
வுக்கு ஓர் இருப்பிடமென்று பிரசித்தி யடைந்திருக்கும் மானிட-
ருடைய அறிவு அவ்வற்பப் பிராணிகளில் அறிவுக்கு எவ்-
வளவினது! என்று வியக்கத்தக்கதா யிருக்கின்றது. அவைகளின்
உருவத்தை நோக்க அவைகளிடத்து விளங்கும் புத்திக் கூர்மை-
யையும் முன்யோசனையையுங் கண்டு மானிடராகிய நமக்குட்
சிறந்த மதியூகியும் நாணவேண்டியதல்லவா? இவ்வாறே சிலந்திப்
பூச்சிகள் கூடுகட்டும் விசித்திரத்தையும் தேனீக்கள் தேன்கூட்-
டை யமைக்கும் அற்புதத்தையுங் கண்டு சிற்ப சாஸ்திர மஹா-
பண்டிதனும் வியக்கவேண்டிய தல்லவா?

"வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலந்தி யாவர்க்குஞ் செய்யரிதால்."

என்னும் பிரமாணம் எப்படிப்பட்ட விவேகிகளுக்கும் அனுபவ
சித்தமாயிருக்கிற தென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. இவ்வாறு
யானைமுதல் எறும்பீறாகிய அஃறிணைப் பொருள்கள் செய்துவரும்
அளவிறந்த விசித்திரங்கள் ஒருவித அறிவின் காரியமே யாகு-
மானால், மானிட னொருவனே அறிவினால் ஏனைய ஜீவராசிகளைக்
காட்டிலும் மேம்பட்டவனாகின்றானென்று சாதிப்பது எவ்வள-
வும் நியாயவாதத்துக்கு நில்லாது. அது நிற்க, தெய்வபாவனை
மனிதரிடத்து உள்ளபடியினாற்றான் அவர்கள் எல்லா உயிர் வர்க்-
கங்களினும் சிறந்தவராகின்றார்கள் என்று வேறு சில சாஸ்திரி
கள் கூறுநிற்பர். இவர்களுடைய கொள்கை சரியான தென்-
பதற்கு அநேக நியாயங்க ளுள. மானிடராய்ப் பிறந்தவர்கள்
ஒன்றுக்கொன்று எவ்வளவும் சம்பந்த மில்லாத வெவ்வேறு
தூரப் பிரதேசங்களில் உயிர் வாழ்ந்து வெவ்வேறு நடை யுடை
பாவனைகளை அனுஷ்டித்துக்கொண்டு வந்தாரேனும் அவர்கள்
யாவரிடத்தும் தெய்வபாவனை என்னும் ஒன்றுமாத்திரம்
பொதுத்தருமமாக விளங்கிக்கொண்டு வருகின்றது. "ஆவே-
றுருவினவாயினுமாபயந்த பால்வே றுருவினவல்லவாம்" என்ற-
படி பசுக்கள் உருவத்திலும் நிறத்திலும் ஒன்றையொன்று ஒவ்வா-



தனவா யிருக்கினும் அவை யாவும் வெண்ணிறம் பெற்ற பாலையே
தருவதில் ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன. அதுபோல் இவ்-
வுலகத்தில் பற்பல பிரதேசங்களிலே பிறந்து வசிக்கும் பற்பல
ஜாதியார் மற்றெல்லா அம்சங்களினும் ஒருவரை யொருவர் ஒவ்-
வாதவர்களா யிருக்கினும் ஏதோ ஒருவித தெய்வபாவனையைக்
கொண்டிருப்பதில் மாத்திரம் ஒருவரையொருவர் ஒத்திருக்கின்-
றார்கள். தெய்வபாவனைக்குரிய தெய்வ மூர்த்தங்கள் அவரவர்க-
ளுடைய மனதில் வெவ்வேறுபட்டாலும் தெய்வபாவனை மாத்தி-
ரம் அவர்கள் யாவரிடத்தும் ஒருபடித்தாய் விளங்கிக்கொண்
டிருக்கின்றது. இதனால் தெய்வபாவனை மானிட மனோதத்துவப்
பொதுலட்சணமென்று தெரியவருகிறது.

ஏனைய ஜீவராசிகளினின்றும் மானிடரை வேறுபிரித்து
மானிடன் என்னும் பதத்துக்குப் பொருளுரைக்கப் புகுந்த சாஸ்-
திர விற்பன்னர்கள் "மானிடன் என்றால் தெய்வபாவனையுள்ள ஓர்
பிராணி" என்று கூறியிருக்கின்றார்கள். நாகரிகமென்னும் சூரிய
கிரணம் சற்றும் புகப்பெறாமல் மௌட்டியமென்னும் அந்தகாரத்-
தில் அமிழ்ந்துகிடக்கும் சில ஜாதியார் சில தீபாந்திரங்களிலே
இருக்கின்றார்களென்றும், அவர்களிடத்துத் தெய்வபாவனை எவ்-
வளவுங் கிடையாதென்றும் பூவலஞ்செய்து அங்கங்குள்ள விசித்தி-
ரங்களைக் கண்டறிந்த சிலர் சொல்லுகின்றார்கள். ஆனால் அவர்கள்
அங்ஙனங் கூறுவது சரியா அல்லவா என்பதை அறிய அவாக்
கொண்ட சில மனோதத்துவ லட்சண சாஸ்திரிகள் தீர்க்க ஆராய்
ச்சி செய்தபின்பும், அப்படிப்பட்ட மிலேச்சர்களுடைய நடை
யுடை பாவனைகளையும் பாஷை முதலியவற்றையும் நேரில் கண்-
டறிந்தபின்பும் அத்தகைய ஜாதியார் சற்றேறக்குறைய மிருகத்
தன்மையையே கொண்டிருந்தார்க ளென்றும், ஜீவராசிகளுக்குப்
பொதுலட்சணங்களாயுள்ள ஆகாரம், நித்திரை, பயம் முதலிய
குணங்கள் தவிர வேறே மனிதரிடத்து விளங்கவேண்டிய அறிவு
சம்பந்தமான வியவகாரங்கள் எவையும் அவர்களிடத்துத் தோன்-
றவில்லையென்றும் தெரியவந்தது. கரசரணாதி புறத்துறுப்புக்க-
ளின் அமைதியினாலேயே சில ஜீவர்கள் மானிடவர்க்கத்தை சேரா-
ரென்று இதனால் தெரியவருகின்றது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா
முதலிய பிரதேசங்களிலுள்ள சில வாலில்லாக் குரங்குகள் மனி-
தர்களைப்போ லிருக்கினும் அவைகள் மனிதர்களாகா. அவைக-

ளிடத்துத் தெய்வபாவனையுங் கிடையாது. ஆகவே? மானிட
வர்க்கத்தில் சேர்த்து எண்ணப்படத் தக்கவர்களா யிருப்பவர்கள்
யாவரிடத்தும் தெய்வபாவனை இயற்கையில் அமைந்திருக்-
கின்றது. மானிட மனோதத்துவ லட்சணத்துக்குத் தெய்வ-
பாவனை உரியதோர் குணமா யிராவிடில் அது ஆதியில் மானிட-
ரிடத்து எப்படித்தான் உண்டாயது? மனோதத்துவ லட்சணத்-
துக்கு இயற்கையில் உரித்தல்லாத ஒரு குணம் செயற்கையால்
எங்ஙனம் வருதல் கூடும்? ''இல்லது வாராது என்னபட்டும், உள்-
ளது போகாது நம்மை விட்டும்'' என்னும் பழமொழியின் தாற்-
பரியமே இதை நாட்டவல்லது. தெய்வபாவனையானது மனித-
ரிடத்து இயற்கையில் உண்டாகத்தக்க மனோதத்துவ லட்சணப்
பொதுதர்மமானாலு மாகுக; அவ்வாறல்லாமல் மானிடன் தன் கண்
ணுக்குப் புலப்படும் சகல விசித்திரங்களையும் அவைகளின் ஒழுங்-
கையுங் கண்டு இச் *சடப்பொருள்கள் தாமே இவ்வா றியங்கா,
இவற்றை யியக்கவல்ல தனிமுதல் ஒன்று இருத்தல் வேண்டு-
மென்று தன் விவேகத்தினால் ஊகித்து நிச்சயித்ததனா லுண்டாயின
தாயினு மாகுக, ஆதியில் எவனோ ஒருவனுடைய மனதில் யாது
காரணத்தினாலோ உதித்துப் பிறகு வம்சாவளியாய்ப் பல ஜாதி-
யாருடைய மனதிலும் தோன்றிய ஓர் தோற்றமாயினு மாகுக,
வேறு எதுவாயினு மாகுக. மானிடவர்க்கத்தைச் சேர்ந்த சகல
ஜாதியாரிடத்தும் தெய்வபாவனை பொதுவாய் விளங்கிக்கொண்
டிருக்கின்ற தென்பதைப்பற்றி மாத்திரம் யாவரும் ஒரேவிதமான
அபிப்பிராயம் கொள்ளவேண்டியதா யிருக்கின்றது.

ஆகவே, அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய் நித்திய-
மாய் நிர்மலமாய் நிஷ்களமாய் நிராமயமாய் மனோவாக்குக் கெட்-
டாததாயுள்ள தனி முதற்கடவுளை உலகத்திலுள்ள பற்பல ஜாதி-
யாரும் பற்பல மூர்த்தங்களாகப் பாவித்து வழிபட்டு வருகின்-
றார்கள். அந்தந்த மதஸ்தர்கள் தாம் தாம் தியானித்து வழிபட்டு-
வரும் தெய்வ மூர்த்தங்களின் லட்சணத்துக் கேற்றபடி அவரவர்-
களுடைய குணங்களும் செய்கைகளும் மாறுபடுகின்றன. ஒவ்-
வொரு மதஸ்தனும் தான் வழிபடும் கடவுள் மூர்த்தத்துக்கு
அவன் அதிக விசேஷமாகக் கொண்டிருக்கும் லட்சணங்களை
யெல்லாம் ஆரோபித்து அம்மூர்த்தத்தை அவன் தியானித்து

* சடப்பொருள் — அறிவில்லாத பொருள்



வருகையில் அப்பாவனையின் விசேஷத்தினால் அம்மூர்த்தத்தின்
லட்சணங்கள் யாவும் அவனிடத்து நாளாவர்த்தியில் அமைகின்-
றன. இது மானிட மனோதத்துவ லட்சணம். உலகத்தில் நாம்
யாரை அதிகமாக வியந்து சதா அவருடைய குணங்களைப் புகழ்-
ந்து வருகின்றோமோ அப்படிப்பட்டவருடைய குணகுணங்கள்
நம்முடைய மனதில் நாளாவர்த்தியில் படிந்துவிடும். ''அடுத்தது
றன்மை யான்மா'' என்று மேலோர் கூறிய முதுமொழியே இவ்-
வுண்மைக்குச் சான்றாகும். ஈசுவரனிடத்து என்னென்ன குண
விசித்திரங்க ளமைந்திருப்பதாக நினைத்து நாம் அவரைத் தியா-
னித்துக்கொண்டு வருகின்றோமோ அப்படிப்பட்ட குணங்களெல்-
லாம் நம்மிடத்துக் கூடியவரையில் அமையவேண்டு மென்னுங்
கருத்தை நாம் கொண்டவர்களா யிருக்கின்றோம். கடவுளை நாம்
குறைவிலா ஜீவகாருண்ய சொரூபியென்று நினைத்து அவரைத்
தியானித்து வரும்போது நாமும் பிற உயிர்களிடத்து ஜீவ-
காருண்ய முடையவர்களா யிருக்கவேண்டு மென்கின்ற எண்ணம்
நம்முடைய மனதில் உதிக்கின்றது. இவ்வாறே ஏனைய குணங்-
களின் விஷயமாகவும் உலகத்திலுள்ள பற்பல ஜாதியாரைப்
பற்றியும் அவர்கள் வழிபட்டுவரும் தெய்வ மூர்த்தங்களைப் பற்றி-
யும் அப்படிப்பட்ட வழிபாட்டினால் அவர்களுக் குண்டாயிருக்கும்
குணகுணங்களைப் பற்றியும் இவ்விடத்தில் சற்றே சுருக்கிக் கூறு-
வோம்.

ஒருகாலத்தில் உலகமுழுவதையும் தன்னடிப்படுத்தித் தனி
யரசுபுரிந்துவந்த ரோமாபுரியைக் கைப்பற்றி அதன் பெருமை-
யைச் சிதைத்த ஸிதியா தேசத்தவர்களும் ஐரோப்பாகண்டத்தி-
லுள்ள சில உத்தரப் பிரதேசவாசிகளாகிய ஜாதியாரும் வழிபட்டு-
வந்த கடவுள் மூர்த்தங்கள் மஹாகோரமானவை. அநேக சிற்-
றரசர்களுடைய உயிரைக் கொன்று பூததயை இம்மியும் அமையப்
பெறாமல் அன்னியஜாதியருடைய உதிரவெள்ளத்தில் நீந்துவதே
தம்முடைய பிறவியினாலாகிய பெரும்பயனென்றெண்ணி இறுதி-
யில் அமர்க்களத்தில் மரித்த சுத்தவீரர்களே மறுமையில் கட-
வுளர்களாகின்றார்க ளென்னும் மதசித்தாந்தத்தை அந்த மிலேச்ச
ஜாதியார் கொண்டிருந்தார்கள். அவ்வாறு அளவிறந்த உயிர்களை
வருத்திப் போர்க்களத்தில் மாண்டவீரர்களையே அந்த ஜாதியார்
வழிபட்டு வந்தபடியினால் அத்தகைய குணங்கள்யாவும் அவர்க-
ளிடத்தில் படிந்தன. நீராப்பிணியினால் ஒருவன் வருந்தி நாளா-

வர்த்தியில் தேகமெலிந்து சாதாரணமா யிறந்துபோவானாயின் அப்படிப்பட்டவனுக்கு மோட்சசாம்பிராச்சியம் கிடையாதென்பது அந்த ஜாதியாருடைய மதசித்தாந்த மாகையால் அவர்கள் முற்றும் ஜீவகாருண்ய மற்றவர்களாகிப் பிற உயிரை இம்சிப்பதே தம்முடைய பெருங் கடமையென்று கருதிவந்தார்கள். இவ்வுலகத்தில் எவன் பெரும்பகைவனாயிருந்து போராடுகின்றானோ அப்படிப்பட்டவனுடைய கபாலத்தையே பாத்திரமாகக் கொண்டு அதில் அவனுடைய உதிரத்தை வார்த்துச் சதா குடித்துக்கொண்டிருப்பதுதான் ஒருவன் அடையத்தக்க சொர்க்க இன்பமென்று மேற்கண்ட ஜாதியாரைப் போன்ற மற்றும் சில மிலேச்சர்களுடைய மதசித்தாந்தம் கூறுகின்றது. ஆகவே, அப்படிப்பட்டவர்கள் குரோதம் - கோபம் - கொலை - அருளின்மை முதலிய பெருந்துர்க்குணங்களை வகித்தவர்களா யிருந்தார்கள்.

பூர்வத்தில் சித்திரவித்தையிலும் செதுக்குவேலைத் திறத்திலும் மஹாபாண்டித்தியம் பெற்றுப் பிரசித்தி யடைந்தவர்கள் ஈஜிப்ட் தேசத்தவர்கள். அவர்கள் அந்தசாஸ்திரத்தில் அவ்வளவு சிறந்த பண்டிதர்களானதற்குக் காரணம் அவர்கள் வழிபட்டுவந்த கடவுள் மூர்த்தங்களேயாம். அந்த ஜாதியார் பற்பல மிருகங்கள், பட்சிகள், ஊர்வன முதலியவற்றின் உருவங்களையே கடவுள் மூர்த்தங்களாகப் பாவித்து அவற்றைச் சிலைகளிலும் பலகை முதலியவற்றிலும் மிகவும் அழகுபெறச் சித்திரித்து எழுதி அவற்றிற்கு வந்தனை வழிபாடு செய்துவந்தார்கள். இப்படிப்பட்ட உருவங்களே சதா அவர்கள் மனதில் படிந்திருந்த காரணத்தினால்தான் அந்த ஜாதியார் சிற்பசாஸ்திரத்தில் ஆதியில் அவ்வளவு திறமை யடைந்திருந்தார்கள்.

கிரீஸ்தேசத்துப் பிரதானபட்டணமாகிய காரிந்து என்னும் நகரவாசிகள் மன்மதனை உபாசனா மூர்த்தமாகக் கொண்டு வழிபட்டு வந்தார்கள். அதனால் அவர்கள் காமாந்தகாரத்தில் மூழ்கி நாளாவர்த்தியில் மெலிந்து போயினர்.

இந்து தேசத்தில் காளி, துர்க்கை முதலிய கோரமூர்த்தங்களை வழிபட்டு வருபவர்கள் அம்மூர்த்தங்களின் குணங்களைப் பெற்று மஹா கோபிகளாகவும் கொலைப் பாதகங்களுக்கு அஞ்சாதவர்களாகவும் மதுமாம்ச பட்சணிகளாகவும் வன்னெஞ்சர்களாகவு மிருக்கின்றார்கள்.



சைனா தேசத்தில் பௌத்தகுரு மூர்த்தத்தை எவனொருவன் மனமொழி மெய்களினால் சத்தியமாய் வழிபட்டு வருகின்றானோ அவன் பௌத்தகுருவாகின்றான் என்னும் சித்தாந்தம் வழங்கி வருகின்றது.

ஆகையால் எந்தெந்த மூர்த்தங்களாகக் கடவுளை நாம் தியானித்துக்கொண்டு வருகின்றோமோ அந்தந்த மூர்த்தங்களின் குணவிசேஷங்கள் நம்முடைய மனதில் படிந்துவிடுகின்றனவென்பது தெளிவாய் விளங்குகின்றது. ஆனபடியால், ஒவ்வொருவரும் தாம் வழிபடுங் கடவுள் மூர்த்தங்கள் நல்ல லட்சணங்களை யுடையனவாகவும் தம்மிடத்து ஜீவகாருண்யம் முதலிய சற்குணங்களை உண்டுபண்ணித் தம்மை நன்னெறியி லுய்க்கத் தக்கனவாகவு மிருத்தல் வேண்டும். தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எட்டும் சிறந்த குணங்களென்று பெரியோரால் நிச்சயிக்கப்பட் டிருத்தலால் அவற்றைக் கொண்டிருக்கும் யாதொரு மூர்த்தமாகக் கடவுளை வழிபட்டுவரின் நாம் நல்லொழுக்கம்பெற்றுச் சுகஜீவிகளா யிருக்க நேரிடும். கேவலம் ஆபாசமான மூர்த்தங்களைத் தெய்வபாவனையாகக் கொள்ளக் கூடாதென்பதே மனோதத்துவ லட்சண சாஸ்திரிகளின் கருத்து.

## CHILDREN OF DISTANT LANDS

### தூரதேசத்துக் குழந்தைகள்

ஜப்பான் சிறுவர் - சீனச் சிறுவர்

சில வருஷங்களுக்கு முன் ஜப்பான் சிறுவர்களைப்பற்றிச் சில விஷயங்கள் நமது நல்லாசிரியனில் வெளிவந்த விஷயம் பலர் நன்கு உணர்வார்கள். அவற்றை விரைவில் முடிக்குமாறு நண்பர் பலர் விரும்பினர். அதனால் ஜப்பான் சிறுவர்களைப் பற்றியும் சீனச் சிறுவர்களைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் விளங்குமாறு இனிய புஸ்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கின்றோம். இதை வாசிப்பதனால் சிறுவர்களுக்குப் பூகோள விஷயமும் சரித்திர விஷயமும் நல்லொழுக்க விஷயமும் நன்கு புலனாகும். இது தாயார் குமாரனுக்குக் கதை சொல்லும் விதமாக மிக எளிய நடையில் அநேக சித்திரப் படங்களுடன் பெரிய எழுத்தில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. சிறுவர்களுக்கு இன்பமூட்டும் இனிய கதைப் புஸ்தகம் போல்வது. இதனை ஒவ்வொரு பாடசாலையிலும் தவறாமல் உபயோகிப்பார்கள் என்று நம்புகின்றோம். விலை அணா 6.

## QUEEN MARY READERS

### மேரி ராணி வாசக புஸ்தகங்கள்

இப்பெயர்கொண்ட புஸ்தகங்கள் ஒன்றுமுதல் ஐந்துவரை வெளிவந்துள்ளன. இவை ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் பெண்களுக்காகவே ஏற்ற முறையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. நம் இந்திய குடும்பத்துக்கு அவசியமாகத் தெரியவேண்டிய அரிய விஷயங்கள் எளிதாகத் தெரியும்படி கூறப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு இனிய பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நம் இந்திய பெண்கள் இப்புஸ்தகங்களை வாசிப்பதால் பல நன்மைகள் விளையுமென்பதில் தடையில்லை. குழந்தைகளைத் தாலாட்டல், விளையாட்டுக் காட்டல், நலங்கிடும் பாடல்கள் பெரிதும் அழகுடன் விளங்குகின்றன. இவ்வாறு பெண்களுக்கெனத் தனியாக முதல் முதல் வெளிவந்த புஸ்தகங்கள் இவைகளே. உபாத்திமார்கள் யாவரும் வாங்கிப்பார்த்துத் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்துப் பயன்பெறுவார்களென நம்புகின்றோம்.

விலை—I - 2 அ., II - 2 அ. 6 பை., III - 3 அ., IV - 4 அ., V - 5 அ.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெருவு, சென்னை.

28 MAY 1919




மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 14 | 1919ஹ மார்ச்சுமீ | மாதம் 10

## NURSERY RHYMES

### மழலைப் பாட்டு

மழலைப் பாட்டு என்பது சிறுவர் அறிவுக்கும் ஆற்றலுக்குந் தக்கவாறு அவர்கட்கு மனமகிழ்ச்சியைப் பயக்கும் வண்ணம் புலவரால் பாடப்படுவதாகும். உலகத்தில் வாழும் மக்கள் அனைவருக்கும் பாட்டு இன்றியமையாததாக உளது. அஃது எல்லாப் பருவத்துக்கும் வேண்டப்படுவதாகும். இளம் பருவத்துக்கு இசையும் பாடல் சிறுவர்கட்கும் முதுமைப் பருவத்தினர்க்கு அவர்கட்குப் பொருத்தமான பாடல்களும் இருத்தல் வேண்டும். பாட்டில்லாத வாழ்வு இன்பமில்லா வாழ்வாகும்; அது சுவையில்லா உண்டியும் இனிமையில்லாப் பண்ணும் போன்றதாகும். பாட்டு எல்லார் உள்ளத்தையும் இன்ப வெள்ளத்தில் அழுந்தச் செய்கின்றது. அதன் முக்கிய பயன் கேட்போருக்கு

உடனே இன்பத்தைச் செய்வதாகும். அவ்வாறு கேட்டவர் நெஞ்சில் இன்பமுண்டாகும்படி அழகுடன் மனோபாவனையை எழுப்புவதாக உலகப் பொருள்களையும் அநுபவங்களையும் எடுத்து வெளியிடுவதே பாட்டின் நோக்கம். ஆதலின் பாட்டைப்போல் அழகுடையதும் தெளிவான பொருள் விளக்கமுடையதும் இன்பத்தைத் தரத்தக்கதும் வேறொன்றுமில்லை. சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலியன அழகுடையனவாய் இன்பந் தரத்தக்கனவே யாயினும் பாட்டிற்குப் பிற்பட்டவைகளே. பாட்டு எல்லாருக்கும் எப்போதும் இன்றியமையாதது என்னும் இவ்வுண்மை இயற்கையென்பதைப் பல நாடுகளிலும் மக்களுக்கு அவ்வப்பருவத்துக்கு இயைந்த பாடல்கள் தோன்றி யிருத்தல் நன்கு புலப்படுத்தும். நம் தமிழ் நாட்டில் இத்தகைய பாடல்கள் நிறைந்துள. இளம் பிள்ளைகட்கு ஏற்ற மழலைப்பாட்டுக்கள் பல கர்ண பரம்பரையாக வழங்கிவந்தன. இப்போது அவற்றுள் சிலவே கேட்கப்படுகின்றன. பல நவீன நாகரிகத்தினால் ஒழிந்துவிட்டன.

'தாலாட்டும் வக்கணையுந் தானாகவரும்' என்பது ஒரு பழமொழி. ஒரு பெண் ஒரு மகவை ஈன்றவுடன் அம் மகவின் தூய்மையான அழகினை உற்று நோக்குந்தோறுந் தன் மனோபாவனை விரிந்து, இன்பத்தில் தோய்ந்து அதனை வெளிப்படுத்தப் பாடத் தொடங்குகின்றாள். அப்படிப்பட்ட பாடல்கள் அளவிறந்தன. அவைகளே 'தாலாட்டுப் பாடல்'களாம். அப்பாடல்களில் உள்ள நயங்களும் இனிய கருத்துக்களும் பாவனாசக்தியும் மிகச் சிறப்புடையனவாகும். அங்ஙனமே ஒரு பெண் தனக்கு இனிய கணவனையேனும் பிறரையேனும் இழந்தபோது துன்ப மேலீட்டால் தன்னை மறந்து பாடுவன (வக்கணைப் பாடல்) புலம்பல் ஆகும். அவற்றுள் உள்ள பொருட் பாகுபாடுகளும் கருத்து நேர்மையும் இயற்கை அமைப்பும் பெரும் புலவருக்கும் வாய்க்காதது. இவையே யன்றி விநோதமான பாடல்களும் தெய்வ சம்பந்தமான பாட்டுக்களும், விடு கவிகளும் மிகப் பலவாய்ப் பரந்து விரிந்து கிடக்கின்றன. அவைகளுள் ஒழிந்தன போக இப்பொழுது எஞ்சியுள்ள பகுதிகளையேனும் தேடித் தொகுத்து வெளிப்படுத்திடின் அவை அனைவருக்கும் பெரும் பயன் விளைக்கும்.

தாலாட்டுதல், குழந்தைகளை வாவெனக் கூப்பிடல், குழந்தைகட்கு நிலாவைக் காட்டல், அவர்களை ஊசலாட்டுதல், அவர்கள்



சிற்றில் அமைத்தல், சிறு சோறு சமைத்தல் முதலியவற்றை அமைத்துப்புலவர் பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தம் பாடினர். தமிழிலுள்ள பிள்ளைத்தமிழ் நூல்களையும் தாலாட்டுப் பாடல்களையும் உற்றுநோக்குங்கால் நம் முன்னோர் குழந்தை வாழ்வின் இன்பத்தையும் அழகையும் எத்துணை அறிந்திருக்கின்றார்களென்பது தெரியும். தாலாட்டுப் பாடல்களைப் பார்த்தால் அவை குழந்தையை எவ்வெவ்வகையாக நோக்கி இன்புறல்வேண்டு மென்னும் விஷயத்தை நன்கு உணர்த்துகின்றன என்பது புலப்படும். குழந்தைகளின் அறிவு, செய்கை முதலியவற்றைக் குறித்தும் அவர்களுக்கு மன மகிழ்ச்சியைத் தரத்தக்க இனிய விஷயங்களைக் குறித்தும் திரிசொல் கலவாமல் அருமையான பாடல்கள் பல பாடப்படல் வேண்டும். புலவர்கள் இம் முயற்சியில் முன்னின்று பாடவேண்டுமென விரும்புகின்றோம். கல்விகற்ற மாதர்கள் இத்தகைய பாடல்களைப் பாட முயல்வாராயின் அவை இன்னுஞ் சிறக்கும். நிற்க.

நம் புலவர்களும் பிறரும் பாடிய பாடல்களுள் இப்பொழுதுள்ளவற்றை யெல்லாம் ஒருங்குசேர்த்து ஒருருவாக்கி அச்சிடவேண்டும் என்னுங் கருத்துடையோம். இவற்றைத் தேடித் தொகுத்து அனுப்புகிறவர்களுக்குப் பின் வருமாறு பரிசுகள் தரப்படும். இஃது ஓர் அரும்பணி யாதலின் தமிழில் பற்றுள்ள அனைவரும் பாடுபட்டு ஆங்காங்குச் சென்று சிறந்த பாடல்களைச் சேகரித்து அனுப்புவார்களென நம்புகின்றோம். இதனால் நம் தமிழ் நாட்டுக்குப் பல நன்மைகள் விளையுமென்பதில் தடையில்லை.

| | | | |
|---|---|---|---|
| முதற்றரமான பாடல்களின் தொகுதிக்குப் பரிசு ரூபா | | | 50-0-0 |
| இரண்டாந்தரத்துக்கு | ,, | ,, | 30-0-0 |
| மூன்றாந்தரத்துக்கு | ,, | ,, | 20-0-0 |

பத்திராதிபர்.

# PRIDE

## கர்வம்

உற்றுப் பார்க்குமளவில் எவரும் செருக்கடைவதற்கு ஏது ஒன்றுமில்லை. எதற்காகச் செருக்கடைந்தாலும் தன் சொந்த முயற்சியாலேயே வருந்தி யறிந்த சொற்ப விஷயங்கள் தவிர மற்றப்படி கற்ற வித்தையைப் பற்றிப் பெருமை பாராட்டக் காரணம் சிறிதுமில்லை. வேறொருவன் கற்றறிந்த கல்வியில் ஒரு சிறிது நாம் பெற்றுக்கொள்வதனால் செருக்கடையலாமா? அப்படிக் கர்வப்படுவது ஒருவனிடத்தில் ஒரு காசு பெற்றுக்கொண்டு அதனால் கர்வப்படுவது போலாம். தங்களுக்குப் பிச்சை எவ்வளவு அதிகமாகத்தான் கிடைத்தாலும் பிச்சைக்காரர் கர்வம் கொள்ளலாமோ? கல்வியறிவு கைவழங்குகிற நாணயம்போன்றது. ஒருவன் தானே முதலில் வருந்திப் பொன் சம்பாதித்துப் பிறகு அதைச் செம்மையாய்ச் சுத்திசெய்து தானே முத்திரையிட்டு நாணயமாக்கிக்கொண்டாலும் அல்லது இவ்வாறு ஒருவன் ஏற்படுத்திய பொருளைத் தன் புத்தி சாமர்த்தியங்களை விசேஷமாய்ச் செலுத்தி நல்லவழியில் பிரயாசைப்பட்டுச் சம்பாதித்தாலும் சிறிது செருக்கடையக் காரணமுண்டு. இவைகள் ஒன்றுஞ் செய்யாமலிருக்க வழிப்போக்கனொருவன் தன் கையிலிருந்த பொருளை முகத்தில் எறிந்துவிட்டுப் போனால் அதைப்பற்றிப் பெருமைப்படக் காரணம் உண்டோ? ஒருவன் இவ்வகையாய்ப் பிச்சையெடுத்துக் குபேரனைப்போலக் கோடிகோடியாய்த் திரவியத்தைக் குவித்தாலும் அவன், அற்பமாயினும் தன் உழைப்பினாலேயே சம்பாதித்துக்கொள்பவனுக்குச் சற்றேனும் சமமாகான். இந்தத் திருஷ்டாந்தப்படி சூரியன் பூமியைவிடப் பெரிதென்று ஒருவர் போதித்தால் அதை அறிந்துகொண்டதற்காக நாம் என்ன காரணத்தைக் கொண்டு கர்வப்படுகிறது. அக்கர்வத்தை அவ்விஷயத்தைக் கற்றுக் கொடுத்தவரிடத்திலேயே காட்டுவது வியப்பினும் வியப்பே! பல பண்டிதர்கள் தாம் கற்றறிந்த பற்பல விஷயங்களையும் நமக்குக் கற்பித்துக்கொடுத்துத் தமது கல்விப் பொருட்சுமையை நம் தலைமேல் சுமத்தினாலும், அப்படி வரப்பெற்ற கல்விச் சுமைக்காகத்தானாகட்டும் நாம் பெருமைபாராட்ட நியாயமென்ன? முன் யாரோ ஒரு வித்வான் வருந்திப் பாடுபட்டு ஸ்தாபித்திருக்கிற சித்தாந்தங்களை வேறொருவர் நமக்குச் சம்-



மதமில்லாம லிருக்கப் பலவந்தமாகவும், நாம் நல்லது பொல்லாததென்பதைக்கூடத் தெரிந்துகொள்ளத் திறமையற்றிருந்த நமது சிறு பருவத்தில் அடித்துப் புடைத்து நமக்கு வெறுப்பாகவும் பாடம் செய்வித்திருக்க, அவைகளுக்காக நாம் கர்வப்படுவதற்கென்ன காரணம்? உண்மையாய்ப் பார்க்குமளவில் நாமே பாடுபட்டுத் தேடிக் கண்டறிந்த கல்விப்பொருள் ஒன்று தவிர மற்ற வழியால் வரப்பெற்ற எவ்வகைக் கல்வியும் நாம் பெருமை பாராட்டும்படி நம் மனதிற்கு ஏற்ற அணிகலம் ஆகமாட்டாது. ஒருவன் பாலைவனத்தில் சிறிதாய்க் குடிசையொன்று போட்டுக் குடியிருப்பதற்கு வேண்டிய பாய், படுக்கை, பலகை, பீடம் முதலிய பல உபகரணங்களையும் வருந்திச் செய்துகொள்வானானால், அவன் தனக்குத் தானே சிறுவீடு ஒன்று கட்டிக் கொண்டதற்காகக் களிப்படைவது சரியே. அப்படியிருக்க வெகு நேர்த்தியாக நிருமித்துச் சகலவித சாமான்களும் ஒன்றோடொன்று குறைவில்லாமல் சேகரிக்கப்பெற்ற திவ்விய மாளிகையொன்று ஒருவனுக்குத் தன் முயற்சி சிறிதுமின்றி அமையுமாயின் அவன் முன்னவனைவிடப் பலமடங்கு அதிகமாய்ச் சுகங்கள் அனுபவிக்க இடமுண்டாயினும், எள்ளளவேனும் அகங்காரங் கொள்வதற்கு ஏதுவில்லை. அம்மாளிகையைக் கட்டினவன் திறமைக்காகவோ இவன் கர்வப்படுகிறது! பிறர் தேடிய தந்தக் கட்டிலிற் படுப்பவனுக்கு உண்டாகும் ஆனந்தம் தானே தேடிய தாழம்பாயிற் படுப்பவனுக்கு உண்டாகும் ஆனந்தத்தில் பாதியாவது இருக்குமென்று சொல்ல இடமேயில்லை. தானாகவே சம்பாதித்துக் கொண்டவனாகச் சொல்லப் படுவனுங்கூடக் கர்வப்படக் காரணம் சிறிதும் இல்லை. ஏனெனில் எல்லாம் தெய்வச் செயலேயன்றி நம்மாலாவது ஒரு சிறிதும் இல்லை.

"பிறக்குங்காற் பேரெனவும் பேரா விறக்குங்கா
லில்லெனவு மில்லா வுயிரனைத்து — நல்லா
ளுடம்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதிற்
கண்டனவுங் காணக் கெடும்."

என்று விளம்பி நாகனார் திருவாய் மலர்ந்தருளியபடி எல்லாச் செல்வங்களும் இலக்ஷுமியின் கிருபையால் உண்டாவதேயன்றி நம்மால் ஒரு சிறிதும் ஆவதில்லை. ஆகையால், நான் சம்பாதித்-

தேன் நான் செய்தேன் என்னும் அகங்காரங்களை விட்டொழித்து எல்லாம் சர்வசக்தியுள்ள இறைவன் செயலென்பதை யுணர்ந்து அவ்விதமாகச் சம்பாதிக்கும்படியாகவும் செய்யும்படியாகவும் கிருபை புரிந்த சர்வசக்தியுள்ள இறைவனைச் சதா தியானித்துக் கொண்டு பிறர்க்கும் நன்மையாய் வாழ்ந்து வருவது கடமை.

R. THIRUMALAI IYANGAR,
*T. R. Elementary School,*
*Kalangal, Sulur Post,*
*Coimbatore Dt.*

## PROVERB EXPLAINED

### "கண்டது கற்கப் பண்டிதனாவான்"

அஃதாவது, பார்த்தவைகளை (பகுத்து) அறியக்கூடியவன் கற்றவனாவான் என்பதே.

அறிவென்பது சுருக்கமாகச் சொல்லப் புகின் ஐம்புலன்களாலும் உணர்வதாகும். "எண்சாணுடம்பிற்குச் சிரசே பிரதான" மென்பது போன்று, அவ்வைந்து புலன்களில் "ஒங்குறுப்பிற் கண்ணே பிரதான"மா யிருக்கின்றது. இது நோக்கியே "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகு" மென்றும் "கண்ணுடைய ரென்போர் கற்றோர்" என்றும் நம்முதியோர் கண்ணையே விசேஷித்துக் கூறியிருக்கின்றனர். அன்றியும் கண்டது கற்கப் பண்டிதனாவான்" என்பதிலும் காண்டலே விசேஷமாக மதிக்கப்படுகின்றது.

அவ்வாறு கண்ணே பிரதானமென்பது உண்மையா? என்பதை ஆராய்வாம். ஒரு செவிடன் ஒன்றின் சப்தத்தைக் கேட்டு, அனுபவிக்கும் திறனிழந்தானாயினும் உருவம், அழகு முதலியவற்றைக் கண்டு, பகுத்தறிகின்றான். நாக்கில்லான் ருசியறிய முடியாதிருப்பானாயினும் மற்றைப் புலன்களாற் பார்த்தும் கேட்டும் பகுத்தறிகின்றனன். கண்ணில்லாதவனோ இயற்கை வனப்பைக் கண்டு, அனுபவிக்க முடியாது. அன்றியும், ஒன்றைப் பகுத்தறியும் சக்தியில்லாது கெடுகின்றான். ஆனதுபற்றி, அறிவிற்குப் பிரதானம் கண்ணொன்பது யாவருக்கும் தெற்றென விளங்கும்.



ஈசன் படைக்கும் காலத்து யாவருக்கும் ஒரே அறிவைக் கொடுத்திருத்தலினாலே ஏனைய பொருள்களை ஒருவன் ஐம்புலன்களில் மேம்பட்ட கண்ணால் பார்த்து, அவ்வியற்கை யறிவினாலே அறிதலினாலே பண்டிதனாகின்றான். இஃது மேனாட்டாரும் புகழும் கம்பரின் இயற்கை வர்ணனைகளின் மேன்மையால் அவர் இப்போதும் பொலிவுற்று விளங்குவதும் மற்றையோர் எழுதிய கதைகளில் அவ்வியற்கை வர்ணனை யில்லாததால், அவர்கள் பொலிவின்றி விளங்காதிருப்பதும் இதற்குச் சான்றாகும்.

அவ்வாறு அனுபவித்தோ ரெழுதிய நூல்களாலும், அந்நூலைக் கற்றோர் சொல்லியவற்றாலும் கற்றுப் பகுத்து அறியாது காண்போன் யானையையும் கொக்கையும் கண்ட குருடர்கள் போலாகின்றான்.

காண்பதாவது பார்த்தல். அதுவே காட்சி ஆதலால் அக்காட்சியை அனுபவிப்போன் பண்டிதனென்பது நிச்சயம். அவ்வாறின்றிக் கற்றது காண்போன் பண்டிதனாவது சந்தேகமே. இதுபற்றியே அறிவிற்கு ஞானக்கண் என்று சொல்வர்.

M. PERUMAL MOOPPANAR,
*Student, G. T. School,*
*Dindigul.*

## MYSORE EDUCATION AND MADRAS TEACHERS

### மைசூர்க் கல்வியும் சென்னை உபாத்திமார்களும்

4-2-'18 மாலை 5 மணிக்கு இவ்வூர் (திண்டுக்கல்) கவர்ன்மெண்டு டிரைனிங் ஸ்கூலில் மிஸ்டர் ரங்கசாமி ஐயங்காரின் அக்கிராசனத்தின்கீழ் 'மைசூர் விவசாய டிப்டி டைரக்டர் மிஸ்டர் எக்ய நாராயணய்யர் எம். ஏ.' அவர்கள் சிறந்த தமிழ் நடையில் "மைசூரில் கல்வி" என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார் எனக் கீழ்வருமாறு 8-2-'18 சுதேசமித்திரனில் கண்டோம்.

அதில் முக்கிய சாராம்சம் யாதெனில்:—

மைசூர், பெங்களூர் இவ்விரு நகர்களிலும் தாய்பாஷையில் இலவச ஆரம்ப கட்டாயக் கல்வி ஏற்படுத்தி யிருப்பதாயும் ஏனைய

ஐந்நூறு ஜனத்தொகைக்கு மேற்பட்ட ஒவ்வொரு சிறு கிராமத்திலும் இதேமாதிரி கட்டாயக் கல்வி இருப்பதில் மேற்படி கிராமவாசிகள் பாதிச் செலவை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், மற்றைய பாதிச் செலவைக் கவர்ன்மெண்டார் கொடுத்துதவுகிறதாகவும், அப்பேர்ப்பட்ட ஒவ்வொரு பாடசாலைக்கும் 2 முதல் 6 ஏக்கர்வரை விஸ்தீரணமுள்ள நிலம் விவசாயக் கல்விக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும் அவ்வக்கிராமத்தின் சீதோஷ்ணத்திற்கும் நிலவசதிக்கும், தண்ணீர் சௌகரியத்திற்கும் தக்கவாறு விவசாயங்கள் அம்மாணவர்கட்குக் கற்பித்துக் கொடுத்து வருவதாகவும் எடுத்துரைத்தார். கிராமந்தோறுமுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் சென்று கல்வி அபிவிருத்திக்காக அவ்வப்போது தாய்பாஷையில் உபந்நியாசம் செய்வதற்காக அநேகரை சர்க்காரில் நியமித்திருக்கிறார்களென்றும் கிராம வாரியாய்ச் சுற்றுவதற்காக இலவச புத்தகசாலைகளும் ஏற்படுத்தி யிருப்பதாகவும் சொன்னார். தவிர, மேற்கண்ட சங்கதிகள் சரியாய் நடந்தேறி வருகிறதா வென மேல் பார்ப்பதற்கென்று அநேக உத்தியோகஸ்தர்களையும் மகாராஜா நியமித்திருக்கிறாராம்" என்பதே.

நமது சென்னை மாகாணத்திலும் 'இலவச ஆரம்ப கட்டாயக் கல்வி'யை ஏற்படுத்திப் பாதிச் செலவைக் கவர்ன்மெண்டார் வகித்துக்கொள்வது சாலச் சிறந்ததாகும். இதற்கென மிக அதிக செலவு தற்போதுள்ளதைவிட ஏற்படாதென்போம். தற்போதே அநேக ஜாதிப் பிள்ளைகளுக்குச் சம்பளமில்லை யெனத் தீர்மானித்து விட்டார்கள். ஆதலால் சம்பளங் கொடுப்போர் மிகச் சிலரே யாவர். இம்மிகச் சிலரின் சம்பளமும் மிகச் சொற்பமே யாதலால் சொற்ப செலவை மேலே கூறிய இருதிறத்தினரும் நிர்வகிப்பது சுலபமென்னலாம். அநேகமாகக் கிராமங்களில் மிகச் சிலரே கொடுக்கும்படி ஏற்படுத்தி யிருப்பதும் அன்னவர்களால் கொடுக்கச் சாத்தியப்படுவதில்லை. ஆதலால் உத்திரவின்படி அப்பையனைப் பள்ளியினின்றும் நீக்கிவிடலாமெனினும், கிராமத்தார் தமது குறைகளையும் வறுமையையும் கூறுங்கால் அப்பையனைப் பள்ளிக்கூடத்தினின்று அனுப்புவதற்குச் சாத்தியப்படுவதில்லை. ஆகவே மிகச் சொற்பமாகிய தனது போஷணைக்கே போதாத சம்பளம் பெறும் உபாத்திமார் அப்பிள்ளைகளின் சம்பளத்தையும் கஷ்டத்தோடு கஷ்டமாய் எங்காவது



கெஞ்சிக் கூத்தாடிக் காலக்ஷேபம் செய்கையில் அதையும் ஈடு செய்துகொண்டு, குறித்த தேதியில் அனுப்பாவிடில் அபராதம் (ரூபாய்க்கு ஒரு அணா வீதம்) கொடுக்க வேண்டுமே என, அனுப்பவேண்டி யிருக்கின்றது. பிள்ளைகளின் சம்பளம் குறித்த தேதியில், அனுப்பாவிட்டால் அபராதமாகச் சம்பளத்தில் பிடித்தம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமென உத்தரவு ஏற்பட்டிருக்கிறதே தவிர, ஏழை உபாத்திகளின் மிகச் சொற்ப சம்பளம் இவர்களுக்குக் குறித்த காலத்தில் வருவதற்கு யாதொரு ஏற்பாடும் செய்துள்ளதாகச் சம்பளம் காலாகாலத்தில் வாராததிலிருந்து தெரியவருகிறது. ஆகவே உபாத்திமார்கள் இவ்வகை இடுக்கணில் சிக்கி யிருக்கும்போது எவ்விதம் தம்மாணவர்கட்கு நன்கு சிரத்தையுடன் கல்வி போதிக்க முடியுமென்பதை காருண்யமும் கல்வியபிமானமு மிகுந்துள்ள அதிகாரிகளும் ஜனப்பிரதிநிதிகளும் பத்திராதிபர்களும் தக்க ஏற்பாடு கூடிய சீக்கிரம் செய்வார்களாக — செய்ய முயற்சிப்பார்களாக.

P. பரிமணப்பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர் சோலை, P. O., திருச்சி ஜில்லா.

# TWO FISHERMEN

## இரண்டு செம்படவர்கள்

ஏரி, குளம், குட்டைகளண்டை அடிக்கடி நமது கண்களுக்கு கவரத்தக்கனவாய்க் காணப்படும் பறவைகளில் முக்கியமானவை மீன்கொத்தியும் நாரையுமே. இவை பொறுமையுஞ் சாதுரியமுமுள்ள செம்படவர்களுக் கொப்பாய் மீன்பிடிப்போர்களுக் கெல்லாம் ஓர் வழிகாட்டியா யுள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் தன் தன் இரையைத் தேடியடைய இயற்கையிலேயே வெவ்வேறு வித வழிக ளமைந்திருக்கின்றன. ஆயினும் பொறுமை யென்பதொன்று இவை இரண்டிற்கும் பொதுவாக விருக்கின்றது,

மீன்கொத்திப்பறவை சாதாரணமாய் உஷ்ண தேசங்களிற் காணப்படுகின்றது. அழகு சோபிக்கும் அத்தகைய பட்சிகள் ஐரோப்பா முதலிய குளிர்ச்சியான விடங்களிற் காணப்படுவதருமை. ஆயினும் நமது தேசத்திற் காணப்படும் மீன்கொத்தியைப்போன்றதோரழகிய பறவையை (King Fisher) இங்கிலாந்தில் இங்குமங்கு மரங்களடர்த்தியாயுள்ள நீரோடைகளினருகே காணலாம். அதனை ஆங்கிலேயர் காணும்போதெல்லாம் காணுது கண்ட கம்பங்கூழாக மதித்துப் புகழ்கின்ருர்கள்.

மீன்கொர்த்தியின் உடற் பரிமாணத்தை நோக்கும்போது அதற்குத் தலை பெரியதாகவே அமைந்திருக்கின்றது. சிறிது சிவப்பான முகத்தினின்றும் உரத்து நீண்ட அலகு புறப்பட்டிருக்கும். கால்கள் செம்மை நிறம் பொருந்தியன. இறகுகள் நீலமாகையால் அதை நாம் நீலப்பட்சியாகவே காண்போம்.

இப்பறவையின் பெயரினுலேயே இதற்கு முக்கிய ஆகாரம் இன்னதென்று நமக்கு ஏற்பட்டுவிட்ட தல்லவா? மீன்கொத்தி மீன்பிடித்துத் தின்ப தெப்படி? நீர் நிலைகளினருகே மரங்களிருந்தால் அப்பறவையானது நீருக்கு நேரேயுள்ள ஓர் கிளையின்மீதிருந்து கீழே பார்த்துக்கொண்டே யிருக்கும். நீரின்மேல் ஏதோவொருமீன் காணப்பட்டவுடனே எலியொலி கேட்ட பூனைபோல் ஜாக்கிரதைப்பட்டு விறைத்துத் தலைசாய்த்து நோக்கி, அது அம்மீனுக்கு நேராக ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஒரு நொடியில் அதைத் தன்னலகில் குத்திக்கொண்டு கிளைக்கு வந்து சேரும். பட்சி பாய்வதுந் தண்ணீ ரடிபடுவதும் மறுபடி அது ஏதோவோர் கிளையைச் சேர்வதும் கண்மூடிக் கண்திறக்கு முன்னே முடிந்து விடும்.

மீன்கொத்திப்பறவை நீரினின்றும் கிளையிற் சேர்ந்தவுடனே தனது அலகிலுள்ள மீனை முறுக்கிக் கிளையின்மீதடித்துக் கொன்று தலை முன்னும் வால் பின்னுமாக வைத்தெடுத்து விழுங்கும். ஓர் மீனை அப்படியே விழுங்கச் சௌக்கியமான வேறுவித வழியுண்டாவென்பதை யோசித்தறியுங்கள். நமது கிராமவயல்களில் ஏற்றக்கோல் நுனியிலிருந்து இப்பறவைகள் திடீரென்று கிணற்றுக்குள் பாய்ந்தேறுவதைப் பிள்ளைகளும் உவாத்திமார்களும் கண்கூடாகக் காணலாம்.



பட்சிகள் தங்க மரமுதலான யாதோ ராதாரமுமற்ற வெளியாயிருக்கும நீர்நிலைகளைக் கண்டால் இப்பறவை ஆகாயத்தில் நீருக்கு நேராக இங்கு மங்கும் பறந்துகொண்டே இரை கண்டவுடனே முன்சொன்னபடி பாய்ந் தடித்துக்கொண்டு போய்விடும். சிற் சில சமயங்களில் அது இரண்டொரு விநாடி நீரில் முழுகியிருந்து இரையோடு வெளிவருவதுமுண்டு.

மீன்கொத்திப் பறவை நீர்நிலைக் கரைகளில் மண்ணைத் தோண்டி வளைசெய்துகொண்டு அதில் வாசஞ்செய்கின்றது. வளைக்குள் முட்டையிட்டுக் குஞ்சுபொரித்துப் பாதுகாப்பதற்கு அறை போன்ற ஓர் துளையும் செய்துகொள்ளும். அது தடவைக்கு ஐந்தாறு முட்டைகளிடும். குஞ்சுகள் வளையின் தலைவாயில் வந்து வெளியே பார்த்துக்கொண் டிருக்கும்போது நீ வெருட்டுவாயானுல் உடனே அவைகள் உன்னைப் பார்த்தபடியே பின்னுக்கோடித் தங்களறையிற் புகுந்துகொள்ளும். அபாய காலங்களிற் பறவைகளும் நிலத்தில் வாழு மற்ற ஜந்துக்களும் இப்படியே செய்யக் காணலாம்.

நீர்நிலைகள் வற்றி நீரற்றுப்போன விடங்களில் இப்பறவைகள் நில்லா; நீருள்ள விடங்களையே தேடிச்செல்லும். அப்படி இடம்விட்டு இடம் பெயர்ந்து செல்லுங்கால் மதநியில் வெகுதூரத்துக்கு நீர் காண்ப தரிதாயின் அப்பறவைகள் இடைவழிகளில் இறந்துபடுகின்றனவாம்.

நான் சொல்லவந்த இரண்டாஞ் செம்படவன் குரண்டமெனப்படும் நாரையே. இது சதுப்புநிலப் பிரதேசங்களிலும் நீர் நிலைகள் ஏராளமாயுள்ள விடங்களிலும் காணப்படும். அப்படிப்பட்ட விடங்களிலேயே அதற் காகாரமாயுள்ள மீன் தவளை நத்தை முதலிய ஜந்துக்கள் வசிக்கின்றனவல்லவா? நீரின் மத்தியில் நிற்கும்போதும் உடல் அதற்குள் அமிழ்ந்து போகாத அதன் கால்கள் வெகு நீளமா யமைந்திருப்பதும், சேற்றில் அழுந்திப் போகாதபடி அதன் பாதங்கள் அகன்று விரிந்திருப்பதும், இரையைத் தவறுமற் பற்றி யெடுத்துக்கொள்ளத் தக்கதாக அதன் அலகு நீண்டு முனையோடிக் கூர்மையா யிருப்பதும், சற்று நீருக்குள்ளிருக்கும்போதே இரையைத் தெரிந்து கண்டுபிடித்துக்கொள்ள இயற்கையான கூரிய கண்கள் கூடியிருப்பதும், எவ்வளவு அருமைப்

பாருங்கள். இவ்வளவு அநுகூலங்களும் இதற்கு இயற்கையிலேயே அமைந்திருக்கின்ற காரணத்தால் இதற்குப் பறவைச் செம்படவ வீரன் என்னுமோர் பெயரைச் சூட்டிவைககலாமோ வென்பதைச் சற்று யோசியுங்கள்.

அதன் அலகின் அதிசயச் செய்கையை நீ யறியவேண்டுமானல் மறைவிருந்து பார்த்து மகிழ்வாயாக. முழங்கால் நீரில் நாணற்புதர் மத்தியில் சாந்தமே யோருருவெடுத்த தொப்ப ஓர் அதிசயமான வெள்ளைப் பறவை நிற்கக் கண்டால் உனக்கு எப்படியிருக்கும். உன் மறைவிடத்திருந்து சிறிது தூரம் நகர்ந்து கிட்டி எட்டிப் பார்ப்பாயானல் அது தனது நீண்ட கழுத்தை உடலுக்குள் இழுத்துக்கொண்டும் அலகை நீருக்கு நேராகச் சுட்டிக்காண்பிப்பதுபோல் வைத்துக்கொண்டு மிருப்பதைக் காண்பாய். இருந்தாற்போ லிருந்து நாரையானது தனது அலகை அம்பு பாய்வதுபோல் அவ்வளவு விசையாய் நீரிற் பாய்ச்சும். பாய்ச்சினவுடனே அதன் அலகு ஓர் மீனோடு வெளிவரக் காண்பாய்; அது வைத்த குறி தப்புகிறதேயில்லை. அலகு வெளிவந்தவுடனே நாரையானது தன் கழுத்தை நீட்டி வெகு சாதுரியமாய் இரையை எப்படி உள்ளே விழுங்கப் பக்குவமோ அப்படி அதைத் திருப்பி விழுங்கும். !இவ்வளவும் ஒருவிதச் சந்தடியு மில்லாமலே நடக்கிறது. இவ்வித நிபுணத்துவத்தை யென்னென்று சொல்லலாம்! ஓடுமீனை ஓர் கோலால் குத்த முயற்சி செய்து பார்; அப்போது அது இத் தன்மையதெண வுனக்கு நன்கு விளங்கும்.

நாரையால் விழுங்கப்பட்ட மீன் என்போடும் ஜீர்ணமாய்விடுகிறது. ஒரு சமயத்தில் ஓர் நாரையின் தீனிப்பையில் சுமார் நாற்பது ஆற்றுக் கெளுத்தி மீன்களைக் கண்டெடுத்தார்களாம். இதனல் அதன் ஆகாரத்தின் அளவும் ஜீர்ண சக்தியின் ஸ்திதியும் இத்தன்மைய வென்பதை யறிகின்றோமல்லவா?

நாரையின் பாதம் சேற்றில் நடப்பதற்கு உதவியா யிருக்கிறது மல்லாமல், மரக்கிளையின்மேல் ஊன்றி நிற்பதற்குத் தகுதியாய் அமைந்திருக்கிறது. இப் பறவைகள் மரத்தின் உச்சிக் கிளைகளில் ஒன்றிக் காலால் நின்றுகொண்டு மற்றொரு காலினல் உடலைப் பிறாண்டிக்கொண்டிருக்கக் காணலாம். பாதத்தின் நடுவிரல் வளைந்து கூர்மையாயிருப்பதால், அது இறகுகளைச் சுத்தஞ்செய்து சரிப்படுத்த ஓர் சீப்பைப்போ லுதவுகிறது.



நாரை தன் குஞ்சுகளுக்குத் தினத்துக் கிரண்டு தடவை இரை கொடுக்கும். தாய்ப்பறவை தன் அலகைப் பரக்கத் திறக்க, குஞ்சுகள் ஒவ்வொன்றாய் தொண்டைக்குள் தங்கள் அலகுகளை விட்டு ஆகாரத்தை யெடுத்துண்ணும். பெரிய பட்சிகளெல்லாம் இவ்விதமாகவே தங்கள் குஞ்சுகளை உண்பிக்கும்.

நாரையின் பொறுமையை, 'மடைத்தலையிலோடு மீனோட வொருமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு' என்பதனல் உணர்க.

சேலை சகாதேவ முதலியார்,
*W. M. High School, Tiruvallur.*

# EVILS EVINCED BY THE NEGLIGENCE OF MOTHER-TONGUE

## சுயபாஷைகளை அலட்சியஞ் செய்வதனல் விளையும் தீமைகள்

நமது இந்துதேசத்து வாலிபர்கள் தற்காலத்திலே ஆங்கிலேய பாஷையிலும், அப்பாஷை வாயிலாக அங்ககணிதம், பீஜகணிதம், க்ஷேத்திரகணித முதலிய பற்பல கணித சாஸ்திரங்களிலும், மனோதத்துவ லட்சண சாஸ்திரத்திலும், தர்க்க சாஸ்திரத்திலும், பிருதிவி முதலிய பூதலட்சண சாஸ்திரத்திலும், பௌதிக லட்சண சாஸ்திரத்திலும், வானசாஸ்திர முதலிய அளவிறந்த சாஸ்திரங்களிலும் மிகவும் தேர்ச்சியடைந்து, பாண்டித்திய சின்னங்களாகிய சிறந்த பட்டங்கள் பெற்று, ஆங்கிலேய பண்டிதோத்தமர்களும் வியக்குமாறு சிறப்படைதல் நம்மனோர் யாவர்க்கும் பெருமகிழ்ச்சியை விளைக்கின்றது. ஆயினும் அம் மகிழ்ச்சியை யறவே கெடுத்து நம்மனோரைப் பெருந்துக்கத்துக்கு இலட்சியப்படுத்தத் தக்கதோர் பெருங்குறையுளது. அக்குறை இத்தேசத்து வாலிபர்கள் தத்தம் சுயபாஷைகளை முற்றும் அலட்சியஞ் செய்து வருவதேயாம். ஆங்கிலேய பாஷையில் தேர்ச்சியடைந்து பரீக்ஷைகளில் தேற அவாவுடைய ஒவ்வொரு வித்தியார்த்தியும் தன் சுயபாஷையிலே நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுக்குத் தேர்ச்சியடைய வேண்டுமென்னும் அருமையான ஓர் நிபந்தனையை

சர்வகலாசாலைச் சங்கத்துப் புலவர்கள் ஏற்படுத்தியிருக்கிற காரணத்திற்றான் இத்தேசத்து வாலிபர்கள் ஒருவாறு இப்போது சுயபாஷை முகத்திலாவது விழிக்கின்றார்கள. இத்தகைய நிபந்தனை யேற்பட்டிராவிடில் முப்பது வருடங்களுக்கு முன்னரே சுயபாஷைகள் இருந்த இடமுந் தெரியாமற் போயிருக்குமல்லவா? சுயபாஷை யென்பது ஒருவனுக்குத் தாய்ப்பாஷையாகும். அவன் தன்னுடைய தாயின் முலைப்பாலை யருந்திவந்த காலந்தொட்டு அவனுடைய மனத்தில் படிந்துவந்த பற்பல தோற்றங்களும் அபிப்பிராயங்களும் அப்பாஷை வாயிலாகத்தான் உள்ளே புகப்பெற்றன. ஆகவே அத்தகைய பாஷையில் எவனொருவன் எதார்த்தத்திலே தேர்ச்சியடைகிறானோ அவனே அந்நியபாஷையிலும் தேர்ச்சியடைவானென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. ஒருவன் யாதொரு அந்நியபாஷையில் முதிர்ந்தவயதிலே எவ்வளவு தேர்ச்சியடைந்து சிறந்த சாஸ்திர உண்மைகளை யறிவானாயினும், அவ்வுண்மைகளைத் தன்னுடைய மனத்தில் ஆவாகனஞ் செய்து கொள்ளும்போது, குழந்தைப் பருவத்தில தான் தனக்குத் தெரியாமலே கற்றுக்கொண்ட சுயபாஷையே அவனுடைய மனத்திற் பேசிக் கொள்ளும் பாஷையா யிருக்கிற தென்னும் வாய்மை நம் ஒவ்வொருவருக்கும் அனுபவசித்தமா யிருக்கின்றது. ஆகையால் இப்படிப்பட்ட தாய்ப்பாஷையை ஒருவன் முற்றுங் கைசோரவிட்டு அந்நியபாஷையில் தேர்ச்சியடையப் பேரவாக் கொண்டிருத்தல் முதற்பணமில்லாமலே வட்டியைச் சேகரிக்கப் பிரயத்தனஞ் செய்வதை ஒக்கும்.

இக்காலத்தில் ஆங்கிலேய பாஷையிலே கல்வி பயின்றுவரும் சில இளம்பக்குவிகள் சுயபாஷையில் பிறருடன் வசனிப்பதும் எழுதுவதும் தமக்குக் கௌரவஹீனமென்று மதிமயக்கங் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய பேதமை அம்மம்ம! பரிதபிக்கத்தக்கது. சுயபாஷையில் சாதாரண விஷயங்களையும் வசனிப்பதற்கு வேண்டிய சொற்கள் அவர்களுக்கு முற்றுந் தெரியாமையே அவர்கள் அங்ஙனம் துராபிப்பிராயங் கொள்ளுவதற்குக் காரணமாயிருக்கின்றது டயம், ரெடி, லேட், க்ளீன், எனனும் ஆங்கிலேய பதங்களன்றி இவற்றிற்குச் சொற்கள் சுயபாஷையில் தெரியாமையினாலேயே அவர்கள் தம்முடைய வீட்டிலும இவற்றையே ஆபாசமாய் வழங்கவேண்டியவர்களாகின்றார்கள். அவர்களே அங்ஙனம் இப்பதங்களை வழங்கத் தொடங்கும்போது ஆங்கிலேய பாஷை-



யைக் கனவிலுங் கண்டிராத ஸ்திரீவர்க்கங்களும் அச்சொற்களை அப்பியசிக்க நேரிடுகிறது. இவ்வண்ணம் ஆண், பெண் என்னும் இருபாலாரும் ஆங்கிலேய வார்த்தைகளையே சாமானிய விஷயங்களுக்கும் உபயோகித்துக் கொண்டு வருகின்றார்க ளாகையால், அந்தோ! சுயபாஷையின் கதி என்னாய்விட்டது! சாதாரணமாய் வசனிப்பதற்கு வேண்டிய முக்கியமான சொற்களும் வழங்காமற் போகின்றபடியினாலே நமது சுயபாஷை முற்றும் ஒளிமழுங்கிப் புனிதங்குன்றி க்ஷீணித்து விடுகின்றது.

நமது இந்தியாவின் ஒரு பெரும்பகுதியாகிய (Bengal) பங்காளவாசிகள் ஆங்கிலேய பாஷையின் உருசியினால் மதிமயங்கித் தம் சுயபாஷையாகிய பங்காலி பாஷையை பத்துவருடங்களுக்கு முன்வரையில் முற்றும் அலட்சியம் செய்துவந்தனர். அவர்களுடைய ஸ்திரீகளும் ஆங்கிலேயபாஷா ஞானத்தினால் புருஷர்களைப் போலவே நடிக்கத் தலைப்பட்டனர். இவ்விபரீதத்தைக் கண்ட சில தேசாபிமானிகள் அங்கு அடிக்கடி பற்பல உபந்நியாசங்கள் செய்து பிரஜைகளின் மதிமயக்கத்தை மாற்றிய காரணத்தினால் இப்போது பத்துவருஷகாலமாக பங்காலி பாஷையானது அப்பிரதேசத்தில் மிகவும் யாவராலும் கையாளப்பட்டு வருகின்றது. ஆங்கிலேய பாஷையில் மிகவும் பாண்டித்திய மடைந்து சிறந்த பி-ஏ, எம்-ஏ, பட்டங்கள்பெற்ற வித்வ சிரோமணிகளாகிய சில பங்காலிகள் ஒருவர்க்கொருவர் கடித சம்பாஷணை செய்து வருகையிலும் சுதேசாசார சம்பந்தமான கூட்டம் கூடும்போதும், தத்தம் கிருகங்களில் வசனிக்கும்போதும், இன்னும் அநேக சந்தர்ப்பங்களிலும் சுயபாஷையை யன்றி ஆங்கிலேய பாஷையையாவது அப்பாஷையின் வார்த்தைகளையாவது கூடுமானவரையில் உபயோகிக்கலாகாதென்று பெருஞ் சபதம் பண்ணிக்கொண்டு ஒரு கட்டுப்பாடாயிருந்து வருகின்றார்கள். அன்றியும் அச் சுயபாஷையில் இப்போது சில பத்திரிகைகளை ஆங்கிலேய பாஷா ஞானிகளாகிய சில சிறந்த பங்காலி பண்டிதர்கள் நடத்திக்கொண்டு வருகின்றார்கள். ஆங்கிலேய பாஷையிலே எழுதப்பட்ட சில சிறந்த பத்திரிகைகளைப்போலவே பங்காலி பாஷையில் எழுதப்பட்டு வரும் அப்பத்திரிகைகளும் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டு வருகின்றன. நமது பங்காளத்துச் சகோதரர்கள் செய்துகொண்டவண்ணம் ஒருவித சங்கேதத்தை

இத்தேசத்து ஏனைய பிரதேசவாசிகளும் செய்துகொள்வது சர்வோத்தமமாகும்.

நம்முடைய தேசத்தில் அனுஷ்டிக்கப்பட்டுவாராத அப்பியாசங்கள் முதலியவற்றிற்கும், இங்கு அகப்படாத பண்டங்கள் முதலியவற்றிற்கும், நமது சாஸ்திரங்களில் கூறப்படாத கோட்பாடுகள் முதலியவற்றிற்கும் சுயபாஷைகளில் வார்த்தைகளகப்படுவது துர்லபந்தான். அப்படிப்பட்ட விஷயங்களுக்காகமாத்திரம் அந்நியபாஷையிலுள்ள வார்த்தைகளைக் கையாளவேண்டியது இன்றியமையாததானபடியினால், அது எவ்வளவுங் கூடாதென்பதல்ல எம் கருத்து. சுதேசிகள் ஆங்கிலேய பதங்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் உபயோகிக்காமலே ஆங்கிலேய பாஷையின் விஷயமாகப் பெருந் துவேஷம்பாராட்டி அடம் சாதிக்க வேண்டுமென்று யாம் இங்குக் கூறவரவில்லை.

அந்நியஜாதியாருடன் கூட்டுறவு கொண்டுவருகையில் அவர்களுடைய நடை யுடை பாவனைகள் நம்மிடத்துப் படிவனபோல் அவர்களுடைய பாஷையின் சொற்களும் நம்முடைய பாஷையில் பையப் பையப் புகுவது இயல்புதான்.

“பழையனகழிதலும் புதியனபுகுதலும்
வழுவல கால வகையினானே.”

யாதொருபாஷையினுள்ள சில பதங்கள் வழங்காமற்போவதும் நூதனமாகச் சில பதங்கள் வழங்கத் தொடங்குவதும் குற்றமாகமாட்டா, அங்ஙனமாவது கால இயல்பு என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். இரண்டு ஜாதியார் ஒருவரோடொருவர் கலந்து உறவாடும்போது அவர்களுடைய பாஷைகளும் உறவாடாமற் போகுமோ? மகமதியர்கள் நம்முடைய தேசத்தை அரசாண்டு வருகையில் அவர்களுடன் நம்மவர் கலந்துறவாடிய காரணத்தினால் தயார், ஆஜர், பதில், பத்ரம், பந்தோபஸ்த், உஷார் முதலிய சொற்கள் இந்துஸ்தானி பதங்களென்று நமக்குத் தெரியாமலே நம் சுயபாஷையில் நுழைந்துவிட்டன. இம்மட்டோ? நம்மூர் மா-நெய்-சர்க்கரை-பருப்பு முதலிய வஸ்துக்களைக் கொண்டே செய்யப்படும் பலகாரங்களெல்லாம் மிட்டாய், லட்டு, பர்ப்பி, பூந்தி, அல்வா, ஜிலேபி, என்னும் மகம்மதிய நாமங்களையே பெற்று நம்மூரில் இன்றைக்கும் வழங்கிக்கொண்டு வருகிற விசித்திரத்தைப் பார்க்குமிடத்து, நாம் யாருடன் உறவாடுகின்றோமோ அப்படிப்-



பட்ட அந்நிய ஜாதியாருடைய பதங்கள் நம் பாஷையில் நுழைந்துவிடுமென்று தெளிவாய்த் தெரியவருகிறது. அத்தகைய அந்நிய தேசத்தார் நம் தேசத்து அரசர்களா யிருப்பார்களாகில் அவர்களுடைய நடை யுடை பாவனைகளும் வார்த்தைகளும் அதிலேசாய் நம் மனத்தைக் கவர்ந்துவிடு மென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

நம் தேசத்துப் பதங்களாகிய வறட்டி, கிடங்கு, கட்டுமரம், வண்டி, தோட்டி, மனை, காணி முதலிய பதங்கள் ஆங்கிலேயர்களால் வழங்கப்பட்டு வரும்போது அவர்களுடைய பதங்களை நாம் வாங்கினால் பிழை யாது? என்று சிலர் ஆட்சேபிக்கக்கூடும். நம் தேசத்துப் பதங்கள் விதியில்லாமையினால் ஆங்கிலேயர்களால் உபயோகிக்கப்பட்டு வருவனபோல் கலெக்டர், கோர்ட், மாஜிஸ்ட்ரேட், கிரிமினல், ஸிவில், கவர்னர் முதலிய ஆங்கிலேய பதங்களை வேறே விதியில்லாமையினால் நாம் உபயோகிக்கலாம். அதைக் குறித்து யாம் ஆட்சேபனை கூற வரவில்லை. நம்மவர்கள் ஆங்கிலேயர்களுடைய அதிசாதாரண பெயர்ச்சொற்களையும் பண்புச்சொற்களையும் வினைச்சொற்களையும் உரிச்சொற்களையும் முன்னும் பின்னும் தம் சுயபாஷையின் பதங்களும் வேற்றுமை யுருபுகளும் மெய்க்காவலர்போ லிருந்து ஊழியஞ் செய்யுமாறு அந்தோ! ஏனோ உபயோகிக்கவேண்டும்? சில முக்கியமான பெயர்ச்சொற்கள் தவிர நம் பாஷையின் பண்புச்சொற்கள் முதலியவற்றை அனாவசியமாய் ஆபாசமாக ஆங்கிலேயர்கள் எப்போதேனும் வழங்குகிறார்களா? அம்மவோ! நம்மவர்கள் இவ்வளவு அபிமான சூனியர்களா? இடையிடையே ஆங்கிலேய பதங்களை உபயோகித்துச் சுயபாஷையை ஆங்கிலேயர் நகைக்கப் பேசுவதைக் காட்டினும், நம்மவர்கள் ஆங்கிலேய பாஷையிலேயே முழுவதும் வசனித்துக்கொண்டு வருவார்களாகில் அது எமக்குச் சர்வ சம்மதமேயாம். நம் தேசத்துச் சுயபாஷைகள் ஒளிமழுங்கி நிற்பதற்குக் காரணமாயுள்ள இன்னும் சில விஷயங்களையும் அக்குறையைப் போக்குவதற்கேற்ற சில சூழ்ச்சிகளையும் காட்டுகிறோம்.

நமது இந்துதேசத்து வாலிபர்கள் தத்தம் சுயபாஷைகளை அலட்சியஞ்செய்து வருவதனால் விளையும் தீமைகள் சிலவற்றை எடுத்து முன்னர்க் கூறினோம். சிலவற்றை ஈண்டு கூறுகிறோம். நம்மைத் தற்காலத்தில் ஆங்கிலேயர்கள் அரசாண்டு வருகிற காரணத்தினாலேயே ஆங்கிலேய பாஷை உயர்ந்ததென்றும், நாம்

ஆளப்படுபவர்களா யிருக்கிற காரணத்தினாலேயே நமது சுயதேச பாஷைகள் தாழ்ந்தனவென்றும் அநேகர் மதிமயக்கங் கொள்ளுகிறார்கள். அத்தகையோர் ஆங்கிலேய பாஷையிலேயே முழுவதும் எக்காலத்தும் வசனித்துக்கொண் டிருப்பது பெருங் கௌரவமென்றும், அங்ஙனம் வசனிக்கச் சக்தி போதாவிடத்து அப்பாஷையின் பதங்களையேனும் சுயபாஷையின் பதங்களுடன் இடையிடையே கலந்து பேசுவதே ஒருவிதத்தில் கௌரவமென்றும், இவ்விரு வகையான சக்தியும் அமையப்பெறாத சுதேசிகள் சுதேசபாஷையில் எவ்வளவு சிறந்தவர்களா யிருக்கினும் அவர்கள் நன்குமதிக்கப் படுவதற்கு எவ்வளவும் அருகரல்லவென்றும் துரபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். இத்தகைய துரபிப்பிராயங்கொண்ட சில சிறுவர்கள் தாம் சர்வகலாசாலையில் கல்வி பயின்று உயர்ந்த பரீட்சைகளுக்குப் போகும்போது, ஆங்கிலேய பாஷையிலாவது வேறே கணிதம், தர்க்கம், பூகோளம், சரித்திரம் முதலியவற்றுள் எதிலாவது போதுமான அளவுக்குத் திறமை பெற்றிராத காரணத்தினாலே பரீட்சையில் அபஜய மடைவார்களாகில், அவர்கள் தம்முடைய நண்பர் உறவினர் முதலியோர் எந்தப் பாடத்தில் தவறிப்போனீரென்று பரிந்து உசாவுகையிலே வாஸ்தவத்தில் சுயபாஷையிலே தவறிப் போகாமலிருந்தும் அதிற்றான் தவறிப்போனேனென்று பொய்யுரை கூறிப் போலிக் கௌரவம் பாராட்டிக் கொள்ளுகிறார்கள். பேதமையில் இப்படிப்பட்ட வித்தியார்த்திகளுக்கு எவரும் நிகரில்லை. தாய்ப் பாஷையாகிய சுயபாஷையில் தவறுவது ஏனைய பாடங்களில் தவறுவதைக் காட்டினும் மிகுந்த அவமான மென்பதையும், தமக்கு முலைப்பால் தந்து பரிவுடன் வளர்த்த தாயின் பாஷையைத் திரஸ்காரம் செய்வதனால் அத்தாயின் விஷயமாகச் செய்நன்றி மறந்ததாகுமென்பதையும் அவர்கள் உணர்ந்திலர்போலும்!

இத்தேசத்துச் சிறுவர்கள் உண்மையிலே ஆங்கிலேய பாஷையிற் சிறந்தோங்க வேண்டுமென்கிற எண்ணம் சர்வகலாசாலைச் சங்கத்தவர்க் கிருக்குமாயின் அவர்கள் பிரதமத்திலே சுதேச சிறுவர்களைத் தம் சுய பாஷையில் நல்ல பாண்டித்தியம் பெறும்படி செய்வது அத்தியாவசியமென்று, சில வருடங்களுக்கு முன் இச் சென்னையில் துரைத்தனத்தார் சார்பிலே (Advocate General) நியாயதுரந்தர மஹாநிபுணராயிருந்த கன்னிங்ஹாம் துரையவர்கள்



ஒரு உபந்நியாசம் செய்தனர். சர்வ கலாசாலைப் பரீட்சைகளில் தேறவேண்டிய சிறுவர்கள் தத்தம் சுயபாஷையிலே மொத்த எண்ணில் நான்கிலொருபாகம் பெற்றால் போதுமென்று முன்னே ஏற்பாடு செய்திருந்த இச் சென்னைச் சர்வகலாசாலைச் சங்கப் புலவர்கள், இப்போது சுயபாஷையிலே மொத்த எண்ணில் மூன்றிலொருபங்கு பெற்றால்தான் சிறுவர்கள் பரீட்சையில் தேறினவர்களாக எண்ணப்படுவார்களென்று நிபந்தனை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இது மிக்க உசிதமான நிபந்தனையென்று யாம் புகழ்ந்து கொண்டாடுகிறோம். சுயபாஷையிலே மொத்த எண்ணில் ஒவ்வொரு சிறுவனும் குறைந்தது பேர்பாதியாவது வாங்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தால் பின்னும் உசிதமா யிருக்குமென்பது எம் அபிப்பிராயம். அதற்குச் சில நியாயங்கள் அடியிலெடுத்துக் காட்டுகிறோம்.

யாதொரு சிறுவன் அந்நிய பாஷையைக் கற்கப் புகுவதன் முன் குறைந்தது நாலைந்து வருடமாவது தன் சுயபாஷையிலே இலக்கண இலக்கிய ஞானம் பெற்றிருப்பது பெரும்பயனுக்கு ஏதுவாகும். அப்படிப்பட்டவன் அந்நிய பாஷையைக் கற்கப் புகுவானாயின் அது அவனுக்கு அதிலேசாய் வந்துவிடும். ஏனெனில், சற்றேறக்குறைய எல்லாப் பாஷைகளும் ஒரே மாதிரியான மூலாதாரக் கோட்பாடுகளை யனுசரித்தே செய்யப்பட் டிருக்கின்றன. இப்போது நமது துரைத்தனத்தார் சிறுவர்களின் கல்வி அபிவிர்த்தி விஷயத்தில் அதிக நாட்டமுடையவர்களாகி அளவிறந்த உசிதமான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்களேனும் ஓர் பெருங் குறை எமக்குப் புலப்படுகின்றது. அஃது யாதெனில் — இப்போதைய ஏற்பாட்டின்படி சிறு குழந்தைகள் முதலில் தத்தம் சுயபாஷையின் நெடுங்கணக்கை ஆரம்பிக்கும்போதே ஆங்கிலேய பாஷையின் நெடுங்கணக்கையும் ஆரம்பித்துக் கற்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள். இது ஒரு பெருங் குறையென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. சிறுவர்கள் ஆங்கிலேய பாஷையின் எழுத்துகளையும் அசைகளையும் சொற்களையும் சொற்றொடர்களையும் கற்கும்போது எவ்வளவு சிரமை அடையவேண்டியவர்களா யிருக்கிறார்களோ. அவ்வளவு சிரமையைத் தமது சுயபாஷையின் எழுத்துகளையும் அசைகளையும் சொற்களையும் சொற்றொடர்களையும் கற்கும்போதும் அடைய வேண்டியவர்களா யிருக்கிறார்கள் இவ்வாறே ஆங்கிலேய பாஷை-

யில் முதற் பாட புஸ்தகம் படிக்கும் சிறுவர்கள் சுயபாஷையில் முதற் பாட புஸ்தகத்தைத்தான் வாசிக்க வேண்டியவர்களா யிருக்கின்றனர். ஆகவே ஆங்கிலேய வகுப்புட் பாடங்களும் சுயபாஷை வகுப்புப் பாடங்களும் சிறுவர்களுக்கு ஒரு தன்மையனவாகவே யிருக்கின்றன. இதனால் அந்நிய பாஷையாகிய ஆங்கிலேய பாஷை சிறுவர்களுக்கு எவ்வளவு பிரயாசையா யிருக்கின்றதோ அவ்வளவு பிரயாசையாகவே சுயபாஷையும் அவர்களுக்கிருக்கின்றது. இளமைப் பருவத்தில் சிறுவர்களுக்கு அதிக பிரயாசை கொடுப்பதனால் அவர்களுடைய மனமும் தேகமும் பலமுங் குன்றிவிடுகின்றன. இப்படி யாவதனால் அவர்களுடைய வாழ்நாள் எல்லாவிதத்திலும் க்ஷீணித்துப்போகுமே! ஆங்கிலேய பாஷையின் இலக்கணத்தைக் கற்கத் தொடங்குவதற்கு முன் ஒவ்வொரு வித்தியார்த்தியும் தன் சுயபாஷையின் இலக்கணத்தைச் செவ்வையாய் வாசித்திருக்க வேண்டும். இல்லாவிடில் அந்நிய பாஷையிலுள்ள சொற்களுக்குள்ளே பெயர் வினை இடை உரி என்னும் பாகுபாடுகளையும் வாக்கியங்களில் அச்சொற்களுக்குள்ள சம்பந்தங்களையும் இன்னும் பாஷை நடையைச் சேர்ந்த அனேக விசித்திரங்களையும் அறிந்துகொள்வது மிகவும் துர்பலமாய் முடியும். ஆகையால் அந்நிய பாஷையைக் கற்கத் தொடங்கும் ஒருவன் தன் சுயபாஷையைக் குறைந்தது நாலைந்து வருடம் வரையில் கற்றுத் தேர்ச்சியடைவானாகில் அவ்வந்நிய பாஷையை அவன் அதிலேசாய் வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளக் கூடியவனாயிருப்பான். இந்த விஷயத்தை இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் அநுபவவாயிலாகக் கண்டு தெளியலாம்.

மேற்கண்ட காரணங்களினால் பிரதமத்திலேயே நம் தேசத்துச் சிறுவர்கள் இக்காலத்துக் கல்வி ஏற்பாட்டின் குறைவினாலே தம் சுயபாஷையை அந்நிய பாஷையைப் போலவே பாவிக்க வேண்டியவர்க ளாகின்றார்கள். இதனால் ஆங்கிலேய பாஷையில் அவர்கள் விரைவிலே தேர்ச்சி யடையக் கூடாதவர்க ளாய்விடுகின்றனர். இங்கிலாந்திலே ஆங்கிலேய பாஷையில் பாண்டித்தியம்பெற்ற பலகனவான்கள் ஐரோப்பா கண்டததில் வழங்கும் பற்பல பாஷைகளையும் நம்தேசத்துக் கஷ்டமான சமஸ்கிருதம் திரவிடம் முதலிய பாஷைகளையும் நாலைந்து வருடங்களுக்குள்ளே கற்றுத் தம்முடைய சுயபாஷையிலே மொழி பெயர்த்துக் கொள்ளக்கூடிய நிபுணத்துவ மடைந்துவிடுகிறார்கள். அவர்கள் அங்ஙனம் ஆவதற்குக் காரணம் யாது? தம்முடைய சுயபாஷையில் அடைந்த தேர்ச்சியே அதிசீக்கிரத்தில் ஏனைய எல்லாப் பாஷைகளிலும் அடையும் தேர்ச்சிக்கு வழிகாட்டியா யிருக்கின்றது. இத்தேசத்துக் கல்விமான்களுக்குள் அனேகர் தம் சுயபாஷையிலுள்ள கிரந்தங்களை ஆங்கிலேய பாஷாந்தரம் அதிலேசாய்ச் செய்யக்கூடியவர்களா யிருந்து ஆங்கிலேயர்களுக்குப் பயன்படுகின்றார்களே யன்றி ஆங்கிலேய பாஷையிலுள்ள கிரந்தங்களைத் தமது சுயபாஷைகளில் மொழிபெயர்த்துத் தம் நாட்டவர்க்குப் பயன்படுவதில்லை. இது என்ன விபரீதம்! ஆங்கிலேய கனவான்கள் தம் தேசத்திடத்தும் தம் தேசத்தாரிடத்தும் கொண்டிருக்கும் அபிமானம் நம் தேசத்துக் கனவான்களுக்கு நம்முடைய நாட்டிடத்தும் நாட்டவரிடத்தும் இல்லைபோலும்! அந்நிய பாஷையில் அடைந்திருக்கும் அவ்வளவு தேர்ச்சி அக்கனவான்களுக்குத் தம் சுயபாஷையில் இராமையே அதற்குக் காரணம். இத்தேசத்துக் கனவான்கள் அனேகர் இராமாயணம் பாரதம் முதலிய காவியங்களின் சரித்திரங்களைத் தெரிந்துகொள்ளத் தொடங்குகையில் ஆங்கிலேயர்கள் ஆங்கிலேய பாஷையில் தம் நாட்டவருடைய உபயோகத்துக்காகச் செய்துகொண்ட மொழிபெயர்ப்பையே எடுத்து வாசிக்கின்றார்கள். இது ஆங்கிலேயர்களுடைய நகைப்புக்கு எவ்வளவு இலக்காகும்!



தற்காலத்தில் நமது சிறுவர்கள் வித்தியாரம்பஞ் செய்யும்போதே சுயபாஷையையும் அந்நிய பாஷையாகிய ஆங்கிலேய பாஷையையும் ஏககாலத்தில் ஒருபடித்தாய்க் கற்கவேண்டியவர்களா யிருக்கிறபடியினால் அவ்விரண்டு பாஷைகளும் ஒரு தன்மையனவாகவே கஷ்டத்தைப் பயக்கின்றன வென்று முன்னமே கூறினோம். பிறகு அவர்கள் மேல்வகுப்புகளுக்குச் செல்லும்போது சுயபாஷையைப் படிப்பதெல்லாம் ஒரு மணி நேரந்தான். மற்ற ஐந்து மணி நேரமும் ஆங்கிலேய பாஷையையும் அந்தப் பாஷைவாயிலாகக் கணிதம் பூகோளம் சரித்திரம் தர்க்க முதலிய பாடங்களையுமே அவர்கள் கவனிக்க வேண்டியவர்களா யிருக்கிறபடியினால் தினம் ஒருமடங்கு சுயபாஷையில் நாட்டமும் அதற்கு ஐந்து மடங்கு அந்நிய பாஷையில் நாட்டமும் அவர்கள் வைக்க வேண்டியவர்களா யிருக்கின்றார்கள். இந்தஸ்திதியிலே அவர்களுக்குச் சுயபாஷையில் எங்ஙனம் உருசியும் ஞானமும் விளைதல் கூடும்? எதை வாசிப்பது ஒருவனுக்குச் சுலபமா யிருக்கிறதோ

அதில்தான் அவனுக்கு உருசியுண்டாகும். மேற்போந்த நியாயங்களினால் சுயபாஷை ஆங்கிலேய பாஷையைக் காட்டினும் சிறுவர்களுக்குக் கஷ்டமாயிருக்கிறபடியினால் அவர்களுக்கு அது ஆங்கிலேய பாஷையைவிட உருசி குறைந்ததாகக் காட்டுகிறது. இது இயற்கைதான். சுயபாஷைகள் இப்போது முற்றும் நசிந்து போகாமல் எங்கும் தலைகாட்டிக்கொண்டிருப்பதற்கு நமது ஆங்கிலேய கவர்ன்மெண்டாருடைய நன்முயற்சியே காரணமாயிருந்தபோதினும் அவர்கள் வித்தியா விஷயமாகச் செய்திருக்கும் ஏற்பாடே ஒருவிதத்தில் அச் சுயபாஷைகளைப் பின்னும் நன்றாய்ச் செழித்தோங்க வொட்டாமற் செய்கின்றது. ஆனால் மானிடரால் செய்யப்படும் எவ்வகைப்பட்ட ஏற்பாடுகளுள்ளும் சில குறைவுகளிருப்பது இயற்கைதான்.

'நெல்லுக்குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு'

என்னும் பிரமாணத்தை நாம் நினைப்பூட்டிக்கொள்ள வேண்டும். இங்கு காட்டப்பட்ட குறைவுகளைப் போக்குவதற்கு வித்தியா விசாரணைத் தலைவர்கள் சீக்கிரத்தில் தக்க ஏற்பாடு செய்தல் வேண்டுமென்று யாம் குறையிரக்கின்றோம்.

நம் தேசத்து வித்தியார்த்திகளிடத்து ஒரு பெருங்குறையுளது. ஆங்கிலேய பாஷையில் போதிக்கப்படும் பாடங்களைக் கற்கும்போது வகுப்புகளில் அவர்கள் எவ்வளவு சிரத்தையுள்ளவர்களாயும் உபாத்தியாயர்களிடத்தில் அமரிக்கையும் விசுவாசமுமுள்ளவர்களாயுமிருக்கிறார்கள்! சுயபாஷை கற்கும் வகுப்புகளில் பண்டிதர்களை அவர்கள் அலக்கழித்துப் பாடத்திற் சிரத்தைகுன்றிப் பெரும்பழிக்குள்ளாகின்றார்கள். அவ்வகுப்புகளில் அவ் வித்தியார்த்திகள் தம் தேசத்துப் பண்டிதர்களை அலக்கழிப்பதை ஆங்கிலேய பாஷையைக் கற்பிக்கும் போதகாசிரியர்களாகிய ஐரோப்பிய கனவான்கள் காணும்போது அவர்களுக்கு அச்சிறுவர்மாட்டுண்டாகும் அருவருப்பை இவ்வளவினதென்று இங்கு எடுத்து மொழிகளினால் காட்ட யாம் வலியுளேமல்லேம்.

ஒவ்வொருவனும் இளமைப் பருவத்திலேயே தன் தன் தேசாசாரம் குலதருமம் மதலட்சணம் தெய்வ இலக்கணம் முதலியவைகளைத் தெரிந்திருத்தல் வேண்டும். அதற்குச் சுயபாஷையின் ஞானம் இன்றியமையாதது. ஆகையால் தாய்ப் பாஷையில்



ஞானசூனியர்களாயிருக்கும் சிறுவர்கள் பெரும்பாலும் தெய்வநம்பிக்கையற்றவர்களாயும் குலாசார முதலியவைகளை உணராதவர்களாயுமிருக்கின்றனர். இந்த ஸ்திதியைக் காட்டினும் நமது தேசத்துச் சிறுவர்களுக்கு வேறே ஹீனஸ்திதியுமுண்டோ?

மேலெடுத்துக் காட்டப்பட்ட நியாயங்களைச் சித்த சமாதானத்துடன் கவனித்து நம் தேசத்துச் சிறுவர்கள் தத்தம் தாய்ப் பாஷைகளை அலட்சியம் செய்யாமலிருப்பார்களாக. அவர்கள் அங்ஙனம் செய்யா வகைக்கும், அது அவர்களுக்குச் சுலபமாயிருந்து உருசியைப் பயக்கும் வகைக்கும் காருண்யமுள்ள நமது துரைத்தனத்தார் வேண்டிய முயற்சி செய்வாராக. இத்தகைய குறைவுகளையெல்லாம் போக்கி நம்மைக் குணப்படுத்துவதற்குத் தற்காலத்தில் துரைத்தனத்தாரைக் காட்டினும் வேறு நமக்கு யாவருளர்? ஏனெனில்,

'அனைவோர்க்குந் தெய்வமிலை மூகப்பைம் பூணிறை."

ஜனவிநோதினி.

# CHILDREN OF DISTANT LANDS
## தூரதேசத்துக் குழந்தைகள்

### ஜப்பான் சிறுவர் - சீனச் சிறுவர்

சில வருஷங்களுக்கு முன் ஜப்பான் சிறுவர்களைப்பற்றிச் சில விஷயங்கள் நமது நல்லாசிரியனில் வெளிவந்த விஷயம் பலர் நன்கு உணர்வார்கள். அவற்றை விரைவில் முடிக்குமாறு நண்பர் பலர் விரும்பினர். அதனால் ஜப்பான் சிறுவர்களைப் பற்றியும் சீனச் சிறுவர்களைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் விளங்குமாறு இனிய புஸ்தகம் ஒன்றை எழுதி வெளியிட் டிருக்கின்றோம். இதை வாசிப்பதனால் சிறுவர்களுக்குப் பூகோள விஷயமும் சரித்திர விஷயமும் நல்லொழுக்க விஷயமும் நன்கு புலனாகும். இது தாயார் குமாரனுக்குக் கதை சொல்லும் விதமாக மிக எளிய நடையில் அநேக சித்திரப் படங்களுடன் பெரிய எழுத்தில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. சிறுவர்களுக்கு இன்பமூட்டும் இனிய கதைப் புஸ்தகம் போல்வது. இதனை ஒவ்வொரு பாடசாலையிலும் தவறாமல் உபயோகிப்பார்கள் என்று நம்புகின்றோம். விலை அணா 6.

---

# QUEEN MARY READERS
## மேரி ராணி வாசக புஸ்தகங்கள்

இப்பெயர்கொண்ட புஸ்தகங்கள் ஒன்றுமுதல் ஐந்துவரை வெளிவந்துள்ளன. இவை ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் பெண்களுக்காகவே ஏற்ற முறையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. நம் இந்திய குடும்பத்துக்கு அவசியமாகத் தெரியவேண்டிய அரிய விஷயங்கள் எளிதாகத் தெரியும்படி கூறப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு இனிய பாடல்கள் சேர்க்கப்பட் டிருக்கின்றன. நம் இந்திய பெண்கள் இப்புஸ்தகங்களை வாசிப்பதால் பல நன்மைகள் விளையுமென்பதில் தடையில்லை. குழந்தைகளைத் தாலாட்டல், விளையாட்டுக் காட்டல், நலங்கிடும் பாடல்கள் பெரிதும் அழகுடன் விளங்குகின்றன. இவ்வாறு பெண்களுக்கெனத் தனியாக முதல் முதல் வெளிவந்த புஸ்தகங்கள் இவைகளே. உபாத்திமார்கள் யாவரும் வாங்கிப்பார்த்துத் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்துப் பயன்பெறுவார்களென நம்புகின்றோம்.

விலை—I - 2அ., II - 2 அ. 6 பை., III - 3 அ., IV - 4 அ., V - 5 அ.

**ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,**
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெரு, சென்னை.

27 JUN 1919



நல்லாசிரியன்
உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்
மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை
வயது 14 | 1919ளு ஏப்பிரல்மீ | மாதம் 11

# FAIRY TALES
## தேவ கன்னிகைகளின் கதைகள்

சென்ற பெப்ருவரி மாத சஞ்சிகையில் 'கதை சொல்லல்' என்னும் விஷயத்தைக் குறித்து நாம் எழுதியுள்ளதை உபாத்தியாயர்கள் நன்கு கவனித்திருப்பார்களென நம்புகின்றோம். கதைகளைச் சிறுவர்கட்குச் சொல்லவேண்டியதன் அவசியத்தை அறிந்த பின் கதைகளின் பலவகைகளையும் தெரிந்துகொள்ள வேண்டுமாதலினாலும் அவற்றுள்ளும் தேவகன்னிகைகளின் கதைகள் பல திறப்பட்ட நன்மைகளைச் சிறுவர்கட்குப் பயப்பனவாக இருத்தலினாலும் இம்மாத சஞ்சிகையில் இதனை எழுதத் துணிந்தனம். இவற்றைப் படிக்கும் நம் நண்பர்கள் இவற்றிலுள்ள விஷயங்களைச் சிறிது சிறிதாகக் கையாளத் தொடங்கவேண்டுமெனப் பெரிதும் விழைகின்றோம்.

'கதை கேட்டல்' என்னும் முறை மிகப் பழைய காலத்தினின்
றும் வழிவழி வந்ததாகும். அவற்றால் விளையும் நலங்களும் எல்-
லாரும் கைகண்டவைகளே. உலகத்தில் எந்த நாட்டிலும் பேசுவ-
தே முந்தியது. அதன் பின்னரே எழுதுவது உண்டாகும்
என்பது யாவரும் அறிந்த உண்மை. செவி வழியாகக் கேட்-
கப்பட்டுவரும் ஒரு விஷயம் நூல்வடிவத்தில் வருவதற்குச் சிறிது
காலம் செல்லும். நம் நாட்டிலும் அங்ஙனமே காலம் சென்ற-
தாகத் தெரிகின்றது. வேதம், அது தோன்றிய பல ஆண்டுகட்குப்
பின்புதான் எழுதி வெளியிடப்பட்டது. பல்லாண்டுகளாக அஃது
ஒருவர் மற்றொருவருக்கு ஓதுவதாகவே இருந்தது. அதனால்
வேதத்துக்கு ஓத்து, எழுதாக்கிளவி, மறை என்று பல காரணப்
பெயர்கள் உண்டாயின. பல சாத்திரங்களும் இவ்வாறே கேட்கப்-
பட்டுவந்தன. இதனால்தான் ஔவையாரும், 'கேள்விமுயல்' என
ஆத்திச்சூடியில் அருளிச்செய்தனர். இலக்கண நூல்களிலும்
நூல் கற்றலைக் கேட்டல் என்றும் அதனைக் கற்கும் மாணக்கனைக்
கேட்பவன் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இன்னும் 'நாலடி-
யார் பாடங்கேட்டார்' 'அவருக்கு நல்ல கேள்வி உண்டு' என்-
னும் வழக்குக்களும் காணப்படுகின்றன. ஆகவே கதைகளும்
தொன்றுதொட்டுக் கேட்கப்பட்டுவந்தன என்பது தெளிவாகும்.
அத்தகைய கதைகள் பல திறப்பட்டவை. அவற்றுள் சிலவே
நூல்வழியாக வெளிவந்துள. வெளிவாராதன பல இன்றும்
உண்டு.

கதைகளென வெளிவருவன அனைத்தும் பொய்யோ, அன்றி
அவற்றில் சில மெய்யோ, அன்றி எல்லாவற்றிலும் மெய்யும்
பொய்யுங் கலந்திருக்குமோ வென நாம் ஐயுறுகின்றோம். எல்-
லாக் கதைகளிலும் ஒவ்வோர் உண்மை உண்டு; எல்லாக் கதை-
களும் ஒரு காரணம் பற்றியே உண்டாகும். ஆனால் அக்-
கதைகளில் உணர்த்தப்பட்டிருக்கும் உண்மையின் உயர்வுக்கு
ஏற்பவும் அவைகள் தோன்றிய காரணங்களின் மேன்மைக்கு
ஏற்பவும் கதைகள் ஏற்றத்தாழ்வுகளைப் பெரும்பான்மையும்
பெறும். சில கதைகள் உலகத்தில் நடந்த வரலாற்றை உள்ள-
வாறே கூறும்; சில சிறிது பொய் கலந்துகூறும; ஆனால்
அப்படிப் பொய் கலந்துவரும் கதைகள் அறிவு நுட்பம் வாய்ந்-
தவனால் கூறப்படுமாயின் அவற்றின் பொருள்கள் மிகச் சிறந்து
விளங்கும்; அது வாய்க்கப் பெறாதவனால் கூறப்படுமானல்



அவற்றின் பொருள் சிதையும். சில கதைகள் முழுவதும் பொய்-
யாகவே இருக்கும். இருப்பினும் அவற்றில் சொல்லப்படும் விஷ-
யங்கள் உண்மையேயாகும் ஆகையால் கதைகளின் உண்மை-
யைப் பலவகையாலும் ஆய்ந்துபார்த்தல் வேண்டும். நம் நாட்டில்
அரசர் கதைகள் பல வழங்கிவருகின்றன. மந்திரி கதைகள் இருக்-
கின்றன. இராக்ஷசர் கதைகள் இருக்கின்றன. தேவர்கள், அசு-
ரர்கள், தேவகன்னிகைகள் இவர்கள் கதைகளும் இருக்கின்றன.
இவையனைத்தும் நமக்கு வேண்டப்படுவனவே. ஒவ்வொரு வகை-
யும் ஒவ்வோர் பயனைத் தரும். உதாரணமாக, அரசர் கதைகளில்
அரசகுமரர் கல்வி கற்ற முறைமையும், அவர்கள் தேசயாத்திரை
செய்ததும், பல துன்பங்களில் சிக்கியதும், அவற்றினின்று
மீண்டமையும், அவர்கள் நாடுகாத்த வரலாறும், நகரி சோதனை
வந்ததும் ஆகிய பல விஷயங்கள் புலப்படுகின்றன. மந்திரி-
கள் கதைகளில் மந்திரிமார்களின் புத்தி சாமர்த்தியமும்,
தங்கள் அரசரைப் பல தீமைகளினின்றுங் காத்தலும் அரசருக்கு
அடங்கி நடத்தலும் தங்கள் உயிருக்கும் அஞ்சாமல் அரசருக்கு
இடித்துக் கூறலும் காணப்படுகின்றன. பொதுவாக மனிதர்-
களைக் காட்டிலும் உடல்வலியும் சாமர்த்தியமும் தீயகுணங்களும்
பொருந்தி யுள்ளவர்களை இராக்ஷசர் அல்லது அரக்கரென்றும்
கூறினர். இக் கதைகளில் அளவு கடந்த திறமைகளும், தீமை-
களின் முடிந்த பயனும் இனிது விளங்குகின்றன. இத்தகைய
குணங்களோடு தேவர்களுக்குப் பகைவராக உள்ளவர்கள்
அசுரர் எனப்படுவர். இவர்களுக்கும் சுரர்களுக்கும் (சுரர் - தேவர்)
அடிக்கடி போர் நிகழும். இவர்கள் தங்களுக்குள் அமர் புரியும்
வழிகளும், இவர்களுடைய சண்டையின் தந்திரங்களும் நினைத்த-
வற்றை முடிக்கும் ஆற்றலைப் பெறச்செய்யுந் தவவொழுக்கங்களும்
பிறவும் இக்கதைகளால் அறியப்படுகின்றன. இவ்வாறே பல
விஷயங்கள் ஆராய்வாருக்குத் தோன்றும். இவற்றால் மனிதர்-
களில் இவ்விவ்வகையினர் இவ்விவ்வாறு தொழி லியற்றுவர்,
மனைவி மக்களை நேசிப்பர், பகையை முடிப்பர் என்னும் தன்-
மைகள் நமக்குப் புல்ப்படுகின்றன. அவற்றின் நன்மை தீமைகளை
அறிந்து நாமும் நம் வாழ்க்கையினைச் செலுத்தலாகும். நிற்க.

மேனாட்டார் தெய்வகன்னிகைகளின் கதைகளையே சிறுவர்-
கட்கு மிகுதியும் எடுத்துச் சொல்லுகின்றனர். அப்படிப்பட்ட
கதைகளும் ஆங்கில மொழிக்கண் நூற்றுக் கணக்காய் இருக்கின்-

றன. அவர்கள் தெய்வ கன்னிகைகளைக் கடற் கன்னிகைகளென்றும் கானகத்துக் கன்னிகைகளென்றும் முக்கியமாய் இரண்டு பகுதியாய்ப் பிரிக்கின்றனர். அவ்வாறே நம் தமிழ் மக்களும் நீரரமகளிர் என்றும் வரையரமகளிரென்றும் பிரித்திருக்கின்றனர். இவர்களைப்பற்றிய கதைகள் நம் நாட்டிலும் பல உள. அவை சிறுவர்கட்கு ஏற்றமானவைகளே ஆகுமென்பதில் ஐயம் சிறிதுமில்லை. இக் கதைகளில் கண்ணைக் கவரத்தக்க பேரழகு வாய்ந்த கன்னிகைகள் பலர் ஒருங்கு சேர்ந்து பளிங்கு சொரிந்தாலன்ன தெளிந்தநீர் நிரம்பிய பொய்கைகளில் நீராடுதலும்; மரங்கள் அடர்ந்து, மலர்ச்செடிகள் துறுமி, நறுமணம் கமழும் பூஞ்சோலைகளில் விளையாடுதலும்; மலைகளின் உச்சியில் இவர்ந்து, இனிது நிற்றலும்; சுனை மலர்ப் பறித்தலும்; குயிலொடு மாறிக் கூவுதலும்; மயிலொடு மாறி யாடுதலும்; கமுக மரங்களில் கட்டிய பொன்னூசல்களில் ஆடுதலும்; கடலில் முழுகுதலும்; கடல் நீரின்மேல் நடந்து செல்லுதலும்; அலைகளில் தோன்றித் தோன்றி மறைதலும்; தங்களுக்குள்ள மந்திரசக்தியினால் சுவரில் எழுதிய சித்திரங்களைப் பேசுவித்தலும்; மந்திர வாளினால் பகைவரைக் கடத்தலும்; தாங்கள் உறையும் அற்புதமான மலைகளில் விசித்திரமான பழங்கள் பன்னீராண்டுக் கொருமுறைப் பழுத்தலும்; ஆச்சரியமான மலர்கள் விரிந்து நினைத்தவற்றைக் கொடுத்தலும்; அவை என்றும் வாடாதிருத்தலும்; ஆகிய செயல்கள் கேட்பவருக்குப் பேரின்பத்தைத் தரும். சிறுபிள்ளைகள் இவற்றைக் கேட்பின் வியப்பினால் விழுங்கப்படுவர். அவர்கள் நினைவில் அளவற்ற அழகும் அன்பும் அதிசயமும் அளவிலாத் திறனுமே எப்பொழுதும் தோன்றிக்கொண்டிருக்கும். எப்பொழுதும் இனியனவற்றையும் நல்லனவற்றையுமே நினைத்தல் வேண்டும். அதனால் நீடிய வாழ்நாளும் நரைதிரை யின்மையும், உடலுக்கு வன்மையும், அறிவுக்கு உரமும் உண்டாகும் என்பது ஆன்றோர் துணிபு. இக் கருத்தே பற்றி நாயனாரும் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்று அருளிச்செய்வாராயினர். 'மனத்தின் வழியது உடம்பு' என்று பெரியோரும் கூறுவர். ஆதலின் தேவகன்னிகைகளின் கதைகளால் நன்மைகள் அநேகம் உண்டாகும் என்பது திண்ணம்.

இத்தகைய கதைகளில் மந்திரவாள், மந்திர சக்தி முதலியன கூறப்படுவதாலும், பொய்கலந்திருத்தலாலும் இவற்றாற் பெரும் பயனில்லையென்று சிலர் நினைக்கலாம். ஆனால் பொய்யாகப் பல



விஷயங்கள் அவற்றுள் இருப்பினும் அவை அனைத்தும் ஒருவருக்-
குந் தீமை பயவாதனவாய் மனிதர்கள் மேன்மேலும் விருத்தி-
யடையவேண்டிய பல வழிகளை உணர்த்துவதாலும், மந்திர-
வாள் முதலியன மந்திரங்களால் சக்தி உண்டாகும் என்பதை
உணர்த்துவதாலும், கேட்கின்றவர்களைச் சாதாரண நிலையினின்று
மேலோங்கச் செய்வதனாலும், இவற்றால் மிகச் சிறந்த பெரும்
பயன் விளையுமென்பதற்குத் தடையில்லை. ஆகையினால் உபாத்தி-
யாயர்கள் அனைவரும் ஆராய்ந்து நல்ல கதைகளைச் சிறுவர்கட்கு
அவ்வப்போது சொல்லிவருதலோடு தேவகன்னிகைகளின் கதை-
களையும் எளிதாகத் தேர்ந்தெடுத்துப் பிள்ளைகட்குச் சொல்லி-
வருவரென எதிர்பார்க்கின்றோம்.

பத்திராதிபர்.

# DEVOTION TO GURU

## குருபக்தி

(வயது 13 முன்தொடர்ச்சி பக்கம் - 207)

பெரியோர் பக்தி— அறிவில் பெரியாரிடம் செலுத்தும் பக்தி.
அப்பெரியார் தங்கள் அநுபவத்தில் கண்ட விஷயங்களைத் தங்கள்
வழித்தோன்றும் நம்மிடத்துக் கருணைகொண்டு புத்தகங்களாக
எழுதிவைத்துப் பொய்யுடம் பழிந்து புகழுடம் பழியாது நிற்-
பவர் என்றும் அவர்களைப் பின்பற்றி அவ்வநுபவ நூல்களில்
பயிற்சியடைந்து அவற்றை விளக்கியும், தங்கள் அபிப்பிராயங்களை
உலகுக்குக் கொடுத்து நிலவும் பெரியார் எனவும் இருவகையாகப்
பிரித்து ஆராய்வாம். இவ்விருவரிடத்தும் அன்பு செலுத்துவது
நம்மவர்க்கு (உபாத்தியாயர்கட்கு) அவசியம். இல்லாவிடில் அறிவு
விருத்தி கெட்டு ஒரே நிலையில் நின்றுவிடும். எப்படியெனில் பூர்-
வாசிரியர்களிடம் அன்பில்லாவிடத்து அவர்களையும் அவர்கள்
நூல்களையும் மதியோம். அதனால் அவர்கள் கண்ட விஷயங்களைப்
பெற முயலாது நிற்போம். நமக்கு அநுபவம் ஏற்பட்ட
விடத்து அவ்வறிவு தானே வருமெனில் உலகிலுள்ள பல்வேறு
வழிகளையும் தாமே யநுபவிக்க வாழ்நாள் சொற்பம். பல பிணி
யுண்டு; அன்றியும் நாம் நம்மிடம் பயிலும் மாணவன் எவ்விதத்-

தொழிலிற் செல்வான் என்று தெரியாததாலும், எல்லோரும் ஒரே தொழிலிற் செல்லார் ஆதலாலும் பல தொழில்களிலு மவர்க்கு அறிவு கொடுக்கவேண்டும். இதுபற்றி எல்லாத்தொழில்களையும் நம் மநுபவத்தில் காணுத லியலாது. ஆகவே தங்கள் அநுபவங்களைக் குறித்து நம்வேலையை இலகுபடுத்திய அவ்வாசிரியர்கட்கு நாம் பக்திசெலுத்தக் கடைமைப்பட்டுளோம். பூர்வாசிரியர்கள் நூல்களைப் பார்க்குமிடத்து அந்நூல்கள் உண்டாகி அநேக ஆண்டுகள் ஆனபடியால் விஷயங்கள் ஒன்று மற்றொன்றாகவோ; அதுவோ இதுவோ வெனத் துணிய முடியாதவை யாகவோ நிற்கும். அப்போது நம்மனம் போனவாறு பொருள்கொள்ளாதபடி தற்காலத்து அந்நூற்பயிற்சி யுடையாரிடம் கேட்டுத் தெளியவேண்டும். ஆதலால் முற்கூறியவரிடம் பக்தி செலுத்துவதற்கு அவர்கள் நூல்களிடத்தில் ஆர்வம், அந்நூற் பயிற்சியுடையாரிடத்து அன்பு, வணக்கம், கீழ்ப்படிதல் முதலிய அவசியமாம்.

இனி, தற்காலப் பெரியார் பலர் பிரசங்கவாயிலாகவும் பத்திரிகை வாயிலாகவும் பல்வேறு விஷயங்களைப் பரவச்செய்கிறார்கள். அவர்களிடத்தும் பக்திசெலுத்தி அந்நல்லார் எழுதும் பத்திரிகைகளை ஆதரிக்கவேண்டும். அதற்குச் சாலச் சிறந்தது 'நம் நல்லாசிரியன்'தான். நம் நல்லாசிரியன் அரும்பெரும் விஷயங்களைக் கொண்டு 14 வருஷங்கள் உழைத்து வருகிறான் என்பதை யறிய நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆகவே ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் அநுபவங்களை அவனுக்கனுப்பவும் சந்தேகங்களைக் கேட்டுத் திருந்தவும் 'நம் நல்லாசிரியனை' பணங் கொடுத்து நல்வரவு கொள்ளுங்கள்.

பிரசங்கவாயிலாக அறிவு பரவச்செய்யும் நல்லாரைக் கண்டும் அவர்களோடு நெருங்கிப் பழகியும் அவர்கள் பிரசங்கங்களைக் கேட்டும் உங்கள் அறிவை விருத்திபண்ணுங்கள்.

இதனால் அறிவு நமக்கு நாளும் விருத்தியாவதோடு கீர்த்தியும் அதனால் பொதுஜன வாழ்த்தும் கிடைக்கிறது. பொதுஜன வாழ்த்தே புண்ணியன் வாழ்த்தாக நாம் நாளும் நன்மை பெறுவோம். இவ்வாறின்றி இருவகை யாசிரியரிடத்தும் பக்தி செலுத்தாவிடில் நம்மறிவு விருத்தியாகாததோடு அவரைப் பிழைத்தவராவோம். அப்பெரியாரைப் பிழைத்தார்க்குப் பலன் நம்மாசிரியர் வள்ளுவனார் நன்கு தெரிவிக்கிறார் அது பின்வருமாறு.



"எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியோர்ப் பிழைத்தொழுகு வார்."

காட்டுத் தீயால் சூழப்பட்டானுக்குத் தெய்வம் துணைநின்றும் மழை பெய்வித்தும் காக்கலாம்; பெரியாரைப் பிழைத்தார் யார் உதவி பெற்றும் உய்யமுடியாது.

பாலர்பக்தி — உயிர்கள் யாவும் கடவுளின் சாயைகள் ஆதலாலும் அதிலும் பகுத்தறிவு கூடி மனிதன் விளங்குவதாலும் அவனே மேம்பட்டவன். கடவுள் இயற்கையாக எல்லாரையும் சமமான அறிவோடு படைப்பதால் குழந்தைகளில் ஓர் வித்தியாசமில்லை, அவர்கள் தெய்வத் தன்மை உலகமாயையோடு கலப்புறாமல் இருப்பதாலும், பின்னால் அறிவு முதிர்ச்சி பெற்று நாட்டின் பிரதம புத்திரன் ஆகலாமாதலாலும் அவர்களை நாம் பக்தி பண்ணவேண்டும். அவர்களிடம் தெய்வாம்சம் இருப்பது சந்தோஷம், ஆராய்ச்சி, சுறுசுறுப்பு முதலிய குணங்களால் வெளிப்படும். இதுபற்றி 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் போது' என்ற பழமொழி வழங்குகின்றது. குழந்தைகள் அன்பைக்கொண்டு அவர்களை நம்மிடம் நெருங்கிப் பழகச் செய்தால், அவர்கள் நம் நோக்கம், நடை இவற்றைச் சீக்கிரம் பின்பற்றுவார்கள். அதனால் நம் வேலை இலகுபடும். ஆனால் சிலர் குழந்தைகளிடம் அன்புகொள்ள வேண்டுமா; ஆனால் பயத்தோடு கூடிய அன்பு வேண்டாம் என்று கருதுவர். அவர்கள் தங்கள் வேலையின் பொறுப்பு அறியாதாரே. எப்படி யெனில், அன்பு காட்டினால் குழந்தைகள் நம்மைப் பின்பற்றுவார்களானாலும் நாம் நம் தொழிலின் — அதாவது அவர்கள் தெய்வாம்சம் என்று அறியும் அறிவைப் பெறவும் தேசத்தின் நன்மக்களாகக் கூடிய அறிவைப் பெறவும் செய்யும் தொழில் — பொறுப்பை யறிந்து ஒழுங்கான பாதையில் நடக்கச் சிறிது பயம் இருந்தாலன்றி முடியாது. யோசிக்கின் அவ் வேலையைவிடப் பொறுப்புள்ள வேலை உலகில் வேறு கிடையாது ஆதலால் அன்னாரிடம் பக்தி செலுத்தியன்றவரையில் பக்தியை வளரச்செய்தாலன்றி நம் தொழில் சித்தியடையாது.

தெய்வபக்தி — இது யாவர்க்கும் அவசியம் வேண்டும்; இது பற்றி எழுதின் விரியும் எனினும் சுருக்கமாகக் கூறுவாம்.

இப்பக்தி யில்லாதபோது மிக்கார் யாருமில்லை என்ற அகங்காரமும், தண்டிப்பார் ஒருவரு மில்லை என்ற துணிபும்

ஏற்படும். அதனால் நம்மனம் போனவாறு நடந்து மிருகமாகத்திரிவோம். அப்போது உலகோர் துஷ்டன் எனத் தூரவிலகுவர். உடனே நாம் தொழிலிழந்து வாடி வருந்திநிற்போம். இன்னும் அவனால் ஆக்கப்பட்ட அமைப்பின் வனப்புக்களை வகுத்துக் கூறி மற்றோர்க்கு அறிவு கொளுத்தும் நமக்கு இதுபற்றி அதிகம் வேண்டாம். ஆகவே காலை, மாலை, இரவு இந்நேரங்கள் நாம் வணங்குவதோடு மாணாக்கருக்கும் கடவுள் வந்தனை செய்யப் புத்தி புகட்டி, நாம் வழிகாட்டியாகவேண்டும். இதுகாறும் கூறிய பக்திகளில்—தேச பக்தி, பாஷை பக்தி, பெரியார் பக்தி, பாலர் பக்தி, தெய்வ பக்தி — யாதாம் ஒன்று நழுவ விடப்பட்டால் மற்றவை தாமே நசிக்கும். ஆதலால் ஆசிரிய நண்பர் அனைவரும் இவ்விதப் பக்தி கொண்டு தம் தொழிலை நடத்தி, தம் வாழ்நாளைச் சுகமாகக் கழிக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

P. R. PARAMASIVA MUDALIAR,
*G. T. S., Dindigul.*

## STORY AND SONG

### "கதையும், பாட்டும்"

ஒரு காட்டில் கரடியும், புலியும் சேர்ந்து அந்நியோன்னியமாக வாழ்ந்துவந்தன. ஒருநாள் அவ்விரண்டு விலங்குகளும் இரை தேடும்பொருட்டு வெளிக்கிளம்பி காடுமுழுவதும் அலைந்து திரிந்து கடைசியாக ஒரு ஆட்டுக்குட்டியைக் கண்டன. புலி அதைக் கண்டதும் சரேலெனப் பாய்ந்து கிழித்து அதைக் கொன்றது.

2. பிறகு, பெற்றதைத் திருப்தியோடு அருந்தாமல், இளைய ஆட்டின் இறைச்சியைப் புசிக்க இனிமையாயிருந்ததால், தானே அதை மற்றொன்றுக்குக் கொஞ்சங்கூடக் கொடுக்காமல், அருந்த வேண்டுமென்று எண்ணங்கொண்டு பொறாமையால் ஒன்றோடொன்று உனக்கெனக்கென்று சச்சரவு நேர்ந்து, சண்டையிட ஆரம்பித்தன. மிகவும் சண்டை அதிகரிக்கும்பொழுது அவ்வழியே போன ஒரு நரி சமயம்பார்த்து அவைகளறியாதபடி ஆட்டின் இறைச்சியைத் தூக்கிக்கொண்டு ஓடிப்போய் விட்டது.



3. பிறகு புலியும் கரடியும் மிகவும் களைத்து, இன்னுங் கொஞ்சங்கூடச் சண்டை செய்ய இயலாத சமயத்தில், ஆட்டின் இறைச்சி கிடந்த இடத்தைத் திரும்பிப்பார்க்க, அந்த இறைச்சியைக் காணாமல் திகைத்து நின்றன. அந்த வெகுதூரத்தில், நரி தூக்கிக்கொண்டு ஓடுவதைக் கண்டு, 'ஐயோ, கைக் கெட்டினது வாய்க்கெட்டாமற் போயிற்றே! நமக்குள் ஒற்றுமையில்லாமையாலல்லவா, நரிக்கு நல்ல அதிர்ஷ்டம் வந்தது' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டது.

#### பாட்டு

(முத்திநெறி யறியாத என்ற வர்ணமெட்டு)

(1) கரடியும் புலியுமாக
கானகத்தில் வாழ்ந்தனவே
காடுதனில் ஆட்டை யொன்றை
கடும்பசியால் கொன்றனவே

(2) எனக்குனக்கு வேண்டுமென்று
எதிரிட்டுச் சண்டைசெய்து
புத்தியில்லாச் சண்டையினால்
பூமியின்மேல் புரளும்போது

(3) பார்த்திருந்த நரியொன்று
பளிச்சென்று ஆட்டைக்கௌவி
ஓடினதே வேகமதாய்
ஒற்றுமையில் லாததினால்

(4) ஆகையினால் பிள்ளைகளே
அகங்காரம் கொள்ளாமல்
ஏகமன மாயிருந்து
எந்நாளும் வாழ்ந்திடுவீர்.

குறிப்பு — உபாத்தியாயர்கள், பிள்ளைகளுக்கு, கதை பாடம் கற்பித்தபின், அக்கதைக்குச் சம்பந்தமான அபிநயப் பாட்டுகளோ, அல்லது (Drama) நாடக மாதிரியோ, நடத்தி கற்றுக்கொடுப்பதால் பிள்ளைகள் தேர்ச்சியடைவார்களென்பது எனது நோக்கம்.

S. V. பழனியப்பன்,
சாலியாபாளையக் குப்பம், கரூர்.

# DUTIES OF VILLAGE SCHOOLMASTERS

## கிராம உபாத்தியாயர்களின் கடமை

கிராம பாடசாலை உபாத்தியாயர்கள் தங்கள் பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் தற்கால எலிமெண்டரி போதனையின் நன்மையைப் பற்றியும், இப் பாடசாலைகளை வைத்து அபிவிருத்தி செய்வதனால் கவர்ன்மெண்டாருக்கு ஏற்படும் செலவு அதிகமென்பதையும் பிள்ளைகளால் ஏதோ சொற்ப அளவு IV வது வகுப்புக்கு மேற்பட்ட போர்டு பாடசாலைகளிலிருந்துமாத்திரம் கவர்ன்மெண்டாருக்கு வரும்படி உண்டென்றும் விவரித்துச் சொல்லி இராஜ விசுவாசம் மேன்மேலும் அதிகரிக்கச் செய்யவேண்டியது நமது கடமை. இது விஷயமாய்க் கிராம பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்கள் சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் தங்கள் பாடசாலைகளில் சங்கம் (Meeting) ஏற்பாடு செய்து, பாடசாலை மேன்மேலும் விருத்திக்கு வரும்படியான வழிகளைப் பரவச் செய்யவேண்டியது. உபாத்தியாயர்களுடைய முதற் கடமை. பார்க்குமிடத்து கிராமங்களில் ஏழை வகுப்பினர் தங்கள் குடும்ப கஷ்டத்தின் நிமித்தம் குழந்தைகளுக்கு ஏழு அல்லது எட்டு வயதாகும்பொழுதே ஏதோ அச் சிறுவனால் செய்யக்கூடிய ஒரு வேலையை செய்யும்படி பிறரிடம் அடிமையாகப் பெற்றோர்கள் விட்டு அதனால் கிடைக்கக்கூடிய வரும்படி சொற்பமா யிருந்தாலும் பெற்றோர்கள் திருப்தியடைகிறார்களன்றோ? சிலர் குடும்பத்தில் ஜீவனத்துக்குக் கஷ்டமில்லாமலிருப்பினும் வாசிப்பின் நன்மை தெரியாமலே சிறு குழந்தைகளைக் குடும்பவேலையில் தங்களுக்கு ஒத்தாசையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பிரஜைகளின் க்ஷேமத்தின்பொருட்டு உபாத்தியாயர்களாகிய நாம் இராஜாங்க மூலமாய்ப் பால வாசிப்பைப் புகட்டுவதற்கு வெளிவந்திருக்கிறபடியால் நாம் வேண்டிய அளவு பாடுபடின் இலாகாவிலும், கிராமத்திலும் நல்ல பேர் பெறலாம். வாசிப்பின் பயன் தெரியாமலே மேற்சொன்னபடி குழந்தைகளை வேறு வேலையில் விடும் பெற்றோர்களுக்கு நாம் முன்னதாக விஷயங்களைப் புகட்டிப் பிறகு பிள்ளைகளைப் பாடசாலையில் விடுவதற்கு பாடுபடவேண்டியிருக்கிறது. கிராம வாசிகளுக்குப் பிராசீன பாலவாசிப்பு திருப்தியும் நவீனவாசிப்பு அதிருப்தியும் ஏற்படு-



கிறது. தோட்டவேலை, சித்திரம், பிள்ளைகளை வெளியே அழைத்துப்போய்ப் பாடம் கற்பிப்பது முதலியவை முன்னாட்களில் இல்லாது இப்போது எதற்கென்று கேட்பாருமுளர். இவைகளுக்கெல்லாம் சமாதானம் சொல்லுவது அசாத்தியமன்று. காலக்கிரமத்தில் அதது சகஜமே. இப்படிப்பட்ட குறைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொருவராகச் சொல்லிக்கொண்டிருப்பதை நிவர்த்திப்பது நமக்கு கஷ்டசாத்தியமாகையால் அடிக்கடி பாடசாலையில் (வருஷத்திற் கிருமுறையேனும்) சங்கம் ஏற்பாடு செய்து வித்தியா விஷயமாய்ப் பிரசங்கித்து விட்டால் கஷ்ட நிவர்த்திக் கிடமுண்டு. பாடசாலை விருத்திக்கு வருவதற்கு அனுசரிக்க வேண்டிய முக்கியமான மார்க்கங்கள் சில உண்டு. அவையாவன :—

1. பாடசாலை உபாத்தியாயர்கள் சச்சரவு இல்லாமல் ஒற்றுமையா யிருப்பது. ஒற்றுமை அதிகரிக்கச் செய்வது தலைமை உபாத்தியாயருடைய கடமை.

2. கிராமத்தில் பாலவாசிப்பு அபிவிருத்திக்கு நாமே முதன்மையாகையால் மாணாக்கர்களிடத்தும் பிரஜைகளிடத்தும் விசுவாசமா யிருத்தலும் பிரஜைகள் மாணாக்கர்கள் நம்மை நன்கு மதிக்கத் தக்கபடி நாம் அவர்களிடத்தில் நடந்துகொள்ளுவது.

3 கோபம் நமக்கு வெளிவருவது சகஜமா யிருப்பினும், எச்சமயத்திலும் அடக்கியாளுவது.

4 கிராமாந்தரங்களில் வாசிப்புத் தெரியாத பிரஜைகள் பாடசாலை உபாத்தியாயர்களையும் சில சமயங்களில் கடிதப் போக்குவரவு விஷயமாய் எழுதவும் வாசிக்கவும் ஒத்தாசை செய்யும்படி கோருவார்களாகையால் அப்படிப்பட்ட நன்மார்க்கமான விஷயங்களுக்கு ஓய்வு நேரங்களில் ஒத்தாசை செய்வது. ஆகிய இவைகள் கிராம உபாத்தியாயர்களுக்கு கௌரவத்தை யுண்டுபண்ணும்.

P. VENKATACHARI,
*Head-master,*
*Borad Elementary School, Orathi*

# HEALTH

## சரீர சுகாதார நியமம்

கருணைக்கடலாகிய கடவுள், அசித்துக்களோடு ஒப்பாகத் துக்கக்கடலில் ஆழ்ந்து கிடக்கும் ஜீவன்களைக் கண்டு பரிதாபமுற்று, இவை எவ்வகையிலாவது தம் மகிமைகளைத் தெரிந்துகொண்டு கடைத்தேறித் தமது பாதாரவிந்தத்தைச் சேர்தலாகிய பேரின்பத்தைப் பெற்று வாழவேண்டுமெனக் கருணைகூர்ந்து, அதற்கு முக்கிய சாதனமாய் ஜீவன் இவ்விடத்தில் வசிப்பதற்கேற்ற ஒரு சிறு வீடாக இந்தத் தேகத்தையும், பல விஷயங்களையும் தெரிந்துகொண்டு பல நற்காரியங்கள் செய்ய ஞானேந்திரிய கர்மேந்திரியங்களையும் அளித்திருக்கிறார். ஆயின் கடவுள் நமக்கு இந்த உடம்பை யளித்தாரே யென்று இவ்வளவோடு நாம் திருப்தி யடைந்து சும்மா இருக்கலாகாது. எதற்காக இவ்வுடம்பு அளிக்கப்பட்டதோ அதைத் தெளிய உணர்ந்து அக்கோரிக்கையை ஈடேற்றுவதிலேயே கருத்துடையவர்களா யிருந்தால் அப்பொழுது நாம் அவரிடத்தில் நன்றியுடையவர்க ளாவோம்.

இதற்கு நாம் முதன்மையாகச் செய்யவேண்டிய காரியம், கடவுள் அளித்த இவ்வுடம்பைச் சவுக்கியமாய்ப் பாதுகாப்பது. இத்தேகம் அழிந்துபோனால் அப்புறம் நாம் ஒன்றும் செய்யக்கூடாதல்லவா? சுவரிருந்தாலல்லவோ சித்திரமெழுதலாம். உதிரமாமிசங்களாலாகிய இவ்வுடம்பு நெடுநாள் நிலைபெற்றிருப்பதில்லையென்பது எல்லோர்க்கும் தெரிந்த விஷயமே. ஒரு தேசத்துக்குக் கடவுள் சங்கற்பித்த காலமெல்லாம் வெகு சொற்பம். அந்தச் சொற்பகாலத்திலும் நோயும் பாயுமாய்க் கிடந்தால் எந்தக் காரியமும் செய்யச் சாத்தியப்படாதன்றோ? ஆதலால் கடவுள் சங்கற்பித்த காலம் வரையில் இத்தேகத்தைச் சவுக்கியமான நிலையில் வைத்துக்கொண் டிருப்பது நமது கடமை.

இந்தத் தேகத்தை நமக்கு அளித்த கடவுள் அது தனக்குத் தானே நிமிஷங்கூட நில்லாதென்று அதைப் போஷிப்பதற்குப் பலவிதமான உணவுகளை ஏற்படுத்தி, அவ்வுணவுகளை ஏற்றபடி உபயோகித்து வந்தால், இத்தேகத்தை நெடுங்காலம் நிலைத்திருக்கும்படி செய்யலாமென ஆயுள்வேதமூலமாய் அதற்கு வேண்டிய விதி விலக்குகளையும் நமக்குக் காட்டியிருக்கிறார். "பசித்தன்றி



யருந்தோம் நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்குமிடத்தே," "மிதமற்றி யூணினன் மிருகண்டேயன்," என ஆயுள் வேதமுறை பிறழாது உணவு ஊட்டிப் பாதுகாத்தால் இத்தேகம் என்றும் அழியாதெனவும் கூறப்படுகின்றது. அவற்றால் ஏதேனும் பிசகுநேர்ந்து நோயுண்டாகும் பக்ஷத்தில் அதைத் தீர்த்துச் சவுக்கியப்படுத்திக்கொள்வதற்கு வேண்டிய மருந்துகளும் ஆயுள் வேதத்தில் கூறப்படுகின்றன வாயினும், அவ்வாறு செய்வதனால் தேகத்துக்கு ஊனமேயொழிய வலிவில்லை; என்றும் ஒரே சீராய் வளர்வதெப்படி, அடிக்கடி நோயில் வீழ்ந்து மெலிந்து மறுபடி தேறுவதெப்படி? அன்றியும் ஒருவனுக்கு நோய் காணுமாயின் அதனால் உண்டாகும் தொல்லைகள் பல; ஆனது பற்றியே "நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும்" என முன்னோர் கூறியிருக்கின்றனர். ஆகையால் நோயின்றி வாழ்வதற்கேற்ற வழியை நாம் தேடுவது அவசியம். அவ்வழியாவது தக்க காலங்களில் தவறாமல் உசிதமான உணவுகளைத் தக்கவளவு அருந்திவருவதேயாம். ஏனெனில், உணவு வேண்டியவளவிற்கு அதிகரித்தாலும் குறைந்தாலும் தேகத்துக்கு ஆதாரமாகிய வாதபித்த சிலேஷ்மங்கள் தம்மளவில் மாறுபட்டு நோய் விளைவிக்கும்,

"மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று."

"மிகைபடி னெஞ்சிடின் மித்திரபேதம்."

அதிலும் அளவுக்கு அதிகமாகப் புசிப்பதே மிகக் கேட்டைத் தருவதாம்.

"தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்."

போஜனம் செய்வதற்குத் தகுந்த காலத்தை நாம் எப்படித் தெரிந்துகொள்வ தென்பீர்களோ? அந்த வருத்தம் நமக்கு வேண்டுவதில்லை. அதை நமக்குப் போதிக்கப் பசியையே கடவுள் ஒரு பெரிய உபாத்தியாயராய் ஏற்படுத்தி யிருக்கிறார். உடம்புக்கு நாம் எப்போது உணவு ஊட்டவேண்டுவது அவசியமோ அப்பொழுது பசியென்பது ஒன்று உண்டாகி, முன் உண்டது ஜீரணமாகிவிட்ட தென்பதைத் தெரிவித்துப் புதிய உணவு புகட்டும்படித் தூண்டுகின்றது. அக்காலமறிந்து புசித்துக்கொண்டு வருபவர்களுக்கு நோயுமுண்டாகாது; மருந்தும் வேண்டியதில்லை

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்."

அன்றியும் முன் உட்கொண்ட வுணவு நன்ருய் ஜீரணமான பிறகு மறுபடி ஜீரணமாவதற்குப் போதுமளவை யறிந்து உண்பதே இவ் வுடம்பு நெடுநாள் நிலைத்திருப்பதற்கு ஏற்ற வழியென்றும் கூறுகிறார்.

"அற்ரு லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்ரு னெடிதுய்க்கு மாறு."

"அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து."

பிரதிதினம் எத்தனை தரம் புசிக்கவேண்டுமோ அது அவரவருடைய தேகக்கூறுபாட்டுக்குத் தக்கபடி பலவிதமா யிருக்கும். எப்படியாயினும் தினம் மூன்று வேளைக்கு அதிகமாய்ப் புசிக்கக் கூடாது. இரண்டுதரம் புசிப்பதே உத்தமமானது. மூன்றுதரம் புசிப்பவர்கள், காலைப்போஜனம் பொழுது விடிந்த ஒரு முகூர்த்தத்திற்குள்ளும், பகற்போஜனம் நான்காவது முகூர்த்தத்திற்குள்ளும், இராப்போஜனம் பொழுதுபட்ட இரண்டு முகூர்த்தத்திற்குள்ளும் அருந்தவேண்டும்.

"தன்ம மிரண்டேயூண் தப்பிமுக்காற் கொள்ளினன்
சின்மதலை காலைமுற்றிற் சேர்பருவம் — நன்முகூர்த்தம்
ஒன்றுக்குள் நான்குக்கு ளோது மிரண்டுக்குள்
நன்றுக்கு நீயோர் நயந்து."

ஒருநாளைக்குச் சிறிது சிறிதாய்ப் பலதரம் புசிப்பதினும் ஒருதரமாயினும் வயிறு நிரம்பப் புசிப்பது உத்தமம். ஏனெனில் நச்சு நச்சென்று அடிக்கடி புசித்தால், முன்பாதி ஜீரணமானதும் ஆகாததுமான உணவுடன் புதிய உணவுபோய்க் கலந்து செவ்வையாய் ஜீரணமாகாமல் வயிற்றில் கோளாறு உண்டாகும். அப்படியன்றி வயிறு நிரம்பப் புசித்தால் அது ஜீரணமாகிற வரையில் மறுபடி ஆகாரத்தில் அபேக்ஷை யுண்டாகாது. இந்துக்களிலே வைதிகர்கள் அநேகர் தினம் இரண்டு தரத்துக்குமேல் ஒருபோதும் புசிப்பதேயில்லை; ஒரேதரம் புசித்துக்கொண்டும் பலர் திடகாத்திரர்களா யிருக்கின்றனர். இந்தக் கருத்தை நோக்கியே, யோகிக்கு ஒருதரம், போகிக்கு இரண்டு தரம், ரோகிக்கு மூன்று தரம் என்று கூறுவாருண்டு. சிறு பிராயத்தில் தேகம் வளர



வேண்டியதாகையால் அந்தக் காலத்தில் இந்த நியமம் உதவாது; பசியெடுத்தபோ தெல்லாம் புசிக்கவேண்டியதுதான்.

காலையிலே முதல் முதல் புசிக்கின்ற போஜனம் எப்போதும் திரவரூபமாகவே யிருக்கவேண்டும்; கட்டியாயிருக்கக் கூடாது; ஏனெனில், இரவெல்லாம் உணவே யில்லாமல் படுத்திருக்கிறோமாகையால் கண்டநாளம் வறண்டுபோயிருக்கும். அந்தக் கண்டநாளத்தில் கட்டியான உணவைப் போட்டால் உடனே விக்கல் உண்டாகும். அதைப் போக்குவதற்குத் தண்ணீர் பருகவேண்டும். இவ்வாறே நாள்தோறும் செய்துவந்தால் கடைசியில் நோய்க்கிடமுண்டாகும். ஆனதுபற்றியே காலையில் நீராகாரம் சாப்பிடுகின்ற வழக்கம் இத்தேசத்தில் அநாதியாக வருகின்றது. காலையில் போஜனம் புசிக்காத வைதிகர்களும், விடியற்கால முதற்கொண்டு ஸ்நாந ஸந்தி முதலிய நித்திய கருமங்கள் செய்யும்பொழுது சிறிது சிறிதாய்த் தண்ணீரை உட்கொண்டு கண்டநாளத்திற்கு நமைப்புண்டாக்குகின்றன ராதலின், இரவில் புசிப்பில்லாதிருப்பதனாலாகிய தீங்கு ஒன்றும் அவர்களுக்குச் சம்பவிப்பதில்லை. மற்றவர்கள் பெரும்பாலோர் இக்காலத்திலே காலையில் காப்பித் தண்ணீரும் பசுவின்பாலும் பருக வழக்கப்பட்டிருக்கிறார்களாதலின் அவர்களுக்கு அந்தத் தீங்கு இல்லவேயில்லை. இவ்வாறு திரவரூபமான உணவு முதலில் உட்சென்ருல், இரவில் உணவில்லாமல் துர்ப்பலமாயிருந்த உறுப்புகளெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாய் வலிவுகொண்டு கெட்டியான உணவை யேற்றுக்கொண்டு ஜரிப்பிக்கத்தக்க திறமை யுடையவையாகும்.

நாம் உட்கொள்ளும் உணவு ஜீரணமாவதற்கு உடம்பு வருந்த ஏதாவது சிறிது உழைப்பு எடுத்துக்கொள்ளவேண்டும். உடம்பு வருந்தாமல் வலிவுதரத்தக்க உணவுகளை மாத்திரம் புசிப்போமாயின் அவ்வுணவு செவ்வையாய் ஜீரணமாக மாட்டாது. ஏற்ற ஆகாரமில்லாமல் அதிகமா யுழைப்பதும் கூடாது; அவ்வாறு உழைத்தால் உடல் மெலிந்து வியாதி உண்டாகும்.

கடைசியாக நாம் கூறவேண்டியது ஒன்று உண்டு. எப்படிப்பட்ட தேகக்கூறு உடையவர்களாயினும் எவரும் முக்கால் வயிற்றுக்குமேல் ஒருபோதும் உணவு ஏற்றுக்கொள்ளலாகாது. அதுவும் அரைப்பங்கு சோறு கறி காய் முதலிய கெட்டியான உணவும், காற்பங்கு தயிர் பால் முதலிய திரவப்பொருளுமா யிருத்தல்

வேண்டும். இம்முறை தவறுமாயின் உண்ணும் உணவு நன்றாய் ஜீரணமாகாது. வரவர அக்கினிமாந்தியமு முண்டாகும்.

“முக்கா லுணவின்றி யெத்தேசி கட்கு முழுவுணவில்
அக்கா ரணமன்ன சாரகாதி கூடி யரையதிற்பால்
சிக்கா வமுதம்பு தக்கிரங் காலுண்டி சேடமுழை
வைக்கா விடிலுண்டி வேகா தனலும் விளியுமன்றே”

வயது செல்லச் செல்லத் தேகத்தின் வலிமையும் குறைந்துகொண்டே வருமாகையால் அதற்கேற்றபடி ஆகாரத்தையும் ஒருவாறு குறைத்துக்கொண்டே வரவேண்டும். அப்படியன்றி என்றும ஒரு சீராய்ப் புசித்து வந்தால் அவ்வுணவு செவ்வையாக ஜீரணமாகாது.

இவையன்றியும் உணவுப்பொருள் விஷயத்தில் நாம் கவனிக்க வேண்டியவை பலவுள. பதார்த்தங்களில் உண்பதற்கு ஆனவையும் பலவுண்டு; ஆகாதவையும் பலவுண்டு; அன்றியும் ஒருவன் தேகத்துக்கு ஒத்துக்கொண்ட ஒரு பொருள் மற்றொருவன் தேகத்துக்கு ஒத்துக்கொள்ளாது; ஒரு காலத்தில் புசிக்கக்கூடிய பொருள்கள் மற்றொரு காலத்தில் புசிக்கக்கூடாதவையாயிருக்கும். எப்போதும் புசிக்கத்தக்கவையாயினும் பாலும் மோரும்போல் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாதவையாகிச் சேரப்புசித்தால் பெருந்தீங்கு விளைவிக்கத்தக்கவையா யிருக்கும். அவற்றின் சொரூபங்களை இங்கு எடுத்துரைக்க இடமில்லை. ஆயுள் வேதம் முதலியவற்றுள் பரக்கக்காணலாம். அதற்குரிய விதிவிலங்குகளை நன்றாய் ஆய்ந்துணர்ந்து ஒழுங்கு தவறாமல் நடந்து வருவார்களாயின் அவர்களுக்குப் பிணி முதலியவற்றால் ஒருபோதும் துன்பமுண்டாகாது.

“மாறுபர் டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு”

ஜனவிநோதினி.



# HEALTH READERS

## வைத்திய வாசக பாடம்

“இப்போது பாடசாலைகளில் பிள்ளைகள் தோட்டம் பயிரிட்டு இயற்கை விநோதங்களைக் கவனிக்கிறபடி பதார்த்தகுண விசேஷங்களையும் கவனிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கெனக் காலம் ஏற்படுத்திக் கற்பிக்க வேண்டும். ஏறக்குறைய இப் பதார்த்தங்களில் ஒவ்வொன்றையும் பாடசாலைத் தோட்டத்தில் பயிரிட்டு வைக்கவேண்டும். வைத்திய வாசக பாடம் என்று வேறு புத்தகம் படிப்படியாய் எழுதி வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் சிறுபோதிலிருந்தே இயற்கைப் பொருட்பாடத்தைக் கவனிப்பதுபோல இயற்கைப் பொருட்குணத்தையும் கவனித்து எதெதை எப்படியெப்படி எவ்வெவ்வளவு எப்போதெப்போது உண்டு வாழவேண்டுமென்பதையும் தெரிந்துகொண்டு நோயின்றி வாழ்வார்கள். அவர்கள் பெரியவர்களானபோதும் அரை வைத்தியர்களாய் வைத்தியஞ் செய்வதின் வராமற் தடுப்பதே மேல் என்றபடி (Prevention is better than cure) நோய்க் கிடங்கொடாமல் தத்தங் குடும்பத்தில் வரும் நோய்களையும் பரிகரித்து மதிவாணர்களாய்ப் பலரும் மதிக்கத்தக்க குடித்தனக்காரர்களாவார்கள்” என்று கலியுக வர்த்தமானி’யின் 4-1-19 இல் வெளியான பிரதியின் 9 ஆம் பக்கத்தில் ‘வைத்தியக் கல்வி’ என்ற தலைப்பின் கீழ் காணப்படுகின்றது.

வைத்திய வாசக பாடம் என்று தனியாய் ஒரு புத்தகம் ஏற்படுத்துவதால், இதைப் பாடசாலைகளில் முக்கிய பாடமாகவாவது உபபாடமாகவாவது வைத்து நடத்த இயலாது. ஏனெனில், முக்கியமாய்ப் பிள்ளைகள் பொது அறிவு விஷயங்களையே சிறுவயதில் கற்றுணர வேண்டுவது அத்தியாவசியமா யிருத்தல் பற்றி, இயற்கைப் பொருள் (பதார்த்த) குணத்தை மட்டும் கொண்டுள்ள தனிப் புத்தகத்தை உபயோகப்படுத்தின், இயற்கை யறிவின் வளர்ச்சிக்கான மற்றப் பொது விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கு இயலாது போகும். அறிவு வளர்ச்சி பெற்றிருந்தால்-

தானே விஷயங்களை உய்த்துணரவாகும். அறிவு வளர்ச்சி பெறுமுன், அறிவு வளர்ச்சி பெறுங்காலமாகிய சிறுவயதிலேயே, அறிவு வளர்ச்சியுற்றோரும் கிரகிப்பதற்கு அரிதான இயற்கைப் பொருள் குணதோஷங்கள் கூறும் வைத்திய விஷயங்களைப் புகட்டுதல் 'குருவியின் தலையில் பனங்காயை வைப்பதுபோல்' அன்றோ ஆகும்! ஆகவே இது சிறுவர்க்குத் தகுந்த விஷயமாகத் தோற்றவில்லை. ''கிழ வைத்தியம் பால்ய ஜோசியம்'' என்றபடி, பதார்த்த குணதோஷங்களை செவ்வனே அறிதற்கு நீடித்த அனுபோகமும் ஏற்ற வயதுமன்றோ ஏற்றது. ஆயினும் இப்புத்தகங்களை வைத்தியங் கற்பித்தலுக்கெனவே ஏற்பட்டுள்ள வைத்திய பாடசாலைகளில் தனி முக்கிய பாட புத்தகமாய் உபயோகப்படுத்துவதே உசிதமாகும்.

எனினும், வைத்தியத்திற்கெனவே யில்லாத், எண்ணொடு எழுத்திற்கும் அறிவு வளர்ச்சிக்குமேயென ஏற்படுத்தியுள்ள (தற்கால எலிமெண்டரி) பாடசாலைகளிலோ வென்றால், வகுப்புக்கேற்றவாறு ஒவ்வொரு வகுப்புப் புத்தகங்களிலும் சிறிது சிறிது — இரண்டொன்றாக, எண் எழுத்தொடு அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்களில், இயற்கைப் பொருள்களில் பிராணிகள், தாவரங்கள் முதலியவும் இராஜாங்க முறைகளில் கிராமாதிகாரி, தபால், ரிவினியூ, போலீஸ், சிவில், கிரிமினல் முதலியவற்றையும் சுகாதாரத்தில் சுத்தம், அசுத்தம், ஆகாரம் முதலியவற்றையும் சம்பந்தப்படுத்தி எழுதியிருப்பது போல, இயற்கைப் பொருள் பதார்த்த குணங்களில் மிக முக்கியமான — சாப்பாட்டிற்கு அவசியமான சில பதார்த்தங்களை, வகுப்புக்கும் வயதுக்கும் ஏற்றவாறு சம்பந்தப்படுத்தி எழுதிப் பதிப்பித்து வெளியிட்டால், இந்நோக்கம் ஒருவாறு சிறிது சிறிதாக — படிப்படியாக நம் சிறுவர்கள் அறிந்துகொள்ள ஏதுவாகி, பள்ளியில் பயின்றுள்ள இச்சிறுபடிப்பினையைக் கொண்டு இயற்கைப் பொருள் பதார்த்தங்களின் குணங்களை விளக்கி, 'அநேக சிறு நூல்களும் பெரு நூல்களும் வெளியாகவேண்டு' மென்னும் வர்த்தமானியின் அபிப்பிராயப்படி கல்வியில் குறைந்தோரும் எளிதி லுணருமாறு நூல்களைப் பார்த்து விஷயங்களை உணர்ந்து, வர்த்தமானியின் இறுதியிற் கூறியபடி நோய்க் கிடங்கொடாமல் தத்தம் குடும்பத்தில் வரும் நோய்களையும் பரிகரித்து மதிவாணர்களாய்ப் பலரும் மதிக்கத் தக்க குடித்தனக்கார ராவார்கள்.



பாடசாலைத் தோட்டங்கள் மூலமாயும் இயற்கைப் பொருள் பதார்த்தங்களின் குணதோஷங்களைப் போதிக்கவேண்டுமெ- ணின், ஒவ்வொரு உபாத்தியாயரும் குணதோஷங்களைச் செவ்வை- யாய் அறிந்துள்ளவர்களா யிருந்தாலன்றி இந் நோக்கம் பயன்- படாதுபோகும். உபாத்திமார்களுக்கு இப் பாடம் போதனு முறைப் பாடசாலையே ஏற்பட்டுப் போதிக்கப்பட் டிருக்கவேண்- டும். அல்லது போதிக்கப்படாத தற்கால உபாத்திமார்களுக்குக் குணதோஷங்கள் சிறிது தெரிந்திருப்பினும், அவற்றில் அவ்வள- வும் போதிக்க வராதது பற்றி, பிள்ளைகளுக்கு எவ்வளவு போதிக்க வேண்டுமோ அவ்வளவுக்கு ஐந்தாறு மடங்கு அதிகமாக அறிந்தி- ருந்தாலே கூறிக்கொண்டு வரும் நோக்கம் நிறைவேறுவதற்குச் சாத்தியமுள்ளதாகும். ஆதல்பற்றி, கீழ்தரப் பாடசாலை உபாத்தி- மார்களாகிய சொற்பப் படிப்பினரும் அறிந்துகொள்ளுதற்கு ஏற்ற அத்தகைய புத்தகங்கள் ஒவ்வொரு பாடசாலைக்கும் வாங்- கிக்கொடுப்பது இன்றியமையாத தாகும்.

தற்கால முறைப்படியே தோட்ட வேலையானது ஒவ்வொரு கிராம பாடசாலையிலும் நன்கு நடைபெறுவதாகக் காணப்பட- வில்லை. காரணம், தோட்டத்திற்கான சௌகரியங்களும் உதவி- யும் உபாத்திமார்களிடத்தில் ஊக்கமும் இல்லாதிருப்பதுவே யாகும். ஆகவே தற்கால முறைக்காவது தோட்ட சௌகரியங்- களும் உதவியும் உபாத்திமார்களுக்கு ஊக்கமும் அளித்து ஏற்பாடு செய்தாலே ஒருவாறு நடைபெற்று நம்மக்களுக்கு நலமுண்டா- கும். இவ்விஷயத்தில் உபாத்திமார்களுக்கு ஊக்கமுண்டாக்குவது காருண்ய கவர்ன்மெண்டாரவர்களின் கடமைகளி லொன்றாகும்.

"அன்பான நெஞ்சமே அழகிய தோட்டம்
அன்பான எண்ணமே அதில் மரக்கூட்டம்
அன்பான வார்த்தையே அதன்பூவுங் காயும்
அன்பான செய்கையே அருங்கனியாகும்."

என்ற நமது கனம் கா. நமச்சிவாய முதலியா ரவர்களது செய்- யுளையே மெய்ம்மைக் கோரணியாம் என்பது எவரும் அறிந்ததே.

P. பரிமணப்பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர் சோலை, P. O., திருச்சி ஜில்லா.

# COUNSEL TO HIS CHILDREN

## தந்தை மக்களுக்குக் கூறிய அறிவு

உலகம் இத்தன்மையது என உணராத சிறுவர்களே! இன்று இவ்வுலகின்கண் நீங்கள் நடந்துகொள்ள வேண்டிய மாதிரியைப் பற்றிச் சற்றுக் கூறுகிறேன்; அதை நீங்கள் கவனித்து அவ்விதமே நடக்க விரும்புகின்றேன். உலகத்தில் அவரவர்கள் பேசும் தன்மையிலேயே நன்மையும் தீமையும் விளைகின்றமையான் நீங்கள் பேசும்போது மிக ஜாக்ரதையுடன் பேசுதல் வேண்டும். பேசப்போயினையோ, சாவப்போயினையோ என்னும் ஆன்றோர் மொழி இங்குக் கவனிக்கத்தக்கது. நீங்கள் பொய்யென்றுணர்ந்ததை மெய்யென்று பேசுதல்கூடாது. கடவுள் விரும்பாத செய்கைகளில் பொய் ஒன்றாதலின் அச்செய்கையை ஒழிப்பது நம் கடமையாகும். பொய் நமக்கு இம்மையினும் மறுமையினும் தீமையை விளைவிக்கின்றது. பொய் பேசுவோன் மெய்யைச் சொன்னாலும் உலகத்தினர் நம்பமாட்டாராதலின் நீங்கள் பொய்யை அறவே ஒழித்து மெய்யைக் கைக்கொள்ளல் வேண்டும்.

உங்களைக் காட்டிலும் வயதிலும் கல்வியிலும் பெரியோர்களும் அந்நியர்களும் வந்திருக்குங்கால் நீங்கள் மிகச் சில வார்த்தைகளையே பேச முயலவேண்டும். அவ்வாறின்றி அதிகமாய்ப் பேசுவீர்களாயின் உங்கள் குற்றங்களை நீங்களே வெளிப்படுத்திக்கொள்வதேயன்றி அவர்களிடம் காணும் சிறந்த குணங்களையும் முதிர்ந்த அறிவையும் கற்காமல் இழந்து விடுவீர்கள். என்றும் உங்களுடைய விரோதிகளிடம் நீங்கள் உரத்த குரலில் பேசலாகாது. அவர்களைக் குரலில் வெல்லாது நியாயத்தால் வெல்வதே சிறந்ததாகும். பெரியோர் பேசும்போது நீங்கள் இடையில் மறித்துப் பேசாமல் கடைசிவரையில் கவனித்து அவர்கள் பேசுவதை உணர்ந்து தக்க பதிலுரைக்கவேண்டும். எவரெவர் எவ்வெவ் விஷயங்களில் சிறந்திருக்கின்றனரோ அவ்வவ்விஷயங்களை அவரவரிடமிருந்து முற்றும் அறிந்துகொள்ளவேண்டும். நீங்கள் யாரிடம் பேசினும் அவர்களிடம் காணும் ஒப்பற்ற குணங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். மற்றப்படி அறிவீனர்களிடம் பேசுங்கால் அவர்கள் பேச்சில் காணும் குற்றங்களையெல்லாம் கண்டு கழித்தல்வேண்டும். நீங்கள் முன்பின் அறியாத ஒருவன் பேசுவதை உண்மையென நம்புகின்றது பேதமையாகும். எனினும் அவர்கள் பேசும்போது இடையில் மறித்தல் கூடாது. கடைசியில் உங்கள் அபிப்ராயத்தை மிக வணக்கத்துடன் தெரிவிக்க வேண்டுமேயன்றி நீங்கள் சொல்வதே உண்மைபோலத் தீர்மானத்துடனுரைக்கக்கூடாது. உங்களை நீங்களே புகழ்ந்துகொள்ளலாகாது. அவ்வாறு செய்வது உங்கள் புகழையும், கீர்த்தியையும் குறைக்குமேயன்றி அதிகப்படுத்தாது. ஒருவரில்லாத காலத்து அவரைப்பற்றி இகழாது அவருக்கு அமைந்திருக்கும் நற்குணங்களையே பேசுவது நலம். உங்களுடைய பேச்சில் சத்தியம் செய்தலினும் இழிவு வேறொன்றுமில்லை. ஒருவர்க்கு இயற்கையில் எவ்வவயவங்களிலேனும் குறைவு உண்டாயிருக்குமாயின் அதைக்கண்டு பரிகசித்தல் பாவத்தில் அழுத்தும். எவரிடத்தும் கோபத்துடன் நீங்கள் பேசாமை நன்று. இன்சொற்கள் நண்பர்களை உண்டாக்கும்; தீச்சொற்கள் விரோதிகளை உண்டாக்கும். இன்சொற்களைப் பேசி உலகில் நன்மையை அடையவேண்டும். எவரேனும் உங்களிடம் கோபத்துடன் பேசுவாராயின் அவர்மீது கோபங்கொள்ளாது இரக்கங்கொண்டு அவர் செய்யும் தப்பிதத்தை மன்னிக்கும்படி கடவுளைக் கேட்டுக்கொள்ளவேண்டும். நாய் நம்மைக் கடித்தால் அதை மீண்டும் நாம் கடிக்கிறோமில்லையாதலால் அவர் பேசுகின்ற காலத்து மௌனமாயிருப்பதும் இனிமையான சொற்களைப் பேசுவதும் அவர்களுக்குத் தக்க தண்டனையாகும். இவ்விதம் நீங்கள் நடந்துகொள்வீராகில் அவர்கள் உடனே தங்கள் குற்றத்தை உணர்ந்து முகம் வெட்கிக் கரைகாணாத்துயரில் அழுந்துவர். தெய்வீகத் தன்மையான வார்த்தைகளையும் கருணைவள்ளலாகிய கடவுளின் பெயரையும் மிகப் பயபக்தியுடன் உபயோகிக்கவேண்டும். கடவுளைப் பற்றிய நூல்களை இழிவாகப் பேசுவது மீளாநரகில் ஆழ்த்தும். நான் இங்கு இல்லாத காலத்தும் நானிருப்பதுபோல் எண்ணி எனக்குரிய கடமையையும் அன்பையும் செலுத்தி உங்கள் வாழ்-

நாட்களை வீழ்நாட்களாக்காது நன்னெறியில் நடத்துவீர்களென்று நம்புகின்றேன். என்னைக் காட்டிலும் சிறந்த தந்தையாகிய கடவுளைக் காலை மாலைத் தொழுது இரவில் உங்கள் நிலையிலா இக்கட்டுகளை அவனிடம் ஒப்பித்துவிட்டு உறங்குங்கள். இரக்கமே உருவாய்க்கொண்ட அம் முழுமுதற் கடவுள் உங்களுக்கு அருளையும் அன்பையும் ஆச்சரியமான தொழிலையும் பயத்தையும் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கின்றனன்.

M. KOTISWARAN.

## A. KINDERGARTEN SONG

## குழந்தைப் பள்ளிக்கூடப் பாட்டு

மெட்டு — "ஐய ஒரு சேதி கேளும்"

(1) ராமா உந்தன் கதையைச் சொல்வேன் - இப்போ
தாமா மென்று கேட்டு எந்தன் நேமம் முடிப்பீர்
கோமள குணக்கடலே — நல்ல - ராமா
தசரத - ராமா
காகுத்த - ராமா

(2) தசரத னென்னும் மன்னன் - அயோத்தியில்
திசைகளில் ஐயந்தன்னைப் பெற்று விட்டு
நீஜமதால் விளங்கி நின்றான் - அவனும்
வெகுகாலம் பாலரின்றி ஆளும்போது
மிகுதியாங் கவலை கொண்டான் - பிறகு
தகுதியாம் காமேஷ்டியை முடித்த பின்னர்
ரகுபதியாக உதித்தீர் — நல்ல - ராமா
கௌஸல்ய - ராமா
ரகுகுல - ராமா

(3) கௌஸலைக்கு ராமனுதிக்க - பின்பு
கைகேயி பரதனைப் பெற்று வாழ்ந்தாள்
கனிவுள்ள ஸௌமித்திரைக்கும் - அப்போது



குணமுள்ள குழந்தையாய் லக்குமணனும்
குலவிளக்காகுங் குணம் - உள்ள
சத்ருக்னனும் வந்துதிக்க மெத்த புகழாய்
இத்தலத்தில் வாழ்ந்தனரே — நல்ல - ராமா
ஜயமுள்ள - ராமா
குணமுள்ள - ராமா

(4) ஷோடச வருஷத்தினுள் - இராமனை
ஜோதிமிக்க கோசிகனுங் கேட்டவுடன்
மேதினியில் மயங்கலுற்றான் - அங்கே
நீதில்குணத் தலைவருந் திடப்படுத்த - ஆதிமூலப்பொருளை
அனுஜனுடன் கூடிவிடத் தாடகையும் - மாண்டு விடவே
கோஷ்டியுடன் வேள்வி முடிய முனிவனும்
தேட்டமாக மந்திரத்தைக் காட்டிவிடவே
ஓட்டமாக வில்லை யொடித்தாய் — தசரத - ராமா
திசைபுகழ் - ராமா
ரவிகுல - ராமா

(5) வில்லை யொடித்தவுடன் - சீதையை
விரைவாகக் கையில்கொண்டு மண்டபஞ் சேர்ந்து
வந்தவர்கள் களித்திடவே - விளங்கிடுங்
கணகண தணதண வென வொலிக்கும்
மண வாத்யம் முழங்கிடவே - இன்னும்
ப்ரும்ம க்ஷத்ரிய வைசிய சூத்திரரும்
புகழ்ந்து மகிழ்ந்திடவே எவரும்
பூரிப்போடு வந்தெதிர்ந்து புகழ்ந்திருக்க
பூஷண மகளை மணந்து நின்றாய் — சீதா - ராமா
ஜானகி - ராமா
ஜகம்புகழ் - ராம'

T. N. RAMANUJACHARI,
*1st Asst. G. T. S., Ranipet.*

# CHILDREN OF DISTANT LANDS

## தூரதேசத்துக் குழந்தைகள்

### ஜப்பான் சிறுவர் - சீனச் சிறுவர்

சில வருஷங்களுக்கு முன் ஜப்பான் சிறுவர்களைப்பற்றிச் சில விஷயங்கள் நமது நல்லாசிரியனில் வெளிவந்த விஷயம் பலர் நன்கு உணர்வார்கள். அவற்றை விரைவில் முடிக்குமாறு நண்பர் பலர் விரும்பினர். அதனால் ஜப்பான் சிறுவர்களைப் பற்றியும் சீனச் சிறுவர்களைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் விளங்குமாறு இனிய புஸ்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கின்றோம். இதை வாசிப்பதனால் சிறுவர்களுக்குப் பூகோள விஷயமும் சரித்திர விஷயமும் நல்லொழுக்க விஷயமும் நன்கு புலனாகும். இது தாயார் குமாரனுக்குக் கதை சொல்லும் விதமாக மிக எளிய நடையில் அநேக சித்திரப் படங்களுடன் பெரிய எழுத்தில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. சிறுவர்களுக்கு இன்பமூட்டும் இனிய கதைப் புஸ்தகம் போல்வது. இதனை ஒவ்வொரு பாடசாலையிலும் தவறாமல் உபயோகிப்பார்கள் என்று நம்புகின்றோம். விலை அணா 6.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெரு, சென்னை.

28 JUL 1919



நல்லாசிரியன்
உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்
மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை
வயது 14 | 1919ஆ மேமீ | மாதம் 12

# TEACHERS AND PARENTS

## உபாத்தியாயர்களும் பெற்றோரும்

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல். (திருவள்ளுவனார்.)

சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே. (புறம்)

கல்வியைக் காட்டிலுஞ் சிறந்தபொருள் எவ்வுலகத்திலும் இல்லை. அது மக்கட்குக் கண்ணைப்போன்றிருக்கின்றது. அதுவே இம்மை மறுமை இன்பங்களையும் வீடுபேற்றையுந் தரவல்லது. இதனை ஒவ்வொருவரும் இக்காலத்தில் உணர்கின்றாரெனினும் செய்கையில் நினைக்கின்ற அளவிற்குக் கொண்டுவருகின்றார்களில்லை. இவ்விஷயத்தில் பிள்ளைகளைப் பெற்றோர்கள் அதிக கவலை எடுத்துக்

கொள்ளவேண்டும். பெற்றோர் முயற்சி அளவாகத்தான் பிள்ளை
கட்குக் கல்வியறிவும் ஒழுக்கமும் நிரம்பும். நம் தெய்வப்புல-
மைத் திருவள்ளுவ நாயனார் தந்தை தன் மகனுக்குச் செய்ய-
வேண்டிய நன்றி அவனைக் கற்றுவல்லோர் சபையின்கண் முந்தி
யிருக்கும்படி செய்தலே யாகுமெனத் தந்தையின் கடமையினை
வரையறுத்துக் கூறியுள்ளார். அக்கல்வியறிவோடு நற்குணங்களில்
நிறைந்திருக்கவும் தன் மகனைச் செய்யவேண்டுமென்னுங் கருத்-
துப்பட 'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்று பிறி-
தொரு புலவரும் கூறுவாராயினர். ஆகவே கல்வியறிவைத் தம்
மக்களுக்கு மிக்க நோக்கத்துடனும் ஊக்கத்துடனும் ஊட்டுவ-
துடன் அப்பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையில் நடக்கவேண்டிய
முறைமைகளையும் பிறவற்றையும் இளமைதொட்டே அவர்களுக்-
குப் பயிற்றுவித்தல் வேண்டும். தாமும் தமது செய்கைகளால்
அவற்றைக் காட்டவேண்டும். தந்தைமாரும் உபாத்திமாரும் நன்-
மையில்லாத சில பழக்கங்கள் உடையவராயின் அவற்றை அப்-
பிள்ளைகட்குத் தெரியாமல் அவர்கள் செய்தல் வேண்டும். இங்-
ஙனம் பிள்ளைகளை அறிவுகுணச் செயல்களில் திருந்தியவராகச்
செய்வதற்குப் பெற்றோரும் உபாத்திமாரும் மேற்கொள்ளத்-
தக்கவை பலவுள.

பெற்றோர் சிலர் தமது பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி
விட்டமாத்திரத்தில் அவர்கட்குக் கல்வி நிறைந்துவிடுமென்று
எண்ணுகின்றனர். சிலர் தனியாகப் பாடங் கற்பிக்க மற்றொரு
உபாத்தியாயரை நியமித்துவிட்டுக் கவலையற்றிருக்கின்றனர்.
சிலர் தம் பிள்ளைகள் உண்பதற்கும் உடுப்பதற்குங்கூட உபாத்தி-
யாயர் வரவை எதிர்நோக்குகின்றனர். சிலர் ஒருநாளைக்கு ஒரு
பிரப்பங்கழியை எடுத்துக்கொண்டு பிள்ளைகளை விசாரிக்கத்தொ-
டங்குகின்றனர். இவையனைத்தும் நன்மைபயக்கத் தக்கனவல்ல.
பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப் பின் ஒவ்வொரு-
நாளும் தாங்கள் தமது பிள்ளைகளைப் படிக்கும்படி செய்யவேண்டும்.
அதனுடன் அவர்களுக்குச் சம்பாஷணைவாயிலாகவும் விநோதங்-
களின் மூலமாகவும் கதைகளாகவும் பல விஷயங்களை அவ்வப்-
போது உணர்த்தவேண்டும். அவர்களைக் கடுமொழியாலும் அடி-
யினாலுமே திருத்தவேண்டுமென எண்ணுதல் கூடாது. அன்பாக
அவர்களை நடத்தல்வேண்டும். படிப்பில் அவர்கட்கு ஆசை உண்-
டாகும்படி செய்தல் வேண்டும். தினந்தோறும் அவர்கள் பள்-



ளிக்கூடத்தில் படித்த பாடங்களைக் கேட்டு அவை அவர்கள் மன-
தில் பதிந்திருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். அவர்களுக்கு
நல்ல சத்துவம் நிறைந்த உணவையும் சுத்தமான ஆடையையும்
தருவதோடு சுத்தமாக அவர்கள் எப்பொழுதும் இருக்கும்படி
செய்தல்வேண்டும். அவர்களை எந்நேரமும் புத்தகமும் கையு-
மாக இருக்கும்படி செய்யாமல் படிக்கவேண்டிய காலங்களில்
படிக்கும்படி செய்தும் விளையாடவேண்டிய காலங்களில் விளை-
யாடும்படி விடவும் வேண்டும். சிக்ஷையைக் காட்டிலும் சிறந்த
வழி வேறொன்றுமில்லை. நல்ல பழக்கத்தால் விளையும் நன்மை-
கள் பல.

உபாத்திமார் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு விஷயங்களை
நன்றாக அவர்கள் மனத்தி லமையும்படி உறுதியாகவும் தெளிவா-
கவும் சொல்லவேண்டும். பல விஷயங்களைப் போதித்தல், வாசக
பாடங்களை முடித்துவிடல், சிறிது நேரத்தில் பலவற்றை எடுத்-
துரைத்தல், ஒவ்வொருநாளும் வெவ்வேறு விஷயங்களைச் சொல்-
லுதல் முதலியன பெரும்பயனைத் தரமாட்டா. சொல்லியதையே
திருப்பித் திருப்பிப் பன்முறை இடித்துச் சொல்லவேண்டும்.
அவற்றை மீண்டும் மீண்டும் அவர்களை வினவிப் பிழைகளைத்
திருத்தவேண்டும். சொல்லிக்கொடுக்கும் ஒவ்வொரு விஷயமும்
அவர்களுக்கு நன்கு விளங்கிவிட்டதா என்று செய்கையில் அறிந்து
கொள்ளவேண்டும். இவ்வாறன்றிச் சிலர் மேலும் மேலும் விஷ-
யங்களைச் சொல்லிக்கொண்டே போவார்கள். அவர்கள் தங்கள்
போதனை பயன்படாமையை எளிதில் உணர்வார்கள். பிள்ளைகள்
அடிக்கடி பயிற்சிகள் எழுதிவரும்படி செய்தல்வேண்டும். அநா-
வசியமாய்ப் பிள்ளைகட்கு அதிகவேலை கொடுக்கக்கூடாது. உபாத்தி
மார்கள் பள்ளிக்கூடத்தில் ஏதோ சிலவற்றை எடுத்துச் சொன்ன
வளவில் தங்கள் வேலை முடிந்துவிட்டதாக நினைத்தல் கூடாது.
தங்களிடத்தில் பிறர் தமது அருமைப் புதல்வர்களை நம்பி விட்-
டிருக்கின்றார்களென்றும் அவர்களுடைய கல்விக்கும் நல்ல நடைக்-
கும் தாங்களே உத்தரவாதிகளென்றும் தங்களாலேயே அச்சிறு-
வர்கள் வாழ்வு ஏற்றத்தையுந் தாழ்வையும் அடையுமென்றும்
எண்ணி நடத்தல் வேண்டும். உபாத்தியாயர் சிலர் தங்கள் கட-
மைகளைச் செவ்வையாய் உணர்ந்தவராக வுளர். இவர்களே தேச
முன்னேற்றத்திற்கும் ஆக்கத்துக்கும் காரணபூதர்களாக இருத்த-
லின், தங்கள் கடமையில் சிறிதும் வழுவாதிருத்தல் வேண்டும்.

இவ்வாறு நடக்கும் உபாத்திமார்களைத்தாம் 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்றனர் பெரியோர்.

இனி, உபாத்திமாருக்கும் பெற்றோருக்கும் நெருங்கிய சம்பந்தம் இருத்தல் வேண்டும். பெற்றோர் உடனுக்குடன் உபாத்திமாரைக் கண்டு பேசி பிள்ளைகளின் கல்வியைப் பற்றியும் பள்ளிக்கூடத்துக்கு அவர்கள் நிற்காமலும் காலந்தவறாமலும் வருதலைப் பற்றியும் உபாத்தியாயரிடத்தும் மற்றப் பிள்ளைகளிடத்தும் அவர்கள் நடக்கிற விதத்தைப்பற்றியும் பாடங்களைப் படிப்பதைப்பற்றியும் விசாரித்து அதன்படி செய்கை நடத்தவேண்டும். வீட்டில் பெற்றோர் பாடம் படித்தலைக் குறித்தும் தங்களிடத்தில் நடந்து கொள்ளுவதைக் குறித்தும் சகோதரர்களிடத்தில் ஒழுகும் விதத்தைக் குறித்தும் கவனித்துக்கொண்டு வரவேண்டும். உபாத்தியாயர் பிள்ளைகளின் பெற்றோரை அடிக்கடி சந்தித்து அவர்களின் குற்றங் குணங்களை எடுத்துச் சொல்லித் திருத்தும்படி செய்தல் வேண்டும். அப்போது பெற்றோருக்கும் உபாத்திமாருக்கும் முதிர்ந்த நேசம் உண்டாகிப் பிள்ளைகள் விருத்தியடைவர்.

இவ்வாறு உபாத்திமார்களும் பெற்றோரும் நடந்துகொண்டு தங்கள் முயற்சியினாலாகிய பயனைப் பெறுவார்களென நம்புகின்றோம்.

பத்திராதிபர்.

# BIRDS' NESTS

## பறவைகளின் கூடுகள்

பட்சிகளுக்குத் தங்கள் குஞ்சுகளின் மேலிருக்குங் காதலைப் பற்றி அநேக கதைகள் கேட்டிருக்கின்றோம். அவைகள் தங்கள் கூடுகளுக்கு அபாயம் நேரிடும்போது பற்பலவித தந்திர முயற்சிகளால் தங்கள் விரோதிகளின் எண்ணம் ஈடேறாமற் செய்துவிடுகின்றன. சிற்சில சமயங்களிற் பறவைகள் தங்கள் குஞ்சுகளைக் கைவிட மனம் வாராமல் தங்கள் உயிரையே இழந்தாலுமிழக்கும். இவ்விஷயமாய்ப் பேர்போன தாவர சங்கம சாஸ்திரி ஒருவர் சொல்லுவதாவது: ஒரு புளியமரத்தில் இரண்டு அண்டங்காக்கைகள் ஆணும் பெண்ணுமாய்க் கூடுகட்டிக்கொண்டு வாழ்ந்திருந்தன.



அண்டங்காக்கைகள் முட்டையிட்டு அடைகாக்குங் காலமாகிய தை மாசி மாதத்தில் ஒரு நாள் சில மனிதர்கள் அம்மரத்தை வெட்டித் தள்ள வந்தார்கள். அவர்கள் பக்கத்திருந்த மரங்களெல்லாம், எதிரொலியெடுக்கத் தங்கள் கோடரிகளால் அப்பெரிய மரத்தை வெகுநேரம் வெட்டினார்கள். இவ்வளவு காலமும், பெண்பறவையானது தனது கூட்டிலேயே குந்திக்கொண்டிருந்தது. கடைசியாக மரமானது சாய்ந்து சத்தத்தோடு கீழேவிழ ஆரம்பித்தும் அப்பறவை இருந்த இடத்தை விட்டுப் பெயரவேயில்லை. அந்தோ! மரம் விழுந்த விசையினால் அக்காக்கை தன் கூட்டினின்றும் விசிறியெறியப்பட்டு மிலாறுகளால் அடிபட்டு உடம்பு முறிந்து உயிரிழந்து பிணமாய் விழுந்தது.

குஞ்சுகள் எவ்வித ஊறுபாடு மடையாதபடி அவைகளுக்காக அவ்வளவு கவலையெடுத்துக் கொள்ளும் பறவைகள் மனிதர்கள் கண்ணிற் படவும் அவர்கள் தங்கள் கூடுகளுக்குங் குஞ்சுகளுக்கு மிடையூறு செய்யவும் கூடிய விடங்களிற் சஞ்சரிப்பது உனக்கு ஆச்சரியத்தை விளைவிக்கலாம். மனிதசஞ்சாரமுள்ள தோப்பு தோட்ட முதலிய விடங்களிற் பறவைகள் கூடு கட்டிக் குஞ்சு பொரித்துக் குடியிருப்பதை நோக்கும்போது அவைகள் மனிதர்களைத் தங்கள் சிநேகிதர்களாகவும், தங்களுக்கு இயற்கைப் பகையாளிகளாகிய மற்றச் சீவராசிகளின் தொந்தரையினின்றுந் தங்களைக் காக்கும் பாதுகாவலர்களாகவும் எண்ணுகிறதாக ஏற்படுகின்றதல்லவா? காட்டில் வாழும் மிஸேல் திரஷ் (Missel Thrush) என்னும் பறவையானது இக்காரணம் பற்றியே நாட்டில் வந்து வாழ்கின்றதென்று சாஸ்திரிகள் கூறுகின்றனர். பறவைகளும் தங்கள் பாதுகாப்புக்காக மனிதர்களையே நம்பி இருக்கின்றனவென்னும் அரிய இரகசிய மிதனால் வெளியாகின்றது. மனிதர்களுக்கு அஞ்சி அவர்கள் சஞ்சாரத்தையே விரும்பாத பறவைகள் அநேக மிருக்கின்றனவாயினும், பிரயோஜனமும் இன்பமுங் கொடுக்கும் பறவைகளைத் தொந்தரைசெய்து அழிக்கும் மூடர்களின் எண்ணிக்கை குறையக் குறைய எவ்வகையான பட்சிகளும் ஏராளமாய் வந்து நாடுகளில் மனிதர்கள் பக்கல் மகிழ்ந்து வாழுமென்பது திண்ணம்.

மரமடர்ந்த தோப்பு தோட்டங்களிலாவது அவைகள் தனித்துள்ள வெளியிடங்களிலாவது பறவைக்கூடுகள் சுலபத்தில் மனி

தர் கண்ணுக்குத் தென்படுகிறதில்லை. ஏனெனில், மனிதர்களுக்கு இல்லாமற் போனாலும் தங்களுக்கு விரோதிகளாக விருக்கும் மற்ற ஜந்துக்களுக்காகப் பறவைகள், அவைகளுக்கிருக்கும் இயற்கையறிவைக் கொண்டு தங்கள் கூடுகளை விரோதிகள் பார்க்கக்கூடாதபடி மறைவிடங்களிற் கட்டிக்கொள்ளுகின்றன.

பறவைகளின் முட்டைகளைக் குடித்தும் அவைகளின் குஞ்சுகளைத் தின்றும் அவைகளுக்கு அறக்கேடு விளைவிப்பன, எலி, பூனை, கீரி, பாம்பு முதலியன. இவைகள் தங்களுக்கு இரையாகிய முட்டை குஞ்சுகளின் பேரிலேயே எண்ணமாய் அவைகளைத் தேடித் திரிந்தலையும். ஒரு பறவைக்கூடு காணப்பட்டால் அவைகளுக்குண்டாகு மாநந்த மிவ்வள வவ்வள வல்ல. ஆயினும் அக்கூடுகள் இவைகளுக்குச் சுலபத்தில் தென்படுகிறதில்லை. எலியோ பூனையோ மற்றெதுவோ ஒரு மரத்தின் கீழிருந்து மேனோக்கிப் பார்க்கும்போது கிளைகளின் மத்தியில் மிலாறுகள் பின்னலிட்டுக்கொண் டிருப்பதைப் பார்க்க முடியுமே யொழிய அங்கிருக்கும் பறவைக் கூட்டை அணுவளவுங் கண்ணாற் காணமுடியாது. மேலும் அக்கூட்டிலிருக்கும் பறவைதானும் தனது உடல் கூடுக்கு மேல் தெரியாதபடி உள்ளுக்குள்ளேயே தங்கியிருக்கிறபடியால் இக்கொடிய விரோதிகள் கண்ணுக்குத் தெரிகிறதேயில்லை.

கால வேற்றுமையும் பறவைகளுக்கோர் முக்கிய விரோதியாக நிற்கின்றது. மாரிக்காலத்தில் மட்கூடுகட்டி வாழும் பறவைகள் தங்கள் கூடுகளுடன் அழிந்து படுகின்றன. மிலாறு, தழை, சுள்ளி முதலியவைகளால் கூடமைத்து வாழும் பறவைகளும் அக் காலத்திற் படும் பாடு அளவிட முடியாது. இவ்விஷயத்தை முன்னோக்கியே பறவைகள் கூடமைக்கு மிடத்தை வெகு ஜாக்கிரதையோடு தேர்ந்தறிகின்றன. சாதாரணமா யோர் பறவைக் கூட்டிற்குமேல் ஒரு மரக்கிளையோ மரமுடிச்சோ அதைக் குடைபோற் காக்கக் காணலாம்; கூடானது இலேசில் கீழே விழாதபடி இரண்டு மூன்று கிளைகள் கவைத்திருக்கு மிடத்திலேயே பறவைகள் அதைக் கட்டுகின்றன. தங்கள் குஞ்சுகளின் பாதுகாப்பை முன்னோக்கி எல்லாப் பறவைகளும் கூட்டிற்கு இடந்தேடுவதில் எஞ்சாக்கவலை யெடுத்துக்கொள்ளும். இளங்காக்கைகள் கூடு கட்ட வோரிடத்தை இங்கு மங்கும் மரத்துக்கு மரந்தேடிப் பலநாட் சென்று ஏதோ வோரிடத்தைத் தேர்ந்



தெடுத்துக்கொள்ளுகின்றன. பறவைகளுக்கு முட்டையிடுங்காலம் வருமுன் கூட்டைக் கட்டுங் கவலையே பெரிதாகி விடுகின்றது. அக்காலத்திற்றான் பறவைகளுக்குள்ளே சண்டையுந் திருடு மதிகம்.

நாம் வெளியே உலாவி வரும்போது ஒரு பறவைக்கூட்டைக் காண்போமானால் அது இன்ன பட்சியினதென் றறிந்துகொள்ளலாம்; ஏனெனில் ஒவ்வொரு ஜாதிப் பட்சியும் ஒவ்வொரு விதக் கூடு கட்டி வாழும். உதாரணமாக, தூக்கணங்குருவியில் ஒரு ஜாதி வீட்டின் எழுதகத்தின் கீழ் மட்கூடு கட்டி வாழும். அக்கூண்டின் தலைப்பிலுள்ள ஒரு சிறு தொளையே அதற்கு வாயிலாகும். இக் குருவியை வீட்டுத்தூக்கணங்குருவி என்பர். வாற்றூக்கணங் குருவிக்கூட்டின் வாயில் அகன்றிருப்பதால் அக்கூடு கிண்ணத்தைப் போன்றிருக்கும். இக்குருவிகளில் மற்றொரு ஜாதி வீட்டின் தாழ்வாரங்களில் வாழும். இவைகள் பரபரப்பாய்ப் பறக்கக் கூடியவைகளாயினும் ஆகாயத்தில் உயரச் செல்லமாட்டா. இவைகள் கூடு கட்டவேண்டுமானால் வைக்கோலோ, விழலோ, அல்லது சிறு சுள்ளியோ கொண்டுவந்து தாழ்வாரத்தின் வலைச்சல்களின் மத்தியிற் பரப்பி ஒருவிதமான கூட்டைச் செய்துகொள்ளும். இப்பறவை சில சமயங்களி லடைக்கலாங் குருவிக்கூட்டை அடித்துக்கொண்டு வந்து விடுவதும் உண்டு. அவ் வடைக்கலாங் குருவிகளுந் தூக்கணங் குருவிக் கூடுகளைக் கொண்டுபோய்விடும். தூக்கணங் குருவியி லின்னொரு ஜாதி மண் மேடுகளைத் துளைத்து முறக்குத்துவாரஞ் செய்து அதனடியில் ஓரறை யமைத்துக்கொண்டு அதில் வாழும். அவ்வடியறையில் இறகுகளைக் கொண்டுவந்து பரப்பி அவைகளின் மீது முட்டையிடும்.

தச்சன் குருவிகள் அடிமரத்தைக் கொத்தித் தொளை செய்துகொண்டு அவைகளில் வாழுகின்றன. காக்கையி லோர் ஜாதியும், ஆந்தைகளும், மற்றும் சில பறவைகளும் இம்மாதிரியாகவே மரவளைகளில் வாழ்கின்றன. இப்பறவைகளிற் சில தங்கள் கூட்டின் வாயிலோரத்தில் மண்ணைப் பூசித் தங்கள் உடல்மாத்திரம் உட் சென்று வரப் போதுமானபடி வாயிலைச் சுருக்கிவைத்துக்கொள்ளுகின்றன. மீன் கொத்திப் பறவைகள் சில சமயங்களில் நீர் நிலைகளி னோரத்திலுள்ள எலி முதலானவைகளின் வளைகளையே

தங்களிருப்பிட மாக்கிக்கொள்ளும். இது வெகு அபாயகரமான
தென்று நமக்குத் தோன்றுகின்ற தல்லவா? மீன்கொத்தியின்
அலகின் தன்மை இப்படிப்பட்ட தென்று உனக்குத் தெரியும்.
அதன் வலுத்துக் கூரிய மூக்கின்முன் எலி போன்றவைகள் நிற்க
முடியுமா? அவைகள் இவைகளோடு எதிர்த்துப் பொருதால் என்
வந்தோ மென்றல்லவோ வெண்ணவேண்டி வரும்.

சிட்டுக்குருவி முதலாகிய மற்றுமுள்ள பற்பல பறவைகள்
இன்னின்னவைகளைக் கொண்டுதான் கூடு கட்டுகின்றனவென்று
திட்டமாய்ச் சொல்ல முடியாது ஏனெனில் அவைகள் பாசி
யோ, பழுத்த இலையோ, வைக்கோலோ, வேரோ அல்லது
மரச்சிரவோ எது கண்ணிற் படுகிறதோ அதைக் கொண்டே
தங்கள் கூடுகளைத் தகுந்தபடி ஒருவாறுய்ச் செய்துகொள்ளு
கின்றன.

மஞ்சட்குருவிகளைப் பார்க்கும்போது கூடு கட்டுந் திறமையில்
மஞ்சட் குருவிக் கொப்பானது வேறொரு பறவையுமில்லை யென்று
நாமெல்லோரு மறிவோம். மஞ்சட்குருவிக் கூடுகளை மாட்சி
பொருந்திய அரண்மனைகளென்றே சொல்ல வேண்டும். இவைகள்
சாதாரணமாய் இப் பிராந்தியங்களிற் பனை, ஈந்து ஆகிய இம் மரங்
களின் ஓலைகளில் தொங்கிக்கொண் டிருக்கின்றன. மென்மையும்
வன்மையும் வாய்ந்த நாரினாற் சிக்குப் பின்னற்போட்டுக் கட்டி
யிருக்கும் கூட்டை நாம் பார்க்கும்போது அது மனிதன் கையால்
முடியாததோர் அரியகாரியமென்றே யறிவோம் கூட்டின் வாயி
லும், அதற்கு மேல் மறைவாக உள்ளிடத்தில் காணப்படும் அறை
யும், சோனை மழைத் துளியுஞ் சுவறி யுட் செல்லாதபடி அக்கூடு
அமைக்கப்பட் டிருக்குமோர் தன்மையும், ஆண்டவன் அஃறிணைப்
பொருட்கண் அமைத்து வைத்திருக்கும் அதிசய அறிவின் அளவை
அகங்கார மமகாரங்களில் ஆழ்ந்து கிடக்கும் மனிதர்க் கறிவித்து
அவர்களுக்கோர் சிறந்த புத்தி புகட்டுகின்றன வல்லவா?

நீர்வாழ் பறவைகள் கரையோரத்தில் வளர்ந்து கிடக்கும்
நாணற் புல்லைக் கொண்டே சுலபமாகவே கூடுகள் கட்டிக்
கொள்கின்றன. அவைகள் ஒரு படுக்கையைப்போ லிருக்குமே
யொழிய முட்டைகளையும், குஞ்சுகளையும் பாதுகாக்கத் தக்கவை
களா யமைக்கப்பட் டிரா. அப் பறவைகள் இரைக்காகக் கூட்
டைவிட்டு வெளியே போகும்போது பக்கத்திருக்கும் நாணற்



றழைஞ்ய யிழுத்து அதன்மேற் சாய்த்து வைத்துவிட்டுப் போய்
விடும் இப்பறவைகள் தங்கள் பார்ப்புக்களுக்குப் பத்திரம்
வேண்டுமென்று கூடுகட்டுவதாகக் காணப்படவில்லை. சில சம
யங்களில் இவைகள் புல்லின்மீதும் வெறும் பாறைகளின்மீதும்
முட்டையிட்டு விடுகின்றன

மலையாந்தைகளும் ஆட்காட்டிக் குருவிகளும் வெறுந் தரையி
லேயே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. இவைகளுக்குக்
கூடுகள் வேண்டுமென்ற கவலையே கிடையாது. இவைகளை
யெல்லாஞ் சோம்பேறிப் பறவைகளென்றே சொல்லவேண்டும்.

சேலை சகதேவ முதலியார்,
*W. M. High School, Tiruvallur.*

# GENERAL KNOWLEDGE FOR TEACHERS

## உபாத்திமார் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள்

உபாத்திமார்களாகிய நாம், ஒவ்வொரு மாணவனும் அவ்-
வவாது பிற்கால வாழ்வில் உலகானுபவங்களைச் செவ்வனே
யுணர்ந்து ஒழுகும்பொருட்டு உலகத்தில் நடைபெறும் ஒவ்வொரு
விஷயத்திலும் சிறிது கற்பித்து நமது கடமையைச் செய்யவேண்-
டும். ஆதலால், நாமும் உலகத்தில் நடைபெறும் ஒவ்வொரு விஷ-
யங்களிலும் நம்மாணவர்கட்குக் கற்பிக்க வேண்டிய அளவிற்குப்
பதின் மடங்குக்குமேல் தெரிந்து கொண்டாலன்றி மேற்கூறிய
நமது கடமையைச் சரிவரச் செய்ய இயலாத காரியமாதலின்,
நாம் ஒவ்வொரு சாஸ்திர சம்பந்தமான நூலையும் பார்த்து,
நமது அறிவென்னும் வாளை நூலென்னும் அரத்தால் கூர்மையாக்-
கித் தயாரித்துக் கொள்ளவேண்டியது நம்முடைய முன் ஜாக்-
கிரதையாகும். அதற்கேற்ப ஜீவனத்திற்கே போதாத சொற்ப
சம்பளம் பெறும் கீழ்தரப் பாடசாலைகளின் உபாத்திமார்க-
ளாகிய நாம் ஒவ்வொரு சாஸ்திர சம்பந்தமான நூல்களையும்
வாங்குவதற்கு இயலாதெனினும், நமது காருண்ய கவர்ன்மெண்டா-

ரவர்கள், கல்வியிலாகா அதிகாரிகள் நமது நாட்டார்களது பிரஜைகளின் முன்னேற்றத்தின் பொருட்டு நமக்கு அத்தகைய நூல்களை வாங்கித் தருகின்றனரெனினும் நாமும் அத்தியாவசியமான அத்தகைய புத்தகங்களைக் குறித்து வைத்திருந்து, வேண்டிய புத்தகங்கள் என்னென்னவென்று நமது அதிகாரிகள் கேட்கும்போது அவற்றைத் தெரிவித்து வாங்கிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டுவதும் நமது உபாத்திமைச் சங்கங்களின் மூலமாகவேனும் வாங்கி விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டுவதும் நமது கடமையே.

ஆகவே, நாம் தெரிந்துகொண் டிருக்கவேண்டிய விஷயங்கள் சாஸ்திரங்கள் இன்னின்னவை என்பதை 'கிண்டர்கார்ட்டன் உபாத்தியாயருக்கு இருக்க வேண்டிய இலக்ஷணங்கள்' என்ற தலைப்பின்கீழ் 1918-டிசம்பர்மாதத்து "விவேகசிந்தாமணி" விரிவாக விளக்கி யிருப்பதிலிருந்து அந்நூல்கள் இன்னின்னவென்பதை மட்டும் எனது சகோதர உபாத்திமார்களின்பொருட்டு இங்குக் குறிப்பிடுகின்றேன் :

1. ஆத்மதத்துவ நூல் (Psychology).
2. பிராணி தர்மகுண நூல் (Physiology).
3. சடதத்துவசாஸ்திரம் (Physios)
   யந்திரசாஸ்திரம் (Mechanics).
4. பூகோள உறுப்பிலக்கணம் (Geology).
   வானசாஸ்திரம் (Astronomy).
   ரசாயனசாஸ்திரம் (Chemistry).
5. சிற்ப, சித்திர, கீத நூல்களின் பிரதம விதிகளும், செய்யுளிலக்கணமும்.
6. சுயநோட்டம், தாவரசாஸ்திரம், விலங்கியல் நூல் } பிரகிருதிஞானம்.
7. வியாபார விஷயம்.
8. காவியங்கள்.
   பூர்வீக நூல்கள்.



9. போதனைமுறை நூல்கள்.
   வித்தியாபிவிருத்தி சரித்திரம்.
   கிண்டர்கார்ட்டன் முறை யபிவிருத்தி.,
10. ஜனசமூகம்.
   ஜனோபகாரம்.

என்பவையே. இந் நூல்களின் குறிப்புக்கள் இனிவரும்.

P. பரிமணப்பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர்சோலை, P. O., திருச்சி ஜில்லா.

## A CONVERSATION BETWEEN A SHEEP AND ITS KID

### ஓர் ஆடும் அதன் குட்டியும்.

[ஓர் ஆட்டுக்குட்டி ஓரிடத்தில் கட்டப்பட்டிருக்கிறது அதன் தாய் அதைக் காணவருகின்றது.]

தாய் ஆடு — "என் அருமைக் குழந்தாய்! சுகந்தானா? எவருக்கும் ஒன்றும் தீங்கில்லையே? எங்கே என் தங்கை? அவள் எங்குச் சென்றிருக்கின்றாள்? நான் அவ்வளவு கூறியும் அவள் உன்னைத் தனியே விட்டுச் சென்றனளே! அவளுக்கு இன்னும் அறிவு வரவில்லை. குழந்தாய்! என்ன உன் முகம் மாறி இருக்கின்றது. தேகமும் சிறிது இளைத்தாற்போல் காண்கின்றது. எனக்கு உன்னை விட்டுச் சிறிது நேரமும் பிரிய மனம் வரவில்லை. என் செய்வது? நான் வெளியே சென்று புல் மேய்ந்து வருவதற்குள் இங்ஙனம் இளைத்துவிட்டனை."

குட்டி ஆடு — "அவ்விதம் ஒன்றும் இல்லை. அம்மா! ஓர் விசேஷம் தெரியுமோ உனக்கு? சிறிது நேரத்திற்கு முன்பு ஒருவன் தன்கையில் பளபள வென்று மின்னும் ஓர் நீண்ட பட்டாக்கத்தியைத் தாங்கி நம் எஜமானனைக் காண வந்தான் அம்மா."

தாய் — "ஐயோ. தெய்வமே! இதனால் யாருக்கு என்ன ஆபத்து நேரிடுமோ தெரிய வில்லையே."

குட்டி — "அம்மா! அதை எனக்கு விளையாட வாங்கித் தருகின்றீர்களா? அது நன்றாய் இருந்தது அம்மா."

தாய் — "ஆ! குழந்தாய் என்ன வார்த்தை கூறினை? அது வல்லவோ நமக்கு எமனாக இருக்கின்றது. அச்சொல்லைக் கேட்பதற்கே என்குடல் நடுங்குகின்றதே—கண்மணி! பிறகு நடந்ததென்ன? சீக்கிரம் சொல்."

குட்டி — "அம்மா! பின்பு அவ்விருவரும் ஏதோ மெதுவாகப் பேசிக்கொண்டார்கள். முடிவில் அப்புதியவன் என் சிற்றன்னையை அழைத்து அவளை மஞ்சள் நீரால் நன்றாய்க் குளிப்பாட்டி அவள் நெற்றியிலும் முதுகிலும் மஞ்சள் பூசிக் குங்குமம் இட்டான். அப்பொழுது அவள் வெகு அழகாக இருந்தாள் அம்மா! எனக்குமட்டில் ஒன்றுமே செய்யவில்லை அம்மா. இதுவாகிலும் தோஷமில்லை. பச்சைப் பசேலென்று இருந்த இளந்தளிர்களால் கட்டப்பட்ட வேப்பிலை மாலையை அவள் கழுத்தில் அவன் அணிந்தான் அம்மா. உன் தங்கை அதிக சந்தோஷத்தோடு தலையை ஆட்டிக்கொண்டே சென்றாள் அம்மா. அப்போது நானும் உடன் வருகின்றேன் என்று அழுதேன். இதற்குள் நமது எஜமானாகிய இடையன் என்னைப் பிடித்திழுத்துக் கட்டிவிட்டான் அம்மா. அம்மா! அவ்விதமாக எனக்கு எப்போது செய்வார்கள்? நான் எப்போது அவளைப்போல் சந்தோஷமாக அவளோடு செல்வேன்? சொல் அம்மா—ஐயோ! என் அம்மா அழுகின்றீர்கள்? எனக்கு அம்மாலையைப் போடவில்லை என்றா அழுகின்றீர்கள்? அவன் மிக்க நல்லவன் அம்மா! எனக்கும் சீக்கிரத்தில் அவ்விதம் செய்வான், அழவேண்டாம் அம்மா!"

தாய் — "ஆ! என் அரிய தங்காய்! உனக்கும் இக்கதிவரும் என்று நான் கனவிலேனும் எண்ணவில்லையே — ஐயோ! நற்குணமே ஓர் உரு எனக்கொண்ட அப்படுபாவிக்கு எங்ஙனம் மனம் துணிந்ததோ தெரியவில்லையே. ஆ! தெய்வமே! இப்படியும் எங்களைத் துன்புறுத்தலாமோ? எங்கள்மீது உமக்கு இரக்கம் சிறிதேனும் இல்லையோ? நாங்களும் உமது புதல்வர்கள் அல்லவோ? ஐயோ! நோயினால் இறந்தாலும் பாதகமில்லை. என் மனமும் ஒருவாறு ஆறிவிடும். ஆ! ஓர் கொலைப்பாதகன் தன் கூரிய கொடுவாளினால் இரக்கம் என்பது சிறிதும் இன்றி என் தங்கையின் கழுத்தை வெட்டுவதென்றால் அப்போது அவள் என்ன



பாடுபடுவாள்? அவள் நெஞ்சம் எவ்வாறு துடிக்கும்? அவள் கலக்கத்தினை நான் என்னென்று எடுத்துரைப்பேன்—ஐயோ ஈசனே! என் தமக்கை இறந்து இன்னும் ஒருவாரம் ஆகவில்லையே! அவளது அனியாய சாவிற்காக நான் மூன்றுநாள் ஆகாரம் இன்றி வருந்தினேனே—ஆ! என் கண்மணி! அருமைத் தங்கையே! நீ அன்றோ அச்சமயம் என் மனதைத் தேற்றினை. அவ்வளவு சாமர்த்தியத்துடன் பேசிய நீ இன்று ஏமாறி விட்டனையே! — இல்லை. நீ அவன் தீயசெயலை உணர்ந்து "நான் வரமாட்டேன்" என்று மறுத்துக் கூறினும் அக்கொடியவன் உன்னை விட்டுவிடுவானோ? —ஒரு போதும் இல்லை. ஐயோ! இப்படியும் உன் தலையில் ஈசன் எழுதியிருந்தானே."

கதறி அழுகின்றது.

குட்டி — "என்ன அம்மா! ஏதேதோ சொல்லி அழுகின்றீர்களே! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அதை எனக்குச் சொல்லலாகாதா? என் சிற்றன்னைக்கு என்ன ஆபத்து நேர்ந்துவிட்டது? அவள் மிகச் சந்தோஷத்தோடுதானே சென்றாள்? அதற்காக நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்? இன்னும் சிறிது நேரம் சென்றால் அவள் திரும்பி வந்துவிடுகின்றாள்."

ஆடு — "ஐயோ குழந்தாய்! உனக்கு ஒன்றும் தெரியவராது. அவளா திரும்பிவரப்போகின்றாள். எமன் கையிற்பட்ட உயிரேனும் மீளும், அக் கொடியவனிடஞ் சென்றோரும் மீளுவதுண்டோ. அச் சண்டாளன் இத் தருணம் அவளை வெட்டிப் பலியிட்டிருப்பானே. அவளும் நமனுலகை நாடியிருப்பாளே! ஐயோ தங்காய்! அச்சமயம் நீ என்னபாடு பட்டனையோ! உன் தேகம் அத்தருணம் எங்ஙனம் துடித்ததோ!"

குட்டி — "அம்மா! அவர்கள் அவளை ஏன் கொல்லவேண்டும்? அவள் அவர்கட்கு என்ன தீங்கு செய்தாள்?"

ஆடு — "கண்மணி! அவளா தீங்கு செய்பவள்! அவள் சாந்தபூஷணி யல்லவா, சத்தியவசனி யல்லவா! அடக்கத்திற்கு அவளன்றோ உறைவிடம், அறிவிற்கு அவளன்றோ களஞ்சியம்."

குட்டி — "ஆனால் அவன் நம் எல்லோரையும் தவிர்த்து அவளை மட்டில் ஏன் கொல்லவேண்டும் அம்மா?"

ஆடு — "ஐயோ! அக் கொலைப் பாதகன் நம்மை மட்டில் விடவா போகின்றான், நம்மையும் ஓர் நாளைக்குக் கொல்லத்தான் போகின்றான்."

குட்டி — "அவர்கள் நம்மைக் கொன்று என்ன செய்கின்றார்கள் அம்மா!"

ஆடு — "என்ன செய்கின்றார்களா?—நன்றாகத் தின்கிறார்கள்.

குட்டி — "ஈதென்ன அனியாயம்—நம்மையா தின்கின்றார்கள்! நம் உடலையா தின்கின்றார்கள்! அவர்கட்கு அது நாற்றம் எடுக்கவில்லையா? அவர்கள் எங்ஙனம் மனம் சகித்து உண்கின்றார்கள் அம்மா? தின்பதற்கு அவர்கட்கு வேறு ஒன்றும் அகப்படவில்லையோ?"

ஆடு — "ஐயோ! அவர்கள் நம்மை மட்டிலா தின்கின்றார்கள்! நாம் போதாமல கோழி, புறா, காடை, கௌதாரி, மீன், நண்டு முதலிய யாவற்றினையும் தின்கின்றார்கள். இன்னும் சிலர் இதுவும் போதாமல் மாடு, பன்றி முதலியவைகளையும் தின்கின்றார்கள். இதைச் சொல்வதென்றாலும் எனக்கு வாய் கூசுகின்றது."

குட்டி — "அம்மா! மனிதர்கள் நம்மினும் மிக்க அறிவாளிகள் என்று பன்முறை நீங்கள் உரைத்திருக்கின்றீர்கள். அவர்களா இத்தகைய இழிவான கருணையற்ற காரியங்களைச் செய்கின்றனர். அம்மா! நான் ஓர் நாள் நம் எஜமானன் குழந்தையின் காலைத் தெரியாமல் மிதித்துவிட்டேன். அதனால் காயம் ஒன்றும் நேரிடவில்லை. ஆனாலும் அவன் குழந்தை அதற்காக வருந்தியது. அச்சமபம் அவன் என்னை அருகிலிருந்த புளிய மிலாறினால் என்னபாடு படுத்தினான். அவன் என்னென்ன கடுமொழிகள் கூறினான். அம்மா! நீங்களும் அச்சமயம் அவன் செய்தது நியாயம்தான் என்று கூறினீர்களே, அல்லாமலும் நாம் எல்லோரும் அவனுக்குக் குழந்தைகளென்றும் அவன் நம்மைத் தன் குழந்தைகளைப்போலப் பட்சமாகக் காப்பாற்றுகின்றான் என்றும் கூறினீர்களே! அங்ஙனமாயின் நம்மை உயிரோடு ஒருவன் நம் கழுத்தை அறுக்க இவன் சம்மதிக்கலாமா! அவன் குழந்தையை ஒருவன் தன் கூரிய கொடுவாளினால் அறுக்க யத்தனித்தால் அவன் அதற்குச் சம்மதிப்பானா! அம்மா! அவர்கள் நம் இறைச்சியை என் தின்னவேண்டும்? இதைவிட அவர்களும் நம்மைப்



போல் பசும்புல் மேய்ந்து நீர் அருந்தலாமே! ஆ! இதன் சுவை அவர்களுக்குத் தெரியவில்லையே! அப்பொழுது அவர்கள் நம்மினும் மிகக் கொழுத்துக் காணப்படுவார்களே! ஐயோ ஓர் பிராணியைக் கொல்லுவது என்ன அறிவீனம்! இது அவர்களுக்குத் தெரியவில்லையா? நம்மை உயிருடன் கொன்றுதானோ தின்னுதல்வேண்டும். நாம் இறந்த பின்பு தின்னலாகாதா? அவர்கள் என்ன கொடிய செய்கை செய்கின்றார்களம்மா! அம்மா! நாம் ஏன் இன்னும் சும்மா இருத்தல்வேண்டும். நாம் எல்லோரும் அவர்களை முட்டித்தள்ளலாகாதா? குத்திக்கொல்லலாகாதா? அவர்களுக்கு நாம் ஏன் அடங்கி நடக்கவேண்டும். கடவுள் கொடுத்த புல் இருக்கிறது. மனங்குளிர உண்கின்றோம் அவர்கள் என்ன நம்மைக் காப்பாற்றுவது? — ஐயோ! எதிர்த்துத் தாக்க நமக்கு ஆயுதங்களையும் காணோமே அவ்விதம் ஏதேனும் ஒன்று இருக்குமானால் இவர்கள் இவ்வாறு நம்மை அனியாயம் செய்வார்களா, அருகில் நெருங்குதற்கும் அஞ்சமாட்டார்களா. இல்லையேல், அவர்கள் புலியைத் தின்னலாமே அல்லது சிங்கத்தைக் கொல்லலாமே, அல்லது யாவற்றினும் மிகப் பருத்திருக்கும் யானையைக் கொல்லலாமே — ஐயோ கருணாநிதியான கடவுளும் நம்மை இவ்வாறு படைத்தனரே!"

ஆடு — "கண்மணி! என் அருமைக் குழந்தாய்! நீ ஒன்றும் அறியாமல் ஏதேதோ பிதற்றுகின்றாய் இங்ஙனம் தாறுமாறாகக் கூறுதல் பெரும்பிழையேயாகும். மானுடர் நம்மினும் மிக்க அறிவுடையவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர்கள் நம்மைக் கொன்று தின்பதனாலேயே அவர்களை அறிவில்லாதவர்கள் என்று கூறுதல் சிறிதும் பொருந்தாது கண்மணி! நாம் ஏன் அவர்கட்கு அடங்கி நடக்கவேண்டும் என்று சிறிதும் அறிவில்லாமல் கூறினாய். அந்த எண்ணத்தை அறவே ஒழித்துவிடு. நீரையும் புல்லையும் கடவுள் உண்டாக்கியிருப்பினும் பலவிடங்களில் நம்மை அழைத்துக்கொண்டுபோய் அதைக் காலமறிந்து நமக்கு ஊட்டுபவன் யார்? நம்மைத் தினந்தோறும் குளிப்பாட்டிக் கழுவுபவன் யார்? வெய்யிலும் மழையும் நம்மைத் தாக்காவண்ணம் நமக்கு இடந்தந்து உதவுபவன் யார்? நோய் வந்த காலத்து நமக்குப் பலவித சிகிச்சைகள் செய்து அந்நோயைத் தீர்ப்பவன் யார்? நம் அருமை எஜமானனாகிய இடையன் அன்றோ? இன்னொன்று கூறுகின்றேன் அதை நன்றாய்க் கவனி: மானுடர் எல்லோரும்

நம்மை வதை செய்து தின்கிறார்கள் என்று எண்ணவேண்டாம். லக்ஷக்கணக்கான அறிவாளிகள் நம்மைக் கொன்று தின்னாமல் நம்மிடம் இரக்கங்காட்டி விரதங்காத்து வருகின்றார்கள் என்பதை நீ அறிவாயாக!''

குட்டி — "அம்மா! நான் அறிவின்றி எல்லோரையும் தூஷித்துக் கூறிவிட்டேன், மன்னிக்கவேண்டும் அம்மா! இன்னொரு சந்தேகம் எனக்குத் தோன்றுகிறது. இத்தகைய பெருந்தகையோர் அந்த இழிகுணமுடையோர்கட்குப் புத்தி புகட்டிப் புலால் உண்ணலை நீக்கலாகாதா?''

ஆடு — "செல்வமே! நல்ல கேள்வி கேட்டனை. உன் புத்தியை மெச்சினேன். அவர்கள் அவ்விதம் செய்யாமல் இல்லை. இதற்காக எத்தனையோ புத்தகங்கள் எழுதி வெளியிட்டுவருகிறார்கள். எத்தனையோ உபன்னியாசங்கள் புரிந்து வருகிறார்கள். இதனால் எத்தனையோ புண்ணியவான்கள் புலால் உண்ணலை ஒழித்தும் வருகின்றார்கள். என்ன சொல்லியும் யாதுபயன்? எப்படியும் என் தங்கை திரும்பி வரப்போவதில்லை. ஆ! அவளை இன்று காலை நான் விட்டுப் பிரியும்பொழுது அவள் இறந்துவிடுவாள் என்று நான் எண்ணவில்லையே. இதற்குள் இம்மோசம் வந்துவிட்டதே. ஐயோ அழகாக இருந்தாயே. உன்னைக் கொல்ல அவனுக்கு மனம் எங்ஙனம் துணிந்ததோ.''

குட்டி — "அம்மா! என்ன இது! இவ்வளவு நேரம் எனக்குப் புத்தி புகட்டினீர்.. இப்பொழுது தாங்களே அழுகின்றீர்களே, அழுதால் பயன் என்ன அம்மா! இறந்தவர்கள் ஒருகாலும் திரும்புவதில்லை. கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் ஒருகாலும் நம்மைக் கைவிடமாட்டார். அழவேண்டாம் அம்மா!''

M. S. MUTHUKUMARASAWMI MUDALIAR,
*Tamil Pandit, Muthialpet High School,*
*G. T., Madras.*



# STORY AND SONG

## கதையும் பாட்டும்

வேடன் ஒருவன் இருந்தான். அவன் நாள்தோறும் வனங்களில் சென்று எதிர்ப்பட்ட விலங்குகளையும் பறவைகளையுங் கொன்று தின்று ஜீவித்து வந்தான். வழக்கம்போலவே ஒரு நாள் வேட்டையாடச் சென்றான். அன்று முழுதும் எங்குச் சுற்றியும் ஒரு விலங்கேனும், பறவையேனும் அகப்படவில்லை. வேடன் பசியினால் களைப்புற்று வெய்யில் மிகுதியால் ஓர் ஆலமரத்தின் நிழலில் தங்கினான். அம்மரத்தடியில் பாம்புகள் வசிக்கும் புற்றொன்றிருந்தது. அதை அவன் கவனிக்கவில்லை.

தங்கினவன் மரத்தின் கிளையொன்றில் சதிபதியாக இரண்டு புறாக்கள் இருப்பதைக் கண்டான். கண்டு களிப்போடு அவ்விரு புறாக்களையும் ஒரே முறையில் கொல்ல நினைத்து அம்பை வில்லில் தொடுத்துக் குறிபார்த்துக்கொண்டிருந்தான். இதைக் கண்ட இரு புறாக்களும் பறந்து செல்ல மேலே நோக்கின. அங்கே ஒரு இராஜாளி இவைகளைக் கொல்ல வெண்ணி, ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்தது. புறாக்கள் திகைப்புற்று, ஆ! நாமென் செய்வோம்! எல்லாம் ஈசன் செயலின்படியே ஆகும், நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்று கடவுளைத் துதித்துக்கொண்டு இருந்தன.

குறிபார்த்துக்கொண்டிருந்த வேடன் மெல்லமெல்ல நகர்ந்து மரத்தடியிலிருந்த புற்றிற்குச் சமீபமாய் வந்தான். வந்தவன் கவனியாமல் புற்றின் மேல் காலை வைத்தான். அதிலிருந்த நாகம் வெளியேவந்து அவன் காலில் தீண்டிவிட்டது. விஷம் தலைக்கேறி வேடன் மூர்ச்சையடைந்தான். அவன் கையிலிருந்த அம்பு குறி தப்பி மேலே சென்று வட்டமிட்டுக் கொண்டிருந்த இராஜாளியைக் கொன்றது. இருதலைக் கொள்ளி எறும்பென இருபக்கங்களிலும் துன்பத்தில் அகப்பட்டிருந்த புறாக்களிரண்டும் ஈசன் செயலால் இடுக்கண் தீர்ந்து இன்புடன் பறந்து போயின. புறாக்களைக் கொல்ல நினைத்த வேடனும் இராஜாளியும் தங்கள் எண்ணம் நிறைவேறாமல் இறந்துபோக நேர்ந்தது.

என்ன ஆச்சரியம் !! இதைக் கவனிக்குங்கால் "எல்லாம் ஈசன் செயலே" யன்றி நம் செயலினுல் ஒன்று முடியா தென்பது நன்கு விளங்குகின்ற தல்லவா? இதனலன்றே,

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்"

என்று நம் தமிழ்மாதாவாகிய ஔவைப்பிராட்டியாரும் கூறியுள்ளார்.

(குறிப்பு.) கதையைச் சொல்லுவதோடு மேல்வகுப்புக்களில் மாணக்கர்களுக்கு அக்கதையின் நீதிக் கேற்றவா றமைந்துள்ள செய்யுளின் கருத்தையும் சம்பந்தப்படுத்தினுல் நலமென்று தோற்றுகிறது. அதன் பின்னர்க் கதைக்குரிய பாட்டுகளை, அபிநயம் அல்லது நடித்தல் மூலமாகச் சொல்லச் செய்யலாம் —

## பாட்டு

(வெள்ளிமலை யொத்த பலமேடை என்ற வர்ணமெட்டு)

பலவித மிருகங்களைக் கொன்று நாளும்
பசியைத்தணிக்கும் வேடன் சென்று ஓர்நாள்
பகல் முழுதும் வனத்தில் பலவிடங்களிலே
சுழன்றும் விலங்கு ஒன்றும் (1)

அகப்படாமல் களைத்துவாடி ஆல
விருக்ஷத்தின் நிழலைக்கண்டோடி நிற்க
மனக்கிளர்ச்சியுடனே மணிப்புறாக்க ளிரண்டுங்
கூடி விளையாடி (2)

கொஞ்சுவதை வஞ்சகமாய்க் கண்டான் வேடன்
நெஞ்சினில் வதைக்க எண்ணங் கொண்டான் அப்போ
பஞ்சைபோ லிருபுறாக்கள் சஞ்சலத்துடனே
மேலே செல்ல அங்கோர் பொல்லாப் (3)

பக்ஷிராஜன் வட்டமிடக் கண்டு புறாக்கள்
தக்ஷணம் ஏற்பட்ட கஷ்டம் விண்டு இன்று
நிச்சயமாய் நம்முயிரை ரக்ஷகரே காக்கவேண்டு
மென்று தியானித்து நின்றது (4)



குறிபார்க்க வேடன் பின்னல் நகர்ந்து புற்றுக்
குழிதனில் காலைவைத்தான் விரைந்து அதில்
குடியிருந்த கருநாகம் கடித்துமவன்
விழுந்தான் உயிர் துறந்தான் (5)

கையிலிருந்த அம்புமேலே சென்று
கழுகை வதைக்கவதுவும் கீழே விழ
ஐயங்கொண்டிருந்த அவ்விரு புறாக்களுங்கண்டு
தேறும் களி கூரும் (6)

ஆதலினுல் மாணவர்களே, இதனல் அடையும் பயனை நன்குணருங்கள். எல்லாம் ஈசன் செயலாலன்றி நம்செயலா லொன்றும் ஆகாது.

S. SOMASUNDARAM PILLAI,
*2nd Assistant Teacher,*
*Board Elementary School,*
*Chinnathadagam*

# A REQUEST OF ELEMENTARY TEACHERS

## எலிமெண்டரி உபாத்தியாயர்களின் வேண்டுகோள்

இந்தியாவில் நமது காருண்ய கவர்ன்மெண்டார் அவர்களின் பொருளுதவியினுல் அநேக போர்டு எலிமெண்டரி பாடசாலைகள் சிறப்பாகவே நடைபெற்றுவருகின்ற தெனினும் அப்பாடசாலைகளில் வேலை செய்துவரும் உபாத்தியாயர்களின் குறைவை அடியில் கண்டபடி என் சிற்றறிவிற்கு எட்டியவாறு எழுதுகிறேன். அதை அன்புடன் ஆதரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. பெரிய முனிசிபல் பட்டணங்களில் ஏற்பட்டுள்ள பாடசாலைக்கு ஏற்றவாறு பிள்ளைகளும் குறைவின்றி வருஷந்தோறும் பிள்ளைகளுக்கு அவ்விடத்தில் இடமில்லாமல் கூட ஏற்படுகிறது. தவிரவும் அப்பள்ளிக்கூடங்களில் சேர்ந்து வாசிக்கும் பிள்ளைகள் அனைத்தும் தாம் படித்து முன்னுக்கு வரவேண்டுமென்ற அவா-

னிலும் தாய் தகப்பன்மார்களின் ஆசையின்பேரிலும் தாம்
உத்தியோகத்துக்கு வரவேண்டுமென்ற ஒரு எண்ணத்தினாலும்
இடைவிடாமல் படிப்பில் கண்ணும் கருத்துமாகப் படித்துவரு-
கிறார்கள். வேளை தப்பாமல் பாடசாலைக்குப் போகவும் வரவும்
அவ்விடங்களில் ஏற்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்
பட்டும் தம்முடைய நோக்கத்தை விருத்தி செய்துகொண்டே
முன்னுக்கு வருகிறார்கள். கிராமாந்தர எலிமெண்டரி பாடசாலை-
களிலேயோ, பிள்ளைகள் தாம் படித்து முன்னுக்கு வரவேண்டு
மென்ற எண்ணம் எள்ளளவும் இல்லை. அம்மாதிரி எண்ணமுள்ள
பிள்ளைகள் இருந்தாலும் கொஞ்சமென்றே சொல்லவேண்டும்.
தாய் தகப்பன்மார்களுக்குந் தங்கள் பிள்ளைகள் படித்து முன்-
னுக்கு வரவேண்டு மென்ற எண்ணமுமில்லை. காலையில் 8 மணிக்கு
ஸ்கூல் ஆரம்பமாயிருந்தால் உபாத்தியாயர் 6½ அல்லது 7 மணி-
க்கே ஸ்கூலைத் திறந்து காத்துக்கொண்டு இருக்கவேண்டும். அதன்
பின் மணியை அடித்தால் ஒவ்வொரு பிள்ளையாக வந்து சேர
அதிக நேரம் செல்லும். அதற்காக வேண்டிய உபாத்தியா-
யர்கள் பிள்ளைகள் வரவில்லையே என்ற எண்ணத்தினால் வீடுவீடா-
கப்போய் ஒவ்வொரு பிள்ளைகளையும் உபசரித்து அழைத்துவர
வேண்டியதா யிருக்கிறது. பின்பு உபாத்தியாயர் பிள்ளைகளைக்
கூப்பிடும் பழக்கம் ஏற்படவே முன்பு சரியாக வந்த பிள்ளைகளும்
கூட, உபாத்தியாயர் வருவார், அப்போது நாம் போவோம், தின-
மும் நாம்தானே முன்னே போகிறோம், அதற்குப் பின்னால்தானே
எல்லாரும் வருகிறார்கள் என்று எண்ணிக்கொண்டு அந்த யோக்-
கியமான பிள்ளைகளும் நின்றுவிடுகிறார்கள். இப்போது சர்வ-
சாதாரணமாக வழங்கும் உபாத்தியாயர் கூப்பிடுகிற வழக்கம்
ஏற்படவும் வீட்டில் உள்ள தாய் தந்தையர்கள் தம்முடைய
பிள்ளைகள் பாடசாலைக்குப் போவதால் பெருத்த வரும்படி
உபாத்தியாயருக்குக் கிடைப்பதாக எண்ணிக்கொண்டு, அவ-
ருடன் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். சரியாக வரும் சில பிள்ளை-
களை உபாத்தியாயர் கூப்பிடாமல் வந்துவிட்டால் அடுத்தநாள்
பிள்ளையின் தாய்மார்கள் எங்கள் பிள்ளைகளை ஏன் கூப்பிடவில்லை
யென்று புகார் சொல்ல, அதற்குத் தகுந்தபடி அவர்களுக்குச்
சமாதானம் சொல்லவேண்டி யிருக்கிறது. இதைப் போலவும்
இன்னும் இவைபோன்ற அநேகவித கஷ்டங்களும் உபாத்தியாயர்-
களுக்கு ஏன் உண்டாகவேண்டு மென்பது நான் சொல்லாமலே



விளங்கலாம். தற்போது மைசூர் கவர்மெண்டு முதலிய இடங்-
களில் கட்டாயக் கல்வி என்ற நிபந்தனை ஏற்பட்டு எவ்வளவோ
சீர்திருத்தம் அடைந்திருப்பதாக யாவரும் அறியலாம். அம்
மாதிரியாக நமது இந்தியாவிலும், காருண்ய மிகுந்த கவர்ன்மெண்
டாரவர்கள் எப்போது இந்தச் சட்டம் ஏற்படுத்தி (கட்டாயப்
படிப்பு) நம் இந்துதேசத்தையும் எலிமெண்டரி உபாத்தியாயர்-
களின் அளவில்லாக் கஷ்டத்தையும் நிவர்த்தி செய்வார்களோ
தெரியவில்லை கட்டாயக் கல்வி நம் இந்தியாவில் ஏற்படுத்துவதினால்
எவ்வளவோ குருடர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், கஷ்ட
நிவர்த்தி செய்வதுடன் கட்டாயப் படிப்பு ஏற்படுத்துவதினால்
நமது காருண்ய கவர்ன்மெண்டாரவர்களுக்கு என்ன நஷ்டம்
ஏற்படுமோ அது என் சிற்றறிவிற்கு எட்டவில்லை.

2 மேற்கூறிய விஷயம்தான் அம்மாதிரி யிருக்கிறதென்றால்
இன்னொரு பெரிய கஷ்டம் இடைவிடாமல் தினமும் உபாத்தி-
யாயர்களை வருத்திக்கொண்டே யிருக்கிறது. அது என்னவென்று
அறிவோம். இப்போது யுத்தமும் பஞ்சமும் இரண்டும் சேர்ந்து
தங்கள் வேலைகளைக் காட்டுகின்ற அகவிலைகளைப் பற்றி நான்
சொல்லாமலே இப்போது பேப்பர்களிலும் கடிதமூலமாகவும்
ஜனங்களின் வாயாலும் சொல்லக் கேட்கலாம். இப்படிப்பட்ட
கஷ்டமான காலத்தில் நமது ஈரோடு தாலூகா போர்டில் எலி-
மெண்டரி உபாத்தியாயர்களுக்கு 1918ளு மார்ச்சுமீ முதல்
வருஷத்துக்கு மாதம் ஒரு ரூபாய் வீதம் வார் அலவன்சும், 1918
செப்டம்பர் முதல் 1919 பிப்ரவரி முடிய 6மீத்துக்கு 1½ ரூபா
யாக அடிஷனல் அலவன்சுமாகக் கொடுத்து வந்தார்கள். அதை
என்ன காரணத்தைக்கொண்டு தற்போது 1 வருஷத்துக்கு
மட்டும் கொடுத்துவிட்டுத் திடீரென்று நிறுத்திவிட்டார்களோ
தெரியவில்லை. அதை யோசிக்குங்கால் கோயமுத்தூர் ஜில்லாவில்
ஈரோடு தாலூகா போர்டைச் சேர்ந்த இடங்களிலெல்லாம் பஞ்-
சம் நிவர்த்தியாகி விட்டனபோலும். அம்மாதிரி 1 வருஷமட்-
டும் கொடுத்து நிறுத்திவிட்டதனால் ஏழை உபாத்திமார்களாகிய
சொற்ப சம்பளம் பெறுபவர்கள் என்ன வருத்தத்தை அடைய
மாட்டார்கள். எல்லா டிபார்டுமெண்டுகளுக்கும் காரணபூதமாக
விளங்கும் அஸ்திவாரமாகிய இந்த டிபார்டுமெண்டை முன்னுக்குக்
கொண்டுவரவும் நாகரிகம் கல்விப் பயிற்சி முதலியவைகளைப் பெறு-
க்கி நிலைநிறுத்தும் எலிமெண்டரி உபாத்தியாயர்களின் கஷ்டம்

எப்போது நீங்குமோ தெரியவில்லை. மேலும் யுத்தகாரணமாக வேண்டி எல்லா டிபார்டுமெண்டுகளிலும் வார் அலவன்சு என்று ஏற்படுத்திச் சம்பளத்துடன் கூட்டிக் கொடுத்து உதவிபுரிந்து வருகிறதை நாம் எல்லோரும் நேரில் பார்க்கிறோம். அங்ஙனமாக முன்பு 7, 8 ரூபாய் சம்பளம் பெற்று வந்த கோர்டு பியூன்களும் சால்டு பியூன்களும் போஸ்டாபீசு இலாகாவிலும் ரெவினியூ இலாகாவைச் சேர்ந்தவர்களும் தற்போது சம்பளம் அதிகமாகவே பெற்று வருகிறார்கள். இப்போது பியூன்கள் போலீஸ் கான்ஸ்டேபில்களுக்கும் குறைந்தது 15 ரூபாய்க்குக் கீழ் குறையாமல் சம்பளம் மாதம் மாதம் பெற்றுவருகிறதை நேரிலே பார்த்துவருகிறோம். இம்மாதிரியாக எல்லாக் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் சம்பளம் அதிகமாக வாங்கிவருகிறார்கள். தவிரவும் திருச்சி ஜில்லா கரூர் முனிசிபல் எலிமெண்டரி உபாத்தியாயர்களும் வார் அலவன்சு என்று தனியாக 3 ரூபாய் பெறுகிறார்கள். ஈரோடு தாலூகா போர்டில் மாத்திரம்தான் இம்மாதிரியான கஷ்டமோ மற்ற தாலூகா போர்டுகளில் எவ்விதமிருக்குமென்று தெரியவில்லை. இம்மாதிரி மேற்கூறியபடி சம்பளம் குறைவாகவே கொடுத்துவருகிறார்கள்.

3. அதுதான் அப்படியென்றால் குறைந்த சம்பளமாகிலும் மாதந்தோறும் கொடுத்தும் உதவுவதாகத் தோன்றவில்லை. இந்த மாதத்துச் சம்பளம் அடுத்தமாதம் 10 அல்லது 15 தேதிக்குள்ளாவது வந்துவிட்டாலும் சுமாராக இருக்கும். அப்படிக்கும் இல்லாமல் 2, 3 மாதத்துச் சம்பளங்களையும் மாதமாதம் அனுப்பாமல் கஷ்டப்படுத்தி வருகிறார்கள். உபாத்தியாயர்கள் 20 தேதிக்குச் சம்பளம் வந்துவிடுமென்ற உறுதியினால் ஒரு இடத்தில் கடன் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருந்தால் 20 தேதியானதும் கடன்காரன் உபாத்தியாயரைப் பணம் கேட்க அப்போது உபாத்தியாயர் பாடு திண்டாட்டம்தான். இரண்டு மூன்று மாதங்களுக்குச் சேர்ந்தாற்போல் சம்பளம் வராமல் இருப்பதனால் கடன்காரனும் உபாத்தியாயரை நம்பாமலும் பஞ்சகாலத்தில் அதிகமாகக் கடன் கொடுக்க யோசித்துக்கொண்டும் கடன் கொடுக்காமல் நிறுத்திவிட உபாத்தியாயர் பாடு முன்னிலும் பெரிய வேடிக்கைதான். கடன்காரன் என்ன உபாத்தியாயரே இன்னம் சம்பளம் வாராமலா இருக்கும்; நீங்கள் வாங்கி வைத்துக்கொண்டு வரவில்லையென்று சொல்லுகிறீர்கள் என்று



தான் சொல்லுகிறானே ஒழிய, உபாத்தியாயர் சொல்லும் சமாதானங்களை அவன் ஒப்புக்கொள்வதில்லை. அதனால் உபாத்தியாயர்களின் நம்பிக்கையும் கெட்டுப்போகிறது.

4. மேற்சொன்ன விஷயங்களெல்லாம் அம்மாதிரியிருக்க உபாத்தியாயர்கள் எப்படிக் கவலையில்லாமலும் விசனமில்லாமலும் ஊக்கத்துடனும் ஒரே மனதுடனும் பாடசாலைகளில் தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்வார்களோ என் அறிவிற்கு எட்டவில்லை. களையெல்லாம் நாளுக்குநாள் களைந்து வந்தாலல்லவா பயிறு செழித்து வளரும். அதுபோல உபாத்தியாயர்களின் மனதில் கொள்ளளவும் விசனமில்லாமல் குதூகலமும் உற்சாகமும் இருந்தாலல்லவா உபாத்தியாயராகிய தோட்டக்காரன், பாடசாலையாகிய தோட்டத்தில் பிள்ளைகளாகிய பயிர்களுக்கு ஒரு குறைவும் வாராமலல்லது காத்து மேலும்மேலும் விருத்தி செய்வானென்பது என்னுடைய நோக்கம். இப்படியாக நாம் மேல் சொன்னவாறு கட்டாயப்படிப்பு என்பது நம் இந்தியாவில் ஏற்படுத்தி உபாத்திமார்களுக்கு யோக்கியதைக்குத் தகுந்த சம்பளங்களை மாதா மாதம் கொடுத்து உதவி புரிந்துவரும்வரை நம் எலிமெண்டரி கிழ்தர உபாத்தியாயர்களின் கஷ்டம் நிவர்த்தியாவது அரிது. அங்ஙனமாக உபாத்திமார்களின் சகல கஷ்டங்களும் ஒழிவதுடன் கட்டாயக்கல்வி ஏற்படவேண்டுமென்றும் அதிலிருந்து உலகம் விருத்தியடைய வேண்டுமென்றும் எல்லாம்வல்ல இறைவனை ஏத்துவோம்.

N. சபாபதி முதலியார்,
1-வது உதவி உபாத்தியாயர், போர்டு எலிமெண்டரி ஸ்கூல்,
வெள்ளகோவில், தாராபுரம் தாலுக்கா,
கோயமுத்தூர் ஜில்லா.

16200|

# CHILDREN OF DISTANT LANDS
## தூரதேசத்துச் சிறுவர்கள்

### ஜப்பான் சிறுவர் - சீனச் சிறுவர்

சில வருஷங்களுக்கு முன் ஜப்பான் சிறுவர்களைப்பற்றிச் சில விஷயங்கள் நமது நல்லாசிரியனில் வெளிவந்த விஷயம் பலர் நன்கு உணர்வார்கள். அவற்றை விரைவில் முடிக்குமாறு நண்பர் பலர் விரும்பினர். அதனால் ஜப்பான் சிறுவர்களைப் பற்றியும் சீனச் சிறுவர்களைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் விளங்குமாறு இனிய புஸ்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கின்றோம். இதை வாசிப்பதனால் சிறுவர்களுக்கும் பூகோள விஷயமும் சரித்திர விஷயமும் நல்லொழுக்க விஷயமும் நன்கு புலனாகும். இது தாயார் குமாரனுக்குக் கதை சொல்லும் விதமாக மிக எளிய நடையில் அநேக சித்திரப் படங்களுடன் பெரிய எழுத்தில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. சிறுவர்களுக்கு இன்பமூட்டும் இனிய கதைப் புஸ்தகம் போல்வது. இதனை ஒவ்வொரு பாடசாலையிலும் தவறாமல் உபயோகிப்பார்கள் என்று நம்புகின்றோம். விலை அணா 6.

---

# GENERAL GEOGRAPHY

OF

# THE MADRAS PRESIDENCY

## சென்னை இராஜதானியின் பொது விவரணம்

BY

K. DORAISAWMY IYENGAR

Author of Vernacular Atlas Geography Series.

**விலை 6 அணா.**

**ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,**
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெருவு, சென்னை.